# பழைய ஏற்பாட்டின் ஆய்வு

பதிப்பாசிரியர்

டாக்டர். ராண்டால் மெக்எல்வெய்ன்

shepherds
GLOBAL CLASSROOM

# *பழைய ஏற்பாட்டின் ஆய்வு*
*டாக்டர். ராண்டால் மெக்எல்வெய்ன்*

# EXPLORING THE OLD TESTAMENT
Dr. Randall McElwain

*காப்புரிமை.*2016 Shepherds Global Classroom

*இந்நூல் காப்புரிமை பெற்றது. மாதிரிப்பக்கங்களைத் தவிர்த்து, Shepherds Global Classroom(SGC) இன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி, இந்தப் புத்தகத்தின் எந்தப்பகுதியையும் எந்த வகையிலும்—வேறு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, நகலெடுத்தல், ஆடியோ பதிவு செய்தல் அல்லது வேறு எந்த வகையிலும் மறு ஆக்கம் செய்வதோ அல்லது சேமித்து பிறருக்கு அனுப்பவோகூடாது. எங்களது SGC இன் ஆங்கில பாடத்திட்டத்தின் ஒவ்வொரு விற்பனையும் இதே பாடத்திட்டத்தை உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவ தலைவர்களுக்கு மொழிபெயர்த்து வழங்குவதற்கு உதவுகிறது. SGC யைத்தொடர்புகொள்ள அல்லது இந்த பாரமுள்ள ஊழியத்திற்கு நன்கொடை அளிக்க: www.shepherdsglobal.org என்கிற இணையதளத்திற்குச் செல்லவும்.*

*குறிப்பிடப்பட்டாலன்றி, அனைத்து வேதாகமப்பகுதிகளின் மேற்கோள் களும் இந்திய வேதாகமச் சங்கத்தின்* Tamil-OV *என்னும் பரிசுத்த வேதாகமத்தின் பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.*

ISBN: 978-81-953127-4-0

All right reserved. No portion of this book may be translated or reproduced in whole or in part in any form without the written permission of the publishers.

Originally published by Shepherds Global Classroom (SGC),USA. Translated, published and printed in India with permission.

This edition is published by

Cleft Rock Enterprises Pvt. Ltd, India in arrangement with
Shepherds Global Classroom (SGC), USA.

*Printed by:*
**Cleft Rock Enterprises Pvt. Ltd**
Mumbai | India
www.cleftrockindia.com
Price : ₹ 100/-

# பொருளடக்கம்


வகுப்புத்தலைவர்களுக்கான வழிமுறை.................................................................. 4

(1) பழைய ஏற்பாடு அறிமுகம்.......................................................................... 7

(2) ஆதியாகமம்: ஆதியில் .................................................................................. 21

(3) யாத்திராகமம்-உபாகமம்: இஸ்ரவேல் தேசத்தின் ஆரம்பம்...................... 39

(4) யோசுவா-ரூத்:விசுவாசம் மற்றும் துரோகத்தின் சித்திரங்கள்.................... 69

(5) சாமுவேல்-நாளாகமம்:

இஸ்ரவேலின் மன்னராட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும்.................................. 93

(6) எஸ்றா-எஸ்தர்: மீட்டெடுத்தலின் புத்தகங்கள்................................................ 125

(7) யோபு மற்றும் சங்கீதம்: எபிரேய கவிதைகள்................................................. 151

(8) நீதிமொழிகள்-உன்னதப்பாட்டு: எபிரேய ஞானம் ........................................ 179

(9) ஏசாயா: ஐந்தாவது சுவிசேஷ புத்தகம்.................................................................. 203

(10) எரேமியா மற்றும் புலம்பல்: அழுகையின் தீர்க்கதரிசி ............................. 219

(11) எசேக்கியேல் மற்றும் தானியேல்:

சிறையிருப்பின் தீர்க்கதரிசிகள் ......................................................................... 237

(12) சிறிய தீர்க்கதரிசிகள் 1: ஓசியா, யோவேல், ஆமோஸ்................................. 261

(13) சிறிய தீர்க்கதரிசிகள் 2:

புறஜாதி தேசங்களுக்கான தீர்க்கதரிசிகள் ....................................................... 283

(14) சிறியதீர்க்கதரிசிகள் 3:சிறையிருப்புக்குப் பிந்தைய தீர்க்கதரிசிகள்........ 311

பரிந்துரைக்கப்பட்ட ஆதார நூல்கள் ........................................................................ 331

வீட்டுப்பாடங்களின் பதிவு ........................................................................................ 341

# வகுப்புத்தலைவர்களுக்கான வழிமுறைகள்

*இந்த பாடத்திட்டம் பழைய ஏற்பாட்டின் ஓர் ஆய்வுக் கண்ணோட்டம் ஆகும். ஒவ்வொரு பாடமும் பல செயல் பாடுகளை உள்ளடக்கியிருக்கும். வகுப்பிற்கு வெளியே வீட்டுப் பாடங்களைச் செய்வதற்கான நேரம் தவிர கூடுதலாக 90-120 நிமிடங்களை வகுப்பிற்கு ஒதுக்க வேண்டும்.*

***பாடத்தின் கட்டமைப்பு***

(1) *பெரும்பாலான பாடங்கள், பாடத்தில் கற்கப்படும் வேதாகமத்தின் புத்தகம் அல்லது புத்தகங்களைப் படிக்கும் வீட்டுப்பாடத்துடன் தொடங்கும். குழுவாக பாடம் படிக்கும் முன்பாக இதை செய்ய வேண்டும். இதன் மூலம் மாணவர்கள் கற்பதற்கு முன்பாகவே புத்தகத்தின் அடிப்படை உள்ளடக்க த்தை அறிந்து கொள்ள முடியும். சங்கீதம் போன்ற ஒரு நீண்ட புத்தகத்தை, நீங்கள் அதிக நாட்கள் எடுத்து வாசிக்க வேண்டியிருக்கலாம்.*

(2) *ஒவ்வொரு பாடமும் ஒரு சிறிய வேதாகமப் பகுதியினை மனப்பாடம் செய்வதோடு தொடங்கும். இது கற்க வேண்டிய புத்தகங்களிலிருந்து முக்கியமான வசனங்களைக் கொண்டு ள்ளது.*

(3) *ஒரு குழுவாகக் கற்றுக்கொள்ளுகிறீர்கள் என்றால், நீங்கள் கொடுக்கப்பட்ட பகுதிகளை மாறி மாறி வாசிக்கலாம். வகுப்பு விவாதத்திற்கு அவ்வப்போது நேரம் கொடுக்க வேண்டும். வகுப்புத் தலைவர் என்னும் நிலையில், விவாதமானது ஆராயப்படும் விஷயத்திலிருந்து படிக்கிற பாடத்தை விட்டு வெளியே வேறுதிசையில் போகாமல் இருப்பதற்கு நீங்கள் தான் பொறுப்பு. ஒவ்வொரு விவாதநேரத்திற்கும் ஒரு கால வரம்பு இருப்பது உதவியாக இருக்கும்.*

(4) *நீங்கள் இந்த ► குறியீட்டிற்கு வரும்போதெல்லாம், கேள்வி யைக் கேளுங்கள். மற்றும் பதிலைக் குறித்து விவாதிக்க மாணவர்களை அனுமதியுங்கள்.*

(5) பல அடிக்குறிப்புகள் ஒரு வேதாகம பகுதியை மேற்கோள் காட்டுகின்றன. மாணவர்கள் அந்த வேதபகுதியை குழுவில் வாசிக்கச் சொல்லுங்கள்.

(6) ஒவ்வொரு பாடமும் ஒரு வீட்டுப்பாடத்தை உள்ளடக்கியிருக்கும். வீட்டுப்பாடத்தைக் குழுவாகப் பகிர்ந்துகொள்ள விரும்பினால் அடுத்த வகுப்பின் தொடக்கத்திலேயே அதற்கு நேரம் கொடுங்கள்.

(7) ஒவ்வொரு பாடத்திலும் தற்பரிசோதனைக் கேள்விகள் இருக்கும். ஒவ்வொரு வகுப்பின் முடிவிலும், தலைவர் இந்த கேள்விகளை மாணவர்களிடம் கேட்டு மதிப்பாய்வு செய்யலாம். அடுத்து வரும் வகுப்பு அமர்வு இந்த கேள்விகளுடங்கிய ஒரு சிறிய தேர்வுடன் தொடங்க வேண்டும். இதை வாய்மொழியாகவோ அல்லது எழுத்து வடிவிலோ செய்யலாம்.

# *பாடம் 1*
# *பழைய ஏற்பாடு அறிமுகம்*

## *பாடத்தின் நோக்கங்கள்*

*இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:*

(1) *தேவ ஏவுதலின் உபதேசத்தை அறிந்து கொள்ளுதல்.*
(2) *பழைய ஏற்பாட்டின் புத்தகங்களைத் தொகுக்க வழி காட்டும் அளவுகோல்களை அடையாளம் காணுதல்.*
(3) *நாம் பெற்றுள்ள பழைய ஏற்பாட்டுநூல் நம்பிக்கைக் குரியது என அறிதல்.*
(4) *கிறிஸ்தவரின் வாழ்க்கையில் பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவத்தைப் பாராட்டுதல்.*

## *இந்த பாடத்திற்கான ஆயத்தம்*

*சங்கீதம் 119ஐ வாசிக்கவும்.*
*சங்கீதம் 19:7-11ஐ மனப்பாடம் செய்யவும்.*

## *முன்னுரை*

► *கடந்த வருடத்தில், பழைய ஏற்பாட்டிலிருந்து நீங்கள் எத்தனை முறை பிரசங்கித்தீர்கள்? உங்களுடைய திருச்சபை ஊழியங்களில் பழைய ஏற்பாடு எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது?*

*வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்று கிறிஸ்தவ இறையியல் போதிக்கிறது. இருப்பினும், நடைமுறையில், தேவனுடைய வார்த்தையின் பெரும் பகுதிகளை நாம் அடிக்கடி புறக்கணிக்கிறோம். "வேதவாக்கியங்களெல்லாம் தேவசுவாசத்தினால் எழுதப்பட்டுள்ளன"[1] என்று நாம் உண்மையாக நம்பினால், புதிய ஏற்பாட்டை நாம் மதிப்பது போலவே பழைய ஏற்பாட்டையும் நாம் மதிக்க வேண்டும். நாம் பழைய ஏற்பாட்டைதேவனுடைய வார்த்தையாகப் படித்து பிரசங்கிக்க வேண்டும்.*

---

*[1] 2 தீமோத்தேயு 3:16*

*பழைய ஏற்பாட்டு உலகத்திற்கும்21ஆம் நூற்றாண்டுக்கும் இடையே கால இடைவெளி இருப்பதால், பழைய ஏற்பாடு இப்போதுள்ள நவீன வாசகர்களுக்கு கடினமாக இருக்கலாம். இந்த பாடத்திட்டத்தின் நோக்கம் ஒவ்வொரு பழைய ஏற்பாட்டுப் புத்தகத்திற்கும் ஒரு அறிமுகத்தை வழங்குவதாகும். பழைய ஏற்பாடு முழுவதையும் விரிவாகக் கையாள்வது சாத்தியமில்லை என்றாலும், இந்தப்புத்தகங்களைப் புரிந்து கொள்ள உதவும் பின்னணி தகவலை நீங்கள் கற்று க்கொள்வீர்கள், மேலும் ஒவ்வொரு புத்தகத்தின் முதன்மை கருப்பொருள்களின் கண்ணோட்டத்தையும் பெறுவீர்கள். இந்தப் பாடத்தில் கவனம் செலுத்த வேண்டிய இரண்டு பகுதிகள் உண்டு. ஒன்று, பழைய ஏற்பாடானது புதிய ஏற்பாட்டின் செய்தியுடன் எவ்வாறு தொடர்புடையது. மற்றொன்று பழைய ஏற்பாடு இன்று திருச்சபையோடு எவ்வாறு பேசுகிறது என்பதாகும்.*

*இந்த ஆரம்ப பாடத்தில், பழைய ஏற்பாட்டைப் பற்றிய நமது புரிதலைப் பாதிக்கும் பின்னணிப் பிரச்சினைகளைப் படிப்போம். பழைய ஏற்பாடுடன் தொடர்புள்ள மூன்று கேள்விகளைப் பார்ப்போம்:*

- *தேவனுடையவார்த்தையாக எந்த புத்தகங்களை ஏற்று க்கொள்ளலாம்?(தரநிர்ணய அளவுகோல்) கானோன்.*
- *பழைய ஏற்பாடு மனுக்குலத்துடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறது? ஏவுதல்.*
- *நாம் பெற்றிருக்கிற நூல்கள் மூலக் கையெழுத்துப் பிரதி களுக்கு உண்மையுள்ளதாக இருக்கிறதா? உரையின் துல்லியம்.*

## ***தரநிர்ணய அளவுகோல்***

*வேதாகமத்தின் தரநிர்ணய அளவுகோல் (நியதி) கிறிஸ்தவனுக்கு ஒரு முக்கியமான பிரச்சினை ஆகும். பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் உண்மையிலேயே தேவனுடைய வார்த்தை என்பது நமக்கு எப்படித் தெரியும்? அளவுகோலின்*

கருத்தானது, "எந்த எந்த புத்தகங்கள் தேவனுடைய மக்களுக்கான தேவனு டைய வார்த்தை?" என்னும் கேள்விக்கு பதிலளிக்கிறது.





Image by Rachel C from Pixabay, retrieved from [https://pixabay.com/vectors/school-school-supplies-education-1555906/](https://pixabay.com/vectors/school-school-supplies-education-1555906/)

*கானோன்* என்ற சொல் கிரேக்க வார்த்தை யான "விதி" அல்லது "அளவு கோல்" என்பதிலிருந்து வருகிறது. ஒரு புத்தகம் தேவனுடைய வார்த்தையாக இருக்கிறதா இல்லையா என்று நிர்ண யிக்க யூத ரபீகள் ஒர் அளவுகோலைப் பயன்படுத்தினார்கள். பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் எல்லாம் உண்மையிலேயே அந்தத் தரத்தைக் கொண்டிருந்தன. இந்த அறிஞர்கள் வேத வாக்கியம் என்று கூறப்படும் புத்தகங்களுக்கு மூன்று சோதனை களைப் பயன்படுத்தினர். அளவுகோலுக்கு உட்பட்ட புத்தக ங்கள் முழுமையாக அம்மூன்று தரங்களையும் கொண்டி ருந்தன.

1. **எழுத்தாளர்.** இந்த புத்தகம் தீர்க்கதரிசன வரமளிக்க ப்பட்ட ஒரு நபரால் எழுதப்பட்டிருத்தல். இந்த புத்த கங்கள் ஒரு மனித எழுத்தாளர் மூலம் பேசப்பட்ட தேவனுடைய செய்தியை கொண்டு வருவனவாக இருத்தல்.
2. **வாசகர்கள்.** இந்த புத்தகம் எல்லா காலத்தும் உள்ள அனைத்து தலைமுறையினருக்காகவும் எழுதப்பட் டிருத்தல். சிறிய தீர்க்கதரிசிகள் போன்ற புத்தகங்கள் கூட, அதாவது ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவின ருக்கு தேவனுடைய எச்சரிக்கையைக் கொண்டு வருகின்ற இந்த புத்தகங்கள் கூட எல்லா காலத்திலு முள்ள எல்லா மக்களுக்கும் உரிய ஒரு செய்தியாக இருத்தல்.
3. **செய்தி.** புத்தகத்தின் செய்தி அதற்கு முந்தைய வேதாகம வெளிப்பாட்டுடன் முரண்படாமல் இருத்தல்.

கி.மு. 165இல் யூதாஸ் மக்கபேயர் யூத வேதவாக்கியங்களின் பட்டியலை உருவாக்கியபோது, எபிரேய வேதாகமத்தின் கானோன் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. கி.பி.90இல்

*ஜாம்னியா ஆலோசனை சங்கத்தில் கானோன் குறித்து விவாதிக்க ரபீக்கள் கூடி வந்தபோது, அவர்கள் 200 ஆண்டுகளுக்கும் மேலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பட்டியலை உறுதி செய்தனர்.*

*ஆதித்திருச்சபையும் இந்த பட்டியலை ஏற்றுக்கொண்டது. மேலும் நான்காம் நூற்றாண்டில், கிறிஸ்தவ திருச்சபைகளில் பயன்படுத்தப்பட்ட கானோன் பழைய ஏற்பாட்டின் முப்பத்தொன்பது புத்தகங்களை உள்ளடக்கியிருந்தது.*

*ரபீக்கள் எபிரேயவேதாகமத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்தனர்:*

**(1)** ***நியாயப்பிரமாணம் (தோரா):*** *மோசேயின் ஐந்து புத்தக ங்களைக் கொண்டிருந்தது.*

**(2)** ***தீர்க்கதரிசிகள்:*** *இரண்டு துணைப்பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டன:*

- *முந்தைய தீர்க்கதரிசிகள் - யோசுவா, நியாயாதி பதிகள், சாமுவேல் மற்றும் ராஜாக்கள்*
- *பிந்தைய தீர்க்கதரிசிகள் - ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் மற்றும் "பன்னிரண்டு புத்தக ங்கள்"*[2]

**(3)** ***எழுத்துக்கள்: இவற்றில்*** *யூதப்பண்டிகைகளுடன் தொட ர்புடைய புத்தகங்கள் மற்றும் முதல் இரண்டு பிரிவு களில் வராத புத்தகங்கள் அடங்கும்:*

- *கவிதைப்புத்தகங்கள் - சங்கீதம், நீதிமொழிகள், யோபு*
- *"ஐந்து சுருள்கள்" (மெகிலோத்) – சாலமோனின் உன்னதப்பாட்டு, ரூத், புலம்பல், எஸ்தர் மற்றும் பிரசங்கி*
- *வரலாற்றுப்புத்தகங்கள் - தானியேல், எஸ்றா, நெகேமியா மற்றும் நாளாகமம்*

---

[2] *"பன்னிரண்டு புத்தகம்" ஆங்கில வேதாகமத்தில் பன்னிரண்டு சிறிய தீர்க்கதரிசிகளின் புத்தகங்களைக் கொண்டுள்ளது.*

*கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கிறார்கள்:*[3]

1. ***பஞ்சாகமம்:*** *மோசேயின் ஐந்து புத்தகங்களைக் கொண்டுள்ளது.*
2. ***வரலாற்றுப்புத்தகங்கள்:*** *யோசுவா முதல் எஸ்தர்வ ரையிலுள்ளபுத்தகங்கள் அடங்கும்.*
3. ***கவிதை மற்றும் ஞானம்:*** *யோபு முதல் சாலமோ னின் உன்னதப்பாட்டுவரையிலுள்ள புத்தகங்கள் அடங்கும்.*
4. ***பெரிய தீர்க்கதரிசிகள்:*** *ஏசாயா முதல் தானியேல் வரையிலுள்ளபுத்தகங்கள்.*
5. ***சிறிய தீர்க்கதரிசிகள்:*** *பழைய ஏற்பாட்டின் கடைசி பன்னிரண்டு புத்தகங்கள்.*

### ***ஏவுதல்***

*வேதவாக்கியங்களெல்லாம் “தேவசுவாச எழுத்துக்கள்" என்று பவுல் எழுதினார்; இது "தேவஆவியினால் அருளப்பட்டிரு க்கிறது."*[4] *இந்த வசனம் தேவன் அனைத்து வேதவாக்கியங்க ளையும் எழுதியவர் என்று போதிக்கிறது. தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்னும் கோட்பாடு தேவன் தமது வார்த்தைகளை மனித எழுத்தாளர்களின் மனதில் ஊதினார் என்பதாகும், மேலும் தேவன் அவர்களை ஏவினபடியினால் அவர்கள் எழுதினார்கள்.*

*கலை அல்லது இசையின் தலைசிறந்த படைப்பை உருவாக்கும் போது ஒரு கலைஞர் அல்லது இசையமைப்பாளர் பெறும் ஏவுதலை விட தேவஆவியினால் ஏவப்படுதல் அதிக சிறப்பானது.. வேதாகமத்தின் ஏவுதல் என்பது தேவன் தமது வார்த்தைகளை மனித எழுத்தாளரின் சொல்வழக்கு மற்றும் பாணியின் மூலம் பேசினார் என்பதாகும். எழுத்தாளரின்*

---

[3] *பழைய ஏற்பாட்டில், கிறிஸ்தவர்களாகிய நாம் யூத எபிரேய வேதாகமத்தின் அதே ஏவப்பட்ட புத்தகங்களை அங்கீகரிக்கிறோம். ஆனால் அவற்றை வேறு.விதமாக வகைப்படுத்துகிறோம்*

[4] *2 தீமோத்தேயு 3:16*

*எண்ணங்களை மட்டுமல்ல, ஒவ்வொரு வார்த்தையையும் தேவனே .ஏவியிருக்கிறார்.*

தேவன் வேதத்தின் வார்த்தைகளை வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு வழிகளில் ஏவினார். சில நேரங்களில் தேவன் கேட்கும் வகையில் பேசினார், வேதத்தின் வார்த்தைகளை சொல்லி எழுதும்படிச் சொன்னார்.[5] சில நேரங்களில் தேவன் சொப்பனங்கள் மற்றும் தரிசனங்கள் மூலம் பேசினார்.[6] பல சமயங்களில், எழுத்தாளரை தேவன் *எப்படி* ஏவினார் என்று வேதாகமம் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. வேதாகம எழுத்தாளர்கள் பரிசுத்த ஆவியானவரால் "ஆட்கொள்ளப் பட்டனர்" என்று பேதுரு எழுதினார்.[7]வேதவாக்கியங்களின் வார்த்தைகள் நம்பகமானவை. ஏனென்றால் தேவன்தாமே நம்பகமானவர்.

தேவன் மனித எழுத்தாளரின் ஆளுமை மூலம் பேசியதே ஏவுதல் என்று சுவிசேஷ கோட்பாடு போதிக்கிறது, ஆனால் எழுத்தாளர் பேசிய வார்த்தைகளே தேவனுடைய வார்த்தையாக இருக்கும்படி அவர் வழிநடத்தினார். இது தேவனுடைய வார்த்தை என்பதால், வேதாகமம் பிழையற்றது (பிழை இல்லாதது) மற்றும் தவறிழைக்காதது(தவறு இல்லாதது). ஒவ்வொரு கூற்றும் (கோட்பாடு மற்றும் வரலாறு இரண்டும்) வேதவாக்கியத்தின் மூலக் கையெழுத்துப் பிரதிகளில் பிழை இல்லாமல் உள்ளது.[8]

### உரையின் துல்லியம்

சில சந்தேகவாதிகள், மூலக் கையெழுத்துப் பிரதிகள் சத்தியமானவைகளாக இருந்தாலும், நாம் பெற்றிருக்கிற உரையை நம்ப முடியாது என்று வாதிடுகிறார்கள். வேதவாக்கியத்தை நகலெடுப்பதில் தவறுகள் நடந்திருப்பதாக

---

[5]உதாரணமாக, லேவியராகமம் 1:1

[6]உதாரணமாக, தானியேல் 7 மற்றும் 8

[7]2 பேதுரு 1:21

[8]இந்த தலைப்பைப் பற்றி மேலும் அறிய, இந்த அத்தியாயத்திற்கான புத்தகவியல் பிரிவில் பட்டியலிடப்பட்டுள்ள *I Believe* என்ற புத்தகத்தைப் பார்க்கவும். கூடுதலாக, *Shepherds Global Classroom* பாடத்தில் உள்ள *Christian Beliefs* இல் ஏவுதல் பற்றிய ஒரு பாடம் சேர்க்கப்பட்டுள்ளது.

*அவர்கள் வாதிடுகின்றனர். இந்த விமர்சகர்கள் மூல உரை தேவனால் ஏவப்பட்டிருந்தாலும், இன்று நம்மிடம் உள்ள வேதாகமம் துல்லியமானது என்பதை அறிய நமக்கு வழி இல்லை என்று வலியுறுத்துகின்றனர்.*

*நம்முடைய வேதாகமத்தினுடைய உரையின் துல்லியத்தை நாம் நம்பலாமா? பதில் "ஆம்!" பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் கையெழுத்துப் பிரதிகளாக நகல் எடுக்கப்பட்டு எழுதப் பட்டவை என்பது உண்மைதான். கையால் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதியை மீண்டும் நகலெடுக்கும்போது தவறுகள் நிகழலாம் என்பதும் உண்மை. இருப்பினும், இது தேவனுடைய வார்த்தை என்பதால், நகல் எடுப்பவர்கள் தங்கள் பணியை மிகுந்த கவனத்துடன் அணுகினர்.*

*முதலில், ஆசாரியர்கள் வேதாகம நூல்களை நகலெடுக்கும் பொறுப்பில் இருந்தனர். கி.மு. 500 இல் தொடங்கி, வேதபாரகர்கள் நூல்களை நகலெடுத்தனர். தோராவில் உள்ள அனைத்து எழுத்துக்களையும் உரையின் துல்லியத்தைச் சரிபார்க்கும் வண்ணமாக எண்ணி எண்ணி எழுதியதால் . இவர்கள் வேதபாரகர்கள் ("எண்ணுகிறவர்கள்" என்று பொருள்படும் சொல்) என்னும் பெயரை பெற்றனர், ஒரு வேதபாரகன் தன் நினைவிலிருந்து ஒரு எழுத்தை கூட எழுதவில்லை; மாறாக ஒவ்வொரு எழுத்தும் முந்தைய நகலுடன் கவனமாக சரிபார்க்கப்பட்டது. வேதபாரகர்கள் வேதத்தை தேவனுடைய வார்த்தையாக மதித்ததால் நகலெடுப்பதற்கான விதிகள் மிகவும் கண்டிப்பானவையாக காணப்பட்டன.*

## சவக்கடல் சுருள்கள்

*கி.பி. 1947 ஆம் ஆண்டில், சவக்கடல்[9] அருகே பழங்கால சுருள்களின் ஒரு தொகுப்பு கண்டுபிடிக்கப்பட்டது. இவை கி.மு. 250 மற்றும் கி.பி. 135க்கு இடையில் எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டின் நகல்களைக் கொண்டிருந்தன. பிறகாலத்தில்*

---

[9] *Garry K. Brantley, "The Dead Sea Scrolls and Biblical Integrity." http://www.apologeticspress.org என்னும் வலைதளத்தில் காணப்படுகிறது.*

*கிடைத்த பிரதிகளை விட அவை ஏறத்தாழ 1,000 ஆண்டுகள் பழமையானவை என்பதால், மிகச் சமீபத்திய பிரதிகளின் துல்லியத்தை சரிபார்க்க உதவும் இச்சவக்கடல் சுருள்கள் மிகவும் மதிப்புமிக்கவை ஆகும். எஸ்தர் தவிர பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு புத்தகத்தின் பகுதியும் இந்த சுருள்களில் சேர்க்கப்பட்டிருந்தன.*

*பிந்தைய காலங்களில் கிடைத்த பிரதிகளுடன் சவக்கடல் சுருள்களை ஒப்பிட்டு, வேத அறிஞர்கள் குறிப்பிடத்தக்க துல்லியத்தைக் கண்டனர். உதாரணமாக, சவக்கடல் தொகுப்பில் உள்ள ஏசாயா சுருள் பிற்கால நகலை விட 1,200 ஆண்டுகள் பழமையானது. அதில் தொண்ணூற்றைந்து சதவிகிதத்திற்கும் அதிகமான உரைகள் பிற்கால பிரதிகள் போலவே இருக்கின்றன. அப்படியே சிறிய எண்ணிக்கையிலான மாறு பாடுகள் இருந்தாலும் அவை அடிப்படையில் எழுத்துப்பிழை மாற்றங்கள் மற்றும் நகலெடுப்பவர்களின் வெளிப்படையான சிறிய எழுத்துப்பிழைகளாகும். உபதேச வேறுபாட்டை உருவாக்கும் எந்த மாற்றங்களும் அங்கு இல்லை.*

### சவக்கடல் சுருள்களில் ஏசாயா 53-ஆம் அதிகாரம்

*ஏசாயா 53 ஆம் அதிகாரம் பழைய ஏற்பாட்டு உரையின் துல்லியத்தைக் காட்டுகிறது. ஏசாயா 53இல் 166 எபிரேய வார்த்தைகள் உள்ளன. அவற்றுள் சவக்கடல் சுருள்களில் பதினேழுஎழுத்துக்கள் மட்டும் வேறுபடுகின்றன. இவை:*

- *பத்து எழுத்துக்கள் எழுத்து உச்சரிப்புகளின் வேறு பாடுகள் - 1,200 ஆண்டுகளில் எழுத்து உச்சரிப்பு மாறிய வார்த்தைகள்*
- *நான்கு எழுத்துக்கள் எழுதப்பட்ட நடையின் வேறுபாடுகள் - உரையை வெளிப்படுத்தும் பலவேறு வழிகள்*
- *வசனம் 11இல் உள்ள அர்த்தத்தைத் தெளிவுபடுத்துவ தற்காக மூன்று எழுத்துக்கள் சேர்க்கப்பட்ட ஒரு வார்த்தை ("ஒளி"): "அவர் தமது ஆத்துமவருத்தத்தின் பலனைக் (ஒளியைக்) கண்டு திருப்தியாவார்."[10]*

---


*[10] ஏசாயா 53:11*

இந்த மாற்றங்களால் எந்த வேதாகமப் போதனையும் பாதிக்கப்படவில்லை. தேவன் தமது மக்களுக்கு தமது வார்த்தையைப் பாதுகாக்க பழைய ஏற்பாட்டை கையால் நகலெடுக்க 1,200 ஆண்டுகள் வழிகாட்டினார்.

## பழைய ஏற்பாட்டு உலகத்திற்கான நோக்குநிலை

பழைய ஏற்பாட்டை வாசிப்பதில் உள்ள சிரமத்திற்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று பழைய ஏற்பாட்டில் பரந்த அளவில் பயன்படுத்தப்பட்டுள்ள இடங்கள் மற்றும் காலங்கள் ஆகும். பழைய ஏற்பாட்டின் உலகத்திற்கான ஒரு கண்ணோட்டத்தை இரண்டு எடுத்துக்காட்டுகள் உங்களுக்குக் கொடுக்கும். இந்தப் பாடத்திட்டத்தில் பின்னர் வரும் பாடங்களைப் படிக்கும்போது தயவுசெய்து இவற்றை குறிப்புக்காக வைக்கவும்.

பழைய ஏற்பாட்டு உலகின் வரைபடம்[11]




[11]This work, "Map of the OT" is a derivative of "Middle East topographic map-blank" by Sémhur retrieved from https://commons.wikimedia.org/wiki/File:Middle_East_topographic _map- blank.svg, used under CC BY SA 4.0. "Map of the OT" is licensed under CC BY SA 4.0 by Shepherds Global Classroom.

| பழைய ஏற்பாட்டு உலக வரைபடத்திற்கான புராணக்கதை | | |
|---|---|---|
| **பகுதிகள்** | **நகரங்கள்** | **நீர்நிலைகள்** |
| (1) ஆசியா மைனர் | (11) ஆரான் | (17) மத்தியதரைக் கடல் |
| (2) சிரியா | (12) நினிவே | (18) கருங்கடல் |
| (3)மெசொப்பொத்தாமியா | (13) டமாஸ்கஸ் | (19) காஸ்பியன் கடல் |
| (4) அசீரியா | (14) ஏருசலேம் | (20) செங்கடல் |
| (5) ஊடகம் | (15) பாபிலோன் | (21) பாரசீக வளைகுடா |
| (6) கானான் | (16) ஊர் | |
| (7) எலாம் | | |
| (8) எகிப்து | | |
| (9) அரேபிய பாலைவனம் | | |
| (10) பெர்சியா | | |

| பழைய ஏற்பாட்டின் காலவரிசை | |
|---|---|
| **காலம்** | **நபர் / நிகழ்வு** |
| *கிமு 4000 க்கு முன்பு* | ஆதாம் |
| *கிமு 2400* | நோவா |
| *கிமு 2000* | ஆபிரகாம் |
| *கிமு 1450* | மோசே |
| *கிமு 1000* | தாவீது |
| *கிமு 950* | சாலமோன் |
| *கிமு 722* | இஸ்ரேலின் வீழ்ச்சி (வடக்கு ராஜ்யம்) |
| *கிமு 586* | யூதாவின் வீழ்ச்சி (தெற்கு ராஜ்யம்) |
| *கிமு 500* | எஸ்றா |
| *கிமு 400* | மல்கியா |

## முடிவுரை: பழைய ஏற்பாடும் கிறிஸ்தவனும்

*ஆம், பழைய ஏற்பாட்டைப் புரிந்துகொள்வது கடினம்:*

- *பழைய ஏற்பாடு நாம் வாழும் நம் உலகத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட கலாச்சாரங்களைக் குறிக்கிறது.*
- *பழைய ஏற்பாடு ஒரு பரந்த காலக்கட்டத்தை உள்ளடக்கியது(குறைந்தது 1,000 ஆண்டுகள்).*
- *பழைய ஏற்பாடு நான்கு முக்கிய சாம்ராஜ்யங்களை உள்ளடக்கியது (எகிப்து, அசீரியா, பாபிலோன், பெர்சியா).*
- *பழைய ஏற்பாடு 3,000க்கும் மேற்பட்ட இடங்கள் மற்றும் நபர்களின் பெயர்களைக்கொண்டுள்ளது.*

*பழைய ஏற்பாடு கடினமாக இருக்கலாம், ஆனால் அது தேவனுடைய ஜனங்களுக்கான தேவனுடைய வார்த்தையாகும். இயேசு பழைய ஏற்பாட்டில் இருந்து போதித்தார். வேதம் "என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே"[12] என்று தன்னை சந்தேகித்தவர்களுக்கு அவர் நினைவூட்டினார்.*

*பழைய ஏற்பாடு தேவ னுடைய வார்த்தையாக ஆதித்திருச்சபையால் பார்க்கப்பட்டது. புதிய ஏற்பாட்டில் உபாகமம் ஏறக்குறைய எண்பது முறைக்கு மேல் மேற் கோள் காட்டப்பட்டுள்ளது.*

*இயேசு கிறிஸ்துவின் வாழ்வும் ஊழியமும் பழைய ஏற்பாட்டின் நிறைவேறுதல் என்று ஆதித் திருச்சபை போதித்தது.*

> *"பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள், ஒரே ஆவியானவரால் ஏவப்பட்ட ஒரே தேவனுடைய ஒரே புத்தகம், ஒரே குமாரனைக் குறித்து சாட்சியமளிக்கிறது."*
> *- ஜெஃப்ப்ரி புரோமிலியிலிருந்து பொழிப்புரையாக்கப்பட்டது*

[12] *யோவான் 5:39. "வேதவாக்கியங்களை[ப்" பற்றி பேசுகையில், இயேசு பழைய ஏற்பாட்டு வேதத்தை குறிப்பிடுகிறார்.*

*பழைய ஏற்பாடு இன்றும் நம்முடன் தொடர்ந்து பேசுகிறது:*

- *பழைய ஏற்பாட்டிலிருந்து, தேவனுடைய மகத்துவத்தையும் பரிசுத்தத்தையும் பற்றி நாம் கற்றுக்கொள்கிறோம்.*
- *பழைய ஏற்பாட்டிலிருந்து, மனிதனுடைய பாவத்தையும் மீட்பரின் தேவையையும் குறித்து நாம் கற்றுக்கொள்கிறோம்.*
- *பழைய ஏற்பாட்டிலிருந்து, தேவனுக்கு விசேஷித்தவர்களாக வேறு பிரிக்கப்பட்ட ஒரு பரிசுத்த ஜனத்தை சிருஷ்டித்ததற்கான தேவனுடையதிட்டத்தைக் குறித்து நாம் கற்றுக்கொள்கிறோம்.*

*பழைய ஏற்பாடானது எல்லா காலத்திலுமுள்ள தேவனுடைய ஜனங்களுக்கான தேவனுடைய வார்த்தையாகும்.*

## *பாடம் 1 வீட்டுப்பாடம்*

*இந்த பாடத்தில் ஒரு தேர்வை நீங்கள் எழுதவேண்டும். மனப்பாடம் செய்வதற்குக் கொடுக்கப்பட்ட வேதவசனங்களும் இந்த தேர்வில் அடங்கும்.*

## *பாடம் 1 தேர்வு*

(1) *வேதாகமத்தை தொகுப்பதற்குக் குறிப்பிடும் "கானோன்" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?*

(2) *பழைய ஏற்பாட்டின் கானோனை நிறுவுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மூன்று அளவுகோல்களைப் பட்டியலிடுக.*

(3) *எபிரேய வேதாகமத்தின் மூன்று பிரிவுகளைப் பட்டியலிடுக.*

(4) *கிறிஸ்தவ பழைய ஏற்பாட்டின் ஐந்து பிரிவுகளைப் பட்டியலிடுக.*

(5) *"தெய்வீக ஏவுதல்" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?*

(6) *"பிழையற்றது" மற்றும் "தவறிழைக்காதது" என்ற வார்த்தைகளின் அர்த்தம் என்ன?*

(7) *சவக்கடல் சுருள்கள் பழைய ஏற்பாட்டினுடைய நூல்களின் துல்லியத்தை எவ்வாறு நிரூபிக்கின்றன?*

(8) *பழைய ஏற்பாடு இன்று நம்மோடு பேசும் மூன்று விதங்களைப் பட்டியலிடுக.*

(9) *சங்கீதம் 19:7-11 வரையிலுள்ள வசனங்களை நினைவிலிருந்து எழுதுக.*

# *பாடம் 2*
# *ஆதியாகமம்: ஆதியில்*

## *பாடத்தின் நோக்கங்கள்*

*இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:*

(1) *ஆதியாகமத்தின் முதன்மையான கருப்பொருள்களைத் திட்டவரையிட்டு காண்பித்தல்.*
(2) *கிறிஸ்தவ இறையியலுக்கான சிருஷ்டிப்பின் உபதேச முக்கியத்துவத்தைப் பாராட்டுதல்.*
(3) *இரட்சிப்பின் வரலாற்றில் ஆபிரகாமினுடைய உடன் படிக்கையின்பங்கைப் புரிந்து கொள்ளுதல்.*
(4) *ஆதியாகமத்தில் உள்ள முக்கிய கதாபாத்திரங்களை அடையாளம் காணுதல்.*
(5) *இன்றைய உலகின் தேவைகளுக்கு ஆதியாகமத்தின் செய்தியைத் தொடர்புபடுத்துதல்.*

## *இந்த பாடத்திற்கான ஆயத்தம்*

*ஆதியாகமத்தை வாசிக்கவும்.*
*ஆதியாகமம் 3:15 மற்றும் 12:3ஐ மனப்பாடம் செய்யவும்*

## *பஞ்சாகமம்*

*வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்கள் பஞ்சாகமம்*[13] *என்று அழைக்கப்படுகின்றன. எபிரேய வேதாகமத்தில், இவை தோரா அல்லது நியாயப்பிரமாணம் என்று அழைக்கப்படுகின்றன, அதாவது "போதித்தல்" என்று இதற்குப் பொருள்.*

*பஞ்சாகமம் வேதாகமத்தின் அஸ்திபாரம். இது வேதத்தின் மற்ற பகுதிகளுக்கு ஒரு வரலாற்றுக் கட்டமைப்பை வழங்குகிறது.*

- *ஆதியாகமம் 1–11வரையிலுள்ள அதிகாரங்களில், தேவன் ஒரு பரிபூரணமான உலகத்தை உருவாக்கி,*

---

[13]*கிரேக்க மொழியில் இருந்து: பென்டே எனும் ஐந்து மற்றும் டூக்கோஸ் எனும் சுருள் என்பதாக வருகிறது. பஞ்சாகமம் என்றால் "ஐந்து சுருள்கள்" அல்லது "ஐந்து புத்தகங்கள்" என்று பொருள்.*

பின்னர் மனிதனின் பாவத்திற்கு கிருபை மற்றும் நியாயத்தீர்ப்பு ஆகிய இரண்டினாலும் பதிலளிக் கிறார்.

- ஆதியாகமம் 12-50 வரையிலுள்ள அதிகாரங்களில், தேவன் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரைத் தெரிந்துகொண்டு அவர்கள் மூலமாய் அனைத்து தேசங்களையும் மீட்கும்படிக்கு மேசியா வின் வம்சவழியை உருவாக்குகிறார்.
- யாத்திராகமத்தில், தேவன் இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு வெளியே கொண்டு வந்து தனது ஜனங்களுடன் ஒரு உறவை ஏற்படுத்து கிறார்.
- லேவியராகமத்தில், ஒரு பரிசுத்த ஜனமாக வாழ இஸ்ரவேலர்களுக்கு ஒரு பரிசுத்த தேவன் போதிக் கிறார்.
- எண்ணாகமத்தில், தமது ஜனங்கள் தமக்குக் கீழ்ப் படியாமல் இருந்தபோதிலும் அவர்களுக்கு தேவன் தமது உண்மைத் தன்மையை வெளிப் படுத்துகிறார்.

| | கருப்பொருள் | தேவன்... | இயேசு... | இஸ்ரவேலர்... |
|---|---|---|---|---|
| **ஆதியாகமம்** | ஆதியில் | இறையாண்மையுள்ள சிருஷ்டிகர் | இரண்டாவது ஆதாம் | தெரிந்துகொள்ளப்படுகிறார்கள் |
| **யாத்திராகமம்** | மீட்பு மற்றும் உறவு | தெய்வீக போர்வீரர் | பஸ்கா ஆட்டுக்குட்டி | மீட்கப்படுகிறார்கள் |
| **லேவியராகமம்** | பரிசுத்தம் | பரிசுத்தமாக்கும் பரிசுத்தர் | பரிபூரண பலி | பிரித்தெடுக்கப்படுகிறார்கள் |
| **எண்ணாகமம்** | அலைந்து திரிதல் | நீதியுள்ள பாதுகாவலர் | வெண்கல சர்ப்பம் *(எண்ணாகமம்21: 4-9;யோவான்3:14)* | கீழ்ப்படியாமல் போகிறார்கள் |
| **உபாகமம்** | புதுப்பித்தல் | அன்பான தேவன் | வருகிறவராகிய தீர்க்கதரிசி *(உபாகமம் 18:15-19;அப். 7:37)* | ஆயத்தப்படுத்தப்படுகிறார்கள் |

- உபாகமத்தில், தான் வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தில் தனது ஜனங்கள் வாழ தேவன் அவர் களைத் தயார்படுத்துகிறார்.

*பஞ்சாகமத்தில், பழைய ஏற்பாட்டின் மற்ற பகுதிகளால் கண்டறியப்பட்டக் கருப்பொருள்களைக் காண்கிறோம்.*

(1) *தேவனுடைய இறையாண்மை*

*சிருஷ்டிப்பில், வாதைகளில் மற்றும் எகிப்திலிருந்து விடுவித் தலில், மற்றும் வனாந்தரத்தின் வழியாக இஸ்ரவேலரை வழிநடத்துவதில். தேவன் தமது சிருஷ்டிப்பின் மீது தமது அதிகாரத்தைக் காண்பித்தார். இஸ்ரவேலரின் வரலாறு தேவ னுடைய இறையாண்மை செயல்படுத்தும் மேடையாக இருக்கிறது.*

(2) *மனிதனுடைய பாவம்*

*மனிதனின் கலகம் மனித வரலாறு முழுவதையும் பாதிக்கிறது. ஜலப்பிரளயம், பாபேல் கோபுரம் மற்றும் வனாந்தரத்தில் இஸ்ரவேலரின் கீழ்ப்படியாமைகள் அனைத்தும் மனிதனில் வியாபித்துள்ள பாவத்தைகாட்டுகிறது. இருப்பினும், ஆதியா கமம் 3:15இல் தொடங்கி, தேவன் மனிதனுடையவீழ்ச்சியின் விளைவுகளை மாற்றியமைக்கிறார்.*

(3) *இரட்சிப்புக்கான தேவனுடைய திட்டம்*

*ஆபிரகாமுடனான தேவனின் உடன்படிக்கை, ஈசாக்கின் பிறப்பு, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலரின் மீட்பு, நியாயப்பிரமாணத்தை வழங்குதல் மற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசித்தல் ஆகியவை பாவ முள்ள மனிதனுக்கான தேவனுடைய மீட்பின் படிகளாகும். யாத்திராகமத்தில், பஸ்காபண்டிகை தேவனுடையமீட்பின் கிரியையின் ஒரு நீடித்த அடையாளமாகிறது.*

(4) *பரிசுத்தம்*

*தேவன் ஒரு பரிசுத்தமான தேவன்; அவர் பாவத்தை கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது. தேவன் தமது சமுகத்தில் வாழக்கூடிய ஒரு பரிசுத்த ஜனத்தை எவ்வாறு சிருஷ்டித்தார் என்பதை பஞ்சாகமம் காண்பிக்கிறது. பரிசுத்தம் என்பது*

*மனிதனுடைய நன்னடத்தையின் விளைவு அல்ல; இது ஒரு கிருபையுள்ள தேவனுடைய கிரியையாகும். அவர் தமது ஜனங்களை பாவமுள்ள ஜனங்களிடமிருந்து பிரித்தெடுத்து பரிசுத்த ஜனமாக மாற்றுகிறார். பரிசுத்தமான தேவனோடு தொடரும் உறவின் மூலம் மட்டுமே நாம் பரிசுத்தமாக இருக்கிறோம்.*

***பஞ்சாகமத்தின் எழுத்தாளர்***

*பதினெட்டாம் நூற்றாண்டு வரை, பஞ்சாகமத்தின் எழுத்தாளர் குறித்த ஒரு விவாதமும் அல்லது எந்த விவாதமும் இல்லை. அனைத்து கிறிஸ்தவர்களும் மோசேதான் இதை எழுதினார் என்பதான வேதத்தின் சாட்சியத்தை ஏற்றுக்கொண்டனர். நவீன காலத்துவிமர்சனத்தின் எழுச்சியுடன், இன்று பல அறிஞர்கள் மோசேயை இதன் எழுத்தாளராக ஏற்றுக்கொள்ளமறுக் கின்றனர்.*

*இருப்பினும், வேதத்தின் பிழையற்றதன்மையை ஏற்றுக் கொள்ளும் சுவிசேஷகத் திருச்சபைகளுக்கு, வேதத்தின் சாட்சி தெளிவாக உள்ளது. பஞ்சாகமம் தன்னில்தானே மோசேயை அதன் எழுத்தாளராக அடையாளம் காட்டுகிறது; புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் மோசேயை அதன் எழுத்தாளராக மேற்கோள் காட்டுகிறார்கள்; இயேசு மோசேயை அதன் எழுத்தாளர் என்று குறிப்பிட்டார். இதன் காரணமாக, பஞ்சாகமம் பெரும்பாலும் கி.மு. பதினைந்தாம் நூற்றாண்டில் மோசேயினால் எழுதப்பட்டது என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். இதைக் குறித்து இன்னும் விரிவாகப் படிக்க விரும்பும் மாணவர்களுக்கு, இந்த அத்தியாயத்தின் முடிவில் உள்ள "ஆழமாக ஆராய்தல்" (Digging Deeper) என்னும் ஆதாரங்கள் உங்களுக்கு வழிகாட்டும்.*

*பண்டைய உலகில் "எழுதியவர்" யார் என்கிற தன்மையைப்புரிந்துகொள்வது முக்கியம். இன்று ஒரு புத்தகம் எழுதப்பட்டால், அது முடிந்துவிட்டது; நீங்கள் வெளியிட்ட பிறகு யாரும் அதை மாற்ற மாட்டார்கள். இன்று ஒரு எழுத்தாளர் எழுதுவது போலவே மோசே பஞ்சாகமத்தை*

எழுதினார் என நினைத்தால், நமக்கு பல கேள்விகள் எழும். உதாரணமாக:

- உபாகமம் 34 ஆம் அதிகாரம் மோசேயின் மரணம் மற்றும் அடக்கம் பற்றி கூறுகிறது.
- எண்ணாகமம் 12:3மோசேயை பூமியில் உள்ள மனிதர் களில் மிகவும் சாந்தகுணமுள்ள மனிதன் என்று அழைக்கிறது. ஒரு மாணவர் கேட்டது போல், "ஒரு நபர் தன்னை பூமியில் மிகவும் தாழ்மையான நபர் என்று அழைத்தால், அவர் உண்மையில் தாழ்மையானவரா?"
- ஆதியாகமம் 11:28 ஊர் என்கிற "கல்தேயர்" தேசத்துப் பட்டணத்திலே என்று குறிப்பிடுகிறது. மோசேமரித்த 700 வருடங்கள் வரை கல்தேயர்கள் ஊர் சுற்றியுள்ள பகுதியை ஆட்சி செய்யவில்லை.

பண்டைய உலகில் "எழுத்தாளரின்" தன்மையை நாம் புரிந்து கொள்ளும்போது இந்த உதாரணங்கள் ஒவ்வொன்றும் தெளிவாகிறது. பஞ்சாகமத்தின் எழுத்தாளராக மோசேயை அடையாளம் காண்பது என்பது, மோசே பரிசுத்த ஆவியின் ஏவுதலின் கீழ், இந்த ஐந்து புத்தகங்களின் முதன்மையான உள்ளடக்கத்தை எழுதியுள்ளார் என ஏற்பதாகும். மோசேயின் மரணம் மற்றும் அடக்கம் பற்றிய விவரத்தைச் சேர்க்கப் பிற்கால எழுத்தாளர் (ஒருவேளை யோசுவா) பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டார். பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்பட்டு, பிற்கால எழுத்தாளர் மோசே பூமியில் மிகவும் சாந்தகுணமுள்ளவர் என்று அடையாளம் காட்டினார். பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்பட்ட, ஒரு எழுத்தாளர் "கல்தேயர்களின் ஊர்" மற்றும் ஊர் என்ற மற்றொரு நகரத்தை வேறுபடுத்திப் பார்க்க உதவும் வகையில் "கல்தேயர்களின்" என்று சேர்த்தார்.

இத்தகைய மாற்றங்கள் மோசே பஞ்சாகமத்தின் ஆசிரியராக இருக்கிறார் என்பதை சந்தேகத்திற்கு உட்படுத்தவில்லை. அதற்கு பதிலாக, தேவனுடைய ஏவுதலின் செயல்முறையை அதிக தெளிவுடன் புரிந்துகொள்ள அவை நமக்கு உதவுகின்றன.

## *கருப்பொருள்: "ஆதியில்"*

*ஆதியாகமம் தொடக்கங்களின் புத்தகம். ஆதியாகமம் உலகத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது (ஆதியாகமம்1-11), அதைத் தொடர்ந்து வருவது யூத மக்கள் வரலாறு மற்றும் இரட்சிப்பின் வரலாறு (ஆதியாகமம்12-50).*

*நவீன சந்தேகவாதிகள் இந்த அதிகாரங்களின் வரலாற்று உண்மையை மறுக்கின்றனர். இருப்பினும், இந்த அதிகாரங்கள் வேதத்தின் மற்ற பகுதிகளுக்கு அஸ்திபாரமாக உள்ளன. அவை உலகத்தின் மீது தேவனுடைய இறையாண்மையையும் பாவ முள்ள மனிதனுக்கு மீட்பை வழங்குவதில் அவருடைய கிருபையையும்காட்டுகின்றன.*

### ஆதியாகமத்தின் கண்ணோட்டம்

### *ஆதிகாலவரலாறு: ஆதியாகமம் 1–11*

*ஆதியாகமம் 1-11 பெரும்பாலும் வரலாற்றில் மிகவும் முந்திய காலத்தைக் குறிக்கக்கூடிய"புராதன வரலாறு" என்று அழைக் கப்படுகிறது. இந்த அதிகாரங்கள் 2,000ஆண்டுகளுக்கும் மேலா னவை. ஆதியாகமம் 1-11 நான்கு முக்கிய நிகழ்வுகளை விவரிக்கிறது:*

- *சிருஷ்டிப்பு உலகின் மீது தேவனுடைய இறையாண் மையைக் காட்டுகிறது. நியாயப்பிரமாணத்தை வழங்கு வதற்கான அவரது அதிகாரம் பிரபஞ்சத்தின் சிருஷ்டி கராக அவரது இறையாண்மையை அடிப்படையாகக் கொண்டது.*
- *வீழ்ச்சி மனிதனின் பாவத்தன்மையையும் இரட்சிப்பின் அவசியத்தையும் காட்டுகிறது. வேதத்தின் மற்ற பகுதிகள் வீழ்ச்சியின் விளைவுகளுக்கு தேவனுடைய கிருபையுள்ள தீர்வைக் காட்டுகிறது.*
- *ஜலப்பிரளயம் தேவனுடைய பரிசுத்தத்தையும் நீதியை யும் காட்டுகிறது. பாவம் தேவனுடைய நியாயத் தீர்ப்பைக் கொண்டுவராது என்ற சாத்தானின் பொய்யை*

நாம் ஒருபோதும் நம்பக்கூடாது. "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்"[14] என்ற கொள்கையை ஜலப் பிரளயம் விளக்குகிறது.

- *பாபேல் கோபுரம்* மனிதனின் தொடர்ச்சியான கிளர்ச்சியையும் பெருமையையும் காட்டுகிறது. தோட் டத்தில், சாத்தான் ஏவாளை "நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள்"[15] என்று வாக்குறுதி அளித்தான். பாபேலில், மனிதன் "நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம்"[16]என்று முயன்றான். இரண்டு கதைகளிலும், மனிதன் பெருமையினிமித்தம் செயல்படுகிறான்; இரண்டு சந்தர்ப்பங்களிலும், மனிதன் தேவனுடைய ஸ்தானத்தை எடுக்க முயற்சி க்கிறான்; இரண்டு சந்தர்ப்பங்களிலும், மனிதனின் பெருமை தேவனுடையநியாயத்தீர்ப்பைக் கொண்டு வருகிறது.

ஆதியாகமம் 1, பிரபஞ்சத்தின் சர்வ வல்லமையுள்ள தேவனான ஏலோஹிம் உலகத்தை உருவாக்கியதைக் காட்டுகிறது. ஆதியாகமம்2 தோட்டத்தில் மனிதனை உருவாக்குவது மற்றும் உடன்படிக்கை செய்யும் தேவனான யேகோவாவுக்கும் ஆதா முக்கும் இடையிலான உறவை மையமாகக் கொண்டுள்ளது. நாம் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டிருப்பதால் னிதனுக்கு மதிப்பு இருக்கிறது என்பதை ஆதியாகமம்1-2காட்டுகிறது.[17]தாவீது பாடினான்:

---

[14]எசேக்கியேல் 18:20

[15]ஆதியாகமம் 3:5

[16]ஆதியாகமம் 11:4

[17]ஆதியாகமக் கணக்கை பண்டைய அண்மைக் கிழக்கின் படைப்புக் கட்டுக்கதைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தேவனுடைய உருவத்தின் கோட்பாட்டின் முக்கியத்துவம் காணப்படுகிறது. பாபிலோனிய *அட்ராஹாசிஸ்* கற்பலகையில், தெய்வங்களுக்காக பள்ளம் தோண்டுவதற்காக மனிதர்கள் களிமண்ணினால் உருவாக்கப்படுகிறார்கள். தெய்வங்கள் வேலை செய்ய விரும்பவில்லை, எனவே மனிதர்கள் அடிமைகளாக்கப்பட்டுள்ளனர். *அட்ரஹாசிஸில்*, கடவுள்கள் பொறாமைக் கொண்டவர்கள் மற்றும் நிலையற்றவர்கள்; *அட்ராஹாசிஸில்* மனிதகுலத்திற்கு மதிப்பு இல்லை. இதற்கு நேர்மாறாக, ஒரு பரிசுத்தமுள்ள தேவன் மனிதகுலத்தை தனது சொந்த சாயலில் படைத்தார் என்று ஆதியாகமம் காண்பிக்கிறது; தேவன் பரிசுத்தராக இருப்பது போல் நாமும் பரிசுத்தமாக இருக்க வேண்டும்..

> *உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும், நட்சத் திரங்களையும் நான் பார்க்கும்போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற் கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன். நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையி னாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்.*[18]

*ஆதியாகமம்1-3தேவனுக்கு எதிரான மனிதனின் கலகத்தைக் காட்டுகிறது. தேவன் உருவாக்கிய ஒவ்வொரு நல்ல பொருட்க ளால் சூழப்பட்ட ஒரு அழகான தோட்டத்தில்,தேவனுடன் நெருக்கமான உறவை அனுபவித்த, ஆதாமும் ஏவாளும் தேவனுக்கு எதிராகத் திரும்பி, சர்ப்பத்தின் சத்தத்திற்குச் செவிகொடுத்தார்கள். மனிதனின் கலகம் ஒருபக்கம் இருந்த போதிலும், இந்த அதிகாரங்கள் மீட்பர் பற்றிய தேவனுடைய இரக்கமுள்ள வாக்குறுதியைக்காட்டுகின்றன.*[19]

*இறுதியாக, ஆதியாகமம்1-11 மனிதனின் பெருகி வரும் கலகத்தைக் காட்டுகிறது, இது ஜலப்பிரளயத்திற்கு வழிவகு த்தது. ஜலப்பிரளயத்திற்குப் பிறகு, மனிதன் மீண்டும் பாபேலில் கலகம் செய்தான். இந்தக் கலகமானது பாஷைகளின் குழப்பத்தையும், நாடுகளின் சிதறலையும் ஏற்படுத்தியது. ஆபிரகாமுடனான உடன்படிக்கையில் வழங்கப்பட்ட மீட்பின் அவசியத்தை இந்தக் கதைகள் காட்டுகின்றன.*

## *முற்பிதாக்களின் வரலாறு: ஆதியாகமம் 12–50*

*ஆதியாகமம் 1-11வரையிலுள்ள அதிகாரங்கள் 2,000 ஆண்டுகளுக்கும் மேலானது மற்றும் நான்கு நிகழ்வுகளில் சுருக்கப்பட்டுள்ளது. ஆதியாகமம் 12-50 வரையிலுள்ள அதிகாரங்கள் என்பது முற்பிதாக்களின் கதை. இந்த அதிகாரங்கள் சுமார் 300 ஆண்டுகளில் நான்கு பேரின் வாழ்க்கையை விவரிக்கின்றன:*

---

[18] *சங்கீதம் 8:3-5*

[19] *இறையியலாளர்கள் ஆதியாகமம் 3:15 ஐ நற்செய்தியின் முதல் வாக்குறுதியான "புரோட்டோ-சுவிசேஷம்" என்று அழைக்கிறார்கள். மனிதனின் பாவத்திற்கு பதில், கடவுள் மீட்பை வாக்களித்தார்; அவர் நம் பாவத்தில் நம்மை விட்டு விலகவில்லை.*

- *ஆபிரகாம் (ஆதியாகமம் 11–25)*
- *ஈசாக்கு (ஆதியாகமம் 25–26)*
- *யாக்கோபு (ஆதியாகமம் 27–36)*
- *யோசேப்பு (ஆதியாகமம் 37–50)*

*ஆதியாகமம் 1-11வரையிலுள்ள அதிகாரங்கள் உலகத்தின் தொடக்கங்களின் கதையைக் கூறுகின்றன; ஆதியாகமம் 12-50வரையிலுள்ள அதிகாரங்கள் எபிரேய ஜனங்களின் தொடக்கத்தின் கதையைச் சொல்கின்றன. ஆதியாகமம், "இவைகளின் தலைமுறைகள்..." என்ற சூத்திரத்தைப் பயன்படுத்தி, உலகப் படைப்பிலிருந்து ("வானத்தையும் உண்டாக்கின நாளிலே, வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு இவைகளே")[20], மனிதகுலத்தின் உருவாக்கம் வரை ("ஆதாமின் வம்ச வரலாறு")[21], நோவா, சேம், தேரா, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் இறுதியாக, யாக்கோபு ("யாக்கோபுடைய சந்ததியின் வரலாறு")[22] என்பவர்களின் வழியாக பதிவு செய்கிறது*

*ஆபிரகாமுடனான உடன்படிக்கை இரட்சிப்பின் வரலாற்றின் மையமானதாகும். இந்த உடன்படிக்கை மூன்று காட்சிகளில் வெளிப்படுகிறது:*

- *ஆதியாகமம் 12:1-3இல், ஆபிரகாமின் சந்ததியாரை ஒரு பெரிய தேசமாக உருவாக்குவதாக தேவன் வாக்குறுதி அளித்தார். இஸ்ரவேலை ஆசீர்வதிப்பவர்களை ஆசீர் வதிப்பேன், இஸ்ரவேலை சபிப்பவர்களை சபிப்பேன். ஆபிரகாமின் சந்ததியை எல்லா தேசங்களுக்கும் ஆசீர்வாதமாக ஆக்குவதாக தேவன் வாக்குறுதி அளித் தார். இஸ்ரேலின் தெரிந்துகொள்ளுதல் என்பது உலகின் அனைத்து ஜனங்களுக்கும் ஆசீர்வாதத்தின் முகாந் தரமாக ஒரு ஜனத்தைத் தேர்ந்தெடுப்பதாகும்.*
- *ஆதியாகமம் 15ஆனது இரட்சிப்பின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகாரம். மற்ற பண்டைய அண்மைக் கிழக்கு மக்கள் இனங்களின் உடன்படிக்கைகளில்,*

---

[20] *ஆதியாகமம் 2:4*
[21] *ஆதியாகமம் 5:1*
[22] *ஆதியாகமம் 37:2*

பலவீனமான நபர் வலுவான நபருக்கு உண்மையுள்ளவராக இருக்க வேண்டும் என்பதற்காக இரத்த உறுதிமொழி நடைமுறையில் இருந்தது. ஆதியாகமம் 15இல், தேவன் *தாமே* ஆபிரகாமுக்குத் தம்முடைய நித்திய உண்மைத் தன்மையை உறுதியளிக் கிறார்.

- ஆதியாகமம் 17 விருத்தசேதனத்தின் அடையாளத்தைக் கொடுக்கிறது, இதன் மூலம் ஆபிரகாமும் அவனுடைய சந்ததியினரும் உடன்படிக்கையில் தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்துவார்கள். பழைய ஏற்பாட்டில் இரட் சிப்பு, புதிய ஏற்பாட்டில் உள்ளது போல், விசுவாசத்தினால் மட்டுமே, கிரியைகளினால் அல்ல. விருத்தசேதனம் தன்னில்தானே இரட்சிப்பின் அடிப் படையாக இருந்ததில்லை; விருத்தசேதனம் என்பது உடன்படிக்கையின் வாக்குறுதிகளில் உள்ள விசுவாசத் தின் அடையாளமாக இருந்தது.[23]

மேசியாவின் வம்சவழிக்காக தேவன் வழங்கிய வரலாறு இதனுடன் தொடர்கிறது:

- ஈசாக்கின் அதிசய பிறப்பு.
- ஈசாக்கை பலியிட தேவன் ஆபிரகாமை அழைத்ததன் மூலம் ஆபிரகாமின் கீழ்ப்படிதலுக்கான சோதனை.
- ஈசாக்கிற்கு மாற்றாக வேறொரு மிருகபலி வழங்குதல்.
- யாக்கோபில் குணாதிசயக் குறைபாடுகள் இருந்தபோதி லும், யாக்கோபின் குடும்பத்தின் மேல் தேவனுடைய ஆசீர்வாதம்.

ஆதியாகமம் 37-50 வரையிலுள்ளஅதிகாரங்கள் மேசியாவின் வம்சவழியில் (அதாவதுஆபிரகாம் - ஈசாக்கு - யாக்கோபு - யூதா) கவனம் செலுத்துவதிலிருந்துவிலகி யோசேப்பின் மீது கவனம் செலுத்துகிறது. யோசேப்பு பெரும்பாலும் கிறிஸ்துவின் ஒரு நிழல்மாதிரியாகக் காணப்படுகிறார். யோசேப்பு மற்றும் இயேசு இருவரும் தங்கள் குடும்பத்தால் நிராகரிக்கப்பட்டனர், இருவ ரும் விற்கப்பட்டனர், இருவரும் மற்றவர்களுக்காகத் தங்க

[23] ரோமர் 4:9-12

ளையே தியாகம் செய்தனர், மேலும் இருவரும் தங்களுக்கு அநீதி இழைத்தவர்களை மன்னித்தனர். யோசேப்பு, இயேசுவின் மனித தன்மைக்கு ஒரு அழகான பழைய ஏற்பாட்டு உதாரணத்தை வழங்குகிறார்.

ஆதியாகமத்தின் முடிவில் யோசேப்பின் முக்கியத்துவத்திற்கு ஒரு காரணம் என்னவென்றால், பஞ்சத்தின் ஆண்டுகளில் தேவன் எவ்வாறு மேசியாவின் முன்னோர்களைப் பாதுகாத்தார் என்பதை அவரது கதை காட்டுகிறது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்திற்கு எப்படி வந்தார்கள் என்பதைக் காண்பிப்பதன் மூலம் யோசேப்பின் கதை யாத்திராகமத்திற்கு ஒரு முன்னுரையை வழங்குகிறது. இஸ்ரவேலர்கள் எகிப்தில் தயவை அனுபவிப் பதோடு ஆதியாகமம் முடிவடைகிறது. 400ஆண்டுகளுக்குப் பிறகு எகிப்தில் இஸ்ரவேலர்கள் அடக்குமுறையை அனுபவிக் கும் போதிலிருந்து யாத்திராகமம்தொடங்குகிறது.

## ஆதியாகமத்தில் முக்கியமான கருப்பொருள்கள்

### *தெரிந்துகொள்ளுதல்*

தெரிந்துகொள்ளுதல் என்னும் கருப்பொருள் பழைய ஏற்பாட்டின் மையமாகும். அனைத்து நாடுகளுக்கும் தேவனு டைய ஆசீர்வாதத்தின் முகாந்திரமாக ஆபிரகாம் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதேபோல, ஈசாக்கும் யாக்கோபும் அவர்களுடைய செயல்களுக்காக அல்ல, மாறாக தேவனுடைய வாக்குறுதிகளுக்கான முகாந்திரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முற்பிதாக்கள் மேசியாவின் வரிசையின் ஒரு பகுதியாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். இது தனிநபர் இரட்சிப்புக்கான தெரிந்துகொள்ளுதல் அல்ல; அது சேவைக்கான தெரிந்து கொள்ளுதல்.

உடன்படிக்கையில் தனிப்பட்ட பங்கேற்பு என்பது தேவ னுடைய வாக்குறுதிகளில் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது. இதை வரலாற்று நூல்களில் காண்போம். ராகாப் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரவேல் தேசத்தைச் சேர்ந்வராக இருக்கவில்லை, ஆனால் விசுவாசத்துடன் கீழ்ப்படிந்ததன் காரணமாக அவள் தேவனுடையவாக்குறுதிகளைப் பெற்றாள். ஆகானுக்கு நிகழ்ந்தது நேர் எதிரானது; அவன் தேர்ந்தெடுக்கப் பட்ட தேசத்தைச் சேர்ந்தவனாக இருந்தபோதிலும், அவனு

*டைய கீழ்ப்படியாமை மற்றும் விசுவாசமின்மை காரணமாக தேவனுடைய வாக்குறுதிகளைப் பெறவில்லை.*

| **பழைய ஏற்பாட்டில்தெரிந்துகொள்ளுதலின் உபதேசம்** | |
|---|---|
| *இஸ்ரவேல் தெரிந்துகொள்ளப்படுதல்* | *சகல தேசங்களுக்காக* |
| *இஸ்ரவேல் தெரிந்துகொள்ளப்படுதல்* | *சேவிப்பதற்காக* |
| *தனிநபர்கள் தெரிந்துகொள்ளப்படுதல்* | *தேவனுடையவாக்குறுதிகளில் நம்பிக்கை வைத்தல் மூலமாக* |

***உடன்படிக்கை***

*தேவன் நோவாவுடன் உடன்படிக்கை செய்தார் (ஆதியாகமம்9). இதைத் தொடர்ந்து ஆபிரகாமுடன் அவர் செய்த உடன்படிக்கை (ஆதியாகமம் 12, 15, 17). தேவன் மோசேயுடன் ஒரு உடன் படிக்கை செய்துகொண்டது உடன்படிக்கை வரலாற்றின் அடுத்த படியாகும், அதாவது சீனாய் மலையில் இருக்கும்போது செய்த உடன்படிக்கை (யாத்திராகமம் 19). 2சாமுவேல் 7ல், தேவன் தாவீதின் உடன்படிக்கையை நிறுவினார். இவை அனைத்தும் இயேசு கிறிஸ்துவின் பலிமரணத்தின் மூலம் நிறுவப்பட்ட "புதிய உடன்படிக்கையை" சுட்டிக்காட்டுகின்றன (லூக்கா22:20).*

*ஒவ்வொரு உடன்படிக்கையும் முந்தைய உடன்படிக்கையின் அஸ்திவாரத்தில் கட்டமைக்கப்படுகிறது. முந்தைய உடன்படிக் கையை மாற்றுவதற்குப் பதிலாக, ஒவ்வொரு உடன்படிக்கை யும் புதிய விவரங்களைச் சேர்க்கிறது. இது மத்தேயு5:17இல் இயேசுவின் வார்த்தைகளை விளக்குகிறது, "நியாயப்பிரமா ணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கி றதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்." புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டிற்குப் பதிலாக இல்லை; இது*

பழைய ஏற்பாட்டின் அஸ்திவாரத்தில் கட்டமைக்கப் பட்டுள்ளது.

### புதிய ஏற்பாட்டில் ஆதியாகமம்

புதிய ஏற்பாட்டு வரலாறு ஆதியாகமம் 3:15-ன் வாக்குறுதியிலிருந்து வளர்கிறது. சர்ப்பத்தை தோற்கடிக்கும் மீட்பர் என்ற தேவனுடைய வாக்குறுதியை இயேசு நிறைவேற்றுகிறார். ஆதியாகமம் 3 இன் சாபம் தேவ வெளிப்பாட்டில் தலைகீழாக மாறியது; ஆதியாகமம் 3-ன் வாக்குறுதி கிறிஸ்துவின் வருகையில் நிறைவேறுகிறது.

முதல் ஆதாமின் தோல்வியை மாற்றியமைக்கும் இரண்டாவது ஆதாமாக இயேசு புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறார்.[24] அவர் ஆபிரகாமின் வாக்குப்பண்ணைப்பட்ட சந்ததியாவார், அவர் மூலம் பூமியிலுள்ள அனைத்து தேசங்களும் ஆசீர்வதிக்கப் படுகின்றன.[25]

### சிருஷ்டிப்பைக் குறித்த ஒரு நுணுக்கமான பார்வை

► வேதாகமத்தின் செய்தியைப் புரிந்துகொள்வதற்கு சிருஷ்டிப் பின் கோட்பாடு எவ்வாறு முக்கியமானது? ஆதியாகமம் 1-2 உண்மை வரலாறாக இல்லாமல் ஒரு கட்டுக்கதையாக இருப்பதில் ஆட்சேபணை உண்டா ?

1998இல், செல்வதற்கு அனுமதி பெற பிரச்சினைகள் உள்ள ஒரு நாட்டில் போதகர்களுக்கான வகுப்பில் நான் கற்பித்தேன். அந்நாட்டு அரசு கிறிஸ்தவ இலக்கியங்களை வெளியிட தடை விதித்துள்ளது. இருப்பினும் 1998இல், இந்த அரசாங்கம் குழந்தைகளுக்கான வேதாகமக் கதை புத்தகத்தை வெளியிட அனுமதித்தது.

இந்தச் செய்தியால் நான் உற்சாகமடைந்தேன்–அதாவது புத்தகத்தின் ஒரு பிரதியைப் பார்க்கும் வரை. ஒவ்வொரு பக்கத்தையும் வெளியிடுவதற்கு முன் அங்கிகாரம் பெற வேண்டும் என்று அரசாங்கம் வலியுறுத்தியது. முதல் பக்கம் தேவன் ஆதாமையும் ஏவாளையும் ஏதேனிலிருந்து வெளியேற்

[24] ரோமர் 5:12-21

[25] ஆதியாகமம் 12:1-3; கலாத்தியர் 3:15-22

றுவதைக் காட்டியது. இரண்டாவது படம் ஜலப்பிரளயம் பெருக்கெடுத்து ஓடும்போது குழந்தைகள் பயந்து அலறுவதைக் காட்டியது. மூன்றாவது படம் ஆபிரகாம் தனது மகனுக்கு மேலே உயர்த்தப்பட்ட கத்தியைக் காட்டினார்.

சிருஷ்டிப்பு மற்றும் மனிதனின் வீழ்ச்சி பற்றிய கதைகளைத் தவிர்க்குமாறு வெளியீட்டாளரை அரசாங்கம் கட்டாயப் படுத்தியது. சிருஷ்டிப்பு மற்றும் மனிதனின் வீழ்ச்சி இல்லாத வேதாகமம் தேவனைப் பற்றிய ஒரு சிதைந்த சித்திரத்தையே அளிக்கிறது. இந்த வேதாகமத்தைப் படிக்கும் குழந்தைகள் கோபப்படுகிற தெய்வத்தைப் பார்த்தார்கள். அவர் குழந்தை களை மூழ்கடித்து, தந்தைகளை தங்கள் மகன்களைக் கொல்லும்படி கட்டாயப்படுத்துகிறார். இந்த வேதாகமக் கதை புத்தகத்தில் தேவன் ஏன் இந்த உலகத்தின் மீது அதிகாரம் வைத்திருக்கிறார் என்பதைக் காட்டும் சிருஷ்டிப்பின் அடிப்படைக் கதையைக் காணவில்லை.

சிருஷ்டிப்பின் விவரம் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு இன்றிய மையாதது. ஒருவேளை அதனால்தான் பல சந்தேகங்கள் ஆதியாகம விவரங்களின் உண்மையை மறுப்பதன் மூலம் கிறிஸ்தவ நம்பிக்கையின் மீதான தாக்குதலைத் தொடங்கு கின்றன. துரதிர்ஷ்டவசமாக, பல கிறிஸ்தவ எழுத்தாளர்கள் கூட ஆதியாகமத்தின் பதிவு நம்பத்தகாதது என்று கூறுகின்றனர். ஆதியாகமம் 1-2 புராணம், வரலாறு அல்ல என்று அவர்கள் வாதிடுகின்றனர். இருப்பினும், வேதத்தின் மற்ற பகுதிகள் ஆதியாகம விவரங்களின் உண்மைக்கு சாட்சியமளிக்கின்றன. பிரச்சினையின் ஒரு பகுதி என்னவென்றால், விஞ்ஞானம் வேதாகமத்திற்கு முரணானது என்று கூறும் மதச்சார்பற்ற மனநிலையின் கைதிகளாக பல கிறிஸ்தவர்கள் மாறியுள்ளனர். வேதத்தை நம்ப முடியாது என்று வலியுறுத்தும் நாத்திக விஞ் ஞானிகளின் வாதங்களை அவர்கள் ஏற்றுக்கொண்டுள் ளனர். இருப்பினும், வரலாறு முழுவதும் மிகப்பெரிய அறிவியல்

*சிந்தனையாளர்கள் யாவரும் உறுதியான கிறிஸ்தவர்கள்.*[26] *அறிவியல் உண்மை வேதாகமச் சத்தியத்துடன் முரண்படவில்லை; விஞ்ஞானம் மற்றும் வேதம் இரண்டும் தேவனை சிருஷ்டிகர் என்று சுட்டிக்காட்டுகின்றன. சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டால், ஆதியாகமம் 1-2 படைப்பின் வரலாற்று விவரங்களின்படி, விஞ்ஞானம் தேவனுடைய படைப்பின் அற்புதங்களைப் பற்றிய ஒரு விளக்கத்தை வழங்குகிறது என்பது புரியும் .*

*ஆதியாகமம் 1-2 கற்பிப்பது:*

- *தேவன் ஒன்றுமில்லாமையில் இருந்து உலகைப் படைத்தார்*[27] *(பிற தெய்வங்கள் உலகை உருவாக்கினார்கள் என்று கற்பிக்கும்* ***பண்டைய புராணங்களையும்****, உலகம் தற்செயலாக உருவானது என்று கற்பிக்கும்* ***நவீன புராணங்களையும்*** *நிராகரித்தல்).*
- *இறையாண்மை கொண்ட ஒரே தேவன் இருக்கிறார் (பண்டைய உலகின் பலதெய்வ நம்பிக்கையை நிராகரித்தல்).*
- *மனிதன் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டிருக்கிறான் (காலம் மற்றும் வாய்ப்பின் விளைவு என்று சொல்லும் பரிணாமத்தை நிராகரித்தல்).*

---

[26] *கிரிஸ்துவ நம்பிக்கை கொண்ட பெரிய விஞ்ஞானிகள் சிலர்:*
*+ நிக்கோலஸ் கோபர்நிகஸ் (சூரியன் பிரபஞ்சத்தின் மையத்தில் இருப்பதை கண்டறிந்தார்)*
*+ கலிலியோ ("நவீன அறிவியலின் தந்தை" என்று கருதப்படுகிறார்)*
*+ ஜோஹன்னஸ் கெப்லர் (கோள்களின் இயக்கத்தை விளக்கினார்)*
*+ சர் ஐசக் நியூட்டன் (புவியீர்ப்பு விதியை உருவாக்கினார்)*
*+ ராபர்ட் பாய்ல் (முதல் நவீன வேதியியலாளர் என்று கருதப்படுகிறார்)*
*+ ரெனே டெஸ்கார்ட்ஸ் (அறிவியல் புரட்சியின் முக்கிய நபர்களில் ஒருவர்)*
*+ மைக்கேல் ஃபாரடே (ஒரு முக்கியமான வேதியியலாளர்)*
*+ லூயிஸ் பாஸ்டர் (பாஸ்டியர் முறைப் பாதுகாப்பைக் கண்டுபிடித்தார் மற்றும் ரேபிஸ் மற்றும் ஆந்த்ராக்ஸுக்கு முதல் தடுப்பூசிகளை உருவாக்கினார்)*
*+ மேக்ஸ் பிளாங்க் (குவாண்டம் இயக்கவியலை நிறுவினார்)*

[27] *இறையியலாளர்கள் கிரியேட்டியோ எக்ஸ் நிஹிலோ என்ற வார்த்தையை "ஒன்றுமில்லாததிலிருந்து உருவாக்கம்" என்பதை விவரிக்க பயன்படுத்துகின்றனர்.*

*எந்த விசுவாசியும் ஆதியாகமம் 1-2 இன் இந்த அத்தியாவசிய போதனைகளை மறுதலிக்கக்கூடாது. ஆதியில், இறையாண்மையுள்ள தேவன் நம் உலகத்தை ஒன்றுமில்லாமையில் இருந்து படைத்தார். ஆதியில் தேவன் மனிதகுலத்தை தம் சாயலில் படைத்தார். சிருஷ்டிப்பு வாரம் முடிந்ததும், அது மிகவும் நன்றாக இருப்பதை தேவன் கண்டார். வேதாகமத்தின் விளக்கம் சம்பந்தப்பட்ட விவரங்களில் கிறிஸ்தவர்கள் வேறுபடலாம்; அவர்கள் வேதாகமத்தின் சத்தியத்தில் வேறுபடக்கூடாது.*

## *முடிவுரை: ஆதியாகமம் இன்று பேசுகிறது*

*இருபத்தியோராம் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு ஆதியாகமம் ஒரு மிக முக்கியமான புத்தகம். இது சமகாலதிருச்சபை எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பற்றி பேசுகிறது.*

*தேவன் நம்மை தம்முடைய சாயலில்படைத்ததால், **மனித உயிர் மதிப்புமிக்கது**. கருக்கலைப்பு மற்றும் கருணைக்கொலை போன்ற சமகால சமூக பிரச்சனைகள் ஆதியாகமம் 1 மற்றும் 2 இன் பண்டைய சாட்சியத்தால் எதிர்கொள்ளப்படுகின்றன. நாம் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டதால், எல்லா மனித உயிர்களும் பரிசுத்தமானவை மற்றும் பாதுகாக்கப்பட வேண்டும்.*

*மனிதனுக்கு பூமியைப் பாதுகாக்க வேண்டிய உக்கிராணத்துவம் கொடுக்கப்பட்டதால், **நம் உலகத்தை பராமரிக்கும்** பொறுப்பு நமக்கு இருக்கிறது. மற்ற வாழ்க்கை வடிவங்களை விட மனித வாழ்க்கையின் முன்னுரிமையை அங்கீகரிக்கும் அதே வேளையில், கிறிஸ்தவர்கள் பூமியின் அனைத்து அம்சங்களையும் தேவனின் நல்ல படைப்பாக மதிக்க வேண்டும்.*

*ஆபிரகாமுடனான உடன்படிக்கையின் காரணமாக, திருச் சபைக்கு **சுவிசேஷம் அறிவிப்பு மற்றும் சீஷர்களை ஏற்படுத்தல் ஆணை** உள்ளது. தேசங்களுக்கு இஸ்ரவேலின் ஊழியத்தை நிறைவேற்ற இயேசு திருச்சபையை நியமித்தார்.*[28] *பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் தனது ஊழியத்தை நிறைவேற்றத்*

[28] *மத்தேயு 28:18-20*

*தவறிவிட்டது; இன்று நமது ஊழியத்தை நிறைவேற்றுவதில் நாம் தவறக்கூடாது.*

## ***பாடம் 2 வீட்டுப்பாடங்கள்***

*இந்தப்பாடத்தைப் பற்றிய உங்கள் புரிதலை பின்வரும் செயல்களின் மூலம் நிரூபிக்கவும்:*

(1) *பின்வரும் செயல்களில்* ***ஒன்றைத்****தேர்ந்தெடுக்கவும்:*

*விருப்பம் 1: குழு வீட்டுப்பாடம்*

*உங்கள் குழுவின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆதியாகமம்**1-11**-ன் நான்கு பெரிய நிகழ்வுகளில் ஒன்றை ஒதுக்கவும். கீழ்க்கண்டவாறு நீங்கள் வழங்கும் தலைப்புகளில் உங்கள் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு சிறிய சுருக்க உரையைத் தயார் செய்யவேண்டும்:*

- *வேதாகமக் கதையின் சுருக்கம்*
- *வேதாகம வரலாற்றிற்கு இந்த நிகழ்வு எவ்வாறு முக்கியமானது?*
- *இந்நிகழ்வு இன்று நமக்கு என்ன போதிக்கிறது?*

*விருப்பம் **2:** தனிப்பட்ட வீட்டுப்பாடம். ஒன்றைத் தேர்ந் தெடுக்கவும்:*

- *ஆதியாகமம் **1-11**-ன் நான்கு பெரிய நிகழ்வுகளில் ஒன்றைப் பற்றிய ஒரு பிரசங்கம் அல்லது வேத ஆராய்ச்சி படிப்புக்கு **1-2** பக்கம் **(450-800** வார்த்தைகள்) விரிவான பொருட்சுருக்கத்தை எழுதவும். வேதாகம வரலாற்றில் இந்த நிகழ்வு எவ்வாறு முக்கியமானது என்பதையும், இன்று அந்த நிகழ்வு நமக்கு என்ன கற்பிக்கிறதுஎன்பதையும் உங்கள் பிரசங்கம் காட்ட வேண்டும்.*
- *ஆதியாகமம் **12-50**-ன் நான்கு முக்கிய கதாபாத்திரங்களில் ஒன்றைப் பற்றிய பிரசங்கம் அல்லது வேத ஆராய்ச்சி படிப்புக்கு **1-2** பக்கம் **(450-800** வார்த்தைகள்) விரிவான பொருட்சுருக்கத்தை எழுதவும். உங்கள் பிரசங்கம் இன்று விசுவாசிகளுக்கு ஒரு*

நேர்மறையான மாதிரியை அல்லது எதிர்மறையான எச்சரிக்கையை எவ்வாறு வழங்குகிறது என்பதைக் காட்ட வேண்டும்.

(2) இந்த பாடத்திலிருந்து ஒரு தேர்வை எழுதவும். மனப்பாடம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட வேதவசனங்கள் இந்த தேர்வில் அடங்கும்.

## பாடம் 2 தேர்வு

(1) தோரா என்ற எபிரேய வார்த்தையின் அர்த்தம் என்ன?

(2) பஞ்சாகமப்புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் இயேசு எவ்வாறு காட்டப்படுகிறார்?

(3) பஞ்சாகமத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நான்கு பழைய ஏற்பாட்டுக் கருப்பொருள்களை பட்டியலிடுக.

(4) ஆதியாகமத்தின் கருப்பொருள் என்ன?

(5) ஆதியாகமத்தின் இரண்டு முக்கியப் பிரிவுகளைப் பட்டியலிடுக.

(6) ஆதியாகமம் 1-11 இன் நான்கு முக்கிய நிகழ்வுகளைப் பட்டியலிடுக.

(7) ஆதியாகமம் 12-50-ன் நான்கு முக்கிய கதாபாத் திரங்களைப் பட்டியலிடுக.

(8) ஆபிரகாமுடனான உடன்படிக்கையின் மூன்று அம்சங் களை ஒவ்வொன்றையும் ஒரு வாக்கியத்தில் சுருக்க மாகக் கூறுக.

(9) சிருஷ்டிப்பைக் குறித்து ஆதியாகமம் போதிக்கும் மூன்று காரியங்களைப் பட்டியலிடுக.

(10) ஆதியாகமம் சமகால திருச்சபையோடு பேசும் மூன்று வழிகளைப் பட்டியலிடுக.

(11) ஆதியாகமம் 3:15 மற்றும் 12:3 ஐ உங்கள் நினைவிலி ருந்து எழுதுக.

# *பாடம் 3*
# *யாத்திராகமம்-உபாகமம்:*
# *இஸ்ரவேல் தேசத்தின் ஆரம்பம்*

## *பாடத்தின் நோக்கங்கள்*

*இந்த பாடத்தின் முடிவில், மாணவர்அடையும் பயன்கள்:*

(1) *யாத்திராகமம்-உபாகமம் வரையிலுள்ள புத்தகங்களின் முதன்மைக் கருப்பொருள்களை கோடிட்டுக் காட்ட முடியும்.*
(2) *யாத்திராகமம்-உபாகமம் வரையிலுள்ள புத்தகங்களின் முக்கிய உள்ளடக்கத்தை அறிந்து கொள்ளுவார்கள்.*
(3) *யாத்திராகமம்-உபாகமம் வரையிலுள்ள புத்தகங்களின் முக்கிய நிகழ்வுகளை அடையாளம் கண்டுகொள்ளு வார்கள்.*
(4) *நியாயப்பிரமாணத்திற்கும் கிறிஸ்தவனுக்கும் உள்ள தொடர்பைப் புரிந்து கொள்ளுவார்கள்.*
(5) *பஞ்சாகமத்தின் செய்தியை இன்றைய உலகின் தேவை களுடன் தொடர்புபடுத்துவார்கள்.*

## *இந்த பாடத்திற்கான ஆயத்தம்*

*யாத்திராகமம் முதல் உபாகமம் வரை வாசிக்கவும்.*

*யாத்திராகமம் 3:14;லேவியராகமம் 20:7–8; உபாகமம் 6:4-5-ஐ மனப்பாடம் செய்யவும்.*

## *முன்னுரை*

*யாத்திராகமம் முதல் உபாகமம் வரையிலுள்ள புத்தகங்கள் இஸ்ரவேல் தேசத்தின் ஆரம்ப நாட்களிலிருந்து நடந்த சம்ப வங்களை விவரிக்கின்றன. இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து மீட்கப்பட்டதையும், சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் வழங்கப்பட்டதையும், வனாந்தரத்தில் அலைந்து திரிந்த வருடங்களையும், வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவே சிப்பதற்கான ஆயத்தத்தையும் இந்தப்புத்தகங்கள் கூறுகின்றன.*

*ஆதியாகமம் போலவே, யாத்திராகமம் முதல் உபாகமம் வரையிலுள்ள புத்தகங்கள் மோசேயினால் எழுதப்பட்டது. யாத்திராகமம் புத்தகம் இஸ்ரவேல் எகிப்தில் 400 வருடங்கள் இருந்ததற்குப் பிறகுள்ள நாட்களிலிருந்து தொடங்குகிறது. இப்புத்தகங்கள் எழுதப்பட்ட காலத்தைக்குறித்து சில கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இஸ்ரவேலர் எகிப்தில் இருந்து வெளியேறும் காலம் கி.மு. 1446 என்பதில் மாற்று கருத்து இல்லை.[29] கி.மு.1405 இல் கானானுக்குள் பிரவேசிக்க இஸ்ர வேல் ஆயத்தமாகி வருவதோடு உபாகமம் முடிவடைகிறது.*

## யாத்திராகமம்

### *கருப்பொருள்: மீட்பும் உறவும்*

*யாத்திராகமம் இரண்டு முதன்மையானக் கருப்பொருள்களைக் குறிக்கிறது. யாத்திராகமம் 1-15 இஸ்ரவேலை எகிப்திலிருந்து தேவன் மீட்பதைக் குறிப்பிடுகிறது. பஸ்கா இந்த மீட்பை நினைவுபடுத்துகிறது. இஸ்ரவேலின் வரலாறு முழுவதும், பஸ்கா கொண்டாட்டம் இஸ்ரவேலை அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதில் தேவனுடைய கிருபையின் வருடாந்திர நினை வூட்டுதலாக இருக்கும்.*

*யாத்திராகமம் 16-40 இஸ்ரவேலுடனான தேவனுடைய கிருபை யுள்ள உறவைக் குறிப்பிடுகிறது. சீனாய் மலையில் நியாயப் பிரமாணம் வழங்கப்படுவது இந்த உறவை நிறுவுவதில் ஒரு முக்கிய தருணமாகும்.*

| **யாத்திராகமம்** | | |
|---|---|---|
| *அதிகாரங்கள் 1-15* | *எகிப்திலிருந்து மீட்பு* | *பஸ்கா* |
| *அதிகாரங்கள் 16-40* | *யேகோவாவுடனான உறவு* | *10 கட்டளைகள்* |

---

*[29] சுவிசேஷத் திருச்சபையார் எகிப்திலிருந்து வெளியேறுவதற்கான இரண்டு சாத்தியமான தேதிகளைக் கருதுகின்றனர். 1 ராஜாக்கள் 6:1 மற்றும் நியாயாதிபதிகள் 11:26 ஆகியவற்றின் அடிப்படையில், பெரும்பாலும் கி.மு. 1446. தொல்பொருள் ஆய்வின் தரவு மற்றும் 1 ராஜாக்கள் 6:1 இன் அடையாளப் புரிதலின் அடிப்படையில், சில சுவிசேஷத் திருச்சபையார் சுமார் கி,மு. 1275. இருப்பினும், 1 ராஜாக்கள் மற்றும் நியாயாதிபதிகளின் நேரடியான குறிப்பு கி.மு. 1446 மிகவும் சாத்தியமான தேதியாகும்..*

## *யாத்திராகமத்தின் கண்ணோட்டம்*

## *மீட்பு: யாத்திராகமம் 1–15*

*எகிப்தில் இஸ்ரவேல் அடிமைத்தனத்திற்கு ஆளாவதில் இருந்து யாத்திராகமம் தொடங்குகிறது. பார்வோன் யோசேப்பின் குடும்பத்தை வரவேற்றபிறகு, 400 ஆண்டுகள் கடந்துவிட்டன, யாக்கோபின் சந்ததியினர் இப்போது எகிப்துக்கு அச்சுறுத் தலாகக் காணப்படுகிறார்கள். தேவன் தம்முடைய ஜனங்களின் கூக்குரலைக் கேட்டு, மோசேயை மீட்பராக எழுப்பினார்.*

*நான்கு நிகழ்வுகள்எகிப்திலிருந்து இஸ்ரவேலின் மீட்பை சித்தரிக்கின்றன:*

- *மோசேயின் அற்புதமான பிறப்பும் அழைப்பும், அவனு டைய ஜனங்களின் அழுகைக்கு தேவனுடைய பதில்.*
- *பத்து வாதைகள் தேவனுடைய இறையாண்மையை நிரூபிக்கின்றன. வாதைகள் தேவனுடைய வல்லமை யைக் காண்பித்தல் என்பதைக் காட்டிலும் மேலான தாகும்; அவை எகிப்தின் பொய்யானக் கடவுள்கள் மீதான நேரடித் தாக்குதல். எகிப்தியர்கள் நைல் நதியை வாழ்வின் ஆதாரமாகக் கண்டனர்; தேவன் தண்ணீரை இரத்தமாக மாற்றினார். எகிப்திய பெண் தெய்வங்களில் ஒன்று தவளையாக சித்தரிக்கப்பட்டது; தேவன் தவளை களின் வாதையை அனுப்பினார். ஒவ்வொரு எகிப்திய குடும்பத்தின் தலைச்சன் பிள்ளைகளும் தெய்வங்களு க்குச் சொந்தமானது; தேவன் தலைச்சன் பிள்ளைகளை மரணத்தால் எடுத்தார். ஏற்பட்ட வாதைகள், யேகோவா சகல ஜனங்களின் மீதும் இறையாண்மையுள்ளவர் என்பதை எகிப்துக்கும் இஸ்ரவேலுக்கும் நிரூபித்தன.*
- *தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாக இஸ்ரவேலின் நிலையை பஸ்கா குறிக்கிறது. இந்த பண்டிகை தேவனுடைய மாபெரும் இரட்சிப்பின் நிரந்தர நினைவுச் சின்னமாக மாறியது.*
- *செங்கடலைக் கடப்பது, தம் ஜனங்களை விடுவிக்கும் தேவனுடைய வல்லமையைக் காண்பித்தது.*

*உறவு: யாத்திராகமம் 16–40*

*தேவன் தம்முடைய ஜனங்களுடன் நெருங்கிய உறவைக் கட்டியெழுப்புவதற்காக இஸ்ரவேலை மீட்டார். யாத்திராகமம் 16-40இல் உள்ள நிகழ்வுகள் சீனாய் மலையில் நடைபெறு கின்றன. அங்கே தேவன் தம் ஜனங்களைச் சந்தித்து, அவர் களைத் தம்முடைய "சொந்த சம்பத்தாக"[30] அடையாளப் படுத்தினார்.*

*இரண்டு அடையாளங்கள் யேகோவாவுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையிலான உறவைக் குறிக்கின்றன:*


**(1) *பத்து கட்டளைகளை வழங்கியது உறவுக்கான உடன்படிக் கையின் கட்டமைப்பை வழங்கியது*.** *ஆபிரகாமுடனான உடன் படிக்கையில் விருத்தசேதனம் செய்வது போல், நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவது இரட்சிப்பைக் கொண்டு வரவில்லை. மாறாக, நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவது, யேகோவாவுடன் இருந்த உறவின் விளைவாகும்.*

**(2) *ஆசரிப்புக்கூடாரமானது, தம்முடைய ஜனங்களிடையே தேவனுடைய சமுகத்தின் ஒரு காட்சி அடையாளத்தை அளித்தது*.** *பாளையத்தின் மையத்தில் அமைந்திருக்கும் இந்த ஆசரிப்புக்கூடாரமானது, யேகோவா தம்முடைய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களிடையே வாசம்பண்ணினார் என்பதை தொடர்ந்து நினைவூட்டுவதாக இருந்தது.*

*ஆசரிப்புக்கூடாரம் இஸ்ரவேலுக்கு பரிசுத்தம் என்கிற கருத்தை கற்பித்தது. இஸ்ரவேலர்கள் ஆசரிப்புக்கூடாரத்தை நோக்கிச் செல்லும்போது, அவர்கள் "சுத்தமில்லாத" இடத்திலிருந்து (பாளையத்திற்கு வெளியே) "சுத்தமான" இடத்திற்கு (பாளை யத்திற்குள்) "பரிசுத்தமான" மற்றும் தேவனுக்காகவும் ஆசாரியர் களுக்காகவும் வேறுபடுத்தப்பட்ட ஆசரிப்புக்கூடாரத்திற்குநக ர்வதை அவர்கள் அறிந்தார்கள். "மகா பரிசுத்த ஸ்தலம்" என்பது தேவனுடைய ஆசரிப்புக்கூடாரத்தின் காணக்கூடிய அடையா ளமாக இருந்தது. இது தேவனுடையபரிசுத்தத்தையும் பரிசுத்த ஜனங்களுக்கான அவருடைய எதிர்பார்ப்புகளையும் நிரூபித்தது.*

---

[30] *யாத்திராகமம் 19:5*




*ஈ = அசுத்தம்*
*இ = சுத்தம்*
*ஆ = பரிசுத்தம்*
*அ = மகா பரிசுத்தம்*

5 = *பாளையத்திற்குவெளியே*

4 = *பாளையத்திற்கு உள்ளே*
3 = *ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றியுள்ள லேவியர்கள்*
2 = *ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள ஆசாரியர்கள்*
1 = *மகா பரிசுத்தஸ்தலம்*

## புதிய ஏற்பாட்டில் யாத்திராகமம்

*புதிய ஏற்பாட்டில், இயேசு பரிபூரணமான பஸ்கா ஆட்டுக் குட்டி. அவர் பஸ்கா மற்றும் ஆசரிப்புக்கூடாரத்தின் வாக்கு றுதியை நிறைவேற்றுகிறார்.*[31] *யோவான், "அந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணினார்" என்று எழுதும் போது, பூமியில் இயேசுவின் ஊழியத்தை விவரிக்க, "ஆசரிப்புக் கூடாரம்" என்பதற்கான கிரேக்க வார்த்தையைப் பயன்படுத் துகிறார்.*[32] *ஆசரிப்புக்கூடாரம் தம்முடைய ஜனங்கள் மத்தியில் தேவனுடைய பிரசன்னத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியதால், இயேசு எல்லா மனிதர்களுக்கும் மத்தியில் தேவனுடைய பிரசன்னமாக இருந்தார்.*

---

[31] *1 கொரிந்தியர் 5:7*
[32] *யோவான் 1:14. "வாசம்" என்ற வார்த்தையானது, "கூடாரம்" என்று பொருள்படும் ஒரு வார்த்தையாகும்.*

## லேவியராகமம்

| புத்தகம் | இது தேவனைக் குறித்து என்னபோதிக்கிறது | அடையாளம் |
|---|---|---|
| *யாத்திராகமம்* | தேவனின் சமுகம். | ஆசரிப்புக்கூடாரம் |
| லேவியராகமம் | தேவன் பரிசுத்தமானவர். | பலிகள் |

### *கருப்பொருள்: பரிசுத்தம்*

*பல கிறிஸ்தவர்களால் லேவியராகமம் புறக்கணிக்கப்படுவது துரதிர்ஷ்டவசமானது. லேவியராகமம் நமக்கு அந்நியமாகத் தோன்றும் நடைமுறைகளை விவரித்தாலும், இந்த புத்தகம் ஒரு முக்கியமான செய்தியைத் தெரிவிக்கிறது: ஒரு பரிசுத்தமான தேவனுக்கு ஒரு பரிசுத்தமான ஜனங்கள் தேவை. "பரிசுத்தமான தேவனுடைய சந்நிதியில் தேவனுடைய ஜனங்கள் எப்படி வாழ வேண்டும்?" என்ற கேள்விக்கு லேவியராகமம் புத்தகம் பதிலளிக்கிறது. லேவியராகமத்தின் கருப்பொருள் பரிசுத்தம்.*

*பஞ்சாகமத்தில் லேவியராகமத்தின் இடத்தைப்புரிந்துகொள்வது முக்கியம். தேவன் ஏற்கனவே இஸ்ரவேலை எகிப்திலிருந்து மீட்டுத் தம்மிடமாய் அழைத்திருந்தார். பலிகளும் நியாயப்பிரமாணமும் தேவனுடைய தயவைப் பெறுவதற்கான வழியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. மாறாக, பலிகள் மற்றும் பரிசுத்தக்குறியீட்டின் நியாயப்பிரமாணங்கள் ஒரு பரிசுத்தமான தேவனின் முன்னிலையில் வாழ்வதற்கான ஒரு கட்டமைப்பை வழங்குகின்றன.*

*லேவியராகமம் 20:7-8ல் காணப்படும் சமநிலையே லேவியராகமத்தை வாசிப்பதற்கான திறவுகோலாகும். "ஆதலால் நீங்கள் உங்களைப் பரிசுத்தப்படுத்திப் பரிசுத்தராயிருங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். என் கட்டளைகளைக்கைக் கொண்டு நடவுங்கள்; நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்"[33] என்றார். "நீங்கள் உங்களைப் பரிசுத்தப்படுத்திப்*

---

[33] லேவியராகமம் 20:7-8

*பரிசுத்தராயிருங்கள்" என்று கட்டளையிடப்பட்டிருக்கிறோம். ஆனால், அவர் "உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்" என் பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. யாத்திராகமத்தில் தம் கிருபையால் இஸ்ரவேலை மீட்ட தேவன் லேவியராக மத்தில் இஸ்ரவேலைப் பரிசுத்தப்படுத்துகிற தேவன். நம்மைத் தம்மிடம் அழைக்கும் தேவன் நம்மைப் பரிசுத்தமாக்கும் தேவன்.*

## லேவியராகமத்தின் கண்ணோட்டம்

### *பலிகளின் பிரமாணங்கள் (லேவியராகமம் 1–7)*

*பேய்லர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான ரால்ப்உட், ஒருமுறை மாணவர்கள் குழுவை இரண்டு காட்சிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்படி கேட்டார்: பாவத்தின் கோட்பாடு ஒரு மூடநம்பிக்கைக் கட்டுக்கதை என்று கூறும் நவீன அறிஞர் மற்றும் தொலைதூர கிராமத்தில் ஒரு பலிபீடத்தின் மீது கோழியைப் பலியிடும் ஒரு புறசமயச் சிறுவன். பேராசிரியர் உட், "எந்த மனிதர்கள் உண்மையில் வெகு தொலைவில் இருக்கிறார்கள்?" என்று கேட்டார். புறசமயப் பையன், எவ்வளவு பழமையானவனாய் இருந்தாலும், நவீன அறிஞர் புரிந்து கொள்ளாத ஒன்றைப் புரிந்துகொள்கிறான் என்பதை மாணவர்கள் விரைவில் உணர்ந்தனர்: பாவத்திற்கு ஒரு பலி தேவை. பாவம் செய்பவர்களுக்குப் பிராயச்சித்தம் செய்ய ஒரு வழி தேவை. புறசமயச் சிறுவன் தவறான வழியில் மன்னிப்பு தேடினப்போதிலும், பாவத்திற்கு பரிகாரம் தேவைஎன்பதை ஒருபுறசமயச் சிறுவன் கூட புரிந்துகொள்கிறான்.[34]*

*பலியின் தேவை வேதம் முழுவதும் காணப்படுகிறது:*

- *ஆதியாகமம் 3:21இல், தேவன் ஆதாம் மற்றும் ஏவா ளுக்கு ஒரு மிருகத்தின் தோலில் இருந்து ஆடைகளை உருவாக்கினார்.*
- *ஆதியாகமம் 4இல், காயீனின் தகுதியற்ற பலி நிராகரிக் கப்பட்டது.*

---

[34] *Jill Carattini, "Lamb of God" at A Slice of Infinity, April 23, 2012 என்பதிலிருந்து பொழிப்புரையாக்கப்பட்டது. http://www.rzim.org என்னும் இணையதளத்திலிருந்து எடுக்கப்பட்டது.*

- *ஆதியாகமம் 22:14இல், ஆபிரகாம் பலி செலுத்தும் இடத்திற்கு, "யெகோவா-யீரே"[35] என்று பெயரிட்டார்.*
- *லேவியராகமத்தில், பலியிடும் முறை வரையறுக்கப் பட்டது.*
- *எபிரேயர் 9 மற்றும் 10இல், அநேகருடைய பாவங் களைச் சுமந்து "அனைவருக்காகவும் ஒரே தரம்" பலியிடப்பட்ட பலியாக இயேசு காணப்படுகிறார்.*

*லேவியராகமம் 1-7 பலியின் பிரமாணங்களை முன்வைக்கிறது. பரிசுத்தமான தேவனை எப்படி அணுகுவது என்பதை இஸ்ரவே லர்கள் புரிந்துகொள்ள இந்த பலிகள் உதவியது.*

- *சர்வாங்கதகனபலி (லேவியராகமம் 1) பழைய ஏற்பா ட்டின் முதன்மையான பலியாகும். மிருகத்தைக் கொல் வதற்கு முன், ஆராதிப்பவர் மிருகத்தின் தலையில் தனது கையை வைத்து, பாவம் செய்தவர் தாமே மரண தண்டனைக்கு தகுதியானவர் என்பதைக் காண்பித்தார்.[36] பின்னர் மிருகம் முழுவதுமாக பலிபீடத்தில் எரிக்கப் பட்டது.*
- *போஜனப் பலி (லேவியராகமம் 2) என்பது சர்வாங் கதகனபலி அல்லது சமாதானபலியுடன் தொடர்ந்து செலுத்தப்பட்ட பலியாகும்.*
- *சமாதான பலி (லேவியராகமம் 3) ஆராதனை செய்பவ ருக்கும் தேவனுக்கும் இடையிலான ஐக்கியத்தைக் கொண்டாடியது. இது தேவனுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையிலான உடன்படிக்கையின் உறவை உறுதிப் படுத்தியது. ஆராதிப்பவர், ஆசாரியன் மற்றும் தேவனு க்கு இடையே மட்டும் பகிர்ந்து கொள்ளப்படும் ஒரே பலி இது.[37]*
- *பாவநிவாரண பலி (லேவியராகமம் 4:1–5:13) அறியா மையினால்பிரமாணத்தை மீறியதற்காக அல்லது பிரமா*

---

[35] *ஒரு பலியைக் "கர்த்தர் பார்த்துக்கொள்வார்."*

[36] *லேவியராகமம் 1:4–5*

[37] *தேவனுக்கு சொந்தமான பகுதி ("கொழுப்பு" - சிறந்த பாகங்கள்) எரிக்கப்பட்டது. மீதியை ஆராதனை செய்பவனும் ஆசாரியனும் சாப்பிட்டனர்.*

*ணத்தால் கோரப்படும் ஒன்றைச் செய்யத் தவறியதற்காக பரிகாரம் செய்ய வழங்கப்பட்டது. பாவம் மனிதனைத் தீட்டுப்படுத்தியது; இந்த பலி அவர்களை தூய்மைக்கு மீட்டெடுத்தது.*

- *குற்றநிவாரண பலி (லேவியராகமம் 5:14–6:7) நியாயப் பிரமாண மீறுதல்களை கையாள்கிறது. இந்த பலி பாவநிவாரணபலிக்கு மிகவும் ஒத்ததாக உள்ளது, ஆனால் மிகவும் கடுமையான மீறுதல்ளை நிவர்த்தி செய்வது போல் தெரிகிறது, குறிப்பாக ஆஸ்தியை மீட் டெடுப்பது மற்றும் இழப்பீடு பெறுவது போன்றவை.*

*இஸ்ரவேல் பின்னாட்களில் பலிகளை வெறும் சடங்காகக் கருதினாலும், பலிமுறையானது உண்மையான மனந்திரும் புதலைக் குறிக்கும் நோக்கம் கொண்டது. "துணிகரமான பாவ ங்கள்" (வேண்டுமென்றே மீறிச் செய்த பாவங்கள்) இந்த பலிகளால் மூடி மறைக்கப்படவில்லை.[38] உண்மையிலேயே மனந்திரும்பிய இருதயத்திலிருந்து ஒரு தகுதியான காணிக்கை கொடுக்கப்பட வேண்டும்.*

## ***ஆசாரியத்துவத்தை நிறுவுதல் (லேவியராகமம் 8–10)***

*தேவன் பரிசுத்தமானவர் என்பதால், எல்லா ஆராதனைகளும் அவர் விதித்தபடியே செய்யப்பட வேண்டும். எகிப்தின் பொறக் கன்றுக்குட்டியுடன் யேகோவாவின் ஆராதனையை இணைக்க முயற்சித்ததன் விளைவை யாத்திராகமம் 32 காண்பிக்கிறது.[39] லேவியராகமம் 10, முறையற்ற முறையில் ஆராதிப்பவர்கள் மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் காட்டுகிறது. ஒரு*

---

*[38]எண்ணாகமம் 15:30-31ன் படி, வேண்டுமென்றே செய்த துணிகரமான பாவத்திற்கு பலி இல்லை. மாறாக பாவி "அறுப்புண்டு போகப்பட வேண்டும்." சங்கீதம் 51 இல், தாவீது உரியாவை வேண்டுமென்றே மற்றும் கணக்கிடப்பட்ட கொலைக்கு பாவநிவாரண பலி கொடுக்கப்படவில்லை என்பதை அறிவான். மாறாக, அவன் தேவனின் இரக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறார்; "பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்."*

*[39]யாத்திராகமம் 32:4 ("இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே") மற்றும் யாத்திராகமம் 32:5 ("நாளைக்குக் **கர்த்தருக்குப்** பண்டிகை") ஐ பார்க்கவும்..*

*பரிசுத்தமான தேவன் அவர் பரிந்துரைத்தபடி நாம் அவரை அணுக வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.*

### *சுத்தம் மற்றும் தீட்டின் பிரமாணங்கள்(லேவியராகமம் 11–16)*

*400ஆண்டுகளாக, இஸ்ரவேலர்கள் எகிப்தில் வாழ்ந்தார்கள், பரிசுத்தத்தைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாத புறசமயத் தவர்களால் சூழப்பட்டிருந்தார்கள். தேவன் இஸ்ரவேலை பரிசுத்தமாக இருக்கும்படிக்கு அழைத்தபோது, அவர்கள்சுற்றி யுள்ள நாடுகளின் பாவங்களிலிருந்து பிரிந்திருப்பதைக் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. இது பிற தேசங்களுக்கு முன்பாக இஸ்ரவேல் தேவனுடைய பரிசுத்த குணத்தை வெளிப்படுத்தும் பிரதிநிதியாக இருக்க வழிசெய்தது.*

*பரிசுத்தம் மற்றும் தூய்மையின் அர்த்தத்தில் ஒரு பாடத்தைக் கற்பிக்க தேவன் சுத்தம் மற்றும் தீட்டின் பிரமாணங்களைப் பயன்படுத்தினார். அன்றாட வாழ்வின் அம்சங்களை (உணவு, பிள்ளைப்பேறு, தோல்வியாதிகள் மற்றும் உடல் பிரமியங்கள்) பயன்படுத்தி, சகல ஜீவராசிகளும் தமக்குச் சொந்தமானது என்று தேவன் காண்பித்தார்.*

*சுத்தம் மற்றும் அசுத்தத்திற்கு இடையிலான சில வேறுபாடுகள் நவீன வாசகர்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. மிகவும் சாத்தியமான விளக்கங்களில் ஒன்று, ஒரு மிருகம் சுத்தமானதா இல்லையா என்பது அதன் வகைப்பாட்டில் தெரிந்துவிடும். உதாரணமாக, எதிர்பார்க்கப்படும் துடுப்புகள் அல்லது செதி ல்கள் இல்லாத நீரில் வாழும் உயிரினம் அசுத்தமாக இருந்தது; பல கால்கள் கொண்ட பறக்கும் பூச்சிகள் அசுத்தமாக இருந்தன.[40]வகைப்பாடுகளுக்கான காரணங்கள் எப்போதும் தெளிவாக இல்லை என்றாலும், அடிப்படைச் செய்தி தெளிவாக உள்ளது: தேவனுடைய ஜனங்கள் சுத்தமானவற்றை மற்றும் அசுத்தமானவற்றில் இருந்து வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்.*

---

*[40]நீரில் வாழும் உயிரினத்திற்கு துடுப்புகள் அல்லது செதில்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். கால்களைக் கொண்ட ஒரு பூச்சி ஊர்ந்து செல்லும் இனத்துடன் தொடர்புடையது, அது பறப்பதில்லை. எனவே, இந்த உயிரி னங்கள் அதன் வர்க்கத்திற்குத் தொடர்பான விதிமுறைக்கு பொருந்தாத குணாதிசயங்களைக் கொண்டிருந்தன.*

### *பரிசுத்தத்தின் குறியீடு: தேவனுடன் நடத்தல் (லேவியராகமம் 17–27)*

*லேவியராகமத்தின் இந்தக் கடைசிப் பகுதி, பலி, ஆசாரியத்துவம் மற்றும் சுத்தப்படுத்தலின் சடங்கு ஆகியவற்றிலிருந்து பரிசுத்த வாழ்வில் கவனம் செலுத்துகிறது. பரிசுத்தத்தின் குறியீட்டில், சமூக உறவுகள், குடும்பம், பாலியல், பரிசுத்த நாட்கள் மற்றும் ஏழைகளை நடத்துதல் போன்ற வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் பரிசுத்தத்தை எடுத்துக் காட்டுவதற்காக இஸ்ரவேலர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள். பரிசுத்தத்திற்கான அழைப்பு தேவனுடைய குணாதிசயத்தை அடிப்படையாகக் கொண்டது: "உங்கள் தேவனும் கர்த்தரு மாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தரா யிருங்கள்."[41] "நானே கர்த்தர்" அல்லது "நான் உங்கள் தேவ னாகிய கர்த்தர்" என்ற நினைவூட்டல் இந்த அதிகாரங்களில் நாறப்பத்தேழு முறை வருகிறது. தேவனுடைய ஜனங்களின் பரிசு த்தம் என்பது தேவனுடைய பரிசுத்தத்தைப் பிரதிபலிப்பதாகும்.*

### *புதிய ஏற்பாட்டில் லேவியராகமம்*

*லேவியராகமத்தின் பல குறிப்பிட்ட பயன்பாடுகள் கிறிஸ்து வின் வருகைக்குப் பிறகு நடைமுறையில் இல்லை; அவர் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினார்.[42] இருப்பினும், லேவி யராகமத்தில் போதிக்கப்பட்ட பரிசுத்தத்தின் பிரமாணங்கள் இன்னும் நடைமுறையில் உள்ளன. இந்த நியாயப்பிர மாணங்கள் தேவனுடைய பரிசுத்தத்தை வெளிப்படுத்துகின்றன, இது கிறிஸ்துவின் மூலம் அனைத்து விசுவாசிகளுக்கும் கிடைக்கும்.[43]*

### *நியாயப்பிரமாணத்தின் ஒரு நுணுக்கமான பார்வை*

*► நாம் கிருபையால் இரட்சிக்கப்பட்டால், புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நம் வாழ்வில் நியாயப்பிரமாணம் என்ன நடைமுறைப்பங்கை வகிக்கிறது?*

---

*[41] லேவியராகமம் 19:2. இதே யோசனை லேவியராகமம் 20:7, 26; 21:8. புதிய ஏற்பாட்டில், இது 1 பேதுரு 1:15-16 இல் மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளது மற்றும் அதே கருத்து மத்தேயு 5:48 இல் காணப்படுகிறது..*

*[42] 1 கொரிந்தியர் 9:21; கலாத்தியர் 6:2*

*[43] மத்தேயு 5:48*

இன்றைய திருச்சபையில் "நியாயப்பிரமாணம்" பெரும்பாலும் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. பலருக்கு, நியாயப்பிரமாணம் காலாவதியானது மற்றும் கிறிஸ்தவர்களுக்கு முற்றிலும் அர்த்தமற்றது. நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலம் தேவனுடைய தயவைப் பெற முயற்சிப்பதற்கு எதிரான பவுலின் எச்சரிக்கைகளை அவர்கள் மேற்கோள் காட்டுகிறார்கள்,[44] அதே நேரத்தில் மற்ற அறிக்கைகளைப் புறக்கணிக்கிறார்கள், "ஒருவன் நியாயப்பிரமாணத்தை நியாயப்படி அநுசரித்தால், நியாயப்பிரமாணம் நல்லதென்று அறிந்திருக்கிறோம்."[45] பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தைப் பற்றிய நமது ஆய்வில் இரண்டு கூற்றுகளும் பரிசீலிக்கப்பட வேண்டும், ஏனென்றால் "வேதவாக்கியங்களெல்லாம் ... உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது."[46]

மற்றவர்களுக்கு, நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவது தேவனுடைய தயவைப் பெறுவதற்கான ஒரு வழியாகும். நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு விவரத்தையும் கவனமாகக் கடைப்பிடிப்பதில் அவர்கள் பெருமைப்படுகிறார்கள். இது தேவனுடைய தயவைப் பெற்றுத்தரும் என்று அவர்கள் நம்புகிறார்கள்; யூத மதத்தினர் செய்த தவறு இதுதான்.

ஒரு கிறிஸ்தவர் நியாயப்பிரமாணத்தை எப்படி அணுக வேண்டும்? பல கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தை மூன்று வகைகளாகப் பிரிப்பதன் மூலம் பதிலளிக்கின்றனர். *தார்மீகப்பிரமாணம்* (பத்து கட்டளைகள் போன்றவை) இன்றும் நடைமுறையில் உள்ளது என்று அவர்கள் வாதிடுகின்றனர். *குடியியல் பிரமாணம்* (ஒரு தேசமாக இஸ்ரேலுக்கு குறிப்பிட்ட பிரமாணங்கள்) மற்றும் *சடங்காச்சார பிரமாணம்* (பலி, ஆசாரியத்துவம் மற்றும் பரிசுத்தப்படுத்துவது தொடர்பான பிரமாணங்கள்) இனி பொருந்தாது என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

இது ஒரு பொதுவான பிரிவாக இருந்தாலும், ஒவ்வொரு வகைக்கும் எந்த பிரமாணங்கள் பொருந்தும் என்பதைத்

---

[44] உதாரணமாக, கலாத்தியர் 2:16-21
[45] 1 தீமோத்தேயு 1:8
[46] 2 தீமோத்தேயு 3:16

*தீர்மானிப்பதில் சில சிரமங்களைச் சந்திக்கிறோம். லேவியராகமம் 19ஐ வாசிக்கவும். ஒவ்வொரு பிரமாணத்தையும் மூன்று வகைகளுள் ஏதாவது ஒன்றில் சேருங்கள். இது மிகவும் தன்வயகருத்துநிலை என்று நீங்கள் காண்பீர்கள். விடுபட்ட கதிர்களை பொறுக்கும் பிரமாணம் (லேவியராகமம் 19:9-10) ஒரு தேசமாக இஸ்ரேலுடன் மட்டுமே தொடர்புடைய ஒரு குடியியல் பிரமாணமா அல்லது எல்லா சமூகங்களிலும் உள்ள ஏழைகளை கவனித்துக்கொள்வதற்கான தார்மீக ஆணையா? லேவியராகமம் 19:36 இன் நியாயமான சமநிலைகள் ஒரு குடியியல் பிரமாணம், ஆனால் அவை நேர்மையின் தார்மீகக் கொள்கையையும் வெளிப்படுத்துகின்றன.*

*லேவியராகமம் 19இல் எங்கும் மோசே குடியியல், சடங்கு மற்றும் தார்மீகபிரமாணங்களுக்கு இடையே எந்த வித்தியாசத் தையும் குறிப்பிடவில்லை. எந்த வேறுபாடும் இல்லை என்பதாலும், தேவனுடைய வார்த்தை நித்தியமானது என்ப தாலும், எல்லா காலங்களிலும் தேவனுடைய ஜனங்களை வழிநடத்தும் தேவனுடைய குணாதிசயத்தின் வெளிப்பாடாக அதைப் படிப்பதே சட்டத்திற்கான சிறந்த அணுகுமுறையாக இருக்கலாம்.*

*நியாயப்பிரமாணத்திற்கான இந்த அணுகுமுறையில், நாம் கேட்கிறோம்: "இந்தப் பிரமாணம் தேவனுடைய பரிசுத்த குணத்தைப் பற்றியும் பரிசுத்த ஜனங்களுக்கு அவர் தேவைப் படுவதைப் பற்றியும் என்ன வெளிப்படுத்துகிறது?" நாம்* ***கிறிஸ்துவின் வருகையின் மூலம்*** *நியாயப்பிரமாணத்தைப் படித்து, இன்றைய சூழ்நிலைகளுக்கு அதைப் பயன்படுத் துகிறோம்.*

## ***நியாயப்பிரமாணத்தை எப்படி அணுகுவது***

1. *பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணத்தைப் படியு ங்கள்.*
2. *போதிக்கப்பட்ட பிரமாணம் அல்லது வெளிப்படுத்தப் பட்ட தேவனுடையத் தன்மையைக் கண்டறியவும்.*
3. *கிறிஸ்துவின் வருகையால் பிரமாணங்களின் பயன்பா ட்டில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டுபிடியுங்கள்.*
4. *நவீன நடைமுறையைத் தீர்மானிக்கவும்.*

*இந்த மாதிரியைப் பயன்படுத்துவதற்கு, வயலில் கதிர்கள் பொறுக்கும் பிரமாணத்தின் உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள் (லேவியராகமம் 19:9-10):*

1. *பண்டைய பிரமாணம் கூறுகிறது: ‘‘நீங்கள் தேசத்தின் பயிரை அறுக்கும்போது, உன் வயலின் ஓரத்திலிருக்கிறதைத் தீர அறுக்காமலும், சிந்திக் கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், உன் திராட்சத் தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமலும், அதிலே சிந்திக் கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும், அவைகளை எளியவனுக்கும்பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக."*
2. *பிரமாணம் தேவனுடையத்தன்மையை அடிப்படையாகக் கொண்டது: "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்." ஏழைகள் மீது தேவன் அக்கறைக் காட்டுகிறார்; அவர் ஏழைகளை நேசிக்கிறார்.*[47]
3. *இயேசு தம்முடைய பூமிக்குரிய ஊழியம் முழுவதும் திக்கற்றோர் மற்றும் ஏழைகளுக்கான இந்த அக்கறையை முன்மாதிரியாகக் கொண்டிருந்தார். இயேசு இந்த பிரமாணத்தை மாற்றவில்லை; அதற்கு பதிலாக, அவர் தினசரி ஊழியத்தில்அந்த பிரமாணத்தை நிரூபித்தார்.*
4. *நெருக்கமாக இருக்கலாம் - தேவைப்படுபவர்களுக்கு அறுவடை செய்ய தானியத்தை விட்டுச்செல்கிறது. ஒரு தொழில்துறை சமுதாயத்தில், நவீன நடைமுறையில் ஏழைகளுக்கு பணம் அல்லது நடைமுறை உதவி வழங்குவதும் அடங்கும். பயன்பாடு வேறுபட்டிருக்கலாம், ஆனால் கொள்கை ஒவ்வொரு சமூகத்திலும் நடைமுறையில் தான் உள்ளது. தேவன்தாமே ஏழைகளை நேசித்து அக்கறை காட்டுவது போல் தேவனுடைய ஜனங்கள் ஏழைகளை நேசித்து அக்கறை காட்ட ஒரு விவசாய சமுதாயத்தில், நவீன நடைமுறை இஸ்ரவேலின் நடைமுறைக்கு மிக வேண்டும். இது*

---

[47] *கோட்பாட்டைக் கண்டறிய, நாம் அடிக்கடி கேட்க வேண்டும், "தேவன் ஏன் இந்தக் கட்டளையைக் கொடுத்தார்?" உதாரணமாக, கடன் கொடுத்தவர் கடனாளியின் எந்திரக் கல்லை எடுப்பதை தேவன் தடுக்கிறார் (உபாகமம் 24:6). ஏன்? இது மனிதனின் வாழ்வாதாரத்தை பறிக்கும். ஒரு குறிப்பிட்ட கட்டளையின் "ஏன்" என்பதைப் புரிந்துகொள்வது போதிக்கப்படும் உலகளாவிய கொள்கையைக் கண்டறிய உதவுகிறது..*

*1யோவான் 3:17-18 மற்றும் யாக்கோபு 2:14-16இல் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த பண்டைய "குடியியல்" பிரமாணத்தின் கொள்கை இன்றும் பொருந்தும்.*

*லேவியராகமம் 19 அனைத்து பரிசுத்தக் குறியீடுகளையும் எவ்வாறு விளக்கலாம் என்பதற்கான ஒரு மாதிரியாக செயல்படுகிறது. வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் பரிசுத்தமாக இருக்க தேவனுடைய ஜனங்களை அழைக்கிறது. லேவியராகமம் 19ன் சில அம்சங்கள் பத்துக் கட்டளைகளின் பிரதிபலிப்பாகும்;அவற்றில் சில பலி செலுத்துதலின் பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டவை; சில சுத்தம் மற்றும் அசுத்தம் பற்றியக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டவை; சில அயலகத்தாரின் அன்பை அடிப்படையாகக் கொண்டவை; நம்முடைய தேவனாகிய கர்த்தர் பரிசுத்தமா யிருப்பதுபோல, நாமும் பரிசுத்தமாக இருக்கவேண்டிய நமது கடமைகள் **அனைத்தையும்** அவை வெளிப்படுத்துகின்றன.*

## எண்ணாகமம்

### கருப்பொருள்: கீழ்ப்படியாமையின் விளைவுகள்

*எண்ணாகமத்தின் ஆங்கிலப் பெயர், புத்தகத்தின் ஒரு பகுதியாக இருக்கும் இரண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலிருந்து வருகிறது; புத்தகத்தின் தொடக்கத்தில் ஒன்று மற்றும் இறுதியில் ஒன்று. எபிரேய தலைப்பு ("வனாந்திரத்தில்") இஸ்ரவேல் சீனாய்மலையை விட்டு வெளியேறிய பிறகு வனாந்திரத்தில் நாற்பது ஆண்டுகள் அலைந்து திரிந்ததை விவரிக்கிறது. தேவனுக்குக் கீழ்ப்படியாததன் பயங்கரமான விளைவுகளை எண்ணாகமம் காட்டுகிறது. இஸ்ரவேலின் கீழ்ப்படியாமையின் விளைவாக, நாற்பது வருடங்கள் வனாந்திரத்தில் அலைந்து திரிந்த ஒரு தலைமுறை முழுவதும் மரித்துப்போனது.*

*பஞ்சாகமத்தின் மற்ற புத்தகங்களைப் போலல்லாமல், எண்ணா கமம் தெளிவான இலக்கிய முறையைப் பின்பற்றவில்லை. புத்தகம் காலவரிசைப்படி உள்ளது, ஆனால் வேறு எந்த மேலோட்டமான அமைப்பும் இல்லை. மாறாக, இது பல்வேறு வகையான காரியங்களைக் கொண்ட ஒரு பயணஇதழாக*

*இருக்கிறது: கதை, கவிதை, தீர்க்கதரிசனம், ஆசீர்வாதம், நியாயப்பிரமாணம் மற்றும் இரண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புகள்.*

*எண்ணாகமம் பல்வேறு வகையான பொருட்களைக் கொண்டிருந்தாலும், அதன் அடிப்படை நோக்கம் தெளிவாக உள்ளது: இஸ்ரவேலின் கீழ்ப்படியாமையின் விளைவுகளைக் காண்பிக்கவும், இஸ்ரவேலருக்கு தேவன் தொடர்ந்து உண்மையுள்ளவராக இருப்பதைக் காண்பிக்கவும் ஆகும். "நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ள வராயிருக்கிறார்; அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார்."[48]*

## ***எண்ணாகமத்தின் கண்ணோட்டம்***

### ***சீனாயில் இஸ்ரவேலர்கள் (எண்ணாகமம் 1:1-10:10)***

*சீனாய்மலையை விட்டு வெளியேறி வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குப் பயணிக்கத் தயாராகும்போது, மக்கள் தொகை கணக்கெடுப்புடன் எண்ணாகமம்தொடங்குகின்றது. மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்களுக்கு அடுத்தபடியாக முகாம் ஏற்பாடுகளுக்கான அறிவுரைகள், இஸ்ரேல் கடைபிடிக்க வேண்டிய பிரமாணங்கள் மற்றும் ஓரிடத்தில் இருந்து புறப்படு வதற்கான ஆயத்த பணிகள் ஆகியவற்றை எண்ணாகமம் விவரிக்கிறது.*

### ***வனாந்திரத்தில் இஸ்ரவேலர்கள் (எண்ணாகமம் 10:11-21:35)***

*எண்ணாகமத்தின் மையப் பகுதி, காதேசில் அவர்கள் கீழ்ப்படி யாமல்போனதன் விளைவாக, பாலைவனத்தில் அலைந்து திரிந்த ஆண்டுகளைக் குறித்த பதிவு. வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழையத் தவறியதற்கு முன்பே, தபேராவில்[49] அவர்கள் செய்த புகாரிலும், கிப்ரோத்-அத்தாவாவில்[50] மன்னாவைப் பற்றிய குறை கூறுதலிலும், மோசேயின் தலை*

---

*[48] 2 தீமோத்தேயு 2:13*
*[49] எண்ணாகமம் 11:1-3*
*[50] எண்ணாகமம் 11:4-35*

*மைக்கு எதிராக ஆரோனும்மிரியாமும் கலகம் செய்ததிலும் இஸ்ரவேலின் விசுவாசமின்மை தெரியவருகிறது.*[51]

*கானானில் வேவு பார்க்கும் தங்களுடைய பணியை வேவுபார்த்தவர்கள் அறிவித்த பிறகு, தேவனுடைய வெற்றியின் வாக்குறுதியை ஜனங்கள் நம்ப மறுத்தனர். நியாயத்தீர்ப்பினால், தேவன் விசுவாசமில்லாத வேவுகாரரை வாதைநோயால் கொன்றார், மேலும் இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள், காலேப் மற்றும் யோசுவாவைத் தவிர, வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைய மாட்டார்கள் என்று அறிவித்தார்.*

*இந்த பிரிவின் எஞ்சிய பகுதிகளில் பலி தொடர்பான பிரமாணங்கள், கோரா, தாத்தான் மற்றும் அபிராம் ஆகியோரின் கலகத்தின் மீதான நியாயத்தீர்ப்பு, ஆரோனின் ஆசாரிய வம்சாவளியை உறுதிப்படுத்துதல் மற்றும் ஆசரிப்புக்கூடாரம் மற்றும் அசுத்தம் தொடர்பான பிரமாணங்கள் ஆகியவை அடங்கும். சில அறிஞர்கள் இந்த வரிசையை சீரற்றதாகக் கருதினாலும், இந்த பகுதி இஸ்ரேலுக்கு தேவனுடைய கிருபையை நிரூபிக்கிறது. பலி தொடர்பான பிரமாணங்களின் புதுப்பித்தலுடன் நியாயத்தீர்ப்பின் செய்தியைப் பின்பற் றுவதன் மூலம், தேவன் தம் ஜனங்களைக் கைவிடவில்லை என்பதைக் காட்டுகிறார். சீனாயில் கொடுத்த பிரமாணங்கள் தேவனுடைய ஜனங்களுக்குக் கிருபை அளிப்பது போலவே, இஸ்ரவேலின் கீழ்ப்படியாமையின் மத்தியிலும் தேவன் அக்கறை காட்டுகிறார் என்பதை எண்ணாகமத்திலுள்ள பிரமாணங்கள் காட்டுகின்றன. அதுபோலவே, ஆரோனின் ஆசாரிய வம்சாவளியை உறுதிப்படுத்தல் மற்றும் இஸ்ரவே லருக்கு ஆசரிப்புக்கூடாரம் மற்றும் ஆசாரியத்துவத்தின் தொடர்ச்சியான முக்கியத்துவத்தைக் காட்டும்வகையில் கொடு க்கப்பட்ட பிரமாணங்கள் ஆகியவற்றையும் எண்ணாகமத்தில் காணலாம் . தேவன் இஸ்ரவேலை மறக்கவில்லை; அவர் தம் ஜனங்கள் நடுவில் தொடர்ந்து வசிப்பார்.*

*அதிகாரம் 21இல், கலகத்திற்குக் காரணமாக இருந்த ஜனங்கள் கொள்ளிவாய்ச்சர்ப்பங்களால் பாதிக்கப்பட்டனர்.*[52]*ஜனங்களின்*

---

[51] *எண்ணாகமம் 12:1-16*

[52] *எண்ணாகமம் 21:4-9. "கொள்ளிவாய்ச்சர்ப்பங்கள்" ஒருவேளை விஷமுள்ள பாம்புகளைக் குறிக்கலாம்.*

*மனந்திரும்புதலுக்கு பிரதிபலனாக, ஒரு கம்பத்தில் ஒரு வெண்கல சர்ப்பத்தை உருவாக்கி உயர்த்தும்படி தேவன் மோசேக்கு அறிவுறுத்தினார். சர்ப்பத்தைப் பார்த்து கடிபட்டவன் உயிர் வாழ்வான். யோவானில், இயேசு தம்மை விசுவாசத்துடன் எதிர்நோக்கும் அனைவருக்கும் தம்முடைய இரட்சிப்பின் ஓர் அடையாளமாக இதை சுட்டிக்காட்டினார்.*[53]

## *மோவாபின் சமவெளியில் இஸ்ரவேலர்கள் (எண்ணாகமம் 22:1-36:13)*

*எண்ணாகமத்தின் கடைசிப் பகுதி, கானானுக்குள் நுழைவதற்கான இஸ்ரவேலின் இரண்டாவது ஆயத்தத்தைக் காட்டுகிறது. இந்த அதிகாரங்கள் புத்தகம் ஆரம்பத்தில் கூறியதிலிருந்து சுமார் நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெறுகின்றன. கீழ்ப்படியாமையின் காரணமாக, பதினொரு நாள் பயணம் நாற்பது ஆண்டுகள் ஆனது.*[54]

*இடைப்பட்ட ஆண்டுகளில், இஸ்ரவேலரின் முழுத் தலைமுறையும் அவிசுவாசத்தினாலே மாண்டுபோனது. எண்ணாகமம்15-21 இல் உள்ள மரணங்கள் எதுவும் எதிரிகளின் தாக்குதலால் ஏற்படவில்லை. அவிசுவாச தலைமுறையின் மரணம் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் விளைவாகும், இஸ்ரவேலின் எதிரிகளின் பலத்தால் அல்ல.*[55]

*இஸ்ரவேலர் மோவாபின் சமவெளியில் காத்திருந்தபோது, மோவாபின் ராஜா பாலாக் இஸ்ரவேலின் மீது சாபத்தை உரைக்கும்படிக்கு பிலேயாமை காசுகொடுத்து அமர்த்தினான். தேவன் பிலேயாமின் சாபத்தை ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக மாற்றினார். பிலேயாமின் ஆசீர்வாதம் பழைய ஏற்பாட்டின் சிறந்த மேசியாவின் தீர்க்கதரிசனங்களில் ஒன்றாகும். இஸ்ரவேலின் கீழ்ப்படியாமையின் மத்தியிலும், தேவன் தம் தேசத்தைத் தொடர்ந்து பாதுகாத்தார்.*

*இஸ்ரவேலரை தேவன் பாதுகாப்பதைப் பற்றிய இந்தக் கதையைத் தொடர்ந்து உடனடியாக மற்றொரு நியாயத்தீர்ப்பின்*

---

*[53]யோவான் 3:14-16*

*[54]உபாகமம் 1:2-3*

*[55]இதேபோல், யோசுவாவில், ஆயி பட்டணத்தில் மரணங்கள் ஆகானின் பாவத்தால் வருகின்றன, ஆயி பட்டணத்தின் வலிமையால் அல்ல..*

கதை வருகிறது. இஸ்ரவேலர் மோவாபின் தெய்வங்களை நோக்கித் திரும்பி, 24,000 இஸ்ரவேலர்களைக் கொன்ற கொள்ளைநோயால் நியாயந்தீர்க்கப்பட்டனர்.[56] மீண்டும், கீழ்ப்படியாமையின் விளைவுகள் தெளிவாக உள்ளன.

இதைத் தொடர்ந்து வருவது இரண்டாவது மக்கள் தொகை கணக்கெடுப்பு, மோவாபின் சமவெளியை விட்டு வெளியேறுவதற்கான ஆயத்தங்கள், பலியின் பிரமாணங்களின் மறுஆய்வு மற்றும் தேசத்தைப்பிரிப்பது தொடர்பான அறிவுறுத்தல்கள். தேவன் தம் ஜனங்களை மறக்கவில்லை.

| **பழையத் தலைமுறை (எண்ணாகமம் 1-14)** | **புதியத் தலைமுறை (எண்ணாகமம் 21-36)** |
|---|---|
| முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு: 603,550போர்வீரர்கள்(எண்ணாகமம் 1) | இரண்டாவது மக்கள் தொகை கணக்கெடுப்பு: 601,730போர்வீரர்கள்(எண்ணாகமம் 26) |
| சீனாயிலிருந்துகாதேசுக்குப் பிரயாணம் | காதேசுவிலிருந்து மோவாப் வரையுள்ள பிரயாணம் |
| பரிசுத்தப்படுத்துதலின் பிரமாணங்கள் (எண்ணாகமம் 4-9) | பலிகள் மற்றும் பொருத்தனைகளின்பிரமாணங்கள்(எண்ணாகமம் 28-30) |

## புதிய ஏற்பாட்டில் எண்ணாகமம்

மோவாபில் இஸ்ரவேலர் செய்த பாவத்தையும், தேவ அதிகாரத்தை அவர்கள் நிராகரித்ததையும், அவர்களின் முறையீடுகளையும் கொரிந்தியர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக பவுல் சுட்டிக்காட்டினார். இந்த புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் அதே தோல்விகளின் ஆபத்தில் இருந்தனர். பவுல் எச்சரித்தார், "இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்." இந்த எச்சரிக்கையுடன் சேர்த்து, பவுல் தனது வாசகர்களை, “மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு

[56] எண்ணாகமம் 25:1-9

*அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்'' என ஊக்குவித்தார்.*[57]

*எபிரேய புத்தகத்தில், இஸ்ரவேலை கானானுக்குள் நுழைய விடாமல் விலக்கி வைத்த விசுவாசமின்மைக்கு எதிராக கிறிஸ்தவர்களை எழுத்தாளர் எச்சரிக்கிறார். இஸ்ரவேலர்கள் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தியதால், அவர்கள் வாக்குத்தத்த தேசத்திற்குள் பிரவேசிக்ககூடாதபடிக்குத் தடுக்கப்பட்டனர். அதே வழியில், "அவிசுவாசத்தின் தீய இருதயம்" கொண்ட எபிரேயர் நிருபத்தின் வாசகர்கள் சுவிசேஷத்தின் மூலம் வாக்குறுதியளிக்கப்பட்ட இளைப்பாறுதலில் பிரவேசிக்க மாட்டார்கள்.*[58]

## *உபாகமம்: உடன்படிக்கையைப் புதுப்பித்தல்*

### *கருப்பொருள்*

*உபாகமம் பழைய ஏற்பாட்டின் மிக முக்கியமான புத்தகங்களில் ஒன்றாகும். இது பஞ்சாகமத்தின் உச்சம் மற்றும் வரலாற்று புத்தகங்களின் அடித்தளம். எஞ்சிய பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களில் எல்லாம், தீர்க்கதரிசிகள் உபாகமத்தில் கற்பிக்கப்படும் பிரமாணங்களை ஒப்பிட்டு இஸ்ரவேலின் கீழ்ப்படிதலை அளவிடுவார்கள்.*

*உபாகமம் என்ற பெயருக்கு "இரண்டாம் நியாயப்பிரமாணம்" என்று பொருள். இந்த "இரண்டாம் நியாயப்பிரமாணம்" புதியதல்ல, ஆனால் புதிய தலைமுறைக்கான உடன்படிக்கையின் புதுப்பித்தலாகும். வனாந்திரத்தில் இஸ்ரவேல் துரோகம் செய்த போதிலும், தேவன் தம் ஜனங்களை மறக்கவில்லை. ஆபிரகாம் மற்றும் மோசேயுடன் செய்த உடன்படிக்கைகள் இன்னும் நடைமுறையில் இருப்பதை உபாகமம் காண்பிக்கிறது.*

---

[57] *1 கொரிந்தியர் 10:1-13*
[58] *எபிரெயர் 3:7-4:13*

| உபாகமமும் பழைய ஏற்பாடும் | |
|---|---|
| உபாகமம் பின்னோக்கிப் பார்க்கிறது | ஆதியாகமம்–எண்ணாகமம் |
| உபாகமம் முன்னோக்கி சுட்டிக்காட்டுகிறது | யோசுவா–ராஜாக்கள் |

**உபாகமம் புத்தகத்தின் கண்ணோட்டம்**

*உபாகமம் மோசேயின் மூன்று உரைகளைக் கொண்டுள்ளது. இந்த உரைகள் இஸ்ரவேலின் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கின்றன மற்றும் தேவனுடைய ஜனங்களாக அவர்களின் எதிர்காலத்தை எதிர்நோக்குகின்றன.*

***உரை1 - சரித்திரம்: தேவன் என்ன செய்தார் (உபாகமம் 1-4)***

*மோசே தனது முதல் உரையில் இஸ்ரவேலின் சரித்திரத்தை மதிப்பாய்வு செய்கிறார். இது வெறுமனே ஒரு வரலாற்று ஆய்வு அல்ல; அது சரித்திரத்தின் இறையியல். இஸ்ரவேலின் சரித்திரத்தை மதிப்பாய்வுசெய்வதன் மூலம் உடன்படிக்கையைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை மோசே காண்பிக்கிறார். இஸ்ரவேலர்கள் கானானுக்குள் பிரவேசிக்க மறுத்தபோது அவர்களுடைய கீழ்ப்படியாமையின் விளைவுகளை அவர் காண்பிக்கிறார். இஸ்ரவேலர்கள் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தபோது அவர்களுக்குக் கிடைத்த தேவனுடைய பாதுகாப்பை மோசே நினைவுபடுத்துகிறார். கீழ்ப்படியாமையின் காரணமாக தான் கானானுக்குள் செல்லமுடியாதபடி தேவன் தடுத்து விட்டார் என்று மோசே தன்னை ஒரு உதாரணமாகக் கூட சுட்டிக்காட்டுகிறார். இஸ்ரவேல் உடன்படிக்கையைமறந்துவிடக் கூடாது.*[59]

*இந்த முதல் உரை, "விதைத்தல் மற்றும் அறுவடை செய்தல்"*[60] *என்ற கோட்பாடான பழைய ஏற்பாட்டு வரலாற்றிற்கு ஒரு*

---

[59]*உபாகமம் 4:9, 23*

[60]*வேதாகம அறிஞர்கள் இதை "டியூட்டரோனமிக் இறையியல்" அல்லது "சாசன இறையியல்" கொள்கை என்று அழைக்கின்றனர். இது வரலாற்று புத்தகங்கள், தீர்க்கதரிசன புத்தகங்களின் அஸ்திபாரம் மற்றும் கலாத்தியர் 6:6-7 இல் மீண்டும் கூறப்பட்டுள்ளது.*

*முக்கியமான இறையியல் அஸ்திபாரத்தை அமைக்கிறது. பழைய ஏற்பாட்டு வரலாற்றின் மற்ற பகுதிகள் இந்தக் கொள்கையை எடுத்துரைக்கிறது. இஸ்ரவேல் கீழ்ப்படிந்தால், தேவன் அவளை ஆசீர்வதிக்கிறார்; அவள் விக்கிரகங்களை வழிபடும்போது, தேவன் அவளை சிறைபட்டுப் போகப் பண்ணினார்*

## ***உரை2 - சட்டம்: தேவன் என்னத்தை எதிர்பார்க்கிறார் (உபாகமம் 5-26)***

*உபாகமத்தின் மையமானது உடன்படிக்கையின் மறுஆய்வு ஆகும். உபாகமம் 5-11இல், மோசே நியாயப்பிரமாணத்தின் பொதுவான நிபந்தனைகளை மதிப்பாய்வு செய்கிறார்; உபாகமம் 12-26இல், இஸ்ரவேலின் சமுதாயத்தின் குறிப்பிட்ட நிலைமைகளுக்குமோசே உடன்படிக்கையைப் பயன்படுத் துகிறார். கானானில் வாழும்போது இஸ்ரவேலின் வாழ்க் கையில் உடன்படிக்கை நியதிகள் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை இந்த அதிகாரங்கள் காட்டுகின்றன.[61]*

*மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குறித்த கண்ணோட்டம் பத்துக்கட்டளைகளின் மறுஆய்வுடன் தொடங்குகிறது. உடன் படிக்கையின் வேரில் உள்ள இரண்டு பிரமாணங்கள் "தேவனுக்குப் பயப்படுதல்" மற்றும் "தேவனுடைய அன்பு" ஆகும்.*

*உபாகமம் 5:29ல், தேவன் சொன்னார், "அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாயிருக்கும்படி, அவர்*

---

*[61] ஒரு உதாரணம் உபாகமம் 22:8: "நீ புதுவீட்டைக் கட்டினால், ஒருவன் உன் மெத்தையிலிருந்து விழுகிறதினாலே, நீ இரத்தப்பழியை உன் வீட்டின்மேல் சுமத்திக்கொள்ளாதபடிக்கு, அதற்குக் கைப்பிடிசுவரைக் கட்டவேண்டும்". இந்த நியாயப்பிரமாணம் யாத்திராகமம் அல்லது லேவியராகமத்தில் சேர்க்கப்படவில்லை. வனாந்திரத்தில் உள்ள ஜனங்களுக்கு வீடு கட்டுவது தொடர்பான பிரமாணங்கள் தேவைப்படவில்லை. கானானில் நிறுவப்பட்ட நகரங்களின் புதிய அமைப்பிற்கு நியாயப்பிரமாணத்தைப் பயன்படுத்துவதற்கு அவை தேவைப்படுகின்றன. பயன்பாடு புதியதாக இருந்தாலும், பிரமாணம் இல்லை. உபாகமம் 22:8, "உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக" (லேவியராகமம் 19:18) முன்பு கூறப்பட்ட கோட்பாட்டைப் பயன்படுத்துகிறது. இது யாத்திராகமம் 20:13, "கொலை செய்யாதிருப்பாயாக" உடன் தொடர்புடையது. இந்த கட்டளையை நிறைவேற்றுவது கொலை செய்யாமல் இருப்பதை விட அதிகம்; இது மற்ற மனிதர்களின் செயலில் பாதுகாப்பு - மத்தேயு 5:21-24 இல் இயேசுவால் மீண்டும் வலியுறுத்தப்பட்ட கொள்கை.*

*கள் எந்நாளும் எனக்குப் பயந்து, என் கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வதற்கேற்ற இருதயம் அவர்களுக்கு இருந்தால் நலமாயிருக்கும்!" சரியான தேவ பயம் இஸ்ரவேலைப் பாதுகாக்கும்.*

*உபாகமம் 6:4-5 உடன்படிக்கையின் மையக்கருவைக் கொண் டுள்ளது: "இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகியகர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக."[62] இயேசு இதை "முதல் மற்றும் பிரதான கற்பனை"[63] என்று குறிப்பிடுவார்.*

*தேவபயம் மற்றும் தேவன் மீதான அன்பு ஆகிய இந்த இரண்டு பிரமாணங்களும் ஒன்றுக்கொன்று விரோதமானவை அல்ல. பயம் மற்றும் அன்பு இரண்டும் உறவின் விதிமுறைகள். பழைய ஏற்பாட்டில், "தேவனுக்குப் பயப்படுதல்" என்பது அவருடன் சரியான உறவில் வாழ்வதாகும். தேவனுக்குப் பயப்படுதல் என்பது அடிமையின் பயம் அல்ல; அது தேவன் யார் என்பதைப் பற்றிய சரியான விழிப்புணர்வு மற்றும் அவர்பால் நமது பதிலுணர்வு மனப்பான்மை. பயம் மற்றும் அன்பு இரண்டும் நேர்மறையான சொற்கள்.*

*இந்த உரையின் எஞ்சிய பகுதி இந்த இரண்டு கோட்பாடுகளை அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் வகையில் அவற்றை விளக்குகிறது, . தனது உரையில் பத்துக்கட்டளைகள் மற்றும் எதிர்காலத்தில் கானான் வாழ்க்கையில் நியாயப்பிரமாணத்தைப் நடைமுறைப்படுத்துவது ஆகியவற்றை மறுஆய்வு செய்வதன் மூலம் , மோசே, தேவபயமும் தேவன் மீதான அன்பும் தினசரி வாழ்க்கையில் எவ்வாறு செயல்படுத்தப்படும் என்பதைக் காட்டுகிறார். நியாயப்பிரமாணம் என்பது வெறும் விதிகளின் பட்டியல் மட்டுமல்ல, ; அது அன்பின் உறவில் வாழ்வதற்கான வழிமுறையாக இருந்தது.*

### ***உரை3 - தீர்க்கதரிசனம்: தேவன் என்ன செய்வார் (உபாகமம் 27-31)***

---

[62] *உபாகமம் 6:4-5 ஷேமா என்று அழைக்கப்படுகிறது.*
[63] *மத்தேயு 22:38*

*எதிர்காலத்தை மனதில் கொண்டு , மோசேயின் இறுதி உரை, அடுத்தத் தலைவராக யோசுவாவை ஏற்றுக்கொள்ள இஸ்ரவேலை ஆயத்தப்படுத்துகிறது மற்றும் உடன்படிக்கைக்கு உண்மையாக இருக்க இஸ்ரவேலுக்கு சவால் விடுகிறது.*

*உபாகமம் 27-28 இஸ்ரவேல் கானானுக்குள் பிரவேசித்த பிறகு ஒரு உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கான வழிமுறைகளைக் கொண்டுள்ளது. இந்த விழாவில், ஏபால் மலைக்கும் கெரிசீம் மலைக்கும் இடையே உள்ள சீகேம் நகருக்கு அருகில் இஸ்ரேல் ஒரு பலிபீடத்தைக் கட்ட வேண்டும். கோத்திரங்கள் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்படுவார்கள், பாதி கோத்திரங்கள் ஒரு மலையிலும் பாதி கோத்திரங்கள் மறுபுறமும் இருப்பார்கள். லேவியர்கள் உடன்படிக்கையின் எச்சரிக்கைகளைப் பாடுவார்கள். மேலும் ஜனங்கள் உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களுடனும் சாபங்களுடனும் பதிலளிப்பார்கள். இந்த சடங்கு யோசுவா 8:30-35இல்நிகழ்த்தப்பட்டது. உடன்படிக்கையின் கடமைகளை ஒரு புதிய தலைமுறைக்கு நினைவூட்டுவதற்கு இது ஒரு உணர்ச்சிப்பூர்வமான நிகழ்ச்சி.*

*உபாகமம் 29-30 மோசேயின் இறுதிச் செய்தியைக் கொண்டுள்ளது. கடந்த காலத்தில் தேவனின் விசுவாசத்தை இஸ்ரவேலுக்கு நினைவூட்டிய பிறகு, இஸ்ரேல் மற்ற தேவர்களிடம் திரும்பும் மற்றும் சிறைபட்டுப்போவார்கள் என்று மோசே முன்னறிந்தார். இருப்பினும், அவர்களை மீண்டும் தேசத்திற்குக் கொண்டுவருவதில் தேவனுடைய இரக்கத்தையும் அவர் முன்னறிகிறார். இஸ்ரவேல் தேர்வு செய்யவேண்டிய ஒரு காரியத்துடன் மோசே தனது உரையை நிறைவு செய்கிறார்: "நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சிவைக்கிறேன்; ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொள்."[64]*

*உபாகமம் 31 இல், மோசே யோசுவாவைத் தனக்குப் பின் வாரிசாக நியமித்து, ஒவ்வொரு ஏழு வருடங்களுக்கும் கூடாரப்பண்டிகையில் நியாயப்பிரமாணம் வாசிக்கப்படுவத*

---

*[64] உபாகமம் 30:19*

ற்கான ஏற்பாடுகளைச் செய்தார். இது ஒவ்வொரு தலைமுறையி னருக்கும் நியாயப்பிரமாணத்தின் விதிகளை நினைவூட்டுகிறது.

## பின் இணைப்புகள் (உபாகமம் 32-34)

தேவனுடைய வழிநடத்துதலின் கீழ், இஸ்ரவேலர் உடன்படி க்கையை நினைவுகூருவதற்கு மோசே ஏற்பாடுகளைச் செய்தார். மோசே இஸ்ரவேலருக்கு உடன்படிக்கையை சுருக்கமாக உள்ளடக்கிய ஒரு பாடலைக் கற்பித்தார். இந்த பாடல் இஸ்ரவேலுக்கு தேவன் செய்த நன்மைகளை மதிப்பாய்வு செய்கிறது, இஸ்ரவேலின் எதிர்கால கலகம் மற்றும் சிறை பட்டுப் போகுதலை முன்னறிவிக்கிறது, மேலும் தேவனுடைய மன்னிப்பு மற்றும் மறுசீரமைப்பை உறுதியளிக்கிறது. உபாகமம் 32ன் பாடல் உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் மற்றொரு நினைவூட்டலாகும்.

உபாகமம் 33 ஒவ்வொரு கோத்திரத்திற்கும் மோசேயின் இறுதி ஆசீர்வாதத்தைக் கொண்டுள்ளது. ஒரு முற்பிதா தனது குமார ர்களை ஆசீர்வதிப்பது போல, மோசே ஒவ்வொரு கோத்திரத் திற்கும் ஒரு ஆசீர்வாதத்தை உச்சரிக்கிறார்.[65]

உபாகமம் 34 என்பது யோசுவாவால் இயற்றப்பட்ட ஒரு இரங்கல் ஆகும். மேரிபாவில் மோசே செய்த பாவத்தின் காரணமாக, அவர் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவே சிக்க அனுமதிக்கப்படவில்லை.[66] இருப்பினும், நேபோ மலை யிலிருந்து தேசத்தைப் பார்க்க மோசேயிக்கு தேவன் அனுமதியளித்தார். தேவன் மோசேயை மோவாபில் அடக்கம் செய்தார், யோசுவா இஸ்ரவேல் ஜனங்களின் தலைவனானான்.

## பிற்கால பழைய ஏற்பாட்டு நூல்களில் நூல்களில் உபாகமம்

உபாகமத்தில் உள்ள உடன்படிக்கை அம்சங்கள் இஸ்ரவேலுக்கு எதிரான பிற்கால "தீர்க்கதரிசன குற்றச்சாட்டு வழக்குக்கு" ஒரு அடிப்படையை வழங்குகிறது. இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள் தேவனுக்கு எதிரான இஸ்ரவேலின் துரோகத்தைக் காட்டும் போது உபாகமத்தைச் சுட்டிக்காட்டுகிறார்கள். மோசேயின்

[65] கோத்திரங்கள் மீது யாக்கோபின் இணையான ஆசீர்வாதத்திற்கு ஆதியாகமம் 49-ஐப் பார்க்கவும்..
[66] எண்ணாகமம் 20

காலத்தில் அரசியல் உடன்படிக்கைகள் அல்லது ஒப்பநதங் களுக்கு பொதுவாக இருந்த ஒரு முறையை உபாகமத்தின் அமைப்பு பின்பற்றுகிறது. எகிப்தில் இருந்து வரும்போது, இந்த வடிவம் இஸ்ரவேலுக்கு நன்கு தெரிந்திருக்கும், மேலும் தேவனுடனான அவர்களின் உடன்படிக்கையின் தீவிரத்தை புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவியிருக்கும்.

துரதிர்ஷ்டவசமாக, இஸ்ரவேல் விரைவில் தனது வாக்குத்தத் தங்களை மறந்து உடன்படிக்கையை மீறியது. நியாயாதி பதிகளின் புத்தகத்தக காலத்தில், இஸ்ரவேல் ஏற்கனவே உடன் படிக்கையை கைவிடத் தொடங்கிவிட்டது. நியாயாதிபதிகள், ராஜாக்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் உபாகமத்தில் கொடுக்கப் பட்டுள்ள உடன்படிக்கைக்கு உண்மையாக நிலைத்திருக்காமல் இஸ்ரவேல் தோல்வியடைந்ததைக் காட்டுவார்கள்.

| இஸ்ரேலுடனான தேவனின் உடன்படிக்கை | |
|---|---|
| பண்டைய அண்மைக் கிழக்கு ஒப்பந்தங்கள் | இஸ்ரேலுடனானதேவ னுடைய உடன்படிக்கை |
| ஒப்பந்தத்தை அறிமுகப்படுத்தும் *முன்னுரை* | உபாகமம் *1:1-5* |
| இரு தரத்தார்களுக்கும்இடையிலான உறவைமதிப்பாய்வு செய்யும் *வரலாற்று முன்னுரை* | உபாகமம் *1:6–4:49* |
| உடன்படிக்கையின்*நிபந்தனைகள்* | உபாகமம் *5:1–26:19* |
| மீறுவதற்கான (அல்லது கைக்கொள்ளுவதற்கான) *சாபங்களும் ஆசீர்வாதங்களும்* | உபாகமம் *27:1–28:68* |
| உடன்படிக்கையை அவ்வப்போது வாசிப்பதற்கான *ஏற்பாடு* | உபாகமம் *31:9-29* |
| உடன்படிக்கையின் சாட்சிகளின் *பட்டியல்* | உபாகமம் *32:1-47* |

## புதிய ஏற்பாட்டில் உபாகமம்

புதிய ஏற்பாட்டில் எண்பதுக்கும் மேற்பட்ட முறை உபாகமம் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது, இது அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் பழைய ஏற்பாட்டு புத்தகங்களில் ஒன்றாகும். மோசேயைப் போன்ற ஒரு தீர்க்கதரிசியை தேவன் எழுப்புவார்

*என்று உபாகமம் வாக்குறுதி அளித்தது; இது இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தில் நிறைவேறுகிறது.*[67] *வனாந்தரத்தில் சாத்தானின் சோதனைக்கு அவர் பதிலளித்தது உட்பட, உபாகமத்தை இயேசு பலமுறை மேற்கோள் காட்டினார்.*[68]

## *முடிவுரை: பஞ்சாகமம் இன்றும் பேசுகிறது*

*பல திருச்சபைகளில், பஞ்சாகமத்தின் பெரும்பகுதி புறக்கணிக்கப்படுகிறது. சிருஷ்டிப்பு மற்றும் ஜலப்பிரளயக் கதைகள் குழந்தைகளின் பாடங்களுக்கு அடிப்படையாகவும், சிருஷ்டிப்பு மற்றும் பரிணாம வளர்ச்சி பற்றிய விவாதங் களுக்கான உரையாகவும் உள்ளன. ஞாயிறு பாடசாலையில் பத்து கட்டளைகள் மனப்பாடம் செய்யப்படுகின்றன. இருப் பினும், உபாகமம் மூலம் யாத்திராகமம் பல கிறிஸ்தவர்களால் புறக்கணிக்கப்படுகிறது. இது துரதிர்ஷ்டவசமானது. ஏனெனில் இந்த புத்தகங்கள் 21 ஆம் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு முக்கியமானவை.*

*யாத்திராகமம் மனிதகுலத்துடன் தேவனுடைய உறவை மீட்டெடுப்பதற்கும் கட்டியெழுப்புவதற்கும் தேவனுடைய திட்டத்தை முன்வைக்கிறது. சரியாகப் புரிந்து கொள்ளப் பட்டால், தம் ஜனங்களுடன் உறவை நிலை நாட்டவும் பராம ரிக்கவும் தேவன் சித்தம் கொண்டிருப்பதை நியாயப்பிரமாணம் வெளிப்படுத்துகிறது. இஸ்ரவேலைப் பொறுத்தவரை, தேவன் நம்மைப் பற்றி கூறுகிறார்: "பயப்படாதிருங்கள்; உங்களைச் சோதிப்பதற்காகவும், நீங்கள் பாவம் செய்யாதபடிக்குத் தம்மைப் பற்றும் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும், தேவன் எழுந்தருளினார்."*[69] *தேவனுடனான சரியான உறவில் இருப்பது என்பது நாம் வேறு எதற்கும் பயப்படத் தேவையில்லை என்பதாகும்.*

*லேவியராகமம் பரிசுத்தத்தை முன்வைக்கிறது. ஒரு பரிசுத் தமான தேவனுக்கு ஒரு பரிசுத்த ஜனம் தேவை என்பதை இது காட்டுகிறது. பலி செய்யும் முறை நடைமுறையில் இல்லை*

---

[67] *உபாகமம் 18:14-22; உபாகமம் 34:10-12; யோவான் 6:14*
[68] *உபாகமம் 6:13, 16; 8:3; மத்தேயு 4:1-10*
[69] *யாத்திராகமம் 20:20*

*என்றாலும், தேவனுடன் சரியான உறவில் வாழ்வதற்குப் பரிசுத்தத்தின் கொள்கைகள் இன்னும் அவசியம்.*

*கீழ்ப்படியாமைக்கு எதிராக எண்ணாகமம் திருச்சபையை எச்சரிக்கிறது. பழைய ஏற்பாட்டில், தேவனுடைய ஜனங்கள் கீழ்ப்படியாமைக்காக நியாயந்தீர்க்கப்பட்டனர். இன்று, நாம் கீழ்ப்படியாமல் இருந்தால் தேவனுடைய ஜனங்கள் நியாயந் தீர்க்கப்படுவார்கள்.*

*மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நியாயப்பிரமாணத்தின் கொள்கைகளைப் பயன்படுத்துவதற்கான ஒரு வடிவத்தை உபாகமம் வழங்குகிறது. உபாகமத்தில், வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் வாழ்வதற்கு நியாயப்பிரமாணத்தின் கோட்பாடு களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை மோசே இஸ்ரவேல ருக்குக் கற்பித்தார். நாம் வாழும் சூழ்நிலைகள் மாறினாலும், தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் கோட்பாடுகள் மாறாது. புதிய சூழ்நிலைகளில் வேதாகமக் கொள்கைகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை உபாகமத்தின் ஆய்வு நமக்குக் கற்பிக்கிறது.*

## ***பாடம் 3 வீட்டுப்பாடங்கள்***

*இந்தப்பாடத்தைப் பற்றிய உங்கள் புரிதலை பின்வரும் வீட்டிப்பாடங்களின்மூலம் நிரூபிக்கவும்:*

(1) *பின்வரும் பணிகளில்* ***ஒன்றைத்*** *தேர்ந்தெடுக்கவும்:*

*விருப்பம் 1: குழு வீட்டுப்பாடம்*

*“நியாயப்பிரமாணத்தின் ஒரு துல்லியமானப் பார்வையைப்” படித்த பிறகு, லேவியராகமம் 19ஐப் படிக்கவும். இந்த அதிகாரத்தில் உள்ள ஒவ்வொரு கட்டளைக்கும், கற்பிக்கப்படும் கோட்பாட்டைத் தீர்மானித்து, இன்றைய உலகில் இந்தக் கொள்கையை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி விவாதிக்கவும். உங்கள் குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப் பினரும் லேவியராகமம்19 இன் சமகாலப் பயன்பாட்டைக் காட்டும் ஒரு சிறு கட்டுரையை எழுத வேண்டும்.*

*விருப்பம் 2: தனிப்பட்ட வீட்டுப்பாடம்.*

*“நியாயப்பிரமாணத்தின் ஒரு துல்லியமான பார்வையைப்” படித்த பிறகு, லேவியராகமம் 19ஐப் படிக்கவும். இந்த அத்தியாயத்தில் ஒவ்வொரு கட்டளையையும் பட்டியலிடும் 1-2பக்க (450-800 வார்த்தைகள்) கட்டுரையை எழுதுங்கள். கற்பிக்கப்படும் கொள்கையைத் தீர்மானித்து, பின்னர் எப்படி அந்த கொள்கையை தனிப்பட்ட வாழ்க்கையில் இன்றைய உலகில் பயன்படுத்தலாம் என்பதைக் காட்டுங்கள்.*

(2)*இந்த அதிகாரத்தின் உள்ளடக்கத்தின் அடிப்படையில் ஒரு தேர்வை எழுதவும். மனப்பாடம் செய்வதற்காக கொடுக்கப் பட்ட வேதவசனங்களும் தேர்வில் அடங்கும்.*

## *பாடம் 3 தேர்வு*

(1) *எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் புறப்பட்ட சாத்தியமான வருடம் எது?*

(2) *ஒவ்வொரு புத்தகத்திற்குமான கருப்பொருளைப் பட்டிய லிடுக:*

(3) *யாத்திராகமப் புத்தகத்தின் இரண்டு முக்கியப் பிரிவுகளைப் பட்டியலிடுக.*

(4) *யாத்திராகமத்தில், எகிப்திலிருந்து இஸ்ரேலின் மீட்பைச் சித்தரிக்கும் நான்கு நிகழ்வுகளைப் பட்டியலிடுக.*

(5) *யாத்திராகமத்தில், யெகோவாவுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையிலான உறவு நிறுவப்பட்டதைக் குறிக்கும் இரண்டு நிகழ்வுகளைப் பட்டியலிடுக.*

(6) *லேவியராகமத்திலிருந்து பலிகள் ஒவ்வொன்றையும் அடை யாளம் காண்க.*

____________________*: மற்றொரு பலியுடன் செலுத்தப்படும் ஒரு காணிக்கை பலி*

____________________*: பழைய ஏற்பாட்டின் முதன்மையான பலி*

____________________*: பரிகாரம் செய்ய வேண்டிய மீறல்களைப் பற்றிக் கூறுகிறது*

______________________: *நியாயப்பிரமாணத்தை வேண்டுமென்றே மீறினதற்கானப் பரிகாரம்*

______________________: *ஆராதனை செய்பவருக்கும் தேவனுக்கும் இடையிலான ஐக்கியத்தைக் கொண்டாடுகிறது*

(7) *லேவியராகமம் 17-27 இன்* ____________________________ *தினசரி வாழ்வில் பரிசுத்தத்தை எடுத்துக்காட்டும் விதத்தில் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை இஸ்ரவேலுக்குக் கற்றுக் கொடுத்தது.*

(8) *இன்று பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தைக் கைக் கொள்ளுவதற்கான நான்கு படிகளைப் பட்டியலிடுக.*

(9) *எண்ணாகமத்தின் மூன்று முக்கியப் பிரிவுகளைப் பட்டி யலிடுக.*

(10) *உபாகமத்தில் மோசேயின் மூன்று உரைகள்:*

(11) *யாத்திராகமம் 3:14; லேவியராகமம் 20:7–8; உபாகமம் 6:4-5 ஆகிய வசனங்களை ஞாபகத்திலிருந்து எழுதுக.*

# பாடம் 4

# யோசுவா - ரூத்
# விசுவாசம் மற்றும் துரோகத்தின் சித்திரங்கள்

## பாடத்தின் நோக்கங்கள்

*இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:*

(1) *யோசுவா – ரூத்தின் முதன்மைக் கருப்பொருள்களை கோடிட்டுக் காட்டுதல்.*
(2) *தேசத்தை சுதந்தரித்தலின் முக்கிய நிகழ்வுகளையும் நியாயாதிபதிகளின் காலத்தையும் அறிந்துகொள்ளுதல்.*
(3) *தலைமை மாற்றத்திற்கான ஆயத்தத்தின் முக்கியத்து வத்தை புரிந்துகொள்ளுதல்.*
(4) *யோசுவாவின் புத்தகத்தில் யாவேயின் (அல்லது புனித) போர் பற்றிய கருத்தைப் புரிந்துகொள்ளுதல்.*
(5) *யோசுவா–ரூத் புத்தகங்களின் செய்தியை இன்றைய உலகின் தேவைகளுடன் தொடர்புபடுத்துதல்.*

## இந்த பாடத்திற்கான ஆயத்தம்

*யோசுவா முதல் ரூத் வரை வாசிக்கவும்.*

*யோசுவா 1:8-9 ஐ மனப்பாடம் செய்யவும்.*

## முன்னுரை

| **சரித்திரப்புத்தகங்கள்** | | |
|---|---|---|
| தேவனின் ஆட்சி | யோசுவா – ரூத் | கிபி *1405-1043* |
| ராஜாக்களின் ஆட்சி | சாமுவேல்– நாளாகமம் | கிபி *1043-586* |
| சிறையிருப்பிலிருந்து திரும்புதல் | எஸ்றா – எஸ்தர் | கிபி *536-420* |

*ஆங்கில வேதாகமத்தில், யோசுவா முதல் எஸ்தர் வரையிலான புத்தகங்கள் "சரித்திரப்புத்தகங்கள்" என்று அழைக்கப்படு கின்றன. கானானைக் கைப்பற்றியதில் இருந்து, கிமு586-ல் எருசலேம் அழிக்கப்படுதல், கிமு536-ல் திரும்பி வருதலின் தொடக்கம் என இஸ்ரவேலின் சரித்திரத்தை அவை தெரிவிக் கின்றன.*

*எபிரேய வேதாகமத்தில், இந்த புத்தகங்களில் பெரும்பாலா னவை (யோசுவா, நியாயாதிபதிகள், சாமுவேல் மற்றும் ராஜாக்கள்) "முந்தையதீர்க்கதரிசிகள்" என்று அழைக்கப்படு கின்றன. ஒரு "தீர்க்கதரிசி" தேவனுடைய செய்தியை ஜனங் களுக்கு கொண்டு செல்கிறார். சரித்திரப் புத்தகங்கள் இஸ்ரவேல் பற்றிய சுவாரஸ்யமான கதைகளை விட அதிகமான செய்திகளைத் தருகின்றன; அவை தேவனுடைய செய்தியை தேவனுடைய ஜனங்களுக்கு அறிவிக்கின்றன.*

*யோசுவா மற்றும் நியாயாதிபதிகளில், தேவன் உண்மைக்கு வெகுமதி அளிப்பதாகவும், துரோகத்தை நியாயந்தீர்ப்பதாகவும் கற்பிக்கின்றன. இஸ்ரவேலின் கலகத்தின் விளைவாக சிறைப் பட்டுப் போகுதல் என்பதை ராஜாக்களில் தேவன் காட்டுகிறார். எஸ்றா மற்றும் நெகேமியாவில், தேவன் இஸ்ரவேலரை மறந்துவிடவில்லை என்று உறுதியளிக்கிறார். சரித்திரப்புத் தகங்கள் தேவன் தம்முடைய ஜனங்களுக்கு உண்மையாக இருப்பதையும், இஸ்ரவேலருக்கு அவருடைய "நித்திய இரக்கத் தையும்" காட்டுகின்றன.*

*இந்த புத்தகங்கள் "ஒரு நோக்கத்தை உள்ளடக்கிய சரித்திரம்." இவை இஸ்ரவேலின் உடன்படிக்கை சரித்திரத்தில் தேவன் கிரியை செய்வதைக் காட்டுகின்றன. இதன் காரணமாக, இந்த புத்தகங்கள் இன்று கிறிஸ்தவ வாசகர்களுக்கு மதிப்புமிக்கவை; மனித வரலாற்றில் தேவன் தனது நோக்கங்களை நிறைவேற்ற எப்படி செயல்படுகிறார் என்பதை அவை காட்டுகின்றன.*

*முதல் மூன்று சரித்திரப்புத்தகங்கள் இஸ்ரவேலின் ஆரம்பகால சரித்திரத்தை ஒரு இறையாட்சியாக (தேவனுடைய நேரடி ஆட்சியாக) பதிவு செய்கின்றன. தேவனுடைய பிரதிநிதிகளாக மோசேயும் யோசுவாவும் இருந்ததால், இந்த வகையான அரசா ங்கம் வெற்றிகரமாக இருந்தது. துரதிர்ஷ்டவசமாக, நியாயாதி பதிகளின் காலத்தில் இஸ்ரவேலின் துரோகம் சமூகப்*

*பிரச்சினைகளுக்கு வழிவகுத்தது. தேசத்தை ஒருங்கிணைக்க முடியாட்சி (ஒரு ராஜாவின் ஆட்சி) அவசியமானது..*

## யோசுவா

### கருப்பொருள்:கானான் தேசத்தை வெற்றிக்கொள்ளுதல்

*இஸ்ரவேலை அடிமைத்தனத்திலிருந்து மீட்பது, அவருடைய ஜனங்களுக்கான தேவனின் திட்டத்தின் ஆரம்பம்; ஆபிரகாமுக்குக் தேவன் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான அடுத்த கட்டம் கானானைக் கைப்பற்றியது. யோசுவாவில், தெய்வீக போர்வீரன் தனது ஜனங்களை வாக்குறுதியளிக்கப்பட்ட இளைப்பாறுதலுக்குக் கொண்டுவருகிறான். யாத்திராகமத்தில் தொடங்கி பின்பு எண்ணாகமத்தில் இஸ்ரவேலின் கீழ்ப்படியாமையால் தாமதமான கதையை யோசுவா தொடர்கிறது.*

*யோசுவா புத்தகம் இஸ்ரவேலர்கள் அவருக்கு உண்மையாக இருக்கும்போது தேவனும் அவர்களுக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார் என்பதைக் காண்பிக்கிறது.. தேவனுக்குக் கீழ்ப்படிவது அவருடைய ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகிறது, இது உபாகமத்தில் கற்பிக்கப்படும் கொள்கை. இது எரிகோவிலும், யோசுவா 10-ல் உள்ள ராஜாக்களின் கூட்டணிக்கு எதிரான போரிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. தேவனுக்குக் கீழ்ப்படியாமை அவருடைய நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருகிறது; இது ஆயி பட்டணத்திற்கு எதிரான போரில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில், யோசுவா இஸ்ரவேலின் பிறகால சரித்திரத்தின் நிழலாட்டமாக உள்ளது*

### எழுத்தாளர் மற்றும் எழுதப்பட்ட காலம்

*யோசுவா புத்தகத்தின் நிகழ்வுகள் கி.மு. 1405-1380இல் நிகழ்ந்ததாகும். இந்தக் காலகட்டத்தில், கானான் பெயரளவு எகிப்திய கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது, ஆனால் எகிப்தின் நேரடி ஆட்சி மற்றும் ஆதிக்கம் குறைவாகவே இருந்தது. இதன் விளைவாக, கானானியர்களால் இஸ்ரவேலின் தாக்குதலுக்கு எதிராக ஒரு ஒருங்கிணைந்த படையை முன்வைக்க முடியவில்லை.*

*யோசுவா புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகளுக்குப் பிறகு விரைவில் இந்த புத்தகம் எழுதப்பட்டிருக்கலாம். யோசுவா 24:26 புத்தகத்தின் ஆசிரியராக யோசுவாவை முன்வைக்கிறது. உபாகமத்தைப் போலவே, யோசுவாவிலும் ஆசிரியரின் மரணத்தை விவரிக்கும் வசனங்கள் பின்னர் சேர்க்கப்பட்டன.*[70]

## யோசுவா புத்தகத்தின் கண்ணோட்டம்

### *கானானைக் கைப்பற்றுதல்: யோசுவா 1-12*

*நிலப்பகுதிக்குள் கடந்து செல்லுதல் (யோசுவா 1-5)*

*யோசுவாவின் புத்தகம் மோசேயின் மரணத்திற்குப் பிறகு யோசுவாவிற்கு தேவன் தோன்றியதிலிருந்து தொடங்குகிறது. மோசேயுடன் இருந்தது போல் யோசுவாவுடன் இருப்பேன் என்று தேவன் வாக்குறுதி அளித்தார்.*

*வெற்றிக்கு ஆயத்தமாக, தேசத்தை, குறிப்பாக எரிகோவைச் சுற்றிப்பார்க்க யோசுவா இரண்டு வேவுகாரரை அனுப்பினான். அந்த ஊரில் இருந்த ராகாப் என்ற வேசியால் வேவுகாரர்கள் பாதுகாக்கப்பட்டனர். இஸ்ரவேல் எரிகோ நகரைக் கைப்பற்றும்போது தன்னைப் பாதுகாக்க வேண்டும் என்று ராகாப் வேவுகாரர்களிடம் கேட்டுக்கொண்டாள். இஸ்ரவேலின் தேவன் மீது அவள் கொண்டிருந்த நம்பிக்கைக்கு அவள் செயலே சாட்சி. இவரின் சாட்சி விசுவாசத்தினால் கிருபையின் மூலம் இரட்சிப்பு என்பதற்கான பழைய ஏற்பாட்டு உதாரணமாக இருக்கிறது, இந்த புறஜாதிய விபச்சாரி இஸ்ரவேலுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை மரபுரிமையாகப் பெற்றார் மற்றும் மேசியாவின் வம்சவரிசையின் ஒரு பகுதியாக மாறினார்.*[71]

*இஸ்ரவேலர் தெற்கிலிருந்து கானானுக்குள் நுழைவதற்குப் பதிலாக (மிக நேரடியான பாதை), யோர்தான் நதியின் குறுக்கே கோத்திரங்களை யோசுவா வழிநடத்தினான். இந்த அதிசயம், மோசேயின் கீழ் செங்கடலைக் கடந்ததைப்போன்றே இருந்தது,*

---

[70] *யோசுவா 24:29-31*

[71] *மத்தேயு 1:5*

*யோசுவா தனது ஜனங்களுக்கு தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் என்பதை உறுதிப்படுத்தியது.*[72]

*யோர்தானைக் கடந்த பிறகு, யோசுவா இரண்டு உடன்படிக்கை நினைவு பாரம்பரியங்களை மீண்டும் நிறுவினார். முதலில், பல வருடங்களாக அலைந்து திரிந்த பிறகு இஸ்ரவேல் புறக்கணித்த விருத்தசேதனம் செய்யும் பழக்கத்தை மீண்டும் கடைப்பிடிக் கும்விதமாக ஆண்களுக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது. இரண்டாவதாக, வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் முதன் முறையாக பஸ்கா கொண்டாடப்பட்டது.*

*தேசத்தைக் கைப்பற்றுதல் (யோசுவா 6-12)*

*இஸ்ரவேலர் தேவனுக்கு உண்மையாக இருந்ததால், தேவன் அவர்களுடைய எதிரிகளை வென்றார் என்பதை கானானின் வெற்றி காண்பிக்கிறது. எரிகோவைச் சுற்றி அணிவகுத்துச் செல்லும் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, இஸ்ரவேல் மாபெரும் வெற்றியைப் பெற்றது. இருப்பினும், ஆகானின் பாவத்தின் காரணமாக, இஸ்ரவேல் மிகவும் சிறிய நகரமான ஆயி முன்பாக தோற்கடிக்கப்பட்டது. ஆகான் தண்டிக்கப்பட்ட பிறகு, ஆயி மற்றும் பெத்தேலின் மீது தேவன் இஸ்ரவேலுக்கு வெற்றியைக் கொடுத்தார்.*

*கிபியோனியர்களின் கதை தலைவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கிறது. கானான் ஜனங்கள் அனைவரையும் யோசுவா தோற்கடிக்க வேண்டும் என்பதே தேவனுடைய திட்டமாக இருந்தது. கானானில் உள்ள கிபியோன் என்ற நகரத்தின் தலைவர்கள், யோசுவாவை வெகு தொலைவில் இருந்து வருவது போல் காண்பித்து ஏமாற்றினர். தேவனுடைய வழிநடத்துதலை நாடாமல், யோசுவா கிபியோனியர்களுடன் உடன்படிக்கை செய்தான்.*[73] *இந்த முட்டாள்தனமான முடிவின் விளைவுகள் தாவீதின் ஆட்சியின்போது பல நூறு ஆண்டுகளுக்குப் பிறகு இஸ்ரவேலர்களுக்கு துன்பத்தை ஏற்ப டுத்தியது.*[74]

---

*[72] யோசுவா 3-4; யாத்திராகமம் 14-15 உடன் ஒப்பிடுக. குறிப்பாக யோசுவா 4:14ஐப் பார்க்கவும்.*

*[73] யோசுவா 9:1-27*

*[74] 2 சாமுவேல் 21:1-14*

உடன்படிக்கையின் உடனடி விளைவு என்னவென்றால், தெற்கிலிருந்து வந்த கானானிய ராஜாக்கள் கிபியோனைத் தாக்கினர். ஒப்பந்தத்தின் காரணமாக, இஸ்ரவேல் கிபியோனைக் காப்பாற்ற வந்தது. தேவன் இஸ்ரவேலின் சார்பாகப் போரிட்டார், மேலும் "சூரியன் அசையாமல் நின்ற" நாளில் தேவன் இஸ்ரவேலின் எதிரிகள் மீது வானத்திலிருந்து பெரிய கற்களை விழப்பண்ணினார். யோசுவா 10 ஆம் அதிகாரத்தில் அவருடைய ஜனங்கள் சார்பாக தேவனுடைய வல்லமை எனும் கருப்பொருள் மீண்டும் மீண்டும் வருகிறது: "கர்த்தர் அவர்களை மடங்கடித்தார்"; "கர்த்தர் பெரிய கற்களை விழப்பண்ணினார்"; "கர்த்தர் எமோரியரை ஒப்புக்கொடுத்தார்"; "கர்த்தர் இஸ்ரவேலுக்காகப் போரிட்டார்," முதலியன. கானானியர்கள் மீதான வெற்றி, இஸ்ரவேலின் பலத்தால் அல்ல, தேவனுடைய வல்லமையால்.

யோசுவா 11 வடக்கு கானான் மீதான வெற்றியை விவரிக்கிறது. யோசுவா 12 இன் முடிவில், ஏறக்குறைய ஏழு வருட வெற்றிக்குப் பிறகு கானானின்பெரும்பகுதியை இஸ்ரவேல் கட்டுப்படுத்துகிறது.

## கானான் தேசத்தில் குடியேறுதல்: யோசுவா 13-24

### தேசத்தைப் பங்கிடுதல் (யோசுவா 13-21)

இஸ்ரவேல் இப்போது தேசத்தின் மீது திறம்பட கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தாலும், பூர்வீக ஜனங்களால் எதிர்ப்புகள் இருந்தன. கானான் நிலப்பரப்பைக் கைப்பற்றும் பொறுப்பு தனித்தனி கோத்திரத்திற்கு வழங்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக, கோத்திரங்கள் இந்த பணியை நிறைவேற்றவில்லை என்று நியாயாதிபதிகள் காண்பிக்கிறது.

யோசுவா 14-19 வரையுள்ள அதிகாரங்கள், கோத்திரங்களுக்கு இடையே நிலத்தை பிரிப்பதை பதிவு செய்கிறது. இஸ்ரவேலின் வரலாற்றில் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தது ஆறு "அடைக்கலப் பட்டணங்கள்" ஏற்படுத்தப்பட்டதும் மற்றும் லேவியர்களுக்கு நாற்பத்தெட்டு பட்டணங்கள் ஒதுக்கப்பட்டதுமாகும். தற்செயலாக ஒருவரைக் கொன்றவருக்கு அடைக்

கலப்பட்டணங்கள் பாதுகாப்பு அளித்தன.[75] அடைக்கல பட்டணத்திற்கு தப்பி ஓடிய ஒரு நபர், அவர் கொன்ற நபரின் குடும்பத்தினரால் நியாயமற்ற பழிவாங்கலிலிருந்து பாதுகாக் கப்பட்டார். அதே சமயம், பிரதான ஆசாரியர் மரிக்கும் வரை கொலையாளி அடைக்கலப்பட்டணத்தில் இருக்க வேண்டியி ருந்தது என்பது மோசேயின் நியாயப்பிரமாணத்தில் உயிரின் உயர் மதிப்பைக் காட்டியது; ஒரு விபத்து மரணம் கூட தீவிரமாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

லேவியர்கள் தங்களுக்குச் சொந்தமான நிலச் சுதந்தரத்தைப் பெறவில்லை. மாறாக, இந்த கோத்திரம் நாடு முழுவதும் சிதறடிக்கப்பட்டது, அதனால் அவர்கள் எல்லா மக்களிடை யேயும் வாழ்ந்து, எல்லா இஸ்ரவேலருக்கும் ஆவிக்குரிய வழிகாட்டுதலை வழங்குவார்கள்.

*தேசத்தில் தேவனை சேவித்தல் (யோசுவா 22-24)*

இந்த பகுதி தேசத்தின் ஒற்றுமையை விளக்கும் கதையுடன் தொடங்குகிறது. இஸ்ரவேல் சுதந்திரமான கோத்திரங்களின் கூட்டமைப்பு அல்ல; அவர்கள் ஒரே தேவனுக்கு சேவை செய்யும் ஒரு தேசமாக இருந்தனர். யோசுவா 23 மற்றும் 24 அதிகாரங்கள் யோசுவாவின் இறுதி சவாலை ஜனங்களுக்குக் கொடுக்கிறது. உபாகமத்தில் மோசேயின் இறுதி உரைகளுக்கு நிகராக, யோசுவா இஸ்ரவேல் ஜனங்களை ஒரு உடன்படிக்கை புதுப்பித்தல் விழாவில் தேவனுக்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்த அழைப்பு விடுக்கிறார். 110 வயதில் யோசுவாவின் மரணத்துடன் புத்தகம் முடிவடைகிறது.

► ஒரு திருச்சபைத் தலைவராக, தலைமை மாற்றத்திற்கு உங்கள் திருச்சபையை எவ்வாறு ஆயத்தம் பண்ணலாம்? இந்த மாற்றத் திற்கான நடைமுறைப் படிகளைப் பற்றி விவாதிக்கவும்.

உபாகமத்தின் முடிவில், மோசே யோசுவா மீது கைகளை வைத்தது, அது தலைமைத்துவத்தை மாற்றுவதைக் குறிக்கிறது. யோசுவாவின் முடிவில், யோசுவாவிடமிருந்து மற்றொரு தலை வருக்கு தெளிவான இடமாற்றம் இல்லை. மாறாக, நியாயாதி பதிகளில் வரவிருக்கும் பிரச்சனைகளை சுட்டிக்காட்டும் ஒரு

[75] எண்ணாகமம் 35:9-15

சொற்றொடரில், யோசுவா பதிவு செய்கிறது, "யோசுவா உயிரோடிருந்த சகல நாட்களிலும், கர்த்தர் இஸ்ரவேலுக்குச் செய்த அவருடைய கிரியைகள் யாவையும் அறிந்து யோசுவாவுக்குப் பின்பு வெகுநாள் உயிரோடிருந்த மூப்பருடைய சகல நாட்களிலும், இஸ்ரவேலர் கர்த்தரைச் சேவித்தார்கள்.''[76] யோசுவாவின் மதிப்புகள் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படவில்லை என்பதை நியாயாதிபதிகளின் ஆரம்பம் காண்பிக்கிறதாய் இருக்கிறது.

| உபாகமம் | யோசுவா |
| --- | --- |
| உடன்படிக்கை புதுப்பித்தலுடன் முடிவடைகிறது *(29-32)* | உடன்படிக்கை புதுப்பித்தலுடன் முடிவடைகிறது *(23-24)* |
| ஒரு பெரிய தலைவரான மோசேயின் மரணத்துடன் முடிகிறது | ஒரு பெரிய தலைவரான யோசுவாவின் மரணத்துடன் முடிகிறது |
| தலைமையை மாற்றுவதற்கான ஏற்பாடுகள் | தலைமையை மாற்றுவதற்கான ஏற்பாடுகள் **இல்லை** |

## யேகோவா யுத்தத்தின் ஒரு துல்லியப் பார்வை

யாவே யுத்தம், அல்லது புனிதப் போர், உபாகமம் 20-ல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இந்த அதிகாரம் இஸ்ரவேல் யுத்தத்தை நடத்துவதற்கான வழிகாட்டுதல்களை வழங்குகிறது.

சமீப வருடங்களில், கானானியர்களை அழிப்பதற்கான தேவனுடைய கட்டளைகள் பற்றிய புதிய விவாதங்களுக்கு இரண்டு காரணிகள் வழிவகுத்தன. முதலாவதாக, சந்தேகம் கொண்டவர்கள் இந்த கட்டளையை சுட்டிக்காட்டி, யெகோவா ஒரு இரத்தவெறி கொண்ட தெய்வம் என்று வாதிடுகிறார்கள், அவர் கண்டனம் செய்யப்பட வேண்டும், வணங்கப்படக்கூடாது என்கிறார்கள். இரண்டாவதாக, ருவாண்டா, போஸ்னியா போன்ற இடங்களில் இஸ்லாமிய ஜிஹாத், படுகொலைகள்

---

[76] யோசுவா24:31

*மற்றும் இனப்படுகொலைகளின் எழுச்சி சில கிறிஸ்தவர்களை "யோசுவாவில் கட்டளையிடப்பட்ட புனிதப்போரும் இஸ்லாமிய ஜிஹாத்தும் ஒன்றா? இன்று அல்லாஹ்வின் பெயரால் நிகழ்த்தப்பட்ட அதே அட்டூழியத்திற்கு பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர்கள்தான் பொறுப்பளிகளா? என்று கேட்கிறார்கள்?"*

*இந்தக் கேள்வி ஒரு குறுகிய கணக்கெடுப்பின் எல்லைக்கு அப்பாற்பட்டது என்றாலும், யோசுவாவைப் படிக்கும்போது சில கொள்கைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.*[77]

1. **யேகோவாவின் யுத்தம் தேவனுடைய நீதியைப் பிரதிபலிக்கிறது**. *கானானியர்கள் (எல்லா ஜனங்களையும் போல) தேவனுடைய நியாயமான நியாயத்தீர்ப்புக்கு உட்பட்ட பாவிகள். ஆச்சரியம் என்னவென்றால், தேவன் கானானியர்களை அழித்தார் என்பது அல்ல, ஆனால் மற்ற மனித இனத்தை அவர் காப்பாற்றினார் என்று வாதிடலாம்.*[78]*எல்லா மனிதர்களும் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தகுதியானவர்கள்.*

   *கானானியர்கள் தேவனுடைய வல்லமையைக் கேள்விப்பட்டிருப்பதை இஸ்ரவேலரின் உளவாளிகளுக்கு ராகாப் அளித்த சாட்சி காட்டுகிறது.*[79]*இருப்பினும், ராகாபைத் தவிர, எந்த கானானியர்களும் மனந்திரும்பி தேவனிடம் திரும்பவில்லை. கானானியர்களின் மனந்திரும்புதல் தேவனுடைய கருணையைக் கொண்டு வந்திருக்கலாம் என்பது ராகாபைத் (மற்றும் பிற்கால தலைமுறையில், நினிவே) தப்புவிக்க தேவன் சித்தமுள்ளவராய் இருந்தார் என்பதில் இருந்து தெரிகிறது.*

---

[77]*இந்த பிரச்சனையைக் குறித்து மேலும் அறிய, பின்வரும் புத்தகங்களை வாசிக்கவும்:*

+ Stanley Gundry, *Show Them No Mercy: Four Views on God and Canaanite Genocide,* (Grand Rapids: Zondervan, 2003)

+Paul Copan, *Is God a Moral Monster?: Making Sense of the Old Testament God,* (Ada: Baker Books, 2011.)

[78] Daniel Gard in Stanley Gundry, *Show Them No Mercy: Four Views on God and Canaanite Genocide,* (Grand Rapids: Zondervan, 2003), 140.

[79]*யோசுவா 2:9-11.*

2. **யேகோவாவின் யுத்தம் பூமியின் மேல் தேவனுடைய இறையாண்மையைப் பிரதிபலிக்கிறது**. *வாக்களிக்கப் பட்ட தேசம் (அனைத்து பூமியையும் போல) தேவனுக்கு சொந்தமானது. தேவன் கானானியர்களிடமிருந்து தேசத்தை "எடுக்கவில்லை"; தேவனுடைய தேசமாக அது அவர் தேர்ந்தெடுத்தவருக்குக் கொடுக்க வேண்டிய தேசம். பண்டைய அண்மைக் கிழக்கில், அனைத்துப் யுத்தங்களும் புனிதப்போராக, தெய்வங்களுக்கு இடையேயான யுத்தமாகவே பார்க்கப்பட்டது.*[80] *எகிப்தின் மீது ஏற்பட்ட வாதைகளில், எகிப்தின் தெய்வங்களை விட யேகோவாதாமே பெரியவர் என்று நிரூபித்தார்; கானானிய பட்டணங்களை அழித்ததில், கானானியர்களின் தெய்வங்களை விட யேகோவா தன்னை பெரியவர் என்று நிரூபித்தார். கானானியர்களுக்கு எதிரான இஸ்ரவேலின் யுத்தம் கானானின் தெய்வங்களுக்கு எதிரான யுத்தமாகும். இஸ்ரவேலின் வெற்றி உலகம் முழுவதும் தேவனுடைய இறையாண்மையை நிரூபித்தது.*

3. **யேகோவாவின் யுத்தம் தேவனுடைய பரிசுத்தத்தைப் பிரதிபலிக்கிறது**. *ஒரு பரிசுத்த தேவன் கானானிய உருவ வழிபாட்டின் சீர்கேட்டிலிருந்து தம் ஜனங்களைப் பாதுகாக்க முயன்றார். இந்த பிரச்சினையின் தீவிரம் நியாயாதிபதிகளில் காணப்படுகிறது; தப்பிப்பிழைத்த கானானியர்களின் தெய்வங்களால் இஸ்ரவேல் விரைவில் ஈர்க்கப்பட்டது. கானானியர்களின் முழுமையான அழிவு மட்டுமே இஸ்ரவேலை விசுவாசதுரோகத்திலிருந்து பாதுகாக்கும். யோசுவாவின் புனிதப்போர் இஸ்ரவேலுக்கும் தேசங்களுக்கும் தேவனுடையபரிசுத்த இயல்பைக் கற்றுக் கொடுத்தது.*

---

[80] *அழியாமல் இருக்கும்பண்டைய அசீரியாவின் கலை, அசீரியாவின் எதிரிகளை எதிர்த்துப் போரிடுவதற்காக ராஜா மற்றும் அசீரியக் தெய்வமான அஷூர் வில் ஏந்துவதைக் காட்டுகிறது; அசீரிய மன்னரின் வெற்றி அஷூரின் வெற்றியாகக் கருதப்படுகிறது. மேலும், 1 சாமுவேல் 5:2-ஐப் பார்க்கவும், அங்கு பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலின் மீது பெற்ற வெற்றியை யெகோவாவின் மீது தாகோனின் வெற்றியாக விளக்குகிறார்கள்..*

4. ***யேகோவாவின் யுத்தம் தேவனுடைய அன்பைப் பிரதிபலிக்கிறது***. *ஆதியாகமம் 3:15 முதல் பழைய ஏற்பாட்டின் மற்ற பகுதிகளிலும், ஆபிரகாமின் வழியே மேசியாவை வருவதே தேவனுடைய நோக்கம். அனைத்து தேசங்களையும் ஆசீர்வதிப்பதற்காக ஆபிர காமும் அவனுடைய சந்ததியும் ஆசீர்வதிக்கப் பட்டுள்ளனர். இந்த நோக்கத்தை அடைய, தேவன் இஸ்ரவேல் தேசத்தை கானானிய உருவ வழிபாட்டின் சீர்கேட்டிலிருந்து பாதுகாக்க வேண்டும். கடினமாகத் தோன்றினாலும், கானானியர்களின் அழிவு எல்லா ஜனங்களுக்கும் தேவனுடைய அன்பான நோக்கத்தைப் பிரதிபலிக்கிறது.*

*யேகோவாவின் யுத்தம் சரித்திரத்தில் ஒரு தனித்துவமான நேரத்தில் வந்தது, இது நவீன கிறிஸ்தவர்களுக்கு ஒரு முன்மாதிரி அல்ல. இதைப் பயன்படுத்தி இன்று மதத்தின் பெயரால் நிகழ்த்தப்படும் நவீன அட்டூழியங்களை நியாயப் படுத்த முடியாது. மோசேயின் நியாயப்பிரமாணம் வாக்குப் பண்ணின தேசத்திற்கு வெளியே நடந்த யுத்தங்களுக்கும் தேசத்திற்குள் நடந்த யுத்தங்களுக்கும் இடையில் வேறுபாடு உள்ளது; கானானைக் கைப்பற்றிய நேரத்தில் இருந்த இஸ்ரவேலின் நிலையில் இன்று யாரும் இல்லை.*[81] *"நியாயப்பிரமாணத்தின் ஒரு துல்லியமான பார்வையில்" நாம் பார்த்தது போல், கிறிஸ்துவின் வருகையின் கண்ணாடி மூலம் யோசுவாவை நாம் வாசிக்க வேண்டும்.*

*இறுதியாக, சந்தேகவாதிகளுக்கு பதிலளிக்கும் விதமாக, இது இன அழிப்பு அல்ல என்பதை நாம் கவனிக்க வேண்டும்; அது உருவ வழிபாட்டுக்கு எதிரான மதப்போர். தேவனுக்கு "நடுநிலை" என்று ஏதும் இல்லை; ஒருவர் விசுவாசத்தில் தேவனிடம் திரும்புகிறார் அல்லது கலகத்தில் தேவனை நிராகரிக்கிறார். தேவனை நிராகரிப்பவர்கள் (பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டில்) அவருடைய இறுதி நியாயத் தீர்ப்பை எதிர்கொள்கின்றனர்.*

*இஸ்ரவேலின் பிற்கால வரலாற்றில், அது உருவ வழிபாட்டிற்கு மாறியது. பதிலுக்கு, தேவன் தனது சொந்த ஜனங்கள் மீது*

---

[81] *உபாகமம் 20:10-18*

*யுத்தத்தை அறிவித்தார்.*[82]*கானானியர்களுக்கு எதிரான யுத்தம் பயங்கரமானது; எனினும், அது இனப்படுகொலை அல்ல. யோசுவாவின் யுத்தம் நமக்கு எவ்வளவு சங்கடமாக இருந்தாலும், அது பாவத்தை மன்னிக்காத பரிசுத்தமான, நீதியான, அன்பான தேவனுடையபிரதிபலிப்பாகும்.*

## *நியாயாதிபதிகள்*

### *கருப்பொருள்: இஸ்ரவேலில் விசுவாசத் துரோகம்*

*கானானைக் கைப்பற்றுவதில் கோத்திரங்கள் ஒன்றுக்கொன்று ஒத்துழைப்பதிலிருந்து நியாயாதிபதிகள் தொடங்குகிறது; பென்யமீன் கோத்திரத்தின் ஒரு பயங்கரமான குற்றத்திற்குப் பிறகு கோத்திரங்களின் உள்நாட்டுப் போருடன் புத்தகம் முடிவடைகிறது. நியாயாதிபதிகள் தேவனுக்கு சேவை செய்யும் ஜனங்களுடன் தொடங்கி மத துரோகம் மற்றும் சமூக குழப்பத்தில் முடிகிறது.*

*இஸ்ரவேலின் வீழ்ச்சிக்கான காரணம் நியாயாதிபதிகள் 2:6-11 இல் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. யோசுவா புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்ட பெரிய வெற்றிகளுக்குப் பிறகு, யோசுவாவின் முடிவில் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்ட பிறகு, இஸ்ரவேல் எவ்வளவு விரைவாக விசுவாச துரோகத்திற்குள் விழுந்தது என்பதை நியாயாதிபதிகள் காட்டுகிறது. ஏழு முறை, "இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள்."*[83]

*இந்த சோகமான வீழ்ச்சிக்கு என்ன காரணம்? இந்த கேள்விக்கு நியாயாதிபதிகள் புத்தகம் இரண்டு அறிக்கைகளுடன் பதிலளிக்கிறது.*[84]*முதலில், "இஸ்ரவேலில் ராஜா இல்லை." மன்னராட்சியின் ஆரம்ப நாட்களில் நியாயாதிபதிகள் எழுதப்பட்டிருக்கலாம் மற்றும் தேசத்தை ஒருங்கிணைக்க ஒரு ராஜா தேவை என்பதைக் காட்டுகிறது. இரண்டாவதாக, ‘‘அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்துவந்தான்.’’ தேவனுக்கு உண்மையுள்ள கீழ்ப்படிதலில் ஒரு தேசம்*

---

[82]*உபாகமம் 28:25; புலம்பல் 2:5; ஆ மோஸ் 9:7-8 ஆகியவற்றைப் பார்க்கவும்.*

[83]*நியாயாதிபதிகள் 2:11; 3:7, 12; 4:1; 6:1; 10:6; 13:1*

[84]*நியாயாதிபதிகள் 17:6; 19:1; 21:25*

*ஒன்றுபடுவதற்குப் பதிலாக, ஒவ்வொரு மனிதனும் தன் சொந்த வழியைப் பின்பற்றினான்.*

*நியாயாதிபதிகளின் நோக்கம் இஸ்ரேலின் விசுவாச துரோகத்தின் முடிவுகளைக் காட்டுவதாகும். இஸ்ரவேலின் பாவத்தின் காரணமாக தேவன் இஸ்ரவேலை அதனுடைய எதிரிகளின் கைகளில் "விற்றுப்போட்டார்" என்று மீண்டும் மீண்டும் நியாயாதிபதிகள் காட்டுகிறது. உபாகமம் 27-28-ன் சாபங்கள் நியாயாதிபதிகளில் நிறைவேறுகின்றன.*

### ***எழுதியவர் மற்றும் எழுதப்பட்டக் காலம்***

*நியாயாதிபதிகளின் நிகழ்வுகள் தோராயமாக 1380-1050 வரையிலுள்ளஆண்டுகளைஉள்ளடக்கியது. யூத பாரம்பரியம் சாமுவேலை எழுத்தாளராக அடையாளப்படுத்தினாலும், புத்தகத்திலேயே அடையாளம் காணப்பட்ட எழுத்தாளர் இல்லை. தாவீது எருசலேமை எபூசியர்களிடம் இருந்து கைப்பற்றுவதற்கு முன், மன்னராட்சியின் ஆரம்ப நாட்களில் எழுதப்பட்டிருக்கலாம்.*[85]

### ***நியாயாதிபதிஎன்றால் என்ன?***

*இன்று நாம் ஒரு நீதிபதி என்று நினைப்பது போல் "நியாயாதிபதி" ஒரு சட்ட அதிகாரி அல்ல. நியாயாதிபதி ஒரு ராஜாவைப் போன்ற அரசியல் அதிகாரி அல்லது ஒரு பாதிரியார் போன்ற மத அதிகாரி அல்ல. நியாயாதிபதிகள் தனது ஜனங்களை அடக்குமுறையிலிருந்து விடுவிக்க தேவனால் ஈவாக அளிக்கப்பட்ட இராணுவத் தலைவர்கள். நியாயாதி பதிகள் தனிப்பட்ட கோத்திரங்களை ஆளுகிறார்கள், முழு தேசத்தையும் அல்ல. ஒரு கோத்திரம் அல்லது கோத்திரங்களின் குழுவில் ஒரு நியாயாதிபதி தீர்ப்பளிப்பதன் மூலம் ஒருவரின் காலத்தில் மற்றொரு நியாயாதிபதி மற்றொரு கோத்திரத்தை அல்லது கோத்திரங்களின் குழுவை ஆளுகிறார்.*

### ***நியாயாதிபதிகள் புத்தகத்தின் கண்ணோட்டம்***

#### ***இஸ்ரவேலினுடைய விசுவாசத் துரோகத்தின் காரணங்கள் (நியாயாதிபதிகள் 1:1 – 3:6)***

---

[85] *நியாயாதிபதிகள் 1:21*

*நியாயாதிபதிகளின் காலத்தில், கானானியர்கள் கடலோரப் பகுதிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது, இஸ்ரவேலின் கோத்திரங்கள் மலைநாட்டைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டிருந்தனர்; யோசுவாவின் கீழ் தொடங்கிய வெற்றியை இஸ்ரேல் முடிக்கத்தவறியது. முழுமையற்ற வெற்றிக்கு நியாயாதிபதிகள் இரண்டு காரணங்களைக் கூறுகிறது. நியாயாதிபதிகள் 1:19 ஒரு மனித காரணத்தைக் காட்டுகிறது; யூதா "பள்ளத்தாக்கின் குடிகளுக்கு இருப்புரதங்கள் இருந்தபடியினால், அவர்களைத் துரத்தக்கூடாமற்போயிற்று." மனித கண்ணோட்டத்தில், கானானியர்கள் யூதாவைவிட மிகவும் வலிமையானவர்கள்.*

*இருப்பினும், "தேவன் கானானியர்களின் இருப்புரதங்களை விட வலிமையானவர் அல்லவா?" என்று நாம் கேட்கலாம். நீதிபதிகள் 2-ஆம் அதிகாரம் முழுமையற்ற வெற்றிக்கான ஆழமான காரணத்தை வெளிப்படுத்துகிறது. வெற்றியின் நாட்களில் கூட, இஸ்ரவேல் தேவனுக்கு முழுமையாகக் கீழ்ப்படியத் தவறிவிட்டது. "உங்கள் பக்கங்களில் முட்கள் போல" இருக்க தேசத்தில் சில குடிகளை விட்டுவைத்த, இவ்விதமாக இஸ்ரவேலை சோதித்து, தேவன் அவர்கள் கீழ்ப்படியாமைக்காக நியாயந்தீர்த்தார்.*[86]

## ***விசுவாச துரோகம் மற்றும் விடுதலையின் சுழற்சிகள் (நியாயாதிபதிகள் 3:7 – 16:31)***

*இந்த அதிகாரங்கள் துரோகம் மற்றும் விடுதலையின் ஆறு சுழற்சிகளை விவரிக்கின்றன. இந்த சுழற்சிமுறை நியாயாதிபதிகள் 2-இல் அறிமுகப்படுத்தப்பட்டது, பின்னர் நியாயாதிபதிகளின் வாழ்க்கையில் விளக்கப்பட்டுள்ளது ஆறு முறை:*


- *இஸ்ரவேல் புத்திரர் "கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள்."*
- *கர்த்தர் "அவர்களை அவர்களுடைய சத்துருக்களின் கைகளில் ஒப்புக்கொடுத்தார்."*
- *அவர்கள் "மிகவும் துக்கமடைந்து" தேவனிடம் முறையிட்டார்கள்.*

---

*[86] நியாயாதிபதிகள் 2:1-3, 20-23; 3:1-4*

* *கர்த்தர் ஒரு நியாயாதிபதியை எழுப்பி, "அவர்களுடைய சத்துருக்களின் கையிலிருந்து அவர்களை விடுவித்தார்."*[87]

*நியாயாதிபதிகளின் தரத்தில் நிலையான சரிவை நியாயாதிபதிகள் காட்டுகிறார்கள். முதல் நியாயாதிபதி ஒத்னியேலைப் பற்றி எதிர்மறையாக எதுவும் கூறப்படவில்லை. "கர்த்தருடைய ஆவி அவன்மேல் வந்தது" மேலும் அவன் இஸ்ரவேலை*




*விடுவிக்க தேவனால் பயன்படுத்தப்பட்டான்.*[88] *இருப்பினும், அடுத்தடுத்த நியாயாதிபதிகள் ஒத்னியேலின் விளக்கத்தை அளவிடத் தவறிவிட்டனர்.*

*ஏகூத் தந்திரத்தின் மூலம் வெற்றி பெறுகிறார்.*[89] *தெபோராள் ஒரு உண்மையுள்ள தலைவவி, ஆனால் அவளது வெற்றிப் பாடல் போட்டிப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட ஒரு தேசத்தை வெளிப் படுத்துகிறது.*[90]

*தேவனை நம்புவதில் கிதியோன் தாமதமாக செயல்படுகிறார், தேவனுடைய அழைப்பை உறுதிப்படுத்த மூன்று அற்புதங்கள்*

---

[87] *நியாயாதிபதிகள் 2:11-18*
[88] *நியாயாதிபதிகள் 3:9-11*
[89] *நியாயாதிபதிகள் 3:12-30*
[90] *நியாயாதிபதிகள் 4-5*

*தேவைப்படுகின்றன. பிற்பாடு அவர் இஸ்ரவேலை பொய்யான வழிபாட்டுக்கு வழிநடத்தினான்.*[91]

*முந்தைய நியாயாதிபதிகள் போலல்லாமல், தேவன் யெப்தாவை "எழுப்பினதற்கு" எந்த குறிப்பும் இல்லை. மாறாக, கீலேயாத்தை வழிநடத்த ஜனங்கள் அவனைத் தேர்ந்தெடுக்கிறார்கள். யெப்தா தேவனை ஒரு சிறுதெய்வமாகப் பார்க்கிறான், அவருடன் பேரம் பேச முடியும், மேலும் தேவனுடைய தயவைப் பெற முட்டாள்தனமான பொருத்தனையைச் செய்கிறான்.*[92]

*நியாயாதிபதிகளில் கடைசியான சிம்சோன், ஒரு தலைவருக்கான தேவனுடைய இலட்சியத்தின் வெறும் நிழல். அவன் தனது நசரேய சபதங்களை மீறுகிறான் மற்றும் கானானியர்களுடன் ஒழுக்கக்கேடான தொடர்புகளில் குற்றவாளியாகிறான். இறுதியில், சிம்சோன் வாழ்க்கையில் வென்றதை விட மரணத்தில் வெற்றி பெற்றான்.*[93]

*தேவன் தம் ஜனங்களை விடுவிக்க நியாயாதிபதிகளைப் பயன்படுத்தினார். இருப்பினும், நியாயாதிபதிகளின் சுருக்கப் பார்வை ஆவிக்குரிய துரோகம், தார்மீகச்சீர்கேடு மற்றும் சமூக குழப்பத்தில் தேசத்தின் நிலையான வீழ்ச்சியைக் காட்டுகிறது.*

## *இஸ்ரவேல் சமூகத்தின் சரிவு (நியாயாதிபதிகள்17 – 21)*

*நியாயாதிபதிகள் இஸ்ரவேலின் சமூகத்தின் சரிவைக் காட்டும் இரண்டு கதைகளுடன் முடிகிறது. தாண் கோத்திரம் மீகாவின் சிலையையும் அவனது ஆசாரியனயும் எடுத்துக் கொண்ட கதை மத வாழ்க்கையின் சீர்கேட்டைக் காட்டுகிறது.*[94] *கானானியர்கள் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் கொண்டுவந்த சிலை வழிபாட்டின் குற்றவாளியாக இஸ்ரேல் இப்போது உள்ளது. ஏன் இத்தகைய ஆவிக்குரியச் சீர்கேடு ஏற்பட்டது?*

---

[91] *நியாயாதிபதிகள் 6-8; குறிப்பாக 8:22-27*
[92] *நியாயாதிபதிகள் 11:1-40*
[93] *நியாயாதிபதிகள் 13-16*
[94] *நியாயாதிபதிகள் 17-18*

*"அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை, அவனவன் தன் தன்பார்வைக்குச் சரிப்போனபடிசெய்துவந்தான்."*[95]

சோதோம் மற்றும் கொமோராவின் கதையைப் போலவே லேவியரின் மறுமனையாட்டியின் கற்பழிப்பு மற்றும் கொலை பாதகத்தின் கொடூரமான கதை. கானானியர்கள் செய்த அதே பாலியல் பாவங்கள் மற்றும் வன்முறைகளில் இஸ்ரவேல் குற்றவாளியானது. பென்யமீனியர்களின் குற்றத்திற்குப் பதிலடியாக, இஸ்ரவேல் உள்நாட்டுப் போரில் நுழைந்தது. ஏன் இத்தகைய தார்மீக மற்றும் சமூக சீர்கேடு ஏற்பட்டது? *"அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை, அவனவன் தன் தன்பார்வைக்குச் சரிப்போனபடி செய்து வந்தான்."*[96]

## ரூத்

### கருப்பொருள்: விசுவாசத் துரோகத்தின் காலத்தில் விசுவாசம்

பழைய ஏற்பாட்டு சரித்திரத்தில் ரூத் புத்தகத்தின் முக்கியத்துவத்தை இரண்டு சொற்றொடர்கள் காட்டுகின்றன. முதலில், ரூத்தின் கதை நடந்தது *"நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துவரும் நாட்களில்."*[97] மதத் துரோகம் நிறைந்த காலத்தில், தேவனுக்கு உண்மையாக இருந்த ஒரு இளம் பெண் இருந்தாள் என்பதை இது காட்டுகிறது. ஆச்சரியப்படும் விதமாக, நல்லொழுக்கத்தின் மாதிரியான இப்பெண் ஒரு மோவாபியராக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இஸ்ரவேல் ஜனங்கள் நியாயாதிபதிகளின் முடிவில் காணப் பட்ட குழப்பத்தில் இறங்கிக்கொண்டிருந்தபோது, ஒரு மோவாபிய பெண் யேகோவாவுக்கு உண்மையாக இருந்தாள்.

இரண்டாவதாக, போவாசுக்கும் ரூத்துக்கும் ஒரு குமாரன் பிறந்தான்: *"அவனுக்கு ஓபேத் என்று பேரிட்டார்கள்; அவன் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பன்."*[98] தாவீதின் கொள்ளுப் பாட்டியாக, ரூத் இஸ்ரவேலின் தேசிய வரலாற்றில் மிகவும் முக்கியமானவள்.

---

[95] நியாயாதிபதிகள் 17:6
[96] நியாயாதிபதிகள் 21:25
[97] ரூத் 1:1
[98] ரூத் 4:17

## *காட்சி 1: நகோமியும் ரூத்தும் பெத்லகேமுக்குத் திரும்பி வருதல் (ரூத் 1)*

*ரூத்தின் புத்தகம் ஒரு சிறுகதையின் வடிவத்தை எடுத்துக் கொள்கிறது, அதில் கதாபாத்திரங்களும் அமைப்புகளும் ஒரு சுருக்கமான பத்தியில் நிறுவப்பட்டுள்ளன. அமைப்பு: "நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துவரும் காலம்." இடங்கள்: பெத்லகேம் மற்றும் மோவாப். முக்கிய கதாபாத்திரங்கள்: சாதாரண இஸ்ரவேலர்கள் மற்றும் மோவாபியர்கள்.*

*யூதாவில் ஏற்பட்ட பஞ்சத்தில் இருந்து தப்பிக்க எலிமெலேக்கும் அவனது குடும்பமும் மோவாபிற்குச் செல்கிறார்கள். அவர்கள் பத்து வருடங்கள் அங்கே இருக்கிறார்கள். அந்த சமயத்தில் எலிமெலேக்கின் மகன்கள் இருவரும் மோவாபிய பெண்களை திருமணம் செய்து கொள்கிறார்கள். மூன்று பேரும் மோவாபில் இறந்துவிட, நவோமி தனியாக பெத்லகேமுக்குத் திரும்பத் தயாராகிறாள்.*

*விதவைகளில் ஒருவரான ஓர்பாள் மோவாபிலே இருக்கிறாள். மற்ற விதவையான ரூத், தன் மாமியாருடன் பெத்லகேமுக்குத் திரும்ப வேண்டும் என்று விரும்பி வருந்தி கேட்கிறாள். காலங்கடந்த சமர்ப்பணத்தோடு, ரூத் நவோமியுடன் தன் மரணம்வரை வாழப்போவதாகவும், இஸ்ரவேலின் தேவனுக்குச் சேவை செய்வதாகவும் உறுதியளிக்கிறாள்.*

*இரண்டு பெண்களும் பெத்லகேமுக்குத் திரும்புகிறார்கள், ஆனால் நவோமி மிகவும் கஷ்டப்பட்டதால், தன்னை நவோமி ("இனிமை") என்று அழைக்காமல் மாரா ("கசப்பு") என்று அழைக்குமாறு பட்டணத்து ஜனங்களைக் கேட்கிறாள்.*

## *காட்சி 2: ரூத்துக்கும் போவாஸுக்கும் இடையிலான சந்திப்பு (ரூத் 2)*

*அறுவடையில் மீதியானதை சேகரிக்கும் பிரமாணத்தின் காரணமாக,[99] ரூத் நவோமிக்கும் தனக்கும் உணவு சேகரிக்க முடிகிறது. அவள் இறந்துபோன மாமனார் எலிமெலேக்கின்*

[99] லேவியராகமம் *19:9; 23:22*

உறவினனான போவாஸின் வயலில் இறங்குவது தற்செயலாக "நிகழ்கிறது". போவாஸ் ஒரு செல்வந்தனாக இருந்தான்.

ரூத் தன் வயலில் வேலை செய்வதைப் பார்த்த போவாஸ், அவளைப் பாதுகாக்கவும் அவளுக்கு கூடுதல் கதிர்களை வழங்கவும் ஏற்பாடு செய்கிறான். போவாஸுக்கும் ரூத்துக்கும் இடையிலான சந்திப்பு தற்செயலானதாக தோன்றினாலும், நவோமி தேவனுடைய வழிநடத்துதலை அங்கீகரிக்கிறாள்.[100] பார்லி மற்றும் கோதுமை அறுவடையின் போது போவாஸின் வயலில் தங்கும்படி ரூத்திடம் அவள் கூறுகிறாள்.

## காட்சி 3: ரூத் போவாஸை திருமணம் செய்ய விருப்பம் தெரிவிக்கிறாள் (ரூத் 3)

எலிமெலேக்கின் நெருங்கிய உறவினராக, போவாஸ் "உறவினன்-மீட்பாளர்" நிலையில் நிற்கிறார், பழைய ஏற்பாட்டுத் திருமணத்தின் பாரம்பரியத்தை நிறைவேற்றுகிறார்.[101] இஸ்ரவேலில், அனைத்து நிலமும் வெற்றிக்குப் பிறகு கொடுக்கப்பட்ட குடும்பத்தில் இருக்க வேண்டும். கடினமான காலங்களில் ஒரு குடும்பம் சொத்தை விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், அந்தச் சொத்தை மீட்டு அசல் குடும்பத்திற்கு மீட்டெடுக்க உறவினன்-மீட்பாளர் பொறுப்பு ஏற்பார். போவாஸ் இந்தக் கடமையை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையில், நவோமி ஒரு திட்டத்தை வகுத்தார், அதன் மூலம் ரூத் போவாஸுடன் திருமணத்தை முன்மொழிந்தார்.

போவாஸின் களத்தில் ஒரு சடங்கு நடவடிக்கையின் வேளையில், ரூத் போவாஸை திருமணம் செய்ய முன்மொழிந்தார். ரூத்தின் வேண்டுகோளுக்கு அவர் மகிழ்ச்சியுடன் பதிலளித்தார், இருப்பினும் அவர் மற்றொரு உறவினர் தன்னை விட நெருக்கமானவர் என்று ஒப்புக்கொண்டார். இந்த உறவினருக்கு நவோமியின் சுதந்தரத்தை மீட்டுக்கொள்ள ஒரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

---

[100] ரூத் 2:20

[101] சகோதரனின் விதவையை மணம் புரியும் வழக்கம் என்பது முதல் கணவரின் பெயர் மற்றும் வாரிசுரிமையை எடுத்துச் செல்லும் நோக்கத்திற்காக மரித்துப்போன ஆணின் விதவைக்கு அருகிலுள்ள உறவினரால் செய்துகொள்ளப்படும் திருமணம் ஆகும். ரூத் 4:6 இல் உள்ள பெயரிடப்படாத உறவினர் ரூத்தை திருமணம் செய்ய விரும்பவில்லை, ஏனெனில் அது அவருடைய சொந்த வாரிசு உரிமைகளை சேதப்படுத்தும்.

### *காட்சி 4: போவாஸ் ரூத்தின் உறவினன்-மீட்பாளராக செயல்படுதல் (ரூத் 4)*

*மறுநாள் காலை, போவாஸ் வியாபாரம் நடக்கும் நகர வாயிலுக்குச் சென்றார். நெருங்கிய உறவினர் கடந்து சென்ற போது, எலிமெலேக்கிற்கு சொந்தமான நிலத்தை வாங்குவதற்கான வாய்ப்பை போவாஸ் அவரிடம் கூறினார். பெயர் அறியப்படாத இந்த உறவினர் சொத்தை மீட்டெடுக்க விரும்புகிறார். இருப்பினும், மீட்பின் ஒரு பகுதியாக ரூத்தை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று போவாஸ் அவரிடம் கூறும்போது, அந்த உறவினர் தனது சொந்த சுதந்தரத்தை "தியாகம்" செய்ய விரும்பவில்லை. அவர் ரூத்தை திருமணம் செய்து கொண்டால், அவர்களின் குழந்தைகள் ரூத்தின் முதல் கணவரின் பெயரையும் சொத்துரிமையையும் பெறுவார்கள். இது அவரது சொந்த சொத்துக்கு பதகமாக அமையும்;, அவரது குழந்தைகளின் சந்ததியைப் பாதிக்கும். அவரது சொத்துக்களைப் பாதுகாக்க, உறவினர் கிடைத்த வாய்ப்பை நிராகரிக்கிறார்.*

*இது போவாஸுக்கும் ரூத்துக்கும் திருமணம் செய்துகொள்வதற்கான வழியைத் தெளிவுபடுத்துகிறது. தேவன் அவர்களுக்கு ஒரு மகனைக் கொடுக்கிறார், புத்தகத்தின் முடிவில் நவோமிமையப் பாத்திரமாகிறார். அவள் இரண்டு மகன்களை இழந்திருந்தாள்; இப்போது அவள் ரூத் மற்றும் போவாஸின் மகனைத் தன் கைகளில் வைத்திருக்கிறாள்.*

*எஸ்தரைப் போலவே, கடினமான சூழ்நிலையில் உண்மையுள்ள ஒரு பெண்ணைக் குறிப்பிடும் மற்றொரு சிறுகதை, ரூத் புத்தகம். இப்புத்தகம் தற்செயலாக நிகழ்ந்த சம்பவம் போலத் தோன்றும் தேவனுடைய இறையாண்மையைக் காட்டுகிறது. ரூத் தாவீதின் கொள்ளுப்பாட்டியாகவும், இறுதியில் இயேசு கிறிஸ்துவின் மூதாதையராகவும் மாறுகிறாள்.*

## *முடிவுரை*

### *புதிய ஏற்பாட்டில் யோசுவா – ரூத்*

*இயேசு என்பது யோசுவா என்ற எபிரேய பெயரின் புதிய ஏற்பாட்டு கிரேக்க வடிவம் ஆகும். யோசுவா தேவனுடைய*

ஜனங்களை எகிப்திலிருந்து கானானுக்கு அழைத்துச் சென்றது போல், இயேசு தேவனுடைய ஜனங்களை அடிமைத் தனத்திலிருந்து இளைப்பாறுதலுக்கு அழைத்துச் செல்கிறார்.[102]

இஸ்ரவேலின் சமுதாயம் வீழ்ச்சியடைந்தபோதிலும், சில நியாயாதிபதிகள் எபிரேயர் 11 இல் விசுவாசத்தின் உதாரணங் களாகக் காணப்படுகின்றனர். கிதியோன், பராக், யெப்தா மற்றும் சிம்சோன் கூட தேவன் மீது விசுவாசம் கொண்டதற்காக மதிக்கப்படுகிறார்கள். இந்த மனிதர்கள் எப்போதும் தங்கள் திறமைக்கு ஏற்றவாறு வாழவில்லை என்றாலும், தேவன் தம்முடைய நோக்கங்களை நிறைவேற்ற அவர்கள் மூலம் கிரியைச் செய்தார்.

இயேசுவின் வம்சவரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு பெண்களில் ரூத்தும் ஒருவர்.[103] இந்த மோவாபிய விதவையின் விசுவாசம் அவளுக்கு மேசியாவின் வம்சாவளியில் ஒரு இடத்தைப் பெற்றுத் தந்துள்ளது. ரூத் மற்றும் மரியாளின் கதைகளுக்கு இடையே பல ஒற்றுமைகள் உள்ளன. இரண்டு பேருமே பெத்லகேமில் பிறந்தவர்கள். இருவரும் தேவனுக்கு விசுவாசமுள்ள அதேசமயம் கௌரவக்குறைச்சலுடன் வாழ்ந்த வர்கள் (ரூத் மோவாபிய பெண் மற்றும் மரியாள் திருமண மாகாமலே கர்ப்பமாக இருநத பெண்). தேவன் தனக்கு உண்மையாக இருப்பவர்களை ஆசீர்வதிக்கிறார் என்பதை இந்த இரண்டு கதைகளும் காட்டுகின்றன.

இந்த புத்தகங்கள் உபாகமத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட விதைப்பு மற்றும் அறுவடையின் கொள்கைகளை நிரூபிக்கி ன்றன. யோசுவாவும் ரூத்தும் உண்மையுள்ளவர்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதம் கிடைப்பதைக் கூறுகின்றன. கீழ்ப்ப டியாதவர்கள் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பை நியாயாதி பதிகள் காட்டுகிறது.

### யோசுவா – ரூத் இன்றும் பேசுகிறது

இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் இடையே ஏற்பட்ட மோதல் களால் பிளவுபட்ட நாடுகளில், புனிதப் போரின் பிரச்சி னையைத் திருச்சபை தொடர்ந்து எதிர்கொள்கிறது. அந்த

---

[102] எபிரெயர் 4:1-11
[103] மத்தேயு 1:5

*நாடுகளில் உள்ள கிறிஸ்தவர்கள் இன்றைய மோதல்களின் வெளிச்சத்தில் "யேகோவா யுத்தத்தின் ஒரு துல்லியமான பார்வை" எனும் கருத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள கொள்கைகளை கவனமாக படிக்க வேண்டும்.*

*பரந்த அளவில், யோசுவா, ரூத் மற்றும் நியாயாதிபதிகளின் காலத்து ஜனங்கள் எதிர்கொண்ட விசுவாசம் மற்றும் துரோகத்தின் பிரச்சினைகளை இன்றும் கிறிஸ்தவர்கள் எதிர் கொள்கிறார்கள். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர் மேல் தேவனுடைய நேரடி ஆளுகையில் அவருடைய பதில் செயல்கள் உடனடியாகவும் தற்காலிக தீர்வாகவும் இருந்தன. இன்று, நாம் இனி அப்படிப்பட்டதோர் இறையாட்சியில் வாழாதபோது, பழைய ஏற்பட்டு தேவசெயல்களை நாம் காணமுடியாமல் இருக்கலாம். அதற்காக, இன்று துரோகம் நியாயந்தீர்க்கப்படவில்லை அல்லது உண்மைத்தன்மைக்கு வெகுமதி அளிக்கப்படாது என்று பொருளாகாது. யோசுவா மற்றும் ரூத்தின் மாதிரிகள் மற்றும் சிம்சோனின் எதிர்ம றையான உதாரணம் போன்றவை, தேவன் தமக்கு உண்மை யுள்ள ஜனங்களைத் தொடர்ந்து தேடுகிறார் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.*

### ***பாடம் 4 வீட்டுப் பாடங்கள்***

*இந்தப்பாடத்தைப் பற்றிய உங்கள் புரிதலை பின்வரும் வீட்டுப்பாடத்தின் மூலம் நிரூபிக்கவும்:*

(1) *பின்வரும் வீட்டுப்பாடங்களில்* ***ஒன்றைத்*** *தேர்ந்தெடுக்கவும்:*

*விருப்பம் 1: குழு வீட்டுப்பாடம்*

*பின்வரும் ஒவ்வொரு நியாயாதிபதிகளையும் படிக்க ஒரு நபரை நியமிக்கவும்: கிதியோன், தெபோராள், யெப்தா மற்றும் சிம்சோன். ஒவ்வொரு நியாயாதிபதியின் பலம் மற்றும் பலவீனங்களைப் பற்றி விவாதிக்கவும்.*

*விருப்பம் **2**: தனி வீட்டுப் பாடம்.*

*நியாயாதிபதிகளில் ஒருவரின் வாழ்க்கையைப் பற்றி ஒரு பிரசங்கத்தை எழுதுங்கள். தேவன் தனது நோக்கங்களை*

அடைய நியாயாதிபதி மூலம் எவ்வாறு செயல்பட்டார் என்பதைக் காண்பியுங்கள்.

(2) இந்த பாடத்தில் ஒரு தேர்வை எழுதவேண்டும். தேர்வில் மனப்பாடம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட வேதவசனங் களும் உள்ளடங்கும்.

## பாடம் 4 தேர்வு

(1) எபிரேய வேதாகமத்தில் உள்ள சரித்திரப் புத்தகங்களின் பெயர் என்ன?

(2) "இறையாட்சி" என்னும் சொல்லின் வரையறையைத் தருக.

(3) ஒவ்வொரு புத்தகத்திற்கும் கருப்பொருளைப் பட்டியலிடுக.

(4) யோசுவாவின் இரண்டு முக்கிய பிரிவுகளைப்பட்டியலிடுக.

(5) யோசுவா புத்தகத்தின் முக்கிய நோக்கம் என்ன?

(6) அடைக்கலப் பட்டணங்களின் நோக்கம் என்ன?

(7) யோசுவா புத்தகத்தில் யாவேயின் யுத்தத்தைப் படிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய நான்கு கோட்பாடுகளைப் பட்டியலிடுக.

(8) நியாயாதிபதிகள் புத்தகத்தின் முக்கிய நோக்கம் என்ன?

(9) நியாயாதிபதிகளில் விசுவாசத்துரோகம் மற்றும் விடுதலை யின் சுழற்சியின் நான்கு படிகள் யாவை?

(10) "சகோதரனின் விதவையை மணம் புரியும் வழக்கம்" என்ப தன் வரையறையைத் தருக.

(11) யோசுவா 1:8-9 வரையிலுள்ள வசனங்களை நினைவி லிருந்து எழுதுக.

# பாடம் 5
# சாமுவேல் - நாளாகமம்
# இஸ்ரவேலின் மன்னராட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும்

## பாடத்தின் நோக்கங்கள்

*இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:*

(1) *சாமுவேல், ராஜாக்கள் மற்றும் நாளாகமம் ஆகியவற்றின் முதன்மைக் கருப்பொருள்களை கோடிட்டுக் காட்ட முடியும்.*

(2) *இஸ்ரவேலின் சரித்திரத்தில் மிக முக்கியமான ராஜாக்களை அறிந்துகொள்ளுதல்.*

(3) *ராஜாக்கள் மற்றும் நாளாகமம் இடையே உள்ள சமானஉறவை அறிந்துகொள்ளுதல்.*

(4) *இஸ்ரவேலின் சரித்திரத்தில் டியூட்ரோனோமிக் இறையியலின் நிறைவேற்றத்தைப் புரிந்து கொள்ளுதல்.*

(5) *நாளாகமத்தில் காணப்படும் நம்பிக்கையின் செய்தியைப் பாராட்டுதல்.*

(6) *சாமுவேல், ராஜாக்கள் மற்றும் நாளாகமங்களின் செய்தியை இன்றைய உலகின் தேவைகளுடன் தொடர்புபடுத்துதல்.*

## இந்த பாடத்திற்கான ஆயத்தம்

*1 & 2 சாமுவேல், 1 & 2 ராஜாக்கள் மற்றும் 1 & 2 நாளாகமம் ஆகியவற்றை வாசியுங்ங்கள்.*

*1 இராஜாக்கள் 9:4-7 மற்றும் 2 நாளாகமம் 7:13-14 ஆகியவற்றை மனப்பாடம் செய்யுங்கள்.*

## முன்னுரை

*சாமுவேல் மற்றும் ராஜாக்களின் புத்தகங்கள் இஸ்ரவேலில் மன்னராட்சியின் வரலாற்றைக் குறிப்பிடுகின்றன. 1சாமுவேல் புத்தகம் மன்னராட்சியின் ஆரம்பம், சவுலின் அரசாட்சி பற்றி கூறுகிறது. 2சாமுவேல் புத்தகம் தாவீதின் அரசாட்சியின் வரலாற்றைக் குறிப்பிடுகிறது. 1 மற்றும் 2 ராஜாக்களில், பொல்*

லாத ராஜாக்கள் இஸ்ரவேலையும் யூதாவையும் விசுவாச துரோகத்திற்கு இட்டுச் செல்கிறதைக் காண்கிறோம். மறு மொழியாக, உபாகமம் 27-28இல் வாக்குறுதியளிக்கப்பட்ட நியாயத்தீர்ப்புகள் தேசத்தின் மீது ஊற்றப்படுகின்றன. 2ராஜாக் களின் முடிவில், வடக்கு ராஜ்யம் அழிக்கப்பட்டு, தெற்கு ராஜ்யமான யூதா பாபிலோனுக்கு நாடுகடத்தப்படுகிறது.

நாளாகமம் வரலாற்றின் அதே காலகட்டத்தை வெவ்வேறு கண்ணோட்டத்தில் பார்க்கிறது. நாடுகடத்தலில் இருந்து திரும்பிய பிறகு எழுதப்பட்ட, நாளாகமம் இரட்சிப்பின் வரலாற்று கண்ணோட்டத்தில் இஸ்ரவேலின் வரலாற்றைப் பார்க்கிறது மற்றும் அவரது ஜனங்களுக்கான தேவனுடைய தொடர்ச்சியான நோக்கத்தைப் பார்க்கிறது. எதிர்காலத்திற்கான நம்பிக்கை இருக்கிறது என்று நாளாகமம் தேவனுடைய ஜனங்களுக்கு உறுதியளிக்கிறது. தேவன் தம் ஜனங்களுடன் செய்த உடன்படிக்கையைமறக்கவில்லை.

► இஸ்ரவேலர் ராஜாவைக் கேட்டது தவறா? உங்கள் விவாதத்தில், 1 சாமுவேல் 8:6-22 மற்றும் உபாகமம் 17:14-20 ஆகிய இரண்டையும் கருத்தில் கொள்ளுங்கள்.

## *1 சாமுவேல்*

### *கருப்பொருள்: இஸ்ரவேலில் மன்னராட்சியின் ஆரம்பம்*

1 சாமுவேல் புத்தகம் இஸ்ரவேலின் வரலாறு கடைசி நியாயாதிபதியான சாமுவேலிலிருந்து இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுலுக்கு மாறியதைக் குறிப்பிடுகிறது. கி.மு. 1100-1011 வரையிலுள்ள ஆண்டுகளை உள்ளடக்கியது, 1 சாமுவேல் மன்னராட்சியின் ஆரம்ப நாட்களைக் காட்டுகிறது. நியாயா திபதிகள் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலம் தேவன் நேரடியாகப் பேசிய இறையாட்சிக்கு பதிலாக, இஸ்ரவேல் இப்போது ஒரு ராஜாவால் ஆளப்படும். தீர்க்கதரிசனமாக, மோசே இஸ்ரவேலர் தேட வேண்டிய ராஜாவை விவரித்தார். இருப்பினும், சவுலும் அவனுடைய வாரிசுகளும் ஒரு ராஜாவுக்கான தேவனுடைய திட்டத்திலிருந்து வெகு தொலைவில் இருந்தனர். 1 சாமுவேல் புத்தகம் முதல் ராஜாவுக்காக தேவனின் வாக்குறுதியையும், தேவனின் அபிஷேகம் செய்யப்பட்டவராக ராஜா தனது தகுதியை இழந்ததையும் காட்டுகிறது.

## *1 சாமுவேல் புத்தகத்தின் கண்ணோட்டம்*

### *மன்னராட்சிக்கான மாற்றம் (1 சாமுவேல் 1–15)*

*நியாயாதிபதிகளின் ஆட்சியிலிருந்து மன்னராட்சிக்கு மாறுவது சாமுவேலின் கதையுடன் தொடங்குகிறது. ஒரு தேவபக்தியுள்ள தாய் அன்னாளின் மகன், சாமுவேல் ஒரு நசரேய சபதம் மூலம் பிறப்பிலிருந்தே தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டார்.*[104] *சிறு வயதில், ஏலி ஆசாரியனின் கீழ் சேவை செய்ய தேவாலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.*

*இந்த மாற்றத்தின் காட்சிகள் பின்வருமாறு:*

*சாமுவேலுக்கு தேவனுடைய அழைப்பு மற்றும் ஏலி மற்றும் அவனது குடும்பத்தினர் மீதான நியாயத்தீர்ப்பு (1சாமுவேல் 1-3)*

*1 சாமுவேல் 1-7வரையிலுள்ள அதிகாரங்கள் நியாயாதிபதிகளில் தொடங்கிய இஸ்ரேலின் தொடர்ச்சியான வீழ்ச்சியைக் காட்டுகிறது. ஏலியின் மகன்கள் பாலியல் ஒழுக்கக்கேடு மற்றும் பலிகளைத் தவறாகப்பயன்படுத்துவதன் மூலம் தங்கள் ஊழியத்தை இழிவுபடுத்துவதால், ஆசாரியத்துவமும் கூட சீர்கெட்டுவிட்டது.*[105] *இதன் விளைவாக, தேவன் சாமுவேல் மூலம் நியாயத்தீர்ப்பின் செய்தியைக் கொண்டுவருகிறார்.*

*பெலிஸ்தியர்களால் உடன்படிக்கைப் பெட்டி கைப்பற்றப் படுதல் (1 சாமுவேல் 4–7)*

*உடன்படிக்கையை இஸ்ரவேல் தவறாகப் பயன்படுத்துவது உடன்படிக்கைப்பெட்டியை அவர்கள் கையாண்டதில் காணப் படுகிறது. பெலிஸ்தியர்கள் தாக்கும்போது, இஸ்ரவேலர்கள் இந்த உடன்படிக்கைப் பெட்டியை போர்க்களத்திற்குக் கொண்டு வருகிறார்கள், இந்த தெய்வீகப் பொருள் எதிரிகளிடமிருந்து தங்களைக்காப்பாற்றும் என்று நம்புகிறார்கள். இருப்பினும், இஸ்ரவேலின் விசுவாசத்துரோகத்தின் காரணமாக, தேவன் இனி ஜனங்களைப் பாதுகாக்கவில்லை. அந்த உடன்படிக்கைப்பெட்டியை பெலிஸ்தியர்கள் கைப்பற்றி ஏழு மாதங்கள் வைத்திருந்தனர். உடன்படிக்கைப்பெட்டி பெலிஸ்தி*

---

*[104] 1 சாமுவேல் 1:10-11; எண்ணாகமம் 6:1-21*
*[105] 1 சாமுவேல் 2:12-25*

*யர்களுக்கு வாதைகளை வரவழைத்தபோது, அதை பெத்ஷி மேசுக்குத் திருப்பி அனுப்புகிறார்கள்.*

*ராஜாவாக சவுலின் தேர்வு (1சாமுவேல் 8–12)*

*வயதான காலத்தில், சாமுவேல் தனது மகன்களை இஸ்ர வேலின் நியாயாதிபதிகளாக நியமித்தார். துரதிர்ஷ்டவசமாக, ஏலியின் மகன்களைப் போலவே, சாமுவேலின் மகன்களும் துரோகம் செய்தார்கள். பதிலுக்கு, இஸ்ரவேலின் மூப்பர்கள் சாமுவேலிடம் ஒரு ராஜாவை அவர்களுக்கு அபிஷேகம் செய்யும்படி கேட்டார்கள். "உன் தேவனாகிய கர்த்தர் தேர்ந்தெடுக்கும்"[106] ஒரு ராஜாவைப் பற்றிய மோசேயின் முந்தைய முன்னறிவிப்புக்கும், "அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு, என்னைத்தான் தள்ளினார்கள்"[107] என்று சாமுவேலிடம் தேவன் கூறியதற்கும் இடையே ஒரு அழுத்தம் உள்ளது.*

*"**சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி,** எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு, ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும் என்றார்கள்" என்ற மூப்பர்களின் வேண்டுகோளுக்கான தூண்டுதலே முக்கியமானது.[108] ஒரு ராஜா தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும் நாளை மோசே முன்னறிவித்தாலும், இஸ்ரவேலின் உந்துதல் என்னவென்றால், அது பிற ஜாதிகளைப் போல இருக்க விரும்பினது. துரதிர்ஷ்டவசமாக, இஸ்ரவேலின் ராஜாக்கள் தங்கள் அண்டை நாடுகளின் பாதையில் தேசத்தை வழிநடத்துவார்கள்; இஸ்ரவேல் தன் உருவ வழிபாட்டிலும் அநீதியிலும் ‘‘எல்லா தேசங்களையும் போல’’ ஆகிவிடும்.*

*சவுலின் ஆரம்பகால ஆட்சி (1 சாமுவேல் 13–15)*

*முதலில், சவுல் ஒரு எடுத்துக்காட்டான ராஜாவாகத் தோன்றினான். அவன் தனது தேர்வில் பணிவு காட்டினான், மேலும் அவன் பெலிஸ்தியர்களுக்கு எதிராக இராணுவ வெற்றியை அனுபவித்தான். இருப்பினும், மூன்று சம்பவங்கள் சவுலின் இருதயத்தில் ஆழமான பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்றன.*

---

*[106] உபாகமம் 17:15*
*[107] 1 சாமுவேல் 8:7*
*[108] 1 சாமுவேல் 8:5*

- *சாமுவேலின் ஆசாரிய ஸ்தானத்தை சவுல் எடுத்துக்கொண்டான். எதிர்ப்பட்டபோது, சவுல் சாமு வேல் மீது குற்றம் சாட்டினான்.*[109]
- *சவுல் ஒரு துணிச்சலான சத்தியம் செய்தான், இது கிட்டத்தட்ட யோனத்தானின் மரணத்திற்கு வழி வகுத்தது.*[110]
- *அமலேக்கியர்களை முற்றிலுமாக அழிக்க வேண்டும் என்ற தேவனுடைய கட்டளைக்கு சவுல் கீழ்ப் படியவில்லை. சாமுவேல் எதிர்ப்பட்டபோது, சவுல் ஜனங்களைக் குற்றம் சாட்டினான்.*[111]

*இந்த காட்சிகள் ஒவ்வொன்றும் உபாகமத்தில் மோசே விவரித்த ராஜாவாக சவுலின் தோல்வியைக் காட்டுகிறது. இதன் விளை வாக, சாமுவேல் தேவனுடைய நியாயத்தீர்ப்புச்செய்தியைக் கொண்டு வருகிறார்: "நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராத படிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்."*[112]

### ***சவுலின் வீழ்ச்சி மற்றும் தாவீதின் எழுச்சி (1 சாமுவேல் 16–31)***

*1சாமுவேலின் முதல் பாதி இறையாட்சியிலிருந்து மன்னராட் சிக்கு மாறுவதைக்குறிக்கிறது; 1சாமுவேல் இரண்டாம் பாதியில் சவுலிடமிருந்து தாவீதுக்கு அரசாட்சி மாறியதைக் குறிக்கிறது.*

#### *தாவீதின் அறிமுகம் (1சாமுவேல் 16–17)*

*மூன்று கதைகள் தாவீதை அறிமுகப்படுத்துகின்றன. முதலா வதாக, தாவீதின் அபிஷேகம் ராஜாவின் இருதயத்தின் முக்கியத் துவத்தை வலியுறுத்துகிறது. சவுல் ஜனங்களுக்கு ராஜாவைப் போல் தோன்றினான்; ஆனால் தாவீது தேவனுக்கு ராஜாவாகத் தெரிந்தான்.*[113]

---

[109] *1 சாமுவேல் 13:8-14*
[110] *1 சாமுவேல் 14:24-46*
[111] *1 சாமுவேல் 15*
[112] *1 சாமுவேல் 15:23*
[113] *1 சாமுவேல் 9:1-2; 16:7*

இரண்டாவது கதை சவுலுக்கும் தாவீதுக்கும் இடையிலான உறவை அறிமுகப்படுத்துகிறது. தேவன் சவுலை ராஜாவாக நிராகரித்தார், மேலும் ஒரு அசுத்த ஆவி சவுலை துன்புறுத்த ஆரம்பித்தது. ஒரு திறமையான இசைக்கலைஞர் என்ற அவரது நற்பெயரின் காரணமாக, சவுலுக்காக வாசிப்பதற்கும் அவனது ஆவியை அமைதிப்படுத்துவதற்கும் தாவீது தேர்ந்தெடுக்கப் பட்டான்.[114]

மூன்றாவது கதை பெலிஸ்திய நாட்டு இராட்சதனான கோலியாத்தின் மீது தாவீதின்வெற்றியைக் கூறுகிறது. சவுலின் பெருமிதம் மற்றும் தன்னம்பிக்கையின் பின்னணியில், இந்தக் கதை தாவீதின் தேவன் மீதுள்ள தாழ்மையான நம்பிக்கையைக் காட்டுகிறது.[115]

*சவுலுக்கும் தாவீதுக்கும் இடையேயான மோதல் (1சாமுவேல் 18–27)*

கோலியாத் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஜனங்கள் தாவீதைப் புகழ்வதை சவுல் பார்த்தபோது, இந்த மனத்தால் உணரப்பட்ட போட்டியாளனின் மீது அவன் பொறாமை கொண்டான். நிராகரிக்கப்பட்ட ராஜா சவுலுக்கும் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜா தாவீதுக்கும் இடையிலான மோதலின் கதை நான்கு முக்கிய காட்சிகளை உள்ளடக்கியது:

- தாவீது மற்றும் யோனாத்தான் இடையே வளர்ந்து வரும் நட்பு (1சாமுவேல் 18)
- தாவீதைக் கொல்ல சவுலின் முயற்சிகள் (1சாமுவேல் 19–20)
- தாவீது சவுலிடமிருந்து தப்பித்தல், மேலும் அவன் "கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவருக்கு" தீங்கு செய்ய மறுத்தல் (1சாமுவேல் 21-26)
- பெலிஸ்தியர்களிடையே தாவீதின் தற்காலிக வாசம் (1 சாமுவேல் 27)

[114] 1 சாமுவேல் 16:14-23
[115] 1 சாமுவேல் 17

*சவுல் மற்றும் அவனது குமாரரின் மரணம் (1 சாமுவேல் 28-31)*

*சவுலினுடைய வீழ்ச்சியின் இறுதிப் படி, அவன் பெலிஸ்தியர்களுடன் போருக்குத் தயாரானபோது எந்தோரில் சூனியக்காரியினிடத்திற்குச் சென்றது. அவன் ஒரு காலத்தில் அழிக்க முயன்ற அமானுஷ்ய நடைமுறைகளில் இப்போது பங்கேற்றான்.[116] சாமுவேல் தோன்றி நியாயத்தீர்ப்புச் செய்தியைக் கொடுத்தான்; பெலிஸ்தர்கள் இஸ்ரவேலை தோற் கடிப்பார்கள், சவுலும் அவனுடைய மகன்களும் போரில் மடிவார்கள் என்றான். தீர்க்கதரிசனம் கூறப்பட்டபடியே, சவுலும் அவனது மகன்களும் அடுத்த நாள் போரில் கொல்லப் பட்டனர், மேலும் 2 சாமுவேல் தாவீது ராஜாவாக அரியணை ஏறுவதில் தொடங்குகிறது.*

## *2 சாமுவேல்*

### *கருப்பொருள்: தாவீது ராஜாவின் ஆட்சி*

*முப்பது வயதில் தாவீது ராஜாவானான். 2 சாமுவேல் புத்தகம் சவுலின் மரணத்திலிருந்து தாவீதின் மரணம் வரையிலான 1011-971 ஆண்டுகளை விவரிக்கிறது. இந்த புத்தகம் தாவீது ராஜாவாக இருந்த ஆரம்ப வருடங்களின் வெற்றியை பதிவு செய்கிறது. பத்சேபாவுடன் தாவீது செய்த பாவத்தின் சோகமான விளைவு களையும் இது பதிவு செய்கிறது.*

### *2 சாமுவேல் புத்தகத்தின் கண்ணோட்டம்*

#### *தாவீதின் அதிகாரத்திற்கான எழுச்சி (2 சாமுவேல் 1–4)*

*2 சாமுவேல்புத்தகம் சவுலின் மரணத்திற்கான தாவீதின் பதிலுடன் தொடங்குகிறது. ஒரு எதிரியின் மரணத்தில் மகிழ்ச்சி அடைவதற்குப் பதிலாக, தாவீது சவுலின் மரணத்தைக்குறித்துப் புலம்பி, சவுலைக் கொன்றதாகக் கூறிய அமலேக்கியனைத் தண்டித்தான். தாவீது முதலில் யூதாவின் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான்; சவுலின் மகன் இஸ்போசேத் இஸ்ரவேலின் ராஜாவாக முடிசூட்டப்பட்டான். 2 சாமுவேல் 3:1 கூறுகிறது, "சவுலின் குடும்பத்துக்கும் தாவீதின் குடும்பத்துக்கும்; நெடு நாள் யுத்தம் நடந்தது." ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, இஸ்போ*

---

*[116] 1 சாமுவேல் 28:8-10*

*சேத் அவனுடைய இரண்டு தளபதிகளால்கொல்லப்பட்டான், மேலும் தாவீது இஸ்ரவேலின் ராஜாவாக முடிசூட்டப்பட்டான்.*

### *தாவீதினுடைய செழுமையின் ஆண்டுகள்(2 சாமுவேல் 5–10)*

*தாவீதின் ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகள் வெற்றிகரமாக இருந்தன. இராணுவ ரீதியாக, தாவீது இஸ்ரவேலின் எல்லையைப் பாதுகாத்தான். அரசியல் ரீதியாக, அவன் உள் நாட்டுப்போருக்குப் பிறகு தேசத்தை ஒன்றிணைத்தான். தலை நகரை தெற்குநகரமான எபிரோனில் இருந்து மத்திய நகரமான எருசலேமுக்குமாற்றியதன் மூலம், அரசியல் பதட்டங்களைத் தணிக்க முடிந்தது.*

*மிக முக்கியமாக, இந்த ஆண்டுகளில் தாவீது ஆவிக்குரிய வெற்றியைப் பெற்றான். 2சாமுவேல் 7-ஆம் அதிகாரம் பழைய ஏற்பாட்டு சரித்திரத்தில் முக்கியமான அதிகாரங்களில் ஒன்றா கும். தாவீதுடனான தேவனுடைய உடன்படிக்கை ஆபிரகாம் மற்றும் மோசேயுடன் தேவன் செய்த உடன்படிக்கைகளின் மேல் உருவாகுகிறது. தாவீதின் உடன்படிக்கை ஐந்து வாக்குறுதி களைஉள்ளடக்கியது:*

- *தேவன் இஸ்ரவேலுக்குபாதுகாப்பான வாசஸ்தலத்தை வழங்குவார் (7:10-11).*
- *தேவன் தாவீதின் மகனை ஆலயத்தைக் கட்டும்படி எழுப்புவார் (7:12-13).*
- *தேவன் தாவீதின் ராஜ்யத்தை என்றென்றும் நிலை நாட்டுவார் (7:13).*
- *தேவன் தாவீதின் சந்ததியினருடன் தந்தை-மகன் உறவை ஏற்படுத்துவார் (7:14).*
- *தேவனின் இரக்கம் தாவீதின் வம்சத்தை விட்டுவிலகாது (7:14-15).*

*இஸ்ரவேலின் வரலாற்றைப் புரிந்துகொள்ள இந்த உடன் படிக்கை முக்கியமானது. 1 மற்றும் 2ராஜாக்களுக்கு அடிப்படை யான முக்கிய கேள்விகளில் ஒன்று, "ஏன் இனி சிங்காசனத்தில் தாவீதின் வழிவந்த ராஜா இல்லை?" தாவீதுடன் செய்த உடன்படிக்கையை தேவன் மறந்துவிட்டதாக இஸ்ரவேலுக்குத்*

தோன்றியது. 1 மற்றும் 2 ராஜாக்கள் புத்தகங்கள் இந்தக் கேள்விக்கு தேவனுடைய பதிலைக் கொடுக்கின்றன.

தாவீதின் உடன்படிக்கை புதிய ஏற்பாட்டு வரலாற்றிலும் முக்கியமானது. தாவீதின் உடன்படிக்கை, இறுதியில் இயேசு கிறிஸ்துவின் வருகையில் நிறைவேறியதாக சுவிசேஷ புத்தகங்கள் காட்டுகின்றன.[117]

## தாவீதின் பாவமும் அதன் பின்விளைவுகளும் (2 சாமுவேல்11–24)

2 சாமுவேல் 11, தாவீதின் ஆட்சியைக் கெடுத்த ஒரு சோகமான நிகழ்வைப் பதிவு செய்கிறது. தாவீது உரியாவைக் கொன்றதன் மூலம் பத்சேபாளுடனான தனது விபச்சார உறவை மறைக்க முயன்றான். மீதமுள்ள 2 சாமுவேல் தாவீதின் மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் காட்டுகிறது. 2 சாமுவேல் 7:15ல், "என் கிருபையை விலக்கமாட்டேன்" என்று தேவன் வாக்குறுதி அளித்தார்; இந்த ஆசீர்வாதம் உடன்படிக்கை உறவின் ஒரு பகுதியாகும். 2 சாமுவேல் 12:10 ல், “உன் வீட்டைவிட்டு பட்டயம் விலகாது” என்று தேவன் உறுதியளிக்கிறார்; இந்த நியாயத்தீர்ப்பு உடன்படிக்கை உறவின் ஒரு பகுதியாகும். தேவனுடனான உடன்படிக்கை தேவனைப் பொறுப்பாளியாக்குகிறது.

### பாவம் மற்றும் விசுவாசியைக் குறித்த ஒரு துல்லியமான பார்வை

தாவீது மற்றும் பத்சேபாளின் கதை பழைய ஏற்பாட்டு வரலாற்றில் கரும்புள்ளிகளில் ஒன்றாகும். தன் பிள்ளைகள் துணிகரமாகப் பாவம் செய்யாமல் வாழ வேண்டும் என்ற தேவனின் அழைப்பை நம்புபவர்களுக்கு, இக்கதை மிகவும் கடினமானது. ஒரு விசுவாசி பாவத்தில் விழுவது அவசியம் என்று நாம் நம்பவில்லை என்றாலும், தாவீதின் கதை தேவனுடைய பிள்ளைகள் வீழ்ச்சியடைவது சாத்தியம் என்பதைக் காட்டுகிறது. இந்தக் கதை விசுவாசிகளுக்கு மதிப்புமிக்க பாடங்களைக் கற்பிக்கிறது; ஒரு விசுவாசி வேண்டுமென்றே

[117] மத்தேயு 1:1

*பாவத்தில்விழுந்தால் என்ன செய்ய வேண்டும் என்பதை இது காட்டுகிறது.*

**(1) நம்முடைய பாவத்தை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.**

*சாமுவேல் சவுலை அவனது பாவத்துடன் எதிர்கொண்டபோது, சவுல் சாக்குப்போக்குச் சொல்ல முயன்றான் ("நீ வராத தால்...").[118] நாத்தன் தாவீதை அவன் பாவத்தைக் குறித்து எதிர்கொண்டபோது, தாவீது உடனடியாக, "நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தேன்" என்று ஒப்புக் கொண்டான்.[119] இது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதன் தாவீதுக்கும், தேவனால் நிராகரிக்கப்பட்ட சவுலுக்கும் உள்ள வித்தியாச த்தைக் காட்டுகிறது.*

*அது விபச்சாரம் போன்ற "பெரிய பாவமாக" இருந்தாலும் சரி, வதந்திகள் போன்ற "சிறிய பாவமாகவோ" இருந்தாலும், நம் பாவத்தை ஒப்புக்கொள்ளும் வரை தேவனுடைய மன்னிப் பைப் பெற முடியாது. சவுலைப் போலவே, நாம் சில சமயங் களில் நம் பாவத்துக்கு சாக்குப்போக்குச் சொல்ல அல்லது அதை "தவறு" அல்லது "பலவீனம்" என்று கூறி அதை மறுக்கவும் ஆசைப்படுகிறோம். இருப்பினும், நாம் பாவம் செய்தோம் என்று தேவன் வெளிப்படுத்தும் போது, நாம் நம்முடைய பாவ த்தை ஒப்புக்கொண்டு அவருடைய மன்னிப்பைப் பெற வேண்டும்.*

**(2) நம்முடைய பாவத்தின் தீவிரத்தை நாம் உணர வேண்டும்.**

*ஆசாரியப் பலி செலுத்துவதைப் பற்றி சாமுவேல் சவுலை எதிர்கொண்டபோது, சவுல் தன் பாவத்தை நியாயப்படுத்த முயன்றான். அதற்கு அவன், "எண்ணித் துணிந்து, சர்வாங்க தகனபலியைச் செலுத்தினேன்" என்றான்.[120]*

*நாத்தன் தாவீதை எதிர்கொண்டபோது, ராஜா தனது பாவத்தின் தீவிரம் வெறும் செயலின் அடிப்படையில் இல்லை என்பதை உணர்ந்தான். தாவீது யாருக்கு எதிராகப் பாவம் செய்தானோ அவனுடைய பாவத்தின் தீவிரம் அவனுக்கு இருந்தது. "தேவரீர்*

---

*[118] 1 சாமுவேல் 13:11*
*[119] 2 சாமுவேல் 12:13*
*[120] 1 சாமுவேல் 13:12*

*ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்க ளுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்; நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந் தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்."*[121]

*நம்முடைய பாவம் தேவனுக்கு எதிரான குற்றம் என்பதை நாம் உணரும்போது, "சிறிய" பாவம் என ஏதும் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். அதனால்தான் தேவன் சொன்னார், "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்."*[122] நம்முடைய பாவத் *தின் தீவிரத்தை நாம் அங்கீகரிக்க வேண்டும்; பாவம் மரணத் திற்குத் தகுதியானது.*

**(3) தேவனுடைய மன்னிப்பைப் பெறுவோம் என்று நாம் நம்ப வேண்டும்.**

*தாவீது, "நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்" என்று ஜெபித்தார். தாவீது தான் செய்ததைப் போன்ற ஒரு பாவத்திற்காக முன்கூட்டியே பலியிடும் முறை என்பதாக எந்த ஏற்பாடும் இல்லை என்பதை அறிந்திருந்தான்.*[123]*இருப்பினும், அவன் தேவனுடைய இரக்கத்தில் தன்னைத்தானே ஒப்புக் கொடுத்தான்: "பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்."*[124] *இரக்கமுள்ள தேவன் தன் பாவத்தை மன்னிப்பார் என்று தாவீது விசுவாசத்துடன் மனந்திரும்பினான்.*

*புதிய ஏற்பாட்டில், யோவான் எழுதினார், "என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரரா யிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து*

---

[121] *சங்கீதம் 51:2-4*
[122] *எசேக்கியேல் 18:20*
[123] *எண்ணாகமம் 15:30*
[124] *சங்கீதம் 51:7, 16, 17*

*பேசுகிறவராயிருக்கிறார்."*[125] *கிறிஸ்தவர்களாகிய நாம் பாவத்தில் விழ வேண்டியதில்லை; ஆனால் நாம் பாவம் செய்தால், நமக்காகப் பரிந்துபேசுகிறவர் ஒருவர் இருக்கிறார் என்ற நற்செய்தியை யோவான் கூறுகிறார்.*

*சங்கீதம் **51**க்குப் பிறகு **32**வது சங்கீதம் எழுதப்பட்டிருக்கலாம். **51**ஆம் சங்கீதத்தில், தாவீது தன் பாவத்தை ஒப்புக்கொண்டார். சங்கீதம் **32** இல், தேவனுடைய மன்னிப்பில் அவர் மகிழ்ச்சியடைந்தார். "நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தைமன்னித்தீர்."*[126]

### (4) நமது பாவத்தின் நீண்ட கால விளைவை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

*தாவீது மனந்திரும்பியதால், தேவன் அவனுடைய பாவத்தை மன்னித்தார். இருப்பினும், தாவீதின் எஞ்சிய ஆட்சி அந்த இரவில் பத்சேபாளுடன் செய்த செயலால் பாதிக்கப்பட்டது. தாவீதின் மகன் அம்னோன் அவனுடைய ஒன்றுவிட்ட சகோதரி தாமாரைக் கற்பழித்தான். தாவீதின் பிரியமான மகன் அப்சலோம் தகப்பனின் ஆட்சியைக் கவிழ்ப்பதன் முயற்சிக்கு தலைமை தாங்கினான். பென்யமீனியனான சேபா ஒரு கழகத்துக்குக்கு தலைமை தாங்கினான். தாவீது மரணப் படுக்கையில் இருந்தபோது, அவனுடைய மகன்கள் சிங்காசனத் திற்காக சண்டையிட்டனர். தாவீதின் வீட்டை விட்டு பட்டயம் விலகவில்லை. இயேசுவின் வம்சவரலாறு கூட தாவீதின் பாவத்தை நினைவூட்டுகிறது: "தாவீது ராஜா உரியாவின் மனைவியாயிருந்தவளிடத்தில் சாலொமோனைப் பெற் றான்."*[127] *தாவீதின் கதை பாவத்தின் பயங்கரமான விளைவு களை நினைவூட்டுகிறது.*

*நாம் ஒருபோதும் பாவத்தை இலகுவாக எடுத்துக் கொள்ளக்கூடாது. பவுல் எச்சரித்தார், "மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை*

---

*[125] 1 யோவான் 2:1*
*[126] சங்கீதம் 32:5*
*[127] மத்தேயு 1:6*

*விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்."*[128] பாவத்தின் தீவிரத்தன்மை மற்றும் பாவத்தின் விலை பற்றிய விழிப்புணர்வு சோதனையின் தருணத்தில் உறுதியாக நிற்க உதவும்.

## *1 மற்றும் 2 ராஜாக்கள்*

### *கருப்பொருள்: இஸ்ரவேல் ராஜாக்களின் தோல்வி*

2சாமுவேல் 7இல், தேவன் இஸ்ரேலுக்கு ஒரு பாதுகாப்பான வாசஸ்தலத்தையும், எருசலேமில் ஒரு ஆலயத்தையும், தாவீதின் சந்ததியினர் என்றென்றும் இஸ்ரவேலின் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள் என்றும் வாக்குறுதி அளித்தார். 1 மற்றும் 2 ராஜாக்கள் சிறைப்பட்டுப் போனவர்களின் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டவை. இந்த புத்தகங்கள் எழுதப்பட்டபோது, இஸ்ர வேல் சிறைப்பட்டுப்போனது, தேவாலயம் அழிக்கப் பட்டது, அரியணையில் தாவீதின் ராஜா இல்லை.

"ஏன்?" என்ற கேள்விக்கு ராஜாக்கள் புத்தகங்கள் பதிலளிக்கின் றன. வாக்குறுதிகள் ஏன் நிறைவேற்றப்படவில்லை? தேவன் தனது வாக்குறுதிகளை மறந்துவிட்டாரா? பாபிலோனின் தேவனான மாரடுக், இஸ்ரவேலின் தேவனான யேகோவாவை விட சக்திவாய்ந்ததா? இஸ்ரவேலர் உடன்படிக்கைக்கு உண்மை யாக இருக்கத் தவறியதைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் ராஜாக் கள் புத்தகங்கள் இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்கின்றன.

டியூட்ரோனோமிக் இறையியலின் மொழியைப் பயன்படுத்தி, ராஜாக்கள் புத்தகங்கள் இஸ்ரவேல் தனது பாவத்திற்கான தண்டனையை அறுவடை செய்கிறது என்பதைக் காட்டு கின்றன. இந்த புத்தகங்கள் சரித்திரம், ஆனால் அவை வரலாற்றை விட அதிகம்; இஸ்ரவேலின் வரலாறு ஏன் நடந்தது என்பதை அவை விளக்குகின்றன. அதனால்தான் எபிரேய வேதாகமம் இந்த புத்தகங்களை "முந்தைய தீர்க்கதரிசிகள்" என்று வகைப்படுத்துகிறது. இந்தப் புத்தகங்கள் கர்த்தரிடமி ருந்து ஒரு தீர்க்கதரிசன வார்த்தையைக் கொண்டு வருகின்றன:

---

[128] கலாத்தியர் 6:7-8

*"இதனால்தான் நான் தேர்ந்தெடுத்த ஜனங்களுக்கு நியாயத் தீர்ப்பைக் கொண்டு வந்தேன்."*

| ***ஏன்?*** | |
|---|---|
| *2 சாமுவேலின் வாக்குத்தத்தம்* | *2 ராஜாக்களின் யதார்த்தம்* |
| *"என்றென்றும்" வசிக்கும் இடம்* | *பாபிலோனிற்கு நாடு கடத்தல்* |
| *எருசலேமில் தேவாலயம்* | *தேவாலயம் அழிக்கப்பட்டது* |
| *ஒரு சிங்காசனம் "என்றென்றுமாய்" நிறுவப்பட்டது* | *எருசலேமில் ராஜா இல்லை* |

## *எழுத்தாளர் மற்றும் எழுதப்பட்ட காலம்*

*எபிரேய வேதாகமத்தில், 1 மற்றும் 2ராஜாக்கள் ஒரே புத்தகம் ஆகும். எபிரேய மரபு எரேமியாவை இதன் எழுத்தாளராக அடையாளப்படுத்துகிறது. இருப்பினும், 1 மற்றும் 2 ராஜாக் களின் புத்தகங்களில் எதுவும் அதன் எழுத்தாளரை அடையாளம் காணவில்லை. பெரும்பாலான அறிஞர்கள் புத்தகத்தை "எழுதி யவர் தெரியவில்லை" என்று அடையாளம் காட்டுகின்றனர்.*

*2 ராஜாக்களில் கடைசி நிகழ்வு கிமு561 இல் நடந்தது. கிமு 539 இல் கோரேசின் ஆணை யூதாவை திரும்பிச் செல்ல அனுமதித்தது. ராஜாக்கள் புத்தகத்தில் இச்செய்தி இடம்பெற வில்லை. ஆகவே, இந்த இரண்டு தேதிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ராஜாக்கள்எழுதப்பட்டதாக எடுத்துக் கொள்ளலாம்.*

## *1 மற்றும் 2 ராஜாக்களின் கட்டமைப்பு*

### *சாலமோனின் கீழ் ஐக்கிய இஸ்ரவேல் (1 ராஜாக்கள் 1-11)*

*இந்த அதிகாரங்கள் கி.மு. 971-931 வரையில் உள்ளடக்கியது. சாலமோனின் ஆட்சியின் மகிமைகளை அவை கொண்டிருக் கின்றன: அவனுடைய ஞானம், செல்வம் மற்றும் தேவாலய த்தில் தேவனுடைய ஆசீர்வாதம். சாலமோனின் துரோகத்தை அவனுடைய பிற்காலங்களில் அவை குறிப்பிடுகின்றன.*

## *பிளவுபட்ட ராஜ்யம் (1 ராஜாக்கள் 12 – 2 ராஜாக்கள் 17)*

*இந்த அதிகாரங்கள்கி.மு. 931-722 வரை உள்ளடக்கியது, சாலமோனின் மரணத்திலிருந்து அசீரியாவால் வடக்கு ராஜ்யம் அழிக்கப்படும்வரையிலான ஆண்டுகளை உள்ளடக்கியது. ரெகொபெயாமின் மதியீனமான செயல்களால், சாலமோனின் மரணத்தைத் தொடர்ந்து தேசம் இரண்டு ராஜ்யங்களாகப் பிரிந்தது. பத்துகோத்திரங்கள் வடக்கு ராஜ்யமாக யெரொபெ யாமைப் பின்தொடர்ந்தனர்; யூதாவும் பென்யமீனும் மட்டுமே ரெகொபெயாம் மற்றும் தாவீதின் வம்சத்திற்கு விசுவாசமாக இருந்தனர். ராஜாக்களில் உள்ள கணக்கு இரண்டு ராஜ்யங் களுக்கு இடையில் மாறி மாறி வருகிறது, இது வடக்கு ராஜ்யத்தின் விரைவான விசுவாச துரோகத்தையும் யூதாவின் படிப்படியான வீழ்ச்சியையும் குறிக்கிறது.*

| **இஸ்ரவேலின் வடக்கு ராஜ்யம்** | **யூதாவின்தெற்கு ராஜ்யம்** |
|---|---|
| *19ராஜாக்கள்* | *19ராஜாக்கள்; 1 ராணி* |
| *எல்லா ராஜாக்களும்பொல்லாப்பானதைச் செய்தார்கள்* | *8 நல்ல ராஜாக்கள் மறுமலர்ச்சியின் காலங்களைக் கொண்டு வருகிறார்கள்* |
| *தலைநகரம் சீகேம், பிறகு திர்சா, பிறகு சமாரியா* | *தலைநகரம் எருசலேம்* |
| *பெத்தேலிலும் தாணிலும் ஆராதித்தார்கள்* | *"தாவீதின்நகரமாகிய" எருசலேமில் ஆராதித்தார்கள்,* |
| *722இல்அசீரியாவால் அழிக்கப்பட்டது.* | *கிமு586இல் பாபிலோனியர்களால் சிறைபட்டுப்போகுதல்* |
| *ராஜ்யம் இழக்கப்படுகிறது* | *கிமு 536 இல் சிறையிருப்பிலிருந்து திரும்பி வருதல்* |

## *வடக்கு ராஜ்யத்தின்வீழ்ச்சிக்குப் பிறகு யூதா(2 ராஜாக்கள்18–25)*

*இந்த அதிகாரங்கள் கி.மு. 722-561 வரையிலுள்ள காலங்களை உள்ளடக்கியது, வடக்கு ராஜ்யத்தின் அழிவிலிருந்து பாபிலோ னில் சிறைபிடிக்கப்பட்ட யோயாக்கீனின் விடுதலை வரையி லான ஆண்டுகளை உள்ளடக்கியது. ஒரு சில நல்ல ராஜாக்களின் ஆட்சியின்போது ஏற்பட்ட மறுமலர்ச்சியின் காரணமாக,*

வடக்கு ராஜ்யத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு யூதா ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக உயிர்மீட்சியடைந்திருந்தது. இருப் பினும், மனாசேயின் பொல்லாத ஆட்சியின் காரணமாக, தேவன் யூதாவின் மீது நியாயத்தீர்ப்பைக் கொண்டுவந்தார்.[129] யோசி யாவின் ஆட்சியின்போது மறுமலர்ச்சியின் இறுதிக் காலம் இருந்தது, ஆனால் கி.மு.586இல். பாபிலோன் எருசலேமைக் கைப்பற்றியது, தேவாலயத்தை அழித்து, ஜனங்களை நாடு கடத்தியது.

2 ராஜாக்கள் பாபிலோனால் நியமிக்கப்பட்ட ஆளுநரான கெதலியாவின் கீழ் யூதாவின் வரலாற்றுடன் முடிவடைகிறது. பாபிலோன் ராஜா யோயாக்கீனை சிறையிலிருந்து விடுவித்தான் என்ற அறிக்கையுடன் அது முடிவடைகிறது. இது கி.மு.561 இல் நடந்தது. மற்றும், ராஜாக்களின் ஆரம்பகால வாசகர்களுக்கு, தாவீதின் சந்ததியினரைத் தேவன் கவனித்துக் கொண்டிருந்தார் என்பதை நினைவூட்டுவதாக இருந்தது. தேவன் தாவீதுக்கு கொடுத்த வாக்குறுதியை மறக்கவில்லை.

### முக்கியமான வருடங்கள், ராஜாக்கள் மற்றும் நிகழ்வுகள்[130]

| இஸ்ரவேலின் வடக்கு ராஜ்யம் | | | யூதாவின் தெற்கு ராஜ்யம் | |
|---|---|---|---|---|
| 931-910 | யெரொபெயாம் I இஸ்ரவேலை உருவ வழிபாட்டிற்கு அழைத்துச் சென்றான் | | 931-913 | ரெகொபெயாம் இஸ்ரவேலில் பிளவை ஏற்படுத்தினான் |
| 885-874 | ஓம்ரி தலைநகரை சமாரியாவுக்கு மாற்றினான் | | 911-870 | ஆசா ஒரு தேவபக்தியுள்ள ராஜா |
| 874-853 | ஆகாபும் யேசபேலும் | | 872-848 | யோசபாத், ஒரு நல்ல ராஜா, ஆனால் ஆகாபுடன் கூட்டணி |

[129] 2 ராஜாக்கள் 21

[130] E.R. Thiele, *The Mysterious Numbers of the Hebrew Kings*, (Grand Rapids: Zondervan, 1983) அடிப்படையில், வருடங்கள் தோராயமானவை..

| | | | | |
|---|---|---|---|---|
| ***875-848*** | *எலியாவின் ஊழியம்* | | | *வைத்தான்* |
| ***760-750*** | *ஆமோஸின் ஊழியம்* | | ***792-740*** | *ஆசாரிய ஊழியத்திற்கான பிரமாணங்களை மீறியதற்காக உசியா தொழுநோயால் தாக்கப்படுதல்* |
| ***753-715*** | *ஓசியாவின் ஊழியம்* | | | |
| ***732-722*** | *ஓசெயா - வடக்கு ராஜ்யத்தின் கடைசி ராஜா* | | ***716-687*** | *எசேக்கியா* |
| | | | ***740-681*** | *ஏசாயாவின் ஊழியம்* |
| ***722*** | *அசீரியாவால் வடக்கு ராஜ்யத்தின் அழிவு* | | ***641-609*** | *யோசியா - யூதாவின் கடைசி தெய்வபயமுள்ள ராஜா* |
| | | | ***627-586*** | *எரேமியாவின் ஊழியம்* |
| | | | ***609-598*** | *எரேமியாவின் எச்சரிக்கைகளை நிராகரிக்கும்யோயாக்கீமின் ஆட்சி* |
| | | | ***597-586*** | *சிதேக்கியா - யூதாவின் கடைசி ராஜா* |
| | | | ***586*** | *எருசலேமின் அழிவு* |

## *1 மற்றும்2 ராஜாக்களில் உள்ள முக்கியமான கருப்பொருள்கள்*

### *ராஜாக்கள்*

*1 மற்றும் 2 ராஜாக்கள் இஸ்ரவேலின் ராஜாக்களைப் பார்க்கும் விதம் சாதாரண வரலாற்றுப் புத்தகங்களைப் போலவே உள்ளது ஆயினும் வேறுபட்டது. மற்ற வரலாற்று ஆதாரங்களைப் போலவே, 1 மற்றும் 2 ராஜாக்கள் அடிப்படை வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களை முன்வைக்கிறது: ராஜா அரியணைக்கு வந்த வயது, குடும்பப் பின்னணி, அவனது ஆட்சியின் கால*

*அளவு, அடக்கம் செய்யப்பட்ட இடம், வாரிசு மற்றும் ராஜாவைப் பற்றிய தகவல்களின் ஆதாரம்.*

*மற்ற வரலாற்று ஆதாரங்களைப் போலல்லாமல், ராஜாக்களின் முதன்மையான அக்கறை தேவனுக்கு ராஜாவின் விசுவாசத்தை மதிப்பீடு செய்வதாகும். ஒவ்வொரு ராஜாக்களுக்கும், எழுத்தாளர் கூறுகிறார்: "தன் தகப்பன் தனக்கு முன்செய்த எல்லாப் பாவங்களிலும் அவன் நடந்தான்; அவன் இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல், தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை"[131] அல்லது "உயிரோடிருந்த நாளெல்லாம் அவன் இருதயம் கர்த்தரோடேஇல்லாத உத்தமமாயிருந்தது."[132]*



Image: "Baal Ugarit Louvre AO17330" by Jastrow, Retrieved from https://commons.wikimedia.org/wiki/File:Baal_Ugarit_Louvre_AO17330.jpg

*ஒவ்வொரு ராஜாவும் தேவனுக்கு விசுவாசமாக இருப்பதன் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறான், முதன்மையாக அவனது அரசியல் அல்லது இராணுவ வெற்றியின் அடிப்படையில் அல்ல. உதாரணமாக, உலப்பிர காரமான வரலாற்றில், உம்ரி மிகவும் அறியப்பட்ட இஸ்ரவேல் ராஜாக்களில் ஒருவன். இப்போது லூவ்ரே அருங்காட்சியகத்தில் உள்ள "மேஷா ஸ்டீல்" உம்ரியின் இராணுவ வெற்றிகளைப் பற்றிக் கூறுகிறது. உம்ரியின் மரணத்திற் குப் பிறகு, அசீரிய ஆதாரங்கள் இஸ்ரேலை "உம்ரியின் தேசம்" என்று குறிப்பிட்டன. உம்ரி நன்கு அறியப்பட்ட ராஜா, ஆனால் 1 ராஜாக்களில், ஆறு வசனங்கள் மட்டுமே உம்ரிக்கு*

---

*131 1 ராஜாக்கள் 15:3*

*132 1 ராஜாக்கள் 15:14*

ஒதுக்கப்பட்டுள்ளன. வேதாகம எழுத்தாளரைப் பொறுத்த மட்டில், "உம்ரி கர்த்தரின் பார்வை க்குப் பொல்லாப்பானதைச் செய்து, தனக்கு முன்னிருந்த எல்லா ரைப் பார்க்கிலும் கேடாய் நடந்து."[133] வேதாகம எழுத்தாள ருக்கு, உம்ரியின் பாவம் அவனது ஆட்சியின் எந்த அரசியல் முக்கியத்துவத்தையும் விட அதிக முக்கியமாக இருந்தது. ராஜாக்கள் புத்தகம் உடன்படிக்கையின் வரலாறு; இது இஸ்ரவேலின் வரலாற்றை தேவனின் உடன்படிக்கைக்கு இஸ்ரவேல் எத்தனை உண்மையாக இருந்தது என்பதுடன் தொடர்புபடுத்துகிறது.

## *தீர்க்கதரிசிகள்*

இஸ்ரவேலின் வீழ்ச்சியின் சித்திரத்தின் ஒரு பகுதியாக, 1 மற்றும் 2 ராஜாக்கள் தீர்க்கதரிசிகளின் பாத்திரத்திற்கு மிகுந்த கவனம் செலுத்துகின்றன. உம்ரி ராஜாக்களில் கிட்டத்தட்ட புறக்கணிக்கப்பட்டாலும், அவனது மகன் ஆகாபின் ஆட்சி விரிவாகக் காணப்படுகிறது.

இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, ஆகாபின் பொல்லாத ஆட்சி வடக்கு ராஜ்யத்தின் அழிவுக்கு வழி வகுத்தது.[134] இரண்டாவது காரணம், ஆகாபுடன் எலியாவின் மோதல். எலியாவுக்கும் ஆகாபுக்கும் இடையிலான மோதல், இஸ்ரவேலரின் பாவத்தைப் பற்றி எச்சரிக்கும் தேவனுடைய உண்மைத்தன்மையை நிரூபிக்கிறது. கர்மேல் மலையில் நடந்த மோதல் இஸ்ரவேலரை அதனுடைய விசுவாசத்துரோகத்தை நேருக்கு நேர் கொண்டு வந்தது. எலியாவால் அறிவிக்கப்பட்ட பஞ்சம் துரோகத்தின் விலையாக இஸ்ரவேல் அனுபவிக்க நேர்ந்தது.[135]

---

[133] 1 ராஜாக்கள் 16:25

[134] 1 ராஜாக்கள் 16:33

[135] 1 ராஜாக்கள் 17. யாத்திராகமம் பற்றிய பாடத்தில், வாதைகள் எகிப்தின் பொய்க் கடவுள்களின் மீதான தாக்குதல் என்று பார்த்தோம். எலியாவின் நாளில் ஏற்பட்ட பஞ்சம் பாகாலின் மீது இதேபோன்ற தாக்குதலாகும். பாகால் ஒரு போனீசியன் கருவுறுதல் கடவுள், இதனை யேசபேல் இஸ்ரேலுக்கு அறிமுகப்படுத்தினாள். பாகால் "மழை மற்றும் இடியின் இறைவன்" என்று அழைக்கப்பட்டது. உலகத்தைப் படைத்த யேகோவா மட்டுமே இயற்கையின் மீது அதிகாரம் கொண்டவர் என்று எலியா அறிவிக்கிறார்.

தீர்க்கதரிசிகள் தேவனுடைய உண்மைத்தன்மையை தம் ஜனங்களுக்குக்காட்டுகிறார்கள். வடக்கில்எலியா மற்றும் எலிசாமூலமாகவும், ஏசாயா மற்றும் யூதாவிலிருந்த அவருடைய சமகாலத்தவர்கள் மூலமாகவும், இஸ்ரவேலின் பாவத்தைக் குறித்து தேவன் பலமுறை எச்சரித்தார். துரதிர்ஷ்டவசமாக, தேவனுடைய உண்மைத்தன்மை இருந்த போதிலும், இஸ்ரவேல் தன் கலகத்தில்நிலைத்திருந்தது.

***உபாமக இறையியல்***

எலியாவுக்கும் ஆகாபுக்கும் இடையிலான மோதல், இஸ்ரவேலை எச்சரிக்கும் தேவனுடைய உண்மைத்தன்மையை மட்டுமல்ல, மனந்திரும்ப மறுக்கும் இஸ்ரவேலின் பிடிவாதத்தையும் காட்டுகிறது. நாடுகடத்தப்பட்டவர்களின் கண்ணோட்டத்தில், யூதாவும் இஸ்ரவேலும் தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பை அனுபவித்ததாக ராஜாக்களின் எழுத்தாளர் காண்பிக்கிறார்.

இந்த பகுதியின் தொடக்கத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, ராஜாக்களின் எழுத்தாளர் பதிலளிக்கிறார், "இல்லை, மார்டுக் யேகோவாவை விட சக்திவாய்ந்தது அல்ல. இல்லை, தேவன் தம்முடைய உடன்படிக்கையின் வாக்குறுதிகளை மறக்கவில்லை. யூதாவும் இஸ்ரவேலும் உடன்படிக்கைக்கு துரோகம் செய்ததன் விளைவுகளை அனுபவிக்கிறார்கள். உடன்படிக்கை விசுவாசிகளுக்கு ஆசீர்வாதத்தையும், துரோகிகளுக்கு தண்டனையையும் வாக்களித்தது. தேவன் அவர் வாக்குறுதியளித்ததைச் செய்கிறார்."[136]

உபாகமம் மற்றும் ராஜாக்களிடையே உள்ள உறவு பல குறிப்பிட்ட நிகழ்வுகளில் காணப்படுகிறது.

- உபாகமம் இஸ்ரவேலுக்கு "உன் தேவனாகிய கர்த்தர் தேர்ந்தெடுக்கும் இடத்தில்" ஆராதிக்கும்படி கட்டளையிட்டது. யெரொபெயாம் தாண் மற்றும் பெத்தேலில் புதிய வழிபாட்டுத்தலங்களை அமைத்தான்.[137]

[136] 2 ராஜாக்கள் 17:7-23
[137] உபாகமம் 12:5; 1 ராஜாக்கள் 12:26-30

- *தேவன் இஸ்ரவேலுக்கு எந்த வகையான ராஜாவை உத்தேசித்திருக்கிறார் என்பதை உபாகமம் காட்டியது. இஸ்ரவேலின் ராஜாக்கள் ஒரு ராஜாவுக்காக தேவன் நிர்ணயித்த தராதரங்களின்படி எப்படி வாழத்தவறினார்கள் என்பதை ராஜாக்கள்காட்டு கின்றன.*[138]

- *ஒரு உண்மையான தீர்க்கதரிசிக்குரிய அடையாளங் களை உபாகமம் வழங்கியது. எலியா மற்றும் எலிசாவின் ஊழியம் இந்த அடையாளங்கள் சரியா னவை என நிரூபித்தது.*[139]

- *இஸ்ரவேல் உடன்படிக்கையை மீறினால் குறிப் பிட்ட சாபங்களை உபாகமம் முன்னறிவித்தது. இவை ராஜாக்களில் சோகமான விவரங்களில் நிறைவேற்றப்படுகின்றன.*[140]

## *1 & 2 நாளாகமம்*

### *கருப்பொருள்: நம்பிக்கையின் செய்தி*

*1 மற்றும் 2 நாளாகமமானது 1 மற்றும் 2ராஜாக்களுக்கு அடுத்து ஒரு நூற்றாண்டுக்கும் பிறகு எழுதப்பட்டது. நாளாகமம் இஸ்ரேலின் வரலாற்றில் ஒரு கடினமான தருணத்திலிருந்து வருகிறது. கோரேசு ஜனங்களை திரும்பிச் செல்லுவதற்கு அனுமதித்தான் - ஆனால் எருசலேமை விட பாபிலோனிலேயே அதிகமான யூதர்கள் வாழ்கின்றனர். தேவாலயம் புனரமைக் கப்பட்டது - ஆனால் இது சாலமோன் கட்டின தேவாலயத்தைப் போல இல்லாமல் அதைவிடச் சிறியதாகவும், வசீகரமற்றும் இருந்தது. சிங்காசனத்தில் தாவீது ராஜா இல்லை. மேசியா தோன்றவில்லை. "தேவன் நம்மை மறக்கவில்லை" என்று தெரிந்து கொள்ள வேண்டிய ஜனங்களுக்காக நாளாகமம் எழுதப்பட்டுள்ளது. நாம் இன்னும் அவருடைய ஜனங்கள். நம்பிக்கை இருக்கிறது.”*

---

[138] *உபாகமம் 17:14-20*
[139] *உபாகமம் 18:21-22*
[140] *உபாகமம் 28*

*பழங்கால பாரம்பரியம் எஸ்றாவை நாளாகமத்தின் எழுத்தாளராகக் குறிப்பிடுகிறது. 2நாளாகமத்தின் கடைசி இரண்டு வசனங்கள் எஸ்றாவின் முதல் இரண்டு வசனங்களாகத் திரும்பத் திரும்ப வருவதே இதற்குக் காரணம். நாளாகமம் எந்த ஒரு எழுத்தாளரையும் அடையாளம் காண்பிக்கவில்லை. இதன் காரணமாக, எழுத்தாளர் பொதுவாக "நாளாகம எழுத்தாளர்" என்று அழைக்கப்படுகிறது.*

*எபிரேய வேதாகமத்தில், நாளாகமப் புத்தகங்கள் கானோனில் கடைசி புத்தகம். கி.மு. 450 மற்றும் 400க்கு இடையே எழுதப்பட்ட கடைசி பழைய ஏற்பாட்டு புத்தகங்களில் ஒன்றாக நாளாகமம் இருக்கிறது. அது எழுதப்பட்ட வருடத்தின் காரணமாக கடைசி இடத்தில் வைக்கப்பட்டுள்ளது . நாளாகமத்தின் நோக்கம் காரணமாகவும் இது பொருத்தமானது. நாளாகமம் அடிப்படையில் ஒரு வரலாற்றுப் புத்தகம் அல்ல, இருப்பினும் நாளாகமத்தில் உள்ள வரலாறு உண்மைதான். இஸ்ரவேலின் வரலாற்றை ஒரு புதிய கண்ணாடி மூலம் பார்த்து நம்பிக்கையின் செய்தியை கொண்டு வருவதே இதன் முதன்மையான நோக்கம். இஸ்ரவேலருக்கு தேவன் அளித்த வாக்குறுதிகள், அதாவது இயேசு கிறிஸ்துவின் வருகையை முன்னறிவிக்கும் வாக்குறுதிகளின் எதிர்கால நிறைவேற்றத்தை நாளாகமம் சுட்டிக் காண்பிக்கிறது..*

### ***நாளாகமம் மற்றும் ராஜாக்கள்***

*நாளாகமம் மற்றும் ராஜாக்கள் இடையேயான உறவு மூன்று சமான நற்செய்தி நூல்களுக்கு இடையே உள்ள உறவைப் போன்றது; அவை ஒரே பொருளை மாறுபட்ட கண்ணோட்டத்தில் பார்க்கின்றன. சாமுவேல் மற்றும் ராஜாக்கள் கூறும் அதே வரலாற்றை நாளாகமம் ஆய்வு செய்கிறது. இருப்பினும், இந்த நிகழ்வுகளை ஒரு புதிய கண்ணோட்டத்தில் பார்க்கிறது. ராஜாக்கள், “ஏன் உடன்படிக்கையின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை?” என்று கேட்கின்றன. “எதிர்காலத்திற்கான நம்பிக்கை இருக்கிறதா? தேவனுக்கு தம்முடைய ஜனங்கள் மேல் ஒரு நோக்கம் இருக்கிறதா?” என்று நாளாகமம் கேட்கிறது.*

*நாளாகமத்தின் எழுத்தாளரின் நோக்கம் அவரது பொருளைத் தேர்ந்தெடுப்பதில் காணப்படுகிறது. அவர் இஸ்ரவேலின் முழு*

வரலாற்றையும் கொடுக்கவில்லை. மாறாக, தேவன் தம்முடைய நோக்கங்களை நிறைவேற்ற இஸ்ரவேலின் சரித்திரத்தில் எவ்வாறு செயல்பட்டார் என்பதைக் காட்டும் பொருளைத் தேர்ந்தெடுக்கிறது. இஸ்ரவேலின் வரலாற்றில் இருண்ட காலத்தை எழுத்தாளர் மறுக்க முயற்சிக்கவில்லை; அவரது வாசகர்கள் அந்த இருண்ட காலத்தை நன்கு அறிந்திருந்தனர். இருப்பினும், நாளாகமத்தின் நோக்கம் தேவனுடைய நியாயத் தீர்ப்புகளை விளக்குவது அல்ல; விரக்தியில் இருக்கும் ஜனங்களுக்கு நம்பிக்கை அளிப்பதே நாளாகமத்தின் நோக்கம். கோரேசின் பிரகடனத்துடன் முடிவடைவதன் மூலம், நாளா கமம் நம்பிக்கையின் செய்தியுடன் முடிவடைகிறது; தேவன் இன்னும் தம் ஜனங்களைப் பாதுகாத்து வருகிறார்.

| சாமுவேல்/ராஜாக்கள் | நாளாகமம் |
|---|---|
| தேவன் ஏன் தம் ஜனங்களைநியாயந்தீர்த்தார்? | தேவனுடைய ஜனங்களுக்கு எதிர்காலம் இருக்கிறதா? |
| சவுலின் ஆட்சியின் கதையை உள்ளடக்கியது | சவுலின் மரணத்தை மட்டும்உள்ளடக்கியது |
| இரண்டு ராஜ்யங்களின் வரலாறு | யூதாவின் வரலாறு |
| தீர்க்கதரிசிகளுக்கு முக்கியத்துவம் | ஆசாரியர்களுக்கும்தேவாலயத்திற்கும் முக்கியத்துவம் |
| "ராஜா தாவீதின் வழியில் நடந்தானா?" | "ராஜா தேவாலய ஆராதனையில் உண்மையுள்ளவனா?" |
| தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு | தேவனுடைய நித்திய இரக்கம் |

## நாளாகம புத்தகத்தின் கண்ணோட்டம்

### *தலைமுறைகள் (1 நாளாகமம் 1-9)*

*புதிய கிறிஸ்தவர்களுக்கான அறிவுரை: உங்கள் வேதாகம வாசிப்பை 1 நாளாகமம் 1-9 உடன் தொடங்காதீர்கள்!*

*முதிர்ந்த கிறிஸ்தவர்களுக்கான அறிவுரை: 1 நாளாகமம் 1-9 ஐ புறக்கணிக்காதீர்கள்!*

தலைமுறையா? சலிப்பு! ஆம், இந்த அதிகாரங்கள் சலிப்பை ஏற்படுத்தலாம், ஆனால் அவை முக்கியமானவை. ஏன்? தேவ னுடைய ஜனங்களை அவர்

மறக்கவில்லை என்பதை அவை நினைவுபடுத்துகின்றன.

கி.மு.5 ஆம் நூற்றாண்டில், இஸ்ரவேலின் கோத்திரங்களின் வம்சவரலாறு அர்த்தமற்றதாகத் தோன்றியது. வடக்கு ராஜ்ய த்தின் பத்து கோத்திரங்கள் அசீரியாவால் அழிக்கப்பட்டனர், அத்துடன் அவர்களின் அடையாளத்தை ஒருபோதும் மீட்டெ டுக்க முடியாமற்போனது. யூதாவின் ஜனங்கள் எகிப்து, பாபிலோன் மற்றும் பெர்சியா முழுவதும் சிதறிக்கிடந்தனர்.

இந்த சூழ்நிலையில், வம்சவரலாறுகள் ஒரு முக்கியமான செய்தியைக் கொண்டுள்ளன: "தேவன் நம்மை மறக்கவில்லை. நாம் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனங்கள். நாம் யார் என்று இன்னும் நமக்குத் தெரியும்; நம்முடைய வம்சாவளியை நாம் ஆதாமிடமிருந்து காணலாம்." வடக்கு ராஜ்யம் மறைந்து விட்டாலும், தேவன் "அனைத்து இஸ்ரவேலரையும்" தேர்ந்தெ டுத்தார் மற்றும் அவர்களை அவர் மறக்கவில்லை என்பதை யூதா நினைவில் கொள்ள வேண்டும் என்று நாளாகமத்தின் எழுத்தாளர் விரும்புகிறார்.[141]

ஒரு நூலிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது வம்ச வரலாறுகள் நாளாகமத்தின் எழுத்தாளரின் நோக்கத்திற்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதை நிரூபிக்கிறதாய் இருக்கி றது. எபிரேய மொழியில், யாபேஸ் என்ற பெயர் "வலி" என்ற வார்த்தைக்கு ஒத்ததாகும். யாபேஸ் பெரிய பாரம்பரியம் இல்லாத ஒரு மனிதன், ஆனால் "யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி வேண்டிக்கொண்டான்.... அவன் வேண்டிக் கொண்டதை தேவன் அருளினார்."[142] யாபேஸின் ஜெபம் தேவனிடமிருந்து பொருட்களைப் பெறுவதற்கான மந்திர சூத் திரம் அல்ல. தனிப்பட்ட அல்லது குடும்ப அனுகூலங்கள் இல்லாவிட்டாலும், தம்மைக் கூப்பிடுபவர்களுக்கு தேவன் செவிசாய்க்கிறார் என்பதை யாபேஸின் ஜெபம் நினை வூட்டுகிறது. யாபேஸின் கதை, நாளாகமத்தின் ஆரம்பகால வாசகர்கள் தேவனை நோக்கி கூப்பிட்டு முறையிட ஊக்கப்

---

[141] "அனைத்து இஸ்ரவேலர்களும்" என்ற சொற்றொடர் நாளாகமத்தில் நாற்பத்தி இரண்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. சிதறடிக்கப்பட்ட ஒரு தேசத்திற்கும் தேவனுடைய தொடர்ச்சியான நோக்கத்தை இது கொண்டிருக்கிறது. வடக்கு ராஜ்யம் அழிக்கப்பட்டாலும் தேவனுடைய மீட்பின் நோக்கம் நிறைவேறும்.

[142] 1 நாளாகமம் 4:10

*படுத்தியது; இருண்ட நாட்களிலும், அவர் அவர்களின் அழுகையைக் கேட்பார்.*

## *தாவீதின் ஆட்சி (1 நாளாகமம் 10–29)*

*வம்சவரலாறுகளில் சவுலும் சேர்க்கப்பட்டுள்ளான், ஆனால் சவுலைப் பற்றிய விரிவான தகவல் அவருடைய மரணம் மட்டுமே. சவுலின் ஆட்சியில் நாளாகமத்தின் எழுத்தாளர் அதிக ஆர்வம் காட்டவில்லை. நாளாகமத்தின் எழுத்தாளர் சவுல் மீது கொண்டிருந்த ஆர்வத்தை சுருக்கமாகக் கூறுகிறார், "அப்படியே சவுல் கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொள்ளாமல், கர்த்தருக்குச் செய்த தன் துரோகத்தினிமித்தமும், அவன் கர்த்தரைத் தேடாமல் அஞ்சனம் பார்க்கிறவர்களைக் கேட்கு ம்படிக்குத் தேடினதினிமித்தமும் செத்துப்போனான். அதற்காக அவர் அவனைக் கொன்று, ராஜ்யபாரத்தை ஈசாயின் குமார னாகிய தாவீதுவசமாகத் திருப்பினார்."[143]*

*நாளாகமத்தின் எழுத்தாளரின் கவனம் தாவீது மற்றும் அவனது அரசபரம்பரையில் உள்ளது. நாளாகமம் தாவீதையும் அவனு டைய வலிமைமிக்க மனிதர்களையும் பற்றிச் சொல்லுகிறது. பத்சேபாளுடன் தாவீது செய்த பாவத்தைப் பற்றி அது கூறவில்லை. நாளாகமத்தின் வாசகர்கள் தாவீதின் பாவத்தின் கதையை ஏற்கனவே அறிந்திருந்தனர்; நாளாகமத்தின் நோக்க த்திற்கு இது முக்கியமில்லை.*

*சுவாரஸ்யமாக, பத்சேபாள் கதை நாளாகமத்தில் சேர்க்கப் படவில்லை என்றாலும், ஜனங்களை எண்ணுவதில் தாவீது செய்த பாவமும் அடங்கும். ஏன்? இந்தக் கதை நாளாகமத்தின் எழுத்தாளர் தேவாலயத்தை வலியுறுத்துவதற்கு முக்கியமானது. தன் மனந்திரும்புதலில், பலிபீடத்தைக் கட்டுவதற்காக தாவீது ஒர்னானின் களத்தை வாங்கினான். இதுவே தேவாலயத்தின் தலமாகமாறியது.[144]*

*நாளாகமத்துக்கு தேவாலயம் முக்கியமானது. 1 நாளாகமம் 21-ல் தாவீதின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் கதையைத் தொடர்ந்து, தாவீதின் தேவாலயத்தைக் கட்டுவதற்கான திட்டத் தையும், லேவியர்கள், ஆசாரியர்கள், இசைக்கலைஞர்கள்,*

---

*[143] 1 நாளாகமம் 10:13-14*

*[144] 1 நாளாகமம் 21:18-28; 2 நாளாகமம்3:1*

வாயிற்காப்பாளர்கள், மற்றும் தேவாலய பொக்கிஷக்காரர்கள் ஆகியோரின் அமைப்பையும் நாளாகமம் கூறுகிறது. ஊக்கமிழந்த ஜனங்களுக்கு, அவர்களின் அடையாளத்திற்கு தேவாலயம் தான் மையமானது என்பதை நாளாகமத்தின் எழுத்தாளர் நினைவுபடுத்துகிறார்; தேவாலயம் வழிபாட்டில் விசுவாசத்தை ஊக்குவிப்பதற்காக எழுதுகிறார்.

## *சாலமோனின் ஆட்சி (2 நாளாகமம் 1–9)*

தேவாலயத்தின் காரணமாக சாலமோனின் ஆட்சி வரலாற்றாசிரியருக்கு முக்கியமானது. நாளாகமம் சாலமோனின் விசுவாச துரோகத்தைத் தவிர்க்கிறது, ஆனால் தேவாலயக் கட்டிடம், அலங்காரம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்கு ஆறு அதிகாரங்களை ஒதுக்குகிறது. ஆலயத்தின் பிரதிஷ்டையின்போது தேவனுடைய பதிலை நாளாகமம் காட்டுகிறது: “அக்கினி வானத்திலிருந்து இறங்கி, சர்வாங்க தகனபலியையும் மற்றப்பலிகளையும் பட்சித்தது; கர்த்தருடைய மகிமையும் ஆலயத்தை நிரப்பிற்று. கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பினதினால், ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கக்கூடாதிருந்தது.."[145]

இந்த அதிகாரத்தின் பிற்பகுதியில், தேவன் சாலமோனுக்கு வாக்களிக்கிறார், “நான் மழையில்லாதபடிக்கு வானத்தை அடைத்து, அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக்கிளிகளுக்குக் கட்டளையிட்டு, அல்லது என் ஜனத்திற்குள்ளே கொள்ளை நோயை அனுப்பும்போது, என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்."[146]

நாடுகடத்தப்பட்ட பிறகு இஸ்ரேலுக்கு இந்த வாக்குறுதி முக்கியமானது. தேவன் தம் ஜனங்களைக் கைவிடவில்லை என்பதை அது அவர்களுக்கு உறுதியளிக்கிறது. உடன்படிக்கையின் வாக்குறுதிகள் நிறைவேறாமல் இருக்கின்றன, ஆனால்

---

[145] 2 நாளாகமம் 7:2-3
[146] 2 நாளாகமம் 7:13-14

*இஸ்ரவேல் தேவனை அழைத்தால், அவர் பரலோகத்திலிருந்து கேட்டு, அவர்களின் தேசத்தைக் குணப்படுத்துவார். இது மல்கியாவின் செய்திக்கு இணையாக உள்ளது, நாளாகமத்தின் எழுத்தாளர் இதையும் அதே நேரத்தில் எழுதினார். பாவத் திற்காக உண்மையான மனந்திரும்புதல் மற்றும் தேவனுடைய கட்டளைகளுக்கு உண்மையாக இருப்பது நாடு கடத்தப்பட் டவர்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும்.*

## ***யூதாவின் ராஜ்யம் (2 நாளாகமம் 10–36)***

*இஸ்ரவேலின் பிரிவிற்குப் பிறகு ராஜாக்களின் புத்தகங்கள் வடக்கு ராஜ்யம் மற்றும் யூதா இரண்டையும் பின்பற்றுகின்றன; இரண்டு ராஜ்யங்களும் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளின் விளைவுகளைக் காட்டுகின்றன. இருப்பினும், நாளாகமத்தின் எழுத்தாளர் நம்பிக்கையின் செய்தியில் ஆர்வமாக உள்ளார்; யூதா மட்டுமே எதிர்காலத்திற்கான தேவனுடைய வாக்குறுதி யைக்காட்டுகிறது. வடராஜ்யம் இஸ்ரவேல் பிரிந்ததைத் தொட ர்ந்து, நாளாகமம் தெற்குராஜ்யம் யூதாவின் வரலாற்றை மட்டுமே குறிப்பிடுகிறது.*

*இந்த பிரிவில் மீண்டும், நாளாகமத்தின் எழுத்தாளரின் நோக்கம் அவரது பொருள் தேர்வுக்கு வழிகாட்டியது. ராஜாக்களின் புத்தகங்களில், எசேக்கியாவின் ஆவிக்குரிய சீர்திருத்தங்கள் ஒரு வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.[147] நாளாகமத்தில், எசேக்கி யாவின் சீர்திருத்தங்களின் விவரங்களுக்கு மூன்று அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.[148] எசேக்கியாவின் தேவாலயத்தின் மீதான பக்தியையும், தேவனுக்கு அவர் விசுவாசமாக இருப்பதையும் நாளாகமம் வலியுறுத்துகிறது.*

*நாளாகமம் மற்றும் ராஜாக்கள் இடையே மற்றொரு சுவாரஸ்யமான வேறுபாடு மனாசேயின் கதையில் காணப் படுகிறது. மனாசேயை யூதாவின் ராஜாக்களில் மிக மோசமான வனாக, அவனது பாவம் நாடு கடத்தப்படுவதைத் தவிர்க்க முடியாததாகக் காட்டுகிறது.[149] சிறையிருப்பில் இருந்தபோது, மனாசே மனந்திரும்பியதாக நாளாகமம் கூறுகிறது. மனாசே*

---

*[147] 2 ராஜாக்கள் 18:4*

*[148] 2 நாளாகமம் 29-31*

*[149] 2 ராஜாக்கள் 21:11-15.*

*பாபிலோனிலிருந்து விடுவிக்கப்பட்டு எருசலேமுக்குத் திரும்பினான். தேவாலயத்தில் இருந்த சிலைகளை அப்புறப் படுத்தினான்.*[150]

*ராஜாக்களின் எழுத்தாளரைப் பொறுத்தமட்டில், மனாசேயின் ஆட்சியின் முதன்மையான செய்தி என்னவென்றால், பாவம் தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருகிறது. நாளாக மத்தின் ஆசிரியருக்கு, மனாசேயின் ஆட்சியின் முதன்மையான செய்தி என்னவென்றால், மனந்திரும்புதல் தேவனுடைய மன்னிப்பைக் கொண்டுவருகிறது. இஸ்ரவேலின் வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கு இந்த இரண்டு செய்திகளும் இன்றியமை யாதவை. நாளாகமம் என்பது அடுத்தடுத்து வரும்ராஜாக்களின் கதைமட்டும் அல்ல ; இது ராஜாக்களுக்கு ஒரு நல்ல துணை, அவருடைய ஜனங்களுக்கு தேவனுடைய வார்த்தையின் மற்றொரு அம்சத்தைக் காட்டும் புத்தகம்.*

## முடிவுரை

### *புதிய ஏற்பாட்டில் சாமுவேல் – நாளாகமம்*

*தாவீதின் உடன்படிக்கை மேசியாவாகிய இயேசு ஊழியத்திற்கு ஒரு வரலாற்று அடித்தளத்தை வழங்குகிறது. தாவீதின் உடன்ப டிக்கையில், தாவீதின் ராஜா இஸ்ரவேலின் சிங்காசனத்தில் அமர்வான் என்று தேவன் வாக்குறுதி அளித்தார். இன்னும் 2ராஜாக்களின் முடிவில், சிங்காசனத்தில் ராஜா இல்லை. இஸ்ரவேல் பெர்ஷியர்கள், கிரேக்கர்கள் மற்றும் ரோமர்களால் ஆளப்படுவதால் இந்த நிலை தொடர்கிறது.*

*தாவீதின் உடன்படிக்கையில், தேவன் தம்முடைய ஆலயத்தில் குடியிருப்பதாக வாக்களித்தார். இன்னும் 2 ராஜாக்களின் முடி வில், தேவாலயம் இல்லை. தேவாலயம் புனரமைக் கப்பட்டாலும் முதல் தேவாலயத்தின் பிரமாண்டமும் அழகும் இல்லை.*

*தேவன் தாவீதுக்கு அளித்த வாக்குறுதிகளை இயேசு நிறைவேற்றுவதாக நற்செய்தி எழுத்தாளர்கள் காட்டுகிறார்கள். தாவீதின் சிங்காசனத்தில் அமர வந்தவர். அவருடைய பூமிக்குரிய ஊழியத்தின்போது அவர் நிராகரிக்கப்பட்டபோது,*

---

*[150] 2 நாளாகமம் 33:10-20*

அவர் என்றென்றும் ஆட்சி செய்யத் மீண்டும் வருவார். தேவாலயத்தில் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துபவர் அவர்.

தாவீதுக்கு கொடுத்த வாக்குறுதி மறக்கப்படவில்லை. இஸ்ரவேல் துரோகம் செய்தாலும், தேவன் தம்முடைய வாக்குறுதிகளுக்கு உண்மையாக இருந்தார். நாளாகமத்தில் காணப்படும் நம்பிக்கை மேசியாவாகிய இயேசு வருகையில்நிறைவேறுகிறது.

**சாமுவேல் – நாளாகமம் இன்று பேசுகிறது**

இருபதாம் நூற்றாண்டில், "கிறிஸ்தவ மறுசீரமைப்பு" என்ற இயக்கம், இஸ்ரவேலை ஆளும் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம் ஒரு நவீன அரசியல் கட்டமைப்பிற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று வாதிட்டது. ஓரளவிற்கு உணர்ச்சிபூர்வ எழுச்சியாக , பல கிறிஸ்தவர்கள் அரசியல் அரங்கை ஆவிக்குரிய எழுப்புதலுக்கான ஒரு முகாந்திரமாகப் பார்த்திருக்கிறார்கள்.

சட்ட அரசாங்கத்தில் ஈடுபட கிறிஸ்தவர்களுக்கு உரிமை இருந்தாலும், நாம் இறையாட்சியில் வாழவில்லை. நாம் நேரடி இறையாட்சியில் வாழவேண்டும் என்று கிறிஸ்து பரிந்துரைக்கவில்லை. மாறாக, இஸ்ரவேலுக்கான வாக்குறுதிகள் திருச்சபையின் ஊழியத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. பழைய ஏற்பாட்டில், தேவன் இஸ்ரவேலின் நேரடி செல்வாக்கின் மூலம் "எல்லா தேசங்களையும் ஆசீர்வதித்தார்". பெந்தெகொஸ்தே நாளிலிருந்து, திருச்சபை வழியாக நற்செய்தியைப்பரப்புவதன் மூலம் தேவன் சகலதேசங்களையும் ஆசீர்வதிக்கிறார்.

பழைய ஏற்பாட்டு வரலாற்றுப் புத்தகங்கள் ஒரு கிறிஸ்தவ அரசியல் கட்டமைப்பை நிறுவுவதற்கான ஒரு முன்மாதிரியை வழங்கவில்லை, ஆனால் தேவன் தனது ஜனங்களைப் பாதுகாப்பதில் உண்மையுள்ளவர் என்பதற்கும், வரவிருக்கும் மேசியாவைப் பற்றிய அவருடைய வாக்குறுதிக்காகவும் பழைய ஏற்பாட்டு வரலாற்றின் மூலம் ஒரு சாட்சியத்தை அளிக்கிறார்.

## *பாடம் 5 வீட்டுப்பாடங்கள்*

(1) *பின்வரும் வீட்டுப்பாடங்களில்* ***ஒன்றைத்*** *தேர்ந்தெடுக்கவும்:*

*விருப்பம் 1: குழு வீட்டுப்பாடம்*

*யூதாவின் ஒரு முக்கியமான ராஜாவைப் படிக்க ஒவ்வொரு உறுப்பினரையும் நியமிக்கவும். ராஜாவின் ஆட்சியை நீங்கள் சுருக்கமாகக் கூறும் வகையில் ஒரு பக்கம் எழுதுங்கள். தேவனுக்கு ராஜா உண்மையாய் இருந்ததை மதிப்பீடு செய்து, அவருடைய ஆட்சி யூதாவை எப்படி நல்லவிதத்தில் அல்லது கெட்டவிதத்தில் பாதித்தது என்பதைக் காண்பியுங்கள். பின் வரும் ராஜாக்களில் இருந்து தேர்ந்தெடுக்கவும்: ரெகொபெ யாம், யோசபாத், எசேக்கியா, மனாசே, யோசியா அல்லது சிதேக்கியா.*

*விருப்பம் 2: தனி வீட்டுப்பாடம். ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.*

- *யூதாவின் பின்வரும் இரண்டு ராஜாக்களை நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கும் 1-2 பக்க (450-800 வார்த்தைகள்) கட்டுரையை எழுதுங்கள். ராஜாக்கள் தேவனுக்கு உண் மையாக இருந்ததை மதிப்பிடுங்கள், பின்னர் அவர்க ளின் ஆட்சி யூதாவை நல்லது அல்லது கெட்டது என்பதை எவ்வாறு பாதித்தது என்பதைக் காண் பியுங்கள். பின்வரும் ராஜாக்களில் இருந்து தேர்ந் தெடுக்கவும்: ரெகொபெயாம், யோசபாத், எசேக்கியா, மனாசே, யோசியா அல்லது சிதேக்கியா.*
- *நாளாகமங்களின் அடிப்படையில் தேவனுடைய உண்மைத்தன்மை பற்றிய பிரசங்கத்திற்கு விரிவான விளக்கத்தை எழுதுங்கள். தேவன் தம்முடைய ஜனங் களுக்கு உண்மையாக இருக்கிறார் என்பதை நிரூபிக்கும் உதாரணங்களை நாளாகமத்திலிருந்து பயன்படுத்தவும்.*

(2) *இந்த பாடத்தில் ஒரு தேர்வை எழுத வேண்டும். தேர்வில் மனப்பாடம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட வேதவசனங் களும் உள்ளடங்கும்.*

## பாடம் 5 தேர்வு

(1) ஒவ்வொரு புத்தகத்திற்குமான கருப்பொருளை பட்டியலிடுக.

*1 சாமுவேல்:* ______________________________

*2 சாமுவேல்:* ______________________________

*1 & 2 ராஜாக்கள்:* ______________________________

*1 & 2 நாளாகமம்:* ______________________________

(2) சவுலின் ஆட்சியின் தொடக்கத்தில் தேவன் விரும்பிய ராஜாவாக இல்லாமல் அவன் தோல்வியுற்றதைக் காட்டும் மூன்று நிகழ்வுகளைப் பட்டியலிடுக.

(3) தாவீதுடனான தேவனின் உடன்படிக்கையின் ஐந்து வாக்குறுதிகளை பட்டியலிடுக.

(4) பாவத்தில் விழும் ஒரு விசுவாசிக்கு வழிகாட்டுவதற்கு, தாவீதின் பாவத்திலிருந்து நான்கு கொள்கைகளைப் பட்டியலிடுக.

(5) *1* மற்றும் *2* ராஜாக்கள் எது வரையிலான ஆண்டுகளை உள்ளடக்கியுள்ளன?

(6) இஸ்ரவேலின் பிளவுக்குப் பிறகு, எந்த கோத்திரங்கள் தாவீதின் ராஜாவுக்கு விசுவாசமாக இருந்தன?

(7) *1* மற்றும் *2* ராஜாக்களில் ராஜாக்கள் எதன் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறார்கள்?

(8) யூதாவின் ராஜாக்களைப் பற்றிய நாளாகமம் மற்றும் ராஜாக்கள் புத்தகங்களின் உள்ளடக்கத்தை வேறுபடுத்திக் காண்க.

(9) சாலமோனின் ஆட்சி நாளாகமத்திற்கு ஏன் முக்கியமானது?

(10) *மனாசே பற்றிய நாளாகமம் மற்றும் ராஜாக்கள் புத்தகங் களின் உள்ளடக்கத்தை வேறுபடுத்துக.*

(11) *1 இராஜாக்கள் 9:4-7 மற்றும் 2 நாளாகமம் 7:13-14 ஆகிய வசனங்களை நினைவிலிருந்து எழுதுக*

## பாடம் 6

# எஸ்றா — எஸ்தர் மீட்டெடுத்தலின் புத்தகங்கள்

### பாடத்தின் நோக்கங்கள்

*இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:*

(1) *எஸ்றா, நெகேமியா மற்றும் எஸ்தர் ஆகிய புத்தகங்களின் முதன்மைக் கருப்பொருள்களை கோடிட்டுக் காட்ட முடியும்.*
(2) *எஸ்றா, நெகேமியா மற்றும் எஸ்தர் ஆகிய புத்தகங்களுக்கு இடையே உள்ள காலவரிசை உறவை அறிந்து கொள்ளுதல்.*
(3) *நாடுதிரும்புதலின் காலத்தின் முக்கிய நிகழ்வுகளை அறிந்துகொள்ளுதல்.*
(4) *நெகேமியாவின் வாழ்க்கையிலிருந்து தலைமைத்துவக் கொள்கைகளைப் புரிந்து கொள்ளுதல்.*
(5) *எஸ்தர் புத்தகத்தில் தேவனுடைய பாதுகாப்பைப் பாராட்டுதல்.*
(6) *எஸ்றா, நெகேமியா, எஸ்தர் ஆகிய புத்தகங்களின் செய்தியை இன்றைய உலகத்துக்கு பொருத்தமாகக் கூறுதல்.*

### இந்த பாடத்திற்கான ஆயத்தம்

*எஸ்றா, நெகேமியா மற்றும் எஸ்தர் புத்தகங்களை வாசியுங்கள்.*

*நெகேமியா 2:17 மற்றும் எஸ்தர் 4:14 ஐ மனப்பாடம் செய்யுங்கள்.*

### மீட்டெடுத்தலின்புத்தகங்கள்

யூதர்கள் எருசலேமுக்குத் திரும்பிச் செல்லுவதற்கான கோரேசின் அனுமதி ஆணையைத் தொடர்ந்து இந்த மூன்று சரித்திரப்

புத்தகங்கள் எழுதப்பட்டன.[151] சிறைப்பட்டுப் போனவர்கள் எருசலேமுக்குத் திரும்புவது, தேவாலயம் மற்றும் எருசலேமின் சுவர்களை மீண்டும் எடுத்துக் கட்டுவது மற்றும் நகரத்தை மீண்டும் அமைப்பதில் சிறைப்பட்டுப்போனவர்கள் எதிர் கொள்ளும் சிரமங்கள் ஆகியவற்றை அவை உள்ளடக் கியுள்ளன. இந்த புத்தகங்கள் இரண்டு காரணங்களுக்காக உடன் படிக்கை வரலாற்றில் முக்கியமானவை.

- எஸ்றாவும் நெகேமியாவும் தேவனுடைய ஜனங்கள் தங்கள் ஆவிக்குரிய மற்றும் தேசிய அடையாளத்தைக் காத்துக்கொள்வதில் எதிர்கொள்ளும் சவால்களைக் காட் டுகின்றன. தேவாலயத்தை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் எஸ்றாவின் எழுப்புதல் ஆகியவை இஸ்ர வேலின் ஆவிக்குரிய அடையாளத்தை மீட்டெடுக் கின்றன. நெகேமியாவில் சுவர்களை மீண்டும் கட்டுவது இஸ்ரவேலின் தேசிய அடையாளத்தை மீட்டெடுப் பதில் ஒரு முக்கியமான படியாகும்.
- இந்த புத்தகங்கள் சிறைப்பட்டுப்போனதைத் தொடர்ந்து வரும் ஆண்டுகளில் தம்முடைய ஜனங்க ளுக்காக தேவன் கொண்டிருந்த அக்கறையைக் காட்டுகி ன்றன. எஸ்றாவும் நெகேமியாவும் திரும்பி வருபவர்க ளிடம் தேவனுடைய அக்கறையைக் காட்டுகின்றன; இன்னும் பெர்சியாவில் இருந்தவர்கள் மீது தேவன் காட்டும் அக்கறையை எஸ்தர் புத்தகம் காட்டுகிறது.

| நாடுதிரும்புதலின் புத்தகங்களில் நிகழ்வுகளின் காலவரிசை | |
|---|---|
| **காலம்** | **நிகழ்வு** |
| கி.மு.538 | செருபாபேல் தலைமையில் – நாடு திரும்புதல் முதலாம் குழு- (எஸ்றா 1-4) |
| கி.மு.516 | தேவாலயப் பணி முடிந்தது (எஸ்றா 5-6) |
| கி.மு.483-473 | பெர்சியாவில் உள்ள யூதர்களை தேவன் காப்பாற்றுகிறார் (எஸ்தர்) |

[151] 2 நாளாகமம் 36:22-23; எஸ்றா 1:1-4

| | |
|---|---|
| *கி.மு.458* | *எஸ்றா தலைமையில் - நாடு திரும்புதல் –இரண்டாம் குழு(எஸ்றா 7-12)* |
| *கி.மு.444* | *நெகேமியா எருசலேமின் சுவர்களை மீண்டும் கட்டுகிறார்* |

## எஸ்றா-நெகேமியாவின் ஒற்றுமை

*எபிரேய வேதாகமத்தில், எஸ்றாவும் நெகேமியாவும் ஒரே புத்தகம் ஆகும். நான்காம் நூற்றாண்டு வரை கிறிஸ்தவ வேதாக மங்களில் அவை பிரிக்கப்படவில்லை. இந்த புத்தகங்கள் மிகவும் பொதுவானவை:*

- *அவை ஒரே வரலாற்றுஅமைப்பைப் பகிர்ந்து கொள் கின்றன.*
- *இரண்டும் பெர்சியா அரசன் அர்தசஷ்டா **I** இன் கீழ் யூதர்கள் எருசலேமுக்குத் திருமபுவலைப் பற்றி யவை.*
- *இரண்டிலும் யூத மக்களின் எண்ணிக்கை பட்டிய ல்கள் அடங்கும்.*
- *நெகேமியா **7-12** அதிகாரங்கள் எஸ்றா மற்றும் நெகேமியா இருவரின் சீர்திருத்தங்களைச் சுருக்க மாகக் கூறுகின்றன.*

| **நாடுதிரும்பும் காலத்தில் இருந்த பெர்சிய மன்னர்கள்** | |
|---|---|
| *கோரேஸ் கி.மு.559-530* | *செருபாபேலின் திரும்பி வருதல் (எஸ்றா1-2)* |
| *கேம்பிசஸ்கி.மு.530-522* | |
| *ஸ்மெர்டிஸ்கி.மு.522* | |
| *தரியு கி.மு.522-486* | *தேவாலயம் கட்டுவதற்கு ஆதரவளித்தார் (எஸ்றா 3-6)* |
| *சஷ்டா I (அகாஸ்வேரு) கி.மு.486-465* | *எஸ்தர்* |

| | |
|---|---|
| *அர்தசஷ்டா I கி.மு.465-423* | *எஸ்றா மற்றும் நெகேமியா (எஸ்றா 7-நெகேமியா12)* |

## எஸ்றா

*கருப்பொருள்: சிறையிருப்பிலிருந்து திரும்பி வருதல்*

*காலம்: கி.மு. 538 – 458*

எஸ்றாவின் புத்தகம் இரண்டு திருப்பங்களைக் குறிக்கிறது. தேவாலயத்தின் புனரமைப்பு மற்றும் திரும்பியவர்கள் எதிர் கொள்ளும் சவால்களை இது காட்டுகிறது.

| எஸ்றா: சிறையிருப்பிலிருந்து திரும்பி வருதல் | | |
|---|---|---|
| அதிகாரங்கள் | தலைவர் | வருடம் |
| *எஸ்றா 1-6* | செருபாபேல் | *கி.மு.538* |
| *எஸ்றா 7-10* | *எஸ்றா* | *கி.மு.458* |

*பாரம்பரியமாக, எஸ்றா-நெகேமியாவின் எழுத்தாளர், மற்றும் 1 & 2நாளாகமத்தின் சாத்தியமான எழுத்தாளராகவும் எஸ்றா அங்கீகரிக்கப்பட்டார். 2நாளாகமத்தின் முடிவிலும் எஸ்றாவின் தொடக்கத்திலும் கோரேசின் ஆணையை மீண்டும் சொல்வது இந்தப் புத்தகங்களின் ஒற்றுமையைக் காட்டுகிறது.*

*எஸ்றா ஒரு லேவியன், ஆரோனின் சந்ததி.*[152]*அவன் சிறைபிடிக்கப்பட்ட தனது சக யூதர்களுக்கு சேவை செய்தான், பின்னர் கி.மு.458 இல் எருசலேமுக்கு ஒரு குழுவை வழிநடத்தினான். கி.மு.444 இல் நெகேமியா எருசலேம் திரும்பியபோது அவன் ஆவிக்குரியத் தலைவனாகப் பணியாற்றினான். ஒன்றாக, அவர்கள் ஆவிக்குரிய, நெறிமுறை மற்றும் தார்மீக எழுப்புதலுக்கு வழிவகுத்தனர். ஜனங்களை மீண்டும் தேவனுடைய வார்த்தைக்கு அழைத்துச் செல்வதில் எஸ்றா மிகவும் முக்கியமானவர்.*

### எஸ்றா புத்தகத்தின் கட்டமைப்பு

#### *செருபாபேல் திரும்பி வருதல்(1–6)*

---

[152]*எஸ்றா 7:1-5*

*திரும்பி வருதல் (1–2)*

கோரேசு பாபிலோனைக் கைப்பற்றிய பிறகு, யூதர்கள் எருசலேமுக்குத் திரும்புவதற்கு அனுமதி அளித்தான். வரலாற்று ரீதியாக, இது பெர்சிய ராஜாக்களின் கொள்கைக்கு பொருந்து கிறது. பெர்சிய ராஜாக்கள் பெரும்பாலும் தோற்கடிக்கப்பட்ட நாடுகளை அவரவர்களுடைய தாயகத்தில் இருக்க அனுமதித் தனர். தேவன் தனது மக்களுக்கான தனது இறையாண்மை நோக்கத்தை நிறைவேற்ற ஒரு புறமத ராஜாவின் மூலம் கிரியைச் செய்தார். இதைப்போல தாவீதின் நகரத்தில் மேசியாவின் பிறப்புக்காக யோசேப்பு மற்றும் மரியாளை பெத்லகேமுக்கு கொண்டு வர அகஸ்து இராயன் மூலம் தேவன் கிரியை செய்ததைப் புதிய ஏற்பாட்டிலும் காணலாம்.

| **கைப்பற்றப்பட்ட தேசங்களுக்கான பேரரசுகளின் கொள்கை** | | |
|---|---|---|
| ***அசீரியா*** | *வெவ்வேறு நாடுகளிலிருந்து சிறைபிடிக்கப்பட்டவர்களை ஒன்றிணைப்பதன் மூலம் கைப்பற்றப்பட்ட ஜனங்களின் தேசிய அடையாளத்தை அழித்தது.* | *இஸ்ரேலின் வடக்கு ராஜ்யத்தை அழித்தது.* |
| ***பாபிலோன்*** | *வெற்றி பெற்ற நாடுகளை பாபிலோனுக்கு கொண்டு சென்றது, ஆனால் நாடுகடத்தப்பட்ட அவர்களின் அடையாளத்தை தக்க வைத்துக் கொள்ள அனுமதித்தது.* | *யூதாவை வென்றது.* |
| ***பெர்சியா*** | *கைப்பற்றப்பட்ட நாடுகள் தங்கள்தங்கள் தாயகத்தில் இருக்க அனுமதித்தது.* | *யூதாவை எருசலேமுக்குத் திரும்பிச் செல்ல அனுமதித்து.* |

எஸ்றாவின் புத்தகம் செருபாபேலின் கீழ் யூதர்கள் எருசலேம் திரும்பியதிலிருந்து தொடங்குகிறது, இதில் திரும்பியவர்களில் *49,697* பேரின் கணக்கெடுப்பும் அடங்கும். தாவீதின் வம்சாவளியைச் சேர்ந்த செருபாபேல், பெர்சியர்களால் தலைமைப் பதவியில் வைக்கப்பட்டார் மற்றும் நாடு கடத்தப்பட்டு பிறகு

*நாடு திரும்பியவர்களுக்கு நம்பிக்கையின் அடையாளமாக இருந்தார்.*

*வேலை: தேவாலயத்தைத் திரும்பக் கட்டுதல் (3–6)*

*எருசலேமுக்கு வந்த பிறகு, ஜனங்கள் தேவாலயத்தில் வேலை செய்யத் தொடங்கினர் (கி.மு.536; எஸ்றா 3). அவர்கள் மீண்டும் ஆராதனை முறைமையை நிறுவி, தேவாலயத்திற்கு அடித்தளம் அமைத்தனர். இருப்பினும், எருசலேமுக்கு அருகில் வசிக்கும் சமாரியர்கள் தேவாலயம் மீண்டும் கட்டப்படுதலை எதிர்த் தனர் . மேலும் அந்த வேலையை அவர்களால் நிறுத்த முடிந்தது (எஸ்றா 4).*[153]

*எஸ்ரா 4 மற்றும் 5 இடையே சுமார் 15 ஆண்டுகள் இடைவெளி உள்ளது. எஸ்றா 4-ஆம் அதிகாரம் கி.மு.534 இல் முடிவடை கிறது. சமாரியர்களின் எதிர்ப்பால் தேவாலய பணி நிறுத்தப் பட்டது. எஸ்ரா 5-ஆம் அதிகாரம் "தேவாலயத்தீர்க்கதரிசிகள்" ஆகாய் மற்றும் சகரியா ஆகியோரின் ஊக்கத்தில், கி.மு.520 இல் வேலையை மீண்டும் தொடங்குவதன் மூலம் தேவாலயப் பணி தொடங்குகிறது. கி.மு. 516-ல்தேவாலயம் கட்டி முடிக்கப் பட்டது; தேவாலயத்தின் பிரதிஷ்டை விழாவைஎஸ்றா 6-ஆம் அதிகாரம் குறிப்பிடுகிறது.*

***எஸ்றா திரும்பி வருதல் (7-10)***

*திரும்பி வருதல் (7-8)*

*செருபாபேல் திரும்பி வந்த எண்பது ஆண்டுகளுக்குப் பிறகு, எஸ்றா 1,758 பேரை எருசலேமுக்குத் திரும்ப அழைத்துச் சென் றார்.*

---

*[153] எஸ்றா எல்லாவற்றையும் காலவரிசைப்படி கொண்டிருக்கவில்லை. எஸ்ரா 4:6-23 கோரேசின் காலத்திலிருந்து ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு அகாஸ்வேருவின் கீழ் சமாரியர்களின் எதிர்ப்பிற்கு மாறுகிறது. முழு அதிகாரமும் மறுகட்டமைப்பிற்கான சமாரியர்களின் எதிர்ப்பின் கருப்பொருளால் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. இந்த எதிர்ப்பு ஒரு தற்காலிக மோதலை விட அதிகம் என்பதை இது காட்டுகிறது. எஸ்ரா 4 இன் அமைப்பு:*
*A. எஸ்றா 4:1-5 – கோரேசின் கீழ் தேவாலயத்தை மீண்டும் கட்டுவதற்கு எதிர்ப்பு (கிமு 536)*
*B. எஸ்றா 4:6-23 – பிற்காலத்தில் சுவர்களை மீண்டும் கட்டுவதற்கு எதிர்ப்பு (ஒருவேளை கிமு 458 இல் எஸ்றா திரும்பிவந்த பிறகு)*
*A. எஸ்றா 4:24 – கோரேசின் கீழ் தேவாலயத்தை மீண்டும் கட்டுவதற்கு எதிர்ப்பு (கிமு 536)*

"கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதி நியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தி யிருந்தான்."[154] அவன் தேவனுடைய ஜனங்களிடையே ஆவிக்கு ரிய எழுப்புதலுக்கு வழிவகுத்தான்.

*வேலை: சமூக சீர்திருத்தம் (9-10)*

திரும்பியவர்களின் முதல் குழுவின் சவால் தேவாலயத்தை மீண்டும் கட்டுவது. எஸ்றா ஒரு வித்தியாசமான சவாலை எதிர்கொண்டார்: யூதர்களுக்கும் அண்டை மக்களுக்கும் இடையே கலப்புத்திருமணம். இது கலப்புத்திருமணத்தின் பிரச் சினை மட்டுமல்ல; அது ஒரு மதப் பிரச்சினை. நியாயாதிபதிகள் மற்றும் சாலமோனின் வாழ்வில், அவிசுவாசிகளுடனான திருமணம் எவ்வாறு விரைவாக இஸ்ரவேலை மதத்து ரோகத்திற்கு இட்டுச் சென்றது என்பதைப் பார்க்கிறோம். இரண்டு காரணங்களுக்காக, இது மறுசீரமைப்பு சமூகத்திற்கு ஒரு குறிப்பிட்ட பிரச்சனையாக இருந்தது:

- எருசலேம் அவிசுவாசிகளால் சூழப்பட்டிருந்தது. உருவ வழிபாடு ஒரு நிலையான சோதனையாக இருந்தது.
- பெர்சியா ஒரு ஒத்திசைவான பேரரசாக இருந்தது.[155] யூதர்கள் தங்கள் தாய்நாட்டிற்குத் திரும்புவதற்கு கோரே சுவுக்கு எளிதாக்கிய தத்துவம், அதே நேரத்தில், பல மத நம்பிக்கைகளை ஏற்றுக்கொள்வதை எளிதாக்கிய ஒரு தத்துவமாகும். பெர்சியர்கள் எந்த ஒரு மத அமைப் பிலும் உறுதியாக இருக்கவில்லை. மாறாக, பெர்சிய ர்கள் பல நம்பிக்கைகளைக் கொண்டிருந்தனர். இந்த சூழலில், யூதர்கள் தேவனுடைய ஜனங்கள் என்ற அடை யாளத்தை எளிதில் விட்டுவிடக் கூடும்.

இதன் காரணமாக, கலப்புத் திருமணப் பிரச்சினையை எஸ்றா உடனடியாக எதிர்கொண்டார். அவரது அறிக்கை இந்த பிரச்சினையின் தீவிரத்தைக் காட்டியது மற்றும் பிரச்சனையை எதிர்கொள்ளும் விருப்பத்திற்கு மக்களை

[154] எஸ்றா 7:10.

[155] ஒத்திசைவு என்பது வெவ்வேறு மத நம்பிக்கைகளை ஒரே அமைப்பில் இணைப்பதாகும்.

*கொண்டு வந்தது. கலப்பு திருமணங்களைக் கலைக்கும் எஸ்றாவின் திட்டத்துடன் எஸ்றாவின் 10-ஆம் அதிகாரம் முடிகிறது.*

## நெகேமியா

*கருப்பொருள்: சுவர்களைத் திரும்பக் கட்டுதல்*

*காலம்: கிமு 445 – சுமார் 432*

*தானியேலைப் போலவே, நெகேமியாவும் நாடுகடத்தப்பட்ட ஒரு யூதர், அவர் பெர்சியப் பேரரசில் உயர் பதவிக்கு உயர்ந்தார். பானபாத்திரக்காரன் வேலை ஒரு நம்பகமான பதவியாக இருந் தது. ராஜாவுக்கு அச்சுறுத்தல் இருந்ததால், விஷம் வராமல் காக்கும் பொறுப்பு பானபாத்திரக்காரருக்கு இருந்தது. கூடுத லாக, ராஜாவை அவர் தொடர்ந்து அணுகியதால், பானபாத்தி ரக்காரர் பெரும்பாலும் அரசியல் முடிவுகளில் பெரும் செல்வாக்கைக் கொண்டிருந்தார்.*

*கிமு445இல், நெகேமியா எருசலேமுக்குத் திரும்பினார், அடுத்த இருபது ஆண்டுகளின் பெரும்பகுதியை எருசலேமில் கழித்தார். எஸ்றா ஆவிக்குரிய புதுப்பித்தலில் வழிநடத்திய ஒரு லேவி யன்; நெகேமியா ஒரு குடிமைத்தலைவராக இருந்தார், அவர் நகரத்தின் சுவர்களை மீண்டும் கட்டியெழுப்புவதில் தலைமை தாங்கினார். இருவரும் தேவனுடைய அழைப்புக்கும் தேவனு டைய ஜனங்களுக்கும் அர்ப்பணிக்கப்பட்டவர்கள். மல்கியா வின் தீர்க்கதரிசன ஊழியம், எருசலேமில் நெகேமியாவின் வருடங்களில் ஒன்றோடொன்று இணைந்திருக்கலாம்; நெகேமி யாவின் கடைசி பகுதியில் குறிப்பிடப்பட்ட அதே தீமைகளை மல்கியாவின் புத்தகம் குறிப்பிடுகிறது.*

*► நெகேமியாவின் ஜெபங்களை 1:4-11; 4:4-5; மற்றும் 13:29ல் வாசியுங்கள். அவருடைய ஊழியத்தில் ஜெபத்தின் முக்கியத்து வத்தையும் உங்கள் ஊழியத்தில் ஜெபத்தின் பங்கையும் விவாதி க்கவும். நெகேமியாவின் ஊழியத்தைப் போலவே உங்கள் ஊழி யத்திலும் ஜெபம் முக்கியமா?*

## நெகேமியா புத்தகத்தின் கட்டமைப்பு

### *சுவர்களை திரும்பக் கட்டுதல் (1-6)*

*கி.மு. 516இல் கட்டிமுடிக்கப்பட்ட தேவாலயத்தின் பணியை எஸ்றாவின் புத்தகம் பதிவு செய்கிறது. இருப்பினும், எஸ்றா 4இல் பதிவு செய்யப்பட்ட எதிர்ப்பின் காரணமாக, சுவர்கள் கட்டி முடிக்கப்படவில்லை. இதன் விளைவாக, நகரம் எதிரிகளிடமிருந்து தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளானது.*

*நெகேமியா மீண்டும் கட்டியெழுப்பும் திட்டத்தை ஒழுங்கமைத்தார், ஜனங்களை வேலை செய்யத் தூண்டினார், எதிர்ப்பை எதிர்கொண்டார் மற்றும் குறிப்பிடத்தக்க ஐம்பத்திரண்டு நாட்களில் பணியை முடித்தார். நெகேமியாவின் புத்தகம் வேதாகமத்தலைமைத்துவம் குறித்த மதிப்புமிக்க பாடநூலை வழங்குகிறது.*

*நெகேமியாவின் ஊழியத்தில் ஜெபம் ஒரு முக்கிய அங்கமாக இருந்தது. நெகேமியாவின் புத்தகம் நெருக்கடியான காலங்களில் அவர் செய்த ஜெபங்களை மீண்டும் மீண்டும் பதிவு செய்கிறது. எருசலேமின் நிலை குறித்த செய்தியை நெகேமியா கேள்விப்பட்டபோது, "உட்கார்ந்து அழுது, சிலநாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம் செய்தார்."[156] நெகேமியா ராஜாவிடம் தன் கோரிக்கையைக் கொண்டுவருவதற்கு முன், "பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம்பண்ணினார்."[157] சன்பல்லாத்தும் அவனது கூட்டாளிகளும் சுவர்களை மீண்டும் கட்டுவதை எதிர்த்தபோது, நெகேமியா தேவனுடைய பாதுகாப்பிற்காக ஜெபம் செய்தார்.[158] அழுத்தத்தின்போது, நெகேமியா பலமுறை ஜெபம் செய்தார்.*

### *ஜனங்களைத் திரும்பக் கட்டுதல் (7-13)*

*நெகேமியாவின் இரண்டாம் பாதி எஸ்றா மற்றும் நெகேமியா தலைமையிலான ஆவிக்குரிய சீர்திருத்தங்களில் கவனம் செலுத்துகிறது. திருப்பி அனுப்பப்பட்ட நாடுகடத்தப்பட்*

---

[156] நெகேமியா 1:4
[157] நெகேமியா 2:4
[158] நெகேமியா 4:4-5, 9; 6:9

டவர்களின் பட்டியல் எஸ்றா 2இல் உள்ள மக்கள்தொகைக் கணக்கெடுப்பிற்கு இணையாக உள்ளது. நாளாகமத்தில் உள்ள வம்சாவளியைப் போலவே, எஸ்றா மற்றும் நெகேமியாவில் உள்ள நாடுகடத்தப்பட்டவர்களின் பட்டியல்கள் தேவன் தனது ஜனங்களைப்பாதுகாப்பதைக் காட்டுகின்றன.

நெகேமியாவின் கடைசி பகுதி ஆவிக்குரிய சீர்திருத்தங்களில் கவனம் செலுத்துகிறது. நெகேமியா 1-6வரையிலுள்ள அதிகாரங்கள் தேவனுடைய நகரத்தைச் சுற்றி ஒரு சுவரை மீண்டும் கட்டியெழுப்புவதைக் காட்டுகிறது; நெகேமியா 7-13வரையிலுள்ள அதிகாரங்கள் தேவனுடைய ஜனங்களைச் சுற்றி ஒரு ஆவிக்குரியச் சுவரை மீண்டும் கட்டியெழுப்புவதைக் காட்டுகிறது. தேவனுடைய ஜனங்கள் தேவனுடைய நியாயப் பிரமாணத்திற்கு உண்மையற்றவர்களாக இருந்தால், ஒரு கட்டிட சுவர் ஒருபோதும் பாதுகாப்பானது இல்லை என்பதை எருசலேமின் வரலாறு நிரூபிக்கிறது.

நெகேமியா 8-10வரையிலுள்ள அதிகாரங்கள் எஸ்றாவின் ஊழியத்தை மதிப்பாய்வு செய்கின்றன. மோசே கட்டளையிட்டபடி, உடன்படிக்கையைப் புதுப்பிக்கும்விதத்தில் பண்டிகையில் ஜனங்களுக்கு நியாயப்பிரமாணம் வாசிக்கப்பட்டது.[159] ஜனங்கள் தங்கள் தேசிய குற்றத்தை ஒப்புக்கொண்டனர் மற்றும் உடன்படிக்கைக்கு விசுவாசமாக இருப்பதாக உறுதியளித்தனர். நெகேமியா 11 மற்றும் 12ஆம் அதிகாரங்கள் மற்றொரு மக்கள் தொகைக்கணக்கெடுப்பைத் தொடர்ந்து சுவரின் பிரதிஷ்டை பற்றிய குறிப்பை அளிக்கிறது.

ஒரு கட்டத்தில், நெகேமியா சிறிது காலம் சூசாவிற்கு திரும்பினார். பின்பு அவர் எருசலேமுக்குத் திரும்பியபோது, ஜனங்கள் ஓய்வுநாளைக் களங்கப்படுத்துவதைக் கண்டார், அதே காலத்தில் மல்கியா தீர்க்கதரிசியும் அந்த பிரச்சினையை உரைத்தார். கூடுதலாக, ஜனங்களில் சிலர் சுற்றியுள்ள (அவிசுவாசியான) ஜனங்களிலிருந்து பெண்களை மணந்தனர், இந்த பிரச்சினை இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் எஸ்றாவால் எடுத்துரைக்கப்பட்டது. இந்த பிரச்சனைகளை நெகேமியா கையாண்டதை நெகேமியா 13-ஆம் அதிகாரம் விவரிக்கிறது.

[159] உபாகமம் 31:10-11

## ஆவிக்குரிய தலைமைத்துவம் குறித்த ஒரு துல்லியமான பார்வை

*ஆவிக்குரியத் தலைமைத்துவத்தைப் பற்றிய பல புத்தகங்கள் நெகேமியாவில் கற்பிக்கப்பட்ட கொள்கைகளை அடிப்படை யாகக் கொண்டவை.*[160] *நெகேமியாவின் தலைமைத்துவப் பாடங்கள் பின்வருமாறு:*

### (1) ஆவிக்குரியத் தலைவர்கள் ஜனங்களைக் குறித்த தரிசனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

*நெகேமியா ஒரு இலக்கைக் காணும் திறன் மற்றும் இலக்கை நிறைவேற்ற தேவையான படிகளைப் பார்க்கும் திறன் பெற்றிருந்தார். இரவில் எருசலேம் வழியாகச் சென்றபின், தலைவர்களிடம், "வாருங்கள், எருசலேமின் சுவரை எழுந்துக் கட்டுவோம்" என்றார்.*[161] *மற்றவர்கள் இடிபாடுகளை மட்டுமே பார்த்த இடத்தில், நெகேமியா ஒரு சுவரைக் கண்டார்.*

*ஒரு ஆவிக்குரியத் தலைவன்* **தேவனுடைய தரிசனத்தைத் தேடுகிறான்**. *ஜெபத்தில் நெகேமியாவின் முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கது, ஏனெனில் அது அவர் தேவனுடைய திட்டத்தை கண்டுபிடித்தார் என்பதைக் காட்டுகிறது. தேவன் மீது தொடர்ந்து சார்ந்திருக்காமல், நெகேமியா தனது சொந்த பார்வையை மாற்றியமைத்திருக்கலாம். ஒரு ஆவிக்குரியத் தலைவன் தான் வழிநடத்த அழைக்கப்பட்ட அமைப்பிற்கான தேவனுடையபார்வையைக் கண்டுபிடிக்க வேண்டும்.*

*புத்தகம் முழுவதும், நெகேமியா தனது* **தரிசனத்தை மற்றவர்களுக்கு தெரிவிக்கும் திறனை** *வெளிப்படுத்துகிறார்.*

---

[160] *நெகேமியா மற்றும் தலைமைத்துவம் பற்றிய மேலதிக ஆய்வுக்கு, பின்வரும் புத்தகங்கள் உதவியாக இருக்கும்::*

*+ Gene Getz. Nehemiah: Becoming a Disciplined Leader. (Nashville: Broadman & Holman Publishers, 1995).*

*+ J.I. Packer. A Passion for Faithfulness: Wisdom from the Book of Nehemiah. (Wheaton: Crossway, 1995).*

*+ David McKenna. Becoming Nehemiah: Leading with Significance. (Kansas City: Beacon Hill Press, 2005).*

*+ J. Oswald Sanders. Spiritual Leadership. (Chicago: Moody Publishers, 2007).*

[161] *நெகேமியா 2:17*

*இரண்டாம் உலகப்போரின் இருண்ட நாட்களில் ஒன்றில், வின்ஸ்டன் சர்ச்சில் அமைச்சரவை அறைக்குள் நுழைந்து, "பிரியமானவர்களே, இது எனக்கு உத்வேகம் அளிப்பதாகக் காண்கிறேன்" என்றார். சர்ச்சில் தன்னைப் பின்பற்றுப வர்களுக்கு ஒரு பார்வையை எவ்வாறு தொடர்புகொள்வது மற்றும் முன்னேற அவர்களை ஊக்குவிப்பது எப்படி என்பதை அறிந்திருந்தார். கடினமான காலங்களில் விடாமுயற்சியுடன் தங்களைப் பின்பற்றுபவர்களுக்கு எப்படி சவால் விடுவது என்பது பெரிய தலைவர்களுக்குத் தெரியும்.*

**(2) ஆவிக்குரியத் தலைவர்கள் கவனமாகத் திட்டமிட வேண்டும்.**

*கவனமாகத் திட்டமிடத்தவறிய ஒரு தொலைநோக்குத் தலைவன் தனது தரிசனத்தை அரிதாகவே யதார்த்தத்திற்குக் கொண்டு வருவான். நெகேமியா திட்டமிடுவதில் வல்லவர். ராஜா தனது கோரிக்கையைக் கேட்டபோது, நெகேமியா குறிப் பிட்ட கோரிக்கைகளை வழங்கினார்: அரண்மனை பணிகளில் இருந்து விலகிய நேரம், சுவர்களுக்கான பொருட்கள், பயணத்தி ற்கான அதிகார கடிதங்கள்.*[162] *நெகேமியா வெறுமனே, "இது தேவனுடைய வேலை, எனவே தேவன் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்வார்" என்று கூறவில்லை.*

*நெகேமியா திட்டத்தின் ஒவ்வொரு அடியையும் கவனமாகத் திட்டமிட்டு, ஜனங்களுக்கு இடையே வேலையைப் பிரித்தார். அவர் தொழிலாளர்களை அவர்களுக்கு மிகவும் அர்த்தமுள்ள பகுதிகளுக்கு நியமித்தார், இது ஒரு முக்கியமான ஊக்கமூட்டும் யுக்தியாகும்.*[163]*ஆவிக்குரியத் தலைவர்கள் தேவனுடைய தரிச னத்தைத் தேடுகிறார்கள், பின்னர் அவர்கள் வேலையைத் திட்டமிடுவதில் தேவனுடைய வழிகாட்டுதலை நாடுகிறார்கள்.*

**(3) ஆவிக்குரியத் தலைவர்கள் தைரியமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.**

---

[162] *நெகேமியா 2:4-8*

[163] *உதாரணமாக, பூசாரிகள் ஆட்டு வாசலில் வேலை செய்தார்கள், கோவிலுக்கு அருகில் உள்ள வாயில் (3:1). ஜெதாயா தனது வீட்டின் அருகே பழுதுபார்த்தார் (3:10). நெகேமியா வேலையாட்களுக்கு முக்கியமான பணிகளைக் கொடுத்தார்; இது அவர்களின் வேலையின் உரிமையை அவர்களுக்கு வழங்கியது..*

*இஸ்ரவேல் கட்டத்தொடங்கியதும் எதிர்ப்பு எழுந்தது. சன்பல்லாத் மற்றும் தோபியா ஆகியோர் திட்டத்தை கேலி செய்தனர்; பின்னர் அவர்கள் நெகேமியாவுக்கு எதிராக மிரட்டல் விடுத்தனர். அவர்கள் நெகேமியாவுக்கு தீங்கு விளைவிக்கும் ஒரு கூட்டத்திற்கு அழைக்க திட்டமிட்டனர். நெகேமியாவின் பதில் எதிர்ப்பை எதிர்கொள்ளும் ஒரு தலைவனின் பார்வையில் கவனம் செலுத்தும் திறனுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு: "நான் பெரிய வேலையைச் செய்கிறேன், நான் வரக் கூடாது, நான் அந்த வேலையைவிட்டு உங்களிடத்திற்கு வருகிறதினால் அது ஏன் மினக்கட்டுப்போவானேன்?"[164] நெகேமியா வேலையிலிருந்து வர மறுத்துவிட்டார். அவரது உயிருக்கு ஆபத்து ஏற்பட்ட போதும், தேவன் கொடுத்த தரிசனத்தை அவர் பின்பற்றினார். ஆவிக்குரியத் தலைவன் தைரியமுள்ளவனாக இருக்க வேண்டும்.*

**(4) ஆவிக்குரியத் தலைவர்கள் சேவை மனப்பான்மை கொண்டிருக்கிறார்கள், சொந்த பேர்புகழுக்கு அல்ல.**

*தலைவர்கள் பெரும்பாலும் தங்கள் பதவியை சுய முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்துகிற காலத்தில், நெகேமியாவின் உதாரணம் சக்தி வாய்ந்தது. எருசலேமில் சில தலைவர்கள் தங்கள் பதவியை தனிப்பட்ட லாபத்திற்காக பயன்படுத்தினர். நெகேமியா கூறுகிறார், "நானோ தேவனுக்குப் பயந்ததினால் இப்படிச் செய்யவில்லை. ஒரு வயலையாவது நாங்கள் கொள்ளவில்லை; அந்த அலங்கத்தின் வேலையிலே முயன்று நின்றேன்."[165] ஒரு ஆவிக்குரியத் தலைவன் தனது பதவியை அவன் சேவை செய்யும் ஜனங்களின் நன்மைக்காகப் பயன்படுத்துகிறான், அவனுடைய சொந்த முன்னேற்றத்திற்காக அல்ல.*

*சீனாவிற்கான சிறந்த மிஷனரியான ராபர்ட்மோரிசன் எழுதினார்: "எங்கள் பணிகளில் உள்ள பெரிய தவறு என்னவென்றால், யாரும் இரண்டாவதாக இருக்க விரும்புவதில்லை."[166] ஆவிக்குரியத் தலைவர்கள் சேவைக்கான வாய்ப்புகளைத்*

---

*[164] நெகேமியா 6:3.*

*[165] நெகேமியா 5:15-16.*

*[166] J. Oswald Sanders, Spiritual Leadership, (Chicago: Moody Publishers, 2007), 63 என்னும் புத்தகத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.*

*தேடுகிறார்கள், சுய விளம்பரத்திற்காக அல்ல. அவர்கள் தங்கள் பதவியை தாங்கள் வழிநடத்தும் ஜனங்களின் நன்மைக்காகப் பயன்படுத்துகிறார்கள்.*

## (5) *ஆவிக்குரியத் தலைவர்கள் ஜெபத்தின் முக்கியத்துவத்தை அறிந்திருக்கிறார்கள்.*

*நெகேமியாவின் தலைமைக்கு ஜெபம் மையமாக இருந்தது. ஜெபம் இல்லாமல் எந்த முக்கிய முடிவுகளையும் அவர் எடுக்கவில்லை. யோசுவாவில், யோசுவா கிபியோனியருடன் தேவனுடையவழிகாட்டுதலைத் தேடுவதற்கு முன்பாக ஒரு ஒப்பந்தம் செய்தபோது அதன் விளைவைக்கண்டோம்.*[167] *நெகேமியா இந்தப்பிழையைத் தவிர்த்தார்; ஜெபத்திற்குப் பிறகு ஒவ்வொரு முடிவும் எடுக்கப்பட்டது.*

*ஆவிக்குரியத் தலைவர்களுக்கான ஜெபத்தின் முக்கியத் துவத்தை குறித்து லூக்காவின் நற்செய்தி நூல் ஒரு சக்திவாய்ந்த விளக்கத்தை அளிக்கிறது. "அந்நாட்களிலே, அவர் (இயேசு) ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்துகொண்டு, அவர்களு க்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்."*[168] *பன்னிரண்டு பேரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பாக, இயேசு ஜெபத்தில் இரவைக் கழித்தார். ஒரு முக்கியமான தீர்மானத்திற்கு முன்பாக ஜெபத்தின் முக்கியத்துவத்தை தேவனுடைய குமாரன் கண்டார் என்றால், தலைமை முடிவுகளுக்கு முன் நாம் எவ்வளவு அதிகமாக ஜெபிக்க வேண்டும்!*

## (6) *ஆவிக்குரியத் தலைவர்கள் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஏற்றவாறு சீரமைத்துக்கொள்ள வேண்டும்.*

*ஒரு சிறந்த போர்க்காலத் தலைவன் சமாதான காலத்தில் பேரழிவை ஏற்படுத்தும் தலைவனாக இருக்கலாம். ஒரு இளம் திருச்சபையைக் கட்டும் போதகர் மிகவும் முதிர்ந்த விசுவாசிகள் உள்ள திருச்சபையை வழிநடத்தப் போராடலாம். நிறுவன*

---

[167] *யோசுவா 9*

[168] *லூக்கா 6:12-13*

ங்களுக்கு அவற்றின் வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களில் வெவ்வேறு வகையான தலைமை தேவைப்படுகிறது.

இந்த சவாலை எதிர்கொள்ளும் தலைவர்களுக்கு நெகேமியா ஒரு முன்மாதிரியை வழங்குகிறார். ஆவிக்குரியத் தலைவர்கள் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஏற்றவாறு பகுத்தறிவு பெற்றிருக்க வேண்டும். "சூழ்நிலை எவ்வாறு கட்டளையிடுகிறதோ அதன்படி வழிநடத்துபவனே திறமையான தலைவன். ஒரு சூழ்நிலையில் ஒரு வழியில் வழிநடத்தும் நபர் அடுத்த சூழ்நிலையில் அதே வழியில் வழிநடத்த வேண்டிய அவசியமில்லை."[169]

பானபாத்திரக்காரனாக, நெகேமியா செல்வாக்குமிக்க இடத்தில் இருந்தார். அங்கு, அவரது செல்வாக்கு ராசாவுக்கு செவிசாய்க்கும் மற்றும் அறிவுரை கூறும் திறனை அடிப்படையாகக் கொண்டது. நெகேமியாவின் ஆலோசனைகளை ராஜா மதிப்பார்; ஆனால் அவர் நெகேமியாவின் கட்டளைகளை ஏற்றுக் கொண்டிருக்கமாட்டார்.

எருசலேமின் சுவர்களை மீண்டும் கட்டும் போது, நெகேமியா வேறு அணுகு முறையை எடுக்க வேண்டும். இங்கே, அவரது தலைமையானது ஒழுங்கமைத்து ஊக்குவிக்கும் திறனை அடிப்படையாகக் கொண்டது. அவர் அமைதியான ஆலோசனைகளை வழங்க முடியாது; ஊக்கம் இழந்த எருசலேம் ஜனங்களுக்கு அவர் கட்டளையிட்டு ஊக்குவிக்க வேண்டும்.

பின்னர், நெகேமியா ஆளுநராகப் பணியாற்றினார் (நெகேமியா 7-13). ஜனங்கள் உடன்படிக்கையை உடைத்துவிட்டார்கள் மற்றும் நெகேமியா அதிகாரம் மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் மக்களை வழிநடத்த வேண்டியிருந்தது. இதை நாம் நெகேமியா 13ல் பார்க்கிறோம்; "நான் கட்டளையிட்டேன்"; "நான் தலைமையானவர்களோடே வழக்காடி"; நான் "அவர்களை அவர்களின் இடத்தில் வைத்தேன்." இது ஒரு பானபாத்திரம் அல்லது கட்டுகிறவனின் தலைமைத்துவ பாணியை விட வேறுபட்டது. ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒரு அமைப்பை எவ்வாறு வழிநடத்துவது என்பதை அறிய ஆவிக்குரியத் தலைவர்களுக்கு விவேகம் இருக்க வேண்டும்.

---

[169] Al Long, *Leadership Tripod*, (Indianapolis: Power Publishing, 2005), 33

*ஒரு திருச்சபை அல்லது ஊழியத் தலைவராக, நெகேமியாவைப் பற்றிய கவனமான படிப்பு மூலமும், தலைமைத்துவத்திற்கான அவரது அணுகுமுறையிலிருந்தும் நீங்கள் பயனடைவீர்கள். நெகேமியா உண்மையான ஆவிக்குரியத்தலைமைக்கு முன்மா திரியாக விளங்குகிறார்.*

## எஸ்தர்

*கருப்பொருள்: கடவுள் அனைத்தையும் கட்டுப்பாட்டில் வைத் திருக்கிறார்*

*சாத்தியமான காலம்: கி.மு.483-473*

*►எஸ்தரின் புத்தகம், தேவன் அவருடைய ஜனங்களைப் பாதுகாப்பதற்கான பராமரிப்பை வழங்குவதைக் காட்டுகிறது. உங்கள் வாழ்க்கையிலோ அல்லது உங்கள் திருச்சபையின் வாழ்க்கையிலோ தேவனுடைய பாதுகாப்பின் உதாரணத்தை நீங்கள் சுட்டிக்காட்ட முடியுமா?*

எஸ்தர் புத்தகத்தின் நிகழ்வுகள் எஸ்றா 6 மற்றும் 7க்கு இடையில் நடைபெறுகின்றன. தேவன் எருசலேமில் தம்மு டைய ஜனங்களைப் பாதுகாத்துக்கொண்டிருந்தபோது, அவர் இன்னும் பெர்சியாவில் இருந்த தம் ஜனங்களையும் பாதுகாத்து வந்தார். எருசலேமில் இருந்தாலும் சரி, பெர்சியாவில் இருந் தாலும் சரி, தேவன் சகலத்தையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டிருக்கிறார்.

எஸ்தரின் எழுத்தாளர் யாரென்று தெரியவில்லை. சிலர் மொர்தெகாய் அதன் எழுத்தாளராக இருக்கலாம் என முன் மொழிந்துள்ளனர், ஆனால் எஸ்தரின் புத்தகம் அதன் எழுத்தா ளரைஅடையாளம் காண்பிக்கவில்லை.

எஸ்தரின் நிகழ்வுகள் அகாஸ்வேருவின் ஆட்சியின்போது, கி.மு. 483-473 இல் நடந்திருக்கலாம்.[170] இது பெர்சியாவின் தலை நகரான சூசாவின் கட்டமைப்பைக் கொண்டுள்ளது.

---

[170] அகாஸ்வேரு பொதுவாக அவருடைய கிரேக்கப் பெயரான சஷ்டா I என அழைக்கப்படுகிறார். அவர் பெர்சியாவை கி.மு. 486-465 வரை ஆட்சி செய்தார்.

ரூத்தின் புத்தகத்தைப் போலவே, எஸ்தரின் புத்தகமும் ஒரு இளம் பெண்ணைப் பற்றிய ஒரு சிறுகதையாகும், அவர் துன்பங்களை எதிர்கொள்வதில் உண்மையுள்ளவராக இருக்கிறார். ரூத் இஸ்ரவேலில் வாழ்ந்தபோது யேகோவாவுக்கு உண்மையாயிருந்த ஒரு மோவாபிய பெண்; எஸ்தர் பெர்சியாவில் வாழ்ந்தபோது யேகோவாவுக்கு உண்மையாக இருந்த ஒரு யூதப் பெண். ரூத்தின் விசுவாசம் அவளுக்கு மேசியாவின் பரம்பரையில் ஒரு இடத்தைப் பெற்றுத் தருகிறது; எஸ்தரின் விசுவாசம் தேவனுடைய ஜனங்களை அழிவிலிருந்து காப்பாற்றுகிறது.

## எஸ்தர் புத்தகத்தின் உள்ளடக்கங்கள்

எஸ்தர் புத்தகத்தின் மதிப்பை சில எழுத்தாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அவர்கள் அதை உலகப்பிரகாரமான யூதபண்டிகையான பூரிமுடன் இணைக்கப்பட்ட உலகப்பிரகாரமான புத்தகமாக பார்க்கிறார்கள்.[171] எஸ்தரின் புத்தகம் தேவனையோ, ஜெபத்தையோ, உடன்படிக்கையையோ குறிப்பிடவில்லை. இது ஒருபோதும் புதிய ஏற்பாட்டில் மேற்கோள் காட்டப்படவில்லை, அல்லது சவக்கடல்சுருள்களிலும் காணப்படவில்லை. இருப்பினும், இது விசுவாசிகளுக்கு மிகுந்த ஊக்கமளிக்கும் ஒரு புத்தகம். எஸ்தர் தேவனுடைய ஜனங்களுக்கு நம்பிக்கையின் சக்திவாய்ந்த செய்தியை முன்வைக்கிறது. பின்வருபனவற்றை எஸ்தரின் புத்தகம் கற்பிக்கிறது:

### தேவனுடைய இறையாண்மை

தேவனுடைய பெயர் குறிப்பிடப்படவில்லை என்றாலும், அவர் எஸ்தர் புத்தகத்தின் "பெயர் குறிப்பிடப்படாத மையக்கதாபாத்திரம்" ஆவார். சிலர் வாய்ப்பு அல்லது தற்செயல் என்று அழைப்பது உண்மையில் தேவனுடைய கரத்தின் கிரியை ஆகும். இந்த கதையில் உள்ள சில "தற்செயல் நிகழ்வுகளை" கவனியுங்கள்:

---

[171] இன்றும் மார்கழி மாதத்தில் பூரிம் கொண்டாடப்படுகிறது. இது பூர் அல்லது "நிறைய" என்ற வார்த்தையிலிருந்து வந்தது. சீட்டு போட்டு யூதர்களை அழிக்கும் நாளை ஆமான் தேர்ந்தெடுத்தான். பூரிமில், யூதர்கள் தங்கள் எதிரிகளிடமிருந்து இரட்சிக்கப்பட்டதைக் கொண்டாடுவார்கள்.

- ராஜ்யத்தில் உள்ள அனைத்து பெண்களில், எஸ்தர், ஒரு யூதர், ராணியாக தேர்ந்தெடுக்கப்படுவது "நிகழ்கிறது"..[172]

- ராஜா அகாஸ்வேருவைக் கொல்லும் சதியைக் கேட்கும்படி மொர்தெகாய் சரியான நேரத்தில் சரியான இடத்தில் இருக்கும்படி "நிகழ்கிறது". அவர் எஸ்தரிடம் சதித்திட்டத்தை வெளிப்படுத் துகிறார், அவர் ராஜாவிடம் கூறுகிறார்.[173]

- எஸ்தர் ஆமானின் சதித்திட்டத்தை ராஜாவுக்கு வெளிப்படுத்தத் திட்டமிடுவதற்கு முந்தைய இரவு அகாஸ்வேரு தூக்கமின்மையால் அவதிப்படுவது "நிகழ்கிறது".[174]

- அகாஸ்வேரு தூங்குவதற்கு உதவக்கூடிய அனைத்து பதிவுகளிலும், மொர்தெகாய் ராஜாவுக்கு செய்த சேவையின் பதிவை வாசகர் வாசிப்பது "நிகழ் கிறது".[175]

- மொர்தெகாய்க்கு எப்படி வெகுமதி அளிக்கலாம் என்று அகாஸ்வேரு யோசித்துக் கொண்டிருக் கையில், ஆமான் ராஜாவின் அறைக்குள் நுழைவது "நிகழ்கிறது".[176]

ஒரு இறையாண்மையுள்ள தேவன் ரூத்தை போவாஸின் வயலுக்குக் கொண்டு வந்தது போல, ஒரு இறையாண்மையுள்ள தேவன் பெர்சியாவில் தனது ஜனங்களைப் பாதுகாத்தார். தேவனுடையக் கரம் கிரியைச் செய்வதை மொர்தெகாய் பார்த்தார்: "நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி

[172] எஸ்தர் 2:1-18
[173] எஸ்தர் 2:19-23
[174] எஸ்தர் 6:1
[175] எஸ்தர் 6:1-3
[176] எஸ்தர் 6:6

*உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்?"*[177]

## *விசுவாசமாக இருத்தலின் முக்கியத்துவம்*

*எஸ்தர் புத்தகம் முழுவதும், தேவனுடைய ஊழியர்களின் விசுவாசம் சிறப்பித்துக் காட்டப்படுகிறது. எஸ்தரின் கதை யோசேப்பின் கதைக்கு இணையான பலவற்றைக் கொண்டு ள்ளது. இருவரும் அந்நிய தேசத்தில் விசுவாசமுள்ள வாலிப ஆணை/பெண்ணைக் காட்டுகின்றன. இரண்டு கதாபாத்திரங் களும் அரசாங்கத்தில் செல்வாக்குமிக்க பதவிகளுக்கு உயர்த்தப் படுகின்றன. இரண்டு கதாபாத்திரங்களும் தேவன் தனது ஜனங்களை ஆபத்தான நேரத்தில் இரட்சிக்க அவரால் பயன்படுத்தப்படுகிறார்கள்.*

*தேவனுக்கு எஸ்தர் விசுவாசமாக இருப்பது கதை முழுவதும் காணப்படுகிறது. "நான் செத்தாலும் சாகிறேன்" என்ற அவரது கூற்று, முடிவைப் பொருட்படுத்தாமல் தனது பொறுப்பை உண்மையுடன நிறைவேற்ற எஸ்தர் கொண்டிருந்த உறுதியைக் காண்பிக்கிறது*

*எஸ்தரின் புத்தகம் மொர்தெகாயின் விசுவாசத்தைக் காட்டு கிறது. யோசேப்பு மற்றும் தானியேலைப் போலவே, மொர்தெ காய் செல்வாக்கின் ஒரு நிலைக்கு உயர்த்தப்படுகிறார், இது தேவனுடைய நோக்கங்களை அடைய அவரை அனுமதிக்கும் நிலை.*[178]

## *துன்மார்க்கத்தின் மதியீனம்*

*பூரிம்பண்டிகையின் நவீன அனுசரிப்புகளின்போது, நாடகங்கள் எஸ்தரின் கதையை மீண்டும் அரங்கேற்றுகின்றன. ஆமான் என்ற பெயர் கேட்கப்படும் ஒவ்வொரு முறையும், பார்வை யாளர்கள் தேவனுடைய ஜனங்களின் இந்த எதிரியை ஏளனம் செய்து கேலி செய்கிறார்கள். பண்டிகை உலகப்பிரகாரமானது என்றாலும், பூரிம்பண்டிகை கொண்டாடும் பலர் கதையில் தேவனுடைய இறையாண்மையை மறந்துவிட்டாலும், கொண் டாடும் விதம் கூட எஸ்தரின் செய்தியின் ஒரு பகுதியை*

---

[177] *எஸ்தர் 4:14.*

[178] *எஸ்தர் 10:3*

*பிரதிபலிக்கிறது - துன்மார்க்கத்தின் முட்டாள்தனம் அல்லது அபத்தம்.*

*அகாஸ்வேரு மற்றும் ஆமான் இருவரும் கதையில் கேலிக்குரிய நபர்களாக மாறுகிறார்கள். அகாஸ்வேருஸ் 127மாகாணங்களின் மீது ஒரு சக்திவாய்ந்த மாமன்னன். அவர் தனது செல்வத்தையும் அதிகாரத்தையும் கொண்டாட 180 நாட்கள் திருவிழா நடத்து கிறார், ஆனால் அவரால் தனது மனைவியைக் கட்டுப்படுத்த முடியவில்லை.*

*ஆமான் தன் பொல்லாத சதி தனக்கு எதிராக மாறியதைக் கண்டான். ஆமான் தன்னைக் கனப்படுத்த முயற்சிக்கிறான், ஆனால் அவனுடைய எதிரியான மொர்தெகாயை கௌரவிக்க நியமிக்கப்பட்டான்.[179]ஆமான் யூதர்களை அழிக்க முயற்சிக் கிறான், ஆனால் தன்னையும் அவனது குடும்பத்தையும் அழித்துக்கொள்கிறான்.[180]நீதிமொழிகள் போதிப்பது போல், தேவன் தன்னை "இகழ்வோரை அவர் இகழுகிறார்."[181]*

## புதிய ஏற்பாட்டில் எஸ்றா, நெகேமியா மற்றும் எஸ்தர்

*2 ராஜாக்களின் புத்தகம் யூதர்கள் பாபிலோனுக்கு சிறைப்பட்டு போகிறார்கள் என்பதோடு முடிவடைகிறது, தேவாலயம் அழிக்கப்பட்டது, சிங்காசனத்தில் எந்த ராஜாவும் இல்லை, மேசியாவின் அடையாளமும் இல்லை. ஆபிரகாமுக்கு அளித்த வாக்குறுதி வெறுமையாகத் தோன்றியது. எஸ்றாவும் நெகேமி யாவும் அந்த வாக்குறுதியின் மறுபிறப்பைக் காட்டுகின்றன. ராஜா இல்லை என்றாலும், இஸ்ரேல் தனது தாயகத்திற்குத் திரும்பியுள்ளது மற்றும் மேசியாவின் வருகைக்கான மேடை அமைக்கப்பட்டுள்ளது. எஸ்தர் புத்தகம் முக்கியமானது, ஏனெ ன்றால், ஆதியாகமத்தின் முடிவில் யோசேப்பைப் போலவே, அவரது கதையும் தேவன் எவ்வாறு மேசியாவின் வம்சத்தைப் பாதுகாத்தார் என்பதைக் காட்டுகிறது. புதிய ஏற்பாட்டில் இந்தப் புத்தகங்களுக்கு முக்கியத்துவம் இல்லை என்றாலும், அவை மேசியாவின் பிறப்புக்கு அவசியமானவை. எஸ்றா(ஒரு ஆசாரி யன்), நெகேமியா (ஒரு பானபாத்திரக்காரன்), மற்றும் எஸ்தர்*

---

*[179]எஸ்தர் 6:1-11*

*[180]எஸ்தர் 7:7-10; 9:10*

*[181]நீதிமொழிகள் 3:34*

*(ஒரு புறமத தேசத்தில் ஒரு ராணி), ஆகியோர் மூலம் தேவன் தம்முடைய குமாரன் பிறப்பதற்கான வழியை ஆயத்தப்படுத் தினார்.*

## வரலாற்றுப் புத்தகங்கள் இன்றும் பேசுகின்றன

*அதிகாரம் 4இல், எபிரேய வேதாகமம் சரித்திரப் புத்தகங்களுக்கு "முந்தையதீர்க்கதரிசிகள்" என்ற தலைப்பைப் பயன்படுத்து வதைக் கண்டோம். இது அவற்றின் நோக்கத்தைக் காட்டுகிறது: தேவனுடைய செய்தியை தேவனுடைய ஜனங்களுக்கு கொண்டு வருகிறது. சரித்திரப்புத்தகங்கள் ஒவ்வொன்றும் இன்று நமக்கு ஒரு செய்தியை தருகின்றன.*

*நியாயாதிபதிகள், சாமுவேல் மற்றும் ராஜாக்கள்* ***விதைவி தைத்து அறுவடை செய்யும் கொள்கையை*** *நிரூபிக்கின்றன. தேவனுடைய ஜனங்கள் உடன்படிக்கைக்கு விசுவாசமாக இருந் ததால், அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தை அனுபவித்தனர்; அவர்கள் உடன்படிக்கையை மீறினபோது, அவர்கள் தேவனு டைய நியாயத்தீர்ப்பை அனுபவித்தனர். இந்த கொள்கை சில சமயங்களில் திருச்சபையில் தவறாக பயன்படுத்தப்படுகிறது. இஸ்ரவேல் தேசத்தின் வரலாற்றை மற்றொரு சூழ்நிலையில் பயன்படுத்தும்போது நாம் கவனமாக இருக்க வேண்டும். தேவனுக்கு உண்மையாகக் கீழ்ப்படிகிற ஒரு கிறிஸ்தவருக்குப் பொருளாதார செழுமையும் உடல் ஆரோக்கியமும் உத்தரவாத மளிக்கப்படும் என்று கற்பிக்க சில மொழிபெயர்ப்பாளர்கள் இந்தப் புத்தகங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். யோபு புத்தகமும் புலம்பல் சங்கீதங்களும் தேவபக்தியுள்ள மனிதர்கள் பாதிக்கப்படலாம் என்பதை நிரூபிக்கின்றன. இருப்பினும், அடிப்படைக் கொள்கை உண்மையாகவே உள்ளது; தேவனு டையஅங்கீகாரமும் ஆசீர்வாதமும் அவருக்கு விசுவாசமாக இருப்பவர்கள் மீது தங்கியிருக்கிறது.*

*யோசுவா, ரூத், நெகேமியா மற்றும் எஸ்தர் ஆகிய புத்தகங்கள்* ***தேவனுக்கு விசுவாசமாக இருப்பதன் முக்கியத்துவத்தைக்*** *காட்டுகின்றன. தேவன் இறையாண்மைக் கொண்டவர், ஆனால் தேவன் மனித கருவிகள் மூலம் செயல்படுகிறார். தேவனுடைய வார்த்தையின் போதனைகளுக்கு நாம் உண்மையாக இருக்க வேண்டுமானால் இந்த இரண்டு சத்தியங்களும் ஒப்புக்கொள்*

ளப்பட வேண்டும். மொர்தெகாய் எஸ்தரிடம் சொன்னபோது இந்த சத்தியத்தைவெளிப்படுத்தினார், "நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்துஎழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட கால த்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத் திருக்கலாமே, யாருக்குத் தெரியும்?"[182] மொர்தெகாய் தேவனு டைய இறையாண்மையை அங்கீகரித்தார்; தேவன் தம் ஜனங் களை ஏதோ ஒரு வழியில் நிச்சயம் காப்பாற்றுவார். இருப்பினும், விசுவாசமாக இருப்பதில் எஸ்தரின் பொறுப் பையும் மொர்தெகாய் உணர்ந்தார். இக்னேஷியஸிடமிருந்து மேற்கோள்காட்டப்பட்ட ஒரு கூற்று இப்படியாகக் கூறுகிறது, நீங்கள் "எல்லாமே தேவனைச் சார்ந்திருப்பது போல் ஜெபிக்க வேண்டும், மேலும் எல்லாமே உங்களைச் சார்ந்தது போல் செயல்பட வேண்டும்."

இது இன்று நமக்கு என்ன சொல்கிறது? யோசுவா, ரூத், நெகேமியா, எஸ்தர் ஆகியோரைப் போல நாமும் முழு மனதுடன் தேவனுடைய ஊழியத்தில் ஈடுபட வேண்டும், எதையும் செய்யாமல் இருக்கக் கூடாது. பின்னர், அந்த பரிசுத் தவான்களைப் போலவே, நாமும் அவருடைய விருப்பத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். எஸ்தரைப் போலவே நாமும் தேவனுடைய நோக்கங்களுக்கு சரணடையும் மனப் பான்மையைக் கொண்டிருக்க வேண்டும்: "நான் செத்தாலும் சாகிறேன்."

இறுதியாக, சரித்திரப் புத்தகங்கள் **நம்பிக்கையின் செய்தியைக்** கொண்டுவருகின்றன. எஸ்றா, நெகேமியா மற்றும் நாளாகமம் புத்தகங்கள் அடிமைகளாக நாடுகடத்தப்பட்டாலும் தேவன் தம்முடைய ஜனங்களைக் கைவிடவில்லை என்பதைக் காட்டு கின்றன. இன்றும், தேவன் தம்முடைய நோக்கங்களை நிறை வேற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை அறிவதினால் நாம் உற்சாகப்படுத்தப்படலாம். தேவனுடைய சித்தத்தை நிறைவேற் றுவதில் தேவனுடைய இறையாண்மையை சரித்திரப்புத் தகங்கள் நமக்கு நினைவூட்டுகின்றன. எதிர்காலத்தை நம்பிக்கை

---

[182] எஸ்தர் 4:14

*யுடன் எதிர்கொள்ளலாம்; தேவன் சகலத்தையும் தமது கட்டுப் பாட்டில் கொண்டிருக்கிறார்.*

## ***பாடம் 6 வீட்டுப்பாடங்கள்***

(1) *பின்வரும் வீட்டுப்பாடங்களில்**ஒன்றைத்** தேர்ந்தெடுக்கவும்:*

*விருப்பம் 1: குழு வீட்டுப்பாடம்*

*நெகேமியாவின் புத்தகத்தை வாசித்து, தலைமைத்துவக் கொள் கைகளின் பட்டியலை உருவாக்கவும். இந்த அதிகாரத்தில் பகிரப்பட்ட கொள்கைகளுடன் நீங்கள் தொடங்கலாம், ஆனால் நெகேமியாவில் இன்னும் பல உள்ளன. ஒரு குழுவாக, நீங்கள் கண்டறிந்த கொள்கைகளைப் பற்றி விவாதிக்கவும். இந்த நியமங்களை உங்கள் ஊழியத்தில் எவ்வாறு கடைப்பிடிப்பீர்கள் என்பதையும் காட்டுக.*

*விருப்பம் 2: தனிப்பட்ட வீட்டுப்பாடம். ஒன்றைத் தேர்ந்தெடு க்கவும்.*

- *எஸ்றா மற்றும் எருசலேமில் அவரது எழுப்புதலின் அடிப்படையில் "எழுப்புதல்" பற்றிய 1-2பக்க (450-800 வார்த்தைகள்) கட்டுரையை எழுதுக.*
- *நெகேமியாவின் அடிப்படையில் "ஆவிக்குரியத் தலைமை" பற்றிய 1-2பக்க (450-800 வார்த்தைகள்) கட்டுரையை எழுதவும். இந்த அதிகாரத்தில் பட்டியலிடப் பட்டுள்ளதைத் தாண்டி குறைந்தபட்சம் 2-3 தலைமைத் துவக் கொள்கைகளைக் கண்டறியவும். இந்த நியமங் களை உங்கள் ஊழியத்தில் எவ்வாறு கடைப்பிடிப் பீர்கள் என்பதையும்காட்டுக.*
- *எஸ்தரின் அடிப்படையில் "தேவனுடைய பராமரிப்பு" பற்றிய 1-2பக்க (450-800 வார்த்தைகள்) கட்டுரையை எழுதுக.*

(2) *இந்த பாடத்தில் ஒரு தேர்வை எழுதவும். தேர்வில் மனப்பாடம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட வேதவசன ங்களும் உட்பட்டு இருக்கும்.*

## பாடம் 6 தேர்வு

(1) மறுசீரமைப்புக் காலத்தின் முதன்மை நிகழ்வுகளுக்கான வருடங்களைப் பட்டியலிடுக.

செருபாபேல் தலைமையில் முதல் குழு எருசலேமுக்குத் திரும்பிவருதல்: _______________

தேவாலயத்தின் கட்டிடப்பணியின் நிறைவு: _______________

எஸ்தர் புத்தகத்தின் நிகழ்வுகள்: ______________

எஸ்றா தலைமையில் இரண்டாவது குழு எருசலேமுக்குத் திரும்பிவருதல்: ______________

நெகேமியா எருசலேமுக்குத் திரும்பிவருதல்: ______________

(2) ஒவ்வொரு புத்தகத்திற்கும் கருப்பொருளைப் பட்டியலிடுக.

எஸ்றா: __________________________________________

நெகேமியா: __________________________________________

எஸ்தர்: __________________________________________

(3) எஸ்றா மற்றும் நெகேமியா புத்தகங்களுக்கு இடையே உள்ள இரண்டு ஒற்றுமைகளைப் பட்டியலிடுக.

(4) ___________ பேரரசு தாங்கள் வென்ற தேச மக்களை அவரவர்கள் தாயகத்தில் இருக்க அனுமதித்தது.

(5) ____________ மற்றும் _____________ "தேவாலயத் தீர்க்கதரிசிகள்" என்று அழைக்கப்படுகிறார்கள்.

(6) யூதர்களுக்கும் அவர்களது அண்டை தேசத்தாருக்கும் இடையே திருமணம் செய்வது ஏன் எஸ்றாவுக்கும் நெகேமியாவுக்கும் ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது?

(7) எந்த சிறிய தீர்க்கதரிசி நெகேமியாவின் அதே பிரச்சினைகளை எடுத்துரைக்கிறார்?

(8) நெகேமியாவின் மூன்று தலைமைத்துவக் கொள்கைகளை பட்டியலிடுக.

(9) *எஸ்தரில் கற்பிக்கப்படும் மூன்று முக்கிய பாடங்களைப் பட்டியலிடுக.*

(10) *எஸ்தர் புத்தகத்துடன் இணைக்கப்பட்ட யூத விடுமுறை* _______________ *ஆகும்.*

(11) *நெகேமியா 2:17 மற்றும் எஸ்தர் 4:14ஐ நினைவிலிருந்து எழுதுக.*

# பாடம் 7

# யோபு மற்றும் சங்கீதம்: எபிரேய கவிதைகள்

## பாடத்தின் நோக்கங்கள்

*இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:*

(1) *யோபுவின் முதன்மையான கருப்பொருள் மற்றும் செய்தியை அறிந்து கொள்ளுதல்.*
(2) *யோபுவுக்கான தேவனுடைய சுய வெளிப்பாட்டைப் புரிந்து கொள்ளுதல்.*
(3) *வேதாகமக் கவிதையின் தன்மையைப் புரிந்து கொள் ளுதல்.*
(4) *சங்கீத புத்தகத்தின் கட்டமைப்பை விவரித்தல்.*
(5) *கிறிஸ்தவனுக்கு சாபமிடும் சங்கீதங்களின் பயன்பா ட்டை மதிப்பிடுதல்.*
(6) *யோபு மற்றும் சங்கீதப் புத்தகங்களின் செய்தியை இன்றைய உலகின் தேவைகளுடன் தொடர்புபடுத் துதல்.*

## இந்த பாடத்திற்கான ஆயத்தம்

*யோபு மற்றும் சங்கீதம் 1-29, 51-92 மற்றும் 119-150 ஆகியவற்றை வாசியுங்கள்.*

*சங்கீதம் 119:1-8-ஐ மனப்பாடம் செய்யுங்கள்.*

## எபிரேய கவிதைகளை வாசித்தல்

*பழைய ஏற்பாட்டு கவிதை புத்தகங்களில் யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி மற்றும் உன்னதப்பாட்டு ஆகியவை அடங்கும். பழைய ஏற்பாட்டின் பல புத்தகங்களில் சில விதைகள் உள்ளன, ஆனால் இந்த புத்தகங்கள் பெரும்பாலும் கவிதைகளாகவே உள்ளன.*

*ஆங்கிலக் கவிதைகளைப் போல, எபிரேய கவிதைகள் எதுகை மோனை அடிப்படையில் அமைந்தவை அல்ல. எபிரேய கவிதையின் சிறப்பியல்புகளைப் புரிந்துகொள்வது, கவிதைப் புத்தகங்களின் அழகை நன்றாகப் புரிந்துகொள்ள உதவும்.*

## ***ஒத்தத்தன்மை***

*எபிரேய கவிதையில் ஒத்தத்தன்மை மிக முக்கியமான பாகமாகும்., இரண்டு வரிகள் ஒரே கருத்தை வெளிப்படுத்த வெவ்வேறு சொற்களைப் பயன்படுத்துகின்றது. ஒரு எபிரேயக் கவிஞர் எதையாவது சொல்லிவிட்டு சற்று வித்தியாசமான கண்ணோட்டத்தில் அதைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார். மூன்று வகையான ஒத்தத்தன்மை உள்ளன:*

***ஒரே பொருளையுடைய ஒத்தத்தன்மை:*** *இரண்டாவது வரி முதல் வரிக்கு ஒத்த சொற்களால் கருத்தை வலுப்படுத்துகிறது.*

- *"கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்; உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும்."*[183]
- *"நீதியின் பாதையில் ஜீவன் உண்டு; அந்தப் பாதையில் மரணம் இல்லை."*[184]

***நேர் எதிரான பொருளையுடைய ஒத்தத்தன்மை:*** *முதல் வரி இரண்டாவது வரியில் வேறுபடுகிறது. ஞானியின் பாதையையும் மூடனுடைய பாதையையும் வேறுபடுத்திப் பார்க்க இந்த வடிவம் நீதிமொழிகளில் பயன்படுத்தப்படுகிறது.*

- *"ஞானமுள்ள மகன் தகப்பனை சந்தோஷப்படுத்துகிறான்; மூடத்தனமுள்ளவனோ தாய்க்குச் சஞ்சலமாயிருக்கிறான்."*[185]
- *"நீதிமானுடைய பேர் புகழ்பெற்று விளங்கும்; துன்மார்க்கனுடைய பேரோ அழிந்துபோகும்."*[186]

***மெருகூட்டும் ஒத்தத்தன்மை:*** *இரண்டாவது வரி முதல் வரியின் சிந்தனையை கூட்டுகிறது.*

---

*[183] சங்கீதம் 25:4*
*[184] நீதிமொழிகள் 12:28*
*[185] நீதிமொழிகள் 10:1*
*[186] நீதிமொழிகள் 10:7*

- *“கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சி யடையேன்.”[187]*
- *“எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்து க்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.”[188]*

**உருவக கூற்று**

வேதாகமப் புத்தகங்கள் அனைத்திலும் பேச்சு உருவங்கள் இருந்தாலும், கவிதை புத்தகங்களில் இந்த உருவகமானது குறிப் பாக முக்கியமானது. இந்த புத்தகங்களில் காணப்படும் பேச்சு உருவங்கள்:

- ஒரு **உருவகம்** ஒத்த இரண்டு விஷயங்களை ஒப்பிடுகிறது. "தேவன் என்னை நன்றாக கவனித்துக் கொள்கிறார்" என்பதை விட "கர்த்தர் என் மேய்ப்பராயி ருக்கிறார்"[189] என்பது மிகவும் மறக்கமுடியாதது மற்றும் வெளிப்படையானது.

- ***உயர்வு நவிற்சி*** ஒரு குறிப்பை வலியுறுத்த வேண்டுமென்றே மிகைப்படுத்தலைப் பயன்படுத்து கிறது. ஒரு புலம்பல் சங்கீதத்தில், தாவீது தனது துக்க த்தை விவரிக்கிறார், "இராமுழுவதும் என் கண்ணீரால் என் படுக்கையை மிகவும் ஈரமாக்கி, என் கட்டிலை நனைக்கிறேன்."[190]

- ***ஆள்தன்மைப்படுத்தல்*** மனிதனல்லாத ஒன்றிற்கு மனி தப் பண்புகளை அளிக்கிறது. “மலைகள் ஆட்டுக் கடாக்களைப்போலவும், குன்றுகள் ஆட்டுக்குட்டிகளை ப்போலவும் துள்ளினது.”[191]

- ***மானிடத்தன்மையைப் புகுத்துதல்*** தேவனின் இயல் பைப் பற்றிய உண்மையைத் தெரிவிக்க மனிதப்

---

*[187] சங்கீதம் 23:1*
*[188] நீதிமொழிகள் 4:23*
*[189] சங்கீதம் 23:1*
*[190] சங்கீதம் 6:6*
*[191] சங்கீதம் 114:4*

*பண்புகளைப் பயன்படுத்துகிறது. தேவனுடைய “கண்கள் மனுபுத்திரரைப் பார்க்கிறது; அவருடைய இமைகள் அவர்களைச் சோதித்தறிகிறது.”*[192]

### கரந்துறைப்பாட்டு

*கரந்துறைப்பாட்டுக் கவிதையில், ஒவ்வொரு சரணமும் எழுத்துக்களின் வரிசைப்படி அடுத்தடுத்த எழுத்தை முதல் எழுத்தாகக்கொண்ட சொல்லை வைத்துத் தொடங்குகிறது. இந்த வடிவம் முழுமையை வெளிப்படுத்துகிறது ("அ முதல் ஃ வரை..."). மிகவும் பிரபலமான இரண்டு எபிரேயக் கரந்துறைப்பாட்டுகள், தேவனுடைய நியாயப்பிரமாணம் பற்றிய சங்கீதம் 119, மற்றும் குணசாலியான ஸ்திரீ நீதிமொழிகள் 31.. சங்கீதம் 119 இல், ஒவ்வொரு சரணமும் எபிரேய எழுத்துக்களின் ஒரே எழுத்தில் தொடங்கும் 8 வசனங்களை உள்ளடக்கியது. நீதிமொழிகள் 31 இல், ஒவ்வொரு வசனமும் எபிரேய எழுத்துக்களின் அடுத்த எழுத்துடன் தொடங்குகிறது.*

## யோபு புத்தகத்தின் பின்னணி

*►உங்களுடைய "துன்பத்தின் இறையியல்" பற்றி விவாதிக்கவும். "தேவன் ஏன் அப்பாவிகள் துன்பப்பட அனுமதிக்கிறார்?" போன்ற இறையியல் கேள்விகளைப் பற்றி விவாதிக்கவும். அதே போல் , "ஒரு அப்பாவி நபரின் துன்பத்தை சமாளிக்க அவருக்கு நாம் எப்படி உதவுவது?" எனும் சபைப்போதக ஊழிய கேள்வி பற்றியும் விவாதிக்கவும்*

### யோபு புத்தகத்தின் எழுத்தாளர் மற்றும் எழுதப்பட்ட காலம்

*யோபுவின் புத்தகம் எந்தஒரு காலகட்டத்தையும் கொடுக்கவில்லை, ஆனால் நிகழ்வுகள் முற்பிதாக்களின் காலத்தில் நடந்திருக்கலாம். தகப்பன் தன் குடும்பத்திற்காக பலியைச் செலுத்துகிறார்; செல்வம் கால்நடைகளால் அளவிடப்படுகிறது; மற்றும் யோபுக்கு நீண்ட ஆயுட்காலம் உண்டு. இந்த உண்மைகள் யோபுவின் நிகழ்வுகளுக்கு ஒரு முற்பிதாக்களின் காலத்தைப்பரிந்துரைக்கின்றன.*

---

[192] *சங்கீதம் 11:4*

எழுதப்பட்ட காலத்தைப் போலவே, எழுதிய எழுத்தாளர் பற்றிய குறிப்பும் எதுவும் இல்லை. பரிந்துரைக்கப்பட்ட எழுத்தாளர்களில் யோபு, எலிகூ, மோசே, சாலமோன் மற்றும் ஏசாயாவின் காலத்தைச் சேர்ந்த ஒருவர் போன்றோர் அடங்குவர்.

## யோபு புத்தகத்தின் கருப்பொருள்

மேலோட்டமாகப் பார்த்தால், யோபுவின்கருப் பொருள் 'பாடுகள்' எனத் தோன்றுகிறது. புத்தகத்தின் முக்கிய நிகழ்வு யோபு தனது உடைமைகள், குடும்பம் மற்றும் ஆரோக்கியத்தை இழந்தது. உரையாடல் யோபுவின் பாடுகள் பற்றிய கேள்வி யைச் சுற்றியே வருகிறது. மேலும், பாடுகளின் கேள்வியை ஆராயும் யோபு புத்தகம் போன்ற பிற பண்டைய அண்மைக் கிழக்கு படைப்புகளும் உள்ளன.[193]

இருப்பினும், யோபுவே பாடுகளை அதன் கருப்பொருளாகப் பரிந்துரைக்கவில்லை. யோபுவே அவனுடைய பாடுகளுக்கான காரணத்தைப்பற்றிக் கேட்கவில்லை, மேலும் யோபுவின் பாடுகளைப் பற்றி தேவன் தனது பதிலில் ஒருபோதும் பேசுவதில்லை. புத்தகம் முதன்மையாகப் பாடுகளைப்பற்றி யதாக இருந்தால், பாடுகளின் அர்த்தத்திற்கு தேவன் ஒரு பதிலை வழங்குவார் என்று எதிர்பார்க்கிறோம். மாறாக, யோபுவின் பாடுகளைப்பற்றி தேவன் ஒருபோதும் குறிப்பிடுவதில்லை.

யோபுவின் செய்தியின் ஒரு பகுதி பாடுகளின் மத்தியில் உண்மையாக இருப்பது. யோபு அவருடைய உத்தமத்தன்மை க்கு சாட்சியாக இருக்கிறார்.[194] தேவன் சாத்தானுக்குக் கொடுத்த அறிக்கையின்படி அவர் யோபுவின் நேர்மைக்கு சாட்சியாக இருக்கிறார்.[195] யோபுவின் நேர்மை புத்தகத்தின் ஒரு முக்கிய அம்சம்.

---

[193] கி.மு.1300-1000 இல் இருந்து பாடுகள் பற்றிய இரண்டு பண்டைய அண்மை உரையாடல்கள் "ஞானத்தின் கர்த்தரை நான் துதிப்பேன்" என்பது ஒரு மெசொப்பொத்தாமியா மோனோலாக் ஆகும், அதில் ஒரு உன்னதமான பாபிலோனியன் பெரும் துன்பத்தை அனுபவித்து பின்னர் மார்டுக் கடவுளால் மீட்கப்படுகிறான். பாபிலோனிய தியோடசி *(Babylonian Theodicy)* என்பது ஒரு பாதிக்கப்பட்டவருக்கும் பாடுகளை விளக்க முயற்சிக்கும் ஒரு நண்பருக்கும் இடையிலான உரையாடலாகும்..

[194] யோபு 27:5 and 31:6

[195] யோபு 2:3

*யோபுவின்முதன்மைக் கருப்பொருள் "தேவனைத் தேடுதல்" என்பதாகும். யோபு தனது ஆஸ்தியை மீட்டெடுக்க அல்லது குணப்படுத்துவதைக் கேட்கவில்லை; அவருடைய வேண்டு கோள், "நான் அவரை எங்கே கண்டு சந்திக்கலாம் என்பதை அறிந்தால் நலமாயிருக்கும்; அப்பொழுது நான் அவர் ஆசனத் துக்கு முன்பாக வந்துசேருவேன்!"[196]யோபு தேவனை நெருக்க மாக அறிந்திருந்தார்; இப்போது அவர் தேவனிடமிருந்து பிரிந்ததாக உணர்கிறார். அவரது தேடல் பாடுகளின் விளக்கத்தி ற்காக அல்ல, மாறாக தேவனுடைய வெளிப்பாட்டிற்காக.*

*தேவனுடைய வெளிப்பாட்டிற்குப் பிறகு யோபுவின் பதிலால் இந்தக் கருப்பொருள் உறுதிப்படுத்தப்படுகிறது: "என் காதி னால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது."[197]தேவனைக் கண்டதும் யோபு திருப்தி அடைகிறான். யோபுக்கான பதில் பாடுகளின் விளக்கம் அல்ல; யோபுக்கு பதில் தேவன் தான்.*

## யோபு புத்தகத்தின் கண்ணோட்டம்

*யோபு புத்தகம் மூன்று பெரிய பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது:*

1. *முன்னுரை (யோபு 1—2)*
2. *கவிதை உரையாடல் (யோபு 3—42:6)*
3. *முடிவுரை (யோபு 42:7—17)*

### *முன்னுரை (யோபு 1–2)*

*முன்னுரையில், யோபு ஒரு குற்றமும் செய்யாதவர் என்று அறிகிறோம்; அவர் "உத்தமனும்சன்மார்க்கனும்" ஆவார். யோபுவின் துன்பம் அவருடைய எந்தப்பாவத்தினாலும் ஏற்பட வில்லை. விசுவாசத்தின் முன்மாதிரியாக தேவன் சுட்டிக் காட்டக்கூடிய ஒரு நேர்மையான மனிதன். யோபு தனது ஆஸ்திகளையும் குடும்பத்தையும் இழந்த போதிலும், சரீரத்துன் பங்கள் மற்றும் விரக்தியான மனைவியின் அறிவுரைகள் இருந்தபோதிலும், "இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால்பாவஞ்செய்யவில்லை."*

---

[196] *யோபு 23:3*
[197] *யோபு 42:5*

*முன்னுரையில், சாத்தானின் வல்லமையின் எல்லைகளைக் கற்றுக்கொள்கிறோம். யோபு மீதான தாக்குதல்களில், சாத்தான் தேவன் அனுமதிப்பதை விட அதிகமாக செல்ல முடியாது. மிகவும் பிரபலமான விசுவாசத்திற்கு மாறாக, சாத்தானும் தேவனும் எதிர்க்கத்தக்கதான அளவில் சமமானவர்கள் அல்ல; சாத்தான் தேவனால் நிறுவப்பட்ட வரம்புகளுக்கு அப்பால் செல்ல முடியாது.*

*முன்னுரையில், நாம் காணும் சரீரப்பிரகாரமான உலகத்திற்கும் நாம் காணாத ஆவிக்குரிய உலகத்திற்கும் இடையே ஒரு தொடர்பு இருப்பதை அறிந்து கொள்கிறோம். தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையிலான உரையாடலை யோபு அறியவி ல்லை என்றாலும், அந்த ஆவிக்குரிய மோதல் யோபுவின் சோதனைகளுக்குப் பின்னால் உள்ளது.*

## ***யோபுவுக்கும் அவனது மூன்று நண்பர்களுக்கும்இடையிலான உரையாடல் (யோபு 3–27)***

*முன்னுரையின் முடிவில், யோபுக்கு ஆறுதல் சொல்ல வரும் மூன்று நண்பர்களை அறிமுகமாகிறார்கள். அவர்கள் ஒரு வாரம் அமைதியாக உட்கார்ந்து, யோபுவுடன் துக்கம் அனுசரிக் கிறார்கள். வார இறுதியில், யோபு ஒரு முறையீடு மூலம் அமைதியை கலைக்கிறார், அதில் அவர் பிறந்த நாளை சபித்து, மரணத்தின் மூலம் நிவாரணம் கேட்கிறார். இதற்கு பதில ளிக்கும் விதமாக, நண்பர்கள் தேவன் உலகில் செயல்படும் விதத்தை விளக்க முயற்சிக்கின்றனர்.*[198]

*யோபுக்கும் அவனது நண்பர்களுக்கும் இடையிலான உரை யாடல் கவிதை வடிவில் உள்ளது. அந்த பாணியின் காரணமாக, யோபு புத்தகம் படிக்க கடினமாக இருக்கும். மீண்டும் மீண்டும் மற்றும் நீட்டிக்கப்பட்ட உரையாடல்கள் இப்புத்தகத்தில் உள் ளன. இருப்பினும், அதன் மூலத்தில் உரையாடல் எளிமையா னது: யோபுவின் துன்பம் அவனது வாழ்க்கையில் பாவத்தால் ஏற்பட்டது என்று நண்பர்கள் வலியுறுத்துகின்றனர்; தான் எந்த தவறும் செய்யாத நிரபராதி என்று யோபு வலியுறுத்துகிறார்.*

---

*[198] தியோடசி என்பது உலகில் தேவனுடைய வழிகளை நியாயப்படுத்தும் முயற்சியாகும். யோபுவின் புத்தகம் வேதாகமத்தில் உள்ள மிகப்பெரிய கோட்பாடாகும். ஆபகூக் தீர்க்கதரிசிக்கும் தேவனுக்கும் இடையிலான உரையாடலில் இந்த விஷயத்தையும் குறிப்பிடுகிறார்.*

*ஒவ்வொரு நண்பர்களும் வழக்கை வெவ்வேறு விதத்தில் கூறினாலும், அவர்களின் அடிப்படை வாதம்:*

- *துன்பம் என்பது பாவத்திற்கான தண்டனையாக அல்லது திருத்தமாக வருகிறது.*
- *தேவன் ஒரு நீதியுள்ள தேவன்.*
- *ஆகையால், யோபு ஏதோ ஒரு பாவத்தில் குற்றவாளியாக இருக்க வேண்டும், அதற்காகத் தான் தேவன் அவரை தண்டிக்கிறார்.*

*ஒவ்வொரு நண்பரும் ஒவ்வொரு விதமாக வாதிடுகிறார்கள். எலிப்பாசு மிகவும் கவனமாக பேசுபவர். தேவனுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி யோபுவை ஊக்குவிக்கிறார். மனந்திரும்பிய யோபுவைத் தேவன் மீட்டெடுப்பார் என்பதில் எலிப்பாசு உறுதியாக இருக்கிறார். ஒரு நீதியுள்ள தேவன் பாவத்தைத் தண்டிக்க வேண்டும் என்ற பாரம்பரிய மரபு வழியை பில்தாத் சுட்டிக்காட்டுகிறார்; எனவே, யோபு ஏதோ ஒரு பாவத்தில் குற்றவாளியாக இருக்க வேண்டும் என்கிறார். யோபு "அலப்புகிறார்" என்று கூறி, நண்பர்களிடம் அனுதாபம் காட்டாதவர் சோப்பார்.''[199] உண்மையில், தேவன் யோபுவுக்கு இரக்கம் காட்டினார்; யோபு பெற்ற தண்டனையை விட பெரிய தண்டனைக்கு உரியவன் என்று அவர் வலியுறுத்துகிறார்.*

*ஒவ்வொரு நண்பர்களுக்கும் பதிலளிக்கும் விதமாக, யோபு தான் குற்றமற்றவன் என்று வலியுறுத்துகிறார். தேவன் தன்னை நியாயமற்ற முறையில் துன்புறுத்துகிறார் என்று யோபு நம்பு கிறார்; ஆனால் தேவனுக்கு முன்பாக தன்னைத் தற்காத்துக் கொள்ள முடிந்தால், தேவன் செவிசாய்ப்பார் மற்றும் யோபுவை நியாயப்படுத்துவார் என்றும் அவர் நம்புகிறார்.*

*இந்த உரையாடல் யோபுவுக்கும் அவனது நண்பர்களுக்கும் இடையிலான உரையாடலின் மூன்று சுழற்சிகள் வழியாக நீண்டிருக்கிறது. யோபு தவறை ஒப்புக்கொள்ள மறுத்ததால் நண்பர்கள் கோபமடைந்தனர்; யோபு தனது சொந்த குற்றமற்ற தன்மையை தொடர்ந்து வலியுறுத்துகிறார்.*

---

[199] *யோபு 11:3*

## *யோபுவின் உரையாடல்கள் (யோபு 28–31)*

*28-ஆம் அதிகாரத்தில், புத்தகத்தின் பாணி மாறுகிறது. யோபு 28–31 அதிகாரங்கள் யோபுவின் நான்கு உரைகளைக் கொண்டுள்ளது.*

**(1) *யோபு 28 ஞானம் பற்றிய ஒரு கவிதை*.** *யோபு ஞானத்தின் மதிப்பைப் போற்றுகிறார், ஞானத்தைக் கண்டுபிடிப்பதற்கான மனிதனின் முயற்சிகள் பயனற்றவை என்பதைக் காட்டுகின்றன, மேலும் உண்மையான ஞானத்திற்கான வழி தேவன் ஒருவரே என்று வலியுறுத்துகிறார். தேவனுடைய பதிலைத் தேடும் யோபுவின் தேடலில் இது ஒரு முக்கியமான படியாகும்.*

**(2) *யோபு 29 யோபுவின் கடந்தகால வாழ்க்கையின் விளக்கப் படம், முன்னுரையின் நிகழ்வுகளுக்கு முந்தைய அவரது வாழ்க்கை*.** *அவர் எல்லா வகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டார் மற்றும் அவரது சமூகத்தில் மிகவும் மதிக்கப்பட்டார்.*

**(3) *யோபு 30 என்பது யோபுவின் தற்போதைய துன்பத்தின் விளக் கப்படமாகும்.*** *முன்பெல்லாம் அவரை மதித்தவர்கள் இப் போது கேலி செய்கிறார்கள்.*

**(4) *யோபு 31 என்பது யோபுவின் உத்தமத்தன்மைக்கு சான்றாகும்*.** *தனது நண்பர்களின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, யோபு எந்த தவறும் செய்யாத நிரபராதி என்று வலியுறுத்துகிறார். அவர் நிரபராதி என்பதை உறுதிப்படுத்தும் கையொப்பத்துடன் தனது பிரகடனத்தை முடிக்கிறார்: "ஆ, என் வழக்கைக் கேட்கிறவன் ஒருவன் இருந்தால் நலமாயிருக்கும்; இதோ, சர்வவல்லவர் எனக்கு உத்தரவு அருளிச்செய்யவும், என் எதிராளி தன் வழக்கை எழுதிக்கொடுக்கவும் எனக்கு விருப்பமுண்டு!"[200] யோபு 31ஐ வாசிக்கும்போது, யோபு 1:8ல் யோபு குற்றமற்றவர் என்று தேவனே சாட்சியமளித்திருப்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். யோபு புத்தியீனமாக பேசுவதில்லை; அவர் உண்மையிலேயே கவனமாகவும் பயபக்தியோடும் வாழ்ந்தார்.*

---

[200] *யோபு 31:35*

### *எலிகூவின் உரையாடல்கள் (யோபு 32–37)*

*எலிகூ ஒரு வாலிபன், முந்தைய உரைகள் ஒவ்வொன்றையும் கேட்கிறான். யோபு தன்னை நியாயப்படுத்த முயல்வதால் அவன் யோபு மீது கோபமாக இருக்கிறான். நண்பர்கள் யோபுவின் குற்றத்தை நம்பாததால் அவர்கள் மீது கோபம் கொள்கிறான்.*

*தேவன் துன்பம் மற்றும் வேதனையின் மூலம் பேசுகிறார் என்று எலிகூ வாதிடுகிறார்; யோபு தேவனுடைய திருத்தத்தை மனத்தாழ்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். தேவன்நீதியுள் ளவர் என்றும், யோபு தேவனைக் கேள்வி கேட்பது தவறு என்றும் எலிகூ வலியுறுத்துகிறார். எலிகூ தனது இறுதி உரையில், தேவன் மனிதகுலத்தை விட மிகவும் மேலானவராக இருக் கிறார், பூமியில் நடக்கும் நிகழ்வுகளால் அவர் பாதிக்கப் படவில்லை என்று வாதிடுகிறார். நமது வேலை பணிவான சமர்ப்பணமாக இருக்க வேண்டும்.*

*எலிகூவின் உரைகளின் சில அம்சங்கள் தேவனுடைய பதிலுக்கு இணையாக இருந்தாலும் (குறிப்பாக இயற்கையின் மீது தேவனுடைய இறையாண்மை பற்றிய அவரது படம்), எலிகூ புதிதாக எதுவும் கூறவில்லை. தேவன் இறையாண்மையுள்ளவர் என்பதை யோபு ஏற்கனவே அறிந்திருக்கிறார்; தேவன் பாடுகள் மூலம் பேசுகிறார் என்பது யோபுக்கு ஏற்கனவே தெரியும்; ஞானத்தைப் பற்றிய யோபுவின் உரை, உண்மையான ஞானத்தின் ஒரே ஆதாரம் தேவன் என்று ஏற்கனவே கூறியுள்ளது. எலிகூ சத்தியத்தின் சில அம்சங்களைச் சுட்டிக் காட்டினாலும், மற்ற நண்பர்களைப் போலவே, அவரும் யோபுவின் மையப் போராட்டத்தை அடையாளம் காணத் தவறிவிடுகிறார்: யோப் தான் செய்யாத பாவத்திற்காகத் தண்டிக்கப்படுவதாக நம்புகிறார்.*

### தேவன் பேசுகிறார் *(யோபு 38–42)*

*யோபுவின் புத்தகத்தை முதன்மையாக துன்பத்தைப் பற்றிய ஆய்வாக நாம் வாசிக்கும்போது, தேவனுடைய பதில் கொஞ்சம் கூட நமக்குப் புரிய வாய்ப்பில்லை. யோபுவின் துன்பத்தை அவர் ஒருபோதும் குறிப்பிடவில்லை. யோபுவின் கேள்விக ளுக்கு அவர் பதிலளிக்கவே இல்லை. மாறாக, தேவன் தன்னை*

யோபுக்கு வெளிப்படுத்தும் கேள்விகளைத் தொடர்கிறார். தேவனின் கேள்விகள் யோபுக்கு அவரது குறைந்த அறிவை நினைவூட்டுகின்றன. தேவனுடைய கேள்விகள், பிரபஞ்சத்தை நிர்வகிப்பதற்கான தேவனுடைய வல்லமை மற்றும் ஞானத்தை யோபுவுக்குச் சுட்டிக்காட்டுகின்றன. யோபு தேவனுடைய வழி களைப் புரிந்து கொள்ளாவிட்டாலும் தேவனை நம்ப முடியும் என்பதை அவை காட்டுகின்றன. பதிலுக்கு யோபு, "நான் உம்மைக் குறித்து காதினால் கேட்டேன், இப்போது என் கண் உம்மைக் காண்கிறது" என்று தன் திருப்தியைக் கூறுகிறான். யோபு தேவனுக்கு எதிரான தனது குற்றச்சாட்டுகளுக்காக மனந் திரும்புகிறார், மேலும் தேவனைப் பற்றிய அவரது ஆழமான, அனுபவ அறிவால் ஆறுதல் அடைகிறார்.

### முடிவுரை (யோபு 42:7-17)

முடிவுரையில், தேவன் யோபுவின் நண்பர்களின் தவறான வாதங்களுக்காக அவர்களைக் கண்டித்து, யோபுவின் செல்வ வளத்தை மீட்டெடுக்கிறார். முடிவுரையில் சாத்தான் குறிப்பிடப் படவில்லை; அவனது வழக்கு நிராகரிக்கப்பட்டது. உண்மை யில், அன்பினால் மட்டுமே தேவனுக்கு சேவை செய்பவர் ஒருவர் இருக்கிறார் என்பதை இந்த புத்தகம் காண்பிக்கிறது.

## புதிய ஏற்பாட்டில் யோபு புத்தகம்

புதிய ஏற்பாட்டில், யோபு விடாமுயற்சிக்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறார்.[201] யோபுவில் எழுப்பப்பட்ட கேள்விகள் புதிய ஏற்பாட்டின் ஜனங்களைத் தொடர்ந்து குழப்புகின்றன. குருடனாகப் பிறந்த ஒருவன் அவனது பாவத்திற்காகத் தண்டிக் கப்படுகிறானா என்று சீடர்கள் கேட்கிறார்கள்;[202] தேவன் அகற் றாத "மாம்சத்தில் உள்ள முள்ளுடன்" பவுல் போராடுகிறார்;[203] எபிரேயர் 11இல் உள்ள விசுவாசத்தின் வீரர்கள் வாக்குறுதியைப் பெறாமல் மரிக்கின்றனர்.

விசுவாசிகளுக்கு துன்பம் ஒரு தொடர்ச்சியான பிரச்சினை. இருப்பினும், ரோமர் 8:28-29, தேவன் தம்முடைய பிள்ளைகளின்

---

[201] யாக்கோபு 5:11
[202] யோவான் 9:2
[203] 2 கொரிந்தியர் 12:7-9

*வாழ்க்கையில் வரும் எல்லாவற்றின் மூலமாகவும் அவர்களுக்கு நன்மையைச் செய்கிறார் என்று நமக்கு உறுதியளிக்கிறது. அவருடைய இறுதி நோக்கம், அவருடைய குமாரனின் சாயலு க்கு ஒப்பாக நம்மை மாற்றுவதாகும். தேவனை நேசிப்பவர் களும் அவருடைய நோக்கத்தின்படி அழைக்கப்பட்டவர்களும் தேவனின் இறுதி இலக்கை அடைகிறார்கள்.*

## யோபு புத்தகம் இன்று பேசுகிறது

*யோபுவின் வாசகர்கள், "நீதிமான்கள் ஏன் துன்பப் படுகிறார்கள்?" என்ற கேள்வியில் அடிக்கடி கவனம் செலுத்து கிறார்கள். இந்தக் கேள்விக்கு யோபுவின் புத்தகம் பதில் சொல் லவில்லை. அதைவிட முக்கியமான ஒரு கேள்வி என்னவெ ன்றால், "நீதிமான்கள் ஏன் தேவனுக்கு சேவை செய்கிறார்கள்?" தேவனுக்கான சாத்தானுடைய பதில், ''நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதி த்தீர் அதனால் உம்மை சேவிக்கிறான்; ஆனாலும் உம்முடைய கையை நீட்டி அவனுக்கு உண்டானவையெல்லாம் தொடுவீ ரானால், அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும்'' என்பதாக இருந்தது. நண்பர்களுக்கு, தேவனைச் சேவிப்பதற்கான உந்துதல் பிரச்ச னைகளைத் தவிர்ப்பதுதான். தேவனுக்கு உண்மையாகக் கீழ்ப் படிவது துன்பத்தைத் தடுக்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.*

*யோபுவைப் பொறுத்தவரை, பதில் மிகவும் வித்தியாசமானது. அவர் அன்பினால் மட்டுமே தேவனுக்கு சேவை செய்கிறார். என்ன நடந்தது என்று அவருக்குப் புரியவில்லை என்றாலும், யோபு தனது விசுவாசத்தைக் கைவிட மறுக்கிறார். யோபுவின் புத்தகம் தேவன் மீது உண்மையான அன்புக்கு ஒரு முன்மா திரியை வழங்குகிறது. தானியேலின் நண்பர்கள் சாட்சியமளிக் கிறார்கள், "நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடையகைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்..... விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத்*

*தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்."[204] தேவன் நம்மை விடுவிக்காவிட்டாலும், நாம் அவரை மறுதலிக்க மாட்டோம்.*

*ஏனோக்கு, ஆபிரகாம், மோசே மற்றும் ராகாப் ஆகிய விசுவாசத்தின் வீரர்கள் அனுபவித்த தேவனுடைய வல்லமையைப் பற்றி எபிரேயர் 11 கூறுகிறது. வழக்கு விசாரணைகளில் இருந்து தப்பிக்க முடியாமல்போன "மற்றவர்கள்" பற்றியும் அது கூறுகிறது. "மற்றும் மற்றவர்கள் கொடூரமான பரியாசங்கள் மற்றும் கசையடிகள், ஆம், கட்டுகள் மற்றும் சிறைவாசம் ஆகியவற்றின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்: அவர்கள் கல்லெறியப்பட்டனர், அவர்கள் வெட்டப்பட்டனர், சோதிக்கப்பட்டனர், வாளால் கொல்லப்பட்டனர்: அவர்கள் செம்மறியாட்டுத் தோல்களினாலும் வெள்ளாட்டுத் தோல்களினாலும் சுற்றப்பட்டு சித்திரவதைப்பட்டனர்; ஆதரவற்று, துன்புறுத்தப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்ட. இந்த ஜனங்களும் விசுவாசமுள்ள மனிதர்கள், ஆனால் அவர்கள் "வாக்குத்தத்தைப் பெறவில்லை."[205]*

*"நான் ஏன் தேவனைச் சேவிக்கிறேன்?" என்று சிந்திக்கும்படி இந்த வேதவசனங்கள் நம்மை உந்துகின்றன. ஆசீர்வாதங்களால் நான் அவருக்கு சேவை செய்கிறேனா? துன்பத்தைத் தவிர்க்க நான் அவருக்கு சேவை செய்கிறேனா? அல்லது, அன்பினால் மட்டும் நான் அவருக்கு சேவை செய்கிறேனா? யோபு, தானியேலின் நண்பர்கள் மற்றும் எபிரெயர் 11-ன் "மற்றவர்கள்" தேவனை அன்பினால் மட்டுமே சேவித்தவர்களைக் காட்டுகின்றன. இன்றும், அவர்களுடைய நாட்களைப் போலவே, தன்னலமற்ற அன்பினால் தமக்கு சேவை செய்பவர்களை, முழு இருதயத்தோடும் தம்மை நேசிக்கும் ஜனங்களைத் தேவன் தேடுகிறார்.*

## சங்கீதப் புத்தகத்தின் பின்னணி

*"சங்கீதம்" என்ற வார்த்தை கிரேக்க வார்த்தையான "பாடல்" என்பதிலிருந்து வந்தது. இந்தப் புத்தகத்தின் எபிரேய தலைப்பு "துதிகள்" என்று பொருள்படும், இது புத்தகத்தின் நோக்கத்தைக் காட்டும் தலைப்பாகும். புலம்பல் சங்கீதங்கள் கூட துதியுடன்*

---

[204] *தானியேல் 3:17-18*
[205] *எபிரெயர் 11:36-38*

*முடிவடைகின்றன. தேவனுடையஜனங்கள் தேவனுக்குத் தங்கள் துதியை வெளிப்படுத்தக்கூடிய வார்த்தைகளை சங்கீத புத்தகம் வழங்குகிறது.*

***சங்கீதத்தில் தலைப்புகள்***

*100க்கும் மேற்பட்ட சங்கீதங்கள் சங்கீதத்தைப் பற்றிய தகவல்களைத் தரும் தலைப்புகளைக் கொண்டுள்ளன. இந்த தலைப்புகளில்எழுத்தாளர், வரலாற்று அமைப்பு மற்றும் இசை வழிமுறைகள் பற்றிய விவரங்கள் போன்றவை உள்ளன. முதல் கையெழுத்துப் பிரதிகளில் தலைப்புகள் சேர்க்கப்பட்டுள்ளனவா என்பது நமக்குத் தெரியாது என்றாலும், அவை மிக ஆரம்பகாலபிரதிகளில்காணப்படுகின்றன.*

*பல சங்கீதங்களில்* ***எழுத்தாளரின் பெயர்*** *உள்ளது. எழுபத்து மூன்று சங்கீதங்களில் "தாவீதின் சங்கீதம்" என்று தலைப்பிடப் பட்டுள்ளது. சங்கீதங்கள் 50 மற்றும் 73-83 தாவீதின் கீழ் பொது ஆராதனைக்காக "இராகத்தலைவன்" ஆசாப் என்பவருக்கு ஒப்புவிக்கப்பட்டது. பத்து சங்கீதங்களின் தலைப்பில் பயன்படுத்தப்பட்ட "கோராகின்புத்திரர்கள்" தேவாலயப்பாடகர்களின் சங்கத்தின் உறுப்பினர்கள் என்று தோன்றுகிறது. சாலமோன் இரண்டு சங்கீதங்களை எழுதியுள்ளார். சங்கீதம் 90 "மோசேயின் ஜெபம்."*

*மற்ற தலைப்புகள் சங்கீதத்தின்* ***வரலாற்றுஅமைப்பைப்*** *பற்றிய தகவல்களைத் தருகின்றன. சங்கீதம் 3, தாவீது தன் மகன் அப்சலோமிடம் இருந்து தப்பி ஓடியபோது எழுதப்பட்டது. பலர் அப்சலோமின் கலகத்தை ஆதரித்தபோது, தாவீது நினைவுகூர்ந்தார்: "ஆனாலும் கர்த்தாவே, நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர்."[206] தாவீது சவுலிடமிருந்து தப்பி ஓடிய ஆண்டுகளில் 52, 54, 56, 57, மற்றும் 59 ஆகிய சங்கீதங்களை எழுதினார்.[207]மிகவும் பிரபலமாக, பத்சேபாளுடனான தனது விபச்சாரத்தைப் பற்றி நாத்தன் தீர்க்கதரிசி எதிர்கொண்ட பிறகு, 51 ஆம் சங்கீதத்தில் மனந்திரும்புதலின் பெரும் ஜெபத்தைத் தாவீது எழுதினார்.*

---

[206] *சங்கீதம் 3:3*

[207] *இந்த சங்கீதங்களுக்கான வரலாற்று அமைப்பு 1 சாமுவேல் 19-23 இல் காணப்படுகிறது.*

*நவீன வாசகர்களுக்கு, மிகவும் தெளிவற்ற தலைப்புகள்* ***இசை மற்றும் வழிபாட்டு வழிமுறைகளை*** *வழங்குகின்றன. "செமினீத்தில்,"[208] "அலாமோத்தில்,"[209] மற்றும் "முத்ல்பேனில்"[210] போன்ற தலைப்புகள் இசை ஒழுங்குமுறைகள் ஆகும். சில தலைப்புகள் பயன்படுத்த வேண்டிய இசைக்கருவிகளைக் குறிப்பிடுகின்றன. மற்ற தலைப்புகள் சங்கீதம் பாடப்பட்ட பாடலைக் குறிப்பிடுகின்றன: "கித்தீத்,"[211] "அல்தஷ்கேத்,"[212] மற்றும் "அகிலேத்ஷகார்."[213]*

### *சங்கீத புத்தகத்தின் கட்டமைப்பு*

*பல வழிகளில், சங்கீதப் புத்தகம் ஒரு நவீன பாடல் போன்றது. இது தேவாலயத்தில் கூட்டு ஆராதனைக்கும் இஸ்ரவேலர்களின் தனிப்பட்ட ஆராதனைக்கும் பயன்படுத்தப்பட்ட பாடல்கள் மற்றும் ஜெபங்களின் தொகுப்பாகும்.*

*சங்கீத புத்தகம் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் ஒரு ஸ்தோத்திரப் பாட்டுடன் முடிவடைகிறது.*

*புத்தகம் 1 (சங்கீதம் 1-41), "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர். ஆமென், ஆமென்" என்று முடிவடைகிறது.*

*புத்தகம் 2 (சங்கீதம் 42-72), "இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகியதேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக; ஆமென், ஆமென். அவரே அதிசயங்களைச் செய்கிறவர். ஈசாயின் புத்திரனாகிய தாவீதின் விண்ணப்பங்கள் முடிந்தது'' என்று முடிவடைகிறது.*

*புத்தகம் 3 (சங்கீதம் 73–89), ''கர்த்தருக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக. ஆமென், ஆமென்'' என்று முடிவடைகிறது.*

---

[208] *சங்கீதம் 6 மற்றும் 12*
[209] *சங்கீதம் 46*
[210] *சங்கீதம் 9*
[211] *சங்கீதம் 8, 81, 84*
[212] *சங்கீதம் 57-59, 75*
[213] *சங்கீதம் 22*

*புத்தகம் 4 (சங்கீதம் 90-106), "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர். ஜனங்களெல்லாரும்: ஆமென், அல்லேலூயா என்பார்களாக" என்று முடிவடைகிறது.*

*புத்தகம் 5 (சங்கீதம் 107–150) சங்கீதம் 150 உடன் முடிவடைகிறது, இது ஒரு ஸ்தோத்திரப்பாட்டோடு, சங்கீதப் புத்தகத்தை துதியுடன்முடிக்கிறது.*

*இந்த ஐந்து தொகுப்புகளும் இஸ்ரேலின் வரலாற்றில் வெவ்வேறு காலங்களில் சேகரிக்கப்பட்டவை என்று தோன்று கிறது. சிலவற்றில் (புத்தகம் 1 மற்றும் 2 போன்றவை) முதன்மையாக தாவீதின் சங்கீதங்கள் இடம்பெற்றுள்ளன. அவை மிக ஆரம்பகால தொகுப்புகளாகும். புத்தகம் 5 சிறைப்பட்டுப் போன காலத்தைக் குறிக்கிறது மற்றும் அநேகமாக பின்னர் சேகரிக்கப்பட்டது.[214] இந்த சேகரிப்புகள் அனைத்தும், பண்டைய இஸ்ரவேலுடன் சேர்ந்து தேவனைப் புகழ்வதற்கும், பிரச்சனையின்போது அவரிடம் கூக்குரலிடு வதற்கும், நமது சிருஷ்டிகராகவும் மீட்பராகவும் அவரை வணங்குவதற்கும் வழிவகுக்கின்றன..*

## ***சங்கீதத்தின் வகைகள்***

*சங்கீத புத்தகத்தில் பல்வேறு வகையான (அல்லது இசை வகை கள்) பாடல்கள் உள் ளன. சங்கீதங்களின் ஒட்டு மொத்த கருப்பொருள் துதி யாக இரு ந்தாலும், எல்லா சங்கீதங்களும் துதிப்பாடல் கள் அல்ல. அவற்றில் பலவி தமான சங்கீத பாணிகள் உள்ளன. சால்டரில் பின்வ ரும் சங்கீத ங்கள் அடங் கும்:*

> *"சங்கீதம் புத்தகம் ஏன் எல்லா பரிசுத்தவான்களுக்கும் பிடித்த புத்தகம் என்பதை புரிந்துகொள்வது எளிது. ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவனது தேவைகளுக்கு ஏற்ற சங்கீதங்களைக் காணலாம், அவை அவனுக்காகவே அங்கு அமைக்கப்பட்டிருப்பது போல் பொருத்தமானதாக இருப்பதாக அவன் உணர்கிறான்."*
> - Martin Luther, Preface to the Psalms

- *ஒருங்கிணைந்தது துதித்தலுக்கு (சங்கீதம் 136)*

---

[214] *சங்கீதம் 137ஐப் பார்க்கவும்*

- *தனிப்பட்ட புலம்பலுக்கு (சங்கீதம் 56)*
- *அறிவுறுத்தலுக்கு (சங்கீதம் 1 மற்றும் 119)*
- *ராஜாவைக் கனப்படுத்த (சங்கீதம் 72)*
- *இராஜரீக திருமணத்தைக் கொண்டாட (சங்கீதம் 45)*
- *எருசலேம் பயணங்களுக்கு (சங்கீதம் 120-134)*

*சால்டரின் இந்த கண்ணோட்டத்தில், சங்கீதங்களின் சில முக்கிய வகைகளை ஆராய்வோம்.*

**துதி பாடல்கள்**

*சில பாடல்கள் தனிமனித துதிக்காக; சில பாடல்கள் ஒருங்கிணைந்த துதித்தலுக்காக. சங்கீதக்காரர்கள் தேவனை எவ்வாறு துதிக்கிறார்கள் என்பதை இரண்டு எடுத்துக்காட்டுகள் காட்டுகின்றன..*

***உதாரணம் 1***: *சங்கீதம்* ***19*** *என்பது ஒரு தனிப்பட்ட துதிப் பாடலாகும். இப்பாடல் மூன்று சரணங்களில் செல்கிறது.*

*சரணம்1(1-6): தேவன் சிருஷ்டிப்பில் தம்மை வெளிப்படுத் தினார்*

*சிருஷ்டிகரின் வல்லமை மற்றும் மகத்துவத்திற்கு சிருஷ்டிப்பு சாட்சியமளிக்கிறது. வானங்கள் தேவனுடைய மகிமைக்கு சாட்சியமளிக்கின்றன. இந்த வசனங்களில், தாவீது "தேவன்" (எபிரேய மொழியில் ஏலோஹிம்) என்ற பெயரைப் பயன்படுத் துகிறார், அது தேவனுடைய மகத்துவத்தையும் மாட்சிமை யையும் பற்றி பேசுகிறது.*

*சரணம் 2 (7-10): தேவன் அவருடைய நியாயப்பிரமாணத்தில் தம்மைவெளிப்படுத்தினார்*

*தேவனைப் பற்றிய தனிப்பட்ட வெளிப்பாடு அவருடைய வார்த்தையில் காணப்படுகிறது. கர்த்தருடைய "நியாயப் பிரமாணம்," "சாட்சி," "பிரமாணங்கள்," "கட்டளை," "பயம்," மற்றும் "நியாயத்தீர்ப்புகள்" ஆகியவற்றின் மூலம், அவர் தம்மைக் குறித்து வெளிப்படுத்திய வெளிப்பாட்டைக் காண்கிறோம். இந்த பிரிவில், தாவீது "கர்த்தர்" (எபிரேய மொழியில் யாஹ்வே) என்ற பெயரைப்பயன்படுத்துகிறார்.*

*யாஹ்வே என்பது யாத்திராகமம் 3:14 இல் இஸ்ரவேலுக்கு தேவன் தன்னை வெளிப்படுத்திய தனிப்பட்ட, உடன்படிக் கையின் அடிப்படையிலான பெயர். தேவனுடைய நியாயப் பிரமாணம் விசுவாசிகளுக்கு ஒரு சுமை அல்ல; அது தேனை விட இனிமையானது மற்றும் பொன்னிலும் அதிகமாக விரும்பத்தக்கது.*

*சரணம் 3 (11-14): மீட்பருக்கு ஆராதிப்பவரின் பதில்*

*தேவனுடைய வெளிப்பாட்டிற்கு பதிலளிக்கும் விதமாக, தாவீது சுத்திகரிப்புக்காகவும் பாவத்திலிருந்து விடுதலைக்கா கவும் ஜெபிக்கிறார். அவருடைய வார்த்தைகளும் அவருடைய எண்ணங்களும் "என் பலமும், என் மீட்பரும்" ஆக இருப்பவ ரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் ஜெபிக்கிறார்.*

***உதாரணம் 2**: சங்கீதம் 136 ஒரு ஒருங்கிணைந்த பாடலாகும். இது ஒரு மாறுத்திரப்பாடலாகப் பாடப்பட்டது. ஒவ்வொரு கவியின் முதல் பாதியை தலைவன் பாடினான்; "அவர் கிருபை என்றுமுள்ளது" என்று ஜனங்கள் பதிலளித்தனர். சிருஷ்டிப்பின் மூலம் (1-9) மற்றும் இஸ்ரவேலுக்கு அவர் செய்த நன்மையின் (10-26) மூலம், தேவனுடைய நித்திய இரக்கம் வெளிப்படுகிறது.*

### ***ஸ்தோத்திர சங்கீதங்கள்***

*ஸ்தோத்திர சங்கீதம் தேவனுடைய விடுதலையின் குறிப்பிட்ட நிகழ்வுகளுடன் தொடர்புடையது. ஸ்தோத்திரம் செலுத்தும் சங்கீதங்களில், சங்கீதக்காரன் கடந்த கால நெருக்கடியை விவரிக்கிறார், பின்னர் நெருக்கடியிலிருந்து விடுவித்ததற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறார். நன்றியுணர்வின் சங்கீதத்தின் உதாரணத்திற்கு, சங்கீதம் 18ஐவாசியுங்கள், அதில் சவுல் தாவீதைத் துரத்தும்போதுதேவனுடைய பாதுகாப்பில் தாவீதுமகிழ்ச்சியடைகிறார்.*

### ***புலம்பல் சங்கீதங்கள்***

*சுமார் ஐம்பது சங்கீதங்கள் புலம்பல் சங்கீதம். புலம்பல்கள் பொதுவாக நான்கு கூறுகளைக் கொண்டிருக்கும், இருப்பினும் அவை எப்போதும் ஒரே வரிசையில் இல்லை:*

- ***முறையீட்டின் விவரணம்***. *பல புலம்பல்கள் ஒரு எதிரியைக் குறிப்பிடுகின்றன; மற்றவை சங்கீதக்காரன் எதிர்கொள்ளும் ஒரு பிரச்சனையை விவரிக்கின்றன. சங்கீதம் 13 முறையீட்டைக்கூறுகிறது, ஏனென்றால் தாவீதின் எதிரிகள் உயர்த்தப்பட்டபோது தேவன் தனது முகத்தை மறைத்துக்கொண்டதாகத் தெரிகிறது.*
- ***தேவனிடம் விண்ணப்பம்***. *இங்கே சங்கீதக்காரன் விடுதலைக்காக அழுகிறான். பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட கோரிக்கை உள்ளது. சங்கீதம் 13ல், தாவீது "என் கண்களைத் தெளிவாக்கும்" என தேவனிடம் விண்ணப்பம் செய்கிறார்.*
- ***தேவன்மேல் உள்ள நம்பிக்கையின் கூற்று***. *சங்கீதம் 13இல், தேவனை உதவிக்கு அழைத்த பிறகு, தாவீது கூறுகிறார், "நான் உம்முடைய கிருபையின்மேல் நம்பிக்கையாயிருக்கிறேன்." இந்த சொற்றொடருடன், சங்கீதம் நம்பிக்கையற்ற சூழ்நிலையிலிருந்து நம்பிக்கை யின் அறிக்கைக்கு மாறுகிறது.*
- ***தேவனுக்கு துதி***. *பெரும்பாலான புலம்பல்கள் தேவனை துதிக்கும் துதியோடு முடிவடைகின்றன. சங்கீதம் 13 இப்படியாக முடிவடைகிறது, "கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் அவரைப் பாடுவேன்." முடிவான துதி வேதாகமப் புலம்பலின் இன்றிய மையாத அங்கமாகும், மேலும் தேவனிடம் நாம் கூக்குரலிடுவதற்கு அது ஒரு மாதிரியைவழங்குகிறது.*

*நம்முடைய முறையீடுகளையும் தேவைகளையும் தெரிவிக்கும் போது, தேவனுடைய நோக்கங்களை நாம் எதிர்க்கக் கூடாது. தேவன் மீதான நம்பிக்கையின் அறிக்கையும், தேவனுக்கான இறுதி துதியும் நாம் தேவனுடைய இறையாண்மைக்குக் கீழ்ப்படிவதை உறுதி செய்கிறது. சங்கீதம் 13இல், 4 மற்றும் 5வது வசனங்களுக்கு இடையில் தாவீதின் வாழ்க்கையில் எதுவும் மாறவில்லை. அவருடைய வெளிப்புற சூழ்நிலைகள் வசனங்கள் 1-2இல் உள்ளதைப் போலவே இருக்கும். இங்கே மாற்றம் என்பது உள்நோக்கி உள்ளது; தாவீது தேவ னுடையஇரக்கத்தில் நம்பிக்கை வைத்து கர்த்தரைப் பாடுவதில் உறுதியாக இருக்கிறார். இந்த மாதிரியானது நமது ஜெபங்*

களுக்கு வழிகாட்ட வேண்டும்: நமது தேவையை வெளிப்படுத்துவதில் **முழுமையான நேர்மை** மற்றும் நமது வாழ்வில் தேவனுடைய இறுதி நோக்கங்களுக்கு **முழுமையான கீழ்ப்படிதல்** இருக்கவேண்டும்.

புலம்பல் சங்கீதங்கள் உலகில் சரியானவை தவறானவை இரண்டும் இருப்பதாகவும், சரியானதை நியாயப்படுத்த தேவனை நம்பலாம் என்றும், சங்கீதக்காரன் சரியான பக்கத்தில் இருப்பதாகவும் கருதுகின்றன. இதன் காரணமாக, தேவன் தன் சார்பாக தலையிடுவார் என்று சங்கீதக்காரனுக்கு நம்பிக்கை இருக்கிறது.

பாவ அறிக்கை சங்கீதம் புலம்பல் சங்கீதத்துடன் தொடர்புடையது. இருப்பினும், இந்த சங்கீதங்களில், சங்கீதக்காரன் பாவத்திற்காக தேவனிடம் மன்னிப்பு கேட்கிறார். பத்சேபாளுடன் செய்த பாவத்திற்குப் பிறகு தாவீது தேவனுடைய இரக்கத்திற்காக ஜெபிக்கும் சங்கீதம் 51, மிகவும் பிரபலமான பாவஅறிக்கைச் சங்கீதம். 6, 32, 38, மற்றும் 130 ஆகிய சங்கீதங்களும் பாவஅறிக்கை சங்கீதங்களில் அடங்கும்.

## சாபமிடும் சங்கீதங்களின் ஒரு துல்லியமான பார்வை

| இயேசுவின் கட்டளைக்கு நேர்மாறாக ஒரு சாபமிடும் பிரார்த்தனை | |
|---|---|
| *“பாபிலோன்குமாரத்தியே, பாழாய்ப்போகிறவளே, நீ எங்களுக்குச் செய்தபடி உனக்குப் பதில் செய்கிறவன் பாக்கியவான். உன் குழந்தைகளைப் பிடித்து, கல்லின்மேல் மோதியடிக்கிறவன் பாக்கியவான்” (சங்கீதம் 137:8-9).* | *“நான் உங்களுக்கு சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்; உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்” (மத்தேயு5:44).* |

### பிரச்சனை

சங்கீதப் புத்தகத்தில் குறைந்தது முப்பத்தைந்து சாபமிடும் ஜெபங்கள் அடங்கும். இவைகள் சங்கீதக்காரனின் எதிரிகள் மீது

நியாயத்தீர்ப்பை வழங்க தேவனிடம் கேட்கும் சங்கீதங்கள். கிறிஸ்தவர்கள் இந்த ஜெபங்களுடன் ஒத்துப்போக முடியவில்லை. உங்கள் எதிரிகளை சிநேகிக்க வேண்டும் என்ற இயேசுவின் கட்டளைக்கு இந்த ஜெபங்கள் எவ்வாறு பொருந்துகின்றன?

இது பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டுகிறது என்று சில விமர்சகர்கள் கூறியுள்ளனர். இருப்பினும், பழைய ஏற்பாடு கூட நாம் நமது எதிரிகளை சிநேகிக்க வேண்டும் என்று போதிக்கிறது.[215] மேலும், புதிய ஏற்பாட்டில் தவறு செய்பவர்கள் மீது குற்றஞ்சாட்டுவதற்கான எடுத்துக்காட்டுகளும் உள்ளன.[216] கிறிஸ்தவர்களாகிய நாம் எவ்வாறு சாபமிடும் சங்கீதங்களை வாசிப்பது?

**சாபமிடும் சங்கீதங்களை வாசிப்பதற்கான கோட்பாடுகள்**

(1) அவை விதைத்தல் மற்றும் அறுவடை செய்தல் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டவை.

உபாகமம், நீதிமொழிகள் மற்றும் கலாத்தியர் "மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்"[217] என்று போதிக்கின்றன .இந்த கொள்கை சரித்திரப் புத்தகங்களில் விளக்கப்பட்டுள்ளது மற்றும் தீர்க்கதரிசன புத்தகங்களில் பிரசங்கிக்கப்பட்டுள்ளது. தேவன் தனது நீதியைக் காட்டும்படி சாபமிடும் சங்கீதங்கள் தேவனிடம் முறையிடுகின்றன. சிறைபிடிக்கப்பட்டு நாடுகடத்தப்பட்டவர்கள் நாடு திரும்பியபிறகு, பாபிலோனியர்களுக்கு நியாயமான மற்றும் தகுதியான கூலியை பாபிலோனுக்குக் "கொடுக்க" வேண்டும் என்று தேவனிடம் கேட்கிறார்கள்.[218]

(2) இஸ்ரவேலின் எதிரிகள் இறுதியில் தேவனுடைய எதிரிகள்.

ராஜாவாக, தாவீது தேவனின் அபிஷேகம் பெற்ற பிரதிநிதி. இஸ்ரவேலுக்கான தேவனுடைய நோக்கங்களை அவருடைய

[215] உதாரணமாக யாத்திராகமம் 23:4-5
[216] உதாரணமாக 2 தீமோத்தேயு 4:14
[217] கலாத்தியர் 6:7
[218] சங்கீதம் 137:8

எதிரிகள் எதிர்க்கிறார்கள். இந்நிலையில் சாபமிடும் ஜெபங்கள் தேவனுடைய நீதியின் நியாயத்தை நாடுகின்றன.

(3) சங்கீதக்காரர்கள் காரியங்களைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொள்வதில்லை.

தாவீது தனது எதிரிகள் மீது தேவனுடைய பழிவாங்கலுக்காக ஜெபித்தார், ஆனால் அவர் சவுலை தனிப்பட்ட முறையில் பழிவாங்க மறுத்துவிட்டார். தாவீது தனது எதிரிகளை தேவனுடைய கரங்களில் விட்டுவிட்டார்.

**இன்று நாம் சாபமிடும் சங்கீதங்களைப் பயன்படுத்தி ஜெபிக்கலாமா?**

சாபமிடும் சங்கீதங்கள் வேதாகம நீதியுடன் ஒத்துப்போகின்றன என்பதை நாம் உணர்ந்தாலும், இன்று இந்த சங்கீதங்களை நாம் எவ்வாறு ஆராதனையில் பயன்படுத்தலாம் என்று கேட்க வேண்டும். சாபமிடும் சங்கீதங்களுக்கு இரண்டு எதிர் வினைகள் உள்ளன:

1. சில கிறிஸ்தவர்கள் மலைப் பிரசங்கத்தில் இயேசுவின் போதனையின்படி புதிய ஏற்பாட்டு விசுவாசியின் சாப மிட்டு ஜெபிக்கக் கூடாது என்று நம்புகிறார்கள்.

2. சில கிறிஸ்தவர்கள், ஆவிக்குரிய யுத்தத்தின் ஒரு அங்கமாக அடிக்கடி சாபமிடும் ஜெபத்தைச் செய்கிறார்கள்.

இரண்டு கருத்துகளும் சத்தியத்தின் சில அம்சங்களைக் காட்டுகின்றன. இந்த சங்கீதங்கள் வேதாகமத்தின் சத்தியத்தைப் பிரதிபலிக்கின்றன, ஆனால் இயேசு நம் எதிரிகளை நேசிக்க வேண்டும் என்றுக் கற்றுக்கொடுத்தார். சாபமிடும் சங்கீதத்தை ஜெபிக்க விரும்பும் எவரும், சாபமிடுதலுக்கான உந்துதலைத் தீர்மானிக்க மூன்று கேள்விகளைக் கேட்க வேண்டும்.

(1) நான் தேவனுடைய நீதியினால் தூண்டப்பட்டேனா அல்லது என் கோபத்தினால் தூண்டப்பட்டேனா?

சங்கீதக்காரர்கள் தேவன்மீதும் அவருடைய ராஜ்யத்தின்மீதும் அக்கறை கொண்டிருந்தனர். “கோபங்கொண்டாலும் பாவஞ்

செய்யாதிருங்கள்'' என்று பவுல் எழுதினார்.[219] நீதியான கோபம் தேவனுக்கு எதிரான பாவத்திற்கு எதிர்வினையாற்றுகிறது; சுயநலம் சார்ந்த கோபம் தனிப்பட்ட காரியங்களுக்கு எதிர்வி னையாற்றுகிறது. என் கோபத்தைத் தூண்டும் காரியங்கள் தேவனுடைய ராஜ்யத்திற்கு எதிரான பாவங்கள், என் சொந்த "ராஜ்யத்திற்கு" எதிரானவை அல்ல.

(2) நான் தெய்வீக நீதியை நாடுகிறேனா அல்லது தனிப்பட்ட முறையில் பழிவாங்குகிறேனா?

நீதியை மேம்படுத்தவும்,[220] தேவனுடைய இறையாண்மை யைக் காண்பிக்கவும்,[221] துன்மார்க்கர்கள் தேவனைத் தேடவும்[222] வேதாகமசாபமிடும் ஜெபங்கள் முயன்றன. பழிவாங்கும் விருப்பத்தால் நவீன சாபமிடும் ஜெபங்கள் சில நேரங்களில் ஈர்க்கப்படுகின்றன.

(3) எது எனக்கு அதிக மகிழ்ச்சியைத் தரும்: என் எதிரியின் மனந்திரும்புதல் அல்லது என் எதிரி மீதான நியாயத்தீர்ப்பு?

மனந்திரும்புவதற்கும் தேவனுடைய இறக்கத்திற்கும் இடமளி க்காமல் யோனா நியாயத்தீர்ப்பைத் தேடினான். வேதாகமத்தின் தெளிவுபடுத்தல் எதிரியை தேவனுடைய இறையாண்மைக்கு ஒப்புக்கொடுக்கும். அதன் காரணமாக, நம் எதிரி மனந்திரும்பி தேவனுடைய மன்னிப்பைப் பெற்றால் நாம் மகிழ்ச்சி யடையலாம்.

இந்த வழிகாட்டுதல்கள் வேதாகமசாபமிடும் ஜெபங்களுக்கு இடமளிக்கும் அதே வேளையில், நம் சொந்த வாழ்க்கையில் நாம் இந்த ஜெபங்களைப் பயன்படுத்துவதை பெரிதும் கட்டுப்படுத்துகின்றன. நமக்கு அநீதி இழைக்கப்படும்போது, வேதாகமம் (சாபமிடும் சங்கீதங்களில், இயேசுவின் போதனை களில், மற்றும் தாவீதைப் போன்ற மனிதர்களின் தனிப்பட்ட மாதிரியில்) அந்த அநீதியான நிலைமையை தேவனிடம்

---

[219] எபேசியர் 4:26
[220] சங்கீதம் 7:6-11
[221] சங்கீதம் 59:13
[222] சங்கீதம் 83:16-18

*ஒப்புவிக்க நமக்குக் கற்றுக் கொடுக்கிறது, அவர் தமது பிள்ளைகளின் நன்மைக்காக எல்லாவற்றையும் செய்கிறார்.*[223]

## *சங்கீதத்தின் வகைகள்(தொடர்ச்சி)*

### *ஞானசங்கீதங்கள்*

*அன்றாட வாழ்க்கைக்கு நடைமுறை ஆலோசனைகளை வழங்குவதில் ஞான சங்கீதங்கள் நீதிமொழிகளுக்கு ஒத்தவை. தேவனைப் பிரியப்படுத்தும் விதத்தில் எப்படி வாழ வேண்டும் என்று வாசகருக்குக் கற்றுக்கொடுக்கின்றன. நீதிமொழிகளைப் போலவே, சங்கீதப் புத்தகம், "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்று போதிக்கிறது.*[224]

*ஞானசங்கீதங்கள் பெரும்பாலும் இரண்டு பாதைகளில் முரண்படுகின்றன, துன்மார்க்கரின் பாதை மற்றும் நீதிமான் களின் பாதை. சங்கீதம் 1ஞானசங்கீதத்திற்கு ஒரு எடுத்துக் காட்டு.*

*பிரசங்கி மற்றும் யோபுவைப் போலவே, ஞானசங்கீதங்களை எழுதியவர்களும் துன்மார்க்கரின் செழிப்புக்கும், நீதிமான்களின் துன்பங்களுக்கும் எதிரான நிலைப்பாட்டில் போராடுகிறார்கள். சங்கீதம் 73-ல், பொல்லாதவர்களின் செழுமையின் காரணமாக ஆசாப் கிட்டத்தட்ட விசுவாசத்தை இழந்தார். யோபுவைப் போலவே ஆசாப்புக்கும் தேவனைக் கண்டறிவதே சரியான பதில். ஆசாப் பரிசுத்த ஸ்தலத்தில் நின்றபோது, துன்மார்க்கரின் முடிவு அழிவும் பாழாக்கலுமுமே என்பதை உணர்ந்தார். அவர் விசுவாச அறிக்கையுடன் சங்கீதத்தை முடிக்கிறார்: "எனக்கோ, தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்; நான் உமது கிரியைகளையெல்லாம் சொல்லிவரும்படி கர்த்தராகிய ஆண் டவர் மேல் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன்."*[225]

### *ராஜரீக சங்கீதங்கள்*

*இஸ்ரவேலின் ராஜாவை தேவனின் அபிஷேகம் பெற்ற ராஜாவாக ராஜரீக சங்கீதங்கள் காட்டுகின்றன. இஸ்ரவேலின்*

---

[223] *ரோமர் 8:28*
[224] *சங்கீதம் 111:10*
[225] *சங்கீதம் 73:28*

*ராஜா சுற்றியுள்ள நாடுகளின் ராஜாக்களைப் போல் இல்லை; அவர் தேவனுடைய ஆட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேவனுடையஊழியராக இருந்தார்.*[226]

*சங்கீதம் 2 ஒரு புதிய ராஜாவுக்கான முடிசூட்டுவிழாவின் சங்கீதமாக இருக்கலாம். பூமியின் ராஜாக்கள் தேவனுக்கு எதிராகவும் "அவர் அபிஷேகம்பண்ணினவருக்கு விரோத மாகவும்"தங்களைத் தாங்களே நிறுத்திக்கொண்டார்கள், ஆனால் தேவன் "என் பரிசுத்த பர்வதமாகிய சீயோன்மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம்பண்ணிவைத்திருக்கிறார்." தேவன் ராஜாவை ஏற்படுத்துவார்; ராஜாவைத் தன் குமாரனாகக் கருதுவார்; அவர் இஸ்ரவேலின் எதிரிகளை வெற்றிக் கொள்வார். தேவன் இஸ்ரவேலின் தெய்வபக்தியுள்ள ராஜாக் களுக்கு அதிகாரம் அளிப்பவர்.*

### *மேசியாவின் சங்கீதங்கள்*

*பல நிகழ்வுகளில், ராஜரீகசங்கீதங்கள் இஸ்ரேலின் வரலாற்றில் ஒருபோதும் நிறைவேற்றப்படாத ஒரு உலகளாவிய ஆட்சியை விவரிக்கின்றன. இஸ்ரவேலின் ராஜாக்கள் எவரும் "பூமியின் எல்லைகளை" கைப்பற்றவில்லை.*[227]

இஸ்ரவேலின் பூமிக்குரிய ராஜாக்களில் *ஓரளவு* நிறைவேற் றப்பட்ட ஆட்சியை *முழுமையாக* நிறைவேற்றும் ஒரு ராஜாவின் வருகையை மேசியாவின் சங்கீதங்கள் தீர்க்க தரிசனமாகக் கூறுகின்றன. இஸ்ரவேலின் ராஜா இஸ்ரவேலை ஆண்ட "அபிஷேகம் பண்ணப்பட்டவர்"; இஸ்ரவேலின் ராஜா வுக்கான நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றிய "அபிஷேகம் பண்ணப்பட்டவராக" (மேசியா) இயேசு வந்தார்.

*சங்கீதம் 22 இயேசுவின் வாழ்க்கையில் நிறைவேறிய சங்கீதத் திற்கு ஒரு எடுத்துக்காட்டு. தாவீது முதலில் இந்த சங்கீதத்தை தனது தனிப்பட்ட விரக்தியிலிருந்து எழுதியிருக்கும்போது, இயேசு சிலுவையில் தனது வேதனையில் இந்த தீர்க்கதரிசன வார்த்தைகளை நிறைவேற்றினார்.*[228]

---

[226] *உபாகமம் 17:14-20*
[227] *சங்கீதம் 2:8*
[228] *சங்கீதம் 22:1; மத்தேயு 27:46*

## *சங்கீதப் புத்தகம் இன்றுபேசுகிறது*

*சங்கீதங்கள் இன்று கிறிஸ்தவ ஆராதனைக்கு ஒரு முன்மாதிரியை வழங்குகின்றன. கிறிஸ்தவர்களைப் பிரிக்கும் ஆராதனை சம்பந்தமான பல பிரச்சினைகளுக்கு விடையாக சங்கீதங்கள் சமநிலையை அளிக்கின்றன.*

*நமது ஆராதனையில் தேவனுக்குத் துதிபாடும் (துதியின் சங்கீதங்கள்) துதிப்பாடல்கள் மற்றும் தேவனுடைய ஜனங் களின் அறிவுரைகள் (ஞானசங்கீதங்கள்) ஆகிய இரண்டும் இருக்க வேண்டும் என்று சங்கீதங்கள் காண்பிக்கின்றன. நமது ஆராதனையில் தனிநபர் ஆராதனை மற்றும் கூட்டு ஆராதனை ஆகிய இரண்டும் இருக்க வேண்டும். தேவன் நமக்காக தனிப்பட்ட முறையில் செய்ததற்கு நன்றி செலுத்துதல் மற்றும் எல்லா ஜனங்களுக்கும் தேவன் யார் என்பதற்காகத் துதித்தல் ஆகிய இரண்டும் நமது ஆராதனையில் அடங்கும்.*

*சங்கீதங்கள் புலம்பல் மற்றும் துதியின் சமநிலையைக் காட்டு கின்றன. நம்முடைய ஆராதனையில் நம்முடைய குறைக ளையும் பிரச்சினைகளையும் தாராளமாக தேவனிடம் கொண்டு செல்ல முடியும் என்பதை அவை காட்டுகின்றன. அந்த முறையீடுகளை தேவனுடைய இறையாண்மை நோக்கங் களுக்காக நாம் ஒப்படைக்க வேண்டும் என்பதையும் அவை காட்டுகின்றன. புலம்பல் சங்கீதம் துதியில் முடிவடைகிறது. தேவன் தம் ஜனங்களை நேர்மையான வழிகளுக்கும், தம் நோக்கங்களுக்கும் முழுமையாக சரணடைய அழைக்கிறார்.*

## *பாடம் 7 வீட்டுப் பாடங்கள்*

*இந்தப்பாடத்தைப் பற்றிய உங்கள் புரிதலை பின்வரும் வீட்டுப்பாடங்களின் மூலம் நிரூபிக்கவும்:*

(1) *பின்வரும் வீட்டுப்பாடங்களில்* ***ஒன்றைத்*** *தேர்ந்தெடுக்கவும்:*

*விருப்பம் 1: குழு வீட்டுப்பாடம்*

*உங்கள் குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரையும் யோபுவில் உள்ள (எலிப்பாசு, பில்தாத், சோப்பார் மற்றும் எலிகூ) கதாபாத்திரங்களில் ஒருவருக்கு ஒதுக்குங்கள். உங்க ளுக்கு ஒதுக்கப்பட்ட கதாபாத்திரத்தின் உரைகளைப் படித்து,*

அந்தக் கதாபாத்திரத்தின் வாதத்தின் பலம் மற்றும் பலவீனங்களைப் பற்றி விவாதிக்கவும்.

விருப்பம் 2: தனி வீட்டுப்பாடம்

ஒதுக்கப்பட்ட சங்கீதங்களைப் படிக்கும்போது, சங்கீதங்களில் காணப்படும் தேவனுடைய பண்புகளின் பட்டியலை உருவாக்கவும். ஒவ்வொரு பண்புக்கும், பண்புகளைக் காட்டும் **8-10** வசனங்களைப் பட்டியலிடவும்.

(2) இந்த பாடத்தில் ஒரு தேர்வை எழுதவும். தேர்வில் மனப்பாடம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட வேதவசனங்களும் அடங்கும்.

## பாடம் 7 தேர்வு

(1) எபிரேய கவிதைகளின் ஒத்தத்தன்மையின் மூன்று வகைகளுக்கு வரையறையைத் தருக.
(2) கரந்துறைப்பாட்டுக் கவிதைக்கு வரையறையைத் தருக.
(3) யோபு புத்தகத்தின் முதன்மைக் கருப்பொருள் என்ன?
(4) யோபுவின் நண்பர்களின் வாதத்தின் மூன்று முக்கிய குறிப்புகள் யாவை?
(5) யோபு 28-31இல் யோபின் உரைகளின் தலைப்புகள் யாவை?
(6) தனிப்பட்ட சங்கீதங்களின் தலைப்புகளில் காணப்படும் மூன்று வகையான தகவல்கள் யாவை?
(7) பெரும்பாலான புலம்பலின் சங்கீதங்களில் உள்ள நான்கு கூறுகள் யாவை?
(8) சாபமிடும் சங்கீதங்களைப் புரிந்துகொள்வதற்கான மூன்று கொள்கைகளைபட்டியலிடுக.
(9) ராஜரீக மற்றும் மேசியாவின் சங்கீதங்களுக்கு இடையே உள்ள தொடர்பு என்ன?
(10) சங்கீதம் 119:1-8-ஐ நினைவிலிருந்து எழுதுக.

## *பாடம் 8*

# *நீதிமொழிகள் - உன்னதப்பாட்டு:*

# *எபிரேய ஞானம்*

### *பாடத்தின் நோக்கங்கள்*

*இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:*

(1) *சாலமோனுடையபுத்தகங்களின் முதன்மைச் செய்தியை அறிந்துகொள்ளுதல்.*
(2) *வேதாகமத்தில் உள்ள ஞானம் மற்றும் மதியீனத்தின் தன்மையைஅறிந்துகொள்ளுதல்.*
(3) *நீதிமொழிகள் மற்றும் பிரசங்கிபுத்தகங்களில் இரண்டு பாதைகளின் உருவகத்தை புரிந்துகொள்ளுதல்.*
(4) *சாலமோனுடையபுத்தகங்களின் இலக்கியப்பாணியைப் பாராட்டுதல்.*
(5) *சாலமோனுடையபுத்தகங்களின் செய்தியை இன்றைய உலகின் தேவைகளுடன்தொடர்புபடுத்துதல்.*

### இந்த பாடத்திற்கான ஆயத்தம்

*நீதிமொழிகள், பிரசங்கி மற்றும் உன்னதபாட்டை வாசிக்கவும்.*

*நீதிமொழிகள் 1:7; பிரசங்கி 12:13-14-ஐ மனப்பாடம் செய்யவும்.*

### எபிரேய ஞானத்தை வாசித்தல்

*யோபு, நீதிமொழிகள், பிரசங்கி மற்றும் சங்கீதத்தின் சில பகுதிகள் கவிதைப்புத்தகங்கள் என்றும் ஞான இலக்கியம் என்றும் அறியப்படுகின்றன. மெய்யான வேதாகமஞானத்தை எவ்வாறு அடைவது என்பதை ஞான இலக்கியம் வாசகருக்குக் கற்பிக்கிறது. கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்று நீதிமொழிகள் போதிக்கின்றன; நம்முடைய நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துவதன் மூலம், "நம்முடைய நாட்களை எண்ணி," ஞான இருதயத்தைப் பெறுகிறோம் என்று சங்கீதம்*

*போதிக்கிறது.*[229] *ஒவ்வொரு நபருக்கும் ஞானத்தைப் பெறுவது ஒரு முக்கியமான நாட்டமாகும். அறிவுரை, கவனிப்பு மற்றும் அனுபவத்தின் மூலம் உண்மையான ஞானம் பெறப்படுகிறது.*[230]

> "உண்மையான ஞானம் கிட்டத்தட்ட இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது: தேவனைப் பற்றிய அறிவு மற்றும் நம்மைப் பற்றிய அறிவு."
> - John Calvin தழுவல், *Institutes of the Christian Religion*

*16-ஆம் நூற்றாண்டின் இறையியலாளர் ஜான் கால்வின் கூறுவது போல, உண்மையான ஞானம் இரண்டு விஷயங்களைக் கொண்டுள்ளது: தேவனைப் பற்றிய அறிவு மற்றும் நம்மைப் பற்றிய அறிவு. ஞான புத்தகங்கள் ஞானத்தின் இரு அம்சங்களையும் பிரதிபலிக்கின்றன. யோபு தேவனைப் பற்றிய புதிய அறிவைப் பெறுகிறது. நீதிமொழிகள் ஒரு வாலிபனுக்கு தன்னை அறிய வும் தேவனுக்கு பயப்படவும் கற்பிக்கின்றன. "தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மே லும் விழுந்த கடமை இதுவே"*[231] *என்ற செய்தியுடன் பிரசங்கி முடிவடைகிறது.*

*ஞானத்தின் அம்சங்களை செங்குத்தாகவும் ("கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்") மற்றும் கிடைமட்டமாகவும் (நீதிமொழிகள் திருமணம், குழந்தைகள் மற்றும் சமூகத்துடனான உறவுகளைக் கையாளுகின்றன) இந்தப் புத்தகங்கள் காட்டுகின்றன. இந்தப் புத்தகங்களைப் படிப்பதன் மூலம், தேவனைப் பற்றியும் நம்மைப் பற்றியும் ஆழமான அறிவைப் பெறுகிறோம்.*

## ஒரு நீதிமொழியை விளக்கும் முறை

*ஒரு நீதிமொழி ஒரு நியாயப்பிரமாண கட்டளையை விட வித்தியாசமான விதத்தில் வாழ்க்கையைக் கற்றுத்தருகிறது. "நீ செய்யாதிருப்பாயாக...," என்று நியாயப்பிரமாணம் கூறும் இடத்தில், ஒரு நீதிமொழி வாழ்க்கையின் பொதுவான கொள்கையைத் தெரிவிக்கிறது. ஒரு நீதிமொழி என்பது ஒரு குறுகிய,*

---

[229] *நீதிமொழிகள் 9:10; சங்கீதம் 90:12*
[230] *நீதிமொழிகள் 22:17-21; 6:6-8; மற்றும் 12:1*
[231] *பிரசங்கி 12:13*

மறக்கமுடியாத உண்மை அறிக்கை. ஒரு நீதிமொழியின் தன்மையைப் புரிந்துகொள்வது நீதிமொழிகளின் புத்தகத்தை விளக்குவதற்கு உதவுகிறது. ஒரு நீதிமொழியின் பண்புகள் பின்வருமாறு:

1. ஒரு நீதிமொழி பல்வேறு சூழ்நிலைகளில் பொருந்தும் பொதுவான கொள்கையை கூறுகிறது.
2. ஒரு நீதிமொழி வாழ்க்கை அனுபவத்தை அடிப்படை யாகக் கொண்டது. ஒரு நீதிமொழி பெரும்பாலும் வாழ்க்கை அனுபவத்திலிருந்து பெறப்பட்ட காலத்தால் -சோதிக்கப்பட்ட சத்தியத்தைச் சுருக்கமாகக் கூறுகிறது.
3. ஒரு நீதிமொழி ஒரு வாக்குறுதி அல்ல; இது வாழ்க்கை யைப் பற்றிய பொதுவான அவதானிப்பு. சில வாசகர்கள் நீதிமொழிகள் 22:6 போன்ற வசனங்களை முழுமையான வாக்குறுதிகளாக எடுத்துக் கொண்டாலும், மீதமுள்ள நீதிமொழிகள் சரியான வழியில் வளர்க்கப்படும் ஒரு குழந்தை மூடனுடைய பாதையைத் தேர்ந்தெடுக்கக் கூடும் என்பதைக் காட்டுகின்றன.
4. ஒரு நீதிமொழி ஒரு கட்டளை அல்ல. நீதிமொழிகள் புத்தகம் கீழ்ப்படிய வேண்டிய விதிகளின் தொகுப்பு அல்ல; இது ஒரு நபரை உண்மையான ஞானத்திற்கு வழிகாட்டும் கொள்கைகளின் தொகுப்பாகும்.

யூத மத குருக்கள் நியதியைப் பற்றி விவாதித்தபோது, அவர்கள் நீதிமொழிகள் 26:4-5இல் வெளிப்படையான முரண்பாட்டை விவாதித்தனர். “மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறு உத்தரவுகொடாதே; கொடுத்தால் நீயும் அவனைப்போலாவாய். மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறுஉத்தரவு கொடு; கொடாவிட்டால் அவன் தன் பார்வைக்கு ஞானியாயிருப்பான்.” வசனம் 4 மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறுஉத்தரவு கொடாதே என்று சொல்கிறது; வசனம் 5 மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறுஉத்தரவு கொடு என்று சொல்லுகிறது.

ஞானமுள்ளவன் மூடனுடைய இயல்பை அறிந்திருக்க வேண் டும் என்பதை யூத மத குருக்கள் உணர்ந்தனர். ஒரு "எளிய" மூடனுக்குக் கற்பிக்கலாம், மேலும் அவன் "அவன் தன் பார்வைக்கு ஞானியாயிருப்பான்" என்பதைத் தடுக்கும் விதத்தில் பதிலளிக்கப்பட வேண்டும். இருப்பினும், ஒரு

"பரியாசம்பண்ணும்" மூடன் தவிர்க்கப்பட வேண்டும், ஏனெனில் அவன் கற்றுக்கொள்ள மறுக்கிறான்; இந்த மூடனுக்கு பதிலளிக்க முயற்சிக்கும் ஒரு நபர் மூடன் நிலைக்கு இழுக்கப்படுவான். இந்த இரண்டு வசனங்களும் முழுமையான கட்டளைகள் அல்ல என்பதை யூத மத குருக்கள் உணர்ந்தனர்; அதற்குப் பதிலாக, அவை ஞானமில்லாதவர்களைக் கையாள்வதில் ஒரு ஞானமுள்ளவனுக்கு வழிகாட்டும் ஒரு வழிமுறையை வழங்குகின்றன.

புத்தகத்தின் முக்கிய வசனம் நீதிமொழிகள் 25:11: "ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்." சரியான சூழ்நிலையில் பேசப்படும் சரியான வார்த்தை வெள்ளி அமைப்பில் தங்க ஆபரணம் போல அழகாக இருக்கிறது. சூழ்நிலைக்கு சரியான வார்த்தையை அறிவதில் ஞானம் உள்ளது.

► ஊழியத்தில் உங்களுக்கு சவாலாக இருக்கும் ஒரு பிரச்சனையைப் பற்றி விவாதிக்கவும், பின்னர் பிரச்சனையைப் பேசும் நீதிமொழிகளிலிருந்து சத்தியங்களைக் கண்டறியவும். உங்கள் சூழ்நிலைக்கு பொருந்தும் கொள்கைகளைப் பற்றி விவாதிக்கவும்.

## நீதிமொழிகள் புத்தகத்தின் செய்தி

நீதிமொழிகள் புத்தகத்தில் ஐந்து முக்கிய தொகுப்புகள் உள்ளன. ஒவ்வொரு தொகுப்பும் ஞானத்தின் வெவ்வேறு அம்சங்களில் கவனம் செலுத்துகிறது.

### தொகுப்பு 1: ஞானம் பற்றிய சொற்பொழிவுகள்(1–9)

நீதிமொழிகளின் நோக்கத்தை சுருக்கமாக ஒரு அறிமுகத்திற்குப் பிறகு,[232] முதல் தொகுப்பு ஞானத்திற்கும் மூடத்தனத்திற்கும் உள்ள வித்தியாசத்தைக் காட்டுகிறது. இந்த தொகுப்பின் பெரும்பகுதி "சொற்பொழிவு நீதிமொழிகள்" வடிவத்தில் உள்ளது, ஞானத்தின் தன்மை பற்றிய நீண்ட பத்திகள் உள்ளன.

நீதிமொழிகள் 1:7 இரண்டு பாதைகளை வேறுபடுத்துகிறது: ஞானம் மற்றும் மூடத்தனம். மீதமுள்ள தொகுப்பு ஒரு

[232] நீதிமொழிகள் 1:1-7

*வாலிபனுக்கு ஞானத்தின் பாதையைத் தொடரவும், மூடத் தனத்தின் பாதையைத் தவிர்க்கவும் அறிவுறுத்துகிறது. தொகுப்பு 1 இந்த இரண்டு பாதைகளையும் வாசகருக்கு அறிமுகப் படுத்துகிறது.*

### தொகுப்பு 2: சாலமோனின் நீதிமொழிகள் (10:1 – 22:16)

*நீதிமொழிகள் 10:1 இந்தத் தொகுப்பை "சாலொமோனின் நீதிமொழிகள்" என்ற தலைப்பில் அறிமுகப்படுத்துகிறது. இந்தத் தொகுப்பு முதன்மையாக இரண்டு வரி நீதிமொழிகளைக் கொண்டுள்ளது, இது ஞானத்தின் நடைமுறை அம்சங்களை வாசகருக்கு அறிவுறுத்துகிறது.*[233] *இந்த நீதிமொழிகளில் பெரும்பாலானவை எதிர்நிலை இணைகளாக உள்ளன; அவை ஞானிகளின் பாதையையும் மூடனுடையபாதையையும் வேறுபடுத்துகின்றன.*

*இந்தத் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புகளில் வாழ்க்கையின் பல நடைமுறை அம்சங்கள் உள்ளன: பணம், பேச்சு, ஒழுக்கம் மற்றும் வேலை. இந்தப்பிரிவின் சீரற்ற அமைப்பு, நிஜ வாழ்க்கைப் பிரச்சனைகளை நாம் எதிர்கொள்ளும் விதத்தைப் பிரதிபலிக்கிறது. சூழ்நிலைகள் எழும்போது அவற்றை எதிர்கொள்ள ஞானம் ஒருவரைக் கட்டியெழுப்புகிறது.*

### தொகுப்பு 3: "ஞானிகளின் வார்த்தைகள்" (22:17 – 24:34)

*இத்தொகுப்பு ஒரு அறிமுக அறிக்கையுடன் தொடங்குகிறது: "சத்தியவார்த்தைகளின் யதார்த்தத்தை நான் உனக்குத் தெரிவிக்கும்படிக்கும், நீ உன்னை அனுப்பினவர்களுக்குச் சத்திய வார்த்தைகளை மறுமொழியாகச் சொல்லும்படிக்கும், ஆலோசனையையும் ஞானத்தையும்பற்றி நான் உனக்கு முக்கியமானவைகளை எழுதவில்லையா?"*[234] *இந்த அறிக்கை இந்த தொகுப்புக்கும் அமெனிமோப்பின் அறிவுறுத்தல் எனப்படும் எகிப்திய ஞானவார்த்தைகளின் சேகரிப்புக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகிறது. இந்த உறவு நீதிமொழிகளின் ஒரு முக்கியமான கொள்கையைக் காட்டுகிறது: ஞானத்தை பல ஆதாரங்களில்*

---

[233] *இரண்டு வரி நீதிமொழிக்கு ஈரடிச் செய்யுள் என்று பெயர்.*

[234] *நீதிமொழிகள் 22:20-21*

*இருந்து பெறலாம். ஒரு யூத நபர் எகிப்திய ஆதாரங்களில் ஞானத்தைக்கண்டபோது, அவர்கள் அதை தெய்வப்பக்தியுள்ள சத்தியத்தின்கண்ணாடி மூலம் படித்து, அன்றாட வாழ்க்கையில் அதைப் பயன்படுத்தினார்கள். "எல்லா சத்தியமும் தேவனுடைய சத்தியம்'' என்பதை அவர்கள் புரிந்து கொண்டனர்.*

*எகிப்திய ஞானம் நீதிமொழிகளின் ஞானத்தைப் போன்ற சில கூறுகளைக் கொண்டிருந்தது. இருப்பினும், வேதாகம ஞானம் அனைத்து உலக ஞானத்திலிருந்தும் ஒரு முக்கியமான அம்சத்தில் வேறுபட்டது; வேதாகமத்தின் ஞானம் தேவபயத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒரு ஒப்பீடு இந்த வேறுபாட்டை நிரூபிக்கும்.*

> *"பயிரிடப்பட்ட நிலத்தின் எல்லையில் உள்ள எல்லைக் கல்லை அகற்றாதே அல்லது விதவையின் எல்லையைக் கீழே எறியாதே, ஒரு பயங்கரமான காரியம் உங்களைத் தூக்கிச் செல்லும்" (அமெனிமோப்பின் அறிவுறுத்தல்).*[235]

> *''பூர்வ எல்லைக்குறியைமாற்றாதே; திக்கற்ற பிள்ளைகளுடைய நிலங்களை அபகரித்துக்கொள்ளாதே. அவர்களுடைய மீட்பர் வல்லவர்; அவர் உன்னுடனே அவர்களுக்காக வழக்காடுவார்'' (நீதிமொழிகள் 23:10).*

*இரண்டு நூல்களும் ஆஸ்திகளைத் திருடுவதற்கு எதிராக எச்சரிக்கின்றன. வித்தியாசம் கீழ்ப்படிதலுக்கான உந்துதலில் உள்ளது. நீதிமொழிகளில், இந்தக் கோட்பாடு சில தெளிவற்ற "அச்சுறுத்தும் காரியத்தை" அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை, மாறாக தேவனுடைய இயல்பை அடிப்படையாகக் கொண்டது. ஏழைகளை மீட்பவர் "வல்லவர்"; அவர் பலவீனர்களின் நியாயத்திற்காக வாதாடுவார். இது லேவியராகமம் 19 இன் போதனைக்கு இணையாக உள்ளது. தேவனுடைய ஜனங்கள் தேவனுடையஇயல்பை பிரதிபலிக்கும் வகையில்*

[235] *Bill T. Arnold and Bryan E. Beyer, Encountering the Old Testament, (Ada: Baker Academic, 2015), 319 என்னும் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்டப்பட்டது.*

*வாழ வேண்டும்: "உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்."*[236]

### தொகுப்பு *4:* சாலமோனின் கூடுதலான நீதிமொழிகள் *(25–29)*

*இந்தத் தொகுப்பில் "யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின் மனுஷர் பேர்த்தெழுதின சாலொமோனுடைய நீதிமொழிகள்" உள்ளன.*[237]*இந்த பிரிவு நடைமுறை அனுபவத்தின் அடிப் படையில் தலைமைத்துவ வழிகாட்டுதல்களை வழங்குகிறது.*

### தொகுப்பு *5:*ஆகூர்*(30)* மற்றும்லேமுவேலின்*(31)*வசனங்கள்

*நீதிமொழிகளின் இறுதி அதிகாரங்களில் "எண்கள் சார்ந்த சொற்கள்", நீதிமொழிகள், தெரிந்தவற்றிலிருந்து தொடங்கி, தெரியாதவற்றிற்கு நகரும். இது உண்மையான ஞானத்தின் தன்மையைப் பிரதிபலிக்கிறது; வாழ்க்கை அனுபவத்திலிருந்து பெறப்பட்ட ஞானத்தைப் பயன்படுத்தி தெரியாததை எதிர் கொள்ள இது நம்மை அனுமதிக்கிறது.*

►*நீதிமொழிகள் 30:24-28-ஐ வாசியுங்கள். ஆகூர் வழங்கியுள்ள நான்கு எடுத்துக்காட்டுகளை ஒன்றிணைக்கும் ஒரு கொள்கை யைக்கண்டறியவும். இந்த கொள்கை எவ்வாறு நமது ஞானத் தைப் பயன்படுத்த வழிகாட்ட வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்கவும்.*

*வாலிபர்களுக்கு கற்பிக்க வடிவமைக்கப்பட்ட ஒரு புத்தகத் திற்கு பொருத்தமானவகையில், நீதிமொழிகள் ஒரு நல்ல மனை வியின் ஆசீர்வாதங்கள் பற்றிய ஒரு கவிதையுடன் முடிவ டைகிறது. இக்கவிதையின் வரிகள் வரிசைக்கிரமமாக உயிர் எழுத்துக்களை முதல் எழுத்தாகக் கொண்டவை. புத்தகம் முழுவதும், மதிகெட்ட பெண்களுடனான உறவுகளுக்கு எதிராக எழுத்தாளர் எச்சரிக்கிறார். ஒரு வாலிபன் நல்லொழுக்கமுள்ள மனைவியைக் கண்டால் எவ்வளவு ஆசீர்வதிக்கப்படுவான் என்பதைக் காண்பித்து புத்தகம் முடிகிறது.*

---

[236]*லேவியராகமம் 19:2*
[237]*நீதிமொழிகள் 25:1*

## *நீதிமொழிகளின் புத்தகத்தை விளக்குதல்*

*நீதிமொழிகள் புத்தகம் பழைய ஏற்பாட்டின் மற்ற புத்தகங்களை விட வித்தியாசமான பாணியில் எழுதப்பட்டிருப்பதால், நீங்கள் அதை பஞ்சாகமம் அல்லது தீர்க்கதரிசிகளை விட வித்தியாச மான முறையில் வாசிக்க வேண்டும்.*[238] *ஒரு நீதிமொழியைப் படிக்கும்போது கேட்க வேண்டிய சில கேள்விகள்:*

1. *"இந்த நீதிமொழிஞானத்தை நோக்கிச் செல்கிறதா அல்லது மூடத்தனத்தை நோக்கிச் செல்கிறதா?" நீதி மொழிகள் புத்தகம் இந்த இரண்டு பாதைகளையும் வேறுபடுத்துகிறது.*
2. *"நீதிமொழியின் இரண்டாம் பாதி முதல் பாதியில் என்ன சேர்க்கிறது?"*
3. *"இந்த நீதிமொழியில் உள்ள ஞானத்தின் ஆதாரம் என்ன?" சத்தியம் என்பது வேதாகம வெளிப்பாடா, தனிப்பட்ட அனுபவமா, பண்டைய பாரம்பரியமா, உலகத்தை கவனிப்பதா அல்லது இவற்றின் கலவையா?*
4. *"இந்த நீதிமொழி எனது சூழ்நிலைக்கு எவ்வாறு பொருந்தும்?" ஒரு நீதிமொழி என்பது ஒவ்வொரு சூழ்நிலையிலும்பொருந்தக்கூடிய ஒரு வாக்குறுதி அல்ல.*
5. *"நீதிமொழிகளில் நான் படிக்கும் தலைப்புடன் தொடர் புடைய வேறு வசனங்கள் உள்ளதா?" உங்கள் சூழ்நிலை க்கு பொருந்தும் பல பழமொழிகளைக் கண்டறியவும்.*
6. *"வேதாகமத்தின் மற்ற புத்தகங்கள் நான் படிக்கும் தலைப்பைக் குறிப்பிடுகின்றனவா?"*
7. *"நான் படிக்கும் நீதிமொழியை விளக்கும்வேதாகமக் கதாபாத்திரம் யாரும் உள்ளனரா?"*

## *நீதிமொழிகளை விளக்குதல்: ஓர் எடுத்துக்காட்டு*

*"அகந்தை வந்தால் இலச்சையும் வரும்; தாழ்ந்த சிந்தையுள்ள வர்களிடத்தில் ஞானம் உண்டு" (நீதிமொழிகள் 11:2).*

---

[238] *இந்த பகுதி Tremper Longman III, How to Read Proverbs. (Downers Grove: InterVarsity Press, 2002)-ஐத் தழுவி எடுக்கப்பட்டது.*

1. *நீதிமொழிகள் 11:2 இரண்டு கோணங்ககளில் சுட்டிக்காட்டுகிறது: அகந்தை அவமானத்திற்கு வழிவகுக்கிறது; தாழ்மை ஞானத்திற்கு வழிவகுக்கிறது.*
2. *நீதிமொழியின் முதல் பாதி அகந்தையின் பலனைக் காட்டுகிறது: அவமானம். இரண்டாம் பாதி தாழ்மையின் பலனைக் காட்டுகிறது: ஞானம்.*
3. *இந்த சத்தியம் வேதாகமப் போதனைகளிலும், பண்டைய பாரம்பரியத்திலும் காணப்படுகிறது, மேலும் அகந்தையுள்ளவர்களின் வாழ்க்கையைக் கவனிப்பதன் மூலமும் இப்போதனையைக் காணலாம். இந்த பாடத்தை அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்வது வேதனையைத்தரும்.*
4. *அகந்தையினால் வரும் அவமானம் உடனடியாகக் காணப்படாவிட்டாலும், இந்த நீதிமொழி அகந்தையுள்ளவர்களின் வாழ்வில் நிறைவேறும்.*
5. *நீதிமொழிகள் முழுவதும் அகந்தை என்பது ஒரு கருப்பொருள். அகந்தையைக் குறிக்கும் பிற நீதிமொழிகள் 13:10; 16:5, 18; 18:12; மற்றும் 29:23.*
6. *சங்கீதம் 10:4 மற்றும் 138:6 உட்பட பல வசனங்களில் அகந்தை குறிப்பிடப்பட்டுள்ளது; ஏசாயா 2:11; 1கொரிந்தியர் 13:4; மற்றும் யாக்கோபு 4:6.*
7. *சவுல் ராஜாவின் வீழ்ச்சி நீதிமொழிகள் 11:2-ன் சத்தியத்திற்கு ஒரு துக்கமான உதாரணத்தை அளிக்கிறது. தாவீது ராஜா மீது இருந்த தேவனுடைய ஆசீர்வாதம் இந்த வசனத்தின் கடைசி பகுதியின் உதாரணமாக விளங்குகிறது.*

## நீதிமொழிகளின் புத்தகம் இன்று பேசுகிறது

*ஞானம் இல்லாமல் ஒரு கிறிஸ்தவன் நீதிமானாக இருக்க முடியுமா? அது சாத்தியம் என்று வேதாகமம் கூறுகிறது. லோத்து நீதிமான்; ஆனால் அவர் ஞானவான் இல்லை.[239] லோத்து பரலோகத்தை அடைந்திருந்தாலும், அவனுடைய மூடத்தனம் அவனுடைய குடும்பத்தின் உயிர்களைப் பலிவாங்கி, மற்றவர்கள் மீதான அவனுடைய செல்வாக்கை அழித்து, அவனுக்கு மனவேதனையை உண்டாக்கியது.*

[239] *2 பேதுரு 2:7-8*

*பல முறை, கிறிஸ்தவர்கள் ஞானமாக செயல்படத்தவறியதால், கிறிஸ்தவர்களின் சாட்சி அழிக்கப்பட்டது. திருச்சபைகள் பிரிக் கப்பட்டுள்ளன; திருமணங்கள் தகர்க்கப்பட்டுவிட்டன, மேலும் திருச்சபைத் தலைவர்களின் மூடத்தனமான செயல்களால் வாலி பர்கள் தங்கள் நம்பிக்கையை கைவிட்டனர். தனிப்பட்ட அள வில், குடும்பப்பிரச்சனைகள், நிதிச் சிக்கல்கள், மற்றும் தனிப்பட்ட சிரமங்கள் ஆகியவை ஞானமின்மையால் மோச மாகின்றன.*

*நீதிமொழிகள் புத்தகம் கிறிஸ்தவர்களை ஞானமான வாழ்வில் வழிநடத்தும். நீதிமொழிகள் உள்ளான தெய்வபக்திக்கும் நம் மைச் சுற்றியுள்ள உலகத்திற்கும் உள்ள தொடர்பைக் காட்டு கிறது.*[240] *கிறிஸ்தவர்கள் உலகம் ஆசீர்வதிக்கப்படும் வகையில் வாழ நீதிமொழிகள் நமக்கு உதவுகின்றன.*

## மூடனைக் குறித்த ஓர் நெருக்கமான பார்வை

*நீதிமொழிகளில், "மூடன்" என்ற வார்த்தை நான்கு வெவ்வேறு எபிரேய சொற்களை உள்ளடக்கியது. ஒவ்வொரு வார்த்தையும் வெவ்வேறு வகையான மூடத்தனத்தை விவரிக்கிறது. இதன் காரணமாக, ஒவ்வொரு வகையான மூடனுக்கும் நமது பதில் வேறுபடுகிறது.*

### *"மூடன்" என்பதற்கான எபிரேய சொற்கள்*

### *பேதை*

*நீதிமொழிகளில், வாலிபர்கள் பெரும்பாலும் "பேதைகள்"*[241] *என்று அழைக்கப்படுகிறார்கள். பேதைகள் உருவாக்கப்படாத வர்கள் மற்றும் அப்பாவிகள். அவர்கள் மூடத்தனமான செயல் களைச் செய்கிறார்கள் மற்றும் சில சமயங்களில் மூடர்கள் குழுவாக இருக்கிறார்கள். அவர்கள் பொறுப்பற்றவர்கள் மற் றும் முதிர்ச்சியற்றவர்கள். அவர்களின் முடிவுகளின் ஆபத்தை*

---

[240] *G.R. French. "நீதிமொழிகள் உள் தெய்வீகத்திற்கும் நம்மைச் சுற்றியுள்ள உலகத்திற்கும் இடையிலான இடைமுகத்தை அடிப்படையாகக் கொண்டவை."*

[241] *நீதிமொழிகள் 1:4*

*அவர்களால் பார்க்க முடியாததால்,[242] அவர்கள் பேதைமையில் வழிதவறுகிறார்கள்.[243]*

*பேதைமையுள்ளவர்களுக்கும் மூடர்களுக்கும் உள்ள வித்தியா சம் ஒரே வார்த்தையில் சுருக்கப்பட்டுள்ளது: கற்றல். மூடர்கள் "ஞானத்தையும் போதனையையும் வெறுக்கிறார்கள்,"[244] ஆனால் பேதைகள் கேட்பார்கள். நீதிமொழிகளின் குறிக்கோள் பேதைகளைஞானத்தை நோக்கி நகர்த்துவதாகும்.*

***மதியீனன்***

*"மதியீனன்" என்று மொழிபெயர்க்கப்பட்ட இரண்டு எபிரேய வார்த்தைகள் உள்ளன. முதல் வார்த்தை பிடிவாதமான, பொறு மையற்ற, ஞானத்தைத் தேட விரும்பாத ஒரு நபரைக் குறிக் கிறது. அவன் "ஞானத்தை வெறுக்கிறான்"[245] மற்றும் மூடத்தனத் தில் தொடர்ந்து இருக்கிறான்.[246] அவன் ஞானத்தை மதிக்கா ததால், மதியீனன் ஞானத்தைப் பெற ஒருபோதும் தன்னில் தானே செயல்பட மாட்டான்.[247]*

*ஒரு மதியீனனை விவரிக்கும் இரண்டாவது வார்த்தை இன்னும் வலிமையானது. இந்த மதியீனன் தார்மீக ரீதியாக சீர்கேடுள் ளவன்; அவன் கர்த்தருக்குப் பயப்படுவதை நிராகரிக்கிறான்.[248] அவன் "பாவத்தை பரியாசம் பண்ணுகிறான்."[249]*

*மூடத்தனத்தின் வேர் தார்மீகமானது, அது அறிவுசார்ந்ததல்ல. பிரபலமான உரையாடலில், ஒரு மூடன் என்பது புத்திசாலித் தனம் இல்லாத ஒரு நபர். வேதத்தில், கர்த்தருக்குப் பயப்படு வதை நிராகரிப்பவன் ஒரு மூடன்.*

---

*[242] "விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்துகொள்ளுகிறான்; பேதைகளோ நெடுகப்போய்த் தண்டிக்கப்படுகிறார்கள்." நீதிமொழிகள் 27:12.*

*[243] குறிப்பாக நீதிமொழிகள் 7:6-27ஐப் பார்க்கவும். இந்த இளைஞன் சலனத்தைக் கண்டுபிடிக்கப் புறப்படுவதில்லை; சோதனை அவரைக் கண்டுபிடிக்கிறது.*

*[244] நீதிமொழிகள் 1:7*

*[245] நீதிமொழிகள் 1:22*

*[246] நீதிமொழிகள் 26:11*

*[247] நீதிமொழிகள்1 7:16*

*[248] நீதிமொழிகள் 1:7, 29; 12:15*

*[249] நீதிமொழிகள் 14:9*

### *பரியாசக்காரன்*

*நீதிமொழிகளில் மிகவும் மோசமான மூடனாக இருப்பவன் பரியாசம்பண்ணுபவன் அல்லது கேலி செய்பவன். நீதிமொழி களில் இந்த வார்த்தை பதினேழு முறை பயன்படுத்தப் படுகிறது. பரியாசம்பண்ணுபவன் ஞானத்தை நிராகரிப்பது மட்டுமல்லாமல், மற்றவர்களை மூடத்தனத்திற்கு இட்டுச் செல் வதில் மகிழ்ச்சி அடைகிறான். தன்னைத் திருத்துபவர்களை வெறுக்கிறான்,[250] எங்கு சென்றாலும் சண்டை போடுகிறான்.[251] தூற்றுபவன் மீதான நியாயத்தீர்ப்பு கடுமையானது; பரியாசம் பண்ணுபவன் ஞானத்தை நிராகரித்ததால், ஞானம் பரியாசம் பண்ணுபவனை நிராகரிக்கிறது.[252]*

### *மூடத்தனத்திற்கு மருந்து*

*மூடத்தனத்திற்கு மருந்தைக் கண்டுபிடிக்க, மூடத்தனத்தின் காரணத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்: மூடன் தேவனை நம்பாமல் தன் சொந்த ஞானத்தை நம்புவதைத் தேர்ந்தெ டுக்கிறான்.[253] ஒரு முக்கிய பத்தியில், இந்த இரண்டு தேர்வுகளும் அருகருகே வைக்கப்பட்டுள்ளன. நாம் முழு இருதயத்தோடும் கர்த்தரை நம்பலாம் அல்லது நம்முடைய சொந்த புரிதலில் சாய்ந்து கொள்ளலாம்; இரண்டையும் நம்மால் செய்ய முடியாது.[254] கர்த்தர் மீது நம்பிக்கை வைப்பது ஞானத்திற்கு வழிவகுக்கும்; நம்மை நம்புவது மூடத்தனத்திற்கு வழிவகுக் கிறது.*

*அப்படியானால், மூடனுக்கு மருந்து, கர்த்தருக்குப் பயப்படு வதே. மூடத்தனத்திற்கு மருந்து ஆவிக்குரிய நிலை; மூடத்தன த்தை குணப்படுத்துவதும் ஆவிக்குரிய நிலைதான். மூடனுக்குப் பிரச்சினை தேவனுக்கு எதிராகத் திரும்பிய இருதயம். மூடனு க்கு உதவ, பெற்றோர், ஆசிரியர் அல்லது போதகர் இருதயத் தைக் கையாள வேண்டும். மூடர்களை நாம் சீர்திருத்த முடியாது;*

---

[250] *நீதிமொழிகள் 9:8*
[251] *நீதிமொழிகள் 22:10*
[252] *நீதிமொழிகள் 3:34*
[253] *நீதிமொழிகள் 1:22-25; 12:15*
[254] *நீதிமொழிகள் 3:5-7*

மாறாக, அவர்களது இருதயம் தேவனால் மாற்றப்பட வேண்டும்.

## பிரசங்கி புத்தகத்தின் பின்னணி

### எழுத்தாளர் மற்றும் எழுதப்பட்ட காலம்

பிரசங்கி புத்தகம் சாலமோனை எழுத்தாளராக நேரடியாகக் குறிப்பிடவில்லை என்றாலும், ஆரம்ப சொற்றொடர் சாலமோனைச் சுட்டிக்காட்டுகிறது: "தாவீதின் குமாரனும் எருசலேமின் ராஜாவுமாகிய பிரசங்கியின் வாக்கியங்கள்." எழுத்தாளரின் செல்வம் மற்றும் சாதனைகள் பற்றிய விளக்கம் சாலமோன் பற்றி நாம் அறிந்தவற்றுடன் பொருந்துகிறது. சாலமோனின் வாழ்க்கையின் முடிவில், ஒருவேளை அவர் விசுவாச துரோகத்திலிருந்து திரும்பிய காலத்தில் பிரசங்கி புத்தகம் இயற்றப்பட்டிருக்கலாம். கி.மு. 935-வாக்கில் பிரசங்கி புத்தகம் எழுதப்பட்டிருக்கலாம்.

### ஞான உபதேசம்

பிரசங்கியின் கருப்பொருளைக் கண்டறிய முயற்சிக்கும் முன்பு, எபிரேய ஞானஉபதேசத்தின் தன்மையைப் புரிந்துகொள்வது உதவியாக இருக்கும். இன்று, ஒரு ஆசிரியர் மாணவர்களின் கேள்விகளுக்கு தெளிவான பதில்களை வழங்கும் விரிவுரைகளை வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். பண்டைய எபிரேய ஆசிரியர்கள் வித்தியாசமான கற்பித்தல் முறையைப் பயன்படுத்தினர். அவர்கள் கேள்விகளைக் கேட்டனர் மற்றும் மாணவர்கள் பதில்களைக் கண்டுபிடிக்க வேண்டிய சூழ்நிலைகளை விவரித்தனர். நீதிமொழிகள் 30 இன் எண்ணியல் சொற்களில், தொடர்ச்சியான விளக்கங்கள் மாணவர் ஒரு பொதுவான கொள்கையைக் கண்டறிய வேண்டும். ஆசிரியரின் பொறுப்பு பதில்களைக் கொடுப்பது அல்ல, ஆனால் பதில்களைக் கண்டறிய மாணவர்களை வழிநடத்துவது.[255]

[255] இந்த தலைப்பை ஆராய,*Curtis, Edward M. and John J. Brugaletta. Discovering the Way of Wisdom. MI: Kregel Academic, 2004* என்னும் புத்தகத்தை வாசிக்கவும்.

*யோபுக்கு தேவன் அளித்த பதில் இந்த வகையான உபதேசத்தைப் பயன்படுத்துகிறது. தேவன் யோபுவிடம், "இதோ என் இயல்பைக் குறித்த மூன்று குறிப்புகள்" என்று கூறவில்லை. மாறாக, தேவன் யோபுவிடம் அவருடைய இயல்பை வெளிப்படுத்தும் கேள்விகளைத் தொடர்கிறார். கேள்விகள் யோபுவை சத்தியத்திற்கு வழிநடத்தும் காரணிகள்.*

*பிரசங்கியும் இதே கற்பித்தல் முறையைப் பயன்படுத்துகின்றது. ஞானமுள்ளவன் ஒருவன் எதிர்கொள்ள வேண்டிய வாழ்க்கையின் பதட்டங்களை இது வெளிப்படுத்துகிறது. பதில்களைக் கொடுப்பதற்குப் பதிலாக, பிரசங்கி கேள்விகளைக் கேட்கிறார் மற்றும் பிரச்சினைகளை எழுப்புகிறார். வாழ்க்கையின் சிரமங்களுக்கு விடை காண பிரசங்கி புத்தகம் வாசகனுக்கு சவால் விடுகிறது. யோபுவிடம் தேவன் கேட்ட கேள்விகளைப் போலவே, பிரசங்கியில் உள்ள சிரமங்களும் வாசகரை ஞானத்திற்கு இட்டுச் செல்லும் நோக்கம் கொண்டவை.*

## *பிரசங்கி புத்தகத்தின் செய்தி*

*பிரசங்கியின் செய்தி நீண்ட காலமாக விவாதிக்கப்படுகிறது. "மாயை" என்ற தொடர்ச்சியான வார்த்தையின் காரணமாக, பல மொழிபெயர்ப்பாளர்கள் புத்தகத்தை எதிர்மறையான, கிட்டத் தட்ட நம்பிக்கையற்ற புத்தகமாக பார்க்கிறார்கள். பல வாசகர்கள், "ஏன் வேதாகமத்தில் இவ்வளவு நம்பிக்கையற்ற புத்தகம் இருக்கிறது?" என்று கேட்டிருக்கிறார்கள். எபிரேய உபதேசத்தின் பாணியைப் புரிந்துகொள்வது, பிரசங்கியை ஞானத்திற்கான வழிகாட்டுதலாகப் பார்க்க உதவுகிறது. இந்த ஞானத்தின் தேடலின் ஒரு பகுதி இரண்டு மையக்கருத்துகள்.*

### *மையக்கருத்து 1: மாயை*

*பிரசங்கி புத்தகத்தில் ஒரு தொடர்ச்சியான மையக்கருத்து வாழ்க்கையின் மாயை. விரக்தியான சொற்றொடருடன் புத்தகம் தொடங்குகிறது, "மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான்."[256] மாயை என்ற சொல் புத்தகம் முழுவதும் திரும்பத் திரும்ப வருகிறது.*

---

*[256] பிரசங்கி 1:2*

*மாயை **தற்காலிகமான** ஒன்றை பரிந்துரைக்கிறது. சங்கீதம் 144:4 வாழ்க்கையின் சுருக்கத்தைக் காட்டுகிறது, "மனுஷன் மாயைக்கு ஒப்பாயிருக்கிறான்; அவன் நாட்கள் கடந்துபோகிற நிழலுக்குச் சமானம்." பிரசங்கியில், இன்பம், செல்வம், வாழ்க்கை கூட தற்காலிகமானது.*

*மாயை என்பது சில நேரங்களில் **அபத்தம் அல்லது அநீதியைக்** குறிக்கிறது. "பூமியின்மேல் நடக்கிற வேறொரு மாயையான காரியமுமுண்டு; அதாவது, துன்மார்க்கரின் கிரியைக்கு வருவது போல, நீதிமான்களுக்கும் வரும்; நீதிமான்களின் கிரியைக்கு வருவதுபோல, துன்மார்க்கருக்கும் வரும்; இதுவும் மாயை என்றேன்."[257]*

*மாயை சில நேரங்களில் **அர்த்தமற்ற** தன்மையைக் குறிக்கிறது. பிரசங்கியின் எழுத்தாளர் இன்பத்தில் பொருள் தேடினார், அது மாயை என்று கண்டார்; அதற்கு நிரந்தர முக்கியத்துவம் இல்லை.[258]*

*எபிரேய இலக்கியத்தில், "x இன் x" என்ற வடிவம் உயர்ந்ததைக் குறிக்கிறது. "மகாபரிசுத்தஸ்தலமே" மிகவும் பரிசுத்தமான இடம்; "உன்னதப்பாட்டு" அனைத்து பாடல்களிலும் சிறந்தது. "மாயை, மாயை" என்பது வெறுமை, அர்த்தமற்ற எல்லாவற்றிலும் வெறுமையான, அர்த்தமற்ற காரியங்களைக்குறிக்கிறது. மேலும், இது மிகவும் வெற்று விஷயம் என்ன? "**எல்லாம்** மாயை." வாழ்க்கையே மாயை. இது இந்த மையக்கருத்தின் முழுமையான அவநம்பிக்கையைக் காட்டுகிறது.*

### *மையக்கருத்து 2: மகிழ்ச்சி*

*"மாயை" என்பது மட்டுமல்ல பிரசங்கியின் செய்தி. மனிதனின் சாதனைகள் மாயையாக இருந்தாலும், பிரசங்கி வாழ்க்கையின் நேர்மறையான படங்களையும் உள்ளடக்கியது. "மகிழ்ச்சி" எனும் மையக்கருத்து பிரசங்கி முழுவதும் தோன்றும் இரண்டாவது மையக்கருத்தாகும், .*

*அதிகாரங்கள் 1 மற்றும் 2 இல் உள்ள மாயையின் படத்திற்குப் பிறகு, எழுத்தாளர் இவ்வாறு முடிக்கிறார்: "மனுஷன் புசித்துக்*

---

*[257] பிரசங்கி 8:14*
*[258] பிரசங்கி 2:1-12*

*குடித்து, தன் பிரயாசத்தின் பலனை அநுபவிப்பதைப் பார்க்கிலும். அவனுக்கு ஒரு நன்மையுமில்லை, இதுவும் தேவ னுடைய கரத்திலிருந்து வருகிறது என்று நான் கண்டேன்."[259] வாழ்க்கை என்பது தேவனுடைய பரிசு என்ற செய்தி புத்தகம் முழுவதும் திரும்பத் திரும்ப வருகிறது. பிரசங்கியில் மகிழ்ச் சியின் செய்தி முக்கியமானது.[260]*

## *பிரசங்கி புத்தகத்தின் கருப்பொருள்: வாழ்க்கையின் அர்த்தத்திற்கான தேடல்*

*மாயை மற்றும் மகிழ்ச்சி ஆகிய இரண்டு மையக்கருத்துக்களும் முரண்பாடாகத் தோன்றலாம். இருப்பினும், புத்தகம் முழு வதும் மீண்டும் ஒரு ஜோடி சொற்றொடர்கள் உள்ளன. இருபத்தி ஒன்பது முறை, பிரசங்கி "சூரியனுக்குக் கீழே உள்ள வாழ்க்கை யை" குறிக்கிறது. "சூரியனுக்கு கீழே வாழ்க்கை" என்பது பூமிக்குரிய கண்ணோட்டத்தில் மட்டுமே பார்க்கப்படும் வாழ்க்கை. மீண்டும் மீண்டும், "சூரியனுக்குக் கீழே வாழ்க்கை" என்பது "மாயை" உடன் இணைக்கப்பட்டுள்ளது.*

*ஐந்து முறை, பிரசங்கியில் "தேவனுடைய ஈவு" அல்லது "தேவனுடைய கையிலிருந்து கொடுக்கப்பட்ட வாழ்க்கையை" குறிக்கிறது. இது பெரும்பாலும் "மகிழ்ச்சி" அல்லது "சந்தோஷ த்துடன்" இணைக்கப்படுகிறது.*

*ஒன்றாக, இந்த சொற்றொடர்கள் பிரசங்கி புத்தகத்தை ஒன்றிணைக்கும் ஒரு கருப்பொருளைச் சுட்டிக்காட்டுகின்றன. நீதிமொழிகளைப் போலவே, பிரசங்கியும் இரண்டு பாதை களை வழங்குகிறது. நீதிமொழிகள் கூறும் இரண்டு தேர்வுகள் ஞானம் அல்லது மூடத்தனம். பிரசங்கியில், மாயை (சூரியனுக் குக் கீழேயுள்ள வாழ்க்கை) அல்லது மகிழ்ச்சி (தேவனுடைய பரிசு). பூமிக்குரிய கண்ணோட்டத்தில் மட்டுமே பார்க்கப்படும் வாழ்க்கை அர்த்தமற்றது மற்றும் வீண். தேவனுக்கு பயந்து வாழும் வாழ்க்கையோ மகிழ்ச்சி.*

---

[259] *பிரசங்கி 2:24*

[260] *மகிழ்ச்சியின் செய்தி மாயையின் கருப்பொருளுக்கு ஒரு விதிவிலக்காக ஒருமுறை மட்டும் சொல்லப்படவில்லை. சந்தோஷப்படுவதற்கான அறிவுரைகள் பிரசங்கி 2:24-26 இல் காணப்படுகின்றன; 3:12, 22; 5:18; 8:15; 9:7-9; மற்றும் 11:9-10.*

| பிரசங்கி புத்தகத்தில் வாழ்க்கையின் கண்ணோட்டங்களின் மாறுபாடு | |
|---|---|
| "தேவனுடைய பரிசாகிய" வாழ்க்கை | மகிழ்ச்சி |
| "சூரியன் கீழுள்ள" வாழ்க்கை | மாயை |

*பிரசங்கியின் ஞானம் இதுதான்: தேவன் "அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்; உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்; ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான்."[261] தேவன் மனிதனுக்கு நித்தியம் மற்றும் உண்மையான மகிழ்ச்சியைப் பற்றிய விழிப்புணர்வைக் கொடுத்துள்ளார். இருப்பினும், இந்த மகிழ்ச்சியை நம் சொந்த முயற்சியில் காண முடியாது. உண்மையான மகிழ்ச்சி தேவனுடனான உறவில் மட்டுமே காணப்படுகிறது, அது தேவனுக்கு பயப்படும் பயம்.*

*இரண்டு பாதைகளின் கருப்பொருள் முன்னுரை ("மாயை மாயை") மற்றும் முடிவுரை ("தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே") ஆகியவற்றில் சுருக்கப்பட்டுள்ளது. பிரசங்கி நம்பிக்கையற்ற புத்தகம் அல்ல; இது உண்மையான மகிழ்ச்சியை சுட்டிக்காட்டும் ஞானத்தின் புத்தகம்.*

## புதிய ஏற்பாட்டில் பிரசங்கி புத்தகம்

*புதிய ஏற்பாட்டில் பிரசங்கியின் செய்தி மீண்டும் மீண்டும் வருகிறது. தேவனைத் தவிர வாழ்க்கையின் பயனற்றத்தன்மை மற்றும் செல்வத்தைப் பின்தொடர்வதற்கு எதிரான இயேசுவின் எச்சரிக்கைகளில் காணப்படுகிறது.[262] அதே சமயம், தம்முடைய ராஜ்யத்தை முதலில் தேடுபவர்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் வழங்கப்படும் என்று இயேசு வாக்குக் கொடுக்கிறார்.[263] இந்த பூமியின் பொருட்களுக்காக வாழ்ந்த வாழ்க்கை மாயை; தேவனுடைய பரிசாக வாழும் வாழ்க்கை உண்மையான மகிழ்ச்சியைத் தருகிறது.*

---

[261] *பிரசங்கி 3:11.*

[262] *உதாரணமாக, லூக்கா 12:16-21*

[263] *மத்தேயு 6:33*

## உன்னதப்பாட்டு

### தலைப்பு

*இந்த புத்தகம் உன்னதப்பாட்டு அல்லது சாலொமோனின் பாட்டு என்று அழைக்கப்படுகிறது: "சாலொமோன் பாடின உன்னதப்பாட்டு."[264] "உன்னதப்பாட்டு" என்ற தலைப்பு அனைத்து பாடல்களிலும் இந்த பாடல் சிறந்தது என்று அர்த்தம்தரும் தலைப்பு. "சாலொமோனின் பாட்டு" என்ற தலைப்பு இந்த புத்தகத்தை சாலமன் ராஜாவுடன் தொடர்புபடுத்துகிறது.*

### உன்னதப்பாட்டு புத்தகத்தை விளக்குதல்

*உன்னதப்பாட்டுடன் தொடர்புடைய மிகப்பெரிய கேள்வி "இந்த புத்தகத்தை நாம் எவ்வாறு விளக்குவது?" இந்த புத்தகத்தை வாசிப்பதற்கு இரண்டு முக்கிய அணுகுமுறைகள் உள்ளன: உருவகம் மற்றும் கவிதை.*

#### உருவக விளக்கம்

*காதலுடன் உள்ள அன்புக்கு அர்ப்பணிக்கப்பட்ட புத்தகம் ஏன் வேதத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது என்று வாசகர்கள் அடிக்கடி கேட்டுள்ளனர். இதன் காரணமாக, உன்னதப்பாட்டை உருவகமாக விளக்கும் ஒரு நீண்ட பாரம்பரியம் உள்ளது. மூன்றாம் நூற்றாண்டில் ஒரிகன் முதல் இருபதாம் நூற்றாண்டில் ஹட்சன் டெய்லர் வரையிலான விளக்கவுரையாளர்கள் உன்னதப்பாட்டின் உருவக விளக்கவுரைகளை எழுதியுள்ளனர்.*

*உன்னதப்பாட்டுக்கான ஓர் உருவக அணுகுமுறை, கவிதையை தேவனுடைய ஜனங்கள் மீதான அன்பின் சித்திரமாகப் பார்க்கிறது. யூதவாசகர்கள் இந்தப் புத்தகத்தை இஸ்ரவேல் மீது தேவனுடைய அன்பின் சித்திரமாகப் பார்த்தார்கள்; கிறிஸ்தவ விளக்கவுரையாளர்கள் திருச்சபையின் மீதான தேவனுடைய அன்பின்சித்திரமாக இதைப் பார்க்கிறார்கள்.*

*உருவக அணுகுமுறையை நிராகரிப்பவர்கள் இரண்டு வாதங்களை முன்வைக்கின்றனர். முதலாவதாக, உன்னதப் பாட்டு ஒரு உருவக விளக்கத்தைச் சுட்டிக்காட்டவில்லை. இரண்டாவதாக, உருவக அணுகுமுறை பெரும்பாலும் தெளி*

[264] உன்னதப்பாட்டு 1:1

*வான அர்த்தத்தைக் கொண்டிருக்கவில்லை. உன்னதப்பாட்டின் விளக்கங்களைப் படிக்கும்போது, ஒவ்வொரு விளக்கவுரை யாளரும் அதில் உள்ள கவிதை உருவங்களை வெவ்வேறு விதமாக விளக்குகிறார்கள் என்பது தெளிவாகிறது. உருவக விளக்கம் எனும் அணுகுமுறை ஒவ்வொரு வாசகரையும் தேவனுடைய வார்த்தையின் மீது அவரவர் அதிகாரம் செலுத்துவதற்கு விட்டுவிடுகிறது.*

***கவிதை விளக்கம்***

*உன்னதப்பாட்டுக்கான கவிதை அணுகுமுறை இந்த புத்தகத்தை மனித அன்பின் சித்திரமாக பார்க்கிறது.*[265] *திருமணத்தில் முடிவ டையும் நாடகமாகப்பார்க்கப்பட்டாலும் சரி, கதை அமைப்பு இல்லாத காதல் கவிதைகளின் தொகுப்பாக இருந்தாலும் சரி, இந்த அணுகுமுறை புத்தகத்தை காதல் கவிதைகளின் தொகுப்பாகப் பார்க்கிறது.*

*திருச்சபை வரலாற்றின் பெரும்பகுதியில், கவிதை அணுகு முறை என்பது குறைந்த அளவிற்கே உருவக விளக்கத்தை விட பிரபலமாக இருந்தது. இருபதாம் நூற்றாண்டில், நேரடி விளக்கம் மிகவும் பொதுவானதாகிவிட்டது.*[266]

*இந்த அணுகுமுறையில், உன்னதப்பாட்டு காதல் கவிதைச்சித் திரமாகப் பார்க்கப்படுகிறது. கிராமப்புற உருவங்களைப் பயன்படுத்தி, உன்னதப்பாட்டு காதலன் மற்றும் அவனது காதலியின் அன்பைக்காட்டுகிறது; இது ஒரு புருஷனுக்கும் மனைவிக்கும் இடையிலான அன்பின் சித்திரம். சில எழுத்தாளர்கள் உன்னதபாட்டை நீதிமொழிகள் 31க்கு இணை யாகப் பார்த்திருக்கிறார்கள். நீதிமொழிகள் 31 திருமணத்தின்*

---

*[265] இதை "இலக்கிய" விளக்கம் என்றும் கூறலாம். இருப்பினும், நேரடி அணுகுமுறை கூட, ஒரு கவிதையானது உண்மையில் விளக்கப்படாத உருவகங்களைப் பயன்படுத்துகிறது என்பதை அங்கீகரிக்கிறது. இந்த காரணத்திற்காக, "கவிதை" விளக்கம் ஒரு சிறந்த சொல்.*

*[266] உன்னதபாட்டின் கவிதை வாசிப்பை ஊக்குவித்த சில முந்தைய விளக்கவுரையாளர்கள் உள்ளனர். இவர்களில் 1 ஆம் நூற்றாண்டில் ஜோசிபஸ் மற்றும் 4 ஆம் நூற்றாண்டில் மோப்சுஸ்டியாவின் தியோடர் ஆகியோர் அடங்குவர். ஆடம் கிளார்க் மற்றும் ஜான் கால்வின் இருவரும் கவிதை விளக்கங்களை விரும்பினர், இருப்பினும் இருவரும் உரையில் சில உருவக அம்சங்களைக் கண்டனர்..*

*நடைமுறை பக்கத்தைக் காட்டுகிறது; உன்னதப்பாட்டு திருமணத்தின் காதலைக் காட்டுகிறது.*

*உன்னதப்பாட்டு புத்தகம் ஒரு உருவகக் கதை என்று உரையில் எந்த குறிப்பும் இல்லாததால், கவிதை விளக்கத்தை ஆதரிப்பவர்கள் புத்தகத்தை அதில் உள்ளதை உள்ளபடி விளக்க வேண்டும் என்று வாதிடுகின்றனர். கவிதை விளக்கத்தை எதிர்ப்பவர்கள் வேதாகமத்தில் காதல் கவிதைகள் இருப்பதைக் குறித்து கேள்வி எழுப்புகின்றனர். தேவன் தனது ஜனங்கள் மீது வைத்திருக்கும் அன்பின் உருவகமாக இந்த புத்தகம் மிகவும் பொருத்தமானது என்று அவர்கள் வாதிடுகின்றனர்.*

## உன்னதப்பாட்டு புத்தகத்தின் செய்தி

*“இந்தப் புத்தகம் ஏன் வேதாகமத்தில் இருக்கிறது?” என்று பல வாசகர்கள் கேட்டிருக்கிறார்கள். மனிதத்தன்மையின் மதிப்பைக் காட்டுவதற்கு என்பது குறைந்த பட்சம் ஒரு காரணமாக இருக்கலாம். வாழ்க்கையின் ஆசீர்வாதங்கள் தேவனுடைய பரிசு என்று பிரசங்கி காட்டுகிறது, அவருக்குப் பயப்படுபவர்கள் ஆசீர்வாதங்களை அனுபவிக்க வேண்டும் என்று அது கொடுக்கப்பட்டிருக்கிறது; அதுபோலவே, மனித அன்பும் மதிக்கப்பட வேண்டிய தேவனுடைய பரிசு என்பதை உன்னதப்பாட்டு காட்டுகிறது.*

*தேவன் முழு ஜனங்கள் மீது ஆர்வமாக உள்ளார். சில ஆரம்பகால கிரேக்க தத்துவஞானிகள், பிளாட்டோவைப் போன்றவர்கள், ஆவியை நல்லதாகவும், மாம்சத்தைக் கெட்டதாகவும் கண்டனர். சில சமயங்களில், சில கிறிஸ்தவர்களும் இதே கருத்தை ஏற்றுக்கொண்டனர். இந்த பார்வை உடல் தீயது ஆவி நல்லது என்று கூறுகிறது. இருப்பினும், தேவன் மனிதனைப் படைத்த பிறகு, "தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது"[267] என்று ஆதியாகமம் போதிக்கிறது. பாவவீழ்ச்சி சிருஷ்டிப்பை சிதைத்தாலும், தேவன் தாம் உருவாக்கிய உலகத்தை இன்னும் மதிக்கிறார். திருமணத்தை தடை செய்த ஆரம்பகால திருச்சபையில் இருந்தவர்களுக்கு பவுல் பதிலளித்தார், "தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே*

---

[267] *ஆதியாகமம் 1:31*

*ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல."*[268] உன்னதப்பாட்டு புத்தகம் மனித அன்பின் மதிப்பிற்கு வேதாகமத்தின் சாட்சியமாகும். திருமணத்தின் எல்லைக்குள், சரீர அன்பை தேவனின் பரிசாக அனுபவிக்க வேண்டும்.

## உன்னதப்பாட்டு இன்று பேசுகிறது

இரண்டாம் உலகப்போரின்போது, அடல்ஃப்ஹிட்லருக்கு எதிரான கிறிஸ்தவ எதிர்ப்பை வழிநடத்திய ஜெர்மன் போதகர் டீட்ரிச் போன்ஹோஃபர், மரியா வான் வெட்மேயரை திருமணம் செய்து கொண்டார். சில சக போதகர்கள் இத்தகைய தேசிய கொந்தளிப்பான நேரத்தில் திருமணம் செய்து கொள்ள அவர் எடுத்த முடிவை கேள்வி எழுப்பினர். போன்ஹோஃபர் "ஆவிக்குரிய அக்கறைகளில்" கவனம் செலுத்த வேண்டும் என்று அவர்கள் வாதிட்டனர். இருப்பினும், *குறிப்பாக* கொந்தளிப்பான நேரத்தில் திருமணம் சரியானது என்று போன்ஹோஃபர் வலியுறுத்தினார். ஆதியாகமம், பிரசங்கி மற்றும் உன்னதப்பாட்டுடன், தேவனுடைய நல்ல சிருஷ்டிப்பு கொண்டாடப்பட வேண்டும் என்று அவர் நம்பினார். போன்ஹோஃபர் தேவன் கொடுத்த மகிழ்ச்சிகளை "ஆவிக்குரியத் தன்மைற்றது" என்று நிராகரிக்க மாட்டார். போன்ஹோஃபர், "தேவனுக்கு ஆம்" என்பது தேவன் படைத்த உலகின் நல்ல விஷயங்களுக்கு நமது "ஆம்" என்று கூறினார்.[269]

இன்று, திருமணம் பல தரப்பிலிருந்து தாக்குதலுக்கு உள்ளாகிறது. சரீரப்பிரகாரமான உலகில், திருமணம் ஒரு காலாவதியான அமைப்பாகக் கருதப்படுகிறது. பரவலான விவாகரத்து, ஓரினச்சேர்க்கை திருமணம் மற்றும் திருமணமாகாத தம்பதிகள் இணைந்து வாழ்வது அனைத்தும் திருமணத்தின் புனிதத்தைக் குறைத்து மதிப்பிடுவற்கு வழிகாட்டுகின்றன. பல கிறிஸ்தவ வீடுகளில், திருமணம் பிழைக்கிறது - ஆனால் அது மகிழ்ச்சியான, காதல் நிறைந்த திருமணம் அல்ல. உன்னதப்பாட்டு காதலின் அன்பை தேவனுடைய பிள்ளைகள் அனுபவிக்க காதலை தேவனுடைய பரிசாகக் காட்டுகிறது. உலகம் காணும்படி கிறிஸ்தவ திருமணங்கள் இந்த மகிழ்ச்சிக்கான முன்மாதிரியாகக் இருக்க வேண்டும். எந்தத்

---

[268] *1 தீமோத்தேயு 4:4*

[269] *Eric Metaxas, Bonhoeffer, (Nashville: Thomas Nelson, 2011), 468.*

*திருமணமும் சவால்கள் அற்றதாக இல்லை என்றாலும், வேதாகமத்தின் கொள்கைகளின்படி வாழ்ந்த திருமணம் இரு தம்பதிகளுக்கும் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியாக இருக்கும் என்பதை கிறிஸ்தவர்கள் காட்ட வேண்டும். ஒரு அன்பான கிறிஸ்தவ திருமணம் நம் உலகத்திற்கு ஒரு சக்திவாய்ந்த சாட்சி. இது உன்னதபாட்டின் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகும்.*

## *பாடம் 8 வீட்டுப்பாடங்கள்*

*இந்தப்பாடத்தைப் பற்றிய உங்கள் புரிதலை பின்வரும் வீட்டுப்பாடங்களின் மூலம் நிரூபிக்கவும்:*

(1) *பின்வரும் வீட்டுப்பாடங்களில்* ***ஒன்றைத்*** *தேர்ந்தெடுக்கவும்:*

*விருப்பம் 1: குழு வீட்டுப்பாடம்*

*உங்கள் குழுவின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு தலைப்பை ஒதுக்குங்கள் (பணம், பேச்சு, திருமணம் போன்றவை). நீங்கள் நீதிமொழிகளைப் படிக்கும்போது, உங்களுக்கு ஒதுக்கப்பட்ட தலைப்பு தொடர்பான அனைத்து வசனங்களையும் பட்டிய லிடுங்கள். முடிவில், "நீதிமொழிகளின் கற்பித்தல்...." என்ற தலைப்பில் குழுவிற்கு ஒரு சிறிய விளக்கக்காட்சியை வழங்கவும்.*

*விருப்பம் 2: தனி வீட்டுப்பாடம்*

*பணம், பேச்சு, திருமணம் போன்ற தலைப்பைத் தேர்வு செய்யவும். நீதிமொழிகளைப் படிக்கும்போது, உங்களுக்கு ஒதுக்கப்பட்ட தலைப்பு தொடர்பான அனைத்து வசனங் களையும் பட்டியலிடுங்கள். "பழமொழிகளின் போதனைகள் பற்றி..." ஒரு பக்க (*450 *வார்த்தைகள்) கட்டுரையைஎழுதவும்.*

(2) *இந்த பாடத்தில் ஒரு தேர்வை எழுதவும். தேர்வில் மனப்பாடம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட வேதவசனங் களும் அடங்கும்.*

## பாடம் 8 தேர்வு

(1) ஜான்காலின் கருத்துப்படி, உண்மையான ஞானம் எந்த இரண்டு காரியங்களைக் கொண்டுள்ளது?

(2) இந்தப் பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள நீதிமொழியின் நான்கு பண்புகளில் இரண்டைப் பட்டியலிடுக.

(3) தொகுப்பு 1 (நீதிமொழிகள் 1–9) இல் மிகவும் பொது வான நீதிமொழி என்ன?

(4) நீதிமொழிகளை விளக்குவதற்கு இந்தப் பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஏழு கேள்விகளில் நான்கைப் பட்டியலிடுக.

(5) நீதிமொழிகளில் உள்ள "பேதை" மற்றும் "மூடன்" ஆகியவற்றுக்கு இடையே உள்ள முதன்மையான வேறுபாடு என்ன?

(6) பிரசங்கியின் முதன்மைக் கருப்பொருள் என்ன?

(7) பிரசங்கி மூலம் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு மையக் கருத்துக்கள் யாவை?

(8) உன்னதப்பாட்டை விளக்குவதற்கான இரண்டு வழிகள் யாவை?

(9) நீதிமொழிகள் 1:7; பிரசங்கி 12:13-14-ஐ நினைவிலிருந்து எழுதுக .

# பாடம் 9

# ஏசாயா: ஐந்தாவது சுவிசேஷ புத்தகம்

## பாடத்தின் நோக்கங்கள்

*இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:*

(1) *ஏசாயாவின்எழுதப்பட்ட காலம் மற்றும் வரலாற்று அமைப்பை அறிந்துகொள்ளுதல்.*

(2) *ஏசாயாவின்முதன்மைக்கருப்பொருள்களையும்நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டுதல்.*

(3) *வேதாகமத்தீர்க்கதரிசனத்தின்தன்மையை அங்கீகரித்தல்.*

(4) *ஏசாயாவிலுள்ளமேசியாவின்வாக்குத்தத்தங்களைப் பாராட்டுதல்.*

(5) *ஏசாயா புத்தகத்திற்கு ஒரு தனி எழுத்தாளருக்கான வாதங்களைப்அறிந்துகொள்ளுதல்.*

(6) *ஏசாயாவின் செய்தியை இன்றைய உலகின்தேவைகளுடன்தொடர்புபடுத்துதல்.*

## இந்த பாடத்திற்கான ஆயத்தம்

*ஏசாயா புத்தகத்தை வாசிக்கவும்.*

*ஏசாயா 9:6-7-ஐ மனப்பாடம் செய்யவும்.*

## தீர்க்கதரிசன புத்தகங்கள் ஓர் அறிமுகம்

►*பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் ஊழியம் எப்படி இருந்தது? அவர்களின் பார்வையாளர்களுக்கு அவர்களின் செய்தி எவ்வளவு தெளிவாக இருந்தது, எதிர்காலத்தின் எது வரை எவ்வளவு மறைக்கப்பட்டது?*

*பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன புத்தகங்களில் முக்கிய தீர்க்கதரிசிகள் (ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் மற்றும் தானியேல்) மற்றும் பன்னிரண்டு சிறிய தீர்க்கதரிசிகள் (ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா மற்றும் மல்கியா). தனிப்பட்ட புத்தகங்களைப் படிப்பதற்கு முன், பழைய ஏற்பாட்டு*

*இஸ்ரவேலில் தீர்க்கதரிசியின் பங்கைப் படிப்பது உதவியாக இருக்கும்.*

*"இலக்கிய நயம் வாய்ந்த" அல்லது "எழுதுகின்ற" தீர்க்கதரிசிகள் சுமார் கி.மு. 800 முதல் ஊழியம் செய்தனர். கி.மு. 450 முதல் எலியா மற்றும் எலிசா போன்ற முந்தைய தீர்க்கதரிசிகள் தங்கள் பிரசங்கத்தின் எழுத்துப் பதிவை எழுதி வைக்கவில்லை. பதினாறு தீர்க்கதரிசிகள் அவர்களின் பெயர்களில் உள்ள புத்தகங்களால் நினைவுகூரப்படுகிறார்கள்.*

*எபிரேய வேதாகமம் ஒரு தீர்க்கதரிசியைக் குறிக்க மூன்று வார்த்தைகளைப் பயன்படுத்தியது. இந்த தலைப்புகள் இஸ்ர வேலில் தீர்க்கதரிசியின் பங்கைக்காட்டுகின்றன. முதல் இரண்டு வார்த்தைகள் (ஹொசே மற்றும் ரோ'யே) "பார்க்க" என்று பொருள்படும் ஒரு மூலத்திலிருந்து வந்தவை. ஒரு தீர்க்கதரிசி என்பவன் ஒரு "ஞானதிருஷ்டிக்காரன்" என்று இந்த வார்த்தை கள் நமக்குச் சொல்கின்றன, அவர் தேவனுடைய காரியங்க ளைக் கண்டவர். மூன்றாவது வார்த்தை (நபி) "அழைக்கப்ப ட்டவர்" என்று பொருள். இது தேவனுடைய செய்தியை மற்ற ஜனங்களுக்கு கொண்டு செல்ல தேவனால் அழைக்கப்பட்ட ஒரு நபரைக் குறிக்கிறது.*

*தீர்க்கதரிசிகளின் பல பண்புகளைத் தீர்க்கதரிசன புத்தகங்கள் காட்டுகின்றன:*

1. **தீர்க்கதரிசிகள் தங்கள் சொந்த செய்தியைப் பேசவி ல்லை; அவர்கள் தேவனுடைய செய்தியைக் கொண்டு வந்தனர்**. *350 தடவைகளுக்கு மேல், தீர்க்கதரிசன புத்த கங்களில் "கர்த்தர் உரைக்கிறார்" என்ற சொற்றொடர் உள்ளது. தீர்க்கதரிசிகள் தேவனுடைய வார்த்தைகளை தேவனுடைய ஜனங்களுக்குக் கொண்டு வர அழைக் கப்பட்டனர்.*
2. **தீர்க்கதரிசிகள் தங்கள் சொந்த தலைமுறைக்கு தேவனு டைய செய்தியைச் சொன்னார்கள்**. *அவர்களின் செய்தி முதலில் அவர்களின் சொந்த ஜனங்களுக்கு வழங்கப் பட்டது. தீர்க்கதரிசிகளைப் படிக்கும்போது, "தீர்க்க தரிசியின் உடனடி பார்வையாளர்கள் அவருடைய செய்தியை எவ்வாறு புரிந்துகொண்டார்கள்?" என்று நாம் கேட்க வேண்டும். தீர்க்கதரிசியின் செய்தியை*

*முதல் பார்வையாளர்கள் எப்படிப் புரிந்துகொண்டார்கள் என்பதை அறிவது, இன்றைய சூழ்நிலையில் அவருடைய செய்தியை நன்றாகப் புரிந்துகொள்ள உதவுகிறது.*

3. **தீர்க்கதரிசிகள் எதிர்கால சந்ததியினருக்கு தேவனு டைய செய்தியை சொன்னார்கள்**. *தீர்க்கதரிசிகள் "ஞானதிருஷ்டிக்காரர்கள்". ஏசாயாவின் முதல் வார்த்தைகள் பல தீர்க்கதரிசிகளைப் போலவே உள்ளன: "ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா கண்ட தரிசனம்."[270] தரிசனங்கள் மற்றும் விசேஷ வெளிப்பாடுகள் மூலம், தேவன் தம் தீர்க்கதரிசிகளுக்கு எதிர்கால சத்தியங்களை வெளிப்படுத்தினார். தீர்க்கதரிசிகள் எதிர்கால நியாயத்தீர்ப்பு மற்றும் எதிர்கால மறுசீரமைப்பு இரண்டையும் பார்த்தார்கள்.*

*நாம் தீர்க்கதரிசன புத்தகங்களைப் படிக்கும்போது, சில கருப்பொருள்கள் அடிக்கடி திரும்பத் திரும்ப வருவதைக் காணலாம். இந்த புத்தகங்கள் முழுவதும் மூன்று கருப்பொருள்கள் உள்ளன:*

### உடன்படிக்கைக்கு விசுவாசமாக இருத்தல்

*தேவனுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனங்களாக இஸ்ரவேல் அழைக்கப்பட்டதை தீர்க்கதரிசிகள் தங்கள் பார்வையாளர்களுக்கு மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தினார்கள். சீனாயில், இஸ்ரவேல் தேவனுடன் உடன்படிக்கை செய்துகொண்டது. இந்த உடன்படிக்கை சடங்குகள் மற்றும் பலிகளைவிட அதிக முக்கியத்துவம் பெற்றது; அதற்கு தேவனுக்கு முன்பாக தனிப்பட்ட பரிசுத்தமும் மற்றவர்களுடைய விஷயத்தில் நீதியாய் செயல்படுவதும் தேவைப்பட்டது. மீகா மற்றும் ஆமோஸ் போன்ற தீர்க்கதரிசிகள் உடன்படிக்கைக்குக் கீழ்படிந்து வாழத்தவறிய இஸ்ரவேலரை எதிர்கொண்டனர்.*

[270] *ஏசாயா 1:1*

### கர்த்தருடைய நாள்

*தீர்க்கதரிசிகள் இருபது தடவைகளுக்கு மேல் "கர்த்தருடைய நாளை" குறிப்பிட்டுள்ளனர். கர்த்தருடைய நாள் தீர்க்கதரிசி களால் மூன்று வழிகளில்பயன்படுத்தப்படுகிறது:*

- *கர்த்தருடைய நாள் அவிசுவாசிகளுக்கு நியாயத்தீர்ப்பு காலமாக இருக்கும்.*
- *கர்த்தருடைய நாள் தேவனுடைய ஜனங்களை சுத்திகரிக் கும் காலமாக இருக்கும்.*
- *கர்த்தருடைய நாள் விசுவாசமுள்ளவர்களுக்கு இரட்சிப் பின்காலமாக இருக்கும்.*

### மேசியாவின் வருகை

*தீர்க்கதரிசிகளின் ஒரு முக்கியமான செய்தி மேசியாவைக் குறித்த வாக்குத்தத்தம். மேசியாவின் வருகையை சுட்டிக் காட்டும் 300 பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை வேதாகம அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர்.*

## ஏசாயா புத்தகத்தின் பின்னணி

| ஏசாயா புத்தகம் ஓர் சுருக்கப்பார்வை | |
|---|---|
| **எழுதியவர்** | ஏசாயா |
| **செய்திபெற்றவர்** | யூதா |
| **எழுதப்பட்ட காலம்** | கி.மு. 740-680 |
| **கருப்பொருள்** | ஐந்தாவது சுவிசேஷம் |
| **நோக்கம்** | வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைக் குறித்து யூதாவிற்கு எச்சரிக்கை கொடுக்க |
| | வரவிருக்கும் இரட்சிப்பைக் குறித்து யூதாவிற்கு வாக்குத்தத்தம் அளிக்க |
| **ஏசாயா புத்தகத்தில் சுவிசேஷம்** | மேசியா ஒரு கன்னிகை மூலமாய் பிறப்பார். |
| | அவர் புறஜாதிகளுக்கு ஊழியம் செய்வார். |
| | பாவிகளை மீட்பதற்காக அவர் மரிப்பார். |

| | |
|---|---|
| | *மேசியா மூலம், தேவனுடைய ராஜ்யம் எல்லா தேசத்து ஜனங்களுக்கும் திறக்கப்படும்.* |

## வரலாற்றுக் கட்டமைப்பு

*ஆமோஸின் குமாரனாகிய ஏசாயா, கி.மு.8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யூதாவின் அரசவையில் பணியாற்றினார். ஏசாயாவின் பெயரின் அர்த்தம், "கர்த்தர் இரட்சித்திருக்கிறார்", இது ஏசாயாவின் ஊழியத்தின் மையக் கருப்பொருளான தேவனுடைய ஜனங்களுக்கு இரட்சிப்பைக் குறிக்கிறது.*

*தீர்க்கதரிசன ஊழியத்திற்கான ஏசாயாவின் அழைப்பு வந்தது "உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில்."[271] கி.மு.681 இல் அசீரியாராஜாவாகிய சனகெரிப்பின் மரணத்தை அவர் பதிவு செய்தார்.[272] இது ஏசாயா புத்தகத்தின் காலம் தோராயமாக கி.மு. 740-680 என்பதாகக் குறிக்கிறது.*

*யோதாம், ஆகாஸ், எசேக்கியா, மனாசே ஆகியோரின் ஆட்சியின்போது ஏசாயா ஊழியம் செய்தார். மனாசே ஏசாயாவைப் பாதியாக அறுத்து கொன்றதாக யூத பாரம்பரியம் கூறுகிறது.*

*ஏசாயாவின் ஊழியத்தின் ஆரம்ப ஆண்டுகளில், திக்லத்-பிலேசர் III அசீரியப் பேரரசை விரிவுபடுத்தினான். ஆகாஸ் அசீரியாவுக்கு எதிரான கூட்டணியில் சேர மறுத்ததால், வடக்கு ராஜ்யத்தின் ராஜா பெக்கா யூதாவைத் தாக்கினான். ஏசாயாவின் எதிர்ப்பை மீறி, ஆகாஸ் அசீரியாவிடம் முறையிட்டான். ஏசாயாவின் செய்தி உடனடி எதிர்காலத்திற்கான அடையாளத்தையும் மேசியாவின் பிறப்பைப் பற்றிய தீர்க்கதரிசனத்தையும் கொடுத்தது.[273]*

---

[271] *ஏசாயா 6:1. கி.மு. 740 இல் உசியா ராஜா மரித்தான்.*

[272] *ஏசாயா 37:38*

[273] *ஏசாயா 7:10-17, ஒரு தீர்க்கதரிசியின் செய்தி அவருடைய சமகாலத்தவர்களிடமும் எதிர்காலத்திடமும் எவ்வாறு பேசப்பட்டது என்பதைக் காட்டுகிறது. கிமு 735 இல், ஏசாயா ஆகாஸிடம், அந்த நாளில் பிறந்த ஒரு மகன் தேர்ந்தெடுக்கும் வயதை அடைவதற்கு முன்பு, சிரியா மற்றும் எப்ராயீம் (வடக்கு ராஜ்யம்) அழிக்கப்படும் என்று கூறினார். கிமு 732 இல் சிரியாவின் வீழ்ச்சி மற்றும் கிமு 722 இல் வடக்கு ராஜ்யம் வீழ்ச்சியுடன்*

*ஆகாஸின் மரணத்திற்குப் பிறகு, அவரது மகன் எசேக்கியா அசீரியாவுக்கு எதிராக கிளர்ச்சி செய்து எகிப்துடன் கூட்டணியில் நுழைந்தான். பதிலுக்கு, அசீரிய ராஜா சனகெரிப் கி.மு. 701இல் யூதாவைத் தாக்கினான். எசேக்கியா முதலில் தோற்கடிக்கப்பட்டார் மற்றும் அசீரியாவுக்கு கப்பம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.[274] பின்னர், எசேக்கியா சனகெரிப்புக்கு எதிராக கலகம் செய்தான். எசேக்கியாவின் ஜெபத்திற்கு பதிலளிக்கும் விதமாக, தேவனுடைய தூதன் அசீரிய இராணுவத்தைத் தாக்கி, 1,80,000 பேரைக் கொன்று, அசீரியர்களை யூதாவிலிருந்து வெளியேற்றினான். எசேக்கியா வின் எஞ்சிய ஆட்சிக்காலம் அமைதியான காலமாய் இருந்தது.[275]*

**நோக்கம்**

*வடக்கு ராஜ்யத்தின் வீழ்ச்சியுடன், யூதா ஒரு சோதனையை எதிர்கொண்டது. அது இஸ்ரவேலை விசுவாசதுரோகத்தில் பின்தொடர்வதா அல்லது தேவனுக்கு உண்மையாக இருப்பதா? யூதாவின் பாவத்திற்கான நியாயத்தீர்ப்பைக் குறித்து ஏசாயா எச்சரித்தார். அவர் யூதா உடன்படிக்கைக்குத் திரும்பினால் இரட்சிப்பு உண்டு என்னும் வாக்குறுதியுடன் ஊக்கப்படுத் தினார்.*

## *ஏசாயா ஓர் கண்ணோட்டம்*

*ஏசாயா புத்தகம் சில சமயங்களில் "மிகச்சிறிய அளவிலுள்ள வேதாகமம்" என்று பார்க்கப்படுகிறது. முதல் முப்பத்தொன்பது அதிகாரங்கள் (பழைய ஏற்பாட்டின் முப்பத்தொன்பதுபுத் தகங்களுடன் தொடர்புடையது) யூதாவையும் சுற்றியுள்ள நாடுகளையும் நியாயந்தீர்ப்பதில் தேவனுடைய நீதியைக் காட்டுகின்றன. தேவன் ஒரு பரிசுத்த தேவன் என்பதால், அவர் பாவத்தைக் காண முடியாது. கடைசி இருபத்தேழு அதிகார ங்கள் (புதிய ஏற்பாட்டின் இருபத்தேழு புத்தகங்களுடன்*

---

ஒரு பகுதி நிறைவேற்றப்பட்டது. கன்னிகைக்குப் பிறந்த "இம்மானு வேலின்" இறுதி நிறைவேற்றம் மேசியாவாகிய இயேசுவின் பிறப்பில் *நிறைவேறியது (மத்தேயு 1:20-23).*

*[274] 2 ராஜாக்கள் 18:14-16*

*[275] ஏசாயா 37*

*தொடர்புடையது) வரவிருக்கும் மேசியாவின் வாக்குறுதியுடன் யூதாவை ஆறுதல்படுத்துகிறது.*

*அறுபது ஆண்டுகள், நான்கு ராஜாக்கள், இரண்டு பெரிய பேரரசுகள் (அசிரியா மற்றும் பாபிலோன்) ஆகியவற்றை உள்ளடக்கிய, மேலும் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்வுகளை முன்னறிவிக்கும் ஏசாயா எனும் புத்தகத்தை ஒரு சில பத்திகளில் சுருக்கமாகக் கூறுவது கடினம். நீங்கள் ஏசாயாவைப் படிக்கும்போது, இந்தப் புத்தகம் உங்களுக்கு வழிகாட்டும். கருப்பொருள்களின் சுருக்கமானது பின்பற்ற வேண்டிய முக்கியமான யோசனைகளைப் பரிந்து ரைக்கும்.*

**ஏசாயா புத்தகத்தின் பொருட்சுருக்கம்**

(1) *நியாயத்தீர்ப்பின் தீர்க்கதரிசனங்கள் (ஏசாயா 1–35)*

- *நியாயத்தீர்ப்புக்கு ஒரு முக்கியத்துவம்*
- *ஏசாயாவின் காலத்தில் உண்டாயிருந்த கலகக்கார ஜனங்களிடம் முதன்மையாக உரைக்கப்பட்டது*
- *அசீரியா இஸ்ரேலின் வடக்கு ராஜ்யத்தைதோற் கடிக்கும் என்று எச்சரிக்கிறது*
- *இஸ்ரவேல், அசீரியா, பாபிலோன், பெலிஸ்தியா, மோவாப், தமஸ்கு, குஷ், எகிப்து, ஏதோம், யூதா மற்றும் தீரு உட்பட பல நாடுகளின் மீதான நியாயத்தீர்ப்பின் செய்திகள்*
- *விசுவாசமுள்ளவர்களுக்கு இரட்சிப்பு (ஏசாயா 35)*

(2) *வரலாற்று இடைவேளை (ஏசாயா 36-39)*

- *சனகெரிப்பின் அச்சுறுத்தலும் தேவனுடைய விடுதலையும் (ஏசாயா 36-37)*
  *ஏசாயா 1-35இல் காணப்படும் அசீரியாவின் முக்கி யத்துவம் சனகெரிப்பின் கதையுடன் முடிக்கிறது. இது கி.மு. 701இல் நடைபெறுகிறது. மேலும் தேவன் மீதுள்ள நம்பிக்கை தேவனுடைய ஆசீர்வாத த்தைக் கொண்டுவருகிறது என்பதைக் காட்டுகிறது.*

- *எசேக்கியாவின் வியாதி மற்றும் அற்புத குண மடைதல் (ஏசாயா 38)*
- *பாபிலோனிலிருந்து மெரோதாக்-பலாதானின் தூது வர்களுக்கு எசேக்கியாவின் முட்டாள்தனமான உபசாரம் (ஏசாயா 39)*

  *கி.மு.711 இல் மெரோதாக்பலாதானின் வருகையின் கதை. ஏசாயா40-66 இன் பாபிலோனிய முக்கியத் துவம் தொடங்குகிறது. யூதாவின் பாவங்கள் பாபி லோனிய சிறைப்படுதலுக்கு வழிவகுக்கும்.*[276]

(3) *ஆறுதல் பற்றிய மேசியாவின் தீர்க்கதரிசனங்கள் (ஏசாயா 40-66)*

- *மீட்டெடுத்தல் மற்றும் வாக்குறுதிக்கான முக்கியத் துவம்*
- *அனைத்து தலைமுறையினரின் விசுவாசமுள்ள ஜனங்களுக்கு உரைக்கப்பட்டது*
- *யூதாவுக்கு ஆறுதல் மற்றும் விடுதலை (ஏசாயா 40-48)*
- *வரவிருக்கும் ஊழியக்காரர் மீட்பை அளிப்பார் (ஏசாயா 49–55)*
- *உடன்படிக்கைக்கு விசுவாசமுள்ளள்ள அனைவ ரையும் தேவன் மீட்டெடுப்பார் (ஏசாயா 56-66)*

### ஏசாயா புத்தகத்தின் முக்கிய கருப்பொருள்கள்

#### *மீதியானவர்கள்*

*தேசத்தின் விசுவாசத்துரோகத்தையும் மீறி தேவனுக்கு உண் மையாக இருக்கும் எஞ்சியிருப்பவர்களைக் தேவன் காப்பாற் றுவார்.*[277] *ஏசாயா தனது குமாரர்களில் ஒருவனுக்கு "சேயார்யா*

---

*[276] ஏசாயா 38-39 இன் நிகழ்வுகள் ஏசாயா 36-37க்கு முன்பாக நடந்ததாக ஏசாயா 38:6 காட்டுகிறது. புத்தகத்தில் உள்ள வரிசை அநேகமாக ஏசாயாவின் தலைப்புச் சார்ந்த கட்டமைப்பை வலியுறுத்துவதாக இருக்கலாம். ஏசாயா 36–37 அசீரியா பற்றிய செய்தியை முடிக்கிறது; ஏசாயா 38-39 பாபிலோனியாவை மையப்படுத்திய செய்தியைத் தொடங்குகிறது. தீர்க்கதரிசன புத்தகங்களில் காலவரிசையற்ற அமைப்பு பொதுவானது.*
*[277] ஏசாயா 1:9*

சூபு" என்று பெயரிட்டான், நாடுகடத்தப்பட்ட பிறகு உண்மை யுள்ள மீதியானவர்களை தேவன் எருசலேமுக்கு மீண்டும் கொண்டு வருவார் என்கிற தீர்க்கதரிசன செய்தியாக அது இருந்தது.[278]

## இஸ்ரவேலின் பரிசுத்தராகிய தேவன்

ஏசாயா தன்னுடைய தீர்க்கதரிசன ஊழியத்தின் ஆரம்பத்தில், "ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பதைக்" கண்டார்." சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது" என்று அழைக்கும் சேராபீன்களால் தேவன் சூழப்பட்டார்.[279] இந்தத் தரிசனம் ஏசாயாவின் வாழ்க்கையையும் ஊழியத்தையும் மாற்றியது. இருபத்தி ஒன்பது முறை, ஏசாயா "இஸ்ரவேலின் பரிசுத்தர்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார், இது தேவனுடைய பரிசுத்தத்தைக் காட்டுகிறது.[280] ஏசாயாவின் செய்தியின் ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால், இஸ்ரவேலர்கள் அவர்கள் வணங்குவதாகக் கூறும் தேவனுடைய பரிசுத்தத்தைப் புறக்கணித்ததால் நியாயத்தீர்ப்பை எதிர்கொள்கிறார்கள்.

இஸ்ரவேலின் பரிசுத்தரின் இறையாண்மை, இஸ்ரவேலின் எதிரிகள் மீதான அவருடைய நியாயத்தீர்ப்பில் காணப்படுகிறது. ஏசாயாவின் குமாரர்களில் ஒருவனுக்கு "மகேர்-சாலால்-அஷ்-பாஸ்" என்று பெயரிடும்படி கடவுள் கட்டளையிட்டார், இது யூதாவின் எதிரிகளுக்கு எதிரான விரைவான நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது.[281] யூதாவை ஆச்சரியப்படுத்தும் விதமாக, யூதாவின் விசுவாசத்துரோகத்தின் காரணமாக கடவுளின் இறையாண்மை அவருடைய நியாயத்தீர்ப்பிலும் காணப்படுகிறது.

இறுதியில், இஸ்ரவேலின் பரிசுத்தர் தம் ஜனங்களை மீட்டெடுப்பார். தேவனுடைய ஜனங்கள் இனி "கைவிடப்

---

[278] ஏசாயா 7:3 and 10:20-21. சேயார்யாசூபு என்றால் "மீதமுள்ளவர்கள் திரும்பி வருவார்கள்."

[279] ஏசாயா 6:1-8

[280] ஏசாயா 1:4; 5:19, 24; 10:17, 20; 12:6; 17:7; 29:19, 23; 30:11-12, 15; 31:1; 37:23; 40:25; 41:14, 16, 20; 43:3, 14-15; 45:11; 47:4; 48:17; 49:7; 54:5; 55:5; 60:9

[281] ஏசாயா 8:1-3

பட்டவர்கள்" என்று அழைக்கப்படமாட்டார்கள், ஆனால் "என் மகிழ்ச்சி அவர்களில் உள்ளது" என்று அழைக்கப்படும் ஒரு நாளை ஏசாயா முன்னறிவித்தார். தேசம் இனி "பாழடைந்தது" என்று அழைக்கப்படாமல் "விவாகம் பண்ணப்பட்டது" என்று அழைக்கப்படும் ஒரு நாளை அவர் முன்னறிவித்தார்.[282] விசுவாசத்துரோக தேசத்திற்குப் பதிலாக, யூதா ‘‘பரிசுத்த ஜனங்கள்’’ என்று அழைக்கப்படும்; நாடுகடத்தப்படுவதற்குப் பதிலாக, அவர்கள் "கர்த்தரால் மீட்கப்பட்டவர்களாக" இருப்பார்கள்; நிராகரிக்கப்படுவதற்குப் பதிலாக, அவர்கள் "தேடப்படுவார்கள்"; கைவிடப்பட்டதற்குப் பதிலாக, எருசலேம் "கைவிடப்படாத நகரம்" என்று அழைக்கப்படும்.[283]

### *வருகிறவராகிய மேசியா*

வரவிருக்கும் மேசியாவை வலியுறுத்துவதால், ஏசாயா சில சமயங்களில் "ஐந்தாவது சுவிசேஷம்" என்று அழைக்கப்படுகிறது. யூதாவையும், விசுவாசத்தோடு அவரிடம் திரும்புகிற அனைவரையும் மேசியா மீட்பார் என்று ஏசாயா தீர்க்கதரிசனம் உரைக்கிறார். நாசரேத்தில் தனது முதல் பிரசங்கத்தில், இயேசு ஏசாயாவிலிருந்து வாசித்து, தீர்க்கதரிசி அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வந்ததாக அறிவித்தார்.[284]

ஏசாயாவின் கடைசிப் பகுதியில், தேவனின் அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவின் வருகையை தீர்க்கதரிசி முன்னறிவிக்கிறார். அவர் கன்னிகையினிடத்தில் பிறப்பார்[285]; ஏழைகளுக்கு சேவை செய்வார்[286]; மனிதகுலத்தை மீட்க அவர் துன்பப்படுவார்[287]; அவர் ஒரு நாள் மகிமையுடன் ஆட்சி செய்வார்.[288] மேசியாவின் காரணமாக, அவர்களின் தற்போதைய சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் -தேவனுடைய ஜனங்களின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கிறது.

---

[282] ஏசாயா 62:4
[283] ஏசாயா 62:12
[284] லூக்கா 4:16-30; ஏசாயா 61:1-2 மற்றும் 58:6
[285] ஏசாயா 7:14
[286] ஏசாயா 61:1-3
[287] ஏசாயா 52:13 – 53:12
[288] ஏசாயா 60–66

## ஏசாயா புத்தகத்தின் எழுத்தாளர் குறித்த ஓர் நெருக்கமான பார்வை

*சில வேதாகம விமர்சகர்கள் இந்த புத்தகம் ஏசாயாவால் மட்டும் எழுதப்படவில்லை என்று வாதிடுகின்றனர். ஏசாயா 1-39 ஏசாயாவிலிருந்தே வந்ததாக அவர்கள் கூறுகிறார்கள், ஆனால் அதிகாரங்கள் 40-66 ஏசாயாவுக்குப் பிறகு 100 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்த வேறொரு இரண்டாவது எழுத்தாளரால் எழுதப்பட்டது என்கிறார்கள். அவர்கள் இந்த எழுத்தாளர்களை "எருசலேமின் ஏசாயா" மற்றும் "இரண்டாம் ஏசாயா" என்று அழைக்கிறார்கள். இந்த விமர்சகர்கள் ஏசாயாவை எழுத்தாளராக புதிய ஏற்பாட்டின் சாட்சியத்தை சந்தேகிக்கின்றனர். ஏசாயாவின் முழு புத்தகத்தையும் தேவன் தமது தீர்க்கதரிசியிடம் பேசினார் என்று சுவிசேஷ திருச்சபையார்கள் நம்புகிறார்கள். இந்த விளக்கப்படம் விமர்சன அறிஞர்களின் வாதத்தையும் ஒரு சுவிசேஷபதிலையும் காட்டுகிறது.*

| **பிரச்சனை** | **தாராளவாத விமர்சகர்களின் நம்பிக்கை** | **சுவிசேஷ திருச்சபையாரின் நம்பிக்கை** |
|---|---|---|
| *ஏசாயா கி.மு.740-680 வரை ஊழியம் செய்தார். 538இல்தொடங்கிய நாடுகடத்தலில் இருந்து திரும்புவதை அவர் குறிப்பிடுகிறார். அவர் 44:28 மற்றும் 45:1இல் கோரேசின்பெயரைக்குறிப்பிடுகிறார்.* | *ஏசாயா மரித்த பிறகு 100 ஆண்டுகள் கழித்துகோரேசு வாழ்ந்ததால், எதிர்கால ராஜாவை தீர்க்கதரிசியால் கணித்திருக்க முடியாது.* | *தேவன் ஏசாயாவுக்கு பெர்சியாவின் எதிர்கால ராஜாவாகிய கோரேசின் பெயர் உட்பட. எதிர்காலத்தை வெளிப்படுத்தினார்.* |

| | | |
|---|---|---|
| *ஏசாயா 1-39 முதன்மையாக அசீரியா மற்றும் நியாயத்தீர்ப்பு பற்றியது. ஏசாயா 40-66 முதன்மையாக பாபிலோன் மற்றும் இரட்சிப்பைப் பற்றியது.* | *ஒரு எழுத்தாளர் தன் எழுத்தில் இவ்வளவு அதிரடியான மாறுபாட்டைக் கொண்டிருக்கமாட்டார். ஏசாயா 40–66 வேறு எழுத்தாளரால் எழுதப்பட்டிருக்க வேண்டும்.* | *ஏசாயா தனது உடனடி வாசகர்களிடமும் (பாவத்திற்கான நியாயத்தீர்ப்பு) மற்றும் எதிர்கால வாசகர்களிடமும் (உண்மையுள்ளவர்களுக்கான மறுசீரமைப்பு) பேசினார். இதுவே பெரும் மாறுபாட்டிற்குக் காரணம்.* |
| *ஏசாயா 40-66 இல்பயன்படுத்தப்பட்ட சில மொழிகள் (குறிப்பாக "ஆறுதல்" என்பதன் மொழி) ஏசாயா 1-39 இல்பயன்படுத்தப்படவில்லை.* | *மொழி வேறுபாடு வேறு எழுத்தாளரைக் குறிக்கிறது.* | *1–39 மற்றும் 40–66 இன் வெவ்வேறு தலைப்புகளுக்கு வெவ்வேறு மொழி தேவை. இருப்பினும், புத்தகத்தின் இரண்டு பகுதிகளிலும் "இஸ்ரவேலின் பரிசுத்தர்" போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.* |

## ***முழு புத்தகத்தின் எழுத்தாளராக ஏசாயாவை ஏற்றுக் கொள்வதற்கான காரணங்கள்:***

- *ஏசாயா 1:1ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்று எழுத்தாளர் குறிப்பிடப்படுகிறார்.*
- *ஏசாயாவின் ஆரம்பகால எபிரேயபிரதிகள் அனைத்தும் புத்தகத்தை ஒரே புத்தகமாகக் காட்டுகின்றன. ஏசாயா 1-39 மற்றும் 40-66 இரண்டு தனித்தனி புத்தகங்களாகக் கருதப்பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை.*

- புதிய ஏற்பாட்டில் ஏசாயாவைப் பற்றிய இருபது குறிப்புகள் உள்ளன. இந்த குறிப்புகள் ஏசாயாவின் இரு பிரிவுகளிலிருந்தும் வந்து முழு புத்தகத்தின் எழுத்தாளராக ஏசாயாவைக் கருதுகிறது.[289]

## ஏசாயாவின் புத்தகம் இன்று பேசுகிறது

ஏசாயாவின் செய்தி அவருடைய நாளுக்கும் நம்முடைய நாளுக்கும் பொருத்தமானதாக இருந்தது. இஸ்ரவேலைப் பின்பற்றி விசுவாசத் துரோகம் அல்லது தேவனுக்கு உண்மையாக நிலைத்திருப்பதை தெரிந்துகொள்ளும் நிலையில் இருந்த யூதா தேசத்திடம், கடவுளுக்கு துரோகம் செய்ப வர்களுக்கு வரும் நியாயத்தீர்ப்பைப் பற்றி ஏசாயா பேசினார். இஸ்ரவேலின் பரிசுத்தர் பாவத்தைப் புறக்கணிக்க முடியாது என்று யூதாவையும் மற்ற நாடுகளையும் எச்சரித்தார். இன்றைய அனைத்தையும் அனுமதிக்கும் கலாச்சாரத்தில், தேவன் பாவத்தை நியாயந்தீர்க்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

சீக்கிரத்தில் பாபிலோனுக்கு நாடுகடத்தப்படவிருந்த ஒரு தேசத்திடம், தேவனுக்கு உண்மையாக நிலைத்திருக்கும் மீதியானோர் மீது தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பற்றி ஏசாயா பேசினார். கிறிஸ்தவர்களுக்கு இன்றைய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும்போது, உண்மையாக இருப்பவர்களை தேவன் மதிக்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மனந்திரும்புபவர்களுக்கு செவிசாய்த்து மீட்டெடுப்பதாக அவர் உறுதியளிக்கிறார். ஏசாயா 21ஆம் நூற்றாண்டின் தேவைகளைப் பற்றி வலிமையாகப் பேசுகிறார்.

## முடிவுரை: புதிய ஏற்பாட்டில் ஏசாயா

ஏசாயா புதிய ஏற்பாட்டில் அடிக்கடி மேற்கோள் காட்டப்பட்ட பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களில் ஒன்றாகும். புதிய

[289] உதாரணங்களில் மத்தேயு 3:3, அப்போஸ்தலர் 8:28, ரோமர் 9:27-29 ஆகியவை அடங்கும். யோவான் 12:38-41 குறிப்பாக முக்கியமானது, ஏனென்றால் யோவான் ஏசாயா 6:10 மற்றும் 53:1 ஆகியவற்றிலிருந்து தொடர்ச்சியான வசனங்களில் மேற்கோள் காட்டுகிறார். இரண்டு குறிப்புகளும் ஏசாயாவிலிருந்து வந்ததாக யோவான் கருதுகிறார்..

*ஏற்பாட்டில் பயன்படுத்தப்படும் ஏசாயாவின் கருப்பொருள்கள்:*

- *யோவான்ஸ்நானகன் வனாந்தரத்தில் கூப்பிடும் சத்தமாக (ஏசாயா 40:3; மத்தேயு 3:3)*
- *இயேசுவின் கன்னிப் பிறப்பு (ஏசாயா 7:14; மத்தேயு 1:23)*
- *இயேசு உவமைகளைப் பயன்படுத்துதல் (ஏசாயா 6:9-10; மத்தேயு 13:13-15)*
- *புறஜாதிகளுக்கு இயேசுவின் ஊழியம் (ஏசாயா 9:1-2 மற்றும் 61:1-3; மத்தேயு 4:13-16 மற்றும் லூக்கா 4:14-21)*
- *ஜாதிகளின் மாற்றம் (ஏசாயா 11:10 மற்றும் 65:1; ரோமர் 15:12 மற்றும் 10:20)*

*இயேசுவின் ஊழியம் முழுவதும், சுவிசேஷ எழுத்தாளர்கள் ஏசாயாவின் தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாக இயேசுவைக் கண்டார்கள். பாபிலோனிலிருந்து திரும்பியதில் தம்முடைய ஜனங்களை மீட்பதற்கான தேவனுடைய வாக்குறுதிகள் ஓரளவு நிறைவேற்றப்பட்டன; நாசரேத்து இயேசுவின் மீட்பின் பணியில் வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டன. தேவனுடைய குடும்பம் தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றி ஆராதனையில் மீண்டும் ஒன்றிணைக்கப்படும்போது முடிவான மற்றும் இறுதி நிறைவு காணப்படும்.*

## *பாடம் 9 வீட்டுப் பாடங்கள்*

*இந்தப்பாடத்தைப் பற்றிய உங்கள் புரிதலை பின்வரும் வீட்டுப்பாடங்களின் மூலம் நிரூபிக்கவும்:*

(1) *பின்வரும் வீட்டுப்பாடங்களில்* ***ஒன்றைத்*** *தேர்ந்தெடுக்கவும்:*

*விருப்பம் 1: குழு வீட்டுப்பாடம்*

*ஏசாயா 53இல் இயேசுவின் விளக்கத்தைப் பற்றி விவாதிக்கவும். இந்த தீர்க்கதரிசனங்களை இயேசு எவ்வாறு நிறைவேற்றினார் என்பதைக் காட்டுங்கள். உங்கள் குழுவின் கலந்துரையாடலின் சுருக்கத்தைஎழுதுங்கள்.*

விருப்பம் 2: தனிப்பட்ட வீட்டுப்பாடம்.

ஏசாயா புத்தகத்தை நீங்கள் படிக்கும்போது, வரவிருக்கும் மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களின் பட்டியலை உருவாக்கவும். ஏசாயாவில் மேசியாவின் தீர்க்கதரிசனத்தைக் கொண்ட வேதவசனங்களைப் பட்டியலிடவும், பின்னர் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தைக் காட்டும் புதிய ஏற்பாட்டு வேதவசனங்களைப் பட்டியலிடவும்.

(2) இந்த பாடத்தில் ஒரு தேர்வு எழுதவும். தேர்வில் மனப்பாடம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட வேதவசனங்களும் அடங்கும்.

## பாடம் 9 தேர்வு

(1) எந்த சொற்றொடர் தீர்க்கதரிசிகள் தேவனுடைய வார்த்தையை மட்டுமே கொண்டுவந்தார்கள், மற்றும் தங்கள் சொந்த செய்தியை அல்ல என்பதைக் காண்பிக்கிறது?

(2) தீர்க்கதரிசிகளை விவரிக்க ________ என்ற பெயரைப் பயன்படுத்துவது தேவன் தனது தீர்க்கதரிசிகளுக்கு எதிர்கால சத்தியங்களை வெளிப்படுத்தினார் என்பதைக் காட்டுகிறது.

(3) தீர்க்கதரிசன புத்தகங்கள் முழுவதும் தோன்றும் மூன்று கருப்பொருள்களைப் பட்டியலிடுக.

(4) கர்த்தருடைய நாள் மூன்று அம்சங்களை உள்ளடக்கியது. அவை என்ன?

(5) யூதாவின் எந்த நான்கு ராஜாக்களின் ஆட்சியின்போது ஏசாயா ஊழியம் செய்தார்?

(6) ஏசாயா புத்தகத்தின் இரண்டு நோக்கங்களைப் பட்டியலிடுக.

(7) ஏசாயாவில் மீதியாயிருப்பவர்கள் யார்?

(8) தேவனுடைய பரிசுத்தத்தையும் தேவனுடைய இறையாண்மையையும் காட்ட ஏசாயாவில் தேவனுக்கு என்ன பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது?

(9) முழு ஏசாயா புத்தகத்தின் எழுத்தாளராக ஏசாயாவை ஏற்றுக் கொள்வதற்கு மூன்று காரணங்களைப் பட்டியலிடுக.

(10) *புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட இரண்டு சித்திரங் களைப் பட்டியலிடுக.*

(11) *ஏசாயா 9:6-7-ஐ நினைவிலிருந்து எழுதுக.*

# பாடம் 10

# எரேமியா மற்றும் புலம்பல்: அழுகையின் தீர்க்கதரிசி

## பாடத்தின் நோக்கங்கள்

*இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:*

(1) *எரேமியாவின் தோராயமான காலம் மற்றும் வரலாற்று அமைப்பை அறிந்துகொள்ளுதல்.*
(2) *எரேமியாவின் முதன்மைக் கருப்பொருள்களையும் நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டுதல்.*
(3) *தீர்க்கதரிசிகளின் எழுத்துக்களில் "தீர்க்கதரிசன வழக்கை" அறிந்துகொள்ளுதல்.*
(4) *எருசலேமின் வீழ்ச்சியின் சோகத்தை உணருதல்.*
(5) *எரேமியாவின் ஆறுதல் செய்தியைப் பாராட்டுதல்.*
(6) *எரேமியாவின் செய்தியை இன்றைய உலகின் தேவைகளுடன் தொடர்புபடுத்துதல்.*

## இந்த பாடத்திற்கான ஆயத்தம்

*எரேமியா மற்றும் புலம்பல் புத்தகங்களை வாசிக்கவும்.*

*புலம்பல் 3:21-24 -ஐ மனப்பாடம் செய்யவும்.*

## முன்னுரை

| எரேமியா மற்றும் புலம்பல் புத்தகத்தின் ஓர் சுருக்கப்பார்வை | |
|---|---|
| **எழுதியவர்** | *எரேமியா* |
| **செய்திபெற்றவர்** | *யூதா* |
| **எழுதப்பட்ட காலம்** | *கி.மு. 627-580* |
| **கருப்பொருள்** | *எருசலேமின் வீழ்ச்சி* |
| **நோக்கம்** | *வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைக் குறித்து யூதாவிற்கு எச்சரிப்பை வழங்க* |

| | |
|---|---|
| | *எருசலேமின் அழிவைப் பதிவு செய்ய* |
| **எரேமியாவின் புத்தகத்தில் சுவிசேஷம்** | *யூதாவுக்கு இரட்சிப்பைக் கொண்டுவரும் நீதியுள்ள கிளையாக இயேசு வந்தார் (எரேமியா 23:1-8).* |
| | *எரேமியாவைப் போலவே, இயேசுவும் அவருடைய ஜனங்களால் நிராகரிக்கப்பட்டார்.* |
| | *எரேமியாவைப் போலவே, பவுலும் குயவன் மற்றும் களிமண்ணின் செய்தியில்தேவனுடைய கிருபையைக் கண்டார்.* |

*வேதாகமத்தின் இரண்டாவது மிக நீளமான புத்தகமான எரேமியா, எருசலேமின் வீழ்ச்சிக்கு முந்தைய கடைசி நாட்களின் படத்தைக் கொடுக்கிறது. தேவனுடைய ஜனங்களின் பாவத்திற்காகவும் தேவனுடைய நகரத்தின் அழிவுக்காகவும் புலம்பியதால்எரேமியா "அழுகையின் தீர்க்கதரிசி" என்று அழைக்கப்படுகிறார்.*

*எரேமியாவின் புத்தகத்தில், யூதாவின் ஜனங்களுக்கு தேவனுடைய செய்தியைக் கொண்டுவர தீர்க்கதரிசி போராடுவதைக் காண்கிறோம். புலம்பல் புத்தகத்தில், பாபிலோனால் அழிக்கப்பட்ட தனது அன்பான நகரத்தைப்பார்க்கும்போது தீர்க்கதரிசியின் துக்கத்தைப் பார்க்கிறோம்.*

## ***எரேமியா புத்தகத்தின் பின்னணி***

### ***எரேமியா மற்றும் புலம்பல் புத்தகத்தின் வரலாற்றுக் கட்டமைப்பு***

*எரேமியா எருசலேமுக்கு வடக்கே ஐந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ள லேவியர்களின் பட்டணமான ஆனதோத்தைச் சேர்ந்த ஆசாரியன் இல்க்கியாவின் குமாரன். எரேமியா தனது தகப்பனை ஆசாரியத்துவத்தில் பின்பற்றுவதற்குப் பதிலாக, ஒரு தீர்க்கதரிசியாக சேவை செய்ய அழைக்கப்பட்டார். அவருடைய வாழ்நாள் முழுவதும் யூதாவுக்கு எதிராக வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு பற்றிய தேவனுடைய செய்தியைக் கொண்டுவருவதற்கு அர்ப்பணிக்கப்பட்டது. எருசலேமுக்கு வரவிருக்கும் பிரச்சனையின் அடையாளமாக, எரேமியாவை*

திருமணம் செய்ய வேண்டாம் என்று தேவன் கட்டளை யிட்டார்.[290]

எரேமியா கொலை முயற்சி, அடித்தல், தேசத்துரோக குற்றச் சாட்டுகள் மற்றும் சிறைவாசம் உட்பட பெரும் எதிர்ப்பை சந்தித்தார். எருசலேமின் வீழ்ச்சிக்குப் பிறகு, ஒரு குழு எரேமியாவை அவரது விருப்பத்திற்கு மாறாக எகிப்துக்கு அழைத்துச் சென்றது.[291]

எருசலேமின் வீழ்ச்சிக்கு முந்தைய நாற்பது ஆண்டுகளில் எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தார். யூதாவின் கடைசி நல்ல ராஜாவான யோசியாவின் ஆட்சியின்போது அவர் தனது ஊழியத்தை ஆரம்பித்திருக்கலாம். கி.மு.609 இல் மெகித்தோவில் எகிப்திய பார்வோன் நெக்கோவுடன் சண்டையிடும் போது யோசியா கொல்லப்பட்டார். இதுமுதல் யூதாவின் வீழ்ச்சியின் காலகட்டம் தொடங்கியது. யோசியாவின் மகன் யோவகாஸ் எகிப்துக்கு அழைத்துச் செல்லப்படுவதற்கு முன்பு ஆட்சிபுரிந்தது மூன்று மாதங்கள் மட்டுமே. எகிப்து அவரது சகோதரன் யோயாக்கீமை அரியணையில் அமர்த்தியது. கி.மு. 605 இல் பாபிலோன் எருசலேமைத் தாக்கியது மற்றும் யூத கைதிகளின் முதல் குழுவை நாடுகடத்தியது.[292]

கி.மு. 598 இல் யோயாக்கீம் பாபிலோனுக்கு எதிராக கலகம் செய்தான், ஆனால் பாபிலோனியர்கள் எருசலேமை முற்றுகை யிட்டபோது இறந்தார். அவரது மகன் யோயாக்கீன், நேபுகாத்நேச்சரால் தோற்கடிக்கப்படுவதற்கு முன்பு மூன்று மாதங்கள் மட்டுமே ஆட்சி செய்தான். கி.மு.597 இல் நாடுகடத்தப்பட்ட இரண்டாவது குழுவுடன் யோயாக்கீன் பாபிலோனுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.[293] நேபுகாத்நேச்சார் யோசியாவின் மற்றொரு மகனான சிதேக்கியாவை அரியணையில் அமர்த்தினான். சிதேக்கியா கி.மு.586 வரை ஆட்சி செய்தான், ஆனால் இது யூதாவின் நிலையான வீழ்ச்சியின் காலமாக இருந்தது.

---

[290] எரேமியா 16:1-4

[291] எரேமியா 11:18-23; 26:1-15; 20:2; 37:11-16; 38:1-13; மற்றும் 43:1-7

[292] நாடுகடத்தப்பட்டவர்களின் முதல் குழுவில் தானியேல் மற்றும் அவரது நண்பர்கள் அடங்குவர் (தானியேல் 1:1-7).

[293] நாடுகடத்தப்பட்டவர்களின் இரண்டாவது குழு எசேக்கியேலை உள்ளடக்கியது (எசேக்கியேல் 1:1-3).

எரேமியாவின் எச்சரிப்புகளுக்கு சிதேக்கியா செவிசாய்க்க மறுத்து, தீர்க்கதரிசி என்றும் பார்க்காமல் எரேமியாவை சிறையில் அடைத்தான்.

பாபிலோனிய ஆட்சியை கவிழ்க்க முயன்ற சிதேக்கியா மற்ற ராஜாக்களுடன் கூட்டணி வைக்க முயன்றான்.[294] பதிலுக்கு, நேபுகாத்நேச்சார் மீண்டும் யூதா மீது கி.மு. 587-586இல் படையெடுத்தான். இந்த மூன்றாவது படையெடுப்பின்போது, நேபுகாத்நேசர் எருசலேமை சீரழித்து அங்கு கெதலியாவை ஆளுநராக நியமித்தான்.[295] எருசலேமின் எஞ்சிய தேசிய வரலாற்றில் இனிமேல், யூதாவுக்கு மீண்டும் ஒரு தாவீதின் ராஜா இருக்கமாட்டார்.

எரேமியாவின் ஊழியத்தை மூன்று நிலைகளாகப்பிரிக்கலாம்:

- கி.மு. 627-605 யூதா அசீரியா மற்றும் எகிப்தால் அச்சுறுத்தப்பட்டபோது அவர் தீர்க்கதரிசனம் கூறினார்.
- கி.மு. 605-586 யூதா மீது பாபிலோனின் தாக்குதல் களின்போது அவர் தீர்க்கதரிசனம் கூறினார்.
- கி.மு. 586-ஏறக்குறைய. 580 யூதாவின் வீழ்ச்சிக்குப் பிறகு அவர் எருசலேமிலும் எகிப்திலும் ஊழியம் செய்தார்.

**நோக்கம்**

தேவன் பொறுமையாக எச்சரிப்பதை எரேமியா யூதாவுக்கு அறிவிக்கிறார். அவர்கள் மனந்திரும்ப மறுத்ததால், தேவனுடைய தீர்ப்பு உறுதியாக இருந்தது. தேவனுக்கு உண்மையாக இருந்த மீதியானோருக்கு மறுசீரமைப்பு வாக்குறுதியையும் எரேமியா கொண்டுவந்தார். எரேமியாவின் செய்திக்கு செவிசாய்த்தவர்கள் பதிலளிக்கவில்லை என்றாலும், அவர் விட்டுச் சென்ற புத்தகம் யூதாவின் கடைசி நாட்களில் தேவனுடைய உண்மைத்தன்மையின் பதிவை அளிக்கிறது.

---

[294] எரேமியா 27:1-15
[295] எரேமியா 39-40

## எரேமியா புத்தகத்தின் கண்ணோட்டம்

எரேமியா காலவரிசைப்படி நடக்கவில்லை. பெரும் அழுத்தத்துடன் வாழ்ந்த எரேமியாவைப் புரிந்துகொள்ளக் கூடிய தெளிவான கட்டமைப்பு இல்லை.

இந்த வரிசையில் பின்வரும் அதிகாரங்களைப்படிப்பதன் மூலம் எரேமியாவின் வாழ்க்கை மற்றும் எருசலேமின்வீழ்ச்சியைப் பற்றிய கண்ணோட்டத்தைப்பெறலாம்:

| அதிகாரம் | தோராயமான காலம் (கி.மு.) | தலைப்பு |
|---|---|---|
| 1 | 627 | எரேமியாவின் அழைப்பு |
| 7 | 609-597 | தேவாலய பிரசங்கம் |
| 11-13 | தெரியவில்லை | எரேமியாவின்ஊழியத்திற்கு எதிர்ப்பு |
| 26 | 608 | எரேமியாவுக்கு கொலை மிரட்டல் |
| 25 | 605 | எழுபது வருட சிறைவாசம் |
| 36 | 605 | யோயாக்கீம் எரேமியாவின் சுருளை எரித்தல் |
| 29 | 597 | நாடு கடத்தப்பட்டவர்களுக்கு கடிதம் |
| 20 | 597-586 | ஆசாரியனாகிய பஸ்கூரால் எதிர்ப்பு |
| 27-28 | 594 | அனனியாவுடன் மோதல் |
| 32 | 588 | எரேமியா ஒரு வயலை வாங்குகிறார் |
| 37-38 | 588 | எரேமியா சிறையில் அடைக்கப்படுதல் |
| 39 & 52 | 586 | எருசலேமின் வீழ்ச்சி |
| 40-41 | 586 | கெதலியா ஆளுநராகுதல் |
| 42-43 | 586/585 | எரேமியா எகிப்துக்குக் கொண்டு செல்லப்படுதல் |

*மீதமுள்ள அதிகாரங்கள் தேவனுடைய ஜனங்களுக்கு எரேமியாவின் செய்திகளைப் பதிவு செய்கின்றன, கேட்டவர் களால் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்ட செய்திகள்.*

## எரேமியா புத்தகத்தின் பொருட்சுருக்கம்

### *எரேமியாவின் அழைப்பு (எரேமியா1)*

► *ஊழியத்திற்கான உங்கள் அழைப்பை விவரிக்கவும். உங்கள் ஊழியத்தில் இந்த அழைப்பு எவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டது?*

*எரேமியா பிறப்பதற்கு முன்பு, தேவன் அவரை தேசங்களுக்குத் தீர்க்கதரிசியாக நியமித்தார். தேவன் அவரை ஒரு தீர்க்கதரிசியாக அழைத்தபோது, எரேமியா பதிலளித்தார், அவர் இன்னும் சிறுபிள்ளையாக இருக்கிறார், அத்தகைய பெரிய பொறுப்புக்கு தயாராக இல்லை என்றார். எரேமியாவின் அழைப்பை உறுதிப்படுத்த தேவன் மூன்று அடையாளங்களுடன் பதிலளித்தார்:*

1. *தேவன் அவருடைய வார்த்தைகளை எரேமியாவின் வாயில் வைக்க அவனுடைய வாயைத் தொட்டார் (எரேமியா1:9-10).*
2. *தேவன் எரேமியாவுக்கு ஒரு வாதுமை மரத்தின் தரிசனத்தைக் கொடுத்தார், மேலும் அவருடைய வார்த்தையின் நிறைவேற்றத்தைத் தேவன் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று சொன்னார் (எரேமியா1:11-12)..*[296]
3. *தேவன் எரேமியாவுக்கு ஒரு பொங்குகிற பானையின் தரிசனத்தைக் கொடுத்தார், இது நிலத் தின் மீது ஊற்றப்பட்ட நியாயத்தீர்ப்பைக் குறிக் கிறது (எரேமியா 1:13-14).*

---

[296]*வாதுமைமரத்தின் அடையாளம் எபிரேய வார்த்தை ஜாலம். "வாதுமை" என்பது ஷாகத் என்ற எபிரேய வார்த்தை; "பார்" என்பது ஷோகத்.. வாதுமை மரமானது வசந்த காலத்தில் முதலில் துளிர்விட்டது, எனவே எபிரேய மக்கள் வாதுமை மரம் "வசந்த காலத்தை கவனித்துக்கொண்டது" என்று கூறினார்கள். அதே வழியில், தேவன் எரேமியா தீர்க்கதரிசன செய்தியின் நிறைவேற்றத்தை கவனித்துக்கொண்டிருப்பதாகக் கூறுகிறார்.*

## *உடன்படிக்கைக்கு யூதாவின் உண்மையற்ற தன்மை(எரேமியா 2–10)*

*யூதா உடன்படிக்கைக்கு துரோகம் செய்ததை பிரசங்கங்கள், பொருள் பாடங்கள் மற்றும் உவமைகள் மூலம், எரேமியா சித்தரிக்கிறார். யூதா மற்ற காதலர்களை நாடித்தேடும் விசுவாசமற்ற மனைவியைப் போன்றவள் என்கிறார். எரேமியா 7-ல் உள்ள "தேவாலய பிரசங்கத்தில்", தேவாலயத்தின் காரணமாக இரட்சிப்பு உறுதி என்று நம்பும் ஆராதனைக் காரர்களை தீர்க்கதரிசி கண்டனம் செய்கிறார். சீலோவை (இஸ்ரேலின் முந்தைய ஆராதனை ஸ்தலம்) அழிக்க தேவன் அனுமதித்தது போல், தேவாலயத்தையும் அழிக்க அனும திப்பார்.[297] தேவனுடைய வீடு கள்ளர்களின் குகையாகிவிட்டது, வழிபடுபவர்கள் பரிசுத்தமாக இல்லாததால், அது பரிசுத்தமாக இல்லை.*

## *தேவன் மற்றும் யூதாவுடனான எரேமியாவின் போராட்டம் (எரேமியா 11–20)*

*"எரேமியாவின் அறிக்கைகள்" என்று அழைக்கப்படும் இந்தப் பிரிவில், எரேமியா தனது செய்தியைக் கேட்போரின் பிடிவாதத்தைப் பற்றி தேவனிடம் புகார் செய்யும் ஜெபங்களை உள்ளடக்கியது. எரேமியா தனது செய்தியை நிராகரித்து, இறைத்தூதரை கொல்ல சதி செய்யும் ஜனங்களுக்கு பிரசங்கிக்க அனுப்பப்பட்டுள்ளார்.*

*அத்தகைய நம்பிக்கையற்ற செய்தியைப் பிரசங்கிப்பதில் எரேமியா விரக்தியடைந்தார். தேவன் எரேமியாவிடம் கூறுகிறார், "மோசேயும் சாமுவேலும் என் முகத்துக்கு முன்பாக நின்றாலும், என் மனம் இந்த ஜனங்கள் பட்சமாய்ச்சாராது."[298] யூதா மனந்திரும்ப மறுப்பதால், நியாயத்தீர்ப்பைத் தவிர வேறு எதுவும் இல்லை. தேவன் சமாதானத்தைக் கொண்டுவருவார் என்று பொய்த்தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்குச் சொல்லியிருக் கிறார்கள்; அதற்கு பதிலாக அவர்கள் மரித்துவிடுவார்கள்*

---

[297] *எரேமியா 7:14; 1 சாமுவேல் 1:3 மற்றும் 4:2-11*
[298] *எரேமியா 15:1*

*அல்லது சிறைபிடிக்கப்படுவார்கள்.*[299] *விசுவாசத் துரோகம் இழைத்த யூதாவுக்கு சமாதானம் இருக்காது.*

## *யூதாவின் ராஜாக்கள் மற்றும் தீர்க்கதரிசிகளுடன் எரேமியாவின் மோதல்கள்(எரேமியா 21–29)*

*தேவனுக்குக் கீழ்ப்படிவதற்கான தனது தகப்பனின் பாதையைப் பின்பற்றாத ராஜாவாக்கிய யோயாக்கீமை எரேமியா எதிர்கொள்கிறார். ஒரு ராஜாவின் இறுதிச் சடங்குடன் தொடர்புடைய விரிவான சடங்குகளுக்குப் பதிலாக, யோயாக்கீம் நகர வாயில்களுக்கு வெளியே இழுத்துச்செல்லப்பட்டு செத்த கழுதையைப் போல் தூக்கி எறியப்படுவார் என்று எரேமியாதீர்க்கதரிசனம் கூறுகிறார்.*

*தேவனுக்கு முன்பாக கண்டனம் செய்யப்பட்ட ஜனங்களுக்கு போலியான நம்பிக்கையின் செய்திகளைக் கொடுக்கும் பொய் தீர்க்கதரிசிகளைஎரேமியா எதிர்கொள்கிறார்.*

*முற்றுகையின்போது, எரேமியா தேவாலயத்திற்கு வெளியே நின்று நியாயத்தீர்ப்பு செய்தியுடன் ஜனங்களை எதிர்கொள்கிறார். அவர்கள் எழுபது வருட சிறைவாசத்தை எதிர்கொள்ளப் போவதாக அவர் அவர்களிடம் கூறுகிறார். தேவனுடைய கோபத்தின் கிண்ணம் நிரம்பியது; எருசலேம் தேவனைவிட்டு விலகின எல்லா தேசங்களோடும் அந்த கிண்ணத்தில் குடிக்கும்.*

*எருசலேம் எதிர்காலத்தில் பாபிலோனுக்கு அடிபணிவதற்கான அடையாளமாக எரேமியா தனது கழுத்தில் நுகத்தடியை அணிந்துகொண்டார். நேபுகாத்நேச்சாரிடமிருந்து தேவன் விரைவில் அந்த தேசத்தை விடுவிப்பார் என்று கூறிய பொய்த்தீர்க்கதரிசியான அனனியாவின் நுகத்தை உடைக்கிறார். நியாயத்தீர்ப்பில், தேவன் அனனியாவின் உயிரை எடுக்கிறார்.*

*இந்த பகுதியில் உள்ள இறுதி தீர்க்கதரிசனம் பாபிலோனில் நாடுகடத்தப்பட்டவர்களுக்கு ஒரு கடிதம் வடிவில் வருகிறது. அனனியாவும் மற்ற பொய்யின்தீர்க்கதரிசிகளும் பாபிலோனின் தோல்வியை முன்னறிவித்தாலும், எரேமியா நாடுகடத்தப்பட்டவர்களிடம் வீடுகளைக்கட்டவும், தோட்டங்களை வளர்க்கவும், பாபிலோனில் அமைதிக்காக ஜெபிக்கவும் சொல்கிறார்,*

---

[299] *எரேமியா 14:3-16 மற்றும் 15:2-9*

*ஏனென்றால் அவர்கள் எழுபது ஆண்டுகள் அங்கே இருப்பார்கள்.*

### *எதிர்கால மீட்டெடுத்தலின் வாக்குறுதி (எரேமியா 30–33)*

*இந்த அதிகாரங்கள் பெரும்பாலும் "ஆறுதலின் புத்தகம்" என்று அழைக்கப்படுகின்றன. எரேமியாவின் செய்திகளில் பெரும்பாலானவை நியாயத்தீர்ப்புச் செய்தியாக இருந்தாலும், யூதாவை தேவன் மீண்டும் தேசத்திற்குத் திரும்பச் செய்வார் என்று அவர் கேட்பவர்களிடம் கூறுகிறார். இஸ்ரவேல் உடன்படிக்கைக்கு துரோகம் செய்தாலும், தேவன் ஒரு புதிய உடன்படிக்கையை "அவர்களுடைய இருதயங்களில்" எழுதுவார், மேலும் "அவர்களுடைய பாவத்தை இனி நினைவுகூரமாட்டார்"[300] என்கிறார்.*

*தேவன் எரேமியாவிடம் தனது உறவினர் அனாமெயேலிடமிருந்து ஒரு நிலத்தை வாங்கச் சொல்கிறார். எருசலேம் விரைவில் அழிக்கப்படும் என்பதால் இது ஒரு ஆச்சரியமான கட்டளை! எரேமியா விளக்கம் கேட்கும்போது, "நிலங்கள் விலைக்கிரயமாகக் கொள்ளப்படுகிற பத்திரங்களில் கையெழுத்துப் போடுகிறதும் முத்திரையிடுகிறதும் அதற்குச்சாட்சிவைக்கிறதும் உண்டாயிருக்கும்; அவர்கள் சிறையிருப்பைத் திருப்புவேன்"[301] என்று கர்த்தர் சொல்லும் நாள் வரும் என்று அற்புதமான வாக்குறுதியைக் கொடுக்கிறார். தேவன் தம் ஜனங்களை மறக்கவில்லை. நியாயத்தீர்ப்பில் கூட, அவர் எதிர்கால மீட்டெடுத்தலுக்கு உறுதியளிக்கிறார்.*

### *எருசலேமின் கடைசி நாட்கள் (எரேமியா 34–45)*

*அதிகாரங்கள் 34-45 எருசலேமின் கடைசி நாட்களைப் பதிவு செய்கிறது. யூதாவின் தலைவர்கள் கடைசி மணிநேரம் வரை தேவனுடையடைய வார்த்தையை நிராகரித்துக்கொண்டே இருக்கிறார்கள். எரேமியா ஒரு துரோகியாகக் கருதப்படுகிறார், மேலும் முற்றுகையின்போது அவரது அழிவுச் செய்தியின் காரணமாக சிறையில் அடைக்கப்பட்டார். இருப்பினும், தேவனுடைய நியாயத்தீர்ப்பின் செய்தி நிறைவேறியது: எருசலேம் வீழ்ச்சியடைகிறது, சிதேக்கியா ராஜா கைப்பற்றப்பட்டார், சிதேக்கியாவின் கண்கள் பிடுங்குவதற்கு முன்பு அவனுடைய*

---

[300] *எரேமியா 31:31-34*
[301] *எரேமியா 32:44*

குமாரர்கள் கொல்லப்பட்டனர். சிதேக்கியா கடைசியாகப் பார்ப்பது அவனுடைய குமாரர்களின் மரணம்.

பாபிலோனிய கைப்பாவை ஆளுநரான கெதலியா கொல்லப்பட்ட பிறகு, யூதர்களின் ஒரு குழு எரேமியாவையும் அவரது செயலாளரான பாரூக்கையும் அழைத்துக்கொண்டு எகிப்துக்கு ஓடுகிறது. எகிப்தில் கூட, பல யூதர்கள் தொடர்ந்து சிலைகளை வணங்குகிறார்கள். அவர்களின் தொடர்ச்சியான உருவ வழிபாட்டின் விளைவாக மேலும் துன்பங்களை அனுபவிப்பார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசனம் கூறுகிறார்.

### *பிற தேசங்களுக்கான தீர்க்கதரிசனங்கள்(எரேமியா 46–51)*

எரேமியாவின் பெரும்பகுதி யூதா மீதான நியாயத்தீர்ப்புச்செய்திகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டாலும், தேவனுடைய இறையாண்மை மற்ற தேசங்களுக்கும் நீட்டிக்கப் படுகிறது. தீர்க்கதரிசன உரைகளின் தொடரில், எரேமியா எகிப்து, பெலிஸ்தியா, மோவாப், அம்மோன், ஏதோம், தமஸ்கு, கேதார், காசோர் மற்றும் ஏலாமுக்கு எதிராக தீர்க்கதரிசனம் உரைத்தார். இறுதியாக, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, எரேமியா பாபிலோனின் வீழ்ச்சியை மேதியர்களிடம் தீர்க்க தரிசனமாகக் கூறினார்.[302]

தேவன் அனைத்து ஜனங்கள் மீதும் இறையாண்மை கொண்டவர் என்பதை இந்தப் பகுதி காட்டுகிறது. இஸ்ரவேலை நியாயந்தீர்க்க தேவன் மற்ற தேசங்களைப் பயன்படுத்தினார், ஆனால் அவர் அந்த தேசங்களை நியாயந்தீர்த்து, எருசலேமுக்கு தம்முடைய ஜனங்களை மீட்டெடுப்பார். இஸ்ரவேலைத் தண்டிக்க தேவன் அசீரியாவைப் பயன்படுத்தினார்; பின்னர் அவர் அசீரியாவை தோற்கடிக்க நேபுகாத்நேச்சரை அனுமதித்தார். நாடு கடத்தப்பட்ட பிறகு, தேவன் யூதாவையும் மீட்டெடுத்து மன்னிப்பார்.[303]

### *எருசலேமின் வீழ்ச்சி மீண்டும் உரைக்கப்படுதல் (எரேமியா 52)*

[302] எரேமியா 51:11. கி.மு. 550 இல், மேதியர்கள் கோரேசால் பெர்சியப் பேரரசில் இணைக்கப்பட்டனர். இந்த பேரரசு கி.மு. 539 இல் பாபிலோனை அழித்தது. மேலும் இஸ்ரவேல் ஜனங்களை எருசலேமுக்குத் திரும்பிச் செல்ல அனுமதித்தது.
[303] எரேமியா 50:17-20

*எருசலேமின் வீழ்ச்சியினை மீண்டும் கூறுவதோடு எரேமியா முடிக்கிறார். எரேமியா 52-ஆம் அதிகாரம் 2 ராஜாக்கள் 24-25 மற்றும் எரேமியா 39 க்கு இணையாக உள்ளது. புத்தகம் நம்பிக்கையின் குறிப்போடு முடிவடைகிறது. நேபுகாத்நேசரின் வாரிசான தீயவன்-மெரோடாக், யூதாவின் ராஜாவாகிய யோயாக் கீனை சிறையிலிருந்து விடுவித்து, ராஜாவின் மேஜையில் இருந்து சாப்பிட அனுமதித்தான். இது எரேமியாவின் வாசகர்க ளுக்குத் தாவீதின் வம்சவரிசை பாதுகாக்கப்பட்டதை நினைவூட் டுகிறது. நாடுகடத்தப்பட்டாலும் தேவன் தம்முடைய ஜனங் களைக் கவனித்து வருகிறார்.*

## "தீர்க்கதரிசன வழக்காடுதல்" குறித்த ஒரு நெருக்கமான பார்வை

*பஞ்சாகமத்தில், இஸ்ரவேலின் வரலாற்றில் உடன்படிக்கையின் முக்கியத்துவத்தைப் பார்த்தோம். மோசேயின் நியாயப்பிரமா ணம் இஸ்ரவேலை ஆளும் விதிகளின் தொகுப்பை விட கூடுதலாக முக்கியத்துவம்வாய்ந்ததாக இருந்தது. இஸ்ரவேலு டனான தேவனுடைய உடன்படிக்கை அன்பின் உறவை அடிப்படையாகக் கொண்டது. இஸ்ரவேலின் கீழ்ப்படியாமை தேவனையும் இஸ்ரவேலையும் இணைக்கும் உடன்படிக்கை யைமீறியது.*

*இஸ்ரவேல் தேவனுடன் செய்த உடன்படிக்கையின் விதிமுறை களை உடைத்துவிட்டது என்பதைக் காட்டிக் குற்றச்சாட்ட தீர்க்கதரிசிகள் அடிக்கடி மோசேயின் நியாயப்பிரமாணத்தைச் சுட்டிக்காட்டுகிறார்கள். இந்த குற்றச்சாட்டுகளை "தீர்க்கதரிசன வழக்காடுதல்" என்று அழைக்கிறோம், யூதாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் பட்டியல். யூதா உடன்படிக்கையை மீறிவிட் டதாகவும், உடன்படிக்கையின் ஒரு பகுதியாக இருந்த சாபங்களை அனுபவிக்க வேண்டும் என்றும் எரேமியா காட்டு கிறார். கீழேயுள்ள விளக்கப்படம் எரேமியாவின் தீர்க்கதரிசன வழக்கின் கூறுகளைக் காட்டுகிறது.*

| தீர்க்கதரிசன வழக்காடுதல் | எரேமியா |
|---|---|
| **குற்றமிழைத்த கூட்டத்தினருக்கு சம்மன்** | *"யாக்கோபின் குடும்பத்தாரே, இஸ்ரவேல் குடும்பத்தின் வம்சங்களே, நீங்களெல்லாரும் கர்த்தருடையவார்த்தையைக் கேளுங்கள்" (எரேமியா 2:4).* |
| **யூதாவுக்குதேவனுடைய நன்மையை நினைவூட்டுகிறது** | *"செழிப்பான தேசத்தின் கனியையும்நன்மையையும் சாப்பிடும்படிக்கு நான் உங்களை அவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டு வந்தேன்" (எரேமியா 2:5-7).* |
| **இஸ்ரேலுக்கு எதிரான குற்றச்சாட்டுகள்** | *"ஆதலால் இன்னும் நான் உங்களோடேவழக்காடுவேன், உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளோடும் வழக்காடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்....என் ஜனங்களோ வீணானவைகளுக்காகத் தங்கள் மகிமையை மாற்றினார்கள்....என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காததொட்டிகளாகிய வெடிப்புள்ளதொட்டிகளை தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள்" (எரேமியா 2:9-13).* |
| **யூதாவுக்கு எதிராக சாட்சிகளை அழைத்தல்** | *"வானங்களே, இதினிமித்தம் பிரமித்துக் கொந்தளித்து, மிகவும் திடுக்கிடுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 2:12).* |
| **யூதாவின் துரோகத்திற்காக புலம்பல்** | *"ஒரு பெண் தன் ஆபரணத்தையும், ஒரு மணவாட்டி தன் ஆடைகளையும்மறப்பாளோ? என் ஜனங்களோ எண்ணிமுடியாத நாட்களாய் என்னை மறந்துவிட்டார்கள்" (எரேமியா 2:31-32).* |
| **யூதா மனந்திரும்பினால் மீட்கப்படுவதற்கான வாக்குறுதி** | *"சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.... அக்காலத்திலே எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள்; சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதினிடமாகச் சேர்வார்கள்" (எரேமியா 3:13-17).* |

## *புலம்பல் புத்தகத்தின் பின்னணியும் கட்டமைப்பும்*

*புலம்பல் புத்தகம் அதன் எழுத்தாளர் யார் என்பதை அடையாளம் காண்பிக்கவில்லை என்றாலும், யூத மற்றும் கிறிஸ்தவ பாரம்பரியம் இந்த புத்தகத்தை எரேமியா எழுதினர் என்று கூறுகின்றன. இது புத்தகத்தின் முக்கிய கருப்பொருளான எருசலேமின் வீழ்ச்சிக்குப் பிறகு விரைவில் இயற்றப்பட்டது. எரேமியா எகிப்துக்கு சிறைபிடிக்கப்பட்டு போவதற்கு முன்பு புலம்பல் புத்தகத்தை எழுதியிருக்கலாம்.*

*புலம்பல் எருசலேமின் அழிவைப் பற்றி புலம்புகின்ற ஐந்து கவிதைகளைக் கொண்டுள்ளது. இந்தக் கவிதைகள் கவஞரின் தனிப்பட்ட துயரத்தை வெளிப்படுத்துகின்றன.*

*புலம்பல் 5-ஆம் அதிகாரம் தவிர ஒவ்வொரு அதிகாரமும் முதலெழுத்துப் புதிர் எனப்படும் சிறப்பு வடிவத்தில் உள்ளது. எபிரேய மொழியில் இருபத்தி-இரண்டு அடிப்படை எழுத்து க்கள் உள்ளன. புலம்பல் 1, 2 மற்றும் 4 இல் ஒவ்வொரு எழுத்தும் ஒரு வசனத்தைத் தொடங்குகிறது. புலம்பல் 1:1 எபிரேய எழுத்துக்களின் முதல் எழுத்தான அலெஃப் உடன் தொடங்குகிறது. புலம்பல் 1:2 பேத் இல் தொடங்குகிறது மற்றும் இந்த முறை அதிகாரம் முழுவதும் தொடர்கிறது. புலம்பல் 3 அறுபத்தாறுவசனங்களைக் கொண்டுள்ளது, ஒவ்வொன்றும் மூன்று வசனங்களைக் கொண்ட இருபத்தி இரண்டு குழுக்கள். இந்த கவிதை வடிவத்தின் பயன்பாடு எரேமியாவின் துயரத்தின் வெளிப்பாட்டிற்கு கட்டமைப்பைக் கொடுக்கிறது.*

## *புலம்பல் புத்தகத்தின் நோக்கம்*

*இந்த கவிதைகள் எருசலேமின் வீழ்ச்சியில் எழுத்தாளரின் பெரும் துயரத்தை பதிவு செய்கின்றன. எருசலேமின் துன்பம் யூதாவின் பாவத்தின் விளைவு, தேவனுடைய தோல்வி அல்ல என்பதை அவர்கள் தெளிவுபடுத்துகிறார்கள். எரேமியாவின் புத்தகம் எருசலேமிற்கு வரவிருக்கும் வீழ்ச்சியை எதிர்நோ க்குகிறது; புலம்பல் எருசலேம் நகரத்தின் வீழ்ச்சியை திரும்பிப் பார்க்கின்றன.*

| எருசலேமின்வீழ்ச்சியின் இரண்டு பார்வைகள் | | |
|---|---|---|
| எரேமியா **முன்னோக்கிப்** பார்க்கிறது(எச்சரிக்கை) | எருசலேமின் வீழ்ச்சி | புலம்பல் **பின்னோக்கிப்** பார்க்கிறது (அழுகை) |

## புலம்பல் புத்தகத்தின் செய்தி

*புலம்பல் புத்தகம் துக்கத்திலிருந்து ஏறெடுக்கப்படும் ஜெபமாக நகர்கின்றது. எருசலேமின் சோகமான முடிவை விவரிக்கும் புலம்பலுடன் இது தொடங்குகிறது. ஒரு காலத்தில் பெரிய நகரமாக இருந்த இது இப்போது விதவையாகிவிட்டது. அவள் தேவனுக்குத் துரோகம் செய்தாள், இப்போது "அவளுடைய திரளான பாதகங்களினிமித்தம் கர்த்தர் அவளைச் சஞ்சலப் படுத்தினார்."[304] புலம்பல்களின் இறையியல் ராஜாக்கள் மற்றும் எரேமியா புத்தகத்துடன் ஒத்துப்போகிறது. பின்வரும் காரணங் களை எருசலேம் வீழ்ந்ததற்கு இந்தப்புத்தகங்கள் காட்டுகி ன்றன:*

- *ஜனங்களுடையபாவங்களின் காரணமாக (புலம்பல் 1:18)*
- *பொய்யான தீர்க்கதரிசிகள் மற்றும் பாவமுள்ள ஆசாரி யர்கள் காரணமாக (புலம்பல் 4:13)*

*புலம்பல் 3-ஆம் அதிகாரம் எருசலேமுக்காக தொடர்ந்து துக்கம் அனுசரிக்கிறது, ஆனால் தேவனுடைய இரக்கத்தின் கருப்பொ ருளை அறிமுகப்படுத்துகிறது. புலம்பல் 3:19-39 தேவனுடைய நன்மை மற்றும் உறுதியான அன்பின் பிரதிபலிப்பாகும்.*

*எருசலேம் முற்றுகையின்போதுள்ள நிலைமைகளை விவரி க்கும் மற்றொரு புலம்பலுக்குப் பிறகு (புலம்பல்கள்4), கவிஞர் மீட்டெடுத்தலுக்கான ஜெபத்துடன் முடிக்கிறார். யூதாவின் ஒரே நம்பிக்கை தேவனுடைய இரக்கம் மட்டுமே என்பதை புலம் பல்கள் அங்கீகரிக்கின்றன: "கர்த்தாவே, எங்களை உம்மிடத்தில் திருப்பிக்கொள்ளும், அப்பொழுது திரும்புவோம்!"[305]*

---

[304] புலம்பல் 1:5
[305] புலம்பல் 5:21

## எரேமியாவின் புத்தகம் இன்று பேசுகிறது

*சமகாலத் திருச்சபையின் ஒரு பகுதி கிறிஸ்தவர்களுக்கு, குறிப்பாக ஊழியர்களுக்கு ஆரோக்கியம் மற்றும் செல்வத்தை உறுதியளிக்கும் ஒரு போதனையால் சிறைபிடிக்கப்பட்டுள்ளது. சில நாடுகளில், "சுகபோக சுவிசேஷத்தை" பிரசங்கிப்பவர்கள் தேசத்தின் பணக்கார ஜனங்களில் உள்ளனர்; இந்த தலைவர்களின் ஆடம்பரமான வாழ்க்கை முறையை ஆதரிக்க ஏழைகள் தியாகம் செய்கிறார்கள். இந்த அணுகுமுறை வேதாகம மாதிரியிலிருந்து வெகு தொலைவில் உள்ளது.*

*தேவனுடைய செய்திக்கு உண்மையாக இருப்பது விலையேறப்பெற்றது என்று எரேமியா காட்டுகிறார். எரேமியா தேவனுடைய அழைப்புக்குத் தன்னை அர்ப்பணித்ததால் துன்பப்பட்டார்; பிதாவின் வேலைக்குக் கீழ்ப்படிந்ததற்காக இயேசு துன்பப்பட்டார்; இன்று ஊழியர்கள் எதிர்ப்பை எதிர்கொண்டாலும் விசுவாசமாக இருக்க அழைக்கப்படுகிறார்கள்.*

*எரேமியா 29:11-ன் வாக்குறுதியை யூதா பாபிலோனுக்கு நாடுகடத்தப்படவிருக்கும் சூழலில் படிக்க வேண்டும். எரேமியா ஜனங்களுக்கு வாக்குறுதி அளித்தார், "நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்கு கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே" என்று கர்த்தர் கூறுகிறார். இருப்பினும், தேவனுடைய ஜனங்கள் விரைவில் பெரும் துன்பத்தை எதிர்கொள்வார்கள். தம் ஜனங்களுக்கான தேவனுடைய திட்டம் நல்லது; ஆனால் அது துன்பம் இல்லாத வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்காது. பாவம் மற்றும் நம் உலகில் அதன் விளைவுகளால், தேவனுடைய ஜனங்கள் கூட துன்பப்படுகிறார்கள்.*

*இருப்பினும், புலம்பல்கள் காண்பிப்பது போல், துன்பத்திலும் தேவன் தம் ஜனங்களுக்கு உண்மையாக இருக்கிறார். பிரச்சனையில் கூட, நாம் தேவனுடைய நன்மையை நம்பலாம். "நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே,*

அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலை தோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது."[306]

## முடிவுரை: புதிய ஏற்பாட்டில் எரேமியாவின் புத்தகம்

எரேமியாவின் புத்தகம் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் அடிக்கடி மேற்கோள் காட்டப்படுகிறது. தேவனுடைய ஜனங் ளின் எதிரியான "பாபிலோனின் மேல்" வரவிருக்கும் அழிவை சித்தரித்த எரேமியாவின் வார்த்தைகளை வெளிப்படுத்துதல் புத்தகம் மேற்கோள் காட்டுகிறது.[307]

எரேமியாவின் ஊழியத்திற்கும் இயேசுவின் பூமிக்குரிய ஊழி யத்திற்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. எருசலேமின் அழிவைக் கண்டு எரேமியா அழுதது போல், இயேசு அந்த நகரத்தைப் பார்த்து அழுது, தேவாலயத்தின் அழிவை முன்னறிந்தார்.[308] தேவாலயத்தைச் சுத்திகரிக்கும் போது, தேவனுடைய வீட்டைக் கள்ளர்களின் குகையாக மாற்றியதை விவரிக்க இயேசு எரேமி யாவின் மொழியைப் பயன்படுத்தினார்.[309]எரேமியா மற்றும் இயேசு இருவரும் தாங்கள் சேவை செய்ய வந்த ஜனங்களால் நிராகரிக்கப்பட்டனர்.

புறஜாதிகளை இரட்சிப்புக்கு அழைப்பதில் தேவனுடைய இறையாண்மையை எழுதுவதில் பவுல் எரேமியாவின் மொழி யைப் பயன்படுத்தினார். குயவனுக்குக் களிமண்ணின் மீது அதிகாரம் உண்டு, மேலும் "தாம் மகிமைக்காக எத்தனமாக்கின கிருபாபாத்திரங்கள்மேல் தம்முடைய மகிமையின் ஐசுவரி யத்தைத் தெரியப்படுத்தவும் சித்தமானார்."[310]

மிக முக்கியமாக, தேவனுடையஜனங்களுக்கு எதிர்கால மீட்டெடுத்தல் பற்றிய எரேமியாவின்வாக்குறுதிகளில் சுவிசே ஷம் காணப்படுகிறது. இஸ்ரவேலின்வரலாற்றில் இந்த மீட்டெ டுத்தல்முழுமையாக நிறைவேறவில்லை. இயேசுவின் மரணம்

---

[306] புலம்பல் 3:22-23
[307] எடுத்துக்காட்டுகளில் வெளிப்படுத்துதல் 18:4, 8 மற்றும் 24 ஆகியவை அடங்கும்.
[308] லூக்கா 19:41-44 மற்றும் மத்தேயு 24:1-2
[309] எரேமியா 7:11 மற்றும் மத்தேயு 21:13
[310] ரோமர் 9:20-24

*மற்றும் உயிர்த்தெழுதல் மூலம், இந்த மீட்டெடுத்தல் திருச்சபையிலும் அதன் மூலமும்நிறைவேற்றப்படுகிறது.*

## *பாடம்10 வீட்டுப்பாடங்கள்*

*இந்தப்பாடத்தைப் பற்றிய உங்கள் புரிதலை பின்வரும் வீட்டுப்பாடங்களின் மூலம் நிரூபிக்கவும்:*

(1) *பின்வரும் வீட்டுப்பாடங்களில் **ஒன்றைத்** தேர்ந்தெடுக்கவும்:*

*விருப்பம் 1: குழு வீட்டுப்பாடம்*

*எரேமியா 11-20வரையிலுள்ள அதிகாரங்களில் உள்ள எரேமியாவின் "அறிக்கைகள்" பற்றி விவாதிக்கவும். எரேமியாவின் முறையீடுகளையும் தேவனுடைய பதில்களையும் பட்டியலிடுங்கள். எரேமியாவின் முறையீடுகளை ஊழியத்தில் நீங்கள் எதிர்கொள்ளும் சிரமங்களுடன் ஒப்பிடுங்கள். எரேமியாவின் உதாரணத்திலிருந்து உங்கள் குழு என்ன படிப்பினைகளைப் பெறலாம்? உங்கள் விவாதத்தின் ஒரு பக்கசுருக்கத்தை எழுதுங்கள்.*

*விருப்பம் 2: தனி வீட்டுப்பாடம்*

- *எரேமியா மற்றும் புலம்பல்களின் அடிப்படையில் தேவனுடைய உண்மையுள்ள இரக்கம் பற்றிய பிரசங்கத்திற்கு விரிவான விளக்கத்தை எழுதுங்கள்.*
- *எரேமியா மற்றும் புலம்பல் புத்தகங்களின் அடிப்படையில் தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் பற்றிய பிரசங்கத்திற்கு விரிவான விளக்கத்தை எழுதுங்கள்.*

(2) *இந்த பாடத்தில் ஒரு தேர்வை எழுதவும். தேர்வில் மனப்பாடம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட வேதவசனங்களும் அடங்கும்.*

## *பாடம்10தேர்வு*

(1) *எரேமியா ஏன் "அழுகையின் தீர்க்கதரிசி" என்று அழைக்கப்படுகிறார்?*
(2) *எரேமியாவின் குடும்பப் பின்னணி என்ன?*
(3) *சிறைப்பிடிக்கப்பட்டு மூன்று குழுக்களாக நாடுகடத்தப்பட்ட வருடங்களைப் பட்டியலிடுக. முதல் இரண்டு*

குழுக்களுடன், நாடுகடத்தப்பட்ட ஒரு தீர்க்கதரிசியைக் குறிப்பிடுக.

(4) எரேமியா மற்றும் புலம்பலின் முதன்மை நோக்கங்கள் யாவை?

(5) "தீர்க்கதரிசன வழக்காடுதல்" என்றால் என்ன?

(6) "எரேமியாவின் அறிக்கைகள்" என்பவை யாவை?

(7) எரேமியாவில் உள்ள "ஆறுதலின் புத்தகம்" என்றால் என்ன?

(8) புலம்பல் புத்தகத்தில் உள்ள ஐந்து அதிகாரங்களில் நான்கில் என்ன கவிதை வடிவம் பயன்படுத்தப் பட்டுள்ளது?

(9) புலம்பல் 3:21-24 வரையிலுள்ள வசனங்களை நினைவி லிருந்து எழுதுக.

# *பாடம் 11*

# *எசேக்கியேல் மற்றும் தானியேல்: சிறையிருப்பின் தீர்க்கதரிசிகள்*

## *பாடத்தின்நோக்கங்கள்*

*இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:*

(1) *எசேக்கியேல் மற்றும் தானியேலின் சாத்தியமான வருடம் மற்றும் வரலாற்று அமைப்பை அறிந்துகொள்ளுதல்.*
(2) *எசேக்கியேல் மற்றும் தானியேல் ஆகியோரின் முதன்மைக் கருப்பொருள்களையும் நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டுதல்.*
(3) *அப்போகாலிப்டிக் தீர்க்கதரிசனத்தை விளக்குவதில் உள்ள சிக்கல்களைப் புரிந்துகொள்ளுதல்.*
(4) *மனித வரலாற்றின் மீது தேவனுடைய இறையாண்மையை மதித்தல்.*
(5) *எசேக்கியேல் மற்றும் தானியேலின் செய்தியை இன்றைய உலகின் தேவைகளுடன் தொடர்புபடுத்துதல்.*

## *இந்த பாடத்திற்கான ஆயத்தம்*

*எசேக்கியேல் மற்றும் தானியேல் புத்தகங்களை வாசிக்கவும்.*

*எசேக்கியேல் 36:25-27-ஐ மனப்பாடம் செய்யவும்.*

## *முன்னுரை*

*எசேக்கியேல் மற்றும் தானியேல் புத்தகங்கள் எரேமியாவுடன் அநேகக்காரியங்களை பெரும்பாலும் பொதுவாகக்கொண்டுள்ளன. மூன்று புத்தகங்களும் எருசலேமின் வீழ்ச்சியைச் சுற்றியுள்ள ஆண்டுகளில் இருந்து வந்தவை. தானியேல் மற்றும் எசேக்கியேல் பாபிலோனில் உள்ளனர், எரேமியா எருசலேமில் இருக்கிறார். எரேமியா எருசலேமின் அழிவை நேரில் பார்த்தபோது, எசேக்கியேல் பாபிலோனில் உள்ள தனது வீட்டிலிருந்து அழிவின் தரிசனங்களைக் கண்டார். எரேமியா மற்றும் எசேக்கியேலை விட இளையவராகிய தானியேல்,*

எருசலேமின் முதல் முற்றுகையின்போது பாபிலோனுக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்தப்புத்தகங்கள் ஒவ்வொன்றும் நம்பிக்கை மற்றும் மீட்டெடுத்தல் பற்றிய செய்திகளைக் கொண்டிருந்தாலும், எரேமியாவை விட எசேக்கியேல் மற்றும் தானியேலில் எதிர்கால மீட்டெடுத்தல் அதிக கவனம் பெறுகிறது. எரேமியாவின் முதன்மை செய்தி எருசலேம் மீதான தீர்ப்பு; எசேக்கியேல் மீட்டெடுத்தலின் எழுச்சியூட்டும் தரிசனத்தைக் கண்டார்; தொலைதூர எதிர்காலத்தில் தேவனுடையநோக்கங்களின் இறுதி நிறைவேற்றத்தைத் தானியேல் முன்னறிவித்தார்.

| எசேக்கியேல் மற்றும் தானியேல் புத்தகத்தின் காலவரிசை | |
|---|---|
| **காலம்** | **நிகழ்வு** |
| கி.மு.605 | தானியேல் பாபிலோனுக்குகொண்டு செல்லப்படல் |
| கி.மு.597 | எசேக்கியேல் பாபிலோனுக்குகொண்டு செல்லப்படல் |
| கி.மு.586 | எருசலேமின் வீழ்ச்சி |
| கி.மு.571 | எசேக்கியேல் ஊழியத்தின் முடிவு |
| கி.மு.539 | பெர்சியா பாபிலோனைக் கைப்பற்றுதல் |
| கி.மு.538 | சிறையிருப்பிலிருந்து முதல் குழு நாடுதிரும்புதல் |
| கி.மு.536 | தானியேல் ஊழியத்தின் முடிவு |

## எசேக்கியேல் புத்தகத்தின் பின்னணி

| எசேக்கியேல் புத்தகத்தின் ஓர் சுருக்கப்பார்வை | |
|---|---|
| **எழுதியவர்** | எசேக்கியேல் |
| **செய்திபெற்றவர்** | பாபிலோனுக்கு சிறைப்பட்டுப்போனவர்கள் |
| **எழுதப்பட்ட காலம்** | சுமார் கி.மு. 593-571 |
| **கருப்பொருள்** | நியாயத்தீர்ப்பு மற்றும் மீட்டெடுத்தல் |
| **நோக்கம்** | வருகிற நியாயத்தீர்ப்புக் குறித்த எச்சரிக்கை |
| | எதிர்கால மீட்டெடுத்தல் குறித்த வாக்குத்தத்தம் |

| | |
|---|---|
| **எசேக்கியேல் புத்தகத்தில் சுவிசேஷம்** | *எசேக்கியேல் தேவனுடைய பிரசன்னம் மீண்டும் அவருடைய ஜனங்களுடன் இருக்கும் ஒரு நாளைக்கண்டார். இது இயேசுவில் நிறைவேறியது (யோவான் 1:14).* |
| | *எசேக்கியேல் ஒரு நதியைக் கண்டார், அது எங்கே ஓடுகிறதோ அங்கெல்லாம் ஜீவனைக் கொண்டுவருகிறது. இந்த ஜீவனைக் கொடுக்கும் தண்ணீரின் ஆதாரமாக இயேசு தன்னை அடையாளம் காட்டினார் (யோவான்4:10-14).* |

## எசேக்கியேல் புத்தகத்தின் வரலாற்றுக் கட்டமைப்பு

*எசேக்கியேலின் பெயரின் அர்த்தம் "தேவன் பலப்படுத்தியிருக்கிறார்". கி.மு.621இல் யோசியா நியாயப்பிரமாணத்தைக் கண்டுபிடிப்பதற்கு சற்று முன்பு அவர் பிறந்தார். ஒரு ஆசாரியனின் குமாரனாக, எசேக்கியேல் யோசியாவின் சீர்திருத்தங்களுடன் கூடிய எழுப்புதலைக் கண்டார் மற்றும் எரேமியாவின் பிரசங்கத்தையும்கேட்டிருக்கலாம்.*

*கி.மு. 597-ல் நாடுகடத்தப்பட்டதன் ஒரு பகுதியாக எசேக்கியேல் பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டார். யோயாக்கீமின் கலகத்தைத் தொடர்ந்து. அவர் நிப்பூர் நகருக்கு அருகிலுள்ள செப்பார் கால்வாயில் நாடுகடத்தப்பட்ட சமூகத்தில் குடியேறினார். எசேக்கியேல் திருமணமானவர், ஆனால் அவரது பிள்ளைகளைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.*

*எருசலேமில் ஒரு ஆசாரியனாக ஊழியம் செய்வதற்குப் பதிலாக, எசேக்கியேல் நாடுகடத்தப்பட்டவர்களிடையே ஒரு தீர்க்கதரிசியாகப் பணியாற்றினார்.[311] ஒரு ஆசாரியனின் ஊழியம் முப்பது வயதில் ஆரம்பித்து ஐம்பது வயதில் முடிந்தது.[312] எசேக்கியேலின் முதல் தரிசனம் அவர் முப்பது வயதானபோது வந்தது, புத்தகத்தை முடிக்கும் போது வந்த தரிசனம் எசேக்கியேலுக்கு ஐம்பது வயதாக இருந்தபோது வந்தது.[313] எரேமியாவைப் போலவே, எசேக்கியேலில் உள்ள செய்திகள் எப்போதும்*

---

*[311] எசேக்கியேல் 8:1; 14:1; 20:1*

*[312] எண்ணாகமம் 4:3*

*[313] புத்தகத்தின் முடிவில் எசேக்கியேலின் தரிசனம் (40:1) எசேக்கியேல் 1:2 இல் அவரது முதல் தரிசனத்திற்கு இருபது ஆண்டுகளுக்குப் பிறகு நிகழ்ந்தது.*

காலவரிசைப்படி இல்லை. நேபுகாத்நேச்சார் எகிப்தை[314] தோற்கடிப்பார் என்ற எசேக்கியேலின் தீர்க்கதரிசனம் கி.மு.571 இல் புத்தகத்தின் இறுதி தரிசனத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, கொடுக்கப்பட்டது.

எரேமியாவின் முதன்மையான பார்வையாளர்கள் எருசலேம் ஜனங்கள், ஆனால் அவர் பாபிலோனில் நாடுகடத்தப்பட்டவர்களுக்கு கடிதங்களை எழுதினார். எசேக்கியேலின் முதன்மையான பார்வையாளர்கள் பாபிலோனில் இருந்த யூதர்கள், ஆனால் அவர் எருசலேம் ஜனங்களுக்கு கடிதங்கள் எழுதினார்.

## நோக்கம்

பாபிலோனில் நாடுகடத்தப்பட்டவர்களுக்கு பல கேள்விகள் இருந்தன: "எவ்வளவு காலம் இந்த சிறையிருப்பு இருக்கும்?" "நம் நகரத்திற்கு என்ன சம்பவிக்கும்?" "எதிர்கால நம்பிக்கை இருக்கிறதா?" சிறைபிடிப்பு பல ஆண்டுகள் நீடிக்கும் என்று எசேக்கியேல் பதிலளித்தார். எருசலேம் ஜனங்கள் விரைவில் பாபிலோனில் நாடுகடத்தப்பட்டவர்களுடன் சேர்ந்து கொள்வார்கள் என்று எச்சரிப்பதற்காக எழுதினார். நகரம் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து, எசேக்கியேல் தேவனுடைய மீட்டெடுத்தலின் வாக்குறுதியைக் கொண்டு வந்தார். இறுதியில், எசேக்கியேல் புத்தகம் தரும் நம்பிக்கையின் செய்தி தேவன் தம்முடைய ஜனங்களைக் கைவிடவில்லைஎன்பதாகும்.

| சிறைபட்டுப்போனவர்களின் கேள்வி | எசேக்கியேலின் பதில் |
|---|---|
| **பாபிலோன் விரைவில் தோற்கடிக்கப்படுமா?** | இல்லை. யூதாவின் மீது பாபிலோன் அதிக வெற்றிகளைப் பெறும். இன்னும் எருசலேமில் இருப்பவர்களில் பலர் நாடு கடத்தப்படுவார்கள் (எசேக்கியேல் 12). |
| **எருசலேமுக்கு என்ன சம்பவிக்கும்?** | எருசலேம்அழிக்கப்படும் (எசேக்கியேல் 5). |
| **நம் பிதாக்கள் செய்ததற்காக நாம்** | ஒவ்வொருவரும் அவரவர் |

[314] எசேக்கியேல் 29:17-21

| | |
|---|---|
| ***ஏன் தண்டிக்கப்படுகிறோம்?*** | *பாவத்திற்கு பொறுப்பாளிகள். "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்" (எசேக்கியேல் 18).* |
| ***தேவனுடைய ஜனங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?*** | *ஆம்! தேவன் ஒரு மகிமையான எதிர்காலத்தை வாக்களிக்கிறார் (எசேக்கியேல் 40-48).* |

## எசேக்கியேல் புத்தகத்தின் கண்ணோட்டம்

### எசேக்கியேல் புத்தகத்தின் பொருட்சுருக்கம்

#### *எசேக்கியேலின் அழைப்பு (எசேக்கியேல் 1–3)*

*எசேக்கியேலின் அழைப்பு, அவருடைய பல செய்திகளைப் போலவே, தேவனிடமிருந்து ஒரு தரிசனமாக வந்தது. தரிசனம் ஐந்து அதிகாரங்களைக் கொண்டிருந்தது:*

- *அமைப்பு (1:1-3)*
  - *தேவனுடையசிங்காசனத்தை அணுகுதல் (1:4-28)*
    - *அழைப்பு (2:1-3:11)*
  - *தேவனுடையசிங்காசனத்திலிருந்து புறப்படுதல் (3:12-13)*
- *அமைப்பு (3:14-15)*

*ஏசாயா மற்றும் எரேமியாவைப் போலவே, எசேக்கியேல் செவிகொடுக்காத ஜனங்களுக்குப் பிரசங்கிக்கும்படி அழைக்கப் பட்டார். யூதாவின் கலகக்கார ஜனங்களிடம் பேசுவதைவிட, வேற்றுமொழி ஜனங்களிடம் பேசுவது எளிதாக இருக்கும் என்று தேவன் எசேக்கியேலிடம் கூறினார். அவர்கள் "இஸ்ர வேல் வம்சத்தார் அனைவரும் கடினமான நெற்றியும் முரட் டாட்டமுள்ள இருதயமும் உள்ளவர்கள்." இருப்பினும், தேவன் எசேக்கியேலுக்கு உறுதியளித்தார், "இதோ, உன் முகத்தை அவர்கள் முகத்துக்கு எதிராகவும், உன் நெற்றியை அவர்கள் நெற்றிக்கு எதிராகவும் கெட்டியாக்கினேன்."[315] எசேக்கியேலின் கடினமான பணிக்காக தேவன் அவரைப் பலப்படுத்தினார்.*

[315] எசேக்கியேல் *3:7-8*

## *யூதாவின் மீதான நியாயத்தீர்ப்பு (எசேக்கியேல் 4–24)*

*தொடர்ச்சியான தரிசனங்கள் மற்றும் அடையாளச் செயல்கள் மூலம், எசேக்கியேல் பாபிலோனில் நாடுகடத்தப்பட்டவர்களுக்கு நியாயத்தீர்ப்பின் செய்தியைக் கொண்டுவந்தார். புத்தகத்தின் மையச்செய்தி எசேக்கியேலின் தரிசனம் 8-11 அதிகாரங்களில் உள்ளது. எசேக்கியேல் தேவாலயத்திலேயே அருவருப்பான தரிசனத்தைக் கண்டார்; பெரியவர்கள் தேவாலயத்தில் சிலை வழிபாடு செய்து கொண்டிருந்தனர். அதற்கு பதிலளிக்கும் விதமாக, ஆறு மரணதண்டனை அளிப்பவர்களுக்கு ஜனங்களை , "கொலையுண்டவர்களாலே நிரப்பவும்" தேவன் கட்டளையிட்டார்.*[316] *தேவனுடைய மகிமை ஆலயத்தை விட்டு வெளியேறுவதை எசேக்கியேல் பார்த்தார். இந்த பகுதி (எசேக்கியேல் 10-11) எரேமியாவின் (எரேமியா 7) தேவாலயத்தின் நியாயத்தீர்ப்பு செய்தியடங்கிய தேவாலய பிரசங்கத்திற்கு இணையாக உள்ளது.*

*எசேக்கியேல் எருசலேமின் வீழ்ச்சியை முன்னறிவிக்கும் தொடர் பிரசங்கங்களையும் உவமைகளையும் வழங்கினார். எசேக்கியேலின் மனைவியின் மரணத்துடன் நியாயத்தீர்ப்பின் செய்திகள் உச்சக்கட்டத்தை அடைந்தன. துக்கத்தை வெளியில் காட்ட வேண்டாம் என்று எசேக்கியேலுக்கு தேவன் கட்டளையிட்டார். அவர் ஏன் தனது மனைவியின் மரணத்திற்கு துக்கம் காட்டவில்லை என்று ஜனங்கள் கேட்டபோது, எசேக்கியேல் அவர்களிடம், எருசலேம் அத்தகைய பயங்கரத்தை அனுபவிக்கும் என்றும் தப்பிப்பிழைத்தவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களுக்காக துக்க சடங்குகளைக் கூட கடைப்பிடிக்க முடியாது என்றும் சொன்னார்.*[317]

## *அந்நியதேசங்கள் மீதான நியாயத்தீர்ப்பு (எசேக்கியேல் 25–32)*

*தீர்க்கதரிசன புத்தகங்களில் ஒரு முக்கியமான கருப்பொருள் அனைத்து நாடுகளின் மீதுள்ள தேவனுடைய இறையாண்மை. இஸ்ரவேலின் அண்டை நாடுகளின் பொய்க்கடவுள்களைப் போல, யேகோவா ஒரு உள்ளூர் தெய்வம் அல்ல. எல்லா*

---

[316] *எசேக்கியேல் 9:7*

[317] *எசேக்கியேல் 24:15-27*

ஜனங்கள் மீதும் தேவனுடைய இறையாண்மையை வெளிப் படுத்தி, அம்மோன், மோவாப்,ஏதோம், பெலிஸ்தியா, தீரு, சீதோன் மற்றும் எகிப்துக்கு எதிராக எசேக்கியேல் நியாயத் தீர்ப்புகளை வழங்கினார். இஸ்ரவேலின் சத்துருக்கள் "நான் அதிலே நியாயத்தீர்ப்புகளைச் செய்து, அதிலே பரிசுத்தரென்று விளங்கும்போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்."[318]

## இஸ்ரேலின் மீட்டெடுத்தல் (எசேக்கியேல் 33–39)

எருசலேமின் வீழ்ச்சிக்குப் பிறகு, எசேக்கியேலின் செய்தி நியாயத்தீர்ப்பிலிருந்து மீட்டெடுத்தலுக்கு மாறுகிறது. தேவனுடைய நாமத்தின் நிமித்தம், அவர் ஜனங்களை மீட்டெடுப்பார்.[319] சரீரப்பிரகாரமான மீட்டெடுப்பில், தேவன் அவர்களை மீண்டும் தேசத்திற்கு கொண்டு வருவார்; ஆவிக்குரிய மீட்டெடுப்பில், தேவன் அவர்களின் இருதயங்களைப் புதுப்பிப்பார். இஸ்ரவேலை தண்ணீரால் சுத்தப்படுத்துவதாகவும் (வெளிப்புறமாக அவர்களை தூய்மையாக்குவதாகவும்) அவர்களுக்கு ஒரு புதிய இருதயத்தையும் புதிய ஆவியையும் (உள்ளே தூய்மையாக்குவதாகவும்) தேவன் வாக்களிக்கிறார்.[320] தேவனுடைய ஆவியின் சுவாசத்தால் மீட்டெடுக்கப்பட்ட உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு பற்றிய எசேக்கியேலின் தரிசனத்தில் இஸ்ரவேலின் புதிய வாழ்க்கை சித்தரிக்கப்படுகிறது.

## இஸ்ரவேலின் புதிய தேவாலயம் (எசேக்கியேல் 40–48)

எசேக்கியேல் ஒரு தரிசனத்துடன் தனது புத்தகத்தை நிறைவு செய்கிறார், அது படிக்க பெரும் ஆர்வத்தைத் தூண்டுகிறது, ஆனால் விளக்குவது கடினம். தேவன் எசேக்கியேலை ஒரு உயரமான மலைக்கு அழைத்துச் சென்று அவருக்கு ஒரு புதிய தேவாலயத்தின் தரிசனத்தைக் காட்டினார். எசேக்கியேல் ஒரு புதிய தேவாலயம், பலிபீடம் மற்றும் பலிகள், தேசங்களுக்கு குணமடைய தேவாலயத்திலிருந்து ஓடும் நதி, மீட்டெடுக்கப்பட்ட தேசத்தின் கோத்திர எல்லைகள் மற்றும் எருசலேமின்

---

[318] எசேக்கியேல் 28:22

[319] எசேக்கியேல் 36:16-23

[320] எசேக்கியேல் 36:24-25. வெளிப்புறத் தூய்மைக்காக தண்ணீரால் சுத்தப் படுத்துவது எண்ணாகமம் 19:19-21ஐக் குறிக்கிறது. யோவான் 3:5ல், இயேசு நிக்கொதேமுவுடனான உரையாடலில் இந்த மொழியைப் பயன்படுத் துகிறார்.

பன்னிரண்டு வாயில்கள் ஆகியவற்றைக்கண்டார். மிக முக்கியமாக, எசேக்கியேல் எருசலேமுக்கு தேவனுடைய மகிமை திரும்புவதையும் கண்டார்.[321]

இந்த தரிசனத்தின் துல்லியமான அர்த்தம் குறித்து வேதாகம விளக்கவுரையாளர்கள் ஒருமனதாய் உடன்படவில்லை. வேதாகமத்தின் சத்தியத்துக்கு உறுதிபூண்டுள்ள தெய்வபயமுள்ள கிறிஸ்தவர்கள் தரிசனத்தின் விவரங்களைப் பற்றி உடன்படாத நிலையில், இந்த தரிசனத்தின் பொருளைப் பற்றி நம்முடன் வேறுபடக்கூடிய விசுவாசிகளோடு நாம் அன்புள்ளவர்களாய் இருக்க வேண்டும். தரிசனத்தை விளக்குவதற்கான சில தெரிவுகள் பின்வருமாறு:

1. யூதா எருசலேமுக்குத் திரும்பிய பிறகு தேவாலயம் மீண்டும் கட்டப்படும் என்கிற வாக்குறுதியாக சிலர் இந்தத் தரிசனத்தைப் பார்க்கிறார்கள். இந்தக் கண்ணோட்டத்தில், தேவன் எசேக்கியேலுக்குக் காண்பித்த அனைத்தையும் ஜனங்களின் அற்ப விசுவாசமானது அவற்றை அடைவதிலிருந்து அவர்களைத் தடைசெய்தது.
2. சிலர் இந்த தரிசனத்தை பூமிக்குரிய ஆயிரமாண்டு அரசாட்சியின் சித்திரமாக பார்க்கிறார்கள். இந்தக் கண்ணோட்டத்தில், பூமியில் கிறிஸ்துவின் ஆயிரம் வருட ஆட்சியின்போது, தேவாலயம் மீண்டும் கட்டப்பட்டு, கிறிஸ்துவின் பாவநிவாரணமரணத்தை நினைவூட்டும் பலிகள் மீட்டெடுக்கப்படும்.
3. சிலர் இந்த தரிசனத்தை இன்று தேவாலயத்தின் மூலம் தேவனுடைய கிரியையின் சித்திரமாகப் பார்க்கிறார்கள். இந்த பார்வையில், தேவன் தேவாலயத்தின் மூலம் தனது வாக்குறுதியை நிறைவேற்றுகிறார்.
4. சிலர் இந்தத் தரிசனத்தை, புதிய வானம் மற்றும் புதிய பூமியில் தம்முடைய ஜனங்களிடையே தேவன் இருப்பதற்கான உருவகமாகப் பார்க்கிறார்கள். இந்த பார்வையில், தேவாலயமும் பலிகளும்

[321] எசேக்கியேல் 11-ல் தேவனுடைய மகிமை புறப்படுகிறது; அது எசேக்கியேல் 43-ல் திரும்புகிறது

பரலோகத்தின் ஆராதனையின் ஒரு சித்திரம் மட்டுமே; அவைகள் நடைமுறையில் இருக்கப்போவதில்லை .

5. இறுதியாக, சிலர் தரிசனத்தை நேரடியான மற்றும் உருவகக் கூறுகளைக் கொண்டிருப்பதாகக் காண்கிறார்கள். இந்த பார்வையில், எசேக்கியேல் 40-48 மக்கள் எருசலேமுக்குத் திரும்பியதில் ஓரளவு நிறைவேறியது; கடைசி நாட்களில் அப்பகுதி முழுமையாக நிறைவேறும்.

**எசேக்கியேல் புத்தகத்தின் தீர்க்கதரிசன நடை**

எசேக்கியேலின் மிகவும் கவர்ச்சிகரமான அம்சங்களில் ஒன்று, தேவனுடைய செய்தியைக் கேட்போருக்குத் தெரிவிக்கும் தீர்க்கதரிசியின் பாணி. புத்தகத்தைப் புரிந்துகொள்வதற்கு எசேக்கியேலின் தீர்க்கதரிசனங்களின் இரண்டு அம்சங்கள் முக்கியமானவை: எசேக்கியேலின் நாடகமுறைப் பயன்பாடு மற்றும் அவருடைய தரிசனங்கள்.

எசேக்கியேல் தனது செய்திகளில் சிலவற்றை நடித்துக் காட்டுமாறு தேவனால் கட்டளையிடப்பட்டார். அவர் ஒரு களிமண்ணாலானசெங்கல்லில் "எருசலேம்" என்ற பெயரை எழுதி, நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றுகையிட்டதை தீர்க்கதரிசனம் கூற செங்கல்லை முற்றுகையிடுகிறார்.[322] இஸ்ர வேலின் அக்கிரமத்துக்கு அடையாளமாக அவர் 390 நாட்கள் இடது பக்கத்தில் படுத்துக்கொண்டார்; யூதாவின் அக்கிரமத் துக்கு அடையாளமாக நாற்பது நாட்கள் அவர் வலது பக்கத்தில் படுத்துக்கொண்டார்.[323]

எசேக்கியேல் தலையை மொட்டையடித்து, முடியை பகுதிகளாகப் பிரிக்கிறார். 1/3 பகுதி எரிக்கப்பட்டது, எருசலேமில் நெருப்பைக் குறிக்கிறது; 1/3 பகுதி வாளால் துண்டு துண்டாக வெட்டப்பட்டது, போரில் ஏற்படும் மரணத்தைகுறிக்கிறது; 1/3 பகுதி காற்றில் வீசப்படுகிறது, இது நாடுகடத்தப்பட்ட யூதர்களின் சிதறடித்தலைக் குறிக்கிறது. தேவன் எசேக்கியேலிடம் ஒரு சில முடிகளை வைத்து அவனது இடைக்கச்சையில்

[322] எசேக்கியேல் 4:1-3

[323] எசேக்கியேல் 4:4-8

*கட்டச் சொல்கிறார்; இது எருசலேமில் எஞ்சியிருப்பவர்களைக் குறிக்கும்.*[324]

*எசேக்கியேலின் தரிசனங்களை விளக்குவது கடினமாக இருக்கலாம். சில வாசகர்கள் தரிசனங்களின் விவரங்களால் மிகவும் ஈர்க்கப்படுகிறார்கள், அவர்கள் ஒட்டுமொத்த செய்தியையும் இழக்கிறார்கள். எசேக்கியேல் பயன்படுத்தும் மொழி, தான் பார்த்தவற்றின் சரியான அடையாளக்குறியீடுகளைக் கூற அவர் முயற்சிக்கவில்லை என்பதைக் காட்டுகிறது; பதினைந்து முறை அவர் ஏதோவொன்றின் "உருவத்தை" குறிப்பிடுகிறார் மற்றும் மூன்று முறை "அது இருந்தபடியே" என்று விவரிக்கிறார். மனித வர்ணனைக்கு அப்பாற்பட்ட ஒன்றை விவரிக்க மனித மொழியைப் பயன்படுத்துகிறார்.*

*எசேக்கியேலின் தரிசனங்களின் ஒவ்வொரு விவரத்தையும் நாம் புரிந்து கொள்ளாவிட்டாலும், ஒட்டுமொத்த செய்தி தெளிவாக உள்ளது: தேவன் தம் ஜனங்களின் பாவத்திற்காக அவர்களை நியாயந்தீர்ப்பார். பின்னர், நியாயத்தீர்ப்பு நிறைவேற்றப்பட்ட பிறகு, தேவன் தம் ஜனங்களை மீட்டெடுப்பார். அவருடைய மகிமை மீண்டும் அவருடைய ஜனங்களுக்குள்ளே நிலைத்திருக்கும்.*

## ***தானியேல் புத்தகத்தின் பின்னணி***

### ***தானியேல் புத்தகத்தின் வரலாற்றுக் கட்டமைப்பு***

*கி.மு. 605-ல் யூதாவிலிருந்து நாடுகடத்தப்பட்டவர்களின் முதல் குழுவுடன் தானியேல் பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஒருவேளை அந்த நேரத்தில் ஒரு வாலிபனாக இருந்தவர் , பாபிலோனில் ஒரு தீர்க்கதரிசியாக தனது நீண்ட ஆயுளைக்கழித்தார். கி.மு.536 வரையிலான நிகழ்வுகளை தானியேல் புத்தகம் பதிவு செய்கிறது, இது பெர்சியாவின் மீது கோரேசு ராஜாவின் ஆட்சியின் மூன்றாம் ஆண்டாகும்.*[325] *யூதாவின் வீழ்ச்சியையும், பாபிலோனியப் பேரரசின் வீழ்ச்சியையும், பெர்சியப் பேரரசின் எழுச்சியையும் தானியேல் நேரடியாகக் கண்டார்.*

---

[324] *எசேக்கியேல் 5:1-12*

[325] *தானியேல் 10:1*

| தானியேல் புத்தகத்தின் ஓர் சுருக்கப்பார்வை | |
|---|---|
| **எழுதியவர்** | *தானியேல்* |
| **செய்திபெற்றவர்** | *எல்லா காலங்களிலும் உள்ள தேவனுடைய ஜனங்கள்* |
| **எழுதப்பட்ட காலம்** | *சுமார். கி.மு. 605-536* |
| **கருப்பொருள்** | *தேவனுடைய ராஜ்யம்* |
| **நோக்கம்** | *தேவனுக்கு உண்மையாக இருப்பதைக் காட்டுதல் (தானியேல் 1-6)* |
| | *வரலாற்றின் மேல் தேவனுடையஇறையாண்மையைக் காட்டுதல் (தானியேல் 7-12)* |
| **தானியேல் புத்தகத்தில் சுவிசேஷம்** | *தேவனுடைய வெற்றியின் வாக்குறுதி கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் பகுதி நிறைவேற்றப்படுகிறது.* |
| | *கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் இந்த வாக்குறுதி முழுமையாக நிறைவேறும்.* |

*தானியேல் என்ற பெயர் "தேவன் என் நியாயாதிபதி" என்று பொருள்படும், இது உலகம் முழுவதும் தேவனுடைய இறையாண்மை பற்றிய செய்தியைப் பிரசங்கித்த ஒரு தீர்க்கதரிசிக்கு பொருத்தமான பெயர். தேவன் உலகின் நியாயாதிபதி என்று தானியேல் காட்டுகிறார். தேவன் தனது நோக்கத்தை வரலாற்றில் நிறைவேற்றுவார்.*

## நோக்கம்

*அடக்குமுறை மற்றும் கொந்தளிப்புள்ள காலத்தில் எழுதுகையில், தானியேல் இரண்டு முக்கியமான சத்தியங் களைத் தெரிவிக்கிறார்: தேவனுக்கு விசுவாசமாக இருப்பதன் முக்கியத்துவம் மற்றும் மனித வரலாற்றின் மீது தேவனுடைய இறையாண்மையின் உண்மை. தற்போதைய சூழ்நிலைகள் இருந்தபோதிலும், தேவன் இறுதியில் தம் ஜனங்களை நியாயம் விசாரிப்பார். இஸ்ரவேலின் சரித்திரம் மட்டுமல்ல, உலக சரித்திரம் அனைத்தும் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற் றுவதாக தானியேல் காண்பிக்கிறார்.*

# தானியேல் புத்தகத்தின் கண்ணோட்டம்

## தானியேல் புத்தகத்தின் கட்டமைப்பு

### *பாபிலோனிய மன்றத்தில் விசுவாசம்(தானியேல் 1–6)*

*தானியேல் மற்றும் அவரது மூன்று நண்பர்களின் கதைகள் நாடுகடத்தப்பட்ட காலத்தில் விசுவாசமாக இருந்ததன் மாதிரி களை வழங்குகின்றன. புறமத உலகிலும் விசுவாசமாக இருப் பது சாத்தியம் என்பதை அவை காட்டுகின்றன.*

*தானியேலின் ஆரம்ப வாக்கியங்கள் தேவனுடைய இறையாண் மையின் கருப்பொருளை நிறுவுகின்றன:*

> *யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமின் ஆட்சியின் மூன்றாம் ஆண்டில், பாபிலோனின் ராஜாவாகிய நேபு காத்நேச்சார் எருசலேமுக்கு வந்து அதை முற்றுகை யிட்டான். கர்த்தர் யூதாவின் ராஜாவாகிய யோயாக் கீமையும், தேவனுடைய ஆலயத்தின் சில பாத்திரங் களையும் அவன் கையில் ஒப்புக்கொடுத்தார்.*[326]

*நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றுகையிட்டார்; ஆனால் கர்த்தர்தான் "யூதாவின் ராஜாவை நேபுகாத்நேச்சாரின் கையில் ஒப்புக்கொடுத்தார்." தேவனே பாபிலோனுக்கு வெற்றியைக் கொடுத்தவர்.*

*தேவன் இறையாண்மையுள்ளவர் என்பதால், தேவனுடைய எதிரிகள் கட்டுப்பாட்டில் இருப்பதாகத் தோன்றும் சமயங் களிலும் தேவனுடைய ஜனங்கள் அவருக்கு உண்மையாக இருக்க வேண்டும். தானியேல் புத்தகம் தேவனுக்கு உண்மை யாக இருப்பதை தொடர் உவமைகளின் மூலம் நிரூபிக்கிறது:*

- *தானியேலும் அவருடைய நண்பர்களும் பாபிலோனிய பழக்கவழக்கங்களால் "தங்களைத் தீட்டுப்படுத்தலாகா தென்று" மறுக்கிறார்கள். தேவன் ஒரு புறமத ராஜா (தானியேல் 1) அவர்களுக்கு தயவைக் காண்பிப்பதன் மூலம் அவர்களின் விசுவாசத்தைக் கனப்படுத்துகிறார்.*

---

[326]*தானியேல் 1:1-2*

- நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தின் விளக்கத்தைத் தானியேலுக்கு தேவன் கொடுக்கிறார். தேவன் தானியே லையும் அவனது நண்பர்களையும் பாபிலோனில் செல்வாக்குள்ள நிலைக்கு உயர்த்துகிறார் (தானியேல்2).
- தானியேலின் நண்பர்கள் ஒரு புறமத சிலைக்கு ஆராதனை செலுத்த மறுக்கிறார்கள்.[327] அக்கினி சூளை யில் தங்கள் உயிரைக் காப்பாற்றுவதன் மூலம் தேவன் அவர்களின் விசுவாசத்தை மதிக்கிறார். நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே, "தேவபுத் திரனுக்கு ஒப்பாக" (தானியேல் 3) இருப்பவரோடு உலாவுகிறதைக்கண்டு ராஜா ஆச்சரியப்படுகிறான்.
- நேபுகாத்நேச்சாரைத் தாழ்த்துவதன் மூலம் தேவன் தனது இறையாண்மையைக் காட்டுகிறார் (தானியேல்4).
- பெல்ஷாத்சாரிடமிருந்து ராஜ்யத்தை எடுத்து மேதிய னாகிய தரியுவுக்குக் கொடுப்பதன் மூலம் தேவன் தனது இறையாண்மையைக் காட்டுகிறார் (தானியேல்5).
- தானியேல் தேவனுக்கு விசுவாசமாக இருந்ததற்காக சிங் கத்தின் குகைக்குள் தள்ளப்படும்போது, தேவன் அவரை உறுதியான மரணத்திலிருந்து விடுவிக்கிறார் (தானியேல் 6).

இவை வெறும் சிறுவர் கதைகள் அல்ல; அவை எல்லாச் சூழ்நிலைகளிலும் விசுவாசமாக இருப்பதற்கான சக்திவாய்ந்த எடுத்துக்காட்டுகளை வழங்குகின்றன. தானியேலும் அவரு டைய நண்பர்களும் கடவுளுக்கு உண்மையாக இருந்தபோது, கடவுள் அவர்களுக்கு உண்மையாக இருந்தார்.

### தேவனுடைய இறையாண்மையின் தரிசனங்கள்(தானியேல் 7–12)

இந்த பகுதி புத்தகத்தின் முதல் பாதியுடன் கவனமாக இணைக் கப்பட்டுள்ளது. இரண்டு பிரிவுகளும் மொழியால் இணைக்கப் பட்டுள்ளன (அதிகாரங்கள் 2-7 அராமிய மொழியில் உள்ளன, எபிரேய மொழியில் அல்ல). இரண்டு பிரிவுகளும் தேவனு

[327] சிலையைக் கும்பிடும் கட்டளை பிறப்பிக்கப்பட்டபோது தானியேல் அங்கு இல்லை என்று கருதலாம்.

டைய இறையாண்மையின் கருப்பொருளை மையமாகக் கொண்டு இணைக்கப்பட்டுள்ளன.

மனித வரலாற்றின் மீது தேவனுடைய இறையாண்மைக்கு சாட்சியமளிக்கும் தரிசனங்களைத் தானியேல் காண்கிறார். தேவன் வெறுமனே யூதர்களின் தேவன் என்றல்ல; மாறாகஅவர் சர்வபூமியின் தேவன்.

தானியேல் 7-12 இல் உள்ள தரிசனங்கள் காலவரிசைப்படி இல்லை. அதற்கு பதிலாக, அவை ஒரே பொருளை பல முறை கொண்டிருக்கின்றன. 7-12 அதிகாரங்கள் ஒரு சுழல் படிக்கட்டு போன்றது என்று ஒரு எழுத்தாளர் கூறுகிறார்; ஒவ்வொரு அதிகாரமும், மனித வரலாற்றில் தேவனுடைய கிரியையைப் பற்றிய தெளிவான பார்வையை அளித்து, நம்மை ஒரு உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருகிறது.[328]

*நான்கு மிருகங்களின் தரிசனம் (தானியேல் 7)*

சமுத்திரத்தில் இருந்து எழும் நான்கு பெரிய மிருகங்கள் அவரது சிங்காசனத்தில் உள்ள நீண்ட ஆயுசுள்ளவரின் மகிமையுடன் வேறுபடுகின்றன. மிகவும் பயங்கரமானது நான்காவது மிருகம்; அது பத்து கொம்புகளையும் இரும்புப் பற்களையும் கொண்டிருந்தது, மற்ற மிருகங்களிலிருந்து எஞ்சியிருந்த எதையும் அது தின்றுவிடும். மிருகங்கள் தோற்கடிக்கப்பட்ட பிறகு, மனுஷகுமாரனுக்கு நீண்ட ஆயுசுள்ளவரிடமிருந்து மகிமையும் அதிகாரமும் வழங்கப்பட்டது.

தானியேல் விளக்கம் கேட்டபோது, நான்கு பெரிய மிருகங்கள் பூமியிலிருந்து எழும் நான்கு ராஜ்யங்கள் என்று அவரிடம் கூறப்பட்டது. நான்காவது ராஜ்யம் மற்றவர்களை விழுங்கும். பத்து கொம்புகள் இந்த நான்காவது ராஜ்யத்திலிருந்து வரும் பத்து ராஜாக்கள். சிறியவன் மூன்று அரசர்களை அடக்கி, உன்னதமானவருக்கு எதிராகப் பேசுவான். அவன் பரிசுத்தவான்களை "மூன்றரை ஆண்டு காலம்" எதிர்ப்பான், அதன் பிறகு பரிசுத்தவான்கள் நித்திய ராஜ்யத்தில் வாழ்வார்கள்.

---

[328] D.A. Carson and Donald Guthrie. *New Bible Commentary.* (Downers Grove: InterVarsity Press, 1994).

*ஆட்டுக்கடா மற்றும் வெள்ளாட்டுக்கடாவின் தரிசனம் (தானியேல் 8)*

இந்தத் தரிசனத்தில், இரண்டு கொம்புகளைக் கொண்ட ஒரு ஆட்டுக்கடா (ஒன்று மற்றொன்றைவிடப் பெரியது) எல்லாம் வல்லதாய் இருந்தது. ஒரு மையக்கொம்புடன் ஒரு வெள்ளாட்டுக்கடா ஆட்டுக்கடாவை வென்றது, ஆனால் அதன் கொம்பு உடைக்கப்பட்டு நான்கு சிறிய கொம்புகளால் மாற்றப்பட்டது. இவற்றில் ஒன்றிலிருந்து ஒரு பெரிய கொம்பு வளர்ந்தது, அது வானத்தை எட்டியது. அது சில விண்மீன்களை பூமிக்கு எறிந்து, அவற்றை மிதித்து, தன்னை ஒரு பிரபுவாக அமைத்துக் கொண்டது. இரண்டு கொம்புகள் கொண்ட ஆட்டுக்கடா மேதியா மற்றும் பெர்சியாவின் ராஜாக்களைக் குறிக்கிறது என்று காபிரியேல் தானியேலுக்கு விளக்கினார். வெள்ளாட்டுக்கடா கிரேக்க ராஜ்யம்; பெரிய கொம்பு அதன் ராஜா; சிறிய கொம்புகள் கிரேக்க ராஜ்யத்தில் இருந்து எழும் சிறிய ராஜ்யங்கள்; வானங்கள் வரை வளர்ந்த கொம்பு பரிசுத்த ஜனங்களை அழிக்கும் ஒரு பொல்லாத ராஜா. இந்த ராஜா அழிக்கப்படுவான், ஆனால் அது மனித சக்தியால் அல்ல.

*எழுபது வாரங்களின் தரிசனம் (தானியேல் 9)*

துன்பப்படும் யூதர்களுக்காக தானியேல் பரிந்து பேசுகையில், காபிரியேல் அவனிடம் இஸ்ரவேல் அவர்களின் பாவங்களுக்காக எழுபது ஏழுகள் ஆண்டுகள் துன்பப்பட வேண்டும் என்று கூறினான். பின்னர் அவர்கள் எருசலேமை மீண்டும் கட்டியெழுப்புவார்கள் மற்றும் அபிஷேகம் பண்ணப்பட்டவர் தோன்றும் வரை அறுபத்தொன்பது ஏழுகள் காத்திருப்பார்கள். மற்றொரு ராஜா எருசலேமை அழித்து, இஸ்ரவேலுடன் ஒரு வார உடன்படிக்கை செய்து, முடிவில் அவன்மீது ஊற்றப்படும் வரை பாழாக்கும் அருவருப்பை ஏற்படுத்துவான்.

*இஸ்ரவேலின் எதிர்கால தரிசனங்கள்(தானியேல் 10–11)*

சணல் வஸ்திரந்தரித்து, தமது அரையில் ஊப்பாசின் தங்கக்கச்சையைக் கட்டிக்கொண்டிருக்கிற ஒரு புருஷனைக் கண்டேன். அவருடைய சரீரம் படிகப்பச்சையைப் போலவும், அவருடைய முகம் மின்னனலின் பிரகாசத்தைப்போலவும், அவருடைய கண்கள் எரிகிற தீபங்களைப்போலவும், அவரு

டைய புயங்களும் அவருடைய கால்களும் துலக்கப்பட்ட வெண்கல நிறத்தைப்போலவும் உள்ளவரை தானியேல் கண்டான். மூன்று ராஜாக்கள் பெர்சியாவில் தோன்றுவார்கள் என்றும் அடுத்து வரும் நான்காவது ராஜா கிரேக்கு ராஜ்யத்திற்கு எதிரான போரை வழிநடத்துவான் என்றும் ஒரு தூதன் தானியேலிடம் கூறினான். ஒரு வலிமைமிக்க அரசன் தோன்றிய பிறகு, அவனுடைய ராஜ்யம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்படும். தெற்கு மற்றும் வடக்கு ராஜாக்களுக்கு இடையிலான போரில் வடக்கு தேசத்தின் ராஜா அதிகாரம் பெறுவதுடன் முடிவடையும். அவன் விசுவாசிகளைத் துன்புறுத்துவான் மற்றும் "பாழாக்கப்படும்அருவருப்பை" ஏற்படுத்துவான்.

*தானியேல் தரிசனங்களின் நிறைவு (தானியேல் 12)*

இறுதியில், தூதன் மீகாவேல் புத்தகத்தில் பெயர் எழுதப்பட்ட அனைவரையும் விடுவிப்பதற்காக பெரும் உபத்திரவத்தின் போது எழும்புவான். இது ஒரு "காலம், காலங்கள் மற்றும் அரை காலத்திற்கு" பிறகு சம்பவிக்கும்.[329]பாழாக்கும் அருவருப்பு முடிந்து 1,290 நாட்கள் ஆகும் என்று தேவதூதன் அவனிடம் சொன்னான்.

## தானியேலின் தரிசனங்களில் சாம்ராஜ்யங்கள்

தானியேலின் தரிசனங்களில் சாம்ராஜ்யங்களின் பொதுவான புரிதல் கீழே உள்ள அட்டவணையில் காணப்படுகிறது.

| **தானியேலின் தரிசனங்களில் சாம்ராஜ்யங்கள்** | | | |
|---|---|---|---|
| **ராஜ்யம்** | **தானியேல் 2-லுள்ள சிலை** | **தானியேல் 7-லுள்ள மிருகம்** | **தானியேல் 8-லுள்ள மிருகங்கள்** |
| **பாபிலோன்** | பசும்பொன்னினால் ஆன தலை | கழுகின் செட்டைகள் உண்டாயிருந்த சிங்கத்தைப் போன்ற மிருகம் | |
| **மேதிய-பெர்சியா** | வெள்ளியினால் ஆன மார்பு மற்றும் | கரடிக்கு ஒப்பான மிருகம் | இரண்டு கொம்புகளுள்ள ஒரு ஆட்டுக்கடா |

[329]தானியேல் 12:7

| | | | |
|---|---|---|---|
| | புயங்கள் | | |
| **கிரீஸ்** | வெண்கலத்தால் ஆன வயிறு மற்றும் தொடை | நான்கு செட்டைகளும் நான்கு தலைகளும் கொண்ட சிவிங்கியைப் போன்ற மிருகம் | ஒரு பெரிய கொம்பு, நான்கு கொம்புகள் மற்றும் சிறிய கொம்பு கொண்ட வெள்ளாட்டுக்கடா |
| **ரோம்** | இரும்பினால் ஆன கால்கள், இரும்பு மற்றும் களிமண்ணால் ஆன பாதங்கள் | பத்து கொம்புகளும் சிறிய கொம்பும் கொண்ட வேற்றுருவமாயிருந்த மிருகம் | |
| **தேவனுடைய ராஜ்யம்** | பெரிய பர்வதமாக பூமியெல்லாம் நிரப்பியகல் | மேசியாவும்பரிசுத்தவான்களும் ராஜ்யத்தைப் பெறுகிறார்கள் | |

## தானியேலில் உள்ள கருப்பொருள்கள்

*தானியேலின் தரிசனங்களின் விவரங்களைப் பற்றி அறிஞர்கள் உடன்படவில்லை என்றாலும், புத்தகம் முழுவதும் மூன்று கருப்பொருள்கள் காணப்படுகின்றன.*

### *தேவனுடைய இறையாண்மை*

*1-6வரையிலுள்ள அதிகாரங்களில் தேவனுடைய பாதுகாப்பைப் பற்றிய கதைகள் மற்றும் 7-12 வரையிலுள்ள அதிகாரங்களின் தரிசனங்கள் மூலம், தானியேல் தேவன் எருசலேமின் மீது மட்டுமல்ல, முழு உலகத்தின்மீதும் இறையாண்மையுள்ளவர் என்பதைக் காட்டினார். அந்நிய தேசத்தில் வாழும் நாடுகடத் தப்பட்டவர்களுக்கு, இது ஒரு சக்திவாய்ந்த செய்தி. நேபுகாத் நேச்சாருக்கு யூதாவைக் கொடுத்த தேவனுடைய இறையாண் மைக்கான தொடக்க சாட்சியிலிருந்து, தனது ஜனங்களுக்கு நித்திய ராஜ்யத்தை நிறுவும் நீண்ட ஆயுசுள்ளவரின் தீர்க்கதரிசன உருவங்கள் மூலம், தானியேல் தேவன் மனித வரலாற்றின் பொறுப்பாளர் என்பதைக் காட்டுகிறார்.*

### *மனிதகுலத்தின் பெருமை*

*தேவன் விசுவாசமுள்ளவர்களைக் காப்பாற்றுகிறார், பெருமையுள்ளவர்களை நியாயந்தீர்க்கிறார் என்று தானியேல் கற்பிக்கிறார். 1-6வரையிலுள்ள அதிகாரங்களில், பாபிலோனின் ராஜாக்கள் தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் எதிராக தங்களை நிலைநிறுத்துகிறார்கள். நேபுகாத்நேச்சாரின் தாழ்த்தப்பட்ட அவமானத்தின் கதைகள் (தானியேல் 4) மற்றும் பெல்ஷாத்சார் மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்பு (தானியேல்5) ஆகியவை தேவன் பெருமையுள்ளவர்களைத்தாழ்த்துகிறார் என்பதைக் காட்டுகின்றன.*[330]

*7-12வரையிலுள்ள அதிகாரங்களில், தொடர்ந்து பல உலகத் தலைவர்கள் தேவனுடைய நோக்கங்களை எதிர்க்கிறார்கள். இவை ஒவ்வொன்றும் முடிவில் தோற்கடிக்கப்படுகின்றன. நீண்ட ஆயுசுள்ளவரும் மனுஷகுமாரனும் இந்த பூமிக்குரிய ராஜாக்களை மாற்றுகிறார்கள். தானியேலின் இறுதி அதிகாரங்களில், பரலோகத்தின் சேனைகள் தேவனுடைய எதிரிகளை நசுக்குகின்றன.*

### *தேவனுடைய ஜனங்களின் முடிவான வெற்றி*

*தானியேலின் தரிசனங்களில் ராஜ்யங்களை ஒருவர் எவ்வாறு விளக்கினாலும், தேவனுடைய ஜனங்களின் இறுதி வெற்றி தெளிவாக உள்ளது. தேவனுடைய நித்திய ராஜ்யத்தின் வருகையில் தாமதம் ஏற்படுவதை தானியேல் விவரிக்கிறார், இதன் போது தேவனுடைய ஜனங்கள் சோதனை மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளாக நேரிடும். இருப்பினும், விசுவாசமுள்ளவர்கள் இறுதியில் வெற்றியை அனுபவிப்பார்கள்.*

*தானியேலின் முதன்மையான செய்தி இன்று விசுவாசத்திற்கு சவாலாக உள்ளது. தேவன் மற்றும் அவரது ஜனங்கள் இறுதியில் வெற்றிப்பெறுவார்கள் எனவே, விசுவாசிகள் இன்று விசுவாசமாக வாழ வேண்டும்.*

## எசேக்கியேல் மற்றும் தானியேல் இன்று பேசுகின்றன

---

*[330]தன் தகப்பனான நேபுகாத்நேச்சாரை இவ்வளவு வியத்தகு முறையில் தாழ்த்திய தேவனுக்கு அடிபணிய மறுத்த பெல்ஷாத்சாரின் பெருமையை தானியேல் எவ்வாறு விவரிக்கிறார் என்பதைக் கவனியுங்கள் (தானியேல் 5:17-28).*

" சகலத்தின் மேலும் இறையாண்மை கொண்ட கிறிஸ்து, ''எமக்குரியது!' என்று உரிமை கோராத ஒரு சதுர அங்குலம்கூட நமது மனித வாழ்வின் முழுக் களத்திலும் இல்லை."
- ஆபிரகாம் குய்ப்பர்

*திருச்சபை சில சமயங்களில் வாழ்க்கையின் மற்ற பகுதிகளை தனியாக விட்டுவிட்டு "ஆவிக்குரிய" நாட்டங்கள் என்ற வகையில் உலகத்திலிருந்து விலகிச்செல்ல ஆசைப்பட்டது. ஆபிரகாம் குய்ப்பர் கூறி னார், "அனைத்தின் மீதும் இறையாண்மை கொண்ட கிறிஸ்து, ''என்னுடையது!' என்று உரிமை கோராத ஒரு சதுர அங்குலம்கூட நமது மனித வாழ்வின் முழுக் களத்திலும் இல்லை, '.19ஆம் நூற்றாண்டின் டச்சு அறிஞர், அரசியல்வாதி மற்றும் கிறிஸ்தவர் இதைப் புரிந்துகொண்டார். தேவன் அனைத்தின் மீதும் இறையாண்மை கொண்டவர்.*

*எசேக்கியேலின் இறுதி அதிகாரங்களும் தானியேலின் கடைசி பாதியும் மனித சரித்திரம் முழுவதும் தேவனுடைய இறையாண்மையைப் பறைசாற்றுகின்றன. தேவன் தனது நோக்கங்களைச் செய்கிறார். இது இரண்டு காரணங்களுக்காக முக்கியமானது:*

1. ***இது இந்த உலகத்தின் எதிர்ப்பை எதிர்கொள்ளும் நம்பிக் கையை அளிக்கிறது.*** *அந்நிய தேசத்தில் நாடுகடத்தப்பட் டவர்களாக, தானியேலும் எசேக்கியேலும் தேவனு டையநோக்கங்களை நிறைவேற்ற அவரை நம்பினா ர்கள். அந்த நோக்கங்களில் சில நிறைவேற்றப்படு வதைக் காண தானியேல் வாழ்ந்தார்; எசேக்கியேல் நாடுகடத்தப்பட்டதிலிருந்து திரும்பி வருவதைக் காண நீண்ட காலம் வாழவில்லை. இருப்பினும், தேவன் தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றுவார் என்பதை அவர்கள் இருவரும் அறிந்திருந்தனர். 21ஆம் நூற்றா ண்டு கிறிஸ்தவர்களாகிய நாம், தேவன் நம் உலகத்தினைத் தமதுக் கட்டுப்பாட்டில் கொண்டிருக்கிறார் என்ற நம்பிக்கையில் வாழ்கிறோம். அவருடைய நோக்கத்தை எதுவும் முறியடிக்க முடியாது.*
2. ***அன்றாட வாழ்வில் விசுவாசமாக வாழ்வதற்கான நமது பொறுப்பை நினைவூட்டுகிறது.*** *கிறிஸ்தவர்கள் அரசியல் செயல்முறை, கல்வி முறை, கலாச்சார முயற்சிகள் அல்லது வேறு எந்த செல்வாக்கு*

நிலையையும் சாத் தானுக்குவிட்டுக் கொடுக்கக்கூடாது. தேவன் நம்மை எங்கு வைத்தாலும், நாம் இறையாண்மையுள்ள தேவனு டைய பிரதிநிதிகளாக வாழ வேண்டும். எசேக்கி யேலைப் பொறுத்தவரை, அவர் நாடுகடத்தப்பட்ட போது ஒரு தீர்க்கதரிசியாக தேவனுக்கு விசுவாசமாக இருப்பதை இது குறிக்கிறது. தானியேலைப் பொறுத் தவரை, அரசாங்கத்தின் செல்வாக்கு மிக்க உறுப்பினராக அவருக்கு இருந்த விசுவாசத்தையும் அது குறிக்கிறது. தேவன் உங்களை எங்கே தமது ராஜ்யத்தில் பயன்படுத்த விரும்புகிறார்?

## முடிவுரை: புதிய ஏற்பாட்டில் எசேக்கியேல் மற்றும் தானியேல்

புதிய ஏற்பாட்டில் எசேக்கியேலுக்கு குறைந்தபட்சம் அறுபத்தைந்து குறிப்புகள் உள்ளன. இவற்றில் கிட்டத்தட்ட ஐம்பது வெளிப்படுத்துதல் புத்தகத்தில் உள்ளன.

தேவன் தீமையை வென்று உலகை ஆளுகைச் செய்வார் என்று தானியேல் உறுதியளிக்கிறார்; இன்னும் கி.மு. 538இல் யூதர்கள் எருசலேமுக்கு திரும்பியது தீமைக்குத் தோல்வியை முழுமை யாகக் கொண்டு வரவில்லை. இந்த வாக்குறுதியின் நிறைவே ற்றத்தை புதிய ஏற்பாடு காட்டுகிறது. சிலுவையில் இயேசு தீய சக்திகளைத் தோற்கடித்தார் என்று பவுல் காண்பிக்கிறார்.[331]

தானியேலின் வாக்குறுதி இறுதியில் வெளிப்படுத்தலில் நிறை வேற்றப்படுகிறது. வெளிப்படுத்துதல் புத்தகம் சாத்தானின் மீது தேவனுடைய இறுதி வெற்றியைக் காண்பிக்கிறது. தானியேல் 7-ல், சமுத்திரத்தில் இருந்து நான்கு மிருகங்கள் எழுகின்றன; வெளிப்படுத்துதல் 13இல், ஒரு மிருகம் சமுத்திரத்தில் இருந்து எழுகிறது. வெளிப்படுத்துதல் 19:11-21இல், இயேசு தீய சக்தி களைத் தோற்கடிக்கும் தெய்வீக போர்வீரராக இருக்கிறார்.

## அப்போகாலிப்டிக் இலக்கியத்தின் ஒரு துல்லியமான பார்வை

தானியேல், வெளிப்படுத்துதல் மற்றும் எசேக்கியேல் மற்றும் சகரியா புத்தகங்களின் பகுதிகள் அப்போகாலிப்டிக் இலக்கியம் என்று அழைக்கப்படுகின்றன. அப்போகாலிப்டிக் எழுத்து யூத

[331] கொலோசெயர் 1:13-15

உலகில் நன்கு அறியப்பட்டது; இந்த வடிவத்திற்கு பல வேதாகமம் அல்லாத உதாரணங்கள் உள்ளன. அப்போகாலிப்டிக் இலக்கியம் மற்ற வேதாகம எழுத்து வடிவங்களிலிருந்து வேறுபட்டது மற்றும் கவனமான விளக்கம் தேவைப்படுகிறது.

அப்போகாலிப்டிக் எழுத்து மறைக்கப்பட்ட சத்தியத்தை வெளிப்படுத்துகிறது. வேதாகம அப்போகாலிப்டிக் இலக்கியம் உலக வரலாற்றின் நிகழ்வுகளை தேவனுடைய நோக்கங்களின் வெளிச்சத்தில் பார்க்கிறது. இது குறிப்பாக காலத்தின் முடிவில் தேவனுடைய இறுதி நோக்கங்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துகிறது. பெரும்பாலான பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் மற்றும் உடன்படிக்கையின் மீது கவனம் செலுத்துகையில், தானியேல் தேவனுடைய இறுதி நோக்கங்களின் வெளிச்சத்தில் உலகப்பேரரசுகளைப் பார்க்கிறார்.

அப்போகாலிப்டிக் இலக்கியம் தீர்க்கதரிசன உண்மையை தரிசனங்கள் மூலம் சித்தரிக்கிறது. தானியேல் முப்பது தடவைகளுக்கு மேல் "தரிசனம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். தரிசனங்கள் பெரும்பாலும் ஒன்றுடன் ஒன்று மேற்கொண்டதாக இருக்கும், எனவே சரியான காலவரிசையில் வரிசையை உருவாக்குவது மிகவும் கடினம். ஒரு நிகழ்வில் மாற்றுக்கண்ணோட்டத்தை முன்வைப்பதற்காக, பல தரிசனங்கள் ஒரே நிகழ்வின் காட்சிகளை ஒன்றன்பின் ஒன்றாக வழங்கலாம். இந்த தரிசனங்கள் மூலம், தானியேல் (பின்னர் வெளிப்படுத்தல் புத்தகத்தை எழுதிய யோவான்) ஆவிக்குரிய உலகில் ஒரு தளத்தைத் திறக்கிறார். ஆவிக்குரிய உலகமும் பௌதிக உலகத்தைப் போலவே உண்மையானது என்பதை அப்போகாலிப்டிக் எழுத்து காட்டுகிறது.

அப்போகாலிப்டிக் இலக்கியம் சத்தியத்தைத் தெரிவிக்க வியத்தகு குறியீடுகளைப் பயன்படுத்துகிறது. தானியேல் மற்றும் வெளிப்படுத்துதல் பல அடையாளங்களைப் பகிர்ந்து கொள்கின்றன. தானியேல் மற்றும் வெளிப்படுத்துதல் இரண்டிலும், கோரமான மிருகங்கள் தீய ராஜ்யங்களைக் குறிக்கின்றன.

*மிருகங்கள் பெரும்பாலும் வெவ்வேறு இனங்களின் கலப்பின ங்கள், அவை இஸ்ரவேலுக்குஅருவருப்பானவை.*[332]

*அடக்குமுறை காலங்களில் அப்போகாலிப்டிக் எழுத்து மிகவும் முக்கியமானது. அந்தியோக்கஸ் எபிஃபேனஸின் துன்புறுத் தலின்போது தானியேல் யூதமக்களை ஊக்கப்படுத்தினார். ரோம ர்களால் திருச்சபையின் உபத்திரம் ஏற்பட்டபோது வெளிப் படுத்துதல் புத்தகம் எழுதப்பட்டது. இந்த காலங்களில், தேவன் தமது ஜனங்களின் சார்பாக போராடும் தெய்வபக்தியுள்ள போர்வீரன் என்று அப்போகாலிப்டிக் இலக்கியங்கள் காட்டு கின்றன. வேதாகமத்தின் அப்போகாலிப்டிக் எழுத்தின் முதன் மையான நோக்கம், எதிர்காலத்திற்கான தேவனுடைய திட்ட த்தில் நமது நம்பிக்கையின் காரணமாக இன்று விசுவாசத்தை ஊக்குவிப்பதாகும்.*

*அப்போகாலிப்டிக் இலக்கியங்களைப் படிப்பவர், விவரங் களில் மூழ்காமல் முக்கிய கருப்பொருள்களில் கவனம் செலுத்த வேண்டும். தானியேலில், மனித வரலாற்றின் மீது தேவனு டைய இறையாண்மை என்பது பெரிய கருப்பொருள் ஆகும். பல சாம்ராஜ்யங்கள் எதிர்த்தாலும், அவருடைய இறுதி வெற்றி நிச்சயம். தேவன் இறுதி வெற்றியைக் கொண்டுவருவார் என்று உறுதியளிப்பதன் மூலம் தானியேல் தனது வாசகர்களை விசுவாசத்தில் ஊக்கப்படுத்துகிறார்.*

## ***பாடம் 11 வீட்டுப்பாடங்கள்***

*இந்தப்பாடத்தைப் பற்றிய உங்கள் புரிதலை பின்வரும் வீட்டுப்பாடங்களின் மூலம் நிரூபிக்கவும்:*

(1) *பின்வரும் வீட்டுப்பாடங்களில்* ***ஒன்றைத்*** *தேர்ந்தெடுக்கவும்:*

*விருப்பம் 1: குழு வீட்டுப்பாடம்*

*எசேக்கியேல் 40-48 இல் புதிய தேவாலயத்தைப் பற்றிய எசேக்கியேலின் தரிசனத்தைப் படியுங்கள். உங்கள் குழுவி லுள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் இந்தப் பாடத்தில் விவாதிக்கப்பட்ட பொருள்விளக்க முறைகளில் ஒன்றை ஒதுக்க*

*[332] உதாரணமாக, தானியேல் 7-ன் முதல் மிருகம் "சிங்கத்தைப் போன்றது, கழுகுகளின் இறக்கைகள் கொண்டது."*

*வும். ஒவ்வொரு உறுப்பினரும் எசேக்கியேல் 40-48ஐப் படித்து, எசேக்கியேலின் பார்வை எவ்வாறு அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பொருள்விளக்க அணுகுமுறையுடன் விளக்கப்படுகிறது என் பதை விளக்க வேண்டும்.*

*விருப்பம் 2: தனி வீட்டுப்பாடம்*

- *புதிய தேவாலயத்தைப் பற்றிய எசேக்கியேலின் தரிச னத்தைப் பற்றி ஒரு பக்கம் (450 வார்த்தைகள்) கட்டு ரையை எழுதுங்கள். இந்தப் பாடத்தில் விவாதிக்கப்பட்ட விளக்கத்தேர்வுகளில் ஒன்றைத் தேர்ந் தெடுத்து, அந்த விளக்கத்தின் வெளிச்சத்தில் பார் வையை விளக்குங்கள்.*
- *தானியேல் 7–12-ஐ அடிப்படையாகக் கொண்ட மனித வரலாற்றிற்கான தேவனுடைய திட்டம் குறித்த பிரசங் கத்திற்கு ஒரு பக்கம் (450 வார்த்தைகள்) விரிவான பொருட்சுருக்கத்தை எழுதுங்கள்.*

(2) *இந்த பாடத்தில் ஒரு தேர்வு எழுதவும். தேர்வில் மனப்பாடம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட வேதவசனங்களும் அடங்கும்.*

## *பாடம் 11 தேர்வு*

(1) *எசேக்கியேல் என்ற பெயரின் அர்த்தம் என்ன?*

(2) *எசேக்கியேல் புத்தகத்தின் நோக்கம் என்ன?*

(3) *எரேமியாவின் தேவாலய பிரசங்கத்திற்கு எசேக்கியே லின் இணை என்ன?*

(4) *புதிய தேவாலயத்தைப் பற்றிய எசேக்கியேலின் தரிசன த்தை விளக்குவதற்கு ஏதுவான ஐந்து வேறுபட்ட கண்ணோட்டங்களைப் பட்டியலிடுக.*

(5) *எசேக்கியேல் பாபிலோனுக்கு கி.மு._________ இல் கொண்டு செல்லப்பட்டார்.*
*தானியேல் பாபிலோனுக்கு கி.மு. _________ இல் கொண்டு செல்லப்பட்டார்.*

(6) *தானியேல் புத்தகத்தில் எந்த மூன்று தலைப்புகள் மைய மாக உள்ளன?*

(7) *தானியேல் புத்தகத்தில் எந்த இரண்டு மொழிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன?*

(8) *பாரம்பரிய விளக்கத்தில், இந்த சித்திரங்கள் ஒவ்வொன்றும் எந்தப் பேரரசைக் குறிக்கின்றன?*

- *கழுகின் சிறகுகள் கொண்ட சிங்கம்*
- *கரடிப் போன்ற மிருகம்*
- *ஒரு பெரிய கொம்புடன் உள்ள வெள்ளாட்டுக் கடா*
- *இரும்பினால் கால்கள், இரும்பு மற்றும் களி மண்ணினால் பாதங்கள்*
- *பெரிய பர்வதமாகமாறும் கல்*

(9) *எந்த வேதாகமப்புத்தகங்கள் முதன்மையாகவோ அல்லது பகுதியாகவோ அப்போகாலிப்டிக் எழுத்தால் ஆனது?*

(10) *எந்த புதிய ஏற்பாட்டு புத்தகம் எசேக்கியேல் மற்றும் தானியேலை அடிக்கடி மேற்கோள் காட்டுகிறது?*

(11) *எசேக்கியேல் 36:25-27-ஐ நினைவிலிருந்து எழுதுக.*

# பாடம் 12

# சிறிய தீர்க்கதரிசிகள் 1:

# ஓசியா, யோவேல், ஆமோஸ்

## பாடத்தின்நோக்கங்கள்

*இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:*

(1) *ஓசியா, யோவேல் மற்றும் ஆமோஸ் ஆகிய புத்தகங்கள் எழுதப்பட்டக் காலம் மற்றும் வரலாற்றுக் கட்டமைப்பை அறிந்துகொள்ளுதல்.*

(2) *ஓசியா, யோவேல் மற்றும் ஆமோஸ் ஆகிய புத்தகங்களின் முதன்மைக் கருப்பொருள்களையும் நோக்கங்களையும் கோடிட்டுக்காட்டுதல்.*

(3) *சிறிய தீர்க்கதரிசிகளில் நீதியின் கருப்பொருளை அறிந்து கொள்ளுதல்.*

(4) *தேவன் தம்முடைய ஜனங்களின் துரோகத்தைப் பார்த்த போதுள்ள அவருடைய இருதயத்தை உணருதல்.*

(5) *ஓசியா, யோவேல் மற்றும் ஆமோஸ் ஆகிய புத்தகங்களின் செய்தியை இன்றைய உலகின் தேவைகளுடன் தொடர்புபடுத்துதல்.*

## இந்த பாடத்திற்கான ஆயத்தம்

*ஓசியா, யோவேல் மற்றும் ஆமோஸ் ஆகிய புத்தகங்களை வாசிக்கவும்.*
*ஓசியா 10:12;ஜோயல் 2:13;ஆமோஸ் 5:24-ஐ மனப்பாடம் செய்யவும்.*

## முன்னுரை

*பழைய ஏற்பாட்டின் கடைசி பன்னிரண்டு புத்தகங்கள் சிறிய தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்படுகின்றன. எபிரேய வேதாகமத்தில், இந்தப்புத்தகங்கள் "பன்னிரண்டு புத்தகம்" என்று அழைக்கப்படும் ஒரு சுருளில் உள்ளன.*

*சிறிய தீர்க்கதரிசிகளின் புத்தகங்கள் பெரிய தீர்க்கதரிசிகளைவிட சிறியவைகள் என்பதால், சில வாசகர்கள் இந்த புத்தகங்கள்*

*முக்கியமற்றவை என்று கருதுகின்றனர். இருப்பினும், இந்த தீர்க்கதரிசிகள் அவர்களின் செய்தி அல்லது செல்வாக்கின் அடிப்படையில் "சிறியவர்கள்" அல்ல. "சிறிய" என்பது புத்தகங் களின் அளவைக் குறிக்கிறது, செய்தியின் அளவை அல்ல. இந்த தீர்க்கதரிசிகளின் செய்தி பண்டைய இஸ்ரேல் மற்றும் யூதாவின் உலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது மற்றும் இன்றும் திருச்சபையில் தொடர்ந்து பேசுகிறது.*

| சிறிய தீர்க்கதரிசிகளின் தோராயமான காலம் | |
|---|---|
| ***கிமு 8-ஆம்நூற்றாண்டு*** | *யோனா, ஆமோஸ், ஓசியா, மீகா* |
| ***கிமு 7-ஆம்நூற்றாண்டு*** | *நாகூம், செப்பனியா, ஆபகூக்* |
| ***கிமு 6-ஆம்நூற்றாண்டு*** | *ஒபதியா, ஆகாய், சகரியா* |
| ***கிமு 5-ஆம்நூற்றாண்டு*** | *மல்கியா, யோவேல் (அநேகமாக)* |

## ஓசியா: தேவனுடைய இருதயத்தின் வேதனை

| ஓசியா புத்தகத்தின் ஒரு சுருக்கப்பார்வை | |
|---|---|
| ***எழுதியவர்*** | *ஓசியா* |
| ***செய்திபெற்றவர்*** | *வடக்கு ராஜ்யம்* |
| ***எழுதப்பட்ட காலம்*** | *8-ஆம் நூற்றாண்டின் கடைசிப்பகுதி* |
| ***கருப்பொருள்*** | *தேவனுடைய இருதயத்தின் வேதனை* |
| ***நோக்கம்*** | *இஸ்ரவேலை அதன் ஆவிக்குரிய விபச்சாரத்துடன் எதிர்கொள்ளுதல்* |
| ***ஓசியாவின் புத்தகத்தில் சுவிசேஷம்*** | *இஸ்ரவேலின் ஆவிக்குரிய விபச்சாரத்திற்கான பதில் தேவனிடமும் தாவீதின் ராஜாவிடமும் திரும்புவதாகும் (ஓசியா3:5). நித்திய ராஜாவாகிய இயேசு, தனது ஆட்சியின் கீழ் விசுவாசிகள் அனைவரையும் மீண்டும் இணைக்கும் மேசியாவின் காலத்தில் இது நடக்கும்.* |

### ஓசியா புத்தகத்தின் வரலாற்றுக் கட்டமைப்பு

*ஓசியா மற்றும் ஆமோஸ் ஆகியோர் வடக்கு ராஜ்யத்திற்கான 8-ஆம் நூற்றாண்டின் தீர்க்கதரிசிகள்.*[333]*அவர்கள் யூதாவில் ஏசாயா வின் சமகாலத்தவர்கள்.*

*கி.மு.8-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், இரண்டாம் யெரொ பெயாம் வடக்கு ராஜ்யத்தின் ராஜாவாக இருந்தான். இது இஸ்ரவேலில் செழிப்பான காலம். நாட்டிற்குள்ளே ஏற்பட்ட மோதல்களால் அசீரியாவின் அதிகாரம் தற்காலிகமாக குறைக் கப்பட்டது. இஸ்ரவேல் தனது எல்லைகளை விரிவுபடுத்தியது மற்றும் அதன் அண்டை நாடுகளுடன் வர்த்தகம் மூலம் பயனடைந்தது. தாவீது ராஜாவின் நாட்களில் இஸ்ரவேலர்கள் எவ்வளவு பிரதேசத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந் தார்களோ, அந்த அளவுக்கு இஸ்ரவேலும் யூதாவும் இப்போது தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டிருந்தனர்.*

*துரதிர்ஷ்டவசமாக, இஸ்ரவேல் பொருளாதார ரீதியாக முன்னேறினாலும், அது ஆவிக்குரிய ரீதியில் முன்னேறவில்லை. ஆவிக்குரிய ரீதியில், இஸ்ரவேல் விசுவாசத் துரோகத்திற்குள் ளாக இருந்தது; வடக்கு ராஜ்யத்தின் ஜனங்கள் யேகோவாவுடன் பாகாலையும் வணங்கினர்.*[334]

*ஓசியா இரண்டாம் யெரொபெயாமின் ஆட்சியின் பிற்பகுதியில் தனது ஊழியத்தை ஆரம்பித்திருக்கலாம். அசீரியா மீண்டும் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டது, விரைவில் டிக்லத்-பிலேசர் III இன் கீழ் ஆதிக்கம் செலுத்தும் உலகப்பேரரசாக மாறியது. சில ஆண்டுகளுக்குள், அசீரியா சமாரியாவைக் கைப்பற்றி வடக்கு ராஜ்யத்தை அழித்துவிடும் வல்லமைக்குள் வந்தது.*

---

*[333]ஓசியா இஸ்ரவேலின் வடக்கு ராஜ்யத்தை முப்பத்தைந்து முறை "எப்பிராயீம்" என்று குறிப்பிடுகிறார்..*

*[334]யேகோவா மற்றும் பிற கடவுள்களின் வழிபாட்டை ஒருங்கிணைப்பதற்கான சொல் "ஒத்திசைவு" ஆகும். யாத்திராகமம் 32 இல் பொறக்கன்றுக்குட்டியை வழிபடுவது மற்றும் சாலமோன் தனது அந்நிய தேச மனைவிகளின் தெய்வங்களை வணங்கத் தொடங்கியபோதும் இது இஸ்ரவேலுக்கு மீண்டும் மீண்டும் பிரச்சனையாக இருந்தது.*

### ஓசியா புத்தகத்தின் நோக்கம்

*இஸ்ரவேலின் ஆவிக்குரிய விபச்சாரத்திற்கு எதிராக ஓசியா பிரசங்கித்தார். அதனுடைய பாகாலின் வழிபாடு தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் கொண்டுவரும் என்று எச்சரித்தார். இஸ்ரவேலின் துரோகம் தேவனுக்கு ஏற்படுத்திய வேதனையை அவர் காண்பித்தார்.*

*► தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் இடையே உள்ள உறவை விவரிக்க வேதாகமம் அடிக்கடி திருமணத்தின் உருவகத்தைப் பயன்படுத்துகிறது. மனித திருமணம் தேவனுடைய ஜனங்களோடுள்ள உறவின் மாதிரியாக இருந்ததால், அது திருமணத்தைப் பற்றி நமக்கு என்ன கற்பிக்கிறது?*

### ஓசியாவின் கருப்பொருள்

#### *ஆவிக்குரிய விபச்சாரம்*

*வேதாகமம் முழுவதும், திருமணம் என்பது தேவனுடைய ஜனங்களோடுள்ள உறவின் ஒரு சித்திரம். திருமணம் என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே வாழ்நாள் முழுவதும் உள்ளதான உறுதிமொழி. அவ்வாறே, தேவன் இஸ்ரவேலருடன் நித்திய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். தேவனுடனான திருமணமும் உடன்படிக்கையும் பிரத்தியேகமான உறவுகள். கணவனோ மனைவியோ தங்கள் துணைக்கு ஒருபோதும் துரோகம் செய்யக் கூடாது என்பது போல, தேவனுடைய ஜனங்கள் தேவனுக்கு ஒருபோதும் துரோகம் செய்யக்கூடாது. ஓசியாவில், மற்ற காதலர்கள் பின்னாகச் சென்று விபச்சாரம் செய்த மனைவி அதே அர்த்தத்தில் இஸ்ரவேல் மற்ற கடவுள்களுடன் ஆவிக்குரிய விபச்சாரத்தில் ஈடுபட்ட குற்றவாளி என்று தேவன் காண்பித்தார்.*

*ஓசியாவின் வரைபட மொழி இஸ்ரேலின் உருவ வழிபாட்டின் தன்மைக்கு மிகவும் பொருத்தமானது. பாகால்சிரியா-பாலஸ்தீனத்தின் வானிலை கடவுள். அது மழை, விவசாயம் மற்றும் வளத்தைக் கட்டுப்படுத்துகிறது என்று நம்பப்பட்டது. புறமத கோவில்களில், ஜனங்கள் சடங்கு விபச்சாரத்துடன் பாகாலை "வழிபடுகின்றனர்". அவர்கள் பாலுணர்வூட்டும் நடத்தையால், தேசத்திற்கு வளமான விதை மற்றும் மழையை பாகால் பதிலளிப்பதாக அவர்கள் நம்பினர். வழிபாட்டு விபச்சாரி*

களுடன் இஸ்ரவேலின் பாவம் அவர்களின் ஆவிக்குரிய விபச்சாரத்தின் பிரதிபலிப்பாகும் என்பதை ஓசியாவின் சித்திரங்கள் காட்டுகின்றன.

"விபசாரத்தில் உழன்று இருந்த சோரஸ்திரீயான"கோமேரைத் திருமணம் செய்யும்படி ஓசியாவுக்கு தேவன் கட்டளையிட்டார்."[335] சில விளக்கவுரையாளர்கள் கோமேர் திருமணத்திற்கு முன்பே ஒரு வேசியாக இருந்ததாக நம்புகிறார்கள். தேவன் அத்தகைய செயலைக்கட்டளையிடுவார் என்பதை ஏற்றுக்கொள்வதில் சிரமம் இருப்பதால், பிற்காலத்தில் துரோகம் செய்த ஒரு பெண்ணை திருமணம் செய்யும்படி தேவன் ஓசியாவுக்குக் கட்டளையிட்டார் என்று மற்றவர்கள் நம்பினார்கள். இறுதியாக, கோமேர் தேசத்தின் ஆவிக்குரிய விபச்சாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிலை வழிபாடு செய்தவள் என்று சிலர் நம்புகிறார்கள். சொற்றொடரின் குறிப்பிட்ட விளக்கத்தைப் பொருட்படுத்தாமல், ஓசியாவுக்கு கோமேர் செய்த துரோகமானது, இஸ்ரவேல் யேகோவாவுக்கு செய்த துரோகத்தின் ஒரு சித்திரம்.

ஓசியாவின் பிள்ளைகளின் பெயர்கள் தீர்க்கதரிசனமானவை. அசீரியா விரைவில் இஸ்ரேலுக்கு எதிராக ஒரு பெரிய வெற்றியைப் பெறும் பள்ளத்தாக்கின் நினைவாக யெஸ்ரயேல் என்று ஒரு பிள்ளைக்கு பெயர். மற்றொரு பிள்ளைக்கு லோருகாமா என்று பெயரிடப்பட்டது. லோருகாமா என்றால் "இரக்கஞ் செய்வதில்லை" என்று அர்த்தம், ஏனென்றால் கலகக்கார தேசத்தின் மீது தேவன் இரக்கம் காட்டமாட்டார். லோகம்மீ என்பது "என் ஜனமல்ல" என்று பொருள்படும், ஏனென்றால் மற்ற கடவுள்களிடம் திரும்பிய தேசத்தை தேவன் நிராகரிப்பார்.

| ஓசியாவின் குடும்பம் | |
|---|---|
| **கோமேர்** | இஸ்ரேலின் ஆவிக்குரிய விபச்சாரத்தைக் காட்டுகிறது |
| **யெஸ்ரயேல்** | அசீரியா இஸ்ரவேலை தோற்கடிக்கும் பள்ளத்தாக்கு |

[335] ஓசியா 1:2. பழைய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதி முழுவதும், இந்த சொற்றொடர் தற்போதைய அல்லது கடந்த கால துரோகத்தை சுட்டிக்காட்டுகிறது; அது ஒருபோதும் எதிர்கால துரோகத்தை சுட்டிக்காட்டுவதில்லை. இது தேவனுடைய கட்டளையின் முதல் விளக்கத்திற்கு சில ஆதரவை வழங்குகிறது..

| | |
|---|---|
| **லோருகாமா** | *“இரக்கஞ்செய்வதில்லை”* |
| **லோகம்மீ** | *“நீங்கள் என் ஜனமல்ல”* |

*அவளுடைய துரோகம் கோமேரை ஒரு அடிமையாக அவமானகரமான விற்பனைக்கு வழிவகுத்தது, தேவன் அவளை திரும்ப வாங்கும்படி ஓசியாவிடம் கூறினார். அதுபோலவே, இஸ்ரவேலர் அவர்களது பொய்க்கடவுள்களால் கைவிடப்பட்ட பிறகு, தேவன் அவளை வீட்டிற்கு அழைத்து வருவார்.*

## ***இஸ்ரவேலுக்கு எதிரான தேவனுடைய வழக்கு***

*பாடம் 10-இல், இஸ்ரவேலரின் உடன்படிக்கைக்கு துரோகம் செய்ததற்காக தேவன் அவர்கள் மீது குற்றச்சாட்டுகளை சுமத்திய தீர்க்கதரிசன வழக்கைப் பார்த்தோம். இஸ்ரவேலுக்கு எதிராக தேவன் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும்போது ஓசியா 4-5இல் இதே மொழி பயன்படுத்தப்படுகிறது.*

*இஸ்ரவேலர்கள் உண்மையில் தேவனை அறிய மாட்டார்கள் என்று ஓசியா எச்சரிக்கிறார். எபிரேய மொழியில், "அறிவு" என்பது அறிவுசார் விழிப்புணர்வை விட அதிகம்; அது உறவின் ஒரு சொல். ஒருவரைத் தெரிந்துகொள்வது என்பது அவருடன் அனுபவபூர்வமான உறவைக்கொண்டிருப்பதாகும். இஸ்ரவேல் இனி தேவனை அறியவில்லை; அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசிகளையும் நிராகரித்தனர்; "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்."[336] அவர்கள் தேவனைப் பற்றிய தங்கள் அறிவைபாகாலின் அறிவுக்கு ஒப்பாக மாற்றினர்.*

## ***மீட்டெடுத்தலின் நம்பிக்கை***

*மற்ற தீர்க்கதரிசிகளைப் போலவே, இஸ்ரவேலர்கள் தங்கள் ஆவிக்குரிய விபச்சாரத்தை விட்டுவிட்டு யேகோவாவிடம் திரும்பினால், மீட்டெடுத்தல் வாக்குறுதியுடன் ஓசியா முடிக் கிறார். தேவன் இஸ்ரவேலை நேசித்து அவளை எகிப்திலிருந்து வெளியே கொண்டுவந்தார். இப்போது, அவளைத் தன்னிடமே மீட்டெடுக்க முயன்றார்.*

---

*[336] ஓசியா 4:6*

*ஓசியா 14-ஆம் அதிகாரம் மனந்திரும்புதலுக்கான அழைப்பையும் குணப்படுத்தும் வாக்குறுதியையும் உள்ளடக்கியது. அசீரியா தனது கூட்டாளியாக மாறும் என்று இஸ்ரவேல் நம்பினாலும், அசீரியா அதனுடைய எதிரியாக மாறும், அதனுடைய சிநேகிதன் அல்ல. இருப்பினும், இஸ்ரவேலர் மனந்திரும்பினால், "நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; அவர்களை மனப்பூர்வமாய் சிநேகிப்பேன்" என்று தேவன் வாக்குறுதி அளித்தார்.[337] தேவன் இஸ்ரவேலின் பாவத்திற்காக அவர்களை நியாயந்தீர்க்க வேண்டும், ஆனால் அவர் மீட்டெடுத்தல் நம்பிக்கையையும் வைத்திருந்தார்.*

### *புதிய ஏற்பாட்டில் ஓசியா*

*ஓசியாவின் புத்தகம் புதிய ஏற்பாட்டில் மீண்டும் மீண்டும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. எகிப்திலிருந்து இயேசு திரும்பியது ஓசியாவின் நிறைவேற்றம் என்று மத்தேயு சுட்டிக் காட்டினார்.[338] ஓசியாவின் வார்த்தைகளைப் பயன்படுத்தி, பலியை விட இரக்கம் முக்கியமானது என்பதை இயேசு தம் எதிரிகளுக்கு நினைவூட்டினார்.[339] யூதர்கள் மற்றும் புறஜாதிகள் ஆகிய இருவரையும் உள்ளடக்கிய ஒரு மக்களை தேவன் உருவாக்குகிறார் என்று கற்பிக்கும் போது பவுல் ஓசியாவை சுட்டிக்காட்டினார்.[340] தேவனைப் பற்றிய அறிவு (இஸ்ரவேல் கைவிட்ட அறிவு) விரைவில் புறஜாதிகளுக்கு வரும்.*

## *யோவேல்: கர்த்தருடைய நாள்*

| **யோவேலின் புத்தகம் ஒரு சுருக்கப்பார்வை** | |
|---|---|
| **எழுதியவர்** | யோவேல் |
| **செய்திபெற்றவர்** | யூதா |
| **எழுதப்பட்ட காலம்** | தோராயமாக கி.மு.500-450 |
| **கருப்பொருள்** | கர்த்தருடைய நாள் |
| **நோக்கம்** | வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு நாளை |

[337] *ஓசியா 14:4*
[338] *மத்தேயு 2:15; ஓசியா 11:1*
[339] *மத்தேயு 9:13; ஓசியா 6:6*
[340] *ரோமர் 9:25-26; ஓசியா 1:10-11 மற்றும் 2:23*

| | |
|---|---|
| | முன்னறிவித்தல் |
| | வரவிருக்கும் மீட்டெடுத்தல் நாளை முன்னறிவித்தல் |
| **யோவேலின் புத்தகத்தில் சுவிசேஷம்** | பெந்தெகொஸ்தே நாளில் யோவேலின் வாக்குத்தத்தம் நிறைவேறியது. |

## யோவேல் புத்தகத்தின் வரலாற்றுக் கட்டமைப்பு

*ஒரு பயங்கரமான வெட்டுக்கிளி வாதைக்குப் பிறகு யோவேல் துரிதமாக ஊழியம் செய்தார். யோவேல் இந்த இயற்கைப் பேரழிவை எதிர்கால நியாயத்தீர்ப்பு நாளான "கர்த்தருடைய நாளுக்கு" ஒரு உருவகமாகப் பயன்படுத்தினார்.*

*யோவேல் தீர்க்கதரிசியின் பெயரைத் தவிர (அதன் பொருள் "யேகோவா தேவன்") மற்றும் அவரது தகப்பன் (அவர் பெத்துவேலின் மகன்) பற்றி அதிகம் அறியப்படவில்லை.*

*புத்தகத்தின் தேதி கூட நிச்சயமற்றது; தேதியை உறுதிப்படுத்தும் நிகழ்வுகள் எதுவும் இல்லை. யோவேல் வடக்கு ராஜ்யத்தைப் பற்றியோ அல்லது யூதாவின் ராஜாவைப் பற்றியோ குறிப் பிடாததால், நாடுகடத்தப்பட்டதிலிருந்து திரும்பிய பிறகு யோவேல் பிரசங்கித்திருக்கலாம். இருப்பினும், வேதாகம அறிஞர்களிடையே இதைப் பற்றி நிறைய கருத்து வேறுபாடுகள் உள்ளன.*

## யோவேல் புத்தகத்தின் நோக்கம்

*யோவேல் யூதாவைதேவனிடம் திரும்பும்படி அழைத்தார். வெட்டுக்கிளி வாதை கீழ்ப்படியாதவர்களுக்கு வரவிருக்கும் நியாயத்தீர்ப்பின் அடையாளமாக செயல்பட்டது. இருப்பினும், விசுவாசிகளுக்கு வரவிருக்கும் மீட்டெடுத்தல் நாளையும் யோவேல் தீர்க்கதரிசனமாக கூறினார்.*

## யோவேலின் கருப்பொருள்கள்

### *ஒரு வெட்டுக்கிளி வாதை மற்றும் கர்த்தருடைய நாள் (யோவேல் 1:1–2:17)*

யோவேல் 1:2–2:17 என்பது வெட்டுக்கிளி வாதையைப்பற்றிய புலம்பலாகும். இந்த வாதை யாரும் பார்த்ததை விட மோசமாக இருந்தது; அது தேசத்தை அழித்த சேனையைப் போல இருந்தது.

வெட்டுக்கிளி கொள்ளை நோய் வரவிருக்கும் மோசமான காரியங்களின் அடையாளமாக இருந்தது. மீட்டெடுத்தலின் நேரத்திற்குப் பதிலாக, தேவனுடைய ஜனங்கள் மனந்திரும் பவில்லை என்றால், கர்த்தருடைய நாள் அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு காலமாக இருக்கும். வெளிப்புற அடையாளங் களினால் "உங்களுடைய வஸ்திரங்களை கிழித்துக்கொள்ளு வது" போதுமானதல்ல; உண்மையான மனந்திரும்புதல் இருதயத்திலிருந்து வர வேண்டும். யூதாவிடம் "இருத யங்களைக் கிழிக்க" தேவன் கட்டளையிட்டார். ஜனங்கள் தேவனிடம் திரும்பினால், "அவர் இரக்கமும், மனஉருக்கமும், நீடியசாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார்" என்று அவர்கள் கண்டு பிடிப்பார்கள்.[341]

## எதிர்காலத்திற்கான ஒரு தீர்க்கதரிசன செய்தி (யோவேல் 2:18–3:21)

நியாயத்தீர்ப்புடன், தேவன் மீட்டெடுத்தலையும் வாக்குறுதி அளித்தார். முதலில், தேவன் தேசத்தை மீட்டெடுப்பார். அவர் "வெட்டுக்கிளி தின்ற ஆண்டுகளை மீட்டெடுப்பார்."[342] பின்னர், தேவன் ஆவிக்குரிய மீட்டெடுத்தலை வாக்குறுதி அளித்தார்.

இயற்கைநிகழ்வான வெட்டுக்கிளி வாதையானது ஆவிக்குரிய பேரழிவின் அடையாளமாக இருந்தது போலவே, தேசத்தின் மீட்டெடுத்தல் வரவிருக்கும் ஆவிக்குரிய விழிப்புணர்வின் அடையாளமாக இருந்தது. சமுதாயத்தின் அனைத்து மட்டங் களிலும் உள்ள ஜனங்கள் மீது தேவன் தமது ஆவியை ஊற்றுவார்.

அந்தச் சமயத்தில், தேவனுடைய இறையாண்மையைப் பற்றி பூமி முழுவதும் தெரிந்துகொள்ளும். தேவனுடைய ஜனங்களின்

[341] யோவேல் 2:13

[342] யோவேல் 2:25

எதிரிகள் தண்டிக்கப்படுவார்கள், அதே சமயம் யூதா தேவனுடைய விசேஷ ஆசீர்வாதத்தைப் பெறும்.

### புதிய ஏற்பாட்டில் யோவேல்

தேவன் தம்முடைய ஆவியை எல்லா மாம்சத்தின் மேலும் ஊற்றுவார் என்று யோவேல் வாக்குறுதி அளித்தார். இது இஸ்ரவேலின் வரலாற்றில் அவ்வப்போது நிகழ்ந்த எழுப்புதல்களை விட மிகச்சிறப்பான எழுப்புதல். இந்த எழுப்புதல்கள் தேவனுடைய திட்டத்திலிருந்து இஸ்ரவேல் தொடர்ந்து வீழ்வதைத் தாமதப்படுத்தியன, ஆனால் அந்த எழுப்புதல்கள் நிரந்தர மாற்றங்களுக்கு பதிலாக தற்காலிகமானவை என்பதை நிரூபித்தன. கூடுதலாக, அவை இஸ்ரவேலுக்கு மட்டுமான எழுப்புதல்கள்.

தேவனுடைய ஆவி "மாம்சமான யாவர் மேலும்" ஊற்றப்படும் காலத்தை யோவேல் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். பெந்தெகொஸ்தே நாளில், யோவேலின் தீர்க்கதரிசனம் நிறைவேறுவதாக பேதுரு அறிவித்தார்.[343] மேலறையில் பரிசுத்த ஆவி பொழிந்ததைத் தொடர்ந்து, அப்போஸ்தலர்கள் நற்செய்தியை எருசலேம், யூதேயா மற்றும் சமாரியாவிற்கும், பூமியின் கடைசி எல்லைவரைக்கும் கொண்டு சென்றனர்..

இது ஒரு தற்காலிக எழுப்புதல் அல்ல. மாறாக, திருச்சபையின் ஊழியத்தின் மூலம் கர்த்தருடைய நாளின் வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படுகிறது. நாம் சுவிசேஷம் அறிவித்து சீஷராக்கும்போது, மனிதகுலத்திற்கான தேவனுடையநோக்கத்தை நிறைவேற்ற தேவனுடைய ஆவி நம் மூலம் செயல்படுகிறது என்ற உறுதியுடன் நாம் அவ்வாறு செய்கிறோம். சபையின் கிரியையின் மூலம் அவருடைய ஆவி இன்னும் எல்லா மாம்சத்தின் மேலும் ஊற்றப்படுகிறது.

## ஆமோஸ்: உண்மையான நீதிக்கான மேய்ப்பன்

| ஆமோஸ் புத்தகத்தின் ஒரு சுருக்கப்பார்வை | |
|---|---|
| **எழுதியவர்** | ஆமோஸ் |
| **செய்திபெற்றவர்** | வடக்கு ராஜ்யம் |

[343] *யோவேல் 2:28-32; அப்போஸ்தலர் 2:14-21*

| | |
|---|---|
| **எழுதப்பட்ட காலம்** | *கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் மத்தியில்* |
| **கருப்பொருள்** | *உண்மையான நீதிக்கான மேய்ப்பன்* |
| **நோக்கம்** | *தேவனிடமும் சக மனிதனிடமும் இஸ்ரவேலின் அநீதியான நடத்தையின் காரணமாக - தேவனுடைய நியாயத்தீர்ப்பை முன்னறிவித்தல்.* |
| **ஆமோஸின் புத்தகத்தில் சுவிசேஷம்** | *ஆமோஸைப் போலவே, தேவன் மீதான அன்பு (முதலாம்பிரதான கற்பனை) சக மனிதரிடம் (இரண்டாம்பிரதான கற்பனை) நாம் காட்டும் அன்பில் காண்பிக்கப்பட வேண்டும் என்று இயேசு காட்டுகிறார். யாக்கோபின் கடிதம் ஆமோஸுடன் பல கருப்பொருள்களைப் பகிர்ந்து கொள்கிறது.* |

## ஆமோஸ் புத்தகத்தின் வரலாற்று கட்டமைப்பு

*ஆமோஸ் எருசலேமுக்கு தெற்கே உள்ள தெக்கோவா என்ற சிறிய நகரத்தைச் சேர்ந்த ஆடு மேய்ப்பவன். கோடையில், மேய்ப்பர்கள் தங்கள் மந்தைகளை தாழ்வான பகுதிகளுக்கு கொண்டு சென்றனர். இந்த மாதங்களில், ஆமோஸ் அத்திப்பழம் தரும் அத்திமரங்களை வளர்த்து வந்தார்.*

*தேவன் ஆமோஸை வடக்கு ராஜ்யத்திற்குச் செல்லும்படி கட்டளையிட்டார். ஒரு மேய்ப்பனாக, ஆமோஸ் ஒரு தீர்க்க தரிசிக்கான அத்தாட்சிகளைக் கொண்டிருக்கவில்லை. இன்னும் மோசமான காரியம் என்னவென்றால், யூதாவிலிருந்து வந்த ஒரு தீர்க்கதரிசி என்பதால், ஆமோஸின் மேல் வடக்கு ராஜ்யத்தில் உள்ள ஜனங்களுக்கு நம்பிக்கை இல்லை.*[344]

*தனது செய்திக்கு எதிர்ப்பைச் சம்பாதிக்கும்வண்ணம், வடக்கு ராஜ்யம் முன்னெப்போதும் இல்லாத வகையில் பொருளாதார மற்றும் அரசியல் வெற்றியை அனுபவித்துக்கொண்டிருந்த ஒரு காலத்தில் ஆமோஸ் நியாயத்தீர்ப்புச் செய்தியைப் பிரசங் கித்தார். பல இஸ்ரவேலர்கள் செழுமை என்பது தேவனுடைய ஆசீர்வாதத்தின் அடையாளம் என்று கருதினர். அவர்களின் பார்வையில், இஸ்ரவேலில் காணக்கூடிய செழுமையால் ஆமோஸின் நியாயத்தீர்ப்புச் செய்தி செல்லாததாகிவிட்டது.*

[344] *ஆமோஸ் 7:10-13*

இருப்பினும், ஆமோஸ் தேவனுடைய அழைப்புக்கு உண்மை யாக இருந்தார், நியாயத்தீர்ப்பின் செய்தியைக் கொண்டு வந்தார்.

## ஆமோஸ் புத்தகத்தினுடைய நோக்கம்

செழிப்பை அனுபவிக்கும் ஒரு தேசத்திற்கு, ஆமோஸ் நியா யத்தீர்ப்பை முன்னறிவித்தார். செல்வத்தின் புதிய நாளுக்குப் பதிலாக, இஸ்ரவேல் நியாயத்தீர்ப்பின் நாளை எதிர்கொண்டது. சமுதாயத்தின் கீழ்மட்ட உறுப்பினர்களிடம் நீதியுடன் செயல் பட இஸ்ரவேல் மறுத்ததால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஏற்பட்டது. தேவாலயசடங்குகளைக் கடைப்பிடிப்பதை விட நீதியானது மேலானது என்று ஆமோஸ் பிரசங்கித்தார்; நீதிக்கு நம் சக மனிதனிடம் சரியான நடத்தை தேவை.

## ஆமோஸின் கருப்பொருள்

### *நியாயத்தீர்ப்பு (ஆமோஸ் 1:1–9:10)*

ஆமோஸ் புத்தகத்தின் பெரும்பகுதி நியாயத்தீர்ப்பின் செய்தி. ஆமோஸ் மூன்று கேள்விகளுக்கு பதிலளிக்கிறார்:

(1) *நியாயத்தீர்ப்பை அனுப்புவது யார்?*

அசீரியா புத்தகத்தில் குறிப்பிடப்படவில்லை; வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு தேவனிடமிருந்து வருகிறதாக ஆமோஸ் காண் பிக்கிறார். திரும்பத் திரும்ப, அவர் இந்த செய்தியை கூறுகிறார்: "கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சித்து,.. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்... நான் அதின் ஆக்கினையைத் திருப்பமாட் டேன்... தீக்கொளுத்துவேன்... தமஸ்குவின் தாழ்ப்பாளை உடைப்பேன்."[345]

(2) *நியாயத்தீர்ப்பு எப்படி வரும்?*

பஞ்சம், வறட்சி, கொள்ளைநோய் மற்றும் சங்காரம் ஆகியவை தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கருவிகளாக இருக்கும்.[346] சிங் கம் செம்மறி ஆடுகளை அழித்து , ஒரு கால் அல்லது காது

[345] ஆமோஸ் 1:2-8
[346] ஆமோஸ் 4:6-11

*துண்டை மட்டுமே விட்டுச் செல்வது போல், அசீரியா, தேசத்தின் மீது படையெடுத்து, நாட்டை அழித்துவிடும்.*[347] *தேசத் தலைவர்கள் தூக்கிச்செல்லப்பட்டு*[348]*நிலம் ஆக்கிரமிக் கப்படும்.*[349]

(3) தேவன் *ஏன் நியாயத்தீர்ப்பை அனுப்புகிறார்?*

*தேவனுடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேலின் பாவத்தின் விளைவு. எல்லா தேசங்களிலும், இஸ்ரேலும் யூதாவும் மட்டுமே தேவனால் அறியப்பட்டனர். இஸ்ரவேல் உடன்படிக் கையின் சிலாக்கியங்களை அனுபவித்தது; உடன்படிக்கையின் பொறுப்புகளை அது மறந்துவிட்டது. அது தேவனால் அறியப்பட்டதால், இஸ்ரவேல் தேவனுடைய தண்டனையை எதிர்கொள்கிறது.*[350]*உடன்படிக்கை, சலுகை மற்றும் பொறுப்பு இரண்டையும் கொண்டு வந்தது.*

*நியாயத்தீர்ப்பின் பிரகடனம் தீர்க்கதரிசன செய்திகளின் தொடர் மூலம் வழங்கப்படுகிறது. ஆமோஸின் ஒவ்வொரு பகுதியும் இந்த செய்தியை வெவ்வேறு விதத்தில் கொண்டு வருகிறது. ஆமோஸின் செய்தியில்பின்வருவன அடங்கும்:*

### *தேசங்களுக்கு எதிரான நியாயத்தீர்ப்புச் செய்திகள் (ஆமோஸ்1–2)*

*ஆமோஸ் மற்ற தேசங்களுக்கு எதிரான நியாயத்தீர்ப்பு உரைகளுடன் தொடங்கி னார்: தமஸ்கு, பெலிஸ்தியா மற்றும் தீரு. பின்னர் அவர் இஸ்ரவேலின் இரத்த பந்த உறவினர்களான ஏதோம், அம்மோன் மற்றும் மோவாப் நாடுகளுக்குச் சென்றார். இந்த நாடுகள் இஸ்ரவேலுக்கு எதிராக கொடூரமான குற்றங்களைச் செய்தன. ஆமோஸ் யூதாவின் ஆவிக்குரிய பாவங்களைப் பற்றி பேசுகிறார் – யூதா நியாயப்பி ரமாணத்தைக் கைவிட்டு, பொய்யான கடவுள்களைப் பின்பற் றுகிறது.*


*ஈ = மற்ற தேசங்கள்: தமஸ்கு, பெலிஸ்தியா, தீரு*

[347] *ஆமோஸ் 3:11-12*
[348] *ஆமோஸ் 4:2-3 மற்றும் 5:27*
[349] *ஆமோஸ் 6:14*
[350] *ஆமோஸ் 3:1-2. "அறிவு" என்ற சொல் உறவைக் குறிக்கிறது, வெறும் மன அறிவை அல்ல என்பதை ஓசியாவிலிருந்து நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்..*

*இ = இஸ்ரவேலின் இரத்தசம்பந்த உறவினர்கள்: ஏதோம், அம்மோன், மோவாப்*

*ஆ = யூதா (தெற்கு ராஜ்யம்)*

*அ = இஸ்ரவேல் (வடக்கு ராஜ்யம்)*




*இஸ்ரவேலைச் சுற்றியிருந்த நாடுகளிடம் பேசிய பிறகு, ஆமோஸ் வடக்கு ராஜ்யத்தின் பாவங்களைப் பற்றி பேசினார். இந்த கட்டத்தில், முதலில் ஆமோஸின் செய்தியைக் கேட்போர் அவருடைய செய்தியை ஏற்றுக்கொண்டிருப்பார்கள். இருப்பி னும், எதிர்பாராத திருப்பமாக, கர்த்தருடைய நாள் இஸ்ரவேலுக்கும் நியாயத்தீர்ப்பு நாளாக இருக்கும் என்று ஆமோஸ் கூறுகிறார். இஸ்ரவேல் தன் பாவங்களால் நியாயந்தீர்க்கப்படும்: பலவீனமானவர்களை ஒடு க்குதல் (அவர்கள் ஏழைகளை "ஒரு ஜோடு பாதரட்சைக்கும்"[351] விற்கிறார்கள்), பாலியல் பாவங்கள் மற்றும் புறமதகொண் டாட்டங்கள்.*

## *இஸ்ரவேலுக்கு எதிரான தீர்க்கதரிசனங்கள் (ஆமோஸ் 3–6)*

*இஸ்ரவேல் மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்பின் நியாயத்தைக்காட்ட ஆமோஸ் தொடர்ச்சியான கேள்விகளைக் கேட்டார்.[352] அவர் இஸ்ரவேலின் பாவத்தை பெலிஸ்தர்கள் மற்றும் எகிப்தியர்களுடன் ஒப்பிட்டார்.[353] இஸ்ரவேலர்களில் குறிப்பிட்ட பிரிவினரின் பாவங்களை அவர் சுட்டிக்காட்டினார்: சமாரியாவின் மனம்போனபோக்கில் நடக்கிற பெண்கள், பாவத்தில் வாழும் போது பலிகளைச் செலுத்துபவர்கள் மற்றும் தங்கள் செல்வத்திலும் வெளிப்படையான பாதுகாப்பிலும் திமிர்பிடித்தத் தலைவர்கள்.[354]*

---

[351] *ஆமோஸ் 2:6*
[352] *ஆமோஸ் 3:3-6*
[353] *ஆமோஸ் 3:9-15*
[354] *ஆமோஸ் 4:1-11 மற்றும் 6:1-14*

ஆமோஸ் இஸ்ரவேலைப் பற்றி ஒரு சவஅடக்கப் புலம்பலைப் பாடினார், இது இறந்தவர்களுக்காகப் பாடப்படும் இரங்கல் பாடலாகும்.[355] எச்சரிக்கைகளைப் பொருட்படுத்தாமல், இஸ்ரவேல் மனந்திரும்ப மறுத்தது. தேவன் மற்ற தேசங்களை நியாயந்தீர்ப்பார் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்; இஸ்ரவேலின் பாவத்திற்காக தேவன் நியாயந்தீர்ப்பார் என்பதை அவர்கள் உணரவில்லை.

***நியாயத்தீர்ப்பின் தரிசனங்கள் (ஆமோஸ் 7:1 – 9:10)***

வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைச் சித்தரிக்கும் ஐந்து தரிசனங்களை தேவன் ஆமோஸுக்குக் கொடுத்தார். ஆமோஸ் கண்டது:

1. தேசத்தை அழிக்க அச்சுறுத்திய வெட்டுக்கிளியின் வாதை. இது இஸ்ரவேலின் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பைக்காட்டியது. ஆமோஸ் இஸ்ரவேலுக்காகப் பரிந்துபேசினார், தேவன் தண்டனையைத் தளர்த்தினார்.
2. மத்தியத்தரைக் கடலை எரிக்கும் அளவுக்கு மகா வெப்பமான அக்கினி. மீண்டும், ஆமோஸ் இஸ்ரவேலுக்காகப் பரிந்து பேசினார், தேவன் மீண்டும் . தண்டனையைத் தளர்த்தினார்.
3. சுவரின் நேரான தன்மையை சோதிக்க ஒரு தூக்கு நூல். தேவனுடைய நீதியின் தரத்திற்கு எதிராக அளவிடப்பட்டபோது, இஸ்ரவேல் மாறுபாடுள்ளதாய் இருந்தது. இதன் காரணமாக, தேவன் சுவரை இடிப்பார்.
4. பழுத்த பழங்களுள்ள ஒரு கூடை. இது இஸ்ரேலின் நிலையை விளக்கியது; அது உடனடி நியாயத்தீர்ப்புக்குப் பழுத்திருந்தது. ஜனங்கள் ஓய்வுநாளைக் கடைப்பிடித்தனர்; ஆனால் ஓய்வுநாள் முடிந்த பிறகு, அவர்கள் மற்றவர்களை நேர்மையாக நடத்தவில்லை. உண்மையான நீதி என்பது சரியான நடத்தையை உள்ளடக்கியது; மத சடங்குகள் போதாது.
5. பலிபீடத்தின் அருகே தேவன் நின்று நியாயத்தீர்ப்பின் உறுதியை அறிவிக்கிறார். ஒருவரும் தப்பி

[355] ஆமோஸ் 5:1-3

*ப்பதில்லை. தம்முடைய ஜனங்களைக் கண்காணிப்பதாக தேவன் அளித்த முந்தைய வாக்குறுதிகளில் பயமுறுத்தும்விதத்தில், அவர் கூறினார், "என் கண்களை அவர்கள்மேல் நன்மைக்கல்ல, தீமைக்கென்றே வைப்பேன்."*[356]

### *மீட்டெடுத்தல் (ஆமோஸ் 9:11-15)*

*ஆமோஸ், ஓசியாவைப் போலவே, நம்பிக்கையின் செய்தியுடன் நிறைவு செய்தார். தேவன் தம் ஜனங்களைமறக்கவில்லை. எதிர்கால மீட்டெடுத்தல்பற்றிய செய்தியுடன் புத்தகம் முடிகிறது.*

| **மாபெரும் எதிரிடையான மாற்றம்** | |
|---|---|
| ***நியாயத்தீர்ப்பு (1:1-9:10)*** | ***மீட்டெடுத்தல் (9:11-15)*** |
| ***வீழ்ச்சி****: இஸ்ரவேல் என்னும் கன்னிகை விழுந்தாள், அவள் இனி ஒருபோதும் எழுந்திருக்கமாட்டாள் (5:2).* | ***எழுச்சி****: விழுந்துபோன தாவீதின்கூடாரத்தை நான் திரும்ப எடுப்பிப்பேன் (9:11).* |
| ***உடைந்த சுவர்கள்****: தனக்கு எதிரான திறப்புகளின் வழியாய்ப் புறப்பட்டுப் போவீர்கள் (4:3).* | ***பழுதுபார்க்கப்பட்ட சுவர்கள்****: நான் அதன் திறப்புகளை அடைப்பேன் (9:11).* |
| ***தகர்த்துப்போடுதல்****: மாரிகாலத்து வீட்டையும் கோடைகாலத்து வீட்டையும் அழிப்பேன்; அப்பொழுது யானைத்தந்தத்தால் செய்யப்பட்ட வீடுகள் அழியும்; பெரிய வீடுகளுக்கும் முடிவு வரும் (3:15).* | ***மீண்டும் கட்டியெழுப்புதல்****: நான் அவனுடைய பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்துவேன் (9:11).* |
| ***பஞ்சம்****: இன்பமான திராட்சத்தோட்டங்களை நாட்டினீர்கள், ஆனாலும் அவைகளின் இரசத்தை நீங்கள் குடிப்பதில்லை (5:11).* | ***விருந்து****: அவர்கள் திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள் (9:14).* |
| ***சிறைப்பட்டுப்போகுதல்****: ஆகையால் உங்களைத் தமஸ்குவுக்கு அப்பாலே குடியோட்டுவேன் (5:27).* | ***திரும்பி வருதல்****: நான் அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த* |

---

[356] *ஆமோஸ் 9:4*

| | |
|---|---|
| | தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லை (9:15). |

## புதிய ஏற்பாட்டில்ஆமோஸ்

மலைப் பிரசங்கத்தில், ஆமோஸின் செய்தியைப் போன்ற ஒரு செய்தியை இயேசு பிரசங்கிக்கிறார்: சக மனிதனிடம் நாம் செய்யும் செயல்களில் நீதி காணப்பட வேண்டும். இதே செய்தி யாக்கோபு புத்தகத்திலும் காணப்படுகிறது. விசுவாசத்தின் அறிக்கைகள் மட்டும் போதாது; அந்த விசுவாசத்தை அன்றாட வாழ்க்கையில் வாழ வேண்டும்.

►சில சமயங்களில் திருச்சபை சுவிசேஷத்தை அறிவிக்கும் போது சமூகத்தின் பாவங்களை புறக்கணித்துள்ளது. மற்ற நேரங்களில், சமூக அவலங்களுக்கு எதிராக பிரசங்கிக்கும்போது திருச்சபை நற்செய்தியின் செய்தியை புறக்கணித்துள்ளது.[357] உங்கள் சமூகத்தில், திருச்சபையானது சுவிசேஷத்திற்கு வேதாகமத்தின்படியான முக்கியத்துவம் கொடுக்கிற அதே வேளையில் எவ்வாறு சமூகத்தின் பாவங்களைக் குறித்துத் திறம்பட பேச முடியும்?

## தீர்க்கதரிசிகளில் உள்ள "நீதியைக்" குறித்த ஒரு நெருக்கமான பார்வை

ஆமோஸின் முக்கிய வசனங்களில் ஒன்று 5:24: "நியாயம் தண்ணீரைப்போலவும், நீதி வற்றாத நதியைப்போலவும் புரண்டுவரக்கடவது." இந்த வசனம் பல சமூக நீதி இயக்கங்களுக்கு ஒரு கருப்பொருளாக இருந்து வருகிறது, அவற்றில் சில சமூக நடவடிக்கைக்கான அக்கறையில் நற்செய்தியைமறந்துவிட்டன.

இருப்பினும், ஆமோஸின் செய்தி "சமூக நற்செய்தி" யிலிருந்து வெகு தொலைவில் உள்ளது, சமூகநற்செய்தியில் இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பின் செய்தியின் இடத்தை சமூக நடவடிக்கைப்பணி எடுத்துக்கொள்கிறது. மாறாக, உண்மையான நீதியானது தேவனுடைய தன்மையை அடிப்படையாகக் கொண்டது என்பதை ஆமோஸ் காட்டுகிறார். தேவனுக்கு முன்பாக உண்மையான நீதியானது நம் அண்டை வீட்டாரிடம்

---

[357] இது பெரும்பாலும் "சமூக நற்செய்தி" என்று அழைக்கப்படுகிறது."

*சரியான நடத்தையை விளைவிக்கும். இந்த செய்தி வேதம் முழுவதும் மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளது:*

- *தேவன் சொன்னார், "உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தரா யிருங்கள்." இதைத் தொடர்ந்து ஏழைகள், ஊழியர்கள், ஊனமுற்றோர் மற்றும் சக இஸ்ரவேலர்களை இஸ்ரேல் நடத்தும் விதம் பற்றிக் கூறும் தொடர்ச்சியான கட்டளைகள் வருகின்றன.*[358]

- *யோபு தேவனுக்கு முன்பாக தான் குற்றமற்றவன் என்று அறிவித்தான். அவனது பாதுகாப்பின் ஒரு பகுதியாக, அவன் தனது சக மனிதனை நேர்மையாக நடத்துவதற் குச் சாட்சியமளித்தான்.*[359]

- *பாவிகளுடன் உணவு உண்ட இயேசுவைப் பரிசேயர்கள் விமர்சித்தார்கள். அதற்கு பதிலளிக்கும் விதமாக, இயேசு ஓசியா 6:6-ஐ மேற்கோள் காட்டினார்: "பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுகொள்ளுங்கள்; நீதிமான்க ளையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழை க்க வந்தேன் என்றார்."*[360]

- *பணக்காரர்களிடம் பாரபட்சம் காட்டும் கிறிஸ்தவர் களை, அதாவது பசித்தோருக்கு உணவளிக்கத்தவறிய, நிர்வாணமாய் உள்ளவருக்கு உடை உடுத்தத்தவறிய, மற்றும் தீமையான பேச்சுக்குக் காரணமானவர்களை யாக்கோபு எதிர்கொண்டார். "சுத்தமான பக்தியாயிரு க்கிறது" என்பதன் பொருளை யாக்கோபு சுருக்கமாகக் கூறினார்: "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படு கிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும்,*

---

[358]லேவியராகமம் 19:2 மற்றும்பின்வரும்வசனங்கள்

[359]யோபு 31

[360]மத்தேயு 9:13

உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே."[361]

*நீதியானது தேவனுடைய தன்மையை விவரிக்கிறது; நமது அண்டை வீட்டாரை நீதியுடன் நடத்துவது என்பது தேவனுடைய தன்மையை பிரதிபலிப்பதாகும். 21 ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்களாகிய நாம், தேவனுடைய தன்மையை நம்பாத உலகத்திற்கு தேவனின் தன்மையைக் காட்ட வேண்டும். தேவனுடனான சரியான உறவு, சக மனிதருடனான நமது உறவை மாற்றும். அதுதான் ஆமோஸில் நீதியின் பொருள்; இது இன்றைய உலகிலும் அதுவே நீதியின் பொருள்.*

## முடிவுரை

*கி.பி.1759-1833வரையிலுள்ள காலக்கட்டத்தில் வாழ்ந்த ஆங்கிலேய அரசியல்வாதியான வில்லியம் வில்பர்ஃபோர்ஸைப் போல சுவிசேஷத்தைப் பரப்புதல் மற்றும் கிறிஸ்தவ நியாயத்தின்கொள்கை ஆகிய இரண்டிற்கும் மிகவும் திறம்பட முன்மாதிரியாக இருந்த கிறிஸ்தவர்கள் மிகக்குறைவு.*

*வில்பர்ஃபோர்ஸ் 21 வயதில் ஹவுஸ் ஆஃப் காமன்ஸுக்கு* (House of Commons)*தேர்ந்தெடுக்கப்பட்டார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் ஒரு கிறிஸ்தவரானார். இந்த இளம் பிரபுவின் முழு வாழ்க்கையும் அவரது மனமாற்றத்தால் மாற்றப்பட்டது. இது வெறுமனே ஒரு தனிப்பட்ட "விசுவாச அறிக்கை" அல்ல. அவரது அரசியல் வாழ்க்கையைப் பற்றிய அவரது பார்வை, அவரது சுயநல வாழ்க்கை மற்றும் அவரது செல்வத்தைப் பயன்படுத்துதல் அனைத்தும் அவரது மதமாற்றத்தால் மாற்றப் பட்டன.*

*வில்லியம் வில்பர்ஃபோர்ஸ், இழப்புக்களில் வாழ்வோருக்கு சுவிசேஷம் மற்றும் துன்பப்படுபவர்களின் சரீரத்தேவைகள் ஆகிய இரண்டிலும் கிறிஸ்தவர்கள் அக்கறை காட்ட வேண்டும் என்று நம்பினர். இதன் விளைவாக, ஏழைகளுக்கு உதவவும் நற்செய்தியைப் பரப்பவும் பல அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றினார். அவர் இந்தியா மற்றும் ஆப்பிரிக்காவிலுள்ள மிஷனரிகளுக்கு நிதியுதவி செய்தார். அவர் சிறந்த*

[361] யாக்கோபு 1:27

*மருத்துவமனைகள், அநாதை இல்லங்கள், பள்ளிகள் மற்றும் சிறைகளில் மாற்றங்களைக் கொண்டுவருவதில் தீவிரம் காட்டினார். அவர் ஞாயிறு பள்ளிகள், அகதிகள், ஒற்றை தாய்மார்கள் மற்றும் உழைக்கும் ஏழைகளுக்கு ஆதரவளித்தார். அவரது வாழ்நாளின் பெரும்பகுதியில், வில்பர்ஃபோர்ஸ் தனது ஆண்டு வருமானத்தில் கால் பகுதியை ஏழைகளுக்கு வழங்கினார்.*

*ஒரு அரசியல் தலைவராக வில்பர்ஃபோர்ஸின் நீடித்த பங்களிப்பு அடிமைத்தனத்திற்கு எதிரான அவரது போராட் டமாகும். அடிமைத்தனம் நம் சக மனிதனுக்கான கிறிஸ்தவ அன்போடு ஒத்துப்போகாது என்று உறுதியாக நம்பிய வில்பர்ஃபோர்ஸ் இந்த தீமையை எதிர்த்துப் போராடுவதற்கு தனது வாழ்க்கையின் பெரும்பகுதியை அர்ப்பணித்தார். முதலில், அடிமைத்தனத்தைப் பாதுகாக்கும் சக்திவாய்ந்த அதிகாரவர்க்கத்தின் செல்வாக்கைத் தோற்கடிக்க அவருக்கு ஏதேனும் வாய்ப்பு இருப்பதாக கொஞ்சம்பேர் நினைத்தார்கள். ஆங்கிலேய வணிகர்கள் ஆண்டுக்கு சுமார் 50,000அடிமைகளை ஆப்பிரிக்காவில் இருந்து அட்லாண்டிக் முழுவதும் கொண்டு சென்றனர். வர்த்தகம் என்பது ஒரு பிரிட்டிஷ் "உரிமையாக" அரசியல்வாதிகளால் பாதுகாக்கப்பட்டது, வணிகர்களால் பொரு ளாதாரத் தேவையாகப் பாதுகாக்கப்பட்டது, மேலும் இது பல கிறிஸ்தவர்களால் சோகமான ஆனால் அவசியமான தீமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

*வில்பர்ஃபோர்ஸால் இந்தத் தீமையை ஏற்றுக்கொள்ள முடிய வில்லை. அவர் தேவனால் செல்வாக்குள்ள நிலையில் வைக் கப்பட்டார். இந்த பதவியை தேவனுக்கு சேவை செய்வதற்கான வாய்ப்பாக அவர் கருதினார். “நியாயத்தீர்ப்பு தண்ணீரைப் போலவும், நீதியானது ஒரு பெரிய ஓடையாகவும் ஓடட்டும்” என்று அவர் தீர்மானித்தார். அடிமைத்தனத்தின் தீமைகளைக் கற்றுக்கொண்ட வில்பர்ஃபோர்ஸ் இந்த வெட்கக்கேடான பாவத்தை ஒழிப்பதில் உறுதியாக இருந்தார். அவர் எழுதினார், "அவர்களின் விளைவுகள் என்னவாக இருக்கட்டும்: இந்த நேரத்தில் இருந்து நான் அதை ஒழிக்கும் வரை நான் ஓய்வெடுக்க மாட்டேன் என்று தீர்மானித்திருக்கிறேன்."*

*1789ஆம் ஆண்டு தொடங்கி, வில்பர்ஃபோர்ஸ் ஒவ்வொரு ஆண்டும் அடிமை வர்த்தகத்திற்கு எதிராக மசோதாக்களை*

*அறிமுகப்படுத்தினார். 1789 மற்றும் 1805க்கு இடையில் 12 அடிமைத்தன எதிர்ப்பு மசோதாக்கள் தோற்கடிக்கப்பட்டன. இறுதியாக, 1807இல், பாராளுமன்றம் பிரிட்டிஷ் பேரரசில் அடிமை வர்த்தகத்தை ஒழித்தது.*

*வில்பர்ஃபோர்ஸ் பின்னர் பேரரசு முழுவதும் அடிமைத் தனத்தை (புதிய அடிமைகளின் வர்த்தகம் மட்டும் அல்ல) ஒழிப்பதற்கான போராட்டத்தைத் தொடங்கினார். அடிமைத் தனத்தை ஒழிக்க வில்பர்ஃபோர்ஸ் இன்னும் இருபத்தைந்து ஆண்டுகள் உழைத்தார். அவர் இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு, பிரிட்டிஷ் பேரரசில் உள்ள அனைத்து அடிமைகளையும் விடுவிக்கும் சட்டத்தை ஹவுஸ் ஆஃப் காமன்ஸ் இயற்றியது.*

## *பாடம் 12 வீட்டுப்பாடங்கள்*

*இந்தப்பாடத்தைப் பற்றிய உங்கள் புரிதலை பின்வரும் வீட்டுப்பாடங்களின் மூலம் நிரூபிக்கவும்:*

(1) *பின்வரும் வீட்டுப்பாடங்களில் **ஒன்றை** முடிக்கவும்.*

*விருப்பம் 1: குழு வீட்டுப்பாடம்*

*திருச்சபை பேச வேண்டிய உங்கள் சமூகத்தில் உள்ள அநீதியின் ஒரு பகுதியைப் பற்றி விவாதிக்கவும். ஆமோஸின் மாதிரியைப் பயன்படுத்தி, திருச்சபை இந்த சூழ்நிலையை எவ்வாறு கையாள வேண்டும் என்பதைக் காட்டுங்கள். உங்கள் விவாதத்தின் ஒரு பக்கசுருக்கத்தைஎழுதுங்கள்.*

*விருப்பம் 2: தனி வீட்டுப்பாடம்*

*"தேவனுடைய நியாயத்தீர்ப்பும் விசுவாசமற்ற தேசத்தின் மீதான அன்பும்" என்ற தலைப்பில் ஒரு பிரசங்கத்திற்கான விரிவான பிரசங்க பொருட்சுருக்கத்தை ஆயத்தம் பண்ணவும். ஓசியாவின் செய்தி இன்று நம் உலகத்துடன் எவ்வாறு பேசுகிறது என்பதைக் காட்டுங்கள்.*

(2) *இந்தப்பாடத்தின் அடிப்படையில் ஒரு தேர்வை எழுத வேண்டும். தேர்வில் மனப்பாடம் செய்வதற்காக ஒதுக்கப் பட்ட வேதவசனங்களும் அடங்கும்.*

## *பாடம் 12 தேர்வு*

(1) எபிரேய வேதாகமத்தில் சிறிய தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்படுபவை எத்தனை?

(2) பெரிய தீர்க்கதரிசிகளுக்கும் சிறிய தீர்க்கதரிசிகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

(3) கி.மு. 8-ஆம் நூற்றாண்டின்போது வடக்கு ராஜ்யத்தின் பொருளாதார மற்றும் ஆவிக்குரிய நிலைமைகளை விவரிக்கவும்.

(4) ஓசியா புத்தகத்தின் முக்கிய நோக்கம் என்ன?

(5) ஓசியாவின் ஒவ்வொரு பிள்ளைகளின் பெயர்களும் இஸ்ரவேலுக்கு என்ன தீர்க்கதரிசனம் கூறுகின்றன?

(6) பழைய ஏற்பாட்டில், "அறிந்து கொள்க" என்ற வார்த்தை யின் அர்த்தம் என்ன?

(7) யோவேலின் முதன்மைக் கருப்பொருள் என்ன?

(8) யோவேலில், இயற்கை பேரழிவு வரவிருக்கும் நியாயத் தீர்ப்பு பற்றிய தீர்க்கதரிசனம் என்ன?

(9) புதிய ஏற்பாட்டின்படி, வரவிருக்கும் ஆவிக்குரிய விழிப்புணர்வு பற்றிய யோவேலின் தீர்க்கதரிசனம் எப் போது நிறைவேறும்?

(10) ஆமோஸ் புத்தகத்தின் நோக்கம் என்ன?

(11) ஆமோஸில் நியாயத்தீர்ப்பின் ஐந்து தரிசனங்களைப் பட்டியலிட்டு அவற்றின் அர்த்தத்தைத் தருக.

(12) ஓசியா 10:12; யோவேல் 2:13; ஆமோஸ் 5:24 ஆகிய வசனங்களை நினைவிலிருந்து எழுது

## *பாடம் 13*

## *சிறிய தீர்க்கதரிசிகள் 2:*

## *புறஜாதி தேசங்களுக்கான தீர்க்கதரிசிகள்*

### *பாடத்தின் நோக்கங்கள்*

*இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:*

(1) *ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக் மற்றும் செப்பனியா ஆகிய புத்தகங்களின் எழுதப்பட்டக் காலம் மற்றும் வரலாற்றுக் கட்டமைப்பை அறிந்துகொள்ளுதல்.*

(2) *ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக் மற்றும் செப்பனியா ஆகிய புத்தகங்களின் முதன்மைக் கருப்பொருள்களையும் நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டுதல்.*

(3) *பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனத்தை விளக்குவதற்கான அடிப்படைக் கொள்கைகளைப் புரிந்துகொள்ளுதல்.*

(4) *எல்லா நாடுகளின் மீதும் தேவனுடைய இறையாண்மையைப் போற்றுதல்.*

(5) *ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக் மற்றும் செப்பனியா ஆகிய புத்தகங்களின் செய்தியை இன்றைய உலகின் தேவைகளுடன் தொடர்புபடுத்துதல்.*

### *இந்த பாடத்திற்கான ஆயத்தம்*

*ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக் மற்றும் செப்பனியா ஆகியவற்றை வாசிக்கவும்.*

*மீகா 6:8;நாகூம் 1:7-8;ஆபகூக் 3:2-ஐ மனப்பாடம் செய்யவும்.*

### *முன்னுரை*

பண்டைய உலகின் பொய்யானக் கடவுள்களைப் போல், யேகோவா ஒரு உள்ளூர் தேவன் அல்ல. யேகோவா முழு உலகத்தின் சர்வ ஆளுகையுள்ள தேவனாகஇருந்தார், இருக்கிறார். இஸ்ரவேலுக்கு அப்பால் உள்ள நாடுகளுக்கு சிறிய

தீர்க்கதரிசிகளின் செய்தியில் இது காணப்படுகிறது. இந்த அத்தியாயத்தில் படிக்கப்பட இருக்கிற புத்தகங்களில், தேவன் ஏதோம், நினிவே, இஸ்ரவேல், யூதா மற்றும் செப்பனியாவில், உலகம் முழுவதும் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலம் பேசினார். இந்த அத்தியாயத்தில், தேவனுடைய அதிகாரத்தை கூட அங்கீகரிக்காத ஜனங்கள் மீது தேவனுடைய இறையாண் மையைப் பார்க்கிறோம். தேவன் உலகம் முழுவதையும் ராஜ்யபாரம்பண்ணுகிற தேவனாயிருக்கிறார்.

## ஒபதியா: ஏதோமுக்கு ஓர் செய்தி

| ஒபதியாவின் புத்தகம் ஒரு சுருக்கப்பார்வை | |
|---|---|
| **எழுதியவர்** | ஒபதியா |
| **செய்தி பெற்றோர்** | ஏதோம் |
| **எழுதப்பட்ட காலம்** | கி.மு. 587 மற்றும் 553க்கு இடையில் |
| **கருப்பொருள்** | ஏதோமின் வீழ்ச்சி |
| **நோக்கம்** | பாபிலோனிய முற்றுகையின்போது யூதாவைக் கொடுமைப்படுத்தியதால் ஏதோமின் அழிவை முன்னறிவிப்பதற்காக. |
| **ஒபதியாவின் புத்தகத்தில் சுவிசேஷம்** | நாடுகடத்தப்பட்ட பிறகு, யூதா மீண்டும் மீட்கப்படும். அதன் மூலம், புறஜாதியார்களுக்கு சுவிசேஷம் வரும். |

### ஒபதியா புத்தகத்தின் வரலாற்றுக் கட்டமைப்பு

ஒபதியாவின் புத்தகம் ஏசாவின் சந்ததியாராகிய ஏதோமுக்கும், யாக்கோபின் சந்ததியினரான இஸ்ரவேலுக்கும் இடையிலான நீண்டகால மோதல்களின் பின்னணியில் வாசிக்கப்பட வேண் டும். இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு சென்றபோது, ஏதோம் தனது தேசத்தின் வழியாக இஸ்ரவேலர் செல்ல அனுமதி மறுத்தது.[362] பாபிலோனியர்கள் எருசலேமிற்கு எதிராக வந்து எருசலேமை முற்றுகையிட்டபோது, ஏதோமியர்கள்

[362] எண்ணாகமம் 20:14-21

எருசலேமின் அழிவை உற்சாகப்படுத்தினர். கி.மு.587இல் யூதாவுக்கு அவர்கள் செய்த கொடுமை, சங்கீதம் 137:7-9 மற்றும் ஒபதியாவின் தீர்க்கதரிசன செய்தியின் தாக்கங்களைத் தூண்டி யது.

ஒபதியா தீர்க்கதரிசியைக் குறித்து அவருடைய பெயரைத் தவிர நமக்கு வேறே எதுவும் தெரியாது. அவருடைய பெயர் "யேகோவாவுக்கு சேவை செய்பவன்" என்று பொருள்படும் மற்றும் பழைய ஏற்பாட்டில் இது ஒரு பொதுவான பெயர்.[363]

## ஒபதியாவின் செய்தி

ஒபதியாவின் தீர்க்கதரிசனம் ஏதோமின் மீதான நியாயத்தீர்ப்புச் செய்தியாகவும், யூதாவுக்கு ஆறுதல் தரும் செய்தியாகவும் இருக்கிறது. முதலில், ஏதோமுக்கு எதிரான நியாயத்தீர்ப்பின் செய்தியை ஒபதியா கொண்டுவருகிறார். ஏதோம் தன் தலைநகரான சேலாவின் இருப்பிடம், உயரமான, எளிதில் பாதுகாக்கப்பட்ட பாறையின் மீது, எதிரிகளிடமிருந்து தன் னைப் பாதுகாக்கும் என்று நம்புகிறது.[364] இருப்பினும், யூதாவுக்கு எதிரான அதனுடைய வன்முறையின் காரணமாக, தேவன் ஏதோமை அழித்துவிடுவார். நீதியுள்ள கடவுள் ஏதோமின் பாவம் தண்டிக்கப்படாமல் விடமாட்டார். கி.மு. 553இல் ஏதோம் கைப்பற்றப்பட்டபோது ஒபதியாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறியது.

ஒபதியா ஆறுதல் செய்தியையும் தருகிறார். தம்முடைய ஜனங்களுக்காக தேவனுடைய உடன்படிக்கையின் அன்பை யூதாவுக்கு நினைவுபடுத்துகிறார். எருசலேமின் அழிவுக்குப் பிறகும், தேவன் தம் ஜனங்களுக்கு நம்பிக்கையை வாக்களிக் கிறார். ஒபதியாவின் முக்கிய வசனம் (1:15) கர்த்தருடைய நாள் எல்லா தேசங்களுக்கும் சமீபமாயிருக்கிறது என்று உறுதிய ளிக்கிறது.

---

[363] சிறிய தீர்க்கதரிசி 1 ராஜாக்கள் 18 இல் ஆகாபின் வீட்டில் அதிகாரியாக இருந்த ஒபதியா அல்ல.
[364] ஒபதியா 1:3

## யோனா: நினிவேக்குச் செல்ல தயங்கின ஒரு தீர்க்கதரிசி

| யோனாவின் புத்தகம் ஒரு சுருக்கப்பார்வை | |
|---|---|
| **எழுதியவர்** | யோனா |
| **பார்வையாளர்கள்** | நினிவே |
| **எழுதப்பட்ட காலம்** | *கி.மு. 793 மற்றும் 753க்கு இடையில்* |
| **கருப்பொருள்** | *எல்லாஜனங்களுக்குமானதேவனுடைய கிருபை* |
| **நோக்கம்** | எல்லா ஜனங்களையும், இஸ்ரவேலின் எதிரிகளையும் கூட மீட்க விரும்பும்தேவனைக் காட்டுவதற்காக |
| **யோனாவின் புத்தகத்தில் சுவிசேஷம்** | உயிர்த்தெழுதலின் அடையாளமாக யோனாவை இயேசு சுட்டிக்காட்டினார். |
| | *அப்போஸ்தலர்களின் ஊழியம் மற்றும் ஆரம்பகால திருச்சபையின் மூலம், சுவிசேஷம் அனைத்து ஜாதிகளுக்கும்பிரசங்கிக்கப்படுகிறது.* |

### யோனா புத்தகத்தின் வரலாற்றுக் கட்டமைப்பு

*அசீரியப் பேரரசின் பலவீனமான காலகட்டத்தில் யோனா தீர்க்கதரிசனம் உரைத்தார். இரண்டாம் யெரோபெயாமின் நாட்களில் வடக்கு ராஜ்யத்தின் விரிவாக்கம் பற்றி அவர் தீர்க்கதரிசனம் கூறி னார்.*[365]




**Image: "KCE Lachish impale", by kevincellis36109, retrieved from https://www.flickr.com/photos/36339698@N00/17005960457/ licensed under CC BY 2.0**

*ஒரு ஆக்கிரமிப்பு பேரரசு என்கிற வகையில், அசீரியர்கள் இஸ்ரவேலின் சுதந்திரத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருந்தனர். எஞ்சியிருக்கும் கலைப்படைப்புகள், அசீரியர்கள் தங்கள் எதிரிகளு க்குக் கொடுமை செய்வதில் மகிழ்ச்சியடைந்ததைக் காட்டுகிறது. நினிவே*

---

[365] *2 ராஜாக்கள் 14:25*

*க்கு பிரசங்கிக்க யோனா தேவனுடையஅழைப்பைப் பெற்ற போது, அவர் தர்ஷீசுக்கு ஓடிப்போனார்.*

*மனந்திரும்ப எச்சரிக்கும் ஒரு செய்தியை நினிவே மக்களுக்கு பிரசங்கிக்க அவர் விரும்பவில்லை. நினிவே மனந்திரும்பினால், அந்த நகரத்தை தேவன் காப்பாற்றுவார் என்பதை அவர் அறிந்திருந்தார்.*[366] *உண்மையுள்ள இஸ்ரவேலனாக யோனாவின் பார்வையில், நினிவேயின் அழிவு இஸ்ரவேலுக்கு ஒரு ஆசீர்வாதமாக இருக்கும்.*

**யோனா புத்தகத்தின் நோக்கம்**

*யோனாவின் புத்தகம் இஸ்ரவேலின் எதிரிகள் மீதும்தேவன் தம்முடைய இரக்கத்தைக்காண்பிக்கிறார். தேவனுடைய இரக் கம் "நமக்கு" (இஸ்ரவேலுக்கு) மட்டுமல்ல என்று யோனாவின் புத்தகம் காண்பிக்கிறது; தேவனுடையஇரக்கம் "அவர்களுக் காகவும்" (நினிவே) உள்ளது.*

*தேவனுக்கு எதிர்மாறாக, யோனா தீர்க்கதரிசி நினிவே மீது இரக்கத்தை உணரவில்லை. யோனாவின் புத்தகம், ''நான் யோனாவைப் போல் இருக்கிறேனா அல்லது தேவனைப் போல இருக்கிறேனா?'' என்று சிந்திக்கும்படி நம்மை அழுத் துகிறது.''*

**யோனாவின் புத்தகம் உண்மையாகவே நடந்த சம்பவமா?**

*சில எழுத்தாளர்கள் யோனாவின் கதை ஒரு உண்மையான கதை அல்ல என்று வாதிடுகின்றனர், ஆனால் தேசங்களுக்கு தேவனு டைய பணியை நிறைவேற்றுவதில் இஸ்ரவேலின் தோல்வி யைப் பற்றி ஒரு பாடம் கற்பிக்கும் நோக்கம் கொண்ட ஒரு உவமை இது . இருப்பினும், யோனாவின் புத்தகத்தில் இது ஒரு உவமையாக இருப்பதாகக் கூறுவதற்கு எதுவும் இல்லை. இக்கதை ஒரு உண்மைக்கதையாக முன்வைக்கப்பட்டுள்ளது மற்றும் உண்மையான கதையாக இது நாம் எதிர்பார்க்கும் வரலாற்று மற்றும் புவியியல் விவரங்களைக் கொண்டுள்ளது.*

*யோனாவின் செய்திகளில் ஒன்று தேவனுடைய இறையா ண்மை. தேவன் "ஒரு பெரிய காற்றை அனுப்பினார்"; அவர்*

---

[366] *யோனா 4:2*

*"யோனாவை விழுங்குவதற்கு ஒரு பெரிய மீனை ஆயத்தப் படுத்தினார்"; அவர் யோனாவுக்குத் தலையின்மேல் நிழலுண் டாயிருக்க "ஒரு ஆமணக்குச் செடியை ஆயத்தம் செய்தார்", மேலும் அந்த ஆமணக்குச் செடியை அழிக்க "ஒரு புழுவை ஆயத்தம் செய்தார்". கதை உண்மையாக இல்லாவிட்டால், அவருடைய படைப்பின் மீதான தேவனுடைய இறையாண்மை பற்றிய செய்தியும் உண்மையில்லை என்றாகிவிடும்.*

*யோனாவின் கதையை இயேசு சரித்திரமாகக் கருதினார். அவர் எச்சரித்தார், "யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப் புநாளிலே நினிவேபட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள் மேல் குற்றஞ்சுமத்துவார்கள்."[367]*

*இந்தக் காரணங்களால், யோனா ஒரு உண்மையான கதை என்பதை நாம் அறியலாம்.*

## யோனா புத்தகத்தின் செய்தி

### *பாகம் ஒன்று : கீழ்ப்படிதலில் ஒரு பாடம் (யோனா 1-2)*

*அதிகாரங்கள் 1 மற்றும் 2 கீழ்ப்படிதலின் பாடம் கற்பிக்கின்றன. தேவன் யோனாவை நினிவேக்குச் செல்ல அழைக்கும் போது, யோனாவின் முதல் பதில் எதிர் திசையில் ஓடுவதாகும். "அப்பொழுது யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி, தர்ஷீசுக்கு ஓடிப்போகும்படி எழுந்தான்." "கர்த்தருடைய சந்நிதி யிலிருந்து" ஓடுவதற்காக அவன் ஒரு கப்பலில் ஏறுகிறான்.[368] கர்த்தருடைய தீர்க்கதரிசி சர்வ வல்லமையுள்ள தேவனுடைய முன்னிலையில் இருந்து தப்பிக்க முடியும் என்று நம்புகிறான். இருப்பினும், தேவன் இறையாண்மை கொண்டவர். "சமுத்திரத் தின்மேல் பெருங்காற்றை வரவிட்டார்; அதினால் கடலிலே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று."*

*புயலின் காரணத்தைக் கண்டறிய மாலுமிகள் சீட்டு போட்டபோது, யோனாவின் பேரில் தவறு இருப்பதைக்*

---

[367] *மத்தேயு 12:41*
[368] *யோனா 1:3*

கண்டார்கள். யோனாவைப் போலல்லாமல் (நினிவேயைப் பற்றி கவலைப்படாதவர்), மாலுமிகள் யோனாவின் உயிரைக் காப்பாற்ற தங்கள் சக மனிதனைப் பற்றி போதுமான அளவு அக்கறை காட்டுகிறார்கள். புறமதமாலுமிகள் தேவனுடைய தீர்க்கதரிசியை விட அதிக இரக்கத்தைக் காட்டுகிறார்கள். மாலு மிகள் இறுதியாக யோனாவை கடலில் வீசியபோது, புயல் உடனடியாக அமைதியாகிறது. "யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார்" என்பதால் யோனாவின் உயிர் காப்பாற்றப்பட்டது.

இந்த முதல் பகுதி தேவனுடைய இரக்கத்திற்காக யோனாவின் நன்றி ஜெபத்துடன் முடிவடைகிறது. "நான் பொருத்தனையைக் கொடுப்பேன்" என்று யோனா உறுதியளிக்கிறார்; அவர் கீழ்ப் படிதலில் பாடம் கற்றுக்கொண்டார்.

## பாகம் இரண்டு: பரிவு காட்டுவதில் ஒரு பாடம் (யோனா 3-4)

அதிகாரம் 1 போலவே, யோனா 3 தேவனுடைய அழைப்போடு தொடங்குகிறது. இந்த நேரத்தில், யோனா கீழ்ப்படிகிறார்; "யோனா எழுந்து நினிவேக்குப் போனான்." யோனா கீழ்ப்ப டிதலில் பாடம் கற்றுக்கொண்டார்; இப்போது தேவன் அவருக்கு இரக்கத்தின் பாடம் கற்பிக்கிறார்.

யோனா நினிவேயில் நியாயத்தீர்ப்புச் செய்தியைப் பிரசங்கிக்கிறார். அதிகாரம் 1இல் உள்ளதைப் போல, யோனா வை விட புறமதத்தவர்கள் தேவனுடைய இரக்கத்தை அதிகம் உணர்கிறார்கள். அதிகாரம் 1இல், புறமதமாலுமிகள் யோ னாவின் உயிரைக் காப்பாற்ற முயன்றனர். அதிகாரம் 3இல், நினிவேயின் புறமத ராஜா தன் நகரத்தின் மீது தேவன் இரக்கம் காட்டக்கூடும் என்று பரிந்துரைக்கிறான். "யாருக்குத் தெரியும்; நாம் அழிந்துபோகாதபடிக்கு ஒருவேளை தேவன் மனஸ்தாபப் பட்டு, தம்முடைய உக்கிரகோபத்தைவிட்டுத் திரும்பினாலும் திரும்புவார்?" தேவனுடையதீர்க்கதரிசி நியாயத்தீர்ப்பை மட் டுமே பிரசங்கிக்கிறார்; ஒரு புறமத ராஜா தேவனுடைய இரக்கத்தைப் பிரசங்கிக்கிறார்.

அதிகாரம் 2 போலவே, யோனா 4 லும் ஒரு ஜெபம் உள்ளது. யோனா 2 என்பது *யோனா மீது* தேவனுடைய இரக்கத்துக்காக நன்றி செலுத்தும் ஜெபம்; யோனா 4, *நினிவே மீது* தேவனு

டைய இரக்கத்துக்காக ஒரு முறையீட்டு ஜெபம் உள்ளது. நினிவே நகரத்தை தேவன் காப்பாற்றியதால் யோனா புகார் கூறுகிறார். யோனாவுக்குத் தேவன் பாடம் நடத்துவதுடன், கடவுளின் உறவை இழந்தவர்களுக்கான தேவனுடைய மிகுந்த இரக்கத்தைப் பற்றிய பாடத்துடன் அதிகாரம் முடிவடைகிறது.

### புதிய ஏற்பாட்டில் யோனாவின் புத்தகம்

யோனாவின் புத்தகம் புதிய ஏற்பாட்டில் குறைந்தது இரண்டு வழிகளில் பிரதிபலிக்கிறது. முதலாவதாக, யோனாவை மீனின் வயிற்றில் இருந்து மீட்பதைக் கல்லறையிலிருந்து உயிர்த்தெழும் தமதுசொந்த உயிர்த்தெழுதலுக்கு ஒப்பாக இயேசு சுட்டிக்காட்டினார்.[369]

இரண்டாவதாக, ஜாதிகளுக்கான தனது பணியை நிறைவேற்ற இஸ்ரவேலின் தோல்வியை யோனாவின் புத்தகம் விளக்குகிறது. ஆதியாகமம் 12:2-3 இன் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்திலிருந்து, *மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தின் வாய்க்காலாக இருப்பதற்காக* இஸ்ரவேல் ஆசீர்வதிக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. அந்த பணியை நிறைவேற்ற இஸ்ரவேலின் தோல்வியை யோனாவின் புத்தகம் காட்டுகிறது. கிறிஸ்துவின் வருகையின் மூலம், சீடர்கள் ஊழியத்திற்கு நியமிக்கப்பட்டபோது இந்த ஊழியம் புதுப்பிக்கப்படுகிறது: "ஆகையால் நீங்கள் சென்று, எல்லா தேசங்களுக்கும் போதியுங்கள்."[370]

### *21-ஆம் நூற்றாண்டில்யோனா*

தேவன் நினிவேயை காப்பாற்றுவதை விரும்பாத தயக்கமுள்ள தீர்க்கதரிசியான யோனாவை கேலி செய்வது எளிது; இருப்பினும், தேவனுடைய கண்களால் நம் உலகத்தைப் பார்க்க யோனா நம்மை கட்டாயப்படுத்துகிறார். நான் யோனாவைப் படிக்கும்போது, என்னை நானே கேட்டுக்கொள்ள வேண்டும்:

- எது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது: என் எதிரியின் அழிவா அல்லது என் எதிரியின் மனந்திரும்புதலா?

---

[369] மத்தேயு 12:39-40
[370] மத்தேயு 28:19

- *நான் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பிரசங்கிப்ப தைப் போல தேவனுடைய இரக்கத்தைப் பிரசங்கிக் கிறேனா?*
- *தேவனுடைய ஜனங்களுக்கு எதிரிகளாக இருப்பவர்க ளிடம் செல்ல நான் தயங்குகிறேனா?*
- *என்னிடம் யோனாவின் குணம் உள்ளதா அல்லது தேவனுடையகுணாதிசயம் உள்ளதா?*

## *மீகா: யூதா மற்றும் இஸ்ரவேலுக்கான ஓர் செய்தி*

| ***மீகா புத்தகத்தின் ஒரு சுருக்கப்பார்வை*** | |
|---|---|
| **எழுதியவர்** | *மீகா* |
| **செய்தியைப் பெற்றோர்** | *யூதா* |
| **எழுதப்பட் ட காலம்** | *கி.மு. 740-700* |
| **கருப்பொரு ள்** | *உண்மையான உடன்படிக்கை வாழ்க்கை* |
| **நோக்கம்** | *உடன்படிக்கையை மீறியதற்காக தேவன் யூதாவை நியாயந்தீர்ப்பார் என்பதைக் காண்பிப்பதற்காக* |
| ***மீகா புத்தகத்தில் சுவிசேஷம்*** | *இருதயத்திலிருந்து இயேசுவின் மதச் செய்தியை மீகா முன்னறிவிக்கிறார். உண்மையான மதம் சடங்குகளை விட மேலானது; உண்மை மதம் மீகா 6:8-ல் சுருக்கமாகக்கூறப்பட்டுள்ளது: "நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதும்."* |

### *மீகா புத்தகத்தின் வரலாற்றுக் கட்டமைப்பு*

*வடக்கு ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கு சற்று முன்பு, மொரேசா ஊரானாகிய மீகா என்ற தீர்க்கதரிசி யூதாவில் பிரசங்கித்தார். எசேக்கியாவின் ஆட்சியின்போது அவருடைய செய்தி எழுப்பு தலுக்கு வழிவகுத்தது.*

### *மீகா புத்தகத்தின் நோக்கம்*

*யூதா உடன்படிக்கைக்கு துரோகம் செய்தது என்பதைச் சுட்டிக்காட்ட உடன்படிக்கைசார்ந்த வழக்கு எனும் மொழி வடிவத்தை மீகா பயன்படுத்தினார்.*[371] *உடன்படிக்கையை மீறுபவர்களுக்கு நியாயத்தீர்ப்பையும், மனந்திரும்புகிறவர்களுக்கு நம்பிக்கையையும் மீகா பிரசங்கித்தார். சம்பிரதாயங்களைக் கடைப்பிடிப்பதை விட நீதியே மேலானது என்று மீகா காட்டினார்; உண்மையான நீதி என்பது "நியாயஞ்செய்து, இரக்கத்தைச்சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதும் ஆகும்."*[372]

### *மீகா புத்தகத்தின் செய்தி*

*மீகா மூன்று தீர்க்கதரிசனங்களின் தொடரைக் கொண்டு வந்தார். ஒவ்வொரு பகுதியும் "கேள்" என்ற வார்த்தையுடன் தொடங்குகிறது. ஒவ்வொரு செய்தியும் நியாயத்தீர்ப்பில் தொடங்கி, மீட்டெடுப்பின் வாக்குறுதியை நோக்கி நகர்கிறது.*

#### *செய்தி 1 (மீகா 1–2)*

*மீகாவின் முதல் செய்தி இஸ்ரவேல் மற்றும் யூதாவின் தலைநகரங்களான சமாரியா மற்றும் எருசலேம் மீதான நியாயத்தீர்ப்பை முன்னறிவிக்கிறது. தேவன் சமாரியாவை இடிபாடுகளின் குவியல் ஆக்கி, அதன் சிலைகளை அழிப்பார். எருசலேமுக்கு, யூதா நாடு கடத்தப்படும்போது வழுக்கையின் அவமானத்தை தேவன் வாக்களிக்கிறார்.*

*மீகா 1:10-15இல், சனகெரிப் கி.மு. 701இல் எருசலேம் நோக்கிப் பயணித்தபோது அவர் பின்பற்றிய பாதையை தீர்க்கதரிசி கண்டறிந்தார். யூதாவைத் தாக்கியதில், சனகெரிப்காத், அப்ரா, சபீர், சானான், பெத்-ஏசல், மாரோத், லாகிஷ், மோரேஷெத்-காத் மற்றும் அச்சிப் நகரங்களைக் கைப்பற்றினார். மீகாவின் தீர்க்கதரிசனம், தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றிய அவரது கணிப்பில்குறிப்பிட்டது.*

---

[371] *உடன்படிக்கை வழக்கின் கட்டமைப்பிற்கு, இந்தப் பாடத்திட்டத்தின் 10-வது பாடத்தைப் பார்க்கவும்.*
[372] *மீகா 6:8*

இந்த நியாயத்தீர்ப்பு செய்தி மீதியானவர்களுக்கு மீட்டெடுத்தலின் வாக்குறுதியுடன் முடிவடைகிறது. கர்த்தர் தம் ஜனங்களைப் போருக்கு வழிநடத்திச் செல்வார்.

## *செய்தி 2 (மீகா 3–5)*

மீகாவின் இரண்டாவது செய்தி யூதாவின் சீர்கெட்ட தலைவர்களைக் கண்டனம் செய்வதோடு தொடங்குகிறது. குடிமைத் தலைவர்கள் தங்களைப் பின்பற்றுபவர்களை நுகரும் நரமாமிசங்கள் என்று விவரிக்கப்படுகிறார்கள் (3:1-4). தீர்க்கதரிசிகள் "கூலிக்கான தூதுவர்கள்", அவர்கள் நன்றாக பணம் செலுத்துபவர்களுக்கு ஆசீர்வாதங்களையும், எதுவும் செலுத்த முடியாதவர்கள் மீது கண்டனத்தையும் தீர்க்கதரிசனமாய் கூறுகிறார்கள் (3:5-8). ராஜாக்கள், ஆசாரியர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் அனைவரும் கண்டனம் செய்யப்படுகிறார்கள்.

முதல் செய்தியைப் போலவே, இந்த செய்தியும் நியாயத்தீர்ப்பிலிருந்து நம்பிக்கைக்கு நகர்கிறது. “கர்த்தருடைய பர்வதமாகிய தேவாலயம் ஸ்தாபிக்கப்படும்” ஒரு நாள் வருகிறது; சேனைகளின் கர்த்தருடைய வழிகளைக் கற்றுக்கொள்ள பல தேசங்களிலிருந்து மக்கள் வருவார்கள். உண்மையுள்ள மீதியானவர்களைத் தேவன் காப்பாற்றி, அவர்கள்மீது ஆட்சி செய்வார். அவர் பாபிலோனிலிருந்து சீயோனை மீட்டு, அவருடைய மந்தையை மேய்ப்பார்.

பெத்லகேமிலுள்ள எப்பிராத்தாவிலிருந்து “புறப்படுதலை அநாதி நாட்களாகிய பூர்வத்தில் கொண்ட இஸ்ரவேலை ஆளப் போகிறவர்” வரும்போது யூதாவிற்கு இறுதிமீட்புவரும். மத்தேயுவின் நற்செய்தி இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றிய தீர்க்கதரிசனமாக மீகாவைச் சுட்டிக்காட்டுகிறது.[373]

## *செய்தி 3 (மீகா 6–7)*

| **யூதாவுக்கு எதிரான தேவனுடைய குற்றச்சாட்டுகள்**<br>***(மீகா 6:1-8)*** | |
|---|---|
| *6:1-2* | சாட்சிகளுக்கு ஒரு அழைப்பு<br>(மலைகளும்குன்றுகளும்யூதாவின் துரோகத்திற்குச் சாட்சிகள்) |

[373] மீகா 5:2 மற்றும் மத்தேயு 2:4-6

| | |
|---|---|
| *6:3* | *பதில் சொல்ல யூதாவுக்கு ஒரு வாய்ப்பு* |
| *6:4-5* | *கடந்த காலத்தில் யூதாவுக்கு தேவன் அருளியதை நினைவூட்டுகிறது* |
| *6:6-7* | *ஜனங்களின் ஏளனமான பதில்* |
| *6:8* | *தேவனுடைய பதில் - நியாயப்பிரமாணத்தின் கோரிக்கைகளின் சுருக்கம்: நீதி, இரக்கம் மற்றும் தாழ்மை* |

*மீகாவின் இறுதிச் செய்தி ஒரு உடன்படிக்கை வழக்கின் வடிவத்தில் அமைந்திருக்கும். தேவன் தம்முடைய ஜனங்கள் உடன்படிக்கைக்கு துரோகம் செய்தார்கள் என்று குற்றம் சாட்டுகிறார். ஜனங்கள் தங்கள் தவறை ஒப்புக்கொள்வதற்குப் பதிலாக, தொடர்ச்சியான பரியாசமான கேள்விகளால்பதிலளிக் கிறார்கள்:*

- *ஒரு வருட கன்றுகளின் தகனபலிகளைதேவன் விரும்புகிறாரா?*
- *தேவனுக்கு ஆயிரக்கணக்கான ஆட்டுக் கடாக்கள் மற்றும் பத்தாயிரம் எண்ணெய் நதிகள் வேண்டுமா?*
- *குழந்தை பலிகளை நாம் கொண்டு வர வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரா?*

*நியாயப்பிரமாணத்தின் மாறாத தேவைகளை மீண்டும் கூறு வதன் மூலம் தேவன் பதிலளிக்கிறார்: நீதி, இரக்கம் மற்றும் தேவனுடன் தாழ்மையான நடை.*

*குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து, தேவன் எருசலேமின் நியாயத்தீர்ப்பை அறிவிக்கிறார் (6:9–7:7). ஆகாபின் விசுவாசத் துரோகத்தை யூதா பின்பற்றியதால், தேவன் அந்த தேசத்தை பாழாக்குவார்.*

*மீகா மீண்டும் நியாயத்தீர்ப்பிலிருந்து விசுவாசத்திற்கு நகர் கிறார். யூதாவில் உள்ள தேவபக்தியுள்ள ஜனங்களைத் தேடு வதில் தோல்வியுற்ற பிறகு (7:1-7), தேவன் "உன் ஜனங்களை உமது தடியால் மேய்த்து" தேசங்களின் பார்வையில் அவர்களை மீட்டெடுப்பார் என்ற ஜெபத்துடன் மீகா முடிக்கிறார். அவர்*

நம்பிக்கையுடன் முடிக்கிறார்: தேவன் அக்கிரமத்தை மன்னிப்பவர் மற்றும் இரக்கத்தில் மகிழ்ச்சியடைபவர்.

### *21-ஆம் நூற்றாண்டுக்கான மீகாவின் செய்தி*

எரேமியா *26:17-19* மீகாவின் செய்தி எழுப்புதலைக் கொண்டுவந்தது என்பதைக் காட்டுகிறது. இதன் விளைவாக, யூதா *100* வருடங்களுக்கும் மேலாக தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து காப்பாற்றப்பட்டார். தேவனுடைய செய்தியை நம் நாளுக்குக் கொண்டு வரும்போது இது நம்மை ஊக்குவிக்க வேண்டும். பலர் தேவனுடைய வார்த்தையை நிராகரித்தாலும், மீதியானோர் பதிலளிப்பார்கள்; தேவனுடைய வார்த்தை வெறுமையாகத் திரும்பாது. இது நம் நாளில் உண்மையுள்ள பிரகடனத்திற்கு நம்மை ஊக்குவிக்க வேண்டும்.

## நாகூம்: நினிவேக்கு ஒரு செய்தி

| நாகூம் புத்தகத்தின் ஒரு சுருக்கப்பார்வை | |
|---|---|
| **எழுதியவர்** | நாகூம் |
| **செய்தியைப் பெற்றோர்** | நினிவே |
| **எழுதப்பட்ட காலம்** | கி.மு. 663 மற்றும் 612க்கு இடையில் |
| **கருப்பொருள்** | நினிவேயின் நாசம் |
| **நோக்கம்** | பொல்லாத நகரமான நினிவே மற்றும் அசீரியப்பேரரசின் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பின் தீர்க்கதரிசனத்தை உரைக்க |
| **நாகூம் புத்தகத்தில் சுவிசேஷம்** | நாகூம்1:15 யூதாவைவிசுவாசத்திற்கு அழைக்கிறது. அவர் சமாதானத்தின் நற்செய்தியைக் கொண்டு வருகிறார்; மேசியா வருவார்! |

### நாகூம் புத்தகத்தின் வரலாற்றுக் கட்டமைப்பு

யோனா பிரசங்கிக்க விரும்பிய பிரசங்கத்தை நாகூம் பிரசங்கித்தார்: நினிவேயின் அழிவு. யோனாவின் புத்தகம் நினிவேயின் மனந்திரும்புதலுக்குப் பதிலளிக்கும் விதமாக தேவனுடைய இரக்கத்தைக் காட்டுகிறது; நாகூம் புத்தகம் நினிவேயின் கலகத்துக்குப் பதிலளிக்கும் விதமாக தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் காட்டுகிறது.

*நினிவேயில் யோனாவின் வருகையால் ஏற்பட்ட எழுப்புதல் குறுகிய காலமே நீடித்தது. 793 மற்றும் 753 க்கு இடையில் யோனா பிரசங்கித்தார். கி.மு. 745 வாக்கில் டிக்லத்-பிலேசர் III ஆட்சிக்கு வந்து, மனித வரலாற்றில் கொடூரமான பேரரசுகளில் ஒன்றாக அசீரியப் பேரரசை நிறுவினார். கி.மு.722 இல், அசீரியா வடக்கு ராஜ்யத்தை அழித்தது.*

*கி.மு.704-681 வரை அசிரியப்பேரரசை ஆண்ட சனகெரிப், நினிவேயைத் தலைநகராக மாற்றினான். அவன் யூதாவின் பெரும்பகுதியைக் கைப்பற்றினான், இருப்பினும் தேவன் எருசலேமைக் காப்பாற்றினார், பின்னர் யூதாவை அசீரியாவின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்தார். கி.மு.663-க்குப் பிறகு, நினிவே மற்றும் அசீரியப் பேரரசு மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றி நாகூம் தீர்க்கதரிசனம் கூறினார்.[374] இந்த தீர்க்கதரிசனம் கி.மு.612 இல் நினிவே அழிக்கப்பட்டபோது நிறைவேறியது. இறுதியாக கி.மு.609 வாக்கில், அசீரியப்பேரர சின் மீதியான பகுதிகளும் கைப்பற்றப்பட்டன, இப்படியாக இந்த பேரரசு வரலாற்றில் இருந்து மறைந்தது. தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் உறுதியானவை.*

**நாகூம் புத்தகத்தின் நோக்கம்**

*ஒபதியா ஏதோமின் முழுமையான மற்றும் உறுதியான அழிவைப் பிரசங்கித்தார்; நாகூம் நினிவேயின் முழுமையான மற்றும் உறுதியான அழிவைப் பிரசங்கித்தார். இந்த நேரத்தில், எந்த மனந்திரும்புதலும் இருக்காது; "உன் நொறுங்குதலுக்குப் பரிகாரம் இல்லை; உன் காயம் கொடியது."[375] நாகூமின் புத்தகம் நினிவேயின் அழிவை அறிவிக்கிறது மற்றும் யூதாவின் ஜனங்க ளுக்கு தேவன் அவர்களின் சத்துருவை நியாயந்தீர்ப்பார் என்று உறுதியளிப்பதன் மூலம் அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கிறது.*

---

*[374] நாகூம் 3:8 எகிப்தில் தெபஸின் அழிவைக் குறிக்கிறது (KJV நகரத்திற்கு "நோ" என்ற பழைய பெயரைப் பயன்படுத்துகிறது). இது கி.மு. 663 இல் நடந்தது. தெபஸின் வீழ்ச்சிக்கும் (கி.மு. 663) நினிவேயின் வீழ்ச்சிக்கும் (கி.மு. 612) நாகூம் போதித்தார்.*

*[375] நாகூம் 3:19*

### *நாகூம் புத்தகத்தின் செய்தி*

*நாகூம் புத்தகம் முழுவதும் நினிவே மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றியது. அதிகாரம் 1 தேவன் தனது ஜனங்களின் சார்பாக போராடும் தெய்வீக போர்வீரராக ஒரு சித்திரத்தை கொடுக்கிறது. தேவன் நீதியுள்ள நீதிபதி; அவர் "கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர், அவர் தம்முடைய பகைஞருக்காகக் கோபத்தை வைத்துவைக் கிறவர்."*

*மனந்திரும்பிய நினிவேயைக் காப்பாற்றுவதன் மூலம் தேவன் முன்பு தம் இரக்கத்தைக் காட்டினாலும், அவர் "மிகுந்த வல்ல மையுமுள்ளவர்; அவர்களை ஆக்கினையில்லாமல் தப்புவிக் கமாட்டார்." நினிவேதேவனை நிராகரித்துவிட்டது, இப்போது அவர் அவர்களைப்பழிவாங்குவார்.*

*புத்தகத்தின் மைய வேறுபாடு நாகூம் 1:7-8இல் காணப்படு கிறது. நீதிமான்களுக்கு, "கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை." துன்மார்க்கருக்கு, "புரண்டுவருகிற வெள்ளத்தினால் சர்வசங்காரம் பண்ணுவார்."*

*அதிகாரம் 2 நினிவேயின் அழிவைத் தெருக்களில் நடக்கும் போர்களின் உருவங்களுடன் விவரிக்கிறது மற்றும் ஒரு சிங்கம் தனது இரையை துண்டு துண்டாக கிழிக்கும் உருவகத்துடன் விவரிக்கிறது.*

*அதிகாரம் 3 நாகூமின் செய்தியை "ஐயோ! " என்று முடிக்கிறார், அதில் "வஞ்சகத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருக்கி றது" "இரத்தப்பழிகளின் நகரத்திற்கு" குற்றத்தை அவர் அறிவிக் கிறார். நாகூம் நினிவேயின் குற்றங்களைப் பட்டியலிட்ட பிறகு தேவனுடைய இறுதி நியாயத்தீர்ப்பை அறிவிக்கிறார்: "நான் உனக்கு விரோதமாக வந்து உன் வஸ்திரத்து ஓரங்களை உன் முகமட்டும் தூக்கியெடுத்து, ஜாதிகளுக்கு உன் நிர்வாணத் தையும் ராஜ்யங்களுக்கு உன் மானத்தையும் தெரியப்பண்ணி, உன்மேல் தீட்டானவைகளை எறிந்து உன்னைக் கனவீனப் படுத்தி, உன்னை வேடிக்கையாக்கிப் போடுவேன்."[376] அசீரியா வின் வீழ்ச்சியின் செய்தியில் உலகம் மகிழ்ச்சியடையும். "உன் நொறுங்குதலுக்குப் பரிகாரம் இல்லை; உன் காயம் கொடியது;*

[376] *நாகூம் 3:5-6*

உன் செய்தியைக் கேட்பவர் யாவரும் உன்பேரில் கைக் கொட்டுவார்கள்; ஏனெனில், யார் பேரிலேதான் முடிவில்லாத உன் பொல்லாப்பு பாயாமற்போயிற்று?"[377]

ஒரு பரிசுத்தமுள்ள தேவன் பாவத்தைத் தண்டிக்காமல் விடமாட்டார் என்று நாகூம் போதிக்கிறார். இஸ்ரவேலையும் யூதாவையும் அவர்களுடைய பாவங்களுக்காக நியாயந்தீர்க்க தேவன் அசீரியாவைப் பயன்படுத்தினாலும், அசீரியாவின் பாவங்களை அவர் புறக்கணிக்கவில்லை. இறுதியில், அவர் யூதாவில் விசுவாசமுள்ள மீதியானவர்களைக் காப்பாற்றினார் மற்றும் அவர்களுடைய சத்துருக்களைத் தோற்கடித்தார். தம்மு டைய ஜனங்களுக்கு தேவன் காட்டும் விசுவாசம் மாறவில்லை.

## ஆபகூக்: தேவனுக்கும் அவருடைய தீர்க்கதரிசிக்கும் இடையே யான ஓர் உரையாடல்

| ஆபகூக் புத்தகத்தின் ஒரு சுருக்கப்பார்வை | |
|---|---|
| **எழுதியவர்** | ஆபகூக் |
| **செய்தியைப் பெற்றோர்** | தெற்கு ராஜ்யம் |
| **எழுதப்பட்ட காலம்** | கி.மு 608 மற்றும் 605. |
| **கருப்பொருள்** | தேவனுடைய வழிகளைப் புரிந்துகொள்ளுதல் |
| **நோக்கம்** | ஆபகூக்கிற்கு தேவனுடைய நோக்கங்களை வெளிப்படுத்த |
| **ஆபகூக் புத்தகத்தில் சுவிசேஷம்** | ஆபகூக் 2:4 புதிய ஏற்பாட்டில் மூன்று முறை மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. "தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்பது எல்லாக் காலங்களிலும் தம்முடைய ஜனங்களுக்கான தேவனுடைய திட்டமாய் இருக்கிறது. |

[377] நாகூம் 3:19

### ஆபகூக் புத்தகத்தின் வரலாற்றுக் கட்டமைப்பு

*தீர்க்கதரிசன புத்தகங்களில் ஆபகூக் தனித்துவமானது; இது எந்த ஒரு குறிப்பிட்ட பார்வையாளர்களையும் குறிக்கவில்லை. அதற்கு பதிலாக, புத்தகம் தேவனுக்கும் தீர்க்கதரிசிக்கும் இடையிலான உரையாடலைக் கொண்டுள்ளது.*

*எருசலேமின் வீழ்ச்சிக்கு முந்தைய ஆண்டுகளில் ஆபகூக் ஊழியம் செய்தார். கி.மு.605 இல் நேபுகாத்நேச்சார் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ஆபகூக்கின் உரையாடல் நிகழ்ந்ததாக பெரும்பாலான அறிஞர்கள் நம்புகின்றனர். தேவனிடமிருந்து வெளிப்படுத்தப்பட்ட தீர்க்கதரிசனத்தை ஆபகூக் உரைத்தபின் இருபது ஆண்டுகளுக்குள், அத்தீர்க்கதரிசனம் நிறைவேறும்.*

### ஆபகூக் புத்தகத்தின் நோக்கம்

*ஆபகூக் புத்தகம் தீர்க்கதரிசிக்கு தேவனுடைய நோக்கங்களை வெளிப்படுத்துகிறது. ஆபகூக்கின் கேள்விகள் மற்றும் தேவனுடைய பதில்கள் மூலம், தீர்க்கதரிசி தேவனுடைய இறையாண்மைத் திட்டத்தை நம்புவதற்கு கற்றுக்கொண்டார்.*

### ஆபகூக் புத்தகத்தின் செய்தி

#### *கேள்வி 1: பொல்லாத யூதா தேசம் ஏன் செழிக்கிறது? (ஆபகூக் 1:1-11)*

*யூதாவின் ஆவிக்குரிய மற்றும் தார்மீக சரிவை ஆபகூக் பார்த்துக் கொண்டிருந்தபோது, தேவனுடைய வெளிப்படையான பதில் இல்லாததால் அவர் கலக்கமடைந்தார். ஆபகூக், "நீர் எனக்கு அக்கிரமத்தைக் காண்பித்து, என்னைத் தீவினையைப் பார்க்கப் பண்ணுகிறதென்ன?"[378] என்று கேட்டான். ஆபகூக்கிற்கு, நியாயம் தவறாக நடப்பதாகத் தோன்றுகிறது.*

*தேவனுடைய பதில் தீர்க்கதரிசியைத் திகைக்க வைக்கிறது. யூதாவை நியாயந்தீர்க்கக் கல்தேயர்களை எழுப்புவதாக தேவன் ஆபகூக்கிடம் கூறுகிறார்.[379] அவர்களின் குதிரைகள் சிறுத்தைகளை விட வேகமாக பயணிக்கும்; அவர்கள் வெற்றிக்காகப் பசித்த கழுகுகளைப் போல் இருப்பார்கள்.*

---

[378] *ஆபகூக் 1:3*

[379] *கல்தேயர்கள் என்பது பாபிலோனியர்களின் மற்றொரு பெயர்.*

## *கேள்வி 2: யூதாவை நியாயந்தீர்க்க தேவன் பாபிலோனை எப்படிப் பயன்படுத்தலாம்? (ஆபகூக் 1:12 – 2:20)*

*முதல் பதில் தேவன் தீமையைப் புறக்கணிக்கவில்லை என்பதைக் காட்டியது, அது இன்னும் பெரிய கேள்வியை எழுப்பியது. இன்னும் பொல்லாத தேசத்தின் மூலம் யூதாவை தேவன் எப்படி நியாயந்தீர்க்க முடியும்? யூதா நியாயத்தீர்ப்புக்குத் தகுதியானது என்பது உண்மையாக இருந்தபோதிலும், யூதாவை விட பாபிலோன் மிகவும் பொல்லாதது. ஆபகூக் தேவனிடம், "துன்மார்க்கன் தன்னைப் பார்க்கிலும் நீதிமானை விழுங்கும்போது நீர் மௌனமாயிருக்கிறதென்ன?"[380] என்று கேட்டார்.*

*மறுமொழியாக, தேவன் ஆபகூக்கிடம் ஒரு தரிசனத்தை எழுதச் சொன்னார். நியாயத்தீர்ப்பு உறுதியானது மற்றும் தேவன் வாக்குறுதி அளித்தபடியே அது நடக்கும். இரண்டு பதில்களுக்கு இடையே ஆபகூக் முடிவு செய்ய வேண்டும். அவர் ஆணவத்துடன் பதிலளிக்கலாம் அல்லது தேவனுடைய நோக்கங்களுக்கு விசுவாசத்தில் அடிபணியலாம்.*

*இந்த செய்தியைத் தொடர்ந்து பாபிலோனை நியாயந்தீர்க்கும் தேவனுடைய திட்டம் வெளிப்படுகிறது. பாபிலோன் கர்த்தருடைய கோபத்தின் கிண்ணத்தைக் குடிக்க நிர்ப்பந்திக்கப்படும் என்பதை ஐந்து ஐயோ செய்திகளின் தொடர் மூலம் ஆபகூக் காட்டுகிறார். அவர்கள் சிலைகளை நம்பியிருக்கிறார்கள், ஆனால் சிலைகள் மீது அவர்களின் நம்பிக்கை வீணாகிவிடும். பயனற்ற சிலைகளுக்கு மாறாக, "கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்." அவரது இறையாண்மைக்கு முன் மௌனமே சரியான பதில்.*

## *ஆபகூக்கின் சமர்ப்பண ஜெபம் (ஆபகூக் 3)*

*தேவனுடைய வெளிப்பாட்டிற்கு பதிலளிக்கும் விதமாக, ஆபகூக் தேவனுடைய நோக்கங்களுக்கு அடிபணிந்தார். தேவன் தனது தீர்ப்புடன் இரக்கம் காட்ட வேண்டும் என்று அவர் ஜெபம் செய்தார்; அவர் தேவனுடைய வல்லமை மற்றும் இறையாண்மையை விவரித்தார்; மேலும் அவர் தேவனுடைய*

---

[380] ஆபகூக் 1:13

*நோக்கங்களுக்கு தன்னை ஒப்புக்கொடுத்தார். தீர்க்கதரிசி நம்பிக்கையுடன் ஒரு அறிக்கையுடன் முடித்தார்: "ஆண்டவ ராகிய கர்த்தர் என் பெலன்; அவர் என் கால்களை மான்கால் களைப் போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப் பண்ணுவார்."*

### புதிய ஏற்பாட்டில் ஆபகூக் புத்தகம்

*“விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்” என்ற ஆபகூக்கின் கூற்று புதிய ஏற்பாட்டில் மூன்று முறை மேற்கோள் காட்டப் பட்டுள்ளது. ரோமர் 1:17ல், பவுல் ஆபகூக்கை மேற்கோள் காட்டி, விசுவாசத்தின் மூலம் நாம் தேவனுக்கு ஏற்புடையவர் களாக ஆக்கப்பட்டோம் என்பதைக் காட்டுகிறார். கலாத்தியர் 3:11 இல், இந்த சொற்றொடர் நியாயப்பிரமாணத்தின் செயல்களால் இரட்சிப்பை நியாயப்படுத்தும் யூத மதவாதி களின் முயற்சிகளுக்கு முரண்படுகிறது. நியாயப் பிரமாணத் திற்குக் கீழ்ப்படிவதால் கிடைக்கும் நீதிக்குப் பதிலாக, “நீதிமான் விசுவாசத்தினாலே பிழைப்பான்” என்று பவுல் போதிக்கிறார். எபிரேயர் 10:38 இல், இந்த சொற்றொடர் விசுவாசத்தின் தொடர்ச்சியான அம்சத்தை வலியுறுத்துகிறது. “சிறுமையடைவதற்கு” பதிலாக, நீதிமான் தொடர்ந்து “விசுவா சத்தால் பிழைக்கிறான்”. பழைய ஏற்பாட்டில் உள்ளதைப் போலவே புதிய ஏற்பாட்டிலும், தேவனுடைய நோக்கங்களில் நமது நம்பிக்கையும் விசுவாசமும் அவரைப் பிரியப்படுத்த நமக்கு உதவுகிறது.*

## செப்பனியா: பூமியனைத்துக்குமான ஒரு செய்தி

| செப்பனியா புத்தகத்தின் ஓர் சுருக்கப்பார்வை | |
|---|---|
| **எழுதியவர்** | *செப்பனியா* |
| **செய்தியைப் பெற்றோர்** | *யூதாவும் சகல ஜாதிகளும்* |
| **எழுதப்பட்ட காலம்** | *கி.மு. 640 மற்றும் 612க்கு இடையில்* |
| **கருப்பொருள்** | *கர்த்தருடைய நாள்* |
| **நோக்கம்** | *கர்த்தருடைய நாளைக் குறித்து யூதாவையும் எல்லா* |

| | |
|---|---|
| | தேசங்களையும் எச்சரிக்க |
| **செப்பனியா புத்தகத்தில் சுவிசேஷம்** | எல்லா நாடுகளும் இஸ்ரவேலின் தேவனை வணங்கும் நாளை செப்பனியா எதிர்பார்க்கிறார். இது யூதரும்புறஜாதியும் சேர்ந்த சபையில் நிறைவேறுகிறது *(எபேசியர் 3:1-6).* |

## செப்பனியா புத்தகத்தின் வரலாற்றுக் கட்டமைப்பு

*செப்பனியாவின் பெயருக்கு "யெகோவா மறைத்திருக்கிறார்" என்று பொருள்படும், இது ஆகாஸ் ராஜாவின் கீழ் யூதாவின் விசுவாசத் துரோகத்தின் நாட்களிலும் அவருடைய பெற்றோர் அநேகமாக தேவனுக்கு விசுவாசமாக இருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது. யூதாவின் கடைசி நல்ல ராஜாவான யோசியாவின் ஆட்சியின்போது செப்பனியா தீர்க்கதரிசனம் உரைத்தார். அவர் ஆபகூக் மற்றும் எரேமியாவின் சமகாலத்தவர். நினிவேயின் வீழ்ச்சியை எதிர்கால நிகழ்வாக செப்பனியா குறிப்பிடுவதால், அவருடைய ஊழியம் கி.மு. 612-க்கு முன்பே முடிந்து விட்டது.[381]*

*செப்பனியாவின் ஆரம்ப வரலாறு அவரது வம்சாவளியை நான்கு தலைமுறைகளுக்கு முந்தைய எசேக்கியா ராஜா வரை குறிப்பிடுகிறது.[382]அவர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் மற்றும் யோசியா ராஜாவின் உறவினராக இருக்கலாம்.*

## செப்பனியா புத்தகத்தின் நோக்கம்

*மற்ற தீர்க்கதரிசிகளை விட, செப்பனியா புத்தகம் கர்த்தருடைய நாளை அதிதீவிரமாக அறிவித்தது. இந்த சிறிய புத்தகத்தில் ஆறு முறை, தீர்க்கதரிசி கர்த்தருடைய நாளைக் குறிப்பிடுகிறார். யோவேல், எசேக்கியேல், ஆமோஸ் ஆகியோரைப் போலவே, இந்த நாள் கீழ்ப்படியாதவர்களுக்கு நியாயத்தீர்ப்பையும் விசுவாசிகளுக்கு ஆசீர்வாதத்தையும் கொண்டுவரும் என்று செப்பனியா காட்டினார். கர்த்தருடைய நாள் யூதாவையும் உடன்படிக்கையின் ஜனங்களையும் மட்டுமல்ல, எல்லா மக்களையும் பாதிக்கும் என்று செப்பனியா காட்டினார்..*

[381]செப்பனியா 2:13

[382]செப்பனியா 1:1

## *செப்பனியா புத்தகத்தின் செய்தி*

*யூதாவின் மீதான தேவனுடைய தீர்ப்பைப் பற்றி செப்பனியா முதலில் பேசினார். யூதா "வானத்தின் சேனையான" பாகாலையும் மற்ற கடவுள்களையும் வணங்குவதற்குத் திரும்பியதால், தேவன் அந்த தேசத்தைத் தண்டிப்பார். எருசலேமின் வீடுகள் பாழாகிவிடும். கர்த்தருடைய நாள் வெளிப்படுத்தப்படும், "அந்த நாள் உக்கிரத்தின் நாள்; அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்; அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்; அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள். அது அரணிப்பான நகரங்களுக்கும், உயரமான கொத்தளங்களுக்கும் விரோதமாக எக்காளம் ஊதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள்."[383]*

*பின்னர் செப்பனியா ஜாதிகளிடத்தில் பேசினார். பெலிஸ்தர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பை அடைவார்கள்; மோவாபும் அம்மோனும் கெட்டுப்போவார்கள்; எத்தியோப்பியா (கூஷ்) கொல்லப்படும்; மேலும் அசீரியா அழிக்கப்படும். கர்த்தருடைய நாள் இந்த ஜனங்கள் அனைவருக்கும் நியாயத்தீர்ப்பு நாளாக இருக்கும்.*

*செப்பனியா காலத்தின் யூதர்களில் செவிசாய்த்தவர்கள் தங்கள் சத்துருக்கள் கண்டிக்கப்பட்டதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்திருக்கலாம். இருப்பினும், செப்பனியா விரைவில் யூதா மீதான தீர்ப்பின் கருப்பொருளுக்குத் திரும்பினார். "இடுக்கண் செய்து, ஊத்தையும் அழுக்குமாயிருக்கிற நகரத்துக்கு ஐயோ!"[384] துரதிர்ஷ்டவசமாக, இந்த அசுத்தமான மற்றும் சீர்கேடான நகரம் எருசலேம். அவர்களுடைய அரசியல் தலைவர்கள், நியாயாதிபதிகள், தீர்க்கதரிசிகள் மற்றும் ஆசாரியர்கள் அனைவரும் தேவனுடைய திருத்தத்தை ஏற்க மறுப்பதால் கண்டிக்கப்படுகிறார்கள். இதன் விளைவாக, "ஜாதிகள்" மீது கொட்டப்படும் நியாயத்தீர்ப்பு யூதாவுக்கும் வரும்.*

*கர்த்தருடைய நாள் நியாயத்தீர்ப்பு நாள். ஆனால் ஜனங்கள் மனந்திரும்பினால், அது மீட்டெடுப்பின் நாளாக இருக்கலாம். யூதாவில் மீதியாயிருப்பவர்கள் "கர்த்தருடைய நாமத்தை நம்பு*

---

[383] *செப்பனியா 1:15-16*
[384] *செப்பனியா 3:1*

*வார்கள்" என்று தேவன் வாக்குறுதி அளித்திருக்கிறார். அவர்கள் "அநியாயஞ்செய்வதில்லை; அவர்கள் பொய் பேசுவதுமில்லை; வஞ்சகநாவு அவர்கள் வாயில் கண்டுபிடிக்கப் படுவதுமி ல்லை."[385] இந்த குழுவிற்கு, தேவன் அவர்களின் சத்துருகளுக்கு எதிராக பாதுகாப்பை உறுதியளிக்கிறார்.*

*செப்பனியாவின் கடைசி வசனங்களில், எருசலேமின் இறுதி மீட்டெடுத்தலுக்கு தேவன் வாக்குறுதி அளித்தார். அவர் தம்மு டைய ஜனங்களை மீட்டெடுத்து, அவர்களை "பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக" வைப்பார்.*

►*சிறிய தீர்க்கதரிசிகள் தேவனுடைய செய்தியை அனைத்து ஜாதிகளுக்கும் கொண்டு சென்றனர். இந்த செய்தி பெரும்பாலும் தீர்க்கதரிசியின் செய்தியைப் பெற்றவர்களுக்கு மிகவும் குறிப்பிடத்தக்க செய்தியாக இருக்கும். 2 தீமோத்தேயு 3:16-ன் படி, எல்லா வேதவாக்கியங்களும் எல்லாக்காலங் களிலும் எல்லாக்கிறிஸ்தவர்களுக்கும் பயனுள்ளவை. சிறியதீ ர்க்கதரிசிகளின் செய்தி இன்று நம் உலகத்துடன் எவ்வாறு பேசுகிறது?*

## பழைய ஏற்பாட்டு விளக்கத்தின் ஒரு நெருக்கமான பார்வை


*பல வாசகர்களுக்கு, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசன புத்தகங்கள் வேதாகமத்தின் மிகவும் கடினமான புத்தகங்களில் சிலவாகும். இந்த பண்டைய தீர்க்கதரிசன புத்தகங்களில் இன்று நமக்கு எந்த செய்தியும் இல்லை என்று சில வாசகர்கள் கருதுகின்றனர். மற்ற விளக்கவுரையாளர்கள் இந்த புத்தகங் களில் மறைக்கப்பட்ட செய்திகளைத் தேடுகிறார்கள். இந்த இரண்டு அணுகுமுறைகளும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரி சிகளின் மைய சத்தியங்களை இழக்கின்றன.*

*பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனம் இன்று கிறிஸ்தவர்களிடம் எவ்வாறு பேசுகிறது? ஸ்காட்டுவால் மற்றும் டேனியல் ஹேஸ் ஆகியோர் வேதாகமத்தை நாம் வாழும் உலகத்தோடு விளக்குவதற்கும் பயன்படுத்துவதற்கும் பின்வரும் மாதிரியை பரிந்துரைக்கின்றனர். இது தீர்க்கதரிசன புத்தகங்களை விளக்கு*

---

[385] *செப்பனியா 3:12-13*

வதற்கு மிகவும் சிறப்பாக செயல்படும் ஒரு மாதிரி. இந்த மாதிரி ஒரு வேதாகமம் உரை தொடர்பான ஐந்து கேள்விகளைக் கேட்கிறது.[386]




**(1) *அவர்களின் பட்டணம்: தீர்க்கதரிசியின் முதல் செய்தி என்ன?***

இந்த கேள்வி முதல் வாசகர்கள் தீர்க்கதரிசியின் செய்தியை எவ்வாறு கேட்டார்கள் என்று கேட்கிறது. தீர்க்கதரிசி அவருடைய நாளுக்குச் சொன்ன செய்தி என்ன? இது நம்முடைய விளக்கத்தை முதல் செய்தியுடன் இணைக்க உதவுகிறது. முதலில் வாசித்தோர் அங்கீகரிக்காத ஒரு செய்தியை வேதாகமத்தில் "வாசிப்பது" ஆபத்தானது.[387]

உதாரணமாக, நாகூம் நினிவேக்கு கண்டனச் செய்தியைப் பிரசங்கித்தார். நினிவேயின் இரக்கமற்ற தன்மை, அவர்களது

---

[386] *Image from Grasping God's Word, 3rd Edition by J. Scott Duvall, J. Daniel Hays. Copyright © 2012 by J. Scott Duvall and J. Daniel Hays. Used by permission of HarperCollins Christian Publishing. www.harpercollinschristian.com*

[387] வேதத்தை விளக்குவதற்கான துறைவழக்குச் சொல் *எக்சிஜீசிஸ் (exegesis)* - உரையை விளக்குவது அல்லது விளக்கத்திற்கு "வழிகாட்டுவது". விளக்கவுரைக்கு எதிர்பதம் *ஐசிஜீசிஸ் (eisegesis)* ஆகும். ஐசிஜீசிஸ் என்பது எனது சொந்தக் கருத்துக்களிலிருந்து தொடங்கி அந்தக் கருத்துக்களை உரையாகப் படிக்கிறது. வேதத்தைப் படிக்கும் மாணவர்களாகிய நாம், நமது சொந்தக் கருத்துக்களிலிருந்து அல்ல, அசல் அர்த்தத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

*பாலியல் ஒழுக்கக்கேடு மற்றும் பிற கடவுள்களை அவர்கள் வணங்குவதால் நினிவே அழிந்துபோகும் என்ற அறிவிப்பை அவருடைய மக்கள் கேட்டனர். இதுதான் தீர்க்கதரிசியின் முதல் செய்தி.*

**(2) *நதி: அன்றைய செய்தி கேட்டவர்களை இன்றைய சூழலில் இருந்து வேறுபடுத்துவது எது?***

*இன்றைய கலாச்சாரம், மொழி, நேரம் மற்றும் சூழ்நிலை எவ்வாறு வேதாகம கால அமைப்பிலிருந்து வேறுபடுகிறது என்பதை இந்தக் கேள்வி ஆய்வு செய்கிறது. இது பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளுக்கு இடையிலான வேறுபாட்டையும் பார்க்கிறது.*

*நாகூம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட நகரத்திற்கு உரையாற்றப்படுகிறது. நாம் நாகூம் புத்தகத்தை வாசிக்கையில், நினிவே நகரம் இப்போது இல்லை என்பதை நாம் அறிவோம். இன்று பெரும்பாலான வாசகர்கள் உலகின் பிற பகுதிகளை இரக்கமின்றி மிதிக்கும் ஒரு தேசத்தில் வாழவில்லை. மேலும், நாம் புதிய உடன்படிக்கை காலத்தில் வாழ்கிறோம், இக்காலகட்டத்தில் தேசங்கள் மீதான தேவனுடைய உடனடி நியாயத்தீர்ப்பு பழைய உடன்படிக்கை காலத்தில் இருந்தது போல் அவ்வளவு தெளிவாகக் காணப்படவில்லை.*

**(3) *பாலம்: தீர்க்கதரிசியின் முதல் செய்தியின் பின்னணியில் உள்ள கொள்கை என்ன?***

*இந்தக் கேள்வி வாசகரை, தீர்க்கதரிசியின் வாழ்க்கைச்சூழல் அமைப்பைத் தாண்டி, கற்பிக்கப்படும் கொள்கையைக் கண்டறியும்படி கேட்கிறது. இந்தக் கொள்கை எல்லா வயதினருக்கும் எல்லா கலாச்சாரங்களுக்கும் பொருந்தும். இது தீர்க்கதரிசியின் செய்தியை அவர் காலத்தில் செய்தியைப் பொற்றோருக்கு மட்டுமே என மட்டுப்படுத்தப்படவில்லை.*

*நமது உலகத்திற்கும் நாகூமின் உலகத்திற்கும் இடையே பல வேறுபாடுகள் இருந்தாலும், தேவனுடைய நீதியின் கொள்கை உலகளாவியது. ஒரு பரிசுத்தமான மற்றும் நீதியுள்ள தேவன் அசீரியாவின் பாவங்களை புறக்கணிக்க முடியாது. தேவனுடைய நீதி வேதம் முழுவதும் மற்றும் மனித வரலாறு*

*முழுவதும் காணப்படுகிறது; இந்த செய்தி பண்டைய நினிவே க்கு மட்டும் அல்ல.*

### (4) *வரைபடம்: மற்ற வேதப்பகுதியில் இந்த கொள்கை எவ்வாறு காணப்படுகிறது?*

*இந்த கேள்வி ஒரு வேதாகம பகுதியை முழு வேதாகம வெளிப்பாட்டின் வெளிச்சத்தில் ஆய்வு செய்வதைக் கருத்தில் கொள்கிறது . ஒரு வசனத்தை அதன் வேதாகமச்சூழலில் இருந்து வெளியே எடுக்காமல், அந்த வசனத்தில் மற்ற வேதவாக் கியங்களுக்கு முரணான ஒரு கொள்கையை "கண்டுபிடிக்க" இது உதவுகிறது. பழைய ஏற்பாட்டு நூல்களைப் பொறுத்தவரை, இந்தப்படி இயேசு கிறிஸ்துவின் வருகை இக்கொள்கையைப் பற்றி என்ன வெளிப்படுத்துகிறது என்பதில் சிறப்பு கவனம் செலுத்துகிறது.*

*வேதாகமத்தின் மற்ற பகுதிகளிலுள்ள தேவனுடைய நீதியின் கொள்கையை நாம் ஆராய்ந்தால், தேவனுடைய இயல்பைப் பற்றிய பிற விவிலிய போதனைகளுடன் நாகூம் பொருந்து வதைக் காண்கிறோம். தேவன் பாவத்தைத் தண்டிக்க வேண்டும் என்று பஞ்சாகமம் போதிக்கின்றது. சரித்திர புத்தகங்கள் அவருடைய நீதியை செயல்பாட்டில் காட்டுகின்றன - அவரு டைய சொந்த ஜனம் இஸ்ரேல் ஜனங்களுக்கு எதிராகவும். தீர்க்கதரிசிகள் தேவனுடைய நீதிக்கு மீண்டும் மீண்டும் சாட்சியமளிக்கிறார்கள். புதிய ஏற்பாட்டில், இயேசு தேவனு டைய அன்பான இரக்கத்தைப் பற்றி பேசுகிறார், ஆனால் அவர் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப்பற்றி பேசுகிறார்.[388] "தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக் கிறானோ அதையே அறுப்பான்" என்று பவுல் நமக்கு நினைவூட்டுகிறார்.[389]*

### (5) *நமது பட்டணம்: இன்றைய உலகில் இக்கொள்கை எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது?*

---

*[388] மத்தேயு 11:20-24, வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு பற்றிய இயேசுவின் செய்திகளின் பல உதாரணங்களில் ஒன்றாகும்.*
*[389] கலாத்தியர் 6:7*

*ஒரு வாசகர் வேதாகமப்பகுதியின் விளக்கத்திலிருந்து அதன் பயன்பாட்டிற்கு நகரும் புள்ளி இதுவாகும். இன்று நாம் எவ்வாறு கொள்கையை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்தப் படி கேட்கிறது.*

*நாம் நாகூம் வாசிக்கும்போது, "இன்று உலகில் தேவனுடைய நீதி எவ்வாறு காணப்படும்?" என்று நாம் கேட்கிறோம். மற்றும் "தேவனுடைய நீதியின் வெளிச்சத்தில் நாம் எப்படி வாழ வேண்டும்?" தேவனுடைய நீதியானது பழைய ஏற்பாட்டில் காணப்பட்டது போன்ற உடனடி மற்றும் வியத்தகு முறையில் பார்க்கப்படாமல் இருக்கலாம். இருப்பினும், தேவனுடையநீதி இன்னும் அப்படியே உள்ளது, அவருடைய நியாயத்தீர்ப்பு உறுதியானது. நாம் தேவனுடைய வார்த்தையை நம் உலகத் திற்குக் கொண்டு வரும்போது, அவருடைய இரக்கத்தைப் பற்றி மட்டுமல்ல, அவருடைய நியாயத்தீர்ப்பைப் பற்றியும் பேச வேண்டும். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் நாட்களை விட இந்த செய்தி இன்று பிரபலமாக இல்லை என்றாலும், இது ஒரு மையமான சத்தியம் மற்றும் தேவனுடைய முழு வார்த்தைக் கும் உண்மையாய் இருப்பவர்களால் பிரசங்கிக்கப்பட வேண் டும்.*

## ***சிறிய தீர்க்கதரிசிகள் புத்தகங்களுக்கான சுய ஆய்வு வழிகாட்டி***

(1) *தீர்க்கதரிசியின் செய்தியைப் பற்றிய கண்ணோட்டத்தைப் பெற, ஒரு முழு புத்தகத்தையும் ஒரே அமர்வில் வாசியுங்கள்.*[390]

(2) *புத்தகத்தை எழுதிய எழுத்தாளரைப் படிக்கவும். தீர்க்க தரிசன புத்தகத்தின் தொடக்கத்தில் உள்ள தகவல்களிலிருந்து, தீர்க்கதரிசியைப் பற்றிய இந்த கேள்விகளுக்கு முடிந்தவரை பதிலளிக்கவும்:*

- *அவர் எங்கிருந்து வந்தார்?*
- *அவருடைய பெற்றோரைப் பற்றி நமக்கு என்ன தெரி யும்?*
- *அவரது தொழில் என்ன?*

---

[390]*இந்த முழு பகுதியும் Danny McCain, Notes on Old Testament Introduction. (Jos, Nigeria: Africa Christian Textbooks, 2002), 347-348 இலிருந்து தழுவி எடுக்கப்பட்டது.*

- அவருடைய குடும்பத்தைப் பற்றி நமக்கு என்ன தெரியும்?
- அவர் எப்போது, எவ்வளவு காலம் ஊழியம் செய்தார்?

(3) வரலாற்றுகட்டமைப்பைப் படிக்கவும். இந்தத் தகவலைக் கண்டறியவும்:

- யாருக்கு அவர் தீர்க்கதரிசனம் சொன்னார்?
- அவருடைய ஊழியத்தின்போது எந்த ராஜாக்கள் ஆட்சி செய்தார்கள்?
- அவருடைய காலத்தின் ஆவிக்குரிய மற்றும் சமூக நிலைமைகள் என்ன?
- அதே நேரத்தில் வேறு எந்த தீர்க்கதரிசிகள் ஊழியம் செய்தார்கள்?

(4) புத்தகத்தை இரண்டாவது முறையாக படித்து, ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் அதன் பொருட்சுருக்கங்களைச் சுருக்கமாக ஒரு தலைப்பை எழுதுங்கள். நீங்கள் படிக்கும்போது, அடிக்கடி வரும் வார்த்தைகளை அடிக்கோடிடவும் அல்லது முன்னிலைப் படுத்தவும். நீங்கள் முடித்ததும், புத்தகத்தில் உள்ள முக்கியமான கருப்பொருள்களைத் தீர்மானிக்கவும்.

(5) புத்தகத்தில் காணப்படும் பெரிய பாவங்களைப் பட்டியலிடுங்கள்.

(6) புத்தகத்தில் காணப்படும் எதிர்காலத்தின் முக்கிய கணிப்புகளைப் பட்டியலிடுங்கள்.

(7) மேலே உள்ள கேள்விகளுக்கான பதில்களின் அடிப்படையில் புத்தகத்தின் ஒரு பக்கசுருக்கத்தை எழுதுங்கள்.

## பாடம் 13 வீட்டுப்பாடங்கள்

(1) பின்வரும் வீட்டுப்பாடங்களில் **ஒன்றை** முடிக்கவும்.

விருப்பம் 1: குழு வீட்டுப்பாடம்

"பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தை ஒரு நெருக்கமான பார்வையில்" பரிந்துரைக்கப்பட்ட மாதிரியைப் பயன்படுத்தி

*சிறிய தீர்க்கதரிசிகளில் ஒருவரை பகுப்பாய்வு செய்யுங்கள். தீர்க்கதரிசியின் முதல் செய்தி, தீர்க்கதரிசியின் உலகத்திற்கும் நமது உலகத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் மற்றும் தீர்க்கதரிசியால் கற்பிக்கப்படும் கொள்கை பற்றி விவாதிக் கவும். இன்றைய உலகில் தீர்க்கதரிசியின் செய்தி பயன்படுத்தப் பட வேண்டிய 2-3 வழிகளைக் கண்டறியவும்.*

*விருப்பம் 2: தனி வீட்டுப்பாடம்*

*சிறு தீர்க்கதரிசிகளில் ஒருவரை "சிறிய தீர்க்கதரிசிகளுக்கான சுய ஆய்வு வழிகாட்டி" பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யுங்கள்.*

(2) *இந்த பாடத்தில் ஒரு தேர்வை எழுதவும். தேர்வில் மனப்பாடம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட வேதவசனங் களும் அடங்கும்.*

***பாடம் 13 தேர்வு***

(1) *ஒபதியா புத்தகத்தின் நோக்கம் என்ன?*
(2) *யோனா புத்தகத்தின் கருப்பொருள் என்ன?*
(3) *யோனாவின் புத்தகம் தேவனுடைய இறையாண்மை யைக் காட்டும் இரண்டு வழிகளைப் பட்டியலிடுக.*
(4) *யோனாவில் கற்பிக்கப்படும் இரண்டு பாடங்கள் யாவை?*
(5) *மீகாவின் கூற்றுப்படி, நியாயப்பிரமாணத்தின் கோரிக் கைகளை எந்த மூன்று பண்புகள் சுருக்கமாகக் கூறுகி ன்றன?*
(6) *மீகாவில் இயேசுவின் பிறப்பைப் பற்றி கொடுக்கப் பட்டுள்ள தீர்க்கதரிசனம் என்ன?*
(7) *நாகூம் புத்தகத்தின் செய்தியைப் பெற்றுக்கொண்ட வர்கள் யார்?*
(8) *ஆபகூக்கின் இரண்டு கேள்விகளையும் தேவனுடைய பதில்களையும் பட்டியலிடுக.*
(9) *செப்பனியாவின் முதன்மைக் கருப்பொருள் என்ன?*
(10) *பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தை விளக்குவதற்குப் பரிந்துரைக்கப்பட்ட ஐந்து படிகள் யாவை?*
(11) *மீகா 6:8; நாகூம் 1:7-8; மற்றும் ஆபகூக் 3:2 ஐ நினைவிலிருந்து எழுதுக.*

# *பாடம் 14*

# *சிறிய தீர்க்கதரிசிகள் 3:*

# *சிறையிருப்புக்குப் பிந்தைய தீர்க்கதரிசிகள்*

## *பாடத்தின் நோக்கங்கள்*

*இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:*

(1) *ஆகாய், சகரியா மற்றும் மல்கியா ஆகிய புத்தகங்களின் எழுதப்பட்ட காலம் மற்றும் வரலாற்றுக் கட்டமைப் பை அறிந்துகொள்ளுதல்.*

(2) *ஆகாய், சகரியா மற்றும் மல்கியா ஆகிய புத்தகங்களின் முதன்மைக் கருப்பொருள்களையும்நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டுதல்.*

(3) *தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு தொடர்ந்து விசுவாசமாக இருப்பதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளுதல்.*

(4) *பழைய ஏற்பாட்டின் மேசியாவைக் குறித்த வாக்குறு திகளை மதித்தல்.*

(5) *ஆகாய், சகரியா மற்றும் மல்கியா ஆகிய புத்தகங்களின் செய்தியை இன்றைய உலகத்திற்குத் தொடர்புபடுத்தல்.*

## *இந்த பாடத்திற்கான ஆயத்தம்*

*ஆகாய், சகரியா, மல்கியா ஆகியப் புத்தகங்களை வாசிக்கவும்.*
*ஆகாய் 2:7-9 மற்றும் மல்கியா 3:1-ஐ மனப்பாடம் செய்யவும்.*

## *சிறையிருப்புக்குப் பிந்தைய தீர்க்கதரிசிகளின்வரலாற்றுக் கட்ட மைப்பு*

*சிறையிருப்புக்குப் பிந்தைய தீர்க்கதரிசிகள் யூதாநாடு கடத்தப் பட்டதிலிருந்து திரும்பியதைத் தொடர்ந்து எதிர்கொண்ட பிரச்சினைகளைப் பற்றி பேசினர்:*

- ***அரசியல் சிரமங்கள்:*** *யூதா பெர்சியாவால் ஆளப்பட்டது, தாவீதின் ராஜா இல்லை, நகரத்தை மீண்டும் கட்டும்*

*முயற்சிகளை எருசலேமின் அண்டை நாடுகள் எதிர்த்தன.*

- ***ஆவிக்குரிய சவால்கள்:*** *தேவாலயம் மீண்டும் கட்டப்படவில்லை, அவிசுவாசியான புறஜாதியினருடன் திருமணம் செய்துகொள்வது வெவ்வேறு மதநம்பிக்கைகளை ஒரே அமைப்பில் இணைப்பதற்கு வழிவகுத்தது, மேலும் பல யூதர்கள் ஓய்வுநாளைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டனர்.*
- ***சமூகப் பிரச்சனைகள்:*** *திரும்பி வந்தவர்களுக்கும் எருசலேமில் தங்கியிருந்தவர்களுக்கும் இடையே பதற்றம் நிலவியது, பணக்காரர்கள் ஏழைகளை தவறாக நடத்தினார்கள், விவாகரத்து அதிகமாக இருந்தது.*

*கி.மு.539இல், பாபிலோன் பெர்சியாவிடம் வீழ்ந்தது. பெர்சிய ராஜாவாகிய கோரேசு, யூதர்களை யூதாவுக்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்கும் ஆணையை வெளியிட்டார். அடுத்த ஆண்டு, செருபாபேல் 50,000 பேரை பாபிலோனிலிருந்து எருசலேமுக்கு அழைத்துச் சென்றார். அவர்கள் வந்தவுடன், தேவாலயத்தை மீண்டும் கட்டத் தொடங்கினர். இருப்பினும், சத்துருக்கள் இந்த திட்டத்தை எதிர்த்தனர் மற்றும் தேவாலயத்தின் பணிகள் விரைவில் நிறுத்தப்பட்டன.*

*கி.மு. 520இல், ஆகாய் மற்றும் சகரியா ஆகியோர் தேவாலயத்தின் பணியை மீண்டும் தொடங்க ஜனங்களைத் தூண்டினர். இதன் காரணமாக, அவர்கள் "தேவாலயத்தீர்க்கதரிசிகள்" என்று அழைக்கப்படுகிறார்கள். 520இல் தேவாலயத்தின் பணி மீண்டும் தொடங்கியது. மற்றும் கி.மு. 516இல் தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டது.*

*கிமு458இல், எஸ்றா நாடுகடத்தப்பட்ட ஒரு குழுவை எருசலேமுக்குத் திரும்ப அழைத்துச் சென்றார். உடன்படிக்கைக்கு முக்கியத்துவம் அளித்து, எஸ்றா ஆராதனை மற்றும் சமூக சீர்திருத்தத்தின் எழுப்புதலுக்கு வழிவகுத்தார்.*

*கி.மு. 444 இல் நெகேமியா எருசலேமுக்குத் திரும்பினார். மற்றும் நகரின் சுவர்களை மீண்டும் கட்டும் முயற்சிகளுக்கு தலைமை தாங்கினார். எஸ்றா எதிர்கொள்ளும் அதே பிரச்சனைகளில் பலவற்றைக் குறிப்பிட்டு அவர் உரையாற்*

*றினார்: திருமண பிரச்சினைகள், ஓய்வுநாளைக் கடைப்பிடிக்கத் தவறியது மற்றும் உடன்படிக்கைக்கு விசுவாசமின்மை. மல்கியா, அதே காலகட்டத்தில் ஊழியம் செய்து, இந்தப் பிரச்சினைகளில் பலவற்றைப் பற்றி பேசினார்.*

## ஆகாய் : தேவாலயத்தை மீண்டும் கட்டுதல்

| ஆகாய் ஒரு சுருக்கப்பார்வை | |
|---|---|
| **எழுதியவர்** | *ஆகாய்* |
| **செய்தியைப் பெற்றோர்** | *சிறையிருப்பிற்குப் பிந்தைய யூதா* |
| **எழுதப்பட்ட காலம்** | *கி.மு.520* |
| **கருப்பொருள்** | *தேவாலயத்தை மீண்டும் கட்டுதல்* |
| **நோக்கம்** | *தேவனுடைய வீட்டை மீண்டும் கட்டுவதற்குஜனங்களை ஊக்குவித்தல்* |
| **ஆகாய் புத்தகத்தில் சுவிசேஷம்** | *ஆகாய்2:9-ன் வாக்குறுதி லூக்கா 2:28-32ல் நிறைவேறுகிறது.* |

### ஆகாய் புத்தகத்தின் நோக்கம்

*கி.மு.520 இலையுதிர் காலத்தில் ஆகாய் பிரசங்கிக்கத் தொடங்கினார். தேவாலயம் தொடர்பான நான்கு செய்திகளைத் தொடராகக் கொண்டு வந்தார். எருசலேமில் வாழ்க்கையின் சவால்கள் காரணமாக, ஜனங்கள் தேவாலயத்தின் மீதான வைராக்கியத்தை இழந்துவிட்டனர். செருபாபேல் திரும்பி வந்து ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகும், தேவாலயம் இன்னும் இடிந்த நிலையிலேயே இருந்தது. தேவனுடைய வீட்டின் சார்பாக தேவனுடைய தூதராக ஆகாய் இருந்தார்.*

### ஆகாய் புத்தகத்தின் செய்தி

#### *முன்னுரிமைகள் பற்றிய செய்தி (ஆகாய் 1)*

*ஜனங்கள் தங்கள் வீடுகளை மீண்டும் கட்டினார்கள், ஆனால் அவர்கள் தேவனுடைய ஆலயத்தை மீண்டும் கட்டவில்லை. தேவன் கேட்டார், "இந்த வீடு பாழாய்க்கிடக்கும்போது, நீங்கள்*

*மச்சுப்பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும்படியான காலம் இதுவோ?"*[391]

*ஜனங்கள் தேவனுடைய வீட்டை விட தங்கள் சொந்த தேவைகளுக்கு அதிக முன்னுரிமை அளித்தனர். அவர்கள் மோசமான அறுவடைகள், உணவுப் பற்றாக்குறை, போதிய உடைகள் மற்றும் கூலிகள் எல்லாம் காணாமல் போய்விட்டன என்று தேவன் அவர்களை எச்சரித்தார் –இவை எல்லாவற்றுக்கும் காரணம் அவர்கள் அவருக்கு முதலிடம்கொடுக்கவில்லை.*

*தேவன் ஜனங்களை அவர்களது சொந்த நலன்களுக்கு மேலாக தமக்கு முக்கியத்துவம் கொடுத்து முன்னுரிமைகளை வைப்பதற்கு அவர்களை அழைத்தார். அதற்குப் பிரதியுத்தரமாக, "ஜனங்கள் கர்த்தருக்கு முன்பாகப்பயந்திருந்தார்கள். தங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே வேலைசெய்தார்கள்."*[392]

## ***ஆவிக்குரிய ஆசிர்வாதம் சரீரப்பிரகாரமானஆசிர்வாதத்திற்கு உத் தரவாதம் அளிக்குமா?***

*ஆகாய்1 இன் செய்தி 3யோவான் 1:2க்கு இணையாக உள்ளது. "பிரியமானவனே, உன் ஆத்துமாவாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்." இது உபாகமம் 27-28இல், கீழ்ப்படிந்தவர்களுக்கு பொருள் ஆசீர்வாதங்கள் மற்றும் கீழ்ப்படியாதவர்கள் மீது பொருள் சாபங்கள் உள்ள வாக்குறுதியுடன் காணப்படுகிறது.*

*இது ஒரு முக்கியமான போதனையாக இருந்தாலும், இது வேதாகமத்தின் முழுமையானச் செய்தி அல்ல. ஒவ்வொரு உண்மையுள்ள விசுவாசியும் நிதி வளத்தையும் உடல் ஆரோக்கியத்தையும் அனுபவிப்பார்கள் என்று கற்பிக்க சில பிரசங்கிகள் ஆகாய்1 போன்ற வேதவசனங்களை எடுத்து மேற்கோள் காட்டுகின்றனர். யோபுவின் புத்தகம் மற்றும் எபிரேயர் 11:37 போன்ற வேதவசனங்களின் வெளிச்சத்தில் ஆகாய்1 மற்றும் 3 யோவான்1ஐயும், எரேமியா போன்ற சரீர ஆசீர்வாதங்கள் ஏதுமின்றி தேவனுக்கு உண்மையாக சேவை செய்த*

---

[391] *ஆகாய் 1:4*
[392] *ஆகாய் 1:12,14*

*அனுபவங்களையும் நாம் படிக்க வேண்டும். உண்மையில், தேவனுக்குக்கீழ்ப்படியும் காரணத்திற்காக பலர் பொருள் இழப்பைச் சந்தித்திருக்கிறார்கள். தற்காலிக ஆசீர்வாதங்களைப் பார்க்காமல் ஆவிக்குரிய ரீதியில் முன்னேற முடியும். ஆகாய் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் பேசினார்; தேவனுடைய உண்மையுள்ள ஒவ்வொரு பிள்ளையின் செழிப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் உலகளாவிய கொள்கையை அவர் கூறவில்லை.*

## *ஆகாய் : தேவாலயத்தை மீண்டும் கட்டுதல் (தொடர்ச்சி)*

### *ஆகாய் புத்தகத்தின் செய்தி (தொடர்ச்சி)*

### *ஊக்கமில்லாமைக் குறித்த ஒரு செய்தி(ஆகாய் 2:1-9)*

*அவரது முதல் செய்திக்கு ஆறு வாரங்களுக்குப் பிறகு, ஆகாய் தேவனிடமிருந்து மற்றொரு செய்தியுடன் திரும்பினார். அவர் கேட்டார், "இந்த ஆலயத்தின் முந்தின மகிமையைக் கண்ட வர்களில் உங்களுக்குள்ளே மீந்திருக்கிறவர்கள் யார்? இப்பொழுது இது உங்களுக்கு எப்படிக் காண்கிறது? அதற்கு இது உங்கள் பார்வையில் ஒன்றுமில்லாததுபோல் காண்கிறதல்லவா?" சாலமோனின் தேவாலயத்தின் பெருமைகளை நினைத்துப் பார்த்த பெரியவர்கள் சிலர், இந்த புதிய தேவாலயத்தின் அளவு மற்றும் தாழ்வான கட்டுமானத்தைக் கண்டு கண்ணீர் விட்டனர்.*[393]

*மறுமொழியாக, புதிய தேவாலயத்தின் மகிமை முதல் தேவாலயத்தை விட அதிகமாக இருக்கும் என்று தேவன் வாக்குறுதி அளித்தார். குழந்தை இயேசு தேவாலயத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது இந்த வாக்குறுதி நிறைவேற்றப் பட்டது. சிமியோன், "உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின... உம்முடையஇரட்சணியத்தை என் கண்கள் கண்டது"*[394] *என்று ஜெபித்தார்.*

---

*[393]ஆலயம் மீண்டும் கட்டப்படுவதைக் கண்டு சிலர் ஆனந்தக் கூச்சலிட்டாலும், மற்றவர்கள் அழுததாக எஸ்றா 3:12 காட்டுகிறது.*
*[394]லூக்கா 2:28-32*

### *கீழ்ப்படியாமையைக் குறித்த ஒரு செய்தி(ஆகாய் 2:10-19)*

*இரண்டு மாதங்களுக்குப் பிறகு, தேவனிடமிருந்து மற்றொரு செய்தியுடன் ஆகாய் திரும்பினார். தூய்மை மற்றும் அசுத்தத்தின் பிரமாணங்களை அவர் ஆசாரியர்களுக்கு நினைவூட்டினார். நியாயப்பிரமாணத்தின்படி, ஒரு பலி பொருள் தூய்மையற்றதுடன் தொடர்பு கொண்டால் அது அசுத்தமாகிவிடும். அசுத்தம் தொற்றிக்கொள்ளக்கூடியது.*

*ஆகாய் எருசலேம் ஜனங்களின் வாழ்க்கையைச் சுட்டிக் காட்டினார். அவர்கள் தேவாலயத்தில் வேலை செய்து கொண்டிருந்தனர், ஆனால் அவர்களின் தூய்மையற்ற வாழ்க்கை வேலையை சிதைத்தது. இன்று கிறிஸ்தவ ஊழியர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு செய்தியை ஆகாய் தன்னைக் கேட்போருக்கு நினைவூட்டுகிறார்;* ***"தேவனுக்கு என்றுள்ள உங்கள் வேலையை விட தேவன் உடன் நடக்கும் உங்கள் நடை மிகவும் முக்கியமானது."***

*ஆகாய் கீழ்ப்படிவதற்கு ஜனங்களுக்கு சவால் விடுத்தார். "இன்று முதல் நான் உன்னை ஆசீர்வதிப்பேன்" என்று தேவனுடைய வாக்குறுதியுடன் அவர் தனது செய்தியை முடித்தார்.''*

### *பயத்தைக் குறித்த ஒரு செய்தி (ஆகாய் 2:20-23)*

*ஆகாய் புத்தகத்தை வாசிக்கும்போது, எருசலேம் சத்துருக்களால் சூழப்பட்டது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த எதிரிகள் ஏற்கனவே தேவாலயத்தின் வேலைகளை நிறுத்துவதில் வெற்றி பெற்றனர்.*[395] *யூதாவை எதிர்த்தவர்களைத் தூக்கியெறிவதாக தேவன் வாக்குறுதி அளித்தார். சுற்றியுள்ள நாடுகளுடன் ஒப்பிடுகையில் யூதா அற்பமானதாக இருந்த போதிலும், அது தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டது, அவருக்கு சொந்தமானது. அவர் தனது ஜனங்களை தீங்கு விளைவிக்காமல் பாதுகாப்பார். அவர்கள் பயப்படுவதற்கு எந்த காரணமும் இல்லை.*

---

[395] *எஸ்றா 4*

## சகரியா : தேவன் தம்முடைய ராஜ்யத்தை மீட்டெடுத்தல்

| சகரியா புத்தகம் ஒரு சுருக்கப்பார்வை | |
|---|---|
| **எழுதியவர்** | சகரியா |
| **செய்தியைப் பெற்றோர்** | சிறையிருப்பில் இருந்து திரும்பி வந்த யூதா |
| **எழுதப்பட்ட காலம்** | கி.மு. 520 |
| **கருப்பொருள்** | தேவனுடைய ராஜ்யத்தின் மீட்டெடுத்தல் |
| **நோக்கம்** | தேவனுடைய ராஜ்யத்தின் வரவிருக்கும் மீட்டெடுத்தல் குறித்து தீர்க்கதரிசனம் உரைக்க. எல்லா தேசத்தாரும் எருசலேமில் வழிபடும் ஒரு நாள் வருகிறது. |
| **சகரியாவில் சுவிசேஷம்** | ஒரு தாழ்மையான ராஜா, உண்மையுள்ள மேய்ப்பன், நீதியுள்ள கிளை ஆகியவற்றின் வாக்குறுதியை இயேசு நிறைவேற்றுகிறார். |

### சகரியா புத்தகத்தின் நோக்கம்

சகரியா, செருபாபேலுடன் யூதாவுக்குத் திரும்பிய ஒரு ஆசாரியன் குடும்பத்தைச் சேர்ந்தவர்.[396] ஆகாயைப் போலவே சகரியாவும் ஒரு "தேவாலயத் தீர்க்கதரிசி". ஆகாயின் முதல் செய்திக்கு இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவருடைய முதல் செய்தி கொடுக்கப்பட்டது. தேவாலயத்தின் முக்கியத்துவத்தை சுட்டிக் காண்பித்ததோடு, இன்றும் இனிவரும் எதிர்காலத்திலும் தேவன் தம்முடைய ராஜ்யத்தை மீட்டெடுக்கிறார் என்பதை சகரியா காண்பித்தார்.

### சகரியாவின் செய்தி

### *எட்டு இரவு தரிசனங்கள் (சகரியா 1:1 – 6: 8)*

சகரியாயூதாவைதேவனிடம்திரும்பும்படிஅழைப்பதன் மூலம் தொடங்குகிறார். அவர்களின் முன்னோர்கள் தீர்க்கதரிசிகளை நிராகரித்ததால், தேவன் அவர்களை நாடுகடத்தினார். இப்போது

---

[396] நெகேமியா 12:4

*அவர்கள் திரும்பி வந்துவிட்டார்கள், சகரியா அவர்களை புதுப்பிக்கப்பட்டவிசுவாசத்திற்கு அழைக்கிறார்.*

*இந்த அறிமுகத்தைத் தொடர்ந்து எட்டு இரவு தரிசனங்கள் தொடர்கின்றன. எட்டு முறை, சகரியா ஒரு தரிசனத்தைப் பார்க்கிறார், பரலோகத்தின் தூதனிடம் விளக்கம் கேட்கிறார், மேலும் தரிசனத்தின் விளக்கத்தைப் பெறுகிறார். இந்த தரிசனங்கள் சிறையிருப்புக்குப் பிந்தைய சமூகம் தொடர்பான கவலைகளை நிவர்த்தி செய்கின்றன: யூதாவை ஒடுக்கிய நாடு களின் மீதான நியாயத்தீர்ப்பு, அவர்களின் எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு, தேவாலயம் மற்றும் சமூகத்தில் பாவம்.*

***தரிசனம் 1**:பூமியெங்கும் சுற்றிப்பார்க்கக் கர்த்தர் அனுப்பின குதிரை வீரர்கள் (சகரியா 1:7-17)*

*செய்தி : தேவன் தம் ஜனங்களை மீட்டெடுக்கவும் அவர்களை ஒடுக்குபவர்களை நியாயந்தீர்க்கவும் ஆயத்தமாகி வருகிறார்.*

***தரிசனம் 2**: நான்கு கொம்புகளும் நான்கு தொழிலாளிகளும் (சகரியா 1:8-21)*

*செய்தி: யூதாவின் எதிரிகளை தேவன் நியாயந்தீர்ப்பார். தேவனுடைய ஜனங்களைச் சிதறடித்ததைப் போலவே அவர்களும் சிதறடிக்கப்படுவார்கள்.*

***தரிசனம் 3**: தன் கையிலே அளவுநூல்பிடித்திருந்த ஒரு புருஷன் (சகரியா 2:1-13)*

*செய்தி: தேவன் எருசலேமை தனக்கு சொந்தமானதாகக் குறித்துள்ளார். அவர் நகரைக் காக்கும் சுவர்.*

***தரிசனம் 4**: பிரதான ஆசாரியனாகிய யோசுவா (சகரியா 3:1-10)*

*செய்தி: ஆசாரியத்துவத்தின் மீட்டெடுத்தல். எரேமியா 13:1-11இல், ஆசாரியத்துவத்தின் வஸ்திரங்கள் அழுக்கடைந்தன. பிரதான ஆசாரியனாகிய யோசுவாவைக் குற்றஞ்சாட்ட சாத் தான் வலதுபாரிசத்தில் நின்றாலும், தேவன் தீட்டானவஸ் திரங்களைக் கழற்றி அவனுக்குச் சுத்தமான வஸ்திரங்களைக் கொடுத்தார். தேவன் ஆசாரியத்துவத்தை மீட்டெடுத்தார் மற்றும்*

*இஸ்ரேலில் ஒரு புதிய சமாதான நாளைக் கொண்டுவரும் ஒரு "கிளையை" அனுப்புவார்.*

***தரிசனம் 5****: குத்துவிளக்கும் இரண்டு ஒலிவமரங்களும்(சகரியா 4:1-14)*

*செய்தி: தேவாலயம் திரும்பக் கட்டுதல்.தேவாலயத்தை மீண்டும் கட்டுவது தேவனுடைய வேலை, அது அவரால் தாங்கப்படும்.*

***தரிசனம் 6*** *: பறக்கிற ஒரு புஸ்தகச்சுருள்(சகரியா 5:1-4)*

*செய்தி: பாவத்தின் மீதான நியாயத்தீர்ப்பு. 9 மீட்டர் மற்றும் 4½ மீட்டர் அளவுள்ள ஒரு பெரிய சுருள் தேவனுடைய நியாயப் பிரமாணத்தை மீறியவர்கள் மீதான உடன்படிக்கை சாபங்க ளைக் கொண்டிருந்தது. நாடுகடத்தப்பட்ட சமூகத்தில் உள்ள பாவம் நாடுகடத்தப்படுவதற்கு முன்பு இருந்ததைப் போலவே தீர்மானிக்கப்படும்.*

***தரிசனம் 7*** *: மரக்காலின் நடுவிலே ஒரு ஸ்திரீ (சகரியா 5:5-11)*

*செய்தி: நாடுகடத்தப்பட்ட சமூகத்தில் பாவம். பாவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு ஸ்திரீ ஒரு கூடையில் வைத்து, ஒரு ஈயமூடியால் அடைக்கப்பட்டாள். சிறகுகள் கொண்ட தூதர்கள் கூடையை பாபிலோனுக்குப் பறக்கவிட்டு, எருசலேமி லிருந்துபாவத்தை அகற்றினர்.*

***தரிசனம் 8*** *: நான்கு இரதங்கள் (சகரியா 6:1-8)*

*செய்தி : யூதாவின் எதிரிகள் மீதான நியாயத்தீர்ப்பு. இந்த பார்வை முதல் பார்வைக்கு இணையாக உள்ளது. உலகில் செயல்படும் தேவனுடைய ஆவியைப் பிரதிநிதித்துவப்படுத் தும் நான்கு இரதங்கள், உலகம் முழுவதும் அவருடைய இறையாண்மையைக் காட்டுகின்றன. தேவன் யூதாவின் எதிரி களை நியாயந்தீர்த்தார், மேலும் அவருடைய மக்களைத் தொடர்ந்து மீட்டெடுப்பார்.*

***தீர்க்கதரிசன வாக்கியங்கள் (சகரியா 6:9-14:21)***

*சகரியா புத்தகம் வரிசையாக வரும் தீர்க்கதரிசன உரைகளை உள்ளடக்கியது. பிரதான ஆசாரியனாகிய யோசுவாவின் தலை*

யில் ஒரு கிரீடம் வைக்க தேவன் சகரியாவை அனுப்புகிறார். இது ஆசாரியராகவும் ராஜாவாகவும் ஆட்சி செய்ய வரவிருக்கும் "கிளையை" பிரதிநிதித்துவப்படுத்தியது. இந்த மேசியாவின் செய்தி இயேசு கிறிஸ்துவின் வருகையைச் சுட்டிக்காட்டுகிறது.

சகரியா 7-8இல், பெத்தேலின் பிரதிநிதிகள் குழுவின் கேள்விக்கு தீர்க்கதரிசி பதிலளித்தார். சிறையிருப்பின்போது, ஜனங்கள் தேவாலயம் இடிந்ததை எண்ணி வருடத்தின் ஐந்தாம் மாதம் உபவாசம் இருந்தனர். தேவாலயத்தினை மீண்டும் கட்டும் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், இந்த உபவாசம் தேவையா என்று இந்தக் குழு கேட்டுள்ளது.

சகரியாவின் பதில் ஆரம்பத்தில் கேட்டக் கேள்வியை விட மிகவும் விரிவானதாக இருந்தது. தேவன் கேட்டார், 'உங்கள் உபவாசங்கள் உண்மையான மனந்திரும்புதலின் அடையாளமா அல்லது அவை வெறும் சடங்குகளா?' உபவாசங்கள் உண்மை யான மனந்திரும்புதலின் அடையாளமாக இருந்தால், யூதா நாடுகடத்தப்பட்டதில் பாடங்களைக் கற்றுக்கொண்டிருந் தால், உபவாசங்கள் இனி தேவையில்லை. இருப்பினும், உபவாச ங்கள் சடங்குகளே வேறொன்றுமில்லை என்றால், அவை அன்றும் இன்றும் அர்த்தமற்றவை.

யூதாவின் உபவாசங்களை விருந்துகளாக மாற்றும் ஒரு காலத்தை தேவன் வாக்குறுதி அளித்தார். யூத மக்கள் பூமியிலுள்ள அனைத்து மக்களைவிடவும் மதிக்கப்படும் நாள் வரும். "நாலாம் மாதத்தின் உபவாசமும்... யூதா வம்சத்தாருக்கு மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும்... ஆகையால் சத்தியத்தை யும் சமாதானத்தையும் சிநேகியுங்கள்... அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவும் வருவார்கள்."[397]

சகரியா 9-14 பகுதி மேசியாவின் வருகையை எதிர்ப் பார்க்கிறது. இஸ்ரவேலின் எதிரிகள் (சிரியா மற்றும் பெலிஸ்தியா) தேசத்திலிருந்து அகற்றப்படுவார்கள். ஒரு திடுக்கிடும் உருவத் தில், தேவன் புறஜாதியார் மத்தியில் இருந்து மீதியானவர்களைக்

---

[397] சகரியா 8:19, 22

***காப்பாற்றுவதாக*** *வாக்களிக்கிறார்.*[398] *இஸ்ரவேலின் உண்மையான ராஜா கழுதையின் மீது எருசலேமுக்கு வந்து தம் மக்களைக் காப்பாற்றும் நாளை சகரியா முன்னறிவிக்கிறார். யூதாவை சிக்கலில் கொண்டு சென்ற பெருமைமிக்க ராஜாக்களைப் போலல்லாமல், இந்த ராஜா பணிவானவராகவும் நீதியுள்ளவராகவும் இருப்பார். மந்தையைக் காக்கும் நல்ல மேய்ப்பனாகச் செயல்படுவார். ஆடுகள் இந்த மேய்ப்பனை நிராகரிக்கும்போது, அவை சிதறடிக்கப்படும். இருப்பினும், தேவன் இறுதியில் தம்முடைய மந்தையை மீட்டு எருசலேமை மீட்பார். யூதா மீட்கப்படும், எல்லா தேசத்தாரும் எருசலேமுக்கு வந்து வணங்குவார்கள்.*

### ***புதிய ஏற்பாட்டில் சகரியா***

*புதிய ஏற்பாட்டில் சகரியாவின் புத்தகம் அடிக்கடி மேற்கோள் காட்டப்படுகிறது. விளக்கவுரையாளர்கள் சகரியாவிடமிருந்து அறுபத்தேழு புதிய ஏற்பாட்டு மேற்கோள்களைக் குறிப்பிட்டுள்ளனர்.*[399] *சிலுவை மரணத்தின் வாரத்தைப் பற்றி நற்செய்தி நூல்களில் உள்ள பதிவுகளில் , சகரியா 9-14 பகுதி மிகவும் அடிக்கடி மேற்கோள் காட்டப்பட்ட பழைய ஏற்பாட்டின் பகுதியாகும். வெளிப்படுத்துதல் புத்தகத்தில் மேற்கோள்களில் எசேக்கியேலுக்கு அடுத்தபடியாக சகரியா இரண்டாவது இடத்தில் உள்ளது. சகரியாவில் உள்ள மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்பின்வருமாறு:*

- *நீதியுள்ள கிளை (3:8; 6:12-13)*
- *ராஜா தாழ்மையுடன் கழுதையின் மீது சவாரி செய்தல் (9:9-10)*
- *மேய்ப்பன் நிராகரிக்கப்பட்டு முப்பது சேக்கல்வெள்ளிக்கு விற்கப்படுதல் (11:4-13; 13:7)*
- *குத்தப்பட்டவர் (12:10)*
- *வருகிறவராகிய நியாயாதிபதி (14)*

---

[398] *சகரியா 9:5-7. புறஜாதி தேசங்களிலிருந்து இந்த மீதியானவர்கள் தேவனுடைய ஜனங்களின் பாகமாக மாறும்..*

[399] *English Standard Version Study Bible என்னும் ஆய்வு வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.*

## மல்கியா : தேவனுக்கு விசுவாசத்தை எதிர்பார்க்கிறார்

| மல்கியா ஒரு சுருக்கப்பார்வை | |
|---|---|
| **எழுதியவர்** | *மல்கியா* |
| **செய்தியைப் பெற்றோர்** | *சிறையிருப்புக்குப் பின்புள்ள யூதா* |
| **எழுதப்பட்ட காலம்** | *ஏறக்குறைய கி.மு.475 மற்றும் கி.மு.425.* |
| **கருப்பொருள்** | *தேவன் விசுவாசத்தை எதிர்பார்க்கிறார்.* |
| **நோக்கம்** | *தேவனுக்கு விசுவாசமாக இருப்பதற்கு யூதாவிற்கு சவால் விடுக்க* |
| **மல்கியாவில் சுவிசேஷம்** | *மல்கியா இறைவனின் வழியை ஆயத்தம் செய்யும் ஒரு தூதரின் வாக்குறுதியுடன் முடிகிறது; மத்தேயுவும் மாற்கும் யோவான் ஸ்நானகன் மேசியாவுக்கான வழியை ஆயத்தப்படுத்துவதில் தொடங்குகிறார்கள்.* |

### மல்கியா புத்தகத்தின் நோக்கம்

*மல்கியா என்ற பெயருக்கு "என் தூதுவன்" என்று பொருள். எஸ்றா மற்றும் நெகேமியாவில் குறிப்பிடப்பட்ட பல பாவங்களை அவர் குறிப்பிடுவதால், மல்கியா இந்த இரண்டு தலைவர்களின் சமகாலத்தவராக இருக்கலாம். கி.மு. 475க்கும் 425க்கும் இடைப்பட்ட காலத்தில் மல்கியா பிரசங்கித்திருக் கலாம்.*

*யூதா விக்கிரகாராதனைக்குத் திரும்பவில்லை என்றாலும், அவர்களுடைய மத அனுசரிப்பு வெறுமையாக இருந்தது. மாற்றப்பட்ட வாழ்க்கையின் மூலம் யேகோவாவுக்கு விசுவா சமாக இருப்பது பின்தொடரவில்லை. யூதாவுக்கு எதிரான தேவனுடைய குற்றச்சாட்டுகளை அறிவிக்க மல்கியா புத்தக த்தை எழுதினார்.*

*யேகோவாவுக்கு எதிரான யூதாவின் முறையீடுகளுக்கும் மல்கியா பதிலளித்தார். தேவாலயத்தை மீண்டும் கட்டுவது சமாதனம், செழிப்பு மற்றும் தேவனுடையபிரசன்னம் ஆகிய வற்றைக் கொண்டுவரும் என்று ஆகாய் மற்றும் சகரியா*

*உறுதியளித்தனர். மாறாக, யூதா வறட்சி, பொருளாதாரப் போராட்டங்கள் மற்றும் அரசியல் பலவீனத்தால் மிகவும் பாதிக்கப்பட்டது. யேகோவா தம்முடைய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதற்காக ஜனங்கள் அவரைக் குற்றம் சாட்டினார்கள். இந்த முறையீடுகளுக்கு தேவனுடைய பதிலைக் கொண்டுவர மல்கியா இந்த புத்தகத்தை எழுதினார்.*

*► தேவனுடைய கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறியதற்காக மல்கியா யூதாவை எதிர்கொண்டார். அவர்கள் தேவாலயத் திற்குப் பலிகளை கொண்டு வந்தாலும், நியாயப்பிரமாணத்தின் சடங்குகளை கடைப்பிடித்தாலும், அவர்கள் தேவனை மதிக்கவி ல்லை. மல்கியாவின் குற்றச்சாட்டுகளை வாசிக்கும் முன்பு, இன்று கிறிஸ்தவர்கள் தேவனை அவமதிக்கக்கூடிய வழிகளைக் கலந்தாலோசிக்கவும்.*

### *மல்கியாவின் செய்தி*

*மல்கியா புத்தகம் ஆறு "தர்க்கங்கள்" அல்லது வாதங்களின் தொடர்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வாதமும் மூன்று பகுதிகளாகக் கூறப்பட்டுள்ளது:*

1. *யூதாவின் நடத்தை குறித்து தேவன் ஒரு அறிக்கையை வெளியிடுகிறார்.*
2. *ஜனங்கள் ஒரு கேள்வியுடன்பதிலளிக்கின்றனர்.*
3. *தேவன் அவர்களின் கேள்விக்கு பதிலளிக்கிறார்.*

### *விவாதம் 1: தம்முடைய ஜனத்தின் மீதான தேவனுடைய அன்பு (மல்கியா 1:2-5)*

1. *முன்னுரை: "நான் உங்களைச் சிநேகித்தேனென்று" கர்த்தர் சொல்லுகிறார்.*
2. *கேள்வி: "எங்களை எப்படி சிநேகித்தீர்?"*
3. *பதில்: ஏதோமை (ஏசா) தண்டிக்கும்போது கடவுள் இஸ்ரவேலைக் (யாக்கோபை) கனப்படுத்தினார்.[400]*

### *விவாதம் 2: ஆசாரியர்களின் தேவ அவமதிப்பு (மல்கியா 1:6- 2:9)*

---

*[400] ஏதோமின் மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு ஒபதியா புத்தகத்தைப் பார்க்கவும்..*

1. *முன்னுரை: குமாரன் தன் பிதாவையும், ஊழியக்காரன் தன் எஜமானையும் கனம்பண்ணுகிறார்களே; நான் பிதாவானால் என் கனம் எங்கே? ஆசாரியர்கள் என் நாமத்தை ஏன் அசட்டைபண்ணுகிறார்கள்?*
2. *கேள்வி: "உமது நாமத்தை எதினாலே அசட்டைப் பண்ணினோம்?"*
3. *பதில்: என் பீடத்தின் மேல் அசுத்தமான அப்பத்தைப் படைக்கிறதன் மூலம். கர்த்தருடைய பலிபீடத்திற்குக் கனம்செலுத்துவதற்குப் பதிலாக, ஆசாரியர்கள் நொ ண்டி மற்றும் ஊனமான விலங்குகளைப் பலியிட்டனர்.*

### *விவாதம் 3: திருமண உடன்படிக்கையை மதிக்கத் தவறுதல் (மல்கியா 2:10-16)*

1. *முன்னுரை: யூதா விசுவாசமில்லாமல், உடன்படிக் கையைப் பரிசுத்தக்குலைச்சலாக்கியது.*
2. *கேள்வி: "நாங்கள் எப்படி உடன்படிக்கையைப் பரிசுத் தக்குலைச்சலாக்கினோம்?"*
3. *பதில்: (1) விக்கிரக வழிபாடு செய்பவர்களை திருமணம் செய்து கொள்வது மற்றும் (2) விவாகரத்து மூலம் திரு மண உடன்படிக்கையைமீறுவது..*

### *விவாதம் 4: தேவனுடைய நியாயம் (மல்கியா 2:17-3: 5)*

1. *முன்னுரை: "உங்கள் வார்த்தைகளினாலே கர்த்தரை வருத்தப்படுத்துகிறீர்கள்."*
2. *கேள்வி: "நாங்கள் எதினாலே அவரை வருத்தப்படுத் துகிறோம்?"*
3. *பதில்: தேவன் தீமையைப் புறக்கணிக்கிறார் என்று குற்றம் சாட்டுவதன் மூலம்.*

*கர்த்தர் தம்முடைய தேவாலயத்திற்கு வருவதற்கான வழியை ஆயத்தம் செய்யும் ஒரு தூதனை அனுப்புவதாக தேவன் யூதா வுக்கு வாக்களிக்கிறார். பாவத்தை எங்கு கண்டாலும் நியாயந் தீர்ப்பார்.*

## *விவாதம் 5: தேவனுடைய தசமபாகத்தை திருடுதல் (மல்கியா 3:6-12)*

1. *முன்னுரை: "நான் கர்த்தர் நான் மாறாதவர்; என்னிடத் திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன்."*
2. *கேள்வி: "நாங்கள் எந்த விஷயத்தில் திரும்பவேண்டும்?"*
3. *பதில்: தேவனுக்கு தசமபாகம் மற்றும் காணிக்கைகளை செலுத்துவதன் மூலம் மற்றும் விசுவாசத்தை வெளிப் படுத்துவதன் மூலம்.*

## ***விவாதம் 6: கர்த்தருக்கு எதிரான கடுமையான வார்த்தைகள் (மல்கியா 3:13-4:3)***

1. *முன்னுரை: "நீங்கள் எனக்கு விரோதமாய்ப் பேசின பேச்சுகள் கடினமாயிருக்கிறது என்று கர்த்தர் சொல் லுகிறார்."*
2. *கேள்வி: "உமக்கு விரோதமாக என்னத்தைப் பேசினோம்?"*
3. *பதில்: "தேவனை ஆராதிப்பது வீண்" என்று நீங்கள் கூறியுள்ளீர்கள். தேவன் கீழ்ப்படிகிறவர்களை ஆசீர்வதிக்கவும், கீழ்ப்படியாதவர்களை நியாயந்தீர்க்கவும் தவறிவிட்டார் என்று ஜனங்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். மறுமொழியாக, கர்த்தருடைய நாள் வரப்போகிறது என்று தேவன் வாக்களிக்கிறார். அந்நாளில், தேவன் தீயவர்களை நியாயந்தீர்த்து, உண்மையுள்ளவர்களைக் காப்பாற்றுவார்.*

## ***முடிவுரை (மல்கியா 4:4-6)***

*அவரது முடிவுரையில், மல்கியா முழு புத்தகத்தின் செய்தியையும் மீண்டும் கூறுகிறார். யூதாவைத் திரும்பிப் பார்க்கவும் ("மோசேக்கு நான் கற்பித்த நியாயப்பிரமாணமாகிய கட்டளைகளையும் நியாயங்களையும் நினையுங்கள்") மற்றும் எதிர்நோக்கவும் ("இதோ நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்") "கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாளுக்கு" ஆயத்தமாவதற்கு அவர் யூதாவை அழைக்கிறார்.*

## பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவைக் குறித்த ஒரு நெருக்கமான பார்வை

பழைய ஏற்பாட்டைக் குறித்த நம்முடைய கண்ணோட்டத்தை முடிக்கும்போது, கிறிஸ்துவின் வருகையில் நிறைவேறும் பல தீர்க்கதரிசனங்களில் சிலவற்றைப் பார்க்க நேரம் ஒதுக்குங்கள். இயேசு பிறப்பதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, தேவன் அவருடைய வாழ்க்கையைப் பற்றிய துல்லியமான விவரங்களை வெளிப்படுத்தினார். இந்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றம் இயேசுவை வாக்குப்பண்ணப்பட்ட மேசியா என்று சாட்சியமளிக்கிறது.

| **தீர்க்கதரிசனம்** | **பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனம்** | **புதிய ஏற்பாட்டின் நிறைவேறுதல்** |
|---|---|---|
| மேசியா பெத்லகேமில் பிறப்பார். | மீகா *5:2* | மத்தேயு *2:1-6;* லூக்கா *2:1-20* |
| மேசியா எகிப்திலிருந்து பயணம் செய்வார். | ஓசியா *11:1* | மத்தேயு *2:12-15* |
| மேசியாவின் பிறப்பின் விளைவாக ஆண் குழந்தைகள் கொல்லப்படும். | எரேமியா *31:15* | மத்தேயு *2:16-18* |
| மேசியா கலிலேயாவில் ஊழியம் செய்வார்.[401] | ஏசாயா *9:1-2* | மத்தேயு *4:12-16* |
| மேசியா எருசலேமுக்குள் வெற்றி பவனி வருவார். | சகரியா *9:9* | மத்தேயு *21:1-9;* யோவான் *12:12-16* |
| மேசியா தமக்கு சொந்தமானவர்களால்நிராகரிக்கப் படுவார். | ஏசாயா *53:1-3* | மத்தேயு *26:3-4* |
| மேசியா முப்பது வெள்ளிக்காசுகளுக்கு விற்கப்படுவார். | சகரியா *11:12* | மத்தேயு *26:14-15* |

[401] இந்த தீர்க்கதரிசனம் முக்கியமானது, ஏனென்றால் மேசியா எருசலேமில் தனது ஊழியத்தை மையமாகக்கொண்டு இருப்பார் என யூத ஜனங்கள் எதிர்பார்த்திருப்பார்கள்..

| | | |
|---|---|---|
| மேசியா அவரைப் பின்பற்றுபவர்களால் கைவிடப்படுவார். | *சகரியா13:7* | *மத்தேயு 26:56* |
| குற்றஞ்சாட்டுபவர்களுக்கு முன்பாக மேசியா அமைதியாக இருப்பார். | *ஏசாயா 53:7* | *மத்தேயு 27:12-14; லூக்கா 23:8-10* |
| மேசியா தாக்கப்பட்டுத் துப்பப்படுவார். | *ஏசாயா 50:6* | *மத்தேயு 27:30* |
| மேசியா சிலுவையில் அறையப்பட்டுமரணமடைவார். | *சங்கீதம் 22:14-17* | *மத்தேயு 27:31* |
| மேசியா தேவனால் கைவிடப்பட்டதாக உணருவார். | *சங்கீதம் 22:1* | *மத்தேயு 27:46* |
| மேசியாவுக்குக் கசப்புக்கலந்தகாடியைக் குடிக்கக்கொடுப்பார்கள். | *சங்கீதம் 69:21* | *யோவான் 19:28-30* |
| மேசியாவின் எலும்புகள் உடைக்கப்படாது. | *சங்கீதம் 34:20; யாத்திராகமம் 12:46* | *யோவான் 19:31-36* |
| மேசியா குற்றவாளிகளுடன் துன்பப்படுவார், அவரைத் துன்புறுத்துபவர்களுக்காக ஜெபிப்பார். | *ஏசாயா 53:12* | *மத்தேயு 27:38; லூக்கா 23:32-34* |
| மேசியா ஒரு பணக்காரனின் கல்லறையில் அடக்கம் பண்ணப்படுவார். | *ஏசாயா 53:9* | *மத்தேயு 27:57-60* |
| மேசியா மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவார். | *சங்கீதம் 16:8-10* | *மத்தேயு 28:1-10* |

## ஆகாய், சகரியா மற்றும் மல்கியா இன்று திருச்சபையோடு பேசுகி ன்றன

*நாம் தேவனுடைய ஜனங்கள் என்பதையும், திருச்சபையின் மூலம் அவர் தம் நோக்கத்தை நிறைவேற்றுகிறார் என்பதையும் ஆகாய் நமக்கு நினைவூட்டுகிறார். ஆகாய் 2:9-ன் வாக்குறுதி மீண்டும் கட்டப்பட்ட தேவாலயத்தில் ஒருபோதும் முழுமை*

*யாக நிறைவேற்றப்படவில்லை. மகா பரிசுத்த ஸ்தலத்தில் மீண்டும் உடன்படிக்கையின் பெட்டி இருக்கவில்லை மற்றும் முதல் தேவாலயத்தின் பிரதிஷ்டையுடன் போது இருந்த அளவில் தேவனுடையமகிமை ஒருபோதும் காணப்பட வில்லை.*[402]

*எனினும், குழந்தை இயேசு தேவாலயத்திற்கு வருகை தந்ததில் ஆரம்பித்து இன்று திருச்சபையின் ஊழியம் வரை இந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இயேசுவின் பூமிக் குரிய ஊழியத்தில், "அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது."*[403] *ஆரம்பகால திருச்சபையின் ஊழியத்தில், ரோமப் பேரரசு முழுவதும் தேவனுடைய மகிமை காணப்பட்டது. இன்று, தேவனுடைய ஆலயமாக,*[404] *நாம் தேவ னுடைய மகிமையை உலகுக்கு வெளிப்படுத்தி வருகிறோம்.*

### *பரிசுத்தமானதா அல்லது அசுத்தமானதா?*

*ஆகாயின் செய்தியின் ஒரு பகுதி பழைய ஏற்பாட்டின் சடங்குசார்ந்த பரிசுத்தத்தின் பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டது. மோசேயின் நியாயப்பிரமாணத்தில், அசுத்தமான பொருளுடன் தொடர்பு கொண்ட ஒரு சடங்குசார்ந்த சுத்தமான பொருள் அசுத்தமானது. இருப்பினும், இயேசுவின் வருகையின் மூலம், இது திரும்பியது. இயேசு (சுத்தமானவர்) தொழுநோயா ளிகளை (அசுத்தமானவர்) தொட்டு அவர்களைச் சுத்தப்படுத் துகிறார். கிறிஸ்தவர்கள் பூமியின் உப்பாக இருக்க அழைக்க ப்படுகிறார்கள், அசுத்தமான உலகில் சுத்தத்தைக் கொண்டு வருகிறார்கள். பிலிப்பியரில், பவுல் தனது வாசகர்களுக்கு நினைவூட்டுகிறார், நாம் "கோணலும் மாறுபாடுமான சந்த தியின் நடுவிலே" வாழ்ந்தாலும், நாம் "உலகத்திலே சுடர்களை ப்போலப் பிரகாசிக்க வேண்டும்."*[405] *அசுத்தமான உலகத்துடன் தொடர்பு கொள்வதற்கு நாம் பயப்படத் தேவையில்லை. மாறாக, தேவனுடைய பரிசுத்தத்தை நம் உலகில் கொண்டு*

---

*[402] 2 நாளாகமம் 5:13-14*
*[403] யோவான் 1:14*
*[404] 1 கொரிந்தியர் 3:16*
*[405] பிலிப்பியர் 2:15*

*வரவும், யாருடன் தொடர்பு கொள்கின்றோமோ அவர்களை மாற்றவும்அழைக்கப்பட்டுள்ளோம்.*

## ***ஆகாய், சகரியா மற்றும் மல்கியா இன்று திருச்சபையோடு பேசுகின்றன (தொடர்ச்சி)***

*சகரியாவும் மல்கியாவும் தொடர்ந்து விசுவாசமாக இருக்க வேண்டும் என்ற தேவனுடைய கோரிக்கையைக் காட்டு கின்றன. சிறையிருப்பிலிருந்து திரும்பிய பிறகு எழுதும் இந்த தீர்க்கதரிசிகள் நேற்றைய ஆசீர்வாதங்களில் நாம் இளைப்பாற முடியாது என்பதைக் காட்டுகின்றன. சிறையிருப்பின் படிப் பினைகள் இஸ்ரவேலை இனி எப்போதும் துரோகத்தின் மாதிரிக்குத் திரும்பாமல் தடுத்திருக்கும் என்று ஒருவர் எதிர்பார்த்திருக்கலாம். இருப்பினும், சகரியா கி.மு.520இல் மற்றும் மல்கியா இரண்டு தலைமுறைகளுக்குப் பிறகு, தேவன் நமக்குக் கற்பிக்கும் பாடங்களை நாம் எவ்வளவு விரைவாக மறந்துவிட முடியும் என்பதைக் காட்டுகின்றன. நாம் தொட ர்ந்து தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்திற்குத் திரும்ப வேண்டும்.*

## ***பாடம் 14 வீட்டுப்பாடங்கள்***

(1) *பின்வரும் வீட்டுப்பாடங்ககளில்**ஒன்றை** முடிக்கவும்.*

*விருப்பம் 1: குழு வீட்டுப்பாடம்*

*பாடம் 13இல் வழங்கப்பட்ட மாதிரியைப் பயன்படுத்தி ("அவர்களின் நகரம்" என்பதன் முதல் செய்தியிலிருந்து "எங்கள் நகரம்" பயன்பாட்டிற்கு வருகிறது), இன்று திருச்சபைக்கு மல்கியாவின் விவாதங்களில் ஒன்றைப் பயன்படுத்துங்கள். யூதாவிற்கான முதல் செய்தி, இன்று யூதாவிற்கும் திருச்ச பைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள், மல்கியாவில் போதிக்கப்படும் கொள்கை மற்றும் இன்றைய திருச்சபையில் பயன்பாடு ஆகியவற்றைப் பற்றி விவாதிக்கவும்.*

*விருப்பம் 2: தனி வீட்டுப்பாடம்*

*“தேவனுக்கு விசுவாசமாக இருத்தல்” என்ற தலைப்பில் மல்கியாவிலிருந்து ஒரு விரிவான பிரசங்கம் அல்லது வேதாகம ஆய்வு பொருட்சுருக்கத்தை ஆயத்தப்படுத்தவும். இன்று திருச்ச*

பையில் தேவன் எவ்வாறு பேசலாம் என்பதைக் காண்பிக்க, விவாதங்களின் கட்டமைப்பைப் பயன்படுத்தவும்.

(2) இந்த பாடத்தில் ஒரு தேர்வு எழுதவேண்டும். தேர்வில் மனப்பாடம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட வேதவசனங்களும் அடங்கும்.

## *பாடம் 14 தேர்வு*

(1) சிறையிருப்பிற்குப் பிந்தைய தீர்க்கதரிசிகளால் எந்த மூன்று ஆவிக்குரிய பிரச்சனைகள் எடுத்துரைக்கப் பட்டன?

(2) ஆகாய் மற்றும் சகரியா புத்தகங்கள் எழுதப்பட்ட காலம் என்ன?

(3) ஆகாய் நான்கு செய்திகளைக் கொண்டு வந்தார். ஒவ்வொரு செய்திக்கும் தலைப்பைப் பட்டியலிடுக.

(4) சகரியாவின் கருப்பொருள் என்ன?

(5) சகரியாவில் காணப்படும் இரண்டு மேசியாவின் தீர்க்கதரிசனங்களைப் பட்டியலிடுக.

(6) மல்கியா கி.மு. 475 மற்றும் 425க்கு இடையில் பிரசங்கித்ததாக நாம் ஏன் நம்புகிறோம்?

(7) மல்கியாவில் தேவனுடைய ஒவ்வொரு "விவாதங்களின்" மூன்று பகுதிகளையும் பட்டியலிடுக.

(8) ஆகாய் 2:7-9 மற்றும் மல்கியா 3:1-ஐ நினைவிலிருந்து எழுதுக.

# பரிந்துரைக்கப்பட்ட ஆதார நூல்கள்

## இந்த பாடத்திட்டத்தின் முழுவதிலும் பயன்படுத்தப்பட்ட நூல்கள்


Arnold, Bill T. and Bryan E. Beyer. *Encountering the Old Testament.* Ada: Baker Books, 1999.

*ESV Study Bible*. Wheaton: Crossway Bibles, 2008.

Jensen, Irving. *Jensen's Survey of the Old Testament.* Chicago: Moody Press, 1978.

McCain, Danny. *Notes on Old Testament Introduction*. Jos, Nigeria: Africa Christian Textbooks, 2002.

Wilkinson, Bruce and Kenneth Boa. *Walk Thru the Bible*. Nashville: Thomas Nelson, 2002.


## பாடம் 1

*பழைய ஏற்பாட்டின் நம்பகத்தன்மையைக் குறித்து மேலும் அறிய, பின்வரும் ஆதாரங்களைப் பார்க்கவும்.*

### அச்சிடப்பட்ட நூல்கள்


God's Bible School and College Bible Faculty. *I Believe: Fundamentals of the Christian Faith*. Cincinnati: Revivalist Press, 2006.

McDowell, Josh. *The New Evidence That Demands a Verdict.* Nashville: Thomas Nelson, 1999.


### இணையதள ஆதாரங்கள்


Apologetics Press. http://www.apologeticspress.org



Apologetics Press. http://www.apologeticspress.org



McDowell, Josh. *Bible: Fact, Fiction, or Fallacy.* Online Video Series. http://www.josh.org/video-2/bible-fact-fiction-or-fallacy/

"Do We Really Need the Old Testament" at

http://www.seedbed.com/seven-minute-seminary/

Orr-Ewing, Amy. *Reliability of the Manuscripts.* Online Video from Ravi Zacharias Ministries. Search at http://www.youtube.com

## *பாடம் 2*

*ஆதியாகமம் புத்தகத்தைக் குறித்து மேலும் அறிய, பின்வரும் ஆதாரங்களைப் பார்க்கவும்.*

### *அச்சிடப்பட்ட நூல்கள்*

Hamilton, Victor P. *Handbook on the Pentateuch.* Ada: Baker Books, 1982.

Kidman, Derek. *Tyndale Old Testament Commentary: Genesis*. Downers Grove: InterVarsity, 2008.

Morris, Henry M. *The Genesis Record.* Ada: Baker Books, 1976.

### *இணையதள ஆதாரங்கள்*

Answers in Genesis: http://www.answersingenesis.org

"Christians and the Environment" at http://www.seedbed.com/seven-minute-seminary/

"Science and the Christian Worldview" at http://www.seedbed.com/seven-minute-seminary/

Wesley, John. *Wesley's Explanatory Notes on the Old Testament.* http://www.biblestudytools.com/commentaries/wesleys-explanatory-notes/

## *பாடம் 3*

*பஞ்சாகமம் குறித்து மேலும் அறிய, பின்வரும் ஆதாரங்களைப் பார்க்கவும்.*

### *அச்சிடப்பட்ட நூல்கள்*

Fuller, Lois. *The Pentateuch.* Jos, Nigeria: Africa Christian Textbooks, 1995.

Hamilton, Victor P. *Handbook on the Pentateuch.* Ada: Baker Books, 1982.

Kitchen, Kenneth A. *On the Reliability of the Old Testament.* Grand Rapids: Eerdmans, 2003.

Walton, John H. and Victor H. Matthews. *The IVP Bible Background Commentary: Genesis – Deuteronomy.* Downers Grove: InterVarsity Press, 1997.

### இணையதள ஆதாரங்கள்

Associates for Biblical Research: http://www.biblearcheaology.org

Lecture. "Dr James Hoffmeier – Egyptologist." Search at http://www.youtube.com

Lecture. "Did the Exodus Happen?" www.seedbed.com

Wesley, John. *Wesley's Explanatory Notes on the Old Testament.* http://www.biblestudytools.com/commentaries/wesleys-explanatory-notes/

## *பாடம் 4*

*யோசுவா முதல் ரூத்தின் புத்தகம் வரையுள்ள புத்தகங்களைக் குறித்து மேலும் அறிய, பின்வரும் ஆதாரங்களைப் பார்க்கவும்.*

### அச்சிடப்பட்ட நூல்கள்

Carpenter, Eugene E. and Wayne McCown. *Asbury Bible Commentary.* Grand Rapids: Zondervan, 1992.

Copan, Paul. *Is God a Moral Monster: Making Sense of the Old Testament God.* Ada: Baker Books, 2011.

Hess, Richard S. *Tyndale Old Testament Commentary: Joshua*. Downers Grove: InterVarsity Press, 2008.

Howard, David M., Jr. *An Introduction to the Old Testament Historical Books.* Chicago: Moody Press, 1993.

Howard, David M., Jr. and Michael A. Grisanti. *Giving the Sense: Understanding and Using Old Testament Historical Texts*. Grand Rapids: Kregel Publications, 2003.

### இணையதள ஆதாரங்கள்

"Violence in the Old Testament" at http://www.seedbed.com/seven-minute-seminary/

Wesley, John. *Wesley's Explanatory Notes on the Old Testament.* http://www.biblestudytools.com/commentaries/wesleys-explanatory-notes/

## பாடம் 5

*இஸ்ரவேலின் மன்னராட்சியைக் குறித்து மேலும் அறிய, பின்வரும் ஆதாரங்களைப் பார்க்கவும்.*

### அச்சிடப்பட்ட நூல்கள்

Howard, David M., Jr. *An Introduction to the Old Testament Historical Books.* Chicago: Moody Press, 1993.

Leston, Stephen. *The Bible in World History.* Uhrichsville: Barbour Publishing, 2011.

Provan, Iain, V. Philips Long, and Tremper Longman III. *A Biblical History of Israel.* Louisville: Westminster John Knox Press, 2003.

Wilcock, Michael. *The Message of Chronicles: One Church, One Faith, One Lord.* Downers Grove: InterVarsity, 1987.

### இணையதள ஆதாரங்கள்

"What Was Israel's Government Like?" at http://www.seedbed.com/seven-minute-seminary/

Wesley, John. *Wesley's Explanatory Notes on the Old Testament.* http://www.biblestudytools.com/commentaries/wesleys-explanatory-notes/

## *பாடம் 6*

*சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் குறித்து மேலும் அறிய, பின்வரும் ஆதாரங்களைப் பார்க்கவும்..*

### *அச்சிடப்பட்ட நூல்கள்*

Howard, David M., Jr. *An Introduction to the Old Testament Historical Books.* Chicago: Moody Press, 1993.

Jobes, Karen. *New International Version Application Commentary: Esther.* Grand Rapids: Zondervan, 1999.

Kidner, Derek. *Ezra and Nehemiah: An Introduction and Commentary. Tyndale Old Testament Commentary.* Downers Grove: InterVarsity Press, 1979.

Provan, Iain, V. Philips Long, and Tremper Longman III. *A Biblical History of Israel.* Louisville: Westminster John Knox Press, 2003.

### *இணையதள ஆதாரங்கள்*

Wesley, John. *Wesley's Explanatory Notes on the Old Testament.* http://www.biblestudytools.com/commentaries/wesleys-explanatory-notes/

## *பாடம் 7*

*யோபு மற்றும் சங்கீதப்புத்தகத்தைக் குறித்து மேலும் அறிய, பின்வரும் ஆதாரங்களைப் பார்க்கவும்..*

### *அச்சிடப்பட்ட நூல்கள்*

Bullock, C. Hassell. *Encountering the Book of Psalms*. Ada: Baker, 2001.

Longman, Tremper, III. *How to Read the Psalms.* Downers Grove: Intervarsity, 1988.

Yancey, Philip. *Where is God When It Hurts?* Grand Rapids: Zondervan, 1977.

### இணையதள ஆதாரங்கள்

"Laments in the Psalms" at http://www.seedbed.com/seven-minute-seminary/

"The Problem of Evil" at http://www.seedbed.com/seven-minute-seminary/

Wesley, John. *Wesley's Explanatory Notes on the Old Testament.* http://www.biblestudytools.com/commentaries/wesleys-explanatory-notes/

### பாடம் 8

*சாலமோனின்புத்தகங்களைக் குறித்து மேலும் அறிய, பின்வரும் ஆதாரங்களைப் பார்க்கவும்..*

### அச்சிடப்பட்ட நூல்கள்

Curtis, Edward M. and John J. Brugaletta. *Discovering the Way of Wisdom.* Grand Rapids: Kregel Academic, 2004.

Estes, Daniel J. *Handbook on the Wisdom Books and Psalms*. Ada: Baker Books, 2005.

Gaebelein, Frank. *Expositor's Bible Commentary: Psalms – Song of Songs*. Grand Rapids: Zondervan, 1991.

Kaiser, Walter C. *Ecclesiastes*: *Total Life*. Chicago: Moody Press, 1979.

Longman, Tremper, III. *How to Read Proverbs.* Downers Grove: InterVarsity Press, 2002.

Longman, Tremper III. *New International Commentary on the Old Testament: Song of Songs*. Grand Rapids: Eerdmans, 2005. (Longman interprets the Song of Songs poetically.)

Taylor, J. Hudson. *Union and Communion*. Chicago: Moody Press, n.d. (Taylor interprets the Song of Songs allegorically.)

## பாடம் 9

ஏசாயாவின்புத்தகத்தைக் குறித்து மேலும் அறிய, பின்வரும் ஆதாரங்களைப் பார்க்கவும்.

### அச்சிடப்பட்ட நூல்கள்

Bullock, C. Hassell. *An Introduction to the Old Testament Prophetic Books.* Chicago: Moody Press, 1986.

Motyer, J. Alec. *Tyndale Old Testament Commentary: Isaiah.* Downers Grove: InterVarsity, 1999.

Oswalt, John N. *Isaiah. NIV Application Commentary.* Grand Rapids: Zondervan, 2003.

### இணையதள ஆதாரங்கள்

"Yahweh and the Ancient Gods" at http://www.seedbed.com/seven-minute-seminary/

Wesley, John. *Wesley's Explanatory Notes on the Old Testament.* http://www.biblestudytools.com/commentaries/wesleys-explanatory-notes/

## பாடம் 10

எரேமியாவின் புத்தகத்தைக் குறித்து மேலும் அறிய, பின்வரும் ஆதாரங்களைப் பார்க்கவும்.

### அச்சிடப்பட்ட நூல்கள்

Fretheim, Terence E. *Jeremiah*. Macon: Smyth and Helwys, 2002.

Lallman, Hetty. *Tyndale Old Testament Commentaries: Jeremiah and Lamentations.* Downers Grove: Intervarsity Press, 2013.

Thompson, J.A. *New International Commentary on the Old Testament: Jeremiah.* Grand Rapids: Eerdmans Publishing Co., 1980.

Varughese, Alex. *New Beacon Bible Commentary: Jeremiah* (2 vols.). Boston: Beacon Hill Press, 2008-2010.

***இணையதள ஆதாரங்கள்***

Wesley, John. *Wesley's Explanatory Notes on the Old Testament.* http://www.biblestudytools.com/commentaries/wesleys-explanatory-notes/

## *பாடம் 11*

*எசேக்கியேல் மற்றும் தானியேல் புத்தகத்தைக் குறித்து மேலும் அறிய, பின்வரும் ஆதாரங்களைப் பார்க்கவும்..*

***அச்சிடப்பட்ட நூல்கள்***

Bullock, C. Hassell. *An Introduction to the Old Testament Prophetic Books.* Chicago: Moody Press, 1986.

Craigie, Peter. *Daily Study Bible: Ezekiel.* Louisville: Westminster John Knox Press, 1983.

Duguid, Iain. *NIV Application Commentary: Ezekiel*. Grand Rapids: Zondervan, 1999.

Longman, Tremper. *NIV Application Commentary: Daniel*. Grand Rapids: Zondervan, 1999.

***இணையதள ஆதாரங்கள்***

Wesley, John. *Wesley's Explanatory Notes on the Old Testament.* http://www.biblestudytools.com/commentaries/wesleys-explanatory-notes/

## *பாடம் 12*

*சிறிய தீர்க்கதரிசிகளின் புத்தகங்களைக் குறித்து மேலும் அறிய, பின்வரும் ஆதாரங்களைப் பார்க்கவும்.*

***அச்சிடப்பட்ட நூல்கள்***

Bullock, C. Hassell. *An Introduction to the Old Testament Prophetic Books.* Chicago: Moody Press, 1986.

Hubbard, David Allan. *Tyndale Old Testament Commentary: Hosea, Joel, and Amos.* Downers Grove: InterVarsity Press, 1989.

McCain, Danny. *Notes on Old Testament Introduction*. Jos, Nigeria: Africa Christian Textbooks, 2002.

### இணையதள ஆதாரங்கள்

Dew, Diane. “The Backslider in Heart.” http://www.dianedew.com/backsldg.htm

Wesley, John. *Wesley’s Explanatory Notes on the Old Testament.* http://www.biblestudytools.com/commentaries/wesleys-explanatory-notes/

## *பாடம் 13*

*சிறிய தீர்க்கதரிசிகளின் புத்தகங்களைக் குறித்து மேலும் அறிய, பின்வரும் ஆதாரங்களைப் பார்க்கவும்.*

### அச்சிடப்பட்ட நூல்கள்

Baker, David W., T. Desmond Alexander, and Bruce K. Waltke. *Tyndale Old Testament Commentary: Obadiah, Jonah, Micah.* Downers Grove: InterVarsity Press, 1988.

Baker, David W. *Tyndale Old Testament Commentary: Nahum, Habakkuk, Zephaniah.* Downers Grove: InterVarsity Press, 1988.

Bullock, C. Hassell. *An Introduction to the Old Testament Prophetic Books.* Chicago: Moody Press, 1986.

McCain, Danny. *Notes on Old Testament Introduction*. Jos, Nigeria: Africa Christian Textbooks, 2002.

### இணையதள ஆதாரங்கள்

Wesley, John. *Wesley’s Explanatory Notes on the Old Testament.* http://www.biblestudytools.com/commentaries/wesleys-explanatory-notes/

## *பாடம் 14*

*சிறையிருப்புக்குப்பின்புள்ளதீர்க்கதரிசிகளின்புத்தகங்களைக் குறித்து மேலும் அறிய, பின்வரும் ஆதாரங்களைப் பார்க்கவும்..*

### *அச்சிடப்பட்ட நூல்கள்*


Baldwin, Joyce G. *Tyndale Old Testament Commentary: Haggai, Zechariah, Malachi.* Downers Grove: InterVarsity Press, 1972.

Bullock, C. Hassell. *An Introduction to the Old Testament Prophetic Books.* Chicago: Moody Press, 1986.

McCain, Danny. *Notes on Old Testament Introduction*. Jos, Nigeria: Africa Christian Textbooks, 2002.

Merrill, Eugene H. *Haggai, Zechariah, Malachi: An Exegetical Commentary.* Chicago: Moody Press, 1994.


### *இணையதள ஆதாரங்கள்*


Wesley, John. *Wesley's Explanatory Notes on the Old Testament.* http://www.biblestudytools.com/commentaries/wesleys-explanatory-notes/

# பழைய ஏற்பாட்டின் ஆய்வு

# வீட்டுப்பாடங்களின் பதிவு

*மாணவர் பெயர்:* ______________________________

*ஒவ்வொரு வீட்டுப்பாடமும் முடிந்ததும் கையெழுத்து இடுதல். மாணவர் 70% அல்லது அதற்கும் அதிகமான மதிப்பெண்களைப் பெறும்போது தேர்வுகள் "முழுமையானதாக" கருதப்படும். ஷெப்பர்ட்ஸ் குளோபல் கிளாஸ்ரூமில் இருந்து சான்றிதழைப் பெற, அனைத்து வீட்டுப்பாடங்களும் வெற்றிகரமாக முடிக் கப்பட வேண்டும்.*

| பாடம் | வீட்டுப்பாடம் | தேர்வு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |
| 11 | | |
| 12 | | |
| 13 | | |
| 14 | | |

# ஷெப்பர்ட்ஸ் குளோபல் கிளாஸ்ரூமிடமிருந்து சான்றிதழைப் பெறுவதற்கான கோரிக்கை

www.shepherdsglobal.org *என்னும் இணையதளத்தில் பாடத் திட்டத்தை நிறைவு செய்ததற்கான சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பம் குளோபல் கிளாஸ்ரூமில் உள்ள எங்கள் வலைப்பக்கத்தில் பூர்த்தி செய்யப்படலாம். தங்கள் மாணவர் (கள்) சார்பாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் பயிற்றுனர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கு SGC இன் தலைவரிடமிருந்து சான்றிதழ்கள் டிஜிட்டல் முறையில் அனுப்பப்படும்.*

# ஷெப்பர்ட்ஸ் குளோபல் கிளாஸ்ரூமினுடைய பாட விவரங்கள்

## *பழைய ஏற்பாட்டின் ஆய்வு*

*இந்த பாடம் பழைய ஏற்பாட்டிலுள்ள 39 புத்தகங்களின் அத்தியாவசிய உள்ளடக்கம் மற்றும் போதனைகளைக் கற்பிக்கிறது.*

## *புதிய ஏற்பாட்டின் ஆய்வு*

*இந்த பாடம் புதிய ஏற்பாட்டிலுள்ள 27 புத்தகங்களின் அத்தியாவசிய உள்ளடக்கம் மற்றும் போதனைகளைக் கற்பிக்கிறது.*

## *இயேசுவின் வாழ்க்கை மற்றும் ஊழியம்*

*இந்த பாடம் 21 ஆம் நூற்றாண்டில் ஊழியம் மற்றும் தலைமைத்துவத்திற்கான முன்மாதிரியாக இயேசுவின் வாழ்க்கையைப் போதிக்கிறது.*

## *ரோமருக்கு எழுதிய நிருபம்*

*இந்த பாடம் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் விளக்கப்பட்டுள்ளபடி இரட்சிப்பு மற்றும் ஊழியங்களின் இறையியலைக் கற்பிக்கிறது, திருச்சபையில் காணப்படுகின்ற சர்ச்சைக்குரிய பல பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்கிறது.*

## *வேதாகமவிளக்கத்தின் கோட்பாடுகள்*

*இந்த பாடமானது நமது வாழ்க்கையையும் தேவனுடனான உறவையும் வழிநடத்தும் பொருட்டு வேதாகமத்தை சரியாக விளக்கும் கொள்கைகளையும் முறைகளையும் கற்பிக்கிறது.*

## *கிறிஸ்தவ நம்பிக்கைகள்*

*இது வேதாகமம், தேவன், மனிதன், பாவம், கிறிஸ்து, இரட்சிப்பு, பரிசுத்த ஆவி, திருச்சபை மற்றும் கடைசிக்கால சம்பவங்களைப் பற்றிய கிறிஸ்தவ உபதேசங்களை விவரிக்கும் ஒரு வரையறுக்கப்பட்ட இறையியல் பாடமாகும்.*

## *கடைசிக்கால சாஸ்திரம்*

*இந்த பாடமானது வேதாகமப்புத்தகங்களாகிய தானியேல் மற்றும் வெளிப்படுத்துதல் பற்றிய தீர்க்கதரிசனத்தை வேதத்*

தின் மற்ற பிரிவுகளுடன் சேர்த்து கற்பிக்கிறது மற்றும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, கடைசி நியாயத்தீர்ப்பு மற்றும் தேவனுடைய நித்திய ராஜ்யம் போன்ற முக்கியமான உபதேசங்களை வலியுறுத்துகிறது.

### *பரிசுத்த வாழ்விற்கான உபதேசம் மற்றும் நடைமுறை*

இந்த பாடம் ஒரு கிறிஸ்தவருக்கு தேவன் எதிர்பார்க்கும் மற்றும் அதிகாரம் அளிக்கும் பரிசுத்த வாழ்க்கையின் வேதாகமவிளக்கத்தை அளிக்கிறது.

### *திருச்சபையின் உபதேசம் மற்றும் நடைமுறை*

இந்த பாடம் திருச்சபைக்கான தேவனுடைய வடிவமைப்பு மற்றும் திட்டத்தை விளக்குகிறது மற்றும் திருச்சபை உறுப்பினர், ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி, தசமபாகம் மற்றும் ஆவிக்குரியத் தலைமை போன்ற வேதாகமப்பாடங்களை விளக்குகிறது.

### *திருச்சபை வரலாறு ஓர் கண்ணோட்டம் 1*

ஆரம்பகால திருச்சபையிலிருந்து சீர்திருத்தம் வரையிலான காலப்பகுதியில் திருச்சபை எவ்வாறு தனது பணியை நிறைவேற்றியது மற்றும் அத்தியாவசிய உபதேசங்களை எவ்வாறு பாதுகாத்தது என்பதை இந்த பாடம் விவரிக்கிறது.

### *திருச்சபை வரலாறு ஓர் கண்ணோட்டம் 2*

சீர்திருத்தம் முதல் நவீன காலம் வரை திருச்சபை எவ்வாறு விரிவடைந்தது மற்றும் சவால்களை எதிர்கொண்டது என்பதை இந்த பாடம் விவரிக்கிறது.

### *ஆவிக்குரிய வாழ்வின் கட்டமைப்பு*

இந்த பாடத்திட்டத்தில் மாணவர்கள் இயேசுவின் மனப்பான்மையைக் கொண்டிருக்கவும், இயேசு தம் பிதாவுடன் தொடர்புகொண்ட விதத்தில் தேவனுடன் தொடர்பு கொள்ளவும், இயேசுவைப் போல நம்மைத்தாழ்த்தவும், இயேசுவின் ஆவிக்குரிய மற்றும் தனிப்பட்ட ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கவும், இயேசுவைப் போல துன்பங்களைச் சகிக்கவும், மற்றும்

இயேசுவால் உருவாக்கப்பட்ட கிறிஸ்தவ சமூகத்தில் (திருச் சபை) தங்களை ஈடுபடுத்திக்கொள்ளுதலையும் போதிக்கிறது.

### *ஊழியத்தலைமைத்துவம்*

மதிப்புகளைக் கண்டறிதல், நோக்கத்தை உணர்ந்துகொள்வது, பார்வையைப் பகிர்ந்துகொள்வது, இலக்குகளை நிர்ணயித்தல், உத்திகளைத் திட்டமிடுதல், நடவடிக்கை எடுப்பது மற்றும் சாதனைகளை அனுபவிப்பது போன்ற செயல்களின் மூலம் நிறுவனங்களை வழிநடத்த தலைவர்களுக்குப் போதிப்பதில், இந்தப் பாடம் கிறிஸ்தவப் பண்பை வலியுறுத்துகிறது.

### *தகவல் தொடர்பு கோட்பாடுகள்*

இந்த பாடம் தகவல் தொடர்பின் இறையியல், திறம்பட பேசுவதற்கான முறைகள் மற்றும் வேதாகமப் பிரசங்கங்களை தயாரித்து வழங்குவதற்கான முறைகளை கற்பிக்கிறது.

### *வேதாகம சுவிசேஷ ஊழியம் மற்றும் சீஷத்துவம்*

இந்த பாடம் சுவிசேஷ முறைகளை வழிநடத்தும் வேதாகமக் கொள்கைகளை முன்வைக்கிறது. இது சுவிசேஷத்தின் வடிவங் களை விவரிக்கிறது மற்றும் புதிதாக மனந்திரும்பியவர்களை சீஷர்களாக்குவதில் பயன்படுத்தக்கூடிய பாடங்களை வழங்கு கிறது.

### *நியாயவாத சாஸ்திரம் ஓர் அறிமுகம்*

இந்த பாடம் ஒரு கிறிஸ்தவ உலகக்கண்ணோட்டத்திற்கான அறிவியல், வரலாற்று மற்றும் தத்துவ அடிப்படையைக் கற்பிக் கிறது, மேலும் கிறிஸ்தவ நம்பிக்கை எவ்வாறு காரணம் மற்றும் யதார்த்தத்துடன் ஒத்துப்போகிறது என்பதைக் காட்டுகிறது.

### *உலக மதங்கள் மற்றும் சமய வழிபாட்டு முறைகள்*

இந்த பாடம் சுவிசேஷத் திருச்சபை விசுவாசிக்கு போதனைகள் பற்றிய புரிதலையும் பதினெட்டு மத குழுக்களுக்கான சரியான பதில்களையும் வழங்குகிறது.

### *கிறிஸ்தவ ஆராதனை ஓர் அறிமுகம்*

*ஆராதனை எவ்வாறு விசுவாசிகளின் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் பாதிக்கிறது என்பதை இந்த பாடம் விளக்குகிறது மற்றும் தனிப்பட்ட மற்றும் சபையின் ஆராதனை நடைமுறைகளுக்கு வழிகாட்டும் கொள்கைகளை வழங்குகிறது.*

### *கிறிஸ்தவ நடைமுறை வாழ்க்கை*

*இந்த பாடம் பணம், உறவுகள், சுற்றுச்சூழல், அரசாங்கத்துடனான உறவுகள், மனித உரிமைகள் மற்றும் நடைமுறை வாழ்க்கையின் பிற பகுதிகளுக்கு வேதத்தின் கோட்பாடுகளைப் பயன்படுத்துகிறது.*

### *கிறிஸ்தவ திருமணமும் குடும்பமும்*

*இந்த பாடம் வாழ்க்கையின் நிலைகளின் மூலம் மனித வளர்ச்சியின் கிறிஸ்தவ கண்ணோட்டத்தை அளிக்கிறது மற்றும் குடும்பத்தில் வகிக்கும் பொறுப்புக்கள் மற்றும் உறவுகளுக்கு வேதக் கோட்பாடுகளைப் பயன்படுத்துகிறது.*